# என் நெஞ்சில் ஈரமாய்...

பவதி

# அத்தியாயம் 1

**சத்ரியன்...**

**சாத்வி...**

**கி**ட்டதட்ட 'நீ வேணாம்' 'எக்கேடும் கெட்டுப் போ.....' என தலை முழுகியவள் இரண்டாவது மகள்..... சாத்வி

"கடவுள் கொடுத்த வரத்தை.......... என்னால் எட்டி உதைக்க முடியாது...,

போதும் இந்தளவுக்கு என்னை வளர்த்து 'பெரிய்யயயய' ஆளா ஆக்கினதே போதும்...

இனியும் எனக்காக நீங்க 'மாடா' உழைக்க வேணாம்... என்னை நானே பார்த்துப்பேன்... "பேசி முடித்தவளின் மனதில் ஏதோ பாரம் ஏறிய உணர்வு.....

அதே நேரம் கூண்டை விட்டு பறக்கும் பறவையின் சந்தோசம்....

இரு உணர்வுகளையும் சிறிதும் வெளிக்காட்டவில்லை சாத்வி.....

'பெண்கள் அடங்கித்தான் போக வேண்டும்... அடுத்தவரை சார்ந்து தான் இருக்க வேண்டும் 'என பேசும்... செயல்களில் காட்டும் தந்தையை 'என்ன செய்து சரி செய்வது' என நாளும்

பொழுதும் யோசித்து யோசித்து ஒரு கட்டத்தில் அறவே தவிர்த்துவிட்டாள்...

தன்னால் ஒன்றுமே செய்யமுடியாது என...

ஒரு காகிதத்தில் சாத்வியின் கைகள் ஏதோ ஒரு அட்ரசை பட படவென எழுதி அதை தன் தாயின் கரங்களில் திணித்து ... “இங்கே தான் நான் இருப்பேன்….."அப்பட்டமான வேதனை அவள் கண்களில் 'தாய் அறியாத சூலா?????' ,‘வருகிறேன்' என்ற சின்ன தலையசைப்புடன் வெளியேறினாள்...

கல்லூரி படிப்பு முடிந்த தருவாய் அது... அப்போதே 'என்னை பார்த்துக்க எனக்கு தெரியும்' என்ற உறுதி, ஆணவம்….

ஆணவம் ஆண்களுக்கு மட்டும் உரியதென்றாலும் பெண்களால் அது போற்றப்படுவதும் இல்லையே….!

பெண்களுக்கான ஆணவம் — வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு 'தவறான வியூகத்தை கொடுக்கும் ‘

ஆனால் அந்த ஆணவத்தை அணிந்த பெண்களுக்கு என்றுமே அது பாதுகாப்பு தானே...

என்றும் ... எப்போதும்...…. மற்றவர்களை எளிதாக தள்ளி நிறுத்தும் ஒரு தற்காப்பு ஆயுதம் தானே...

அன்று வெளியேறியவளுக்கும் இதே எண்ணம் தான் போலும்..... சிறிதும் பயமின்றி தன் வாழ்க்கை பயணத்தை அன்றே துவங்கினாள்...

அன்று சென்றவளை இதோ இப்போது தேடி வந்திருக்கின்றனர்... அவளின் பெற்றோர் சங்கர்-மகாலட்சுமி.........

"என்ன சங்கர் உன் இரண்டாவது மகளை ஆளையே காணோம்... "

"ஏதோ வேலை பார்க்கான்னு சொன்ன... எத்தனை வருசம் தான் பார்க்குறா...... அவளுக்கும் கல்யாணம் பண்ணி பார்க்க உனக்கு ஆசையில்லையா..."

"உன் மூத்த பொண்ணு தான் சொல் பேச்சு கேக்காம போய்டுச்சு..... அதுக்காக அதே மாதிரி இரண்டாவது பொண்ணையும் நினைக்கலாமா????"

"எத்தனை வருசத்துக்கு தான் கோபத்தை இழுத்து பிடிச்சு வப்ப.... உன் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிற வழியைப் பாருய்யா... "

"எந்த பொண்ணுயா எனக்கு கல்யாணம் பண்ணி வைன்னு தானா வந்து சொல்லி இருக்குது... வயசும் ஏறுதில்லையா..." என ஊரில் இருக்கும் சொந்த பந்தங்கள் அனைவரும் வித விதமாய்

சென்ன ஒரே விசயம் ‘பொண்ணை பெத்துட்ட, அதோட நல்லது கெட்டது எல்லாம் உன் பொறுப்பு 'என்பது தான்...

எத்தனை போலீஸ் ஸ்டேஷன் இருந்தாலும் இன்னமும் பஞ்சாயத்து செய்தே பிரச்சனைகளை தீர்த்து ஊர் அடக்குமுறைகளை கையாழும் அழகிய ஊர்... புஞ்சை...

இன்றைக்கு என்ன பஞ்சாயத்து இருக்கு என வாய்க்கு அவல் தேடும் கூட்டத்தில் ‘சாத்வி' யை பற்றி அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் கேட்காமல் இருந்தால் தான் அதிசயம்...

பின்னே வீட்டையே சுற்றி சுற்றி வரும் பெண்பிள்ளை திடீரென சில வருடங்கள் மாயமானால்….. கேட்கத் தானே செய்வார்கள்...…கேட்டார்கள்... முதலில் முதுகின் பின்னால் பேசியவர்கள் இப்போது முகத்தின் முன்னேயே கேட்க ஆரம்பித்துவிட்டனர்…..

விதவிதமாய் கேள்வி கேட்ட அனைவருக்கும் சங்கர் சொன்னது என்னவோ ஒரே பதில் தான்….. "வேலை பார்க்கிறாப்பா... கொஞ்ச நாள் பார்க்கட்டும்….."என சமாளித்து வந்தார்...

அவள் இருக்கும் இடம் தான் தெரியும்... மற்ற எதுவும் அவளை பற்றி தெரியாது என சொன்னால் காறி துப்பிவிடுவார்களே…..

"நீ எல்லாம் ஒரு அப்பனா…..'' என முகத்திற்கு நேராக கேட்டாலும் தப்பில்லை என சங்கருக்கே தோணிற்று...

சில வருடங்களாய் இளைய மகளின் நடமாட்டம் அவர்கள் ஊரில் இல்லாது போகவே…..

"இரண்டாவது பொண்ணும் சரியில்லை போல…..'' என சங்கரின் முன்னரே பேச…. இதற்கு மேல் பொறுத்திருக்க முடியாது... என அவள் மேல் இருந்த வெறுப்பை ஒரு புறமாய் ஒதுக்கி வைத்தார் சங்கர்…..

'இவளையாவது ஊர் மெச்சுற வகையில் கல்யாணம் பண்ணி கொடுத்தா தான் மரியாதை…..' என சாத்வியை நோக்கி கிளம்பினர் தன் மனைவியோடு...

கணவரின் கோபத்தை தாண்டி ஒன்றும் செய்யமுடியாத... செய்ய தயங்கும் சாதாரண பெண் இனம் அவளின் அன்னை மகா...

"குற்றம் ஒருவர் செய்திருக்க, தண்டனை வேறொருவருக்கு…..'' என்பதை தெளிவாக உணர்ந்திருந்தார்…

"பொறுப்புள்ளவர்களுக்கு தான் பெண்பிள்ளை''

"பொறுப்பில்லாதவருக்கு கிடைத்தால்….. நம் நிலைமை தான்'' எப்போதுமே மகாவின் மனதில் எப்போதுமே உதிக்கும் ஓர் கல்வெட்டு

மனம் என்ற ஒன்று எப்போதும் சாத்வியின் நினைவில் இருந்தாலும் மகா வெளியில் காட்டிக் கொள்வதில்லை....

"கோபத்தில் செல்பவள் எங்கே செல்ல போகிறாள்...'' 'மீண்டும் இங்கு தானே வந்தாக வேண்டும்' என்ற தையிரியம்.....

அதைவிட 'தப்பான வழிக்கு செல்லும் அளவிற்கு நான் பிள்ளை பெறவில்லை' என்ற அசைக்க முடியாத சாத்வியின் மீதான நம்பிக்கை தான் முழு காரணம்.

'மூத்தது மோளை... இளையது காளை' என்பதை சிறு வயதிலேயே நிறுபித்தவளாயிற்றே... அவளை பார்க்காவிடினும் சற்றும் தளரவில்லை அந்த நம்பிக்கை....

ஊராரின் பேச்சிற்கு முன்பே ஆரம்பித்திருந்தார் மகா...

''சாத்விக்கு... நிம்மதியான வாழ்க்கையை தான் கொடுக்காமல் போய்ட்டோம்... இனியாவது நல்ல வாழ்க்கையை அமைச்சு கொடுக்கனும்... நல்ல பையன் கையில் புடுச்சு கொடுக்கனும்... "அடிக்கடி சங்கரின் காதுகளில் போட்டு கொண்டிருப்பார் மகா..... ஆனால் வேறு வேறு வார்த்தைகளை கோர்த்து...மகாவின் பேச்சில் அசையாத சங்கர் ஊராரின் பேச்சில் சற்று அசைந்து தான் கொடுத்தார்.....

இன்றைய கலி உலகில் யார் தனக்காக வாழ்கிறார்கள், அடுத்தவர் என்ன நினைப்பாரோ, என அடுத்தவரின்

ரசனைகேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் மனிதர்களில் சங்கரும் ஒருவர் தானே...

மனையாளின் சொல்லுக்கு செவி சாய்க்காதவர் ஊராரின் சொல்லுக்கு செவி கொடுத்தார்.....

அதற்கெல்லாம் மகா கவலைபட வில்லை.... இப்போவாவது புத்தி வந்ததே என சங்கருடன் கிளம்பிவிட்டார் மகா... இதோ விதி அவர்களை சாத்வியிடமே அழைத்து வந்திருந்தது.....

வெகு வருடங்களுக்கு பின் சாத்விக்கு திருமணம் செய்ய முடிவெடுத்து... கிளம்பும் முன் திருமணம் சம்பந்தப்பட்ட வேலைகளை முடித்துக் கொண்டு , ஒரு தீர்மானத்துடன் கிளம்பிச் சென்றனர்...

அவள் தங்கி இருந்த ஹாஸ்டலின் அட்ரெஸ் மட்டுமே அவளின் பெற்றோருக்கு அவளை பற்னி அறிந்த ஒன்று...

தவிர என்ன வேலை எவ்வளவு சம்பளம், யாருடன் இருக்கின்றாள்... இத்யாயி...இத்யாயி... இப்படி எதுவுமே அவர்களுக்கு தெரியாது...

இப்போது வருவாள், அடுத்த சில மாதங்களில் வருவாள், என காத்திருந்த மகாவிற்கு பெருத்த ஏமாற்றம் தான்.....

ஒரு புறம் வருடங்கள் கடந்தும் வரவில்லை என்ற ஆதங்கம், மறுபுறம் 'இவ்வளவு வைராக்கியம் கூடாது இந்த சாத்விக்கு' என்ற கோபம்....

அவள் வரப்போவதில்லை என்பதை தன் பெற்றோருக்கு தன் செயல்களாலேயே ஸ்தீரமாய் உணர்த்திக் கொண்டிருந்தாள் சாத்வி.....

எனவே அவளை தேடிச் செல்ல சங்கர் மகா இருவரும் ஆயத்தமாயினர்...

இரண்டு பஸ்கள் மாறிய பின்னும், அடைய வேண்டிய ஹாஸ்டல் தூரம் என்பதால்...எப்படி செல்வது என ஆட்டோ ஸ்டேண்டில் சாத்வி தங்கி இருக்கும் ஹாஸ்டலை பற்றி விசாரித்துக் கொண்டிருந்தனர்...

பஸ்ஸில் இருந்து இறங்கிய பொழுதே கவனித்துவிட்ட கிருத்திகா , ஒரு கையில் ஸ்கூட்டியை பிடித்தபடி அவர்களையே பார்த்திருந்தாள்...

தயக்கத்தை விட பயமே அதிகமாய் இருக்க.... அந்த பயத்தை தகர்த்தது பெற்றோரின் மீதான பாசம்...

ஸ்கூட்டியை அப்படியே நிறுத்தி, அதில் அமர்ந்திருந்த மகளை கையில் பிடித்தபடி... மெது மெதுவாய் தன் நடையை எட்டிப் போட்டாள்...

அவர்களை நோக்கி முன்னேரியவள் தன் பெற்றோரை எடை போட தவறவில்லை...... அதே கம்பீரத்துடன் தந்தை ஆனால் சற்று நரைத்த தலைமுடியுடன்..... மங்களகரமாய் இருக்கும் தாய்..... ஆனால் சற்று கவலை படிந்த முகத்துடன்.....

இருவரிடமும் பேச மனம் ஆசை கொண்டாலும் அவளது மூளை அதற்கு ஒத்துழைக்கவில்லை... அருகில் வந்தவளும் அழைக்கும் வழியை காணவில்லை....

தங்களுக்கு வழி சொல்லிக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர்..., பேசுவதை நிறுத்தி சங்கரின் பின் பார்வையை திருப்ப... அதை பின்பற்றி இருவரும் திரும்பி பார்க்க சங்கர் மகா இருவரின் முகத்திலும் பேரதிர்ச்சி தான்.....

இருவரின் முகத்தை கண்டவளுக்கு ஏனோ 'அம்மா, அப்பா 'என அழைக்கு தகுதி போய்விட்டது..... ஆனால் இருவரையும் அடையாளம் கண்டு கொண்ட காவ்யாவிற்கோ...

"ஐ...தாத்தா..... ஆச்சி...'' என தன் விரிந்த கண்களை இன்னும் பெரிதாக்கிபடி..... அவர்களின் அருகே செல்லலாமா வேண்டாமா... என தீவிர யோசனையில் இருந்தாள் அந்த குட்டி தேவதை...விசிரியென விரிந்த அழகிய கவுனுடன்...

இம்முறை மகளை விட்டு பேத்தியை பார்க்க அப்படியே காவ்யா.... மகாவின் ஜாடையில் இருந்தாள்...

அதன்பின் சற்றும் தயங்கவில்லை சங்கர்... தயங்கி நின்ற பேத்தியை வாரிக் கொண்டார் தன் கைகளுக்குள்... கன்னத்தில் முத்தம் பதித்து ..... மகாவை பார்க்க, அதே ஏக்கம் அவரின் கண்களிலும் பிரதிபலிக்க... அவளை அப்படியே மகாவின் முகத்தோடு ஒட்டி வைத்தவர்...

"இங்கே பாரு மகா…. உன் பேத்தி அப்படியே உன்னை மாதிரியே இருக்கா...’’

கண்கள் பளபளக்க கூறினார்…..சங்கர்…..

சட்டென கண்கள் கலங்கியது மகாவிற்கும் கிருத்திகாவிற்கும்... மகா நாசுக்காய் கண்களை துடைத்துக் கொள்ள... அதை கிருத்திகா செய்யாமல் இருக்க, கண்ணீர் நாடியை தொட்டது...

அதை கண்டும் காணாமல் பேத்தியின் புறம் திரும்பினார் சங்கர்….

"உன் பெயர் என்னடா ராஜாத்தி…..’’ என ஆசையாய் கேட்க….

"காவ்யா...’’ என்றாள் கன்னகுழி சிரிப்பில் விரிய…..

"காவ்யா’’ என அழைத்துப் பார்க்க…..

"ஆமாம் தாத்தா காவ்யா...’’ என சங்கரை குறு குறுவென பார்த்தபடியே மீண்டும் சொல்ல…..

"எங்களை எப்படிமா அடையாளம் கண்டுபிடிச்ச...’’ ஆச்சரயமாய் கேட்டார்…..

"அம்மா , உங்களையும் ஆச்சியையும் போட்டோவில் காட்டினாங்க….. ஆனா அதில் இரண்டு பேரு ஹேரும் ப்ளாக்கா இருந்த்து….. இப்போ ஓய்டா இருக்கு…. "தன் கைக்கு அருகில் இருந்த முடியை காட்டி சொல்ல…..

"போட்டோவில் எதுக்குமா காட்டுற... நேரா நம்ப வீட்டுக்கு என் பேத்தியை கூட்டிட்டு வர வேண்டியது தானேம்மா...'' என முகம் கொள்ளா புன்னகையுடன் கூற.....

'இவர் கிருத்திகாகிட்ட பேசுராறா...? கிருத்திகா செய்த செயலால் பட்ட அவமானங்கள் அனைத்தையும் இவர் மறந்துவிட்டாரா...!'

மனதில் எழுந்த மகிழ்ச்சியுடன் மகா தன் பார்வையை கிருத்திகாவின் புறம் திருப்ப...அவள்... சந்தோசத்தில் திக்குமுக்காடிப்போய் நின்றிருந்தாள் கிருத்திகா...

தாங்கள் இருக்கும் இடம் மறந்து அனைவரும் ஒரு வித லயிப்பில் இருக்க..... தன் மேல் இருந்த கோபம் மறந்துவிட்டது என தைரியமாய் பேசினாள் கிருத்திகா....

"இப்படியே ஊருக்கு போறதா உத்தேசமாப்பா..... வீட்டுக்கு வாங்கப்பா..... நீங்களும்மா.....'' என தாயையும் அழைக்க ...

அதை அப்படிநே பின்பற்றியது அவளின் செல்ல புதல்வி காவ்யா..... "வீட்டுக்கு வாங்க தாத்தா..... வாங்க ஆச்சி....'' என அழைக்க...

இருவரும் ஒருவரின் முகத்தை மற்றொருவர் பார்க்க.... அந்த பார்வையே.....' பழைய விசயங்களை நாங்கள் இன்னும் மறக்கவில்லை என கூற'... கிருத்திகாவின் மகிழ்ச்சி புஸ்ஸென அப்படியே இறங்கியது...

மகளின் முகக் கன்றலை காண சகிக்காது ,மகா.... கண் ஜாடையால் அதை சங்கருக்கு காட்ட... இனி எதற்கு வீராப்பு..... என "நீ கூப்பிட்டு வராமலேயா.....'' என பேத்தியை கொஞ்சி தன் சம்மதத்தை தெரிவிக்க...

'அதற்கே அகமகிழ்ந்து போனாள்..... காவ்யா.....'

"அப்பா அம்மா நீங்க ஆட்டோவில் வாங்க..... நான். ஸ்கூட்டியில் முன்னணி போறேன்.....'' என அடித்த நிமிடமே ஆட்டோவை அவள் அருகில் நிறுத்த சொல்லி..... அதில் அவர்களை ஏற்றிவிட....

"நானும் ஆட்டோவில் தான் வருவேன்...'' என அடம் செய்த காவ்யாவை அவர்களுடனே ஏற்றி.... ஆட்டோவிற்கு வழிகாட்டியானாள் கிருத்திகா...

எதற்கு வந்தோம் என அவர்களும் மறந்தனர்...

எதற்காக வந்தனர் என கிருத்திகாவும் கேட்க மறந்தாள்...

ஹாஸ்டலுக்கு செல்லும் முன் அதை அறியாமலேயே...அவர்களை தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தாள் கிருத்திகா...

வீட்டை அடையும் முன்னரே அனைவருக்கும் தகவல் பரிமாறப்பட ......அவர்களை இன்முகமாய் வரவேற்றனர் விநாயகம் - சிவகாமி தம்பதியினர்..... கிருத்திகாவின் மாமனார் மாமியார்...

‘இவள் தனியாக குடித்தனம் நடத்துவாள் போல 'என நினைத்த சங்கர் மகாவிற்கு இனிய அதிர்ச்சி தான்... அனைவரும் கூட்டுக் குடும்பமாக ஒன்றாக இருந்தனர்.....

தன் மகள் அந்த அளவு பொறுப்புள்ளவளா...! என ஆச்சர்யம் அப்போதும் நீங்கவில்லை...

"அத்தை மாமா...’’

"அம்மா அப்பா வந்திருக்காங்க..... வாங்க.....’’ என அவ்வளவு பெரிதாய் இருந்த வீட்டின் ஹாலில் இருந்து அழைக்க..... அழைக்கும் முன்னரே மற்ற இருவரும் அங்கே பிரசன்னமாயினர்....

ஆனாலும் யார் முதலில் பேசுவது என்ற் தயக்கம் தான்... பேசினால் மரியாதை இருக்குமா....? என்ற சந்தேகம் இரு வீட்டு பெரியவர்களுக்குமே.....

இரு குடும்பமுமே ஒதுங்கும் அளவிற்கு சண்டை சச்சரவு..... ஆத்திரம் கோபம்..... என அனைத்தையும் அப்போது பிடித்து வைத்திருந்தவர்கள்.....

வயதின் முதிர்ச்சியும், காலமும் அதை செவ்வனே சரி செய்திருக்க ... யார் பேச்சை ஆரம்பிப்பது என்ற குழப்பமே ஓங்கியது... ஆனால் அதையும் உடைத்தாள் அந்த குட்டி தேவதை.....

"என்ன அப்பத்தா அப்படி பார்க்கறீங்க…. நீங்க தானே மகா ஆச்சியை பத்தி நிறைய சொல்லுவீங்க….. அந்த ஆச்சி தான் அப்பத்தா… வீட்டுக்குள்ள கூப்பிடுங்க அப்பத்தா…...'' என அங்கே நிலவிய பெரும் சந்தேகத்தை அழகாய் தீர்த்துவைத்தாள்….. காவ்யா...

குழப்பத்தை கைவிட்டவராய் சிவகாமி "வா மகா…..வாங்க அண்ணே…..'' என ஆரம்பித்து மட்டுமே வைக்க...

"உள்ளே வாடா….'' சங்கரின் தோளின் மேல் கை போட்டு விநாயகம் அழைக்க...

அவ்வளவு தான் கோபமும் ,குழப்பமும் அங்கே விடைபெற அழகிய உறவோன்று அங்கே புதுப்பிக்கப் பட்டது... அங்கே அழகிய பந்தம் நிலவியது…..

அனைவரும் குசல விசாரிப்பில் ஆரம்பித்து விருந்தே நடந்து... களைப்பில் , அங்கேயே தங்கிவிட்டனர்…..

பழைய உறவு புதுப்பிக்கப்பட காரணமும் வேண்டுமோ...என்னும் வண்ணம் இருந்தது அவர்களின் நடவடிக்கை...

சிறிய மகளையும் மறந்து போயினர்... வெகு நேர பேச்சின் பின்... களைப்பு தீற தூங்கி எழ மாலை ஆனது…. மாலையில் சுவாதினமாய் அமர்ந்து பெரியவர்கள் மீண்டும் பேசிக் கொண்டிருக்க...

முதலில் வெங்கட் வந்தான்…. எப்போதும் இல்லாமல் சற்று சீக்கிரமாய் வந்திருந்தான்… வெங்கட்டிற்கு போனில் சொல்லியிருந்தாள் கிருத்திகா….

வந்தவன் நேரே சங்கர் மகா இருவரின் அருகே சென்று கேட்டது ஒரே வார்த்தை தான்….. "மன்னிச்சுடுங்க அத்தை, மன்னிச்சுடுங்க மாமா'' என்பது தான்…..

ஏற்கனவே மகளின் வசதியான வாழ்வில் மகிழ்ந்த இருவரும் மருமனின் மன்னிப்பில் காஷ்மீரே சென்றுவந்தது போல் உணர…..

"சட்டென… அய்யோ நீங்க போய் … அதெல்லாம் வேண்டாம் மாப்பிள்ளை…'' என வெங்கட்டையும் தங்களின் ஜோதியில் சேர்த்துவிட….. அங்கே மகிழ்ச்சிக்கு சற்றும் குறைவில்லாமல் அன்பு பரிபாறபட்டுக் கொண்டிருந்தது…

வெகு நேரம் கழித்து வந்த சத்ரியனுக்கு முதலில் கண்களில் பட்டது… விநாயகத்தின் அருகில் அமர்ந்து படபடப்பின்றி சுவாதீனமாய் பேசிக் கொண்டிருந்த வெங்கட் தான்….

உள்ளே வந்த சத்ரியனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது……

.எப்படி இவர்கள் சமாதானம் ஆனார்கள்….! என்ற ஆச்சர்யம் குறையாமல் பார்த்தான்…… அதே நேரம் கண்கள் சாத்வி இல்லாததையும் கண்டு கொண்டன….

அமைதியாக வந்து அவர்கள் முன்பு ஒருநிமிடம் தயங்கி நிற்க... அவனை கண்டு கொண்ட சிவகாமி.... "இதோ சத்ரியும் வந்தாச்சி......'' என சங்கர்,மகாவிடம் கூறியபடி...

"வாடா , ..... இன்றைக்கு தான் கரெக்டான டைம்முக்கு வந்திருக்க... யாருன்னு அடையாளம் தெரியுதா.....? "என சிரிப்புடன் கேட்க.....

''ம்....'' என தலையசைப்புடன்......'' வாங்க'' என்ற அழைப்புடன் அவ்விடம் விட்டு அகல.....

அவனின் நடவடிக்கையில் சங்கடமாய் முறுவலித்தார் சிவகாமி.....'' அவன் ஏதோ டென்சன்ல இருப்பான்.... நீ கண்டுக்காத மகா....'' அவரிடம் சமாதனம் பேசி

"காபி கொண்டு வரவா.....'' என இளைய மகனை கேட்க...

"இல்லை வேண்டாம்.... இப்போ தான் சாப்டேன்மா.....'' என வாய். கூறினாலும் சாத்வியின் பெற்றோரை தான் அளவிட்டுக் கொண்டிருந்தான்.....

அவனின் அளவிடும் பார்வையும் ,கூர்மையாய் சங்கரிடம் பாய்ந்த விழிகளும் எதையோ கேட்க...

அவனின் சற்று ஒதுங்கும் பாவனையை பார்க்கவும் தான் சாத்வியை பற்றி வீட்டிலிருந்த அனைவருக்கும் ஞாபகம் வந்தது........

சிவகாமி சட்டென கேட்டார்…." மறந்தோ போய்டேன்…."''
சாத்வி எங்கண்ணா…..?'' என சிவகாமியும்….

"எங்கடா சாத்வி'' என விநாயகமும் கேட்க…

"அவளை விட்டுட்டாப்பா வந்திருக்கீங்க….'' என கிருத்திகாவும் கேட்க…

அவ்வளவு நேரம் இருந்த லகுதன்மை போய், சங்கரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க….

.'' அவ, இங்கே தான் இருக்கா…..'' என்றார் அனைவருக்கும் ஒரே பதிலில்…

"இங்கேயா…..'' என சிவகாமி வியப்புடன் கேட்க …

. "தனியாவா இருக்கா….'' என விநாயகம் கேட்க….

"எப்போ இருந்து, இங்கே இருக்கா…..'' என கிருத்திகா கேட்க….. அடுக்கடுக்காய் கேள்விகளை வந்து விழிந்த்து…….

மீண்டும் கடுப்புடன்… ஏதோ கூற வர அவரை தடுத்த மகா…

"இதே திருச்சியில் தான்…..

ஹாஸ்டலில் இருக்கா…..

வேலை பார்க்குறா…..'' என தயங்கி தயங்கி மகா கூற…

"என்னது வேலை பார்க்குறாளா.....'' "நம்ம வீட்டு புள்ளையை எதுக்குண்ணே வேலை பார்க்கலாம் விடுற.....'' என சிவகாமி ஆதங்கமாய் கேட்க...

"ஆமாம்மா..... நான் சொன்னதும் அவ கேட்டுட்டு தான் மறு வேலை பார்ப்பா ... அடக்காத புள்ளைகளை பெத்திருக்கேன்,..... சொல் பேச்சு கேட்டா தானே..... இவ வேலை பார்த்து தான்..... வீட்டில் அடுப்பெரியுது.....'' என கடுப்பாய் கூற....

சாத்வியை பற்றி ஏதாவது தெரிந்து கொள்ளலாம் என நின்றிருந்தவன்... பேச்சு போகும் திசையை வைத்தே....

'.ஏதோ சரி இல்லை....'

'. ஏதோ என்ன....? '

'இந்த இவர் தான் சரி இல்லை' என நினைத்தபடியே..... எதையும் கேட்க பிடிக்காதவனாய் தன் அறைக்குள் சென்று மறைந்து கொண்டான்.....

# அத்தியாயம் 2

**பெ**யருக்கு தங்களை வரவேற்று ,அத்துடன் முடிந்தது என விலக எண்ணியவன், சாத்வியின் பேச்சை கேட்டு அங்கேயே நின்றதும்...

பின் கோபம் கொண்டு அறைக்குள் அடைந்து கொண்டதையும் பார்த்த சங்கர் இன்னும் முகம் சுருங்க அமர்ந்திருந்தார்….. இதற்கு மேலும் அவமானம் தேவையா …..? என...

மகாவுக்குமே சற்று சங்கடம் தான்... ஆனாலும் சத்ரியிடம் இவ்வளவு பொறுமையையும் எதிர் பார்க்கவில்லை... 'அவன் தங்களை இந்த வீட்டிற்குள் விட்டதே பெரிது தான்... 'இவருக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும் 'என ஓடியது மகாவின் எண்ணம்...

நடப்பதையெல்லாம் பார்த்த விநாயகம் ஒரு முடிவுடன்….. சிவகாமியை கண் அசைவில் அழைத்தார்….மற்றவர்களின் கவனத்தை கவரா வண்ணம் விநாயகம் அருகே சென்று நிற்க…

சிவகாமியின் காதருகில் குனிந்து "மகாவை அழைச்சிட்டுப் போ…..சிவகாமி … அப்படியே கிருத்தகாவையும்'' என சொல்ல…

எதற்கு என்பது போல் பார்த்த சிவகாமி "ஏன்.... எங்களை அனுப்பிட்டு நீங்க மூன்று பேரும் என்ன செய்ய போறீங்க'' என கிண்டலாய் கேட்க...

"சொன்னதை செய்ற பழக்கமே உன்கிட்ட எப்போ தான் வருமோ... கிழவி ஆகிட்ட.... இது கூட நான் சொல்லி தான் தெரியனுமா...'' என வழக்கடிக்க....

கிழவி என்றதும் சிவகாமியின் முறைப்பு அதிகமாக.....

விநாயகம் தான் இறங்க வேண்டியதாயிற்று... "சரி சரி முறைக்காத... சங்கர் முகமே சரியில்லை.... சத்ரிகிட்ட கொஞ்சம் பேசனும்..... சொன்னதை செய்'' என்றார் விநாயகம்....

அதற்கும் சரி என்றால் அது சத்ரியின் அன்னை இல்லையே... "அப்போ நீங்க அவன் ரூம் போய் பேச வேண்டியது தானே.....'' ஐடியா குடுக்க....

நர நர வென பல்லைக் கடித்தார் விநாயகம்..... ‘‘கட்டினது அடங்கனாவுல, பெத்ததும் அடங்க போகுதுக... எனக்குனு வந்து வாய்ச்சிருங்கீங்களே...'' என நிஜமாகவே குறைப்பட்டு கொண்ட விநாயகம்..... ‘‘ஏய், சொன்னதை செய்டி...... காரணமில்லாம சொல்ல மாட்டேன்.... போ....'' என கடிக்க

இதற்கு மேல் கண்டிப்பாய் வாதாட முடியாது… என நாசூக்காய் அங்கிருந்து மகாவையும், கிருத்திகாவையும் அழைத்து சென்றார் சிவகாமி…..

மகா அமைதியாய் செல்ல… கிருத்திகா கோபமாய் சமையலறை சென்று வீட்டு வேலைகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டாள்….

அவள் பின்னேயே வந்த மகாவும் சிவகாமியும் சமையலறை வாசலிலே அமர்ந்து சாத்வியை பற்றி பேச்செடுக்க….. அதை கவனிக்காத கிருத்திகா கட கட வென பாத்திரங்களை உருட்ட….அதில் ஒன்று தரையில் நங்கென விழ….

"கிருத்தி , பார்த்துமா…. காலில் போட்டுடாத…..'' என சிவகாமி கண்டிக்க

"என் காலில் படலை அத்தை…..'' என கிருத்தி பதில் சொல்ல

"உன் காலில் இல்லைடி, எங்க காலில் போட்டுடாத….'' என இந்தமுறை மகா கூற…..

சிரித்துவிட்டார் சிவகாமி… ''புள்ளையை எத்தனை வருசம் கழிச்சு பார்க்கிற… நல்ல வார்த்தையா பேசாம…. இதென்ன பேச்சு மகா…..'' என மகாவையும் கண்டிக்க……

‘‘நல்ல வார்த்தை பேசற அளவுக்கு நான் புள்ளைகளை பெறலையே.....என்ன பண்றது சிவகாமி...’’ என கிருத்திக்கு கொட்டுவைக்கவும் தவறவில்லை மகா.....

அதில் உள்குத்து இருந்தது என்னவோ உண்மை.... ஏற்கனவே தன் தந்தையுடன் பேசாமல் இங்கே அழைத்து வந்த கோபத்தில் இருந்தவளை, மகாவின் பேச்சு சீண்டி விட...

இருந்த கோபத்தை சிவகாமியிடம் கொட்டிவிட்டாள்.....

அவளும் சத்ரியை பொரிந்து தள்ளிவிட்டாள்.....

‘‘எத்தனை வருசம் கழிச்சு அம்மா அப்பா வந்திருக்காங்க..... அதுவும் கெஞ்சி கூட்டி வந்தது நான்.... கோபப் பட வேண்டிய பெரியவங்க அமைதியா ஆயிட்டாங்க... உங்க சின்ன மகனுக்கு என்ன வந்ததாம்... இரண்டு வார்த்தை பேசினா இமேஜ் போயிடுமோ...அப்படி என்ன கோபம், அத்தை உனக்கு மகனுக்கு’’ என தன் மாமியாரிடமே மல்லுக்கு நிற்க....

அதுவரை கிருத்திகாவிடம் பேசாமல் நின்றிருந்த அவளின் அன்னை.....’’அப்படியே வாயில் போட்டேனா தெரியும்.... அதென்ன மகனை பத்தி அம்மாகிட்டயே குறை சொல்ற..... அதுவும் சத்ரியை பேசுற..... வாயை குறை....’’ என மகா சத்தம் போட...

"இப்போ நான் என்ன சொன்னேன்னு திட்ரீங்க....? சத்ரியனை பேசினதுக்கு அத்தை தான் கோபப்படனும்.... நீங்க

கோபப்படுறதில் நியாயமே இல்லை…” என தாயுடனும் சண்டையிட…..

"இந்த வீட்டுக்கு நீ வாழ வந்த நாளில் இருந்து சத்ரி எதுவும் உன்னை சொன்னானா… இல்லை ஏதாவது ஜாடைமாடையா????? இப்படி எதுவும் பேசினானா….?” என கேள்வியை அடுக்க…

வந்த நாளில் இருந்து யோசித்துப் பார்த்தவளுக்கு 'இல்லை 'என தானகவே தலை ஆடியது…..

“நீயே சொல்ற….. இல்லைன்னு… பின்னே அவனை எதுக்கு பேசுற….. சொல்ல போனால் பேசற தகுதியே உனக்கு இல்லை…” என கோபம் கூற…..

"பெத்த பொண்ணைவிட உங்களுக்கு சத்ரி பெரிசா போயிட்டானோ…..” கேட்ட பின் தான் சிவகாமியும் அங்கிருப்பதை உணர்ந்து பேச்சை நிறுத்த…..

மகாவோ இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் சட்டென பதில் வந்தது…

"ஆமாண்டி எனக்கு சத்ரி தான் முக்கியம்….. நீ இல்லை…” என போட்டுடைக்க…..

'ஏன் தான் சத்ரியை இழுத்தோம் 'என நொந்தே போனாள் கிருத்தி… அதை விட ஒரு தாய் மகளை அவமானப்படுத்த முடியாது… ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்…..

"அதுக்காக இரண்டு வார்த்தை அப்பாகிட்ட பேசினா தப்பில்லையே…'' என தன் ஏமாற்றத்தை குரலில் வெளிப்படுத்தி... "பாருங்க அப்பா 'உம்னு'' ஆயிட்டாங்க…. முகமே சரியில்லை'' என உண்மையான வருத்தத்துடன் கூற...

"அப்பா பாசம் எப்போவும் ஒரே மாதிரி இருக்கணும்... நேரத்துக்கு தகுந்த மாதிரி மாறினா... அது பாசம் இல்லை வேசம்...'' என வார்த்தை ஜாலம் காட்டி...

"இப்போ கூட உனக்கு அப்பா தான் முக்கியம் இல்லையா….. நீ சுயநல்வாதி தாண்டி….. நீ செய்த காரியத்தோட வீரியம் இன்னும் உனக்கு புரியலை…..''

அம்மா தன் தவறை சுட்டிக் காட்டுவது புரிந்தது….. ஆனால் அதை சரி செய்யும் காலம் போய் மறக்கும் நிலைக்கு வந்திருந்தனர்….. கிட்டதட்ட மறந்த ஓர் விசயம்...

திடீரென அன்னை ஞாயபகப் படுத்த அவமானமாய் இருந்தது….. அப்போதும் அடங்காமல் "சரிமா….. நான் செய்தது தப்பு தான்... வேசம் தான்… அப்படியே வச்சுக்கங்க... ஆனால் எனக்கு இதற்கு பதில் வேணும்... நாங்க பண்ணின வேலையில்...… சிரமப்படுவது , அவமானப்படுவது எல்லாம் நீங்க இரண்டு பேரு தான்…. இதில் சத்ரிக்கு எதுக்கு நீங்க சப்போர்ட் பண்ணனும்….''? என நிஜமாகவே புரிந்து கொள்ளமுடியாமல் பேச….

'ஏன் தான் சத்ரியை இழுத்தோம் 'என நொந்தே போனாள் கிருத்தி… அதை விட ஒரு தாய் மகளை அவமானப்படுத்த முடியாது… ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்…..

"அதுக்காக இரண்டு வார்த்தை அப்பாகிட்ட பேசினா தப்பில்லையே…'' என தன் ஏமாற்றத்தை குரலில் வெளிப்படுத்தி… "பாருங்க அப்பா 'உம்னு'' ஆயிட்டாங்க…. முகமே சரியில்லை'' என உண்மையான வருத்தத்துடன் கூற…

"அப்பா பாசம் எப்போவும் ஒரே மாதிரி இருக்கணும்… நேரத்துக்கு தகுந்த மாதிரி மாறினா… அது பாசம் இல்லை வேசம்…'' என வார்த்தை ஜாலம் காட்டி…

"இப்போ கூட உனக்கு அப்பா தான் முக்கியம் இல்லையா….. நீ சுயநல்வாதி தாண்டி….. நீ செய்த காரியத்தோட வீரியம் இன்னும் உனக்கு புரியலை…..''

அம்மா தன் தவறை சுட்டிக் காட்டுவது புரிந்தது….. ஆனால் அதை சரி செய்யும் காலம் போய் மறக்கும் நிலைக்கு வந்திருந்தனர்….. கிட்டதட்ட மறந்த ஓர் விசயம்…

திடீரென அன்னை ஞாயபகப் படுத்த அவமானமாய் இருந்தது….. அப்போதும் அடங்காமல் "சரிமா….. நான் செய்தது தப்பு தான்… வேசம் தான்… அப்படியே வச்சுக்கங்க… ஆனால் எனக்கு இதற்கு பதில் வேணும்… நாங்க பண்ணின வேலையில்…… சிரமப்படுவது , அவமானப்படுவது எல்லாம்

நீங்க இரண்டு பேரு தான்…. இதில் சத்ரிக்கு எதுக்கு நீங்க சப்போர்ட் பண்ணனும்….’’? என நிஜமாகவே புரிந்து கொள்ளமுடியாமல் பேச….

'இவள் என்ன இப்படி பேசுறா…..? என பார்வையை சிவகாமியின் புறம் திருப்ப….’

‘கிருத்திக்கு எதுவும் தெரியாது' என வாயை அசைத்து ஜாடை பேச… இம்முறை உரிமையாய் முறைத்தார் மகா…..

'இத்தனை வருசம் ….. இது தெரியாமல்... தெரிஞ்சிக்காம ... எப்படி…. இங்கே இருந்தாள்….’ என தான் யோசனை ஓடியது…..

இவர்களின் சண்டை இப்போதைக்கு முடியாது என...மகாவின் அருகில் வந்தவர் "வெங்கட் கிருத்தி இரண்டு பேருக்கும் தெரியாது’’ என மெதுவாய் கூறி பின் சப்தமாய்...

"மகாக்கு உன் மேல ஏதோ கோபம், சத்ரி மேல ஏதோ பாசம்... எல்லாரும் ஒன்றாக தானே வளர்ந்தீங்க... இப்போவும் போட்டி போடனுமா…..’’ என கிருத்தியை மனம் நோகாமல் பேசி

"நான் சத்ரிகிட்ட பேசறேன்... உன் அப்பாக்கு எந்த களங்கமும் நான் வரவிடமாட்டேன்... போதுமா….. நீ போய் உன் அப்பாக்கு பிடிச்ச சாப்பாடு ஏதாவது செய்...’’ என சமாதானம் செய்து அனுப்பி வைக்க…

.

மகா ,சிவகாமியை கண்கலங்க பார்த்திருந்தார்…..

"எதுக்கு மகா இப்போ கண்கலங்குற…"என கேட்க…..

"வீட்டுக்கு வந்ததும் இவள் எப்படி கூட்டு குடும்பத்தை சமாளிக்கறான்னு….. நினைச்சேன்….. ம்ஹூம் அது தப்பு… அவளை தான் நீங்க எல்லாரும் சமாளிக்கிறீங்க…’’ என மெதுவாய் சிரித்தபடி கூற…

"எல்லாம் ஒன்றாக வளர்ந்த கழுதைகள் தானே…மகா….. இரண்டு தடிமாடுகளை சமாளிக்க முடியாம திண்டாடுனேன்……. அந்த வகையில் ஒரு தடிமாட்டுக்கு உன் பொண்ணு பொறுப்பு எடுத்துக்கிட்டா… அதுக்கே அவளுக்கு என்ன வேணா செய்யலாம்…’’ என சிவகாமியும் சிரிப்புடன் பேசியபடி ஹாலுக்கு வர…..

இவர்கள் இங்கே பெரிய சண்டையே போட்டுக் கொண்டிருந்தனர்……

பெண்கள் மூவரும் சமையலறை செல்வதை உறுதி செய்து… மாமனாரிடம் கடலை போட்டுக்கொண்டிருந்த வெங்கட்டை அழைத்தார் விநாயகம்…’’ போய் சத்ரியை கூட்டி வா….’’ என அனுப்ப….

தந்தையின் பேச்சிற்கு இணங்கி வெங்கட் சத்ரியை அழைத்து வந்தான்…..

வந்த இரு மகன்களும் ஆளுக்கொரு புறமாய் அமர்ந்தனர்…….. நடுவில் கம்பீரமாய் விநாயகம் அமர்ந்திருக்க….

வெங்கட் அமைதியாய் தன் இடத்துல் அமர்ந்து கொள்ள….. சத்ரியோ இதை எதிர்பார்த்தவன் போன்று விடாமல் விநாயகத்தை முறைத்துக் கொண்டிருந்தான்….

அவனை பதிலுக்கு முறைத்தவர்… சுற்றிவளைக்காமல் நேரடியாகவே…

.. "வீட்டுக்கு வந்தவங்களை இப்படி தான் அவமானப் படுத்துவியா…..?’’ என நேரடியாய் கேட்க…..

இதை எதிர்பாரத சங்கர்….’’ஐயோ விடு மச்சான், இதைப் போய் பெரிசு பண்ணிகிட்டு’’ என கூறி சத்ரியின் முகம் பார்க்க…

அவனோ … அவன் தந்தையை விடாமல் பார்த்துக் கொண்டிருந்தான்…..

‘_இவன் கிட்ட வாயை கொடுக்காதவரை நமக்கு தான் நல்லது…..’ என வீட்டை சுற்றிலும் பார்வையை ஓட்டி மற்றவர்களின் பார்வையில் இருந்து தப்பினார்…

சத்ரியன் எதுக்கு இப்படி கோபப் படறான் என குழம்பியவர்… இப்போதைக்கு இருவரையும் பேச வைப்போம் என….. ‘‘சங்கருடன் பேசு "என விநாயகம் சத்ரியிடம் கண் அசைவில் கூற…

"என்னப்பா…..'' என்ன சொல்கிறார்…என புரிந்தாலும் வேண்டும் என்றே கேட்க…

"ப்ச்…. சங்கர்ட்ட பேசுடா…'' மெதுவாய் கூற…..

"என்ன சொல்றீங்கப்பா….. ஒன்றும் புரியலை…..'' என தெளிவாய் கூறி… பின் சுட்டுவிரலால் காதைக் குடைய…

வெங்கட்டிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை…

விநாயகத்திற்கு எங்கே முட்டிக் கொள்ளலாம் என சுவற்றின் ஒவ்வொரு மூலையையும் பார்க்க…

"யாரைப்பா தேடுறீங்க…'' அவரின் அவஸ்தை புரிந்து இன்னும் தெளிவாய் சிக்க வைக்க…

'போதும்டா மகனே…..' என்பதைப் போல் கையெடுத்து கும்பிட்டு….. பின்…

"படுத்தாதடா…பேசுடா…..''_என மெதுவாய் அவன் காதில் விழும்படி கூற…

"நானும் உங்க ப்ரண்டும் லவ்வா பண்றோம்… சமாதானப் படுத்த துடியா துடிக்குறீங்க…..'' என மீண்டும் சப்தமாய் கூற…

'இம்முறை வெளிப்படையாகவே தன் தலையில் அடித்துக் கொண்டார்…..'

இம்முறை வெங்கட் சத்தமாய் சிரித்துவிட்டான்… கண்டும் காணாமல் இருந்த சங்கருக்கும், நடந்த கூத்தில் முகத்தில் லேசாய் புன்னகை படர்ந்தது…

அதை பார்த்த விநாயகத்திற்கும் நிம்மதி லேசாய் படற... விநாயகம் விடாமல் 'இளைய மகனை' பார்வகயாலேயே யாசிக்க…..

சட்டென்று முகம் இறுக…..விளையாட்டை கைவிட்டவனாய்….. 'மாட்டேன்' என இடவலமாய் தலையை அசைத்து திமிராய் நின்றிருந்தான்…..

'இவன் அடங்கவே மாட்டான் போல….. என தன் நினைப்பை அப்படியே முகத்தில் பிரதிபலிக்க….

கண்டுகொள்ளவேஇல்லை சத்ரி…..அவன்பாட்டிற்க்கு அங்கிருந்த பெரிய எல்ஈஃடி டிவியை ஆன் சைய்து செனல்களை மாற்றி மாற்றி ரிமோட்டை துவம்சம் செய்து கொண்டிருந்தான்…

இந்த கூத்தையெல்லாம் பார்த்த படி அப்போது தான் ஹாலுக்கு வந்தனர் மகாவும் சிவகாமியும்...

இவன் அலம்பல் செய்வதை பொறுக்காமல் சிவகாமி மகனின் அருகே வேகமாய் வந்தார், 'ஏற்கனவே மருமகள் சிறியவனை குறை சொன்னது,சத்ரியின் நடவடிக்கை, இப்போதைய உதாசீனம் எல்லாம் சேர….'

"எதுக்குடா இப்போ உனக்கு இவ்வளவு கோபம்…..'' என சத்ரியை கேட்க….

இப்போ நீங்களா..... என கள்ளமாய் சிரித்தவன் ஒரு மயக்கும் புன்னகையோடு "இப்போ நீங்க தான் கோபப் படுறீங்க....'' என நக்கலாய் கூறினான்.....

'அடப்பாவி...' என கோரசாக வந்தது வார்த்தைகள் வேறு யாரிடமிருந்து..... எல்லாம்......வெங்கட் மற்றும் விநாயகத்திடமிருந்து...

தான்....

ஒரு நிமிடம் விழித்தாலும் சட்டென சுதாரித்த சிவகாமி.....''இப்படி பேசாத சத்ரி..... பெரியவங்களே கோபத்தை விட்டுடாங்க... இப்போ நீ ஆரம்பிக்காத.....'' என கடுப்புடனே கூற.....

"நான் என்ன ஆரம்பிச்சேன்....?'' என வம்பிழுக்க.....

"மாமாக்கிட்ட பேச தானே சொல்றோம்.......'' என இவ்வளவு நேரம் விநாயகம் போராடிய போராட்டத்தைத ஒரே வார்தையில் வெளிப்படையாய் கூற.....

'ஹப்பாடா...' என இருந்தது விநாயகத்திற்கு....

ஆனால் சங்கருக்கோ..... "ஹய்யோடா.....'' என இருந்தது.....

ஆனால் சத்ரியோ சற்றும் யோசிக்காது... "அதான் 'வாங்க' சொன்னேனே... இனி என்ன செய்யனும்…..?’’ என கடுப்புடன் கூற….

"டேய், அவங்க உன் மாமா அத்தைடா...? யாரோ மாதிரி 'வாங்க' சொன்னா சரியா போச்சா…..?’’ என அதற.கு பொறுமையற்று விநாயகம் தலையிட

"என்னது... அத்தை... மாமாவா…..? "என இழுத்தவன்...

சங்கரின் முகத்தை பார்த்து கொஞ்சமும் பாவப்படாமல்

‘‘அத்தை உங்கூட பிறந்தாங்களா….. இல்லை மாமா உங்க வீட்டம்மா கூட பிறந்தாங்களா……?’’ என அழுத்தமாய் கேட்க அங்கே பேரமைதி...

அதுவரை விளையாட்டாய் இருந்த வெங்கட்டும் புருவம் சுளித்தபடி என்ன நடக்கிறது என்பது போல் பார்த்திருந்தான்….. சத்ரியன் பேசிய வார்த்தைகளின் அர்த்தம் வெங்கட்டை யோசிக்க செய்தது...

'அன்று சங்கர் கேட்ட அதே வார்த்தைகள்...’ ‘இன்று சத்ரியின் மூலமே வர….. வார்த்தைகளின் வீரியம் இப்போது சற்று அதிகமாய் உரைத்தது…..சங்கருக்கு…..’

வெங்கட்டிற்கு தெரியாதே , இவன் இப்போ இப்படி போட்டு உடைக்கனுமா...? என சத்ரியை அடக்கினார்...

"டேய் அடங்க மாட்டியா நீ..... மரியாதையா நடந்துக்க சொன்னா..... இப்போ மரியாதை இல்லாம பேச வேற செய்யுற... "எனவெங்கட்டை கண்ணால் காட்ட.....

இம்முறை தெளிவாய் புரிந்து கொண்டவன் போன்று...

"நீங்க வேணா மறக்கலாம் ஆனா நான் மறக்க மாட்டேன்.....'' என தேவையான வார்தைகளை 'என்ன சொன்னால், சங்கருக்கு புரியுமோ' அப்படி வார்த்தைகளை கையாண்டான் சத்ரி......

"என்ன சத்ரி இது சின்ன பிள்ளை மாதிரி.....'' என சற்று பதமாகவே சிவகாமியும் கேட்க....

'எதற்கு இவனுக்கு இவ்வளவு கோபம் 'என தான் தோன்றியது அங்கிருந்த அனைவருக்கும்... முக்கியமாய் வெங்கட்டிற்கு.....

ஏனென்றால் சத்ரியை பற்றி நன்றாகவே தெரியும் , 'அவன் அவ்வளவு எளிதில் ஒருவரை தூக்கி எறிந்து பேச மாட்டான் 'என... அதுவும் சங்கரை பேசுவதென்றால்... 'ஏதோ மூளையை குடைந்தது...'

"இப்போ என்ன தான் பண்ண சொல்றீங்க.....'' என அவனும் கோபம் அடக்கி பேச

'என்ன செய்ய சொல்ல' அவர்களுக்கும் தெரியவில்லை.....

இடையில் தலையிட்டது சங்கர் தான்….. "அன்னைக்கு செஞ்சதுக்கு மன்னிப்பு கேட்க சொல்றியா….சத்ரியா…..?’’ என நேரடியாய் கேட்க…. வெங்கட் அதிர்ந்து போனான்….. 'என்ன நடக்குது' என காதை தீட்டி காத்திருக்க…..

"அப்போ என் கோபத்திற்காக காரணம் இது தான்னு நீங்களே முடிவு பண்ணியாச்சு அப்படித் தானே…..’’ என்றான் சத்ரி…. சங்கரிடம்…..

'இது என்ன வந்த முதல் நாளே ஆரம்பிக்கனுமா…..’ வெங்கட் தவிர்த்து எல்லோரின் மனதிலும் இதே எண்ணம் தான்…..

"நீ நடந்துக்கிறதை பார்த்தா அப்படித் தான் தெரியுது…..’’ என சங்க

"நீ நடந்துக்கிறதை பார்த்தா அப்படித் தான் தெரியுது…..’’ என சங்கரும் நேரடியாகவே சாட...

அவர் பதிலில் சப்தமில்லாமல் சிரித்தவன்….. "ஓ… நான் நடந்துக்கிறதை வச்சு, நீங்க என்னை புரிஞ்சுகிட்டீங்களோ...’’

"இதை நான் நம்பனுமா...’’ என எகிறியவன் கூர்மையான பார்வையுடன் ‘‘யாரை தான் நீங்க சரியா புரிஞ்சுக்கிட்டீங்க….என்னை புரிஞ்சுக்கிறதுக்கு……’’ என அழுத்தமாய் பார்க்க...

"யாரை நான் புரிஞ்சுக்கலை!'' ஏதோ உறைத்தது சங்கருக்கு...

"பெத்த பொண்ணையே புரிஞ்சு அவளை சந்தோசமா வாழ வைக்க முடியலை...இதில் இந்த தேவையில்லாத கேள்வி வேறையா.....?...'' நேரடியாக தாக்க.....

அவன் செல்ல வருவதை புரிந்து கொண்டார் சங்கர்... இவனிடம் தோற்பதா....? என பழைய கோபம் தலை தூக்க "பெத்தவனை விட மத்தவனுக்கு எதுக்கு இந்த அக்கறை'' இவரும் எடுத்தெரிந்து பேசினார்...

"அக்கறை....! ஓ.... அது உங்களுக்கு நிறைய இருக்கிறதா நனைப்போ.....'' இவனும் எகிற

"ஏன் இல்லாமல்... இருக்கே.....'' சண்டையிட தயாரானார் சங்கர்.....

"ஓ...அப்படியா....'' என தன் தாடையை தடவியவப் "எப்போ இருந்து சாத்வி இங்கே, இந்த ஊரில் வேலை செய்யுறா.....'' என கிண்டலாய் கேட்க.....

"நாலு ....... ஐந்து வருசமா....'' சொல்லும் போதே அவரின் அக்கறையின் அளவு அவருக்கு மட்டுமல்ல எல்லொருக்குமே தெரிந்தது...

"ம்... எங்கே தங்கி இருக்கா...'' இம்முறை இன்னும் நக்கல் குரலில்...

அவருக்கு தெரியவில்லை..... ஆனால் பதில் வந்தது மகாவிடமிருந்து...ஒரு ஹாஸ்டலின் பெயரை கூறினார் மகா.... ...

"அப்படினா....... இப்போ வரை அவளை பார்க்கவே வரலை நீங்க...'' அப்படித்தானே என்றவன்...."இதிலேயே தெரியலையா.... உங்க அக்கறையோட லட்சனம்.....'' அசராமல் கொடுத்தான்.... அடக்கி வைத்த ஆத்திரம் ஒட்டு மொத்தமாய் கொட்டியது...

''பொண்ணுங்களை பெத்தா மட்டும் போதுமா...?

கூட வச்சு பார்த்துக்க தெரியலை...!

நீங்க எல்லாம் எதுக்கு பிள்ளையை பெத்துக்கணும்,...'' அவ்வளவு ஆத்திரம்.... வயது வித்யாசம் பாராது வறுத்தெடுத்துவிட்டான்...

அவன் பேசுவதை அனைவரும் கவனித்திருந்தனரள ஒழிய தடுப்பார் யாரும் இல்லை...

சங்கருக்கு ஏற்கனவே சத்ரி பேசியதிலேயே ஏறி இருந்த ஆத்திரம் இப்போது இதில் இன்னும் கோபமும் கூட

விநாயகத்திடம் திரும்பினார் சங்கர்.....

"சின்ன பையனை பேச விட்டு வேடிக்கை பார்க்கிறியா மச்சான் .......

அந்த ஓடுகாலி கழுதை என்னைக்கு சொல் பேச்சு கேட்டா... கேட்கிற மாதரியா பிள்ளை பெத்து வச்சிருக்கேன்...

என்னவோ எல்லாத்துக்கும் நான் மாற்ற மாதிரி பேசுறான்…. நீயும் பார்த்துட்டு இருக்க...'' சத்ரி கேட்ட ஒவ்வொரு வார்த்தையும் சுழன்றடிக்க….. ஒரு மாதிரி மனநிலையில் விநாயகத்திடன் உதவிக்கு வந்தார்….

அதற்கு விநாயகம் பதில் பேசும் முன்….. சத்ரி "சொல் பேச்சு கேட்க மாட்டாளா..? யாரு சாத்வியா…..…..?'' என அவரிடம் கோபமாய் கேட்டவன்…

‘‘நீங்க சொல்லுங்கப்பா சாத்வி சொல் பேச்சு கேட்க மாட்டாளா….? சொல்லுங்க…..'' என தந்தையிடமும் ஆத்திரமாய் கேட்க...

யார் பக்கம் பேச என குழம்பிபோனார் விநாயகம்... மகனுக்காகவா…? நண்பனுக்காவா...?

"டேய் விடுடா….'' என விநாயகம் இடையில் வர …

‘‘அப்படிலாம் விட முடியாது "என சங்கரிடமே கூறியவன் ‘‘இங்கே எதுக்கு வந்து இருக்காங்க….?'' தந்தையிடம் கேட்பது போல் சங்கருக்கு மீண்டும் பீபியை ஏற்ற…...

இதுக்கு என்ன சொல்ல போறானோ... என பயந்து "சாத்விக்கு கல்யாணம் பண்ண….!'' என சங்கரை பார்த்தபடியே கூறகார் விநாயகம்……..

"ஓ… அப்போ அவளுக்கு எதுவும் சொல்லாமல் எல்லாமே ரெடி பண்ணிட்டு தான் இங்கே அவளை தேடி வந்திருக்காங்க...ம்...'' என இழுத்தான்…..

"ம்…..'' என்றவர்..

''சாத்விக்காக பேசறன்னு புரியுதுடா... ஆனா அவ அவங்க பொண்ணு... அவங்க பண்ணதும் தப்பு தான்...… அதுக்காக வயசுக்கு மரியாதை இல்லையா…. இப்படி நிற்க வச்சு கேள்வி கேட்குற... "பதமாகவே விநாயகம் கூற...

"அப்படித் தான் கேட்பேன்... எனக்கு உரிமை இருக்கு கேட்பேன்... இன்னமும் நான் அதே சத்ரியன் தான், அவளும் அதே சாத்வி தான்... அவளுக்காக நான் பேசுவேன்...… வயசு பொண்ணை தனியா அனுப்பி வச்சு இருக்காங்கப்பா….. டெய்லி நீங்களும் நியூஸ் பார்க்குறீங்க தானே... ஏதாவது ஆச்சுனா…..'' ஆதங்கமாய் கேட்டான்...

"ஏண்டா அந்த லெவளுக்கெல்லாம் போற…..'' என பயந்தே போனார்…. விநாயகம்...

"சரி அவ்வளவு போக வேண்டாம்..... ஐஞ்சு வருசமா இருக்கா..... எப்படியும் ப்ரண்ட்ஸ் இல்லாம இருக்க மாட்டா........ அதில் ஏதாவது கெட்ட பசங்க சவகாசம்....

இல்லை கெட்ட பொண்ணுங்களோட சவகாசம் ஏதாவது இருந்து அவள் வழி மாறி இருந்தா....? இல்லை இதோ நம்ப கிருத்திகா மாதிரி ஏதாவது வேலை பார்த்திருந்தா.....? "என சாத்வியின் மீதான அவர்களின் உதாசினத்தை அப்பட்டமாய் எடுத்துக் கூற....

சங்கர் பயந்தே போனார்..... இருந்தும் மனதை மாற்றிக் கொண்டு பயத்தை மறைத்து.....

‘‘அவள் அப்படியெல்லாம் போற ஆள் கிடையாது... சத்ரியா... வீட்டுக்கே அடங்காதவ அவ..... நாங்க தப்பு பண்ணினாலே முகத்துக்கு நேரா செல்றவ... அவ எப்படி..... இப்படி தவறான வழியில் போவாள்...’’ என கேட்ட சங்கரின் குரல் சற்று நடுங்கித் தான் போயிற்று... நடுங்க வைத்தான் சத்ரியன்...

அதே நடுக்கத்துடன் "ஏண்டா வயித்துல புளியை கரைக்க...’’ என சத்ரியின் சற்று உரிமையாகவே அதே நடுங்கிய குரலில் கேட்க

"புளியை கரைக்கறனா.....? யோவ் மாமா... உனக்கு இன்னும் புரியவே இல்லையா.....? அவ ஸ் கூல் படிக்கும்

போதே லவ் மேட்டரில் சிக்கினவ... ஒழுக்கமா இருந்த சாத்வியை ஒழுங்கில்லாம ஆக்கினது நீ தான்…. மறந்திட்டு பேசுறீங்களோ…..'' என மேலும் திரியை கொழுத்திப் போட ….. நெஞ்சே அடைக்கும் உணர்வு…..சங்கருக்கு...

"டேய் அடங்கவே மாட்டியாடா நீ...'' என விநாயகம் தான் அடக்கும்படியாயிற்று…..

ஆனாலும் அடங்குமா நம் காளை…..?

"பின்னே சாத்வியை நிம்மதியில்லாம ஆக்கிட்டு , இவர் இங்கே கல்யாணம் பண்ண பிளான் போடுறாராம்….. அதுவும் அவளோட இஷ்டம் இல்லாமல்... நாம இருக்கும் போதே அந்த பாடு படுத்துவாரு... அதுக்கப்பறம் சாத்வியை எப்படியெல்லாம் படுத்தினாரோ... இங்கே தனியா என்ன பண்றாளோ...'' என ஆத்திரம் கொள்ள…. மனமோ பீதியில் உரைந்தது...

சத்ரி வாயால் சொல்லிவிட்டான், ஆனால் அவர்கள் சொல்லவில்லை அவ்வளவு தான் வித்யாசம்…… ஆனால் அதே பீதியில் தான் அனைவரும் உறைந்து போய் இருந்தனர்……

ஒரு மகளை நினைத்து தந்தை கொள்ள வேண்டிய அனைத்து அக்கறையும் ஒரு இம்மியளவு கூடகுறையாமல் சத்ரியிடம் வெளிப்பட்டதை பார்த்து அனைவரும் அதிர்ச்சியில் உரைந்தனர்….. அன்பின் உச்சம் அது…

வெங்கட் கூட நினைத்தான்…… காதலில் … திருமணத்தில் ஏன் தங்கள் உறவின் போது கூட உணராத உணர்த்தியிராத உணர்வு அது… காதல், அன்பு, பாசம் ,அக்கறை என அனைத்தையும் தாண்டிய ஆத்மார்த்மான உணர்வாய் தான் தோன்றியது…

சாத்வியின் மீதான ஏதோ ஓர் உணர்வுடன்…காந்தமாய் ஒட்டிக் கொண்டது சத்ரியின் உணர்வுகள்…

# அத்தியாயம் 3

**ச**த்ரியின் கோபம் அடங்குவதாய் இல்லை... இன்னும் என்ன சொல்லி இவரை வறுத்தெடுக்கலாம் என்ற போஸில் நின்றிருந்தான்.....

அவனை பார்த்த சங்கருக்கு 'ஊருக்குள்ள பஞ்சாயத்து பண்ணின எனக்கே இவன் பஞ்சாயத்து பண்றானே..... பேசாமல் இவன் லாயரா போய் இருந்திருக்கலாம்...

இவன்கிட்ட எல்லாம் வாங்கிக் கட்டனும்னு எனக்கு தலையெழுத்து...இன்னும் என்ன வச்சுருக்கானோ...' என பயந்தாலும்..... 'பில்டிங் ஸ்ராங்க், பேஸ்மட்டம் வீக்' என வீராப்பாய் போஸ் கொடுத்து சங்கரும் நின்றிருந்தார்.....

நமக்கு தெரியாமல் என்னவோ நடந்திருக்கு.... எப்படி கவனிக்காமல் போனோம்...

இவன் இவ்வளவு கோபப் படற அளவுக்கு ,

சாத்வி மேல அக்கறை காட்ற அளவுக்கு .... என்ன நடந்திருக்கும்..... ?

அதுவும் மாமாவை குறி வச்சு தாக்குறானே...! இவரும் பம்முறாரு.....

நம்ம மாமனார் பம்முற ஆள் கிடையாதே..... வெங்கட்டின் மூளை யோசித்து யோசித்து சூடாகிக் கொண்டிருந்தது...

எப்படி இவனை நிறுத்துவது என தெரியாமல் முழித்துக் கொண்டிருந்த மற்றவர்களை காப்பாற்றினாள் கிருத்திகா..... அனைவருக்கும் பால் பாயசத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.....

"டேய் போதும்டா... கிருத்திகா வரா...பார்த்து நடந்துக்கோ...'' இது தான் நேரம் என விநாயகம் சத்ரியை அலார்ட் செய்ய...

'எங்களுக்கு தெரியும்.....' என சாதாரணமாய் முகத்தை மாற்றிக் கொண்டு, 'ஒரு நாள் இருக்கு மாமா உனக்கு' என சங்கரை கண்களால் எறித்தபடியே..... அமர்ந்திருந்தான்...

அதற்காகவே காத்திருந்ததைப் போல் அவன் மடியில் வந்து அமர்ந்தாள் காவ்யா..... "ஏய் வாலு இவ்வளவு நேரம் எங்க போய் இருந்த... ஆளையே காணோம்....'' என அவள் கன்னத்தை இரு கைகளாலும் பிடித்து மெதுவாய் ஆட்டினான்.....

இவ்வளவு நேரமும் வறுத்தெடுத்தவன் இவன் தானா என்னும் வண்ணம்....அவ்வளவு சாந்தமான முகபாவம்....

"அம்மா போனில் கேம் விளையாண்டுட்டு இருந்தேன்.....'' என சத்ரியின் கையில் இருந்த போனை ஆசையாய் பார்த்தபடியே கூற.....

அதுவே கூறியது 'இப்போது தான் கிருத்திகா, அவளது மொபைலை காவ்யாவிடம் இருந்து பறித்திருக்கிறாள் 'என....

பெரியவர்களின் பேச்சில் காவ்யா எதற்கு என கிருத்திகா தான் கையில் மொபைலை கொடுத்திருப்பாள்.... இப்போது அதற்கு வேலை இல்லை என மீண்டும் அவளிடமிருந்து பறித்திருப்பாள்....

காவ்யாவின் கண்கள் சத்ரியின் மொபைலையே வட்டமடித்துக் கொண்டிருப்பதையும், பின் அதை ஏக்கத்துடன் பார்ப்பதும் என இருக்க.....

சத்ரி அவளை வேறு புறம் திருப்பினான், "காவ்யா நான் உனக்கு ஒன்னு வாங்கி இருக்கேன், என்னனு சொல்லு பார்க்கலாம் , "என அவளை தன் வழிக்கு திருப்பியபடி...

அவள் விளையாடுவதற்கு என இருக்கும் தனியறைக்கு அழைத்துச் சென்றான்.... அறை முழுவதும் பொருட்கள் இருந்தாலும் , புதிதாய் இருந்த ஒரு பெட்டி பிரிக்கப்படாமல் இருக்க .... அதன் அருகில் இறக்கிவிட்டான் அந்த ஆறு வயது சிறுமியை.....

சத்ரி அதை பிரிப்பதற்கு உதவி செய்தாலும் , பிரிக்கும் பொறுப்பை காவ்யாவிடமே கொடுக்க, அவளும் ஆசையுடன் பிரித்தாள்..... கையில் ஏதோ வைத்திருக்க , அவள் பெட்டியை பிரிக்க சிரம்ப்பட்டாள்....

அதைப் பார்த்த சத்ரி, 'என்ன வச்சிருக்க கையில்' என அதை அவன் கைக்கு மாற்றிப் பார்க்க….' அது ரப்பர் பல்லி' வாங்கி தந்ததே சத்ரி தான்…..அவ்வப் போது அதை காட்டி யாரையாவது பயமுறுத்திக் கொண்டிருப்பாள்…..

அதைப் பார்த்தவன் உதட்டில் சிறு புன்னகை வர அதை தன் கையில் வைத்துக் கொண்டான்…..

பெட்டியை பிரித்துப் பார்க்க உள்ளே இருந்தது பேட்டரி கார்... அவ்வளவு அழகாய் ராயல் லுக்குடன் இருந்தது...

"ஆ…. வென வாய் பிளந்து நின்றாள் காவ்யா….. கண்கள் அகலமாய் விரிய…..ஆசையை கண்களில் தேக்கி பார்த்திருக்க…. அவளை அலேக்காக தூக்கி காரினுள் அமர வைத்து அதை இயக்க கற்று கொடுத்தான் சத்ரி…..

முதலில் பயந்து கண்களை மூடியவள் , பின் சத்ரி சொல்லி கொடுத்தபடி இயக்க….

அடுத்த சில நிமிடங்கிளில் வீட்டினுள் சர் சர்ரென ஓட்டி எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தாள்…..

அதைப் பார்த்தபடியே மீண்டும் ஹால் சோபாவில் அமர…. "எல்லாரும் சாப்பிட்டுடாங்க சத்ரி ,நீ மட்டும் தான் சாப்பிடலை "என அவன் கையில் பாயசத்தை கொடுத்து. ...

தந்தையிடம் சென்று "நீங்களும் எடுத்துக்கோங்க அப்பா…..'' என டிரேயை நீட்டினாள் காவ்யா…..

"இப்போ தானே சாப்பிட்டேன்….. வேண்டாம்மா…'' என மறுக்க…..

"உங்களுக்கு தான் ரொம்ப பிடிக்குமே….. எடுத்துக்கோங்கப்பா…..'' என வற்புறுத்தி சங்கரின் கையிலேயே கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்….

வறட்டுக் கோபத்தை இழுத்துப்பிடித்து , இப்படிப்பட்ட சொந்தங்களின் மதிப்பை இழந்துவிட்டதாக...

மகளின் சந்தோசமான வாழ்க்கையை கண் குளிரப் பார்க்காமல்...

பட்டாம்பூச்சியாய் சுற்றித் திரியும் பேத்தியை கையில் வைத்து தாங்காமல் …..

என அனைத்தையும் இழந்துவிட்டாதகவே நினைவு ஓடிக் கொண்டிருந்தது...

இப்போவாவது ஒன்று சேர்ந்தோமே என ஒரு வகையில் நிறைவு ஏற்பட கடைசியில் மிச்சமிருந்த பாயாசத்தை குடித்து டம்ளரை கீழே வைக்க….. கண்களில் பட்டது….சத்ரியன்...

சத்ரி ஸ்பூனில் பாயாசத்தை கிளரி, பின் அப்படியே ஸ்பூனால் எடுக்க….

பாயாசத்திற்குப்பதில் அதில் வழிந்து கொண்டிருந்தது ஒரு பல்லி…..

அதைப் பார்த்த சங்கர் அடுத்த நிமிடம், வாஸ் பேசனில் ‘‘வோ….வோக்….வோவக்…..…வோ….’’ என வாந்தி எடுத்துக் கொண்டிருக்க…..

ஏனோ தனோவென்று இருந்த அனைவரும் சங்கரின் பின் வந்து நின்றனர்……

'ம்… நினைச்சது நடந்திடுச்சு…’ என மற்றவர்கள் பார்க்கும் முன் 'அந்த ரப்பர் பல்லியை எடுத்து உதறி அருகில் இருந்த டம்ளிரில் போட்டுவிட்டு….. ஸ்பூனால் பாயாசத்தை சாப்பிட ஆரம்பித்தான்…..

சங்கரின் வாந்தி நிற்கவும் தான் தாமதம் மகா, சிவகாமி, விநாயகம், வெங்கட், கிருத்திகா என அனைவரும்

"என்னாச்சு ப்பா…"

"என்னாச்சு , அண்ணா… ‘‘

"என்னாச்சுங்க…"

"என்னடா செய்யுது…"என ஆளாளுக்குக் கேட்க…..

வாயை கழுவியபடி சங்கர் சத்ரியை பார்க்க…..

அவனோ டிவிக்குள் புதைந்தவனாய் கிரிக்கெட்டில் மூழ்கி இருந்தான்…

. அதுவும் பாயசத்தை வேண்டுமென்றே ருசித்து சாப்பிட்டுகொண்டிருந்தான்…..

சங்கருக்கு நம்பவே முடியவில்லை…..

'இப்போ இவன் ஸ்பூனில் பல்லி இருந்ததே...'

'இப்போ பாயாசம் சாப்பிடுறான்.....' குழம்பிப் போனார்...

இன்னும் தன் பதிலுக்கு காத்திருப்பவர்களை அசடுவழிய பார்த்தவர்

"அது ரொம்ப சாப்பிட்டேன் போல அதான் சேரலை ....." என கூறி சமாளித்தார்.....

ஆனால் யாரும் கவனிக்காத ஒன்றஐ வெங்கட் கவனித்துக் கொண்டிருந்தான்...

தன் மகள் கேட்கும் அனைத்தையும், அடித்த நொடியே கொடுத்து, அவளை இப்படி மகிழ்ச்சியாய் வைத்திருக்கின்றானே..... என பாசமாய் சத்ரியை பார்த்துக் கொண்டிருந்தான்....

அப்போது தான் சத்ரி... சுவாதீனமாய் பல்லியை பாயாசத்தில் போட்டதையும், வேண்டுமென்றே சங்கர் பார்க்கும்வரை அதை ஸ்பூனில் வைத்திருந்ததையும்,

பின் சங்கர் வாந்தி எடுத்ததையும் மகிழ்ச்சி பொங்க பார்த்ததையும் என

சத்ரியின் சேட்டைகள் அனைத்தையும் பார்த்த வெங்கட் அவன் அருகில் வந்து அமர்ந்தான்.....

இன்னும் கிரிக்கெட்டில் மூழ்கி இருந்தவனை..... "ஏண்டா ,இப்படியெல்லாம் பண்ற....." கடுப்பாய் கேட்டான் வெங்கட்...

"எப்படி பண்றாங்க…'' அசால்ட்டாய் கேட்டான் சத்ரி…

"ரப்பர் பல்லியை பாயாசத்தில் போட்டு மாமாவை வாந்தி எடுக்க வச்சியே …. அதை சொல்றேன்…..'' இவன் யார் காதிலேயும் விழுந்திடுமோ… என மெதுவாய் கேட்க…

"பார்த்துட்டியா…..'' அசால்ட்டாய் வந்தது பதில்…..

"ஏதுக்காக இப்படி மாமாவை படுத்துற…..'' இம்முறை கோபமாய் கேட்டான் வெங்கட்…

"சாத்வியை பத்தி கொஞ்சமும் கவலை இல்லை….. இவருக்கு பாயாசம் ஒன்னு தான் குறை…'' ஏளனமாய் கேட்டான் சத்ரி…

"ஏதோ என்கிட்ட இருந்து மறைக்கிறீங்க….. அதுவும் சாத்வியை பற்றி….. அதுவும் உன் டார்கெட் புல்லா மாமா மேல தான்…''

"என்னனு சொல்லுடா…..''

"சாத்வி மேல் பாசம் இருக்க வேண்டியது தான், அதுக்காக அவ அப்பாவையே படுத்துவியா…..''

''மாமாக்கு தாண்டா மகள் ….. உனக்கு பொண்டாட்டி இல்லை….. ஞாபகம் இருக்கா….. அப்பன் மகள் என்னமும் பண்றாங்க…..உனக்கென்ன….?"என சத்ரி பதில் கொடுக்காததற்கு எல்லாம் , சேர்த்து வைத்து பேசிய வெங்கட் சட்டென…

"ஒரு வேளை அவளை நீ கல்யாணம் பண்ண பிளான் போடுறீயோ…..'' என வெங்கட் நக்கலாய் கேட்க…..

"எனக்கு பிடிச்சிருந்தா , இந்நேரம் பேசிட்டு இருக்க மாட்டேன்….. தூக்கிட்டு வந்திருப்பேன்….. உன்னை மாதிரி நான் கிடையாது….'' என மூக்குடைக்க….. இனியும் பேசுவானா…? நம் வெங்கட்…..

' சேரவில்லை' என்ற பதிலில்... கொஞ்சம் ரெஸ்ட் எடுடா... என சொல்லி அவரை அனுப்பி வைக்க...

சங்கர், சத்ரியும் வெங்கட்டும் பேசுவதை ஒளிந்து நின்று ஒட்டு கேட்க...

இந்த பேச்சில் சற்றே அதிர்ச்சியுடன் சற்று முன் வந்து...சத்ரியை பார்க்க…..

' ஐயோ, இந்தாளு காதில் வேற விழுந்திடிச்சா...' என முகம் சுளித்துசுளித்து பின்...

''நெருப்புன்னு சொன்னா வாய் வெந்துடாது……… "என அழுத்தமாய் கூறி….சென்று விட்டான்….

'ஒரு வேளை இப்படியும் நடக்குமோ…..' என பயந்துவிட்டார்…..

சத்ரிக்கு சாத்வியா…..முடியவே முடியாது……

விநாயகத்திடம் சென்று "சாத்வியை பார்த்துட்டு வந்துடுறேன்…..மச்சான்….'' என கிளம்ப...

"டேய் நேரத்தை பார்த்தியா... நைட் ஆயிடுச்சு ,இந்த நேரம் ஹாஸ்டலுக்குள்ள எல்லாம் விட மாட்டாங்க... காலையில் போய்க்கலாம்... ஏற்கனவே வாந்தி வேற... போடா போய் ரெஸ்ட் எடுடா..."என விநாயகம் சத்தம் போட... அமைதியாய் போய் படுத்துக் கொண்டார்...

காலையில்... ஹாஸ்டலுக்கு முதல் ஆளாய் கிளம்ப...

"நீ தனியாவா போற இரு சங்கர்..." என சத்ரியை அழைத்தார்....

"என்னப்பா என்றான்....."

"ஒரு சின்ன வேலை..."

"என்ன...."

"நம்ப சாத்வியோட ஹாஸ்டல் போகனும்..... சங்கர் பஸ்ஸில் வந்தான் போல.... நம்ப காரில் கொண்டு விட்டுடேன்..... அப்படியே சாத்வியை கூட்டி வாயேன்...." என கேட்க....

"ஓ....... இப்போவாவது மகள் நியாபகம் வந்ததே...." என கேலியாய் கேட்டு பின்..... "ஏதோ ஓர் ஹாஸ்டல் பேர் சொன்னீங்களே..." என யோசித்தவன் ஹாஸ்டல் பெயர் நினைவு வர...

மெல்லிய சிரிப்புடன்..... "அவ அங்கே இருக்க மாட்டா...." என கூலாக சொல்ல ...

சத்ரியையே குறு குறுவென பார்த்து "நீ டக்குன்னு அன்சர் சொல்றத பார்த்தா... அல்ரெடி சாத்வியை தேடி ஒரு ரவுண்டு போய்ட்டு வந்துட்ட போல....'' என சந்தேகமாய் வெங்கட் கேள்வி கேட்க...

வெங்கட்டை வெளிப்படையாகவே முறைத்துக் கொண்டிரிந்தான் சத்ரி...

மற்றவர்கள் 'இவன் என்ன நேரில் போய் பார்த்த மாதிரி சொல்றான்.....' என குழப்பமாய் பார்த்திருக்க...

''இப்போ வரை அது சாதாரண ஹாஸ்டல் தான்,..... அங்கே எல்லாம் தங்குறது கஷ்டம்... இத்தனை வருசமா ஒரே ஹாஸ்டல்லில் இருக்க சான்ஸ் இல்லை, கண்டிப்பா வேற தேடி போய் இருப்பா.....'' என்றான் அவளை முழுவதும் அறிந்தவன் போன்று....

'இவனுக்கு எப்போ பார்த்தாலும் இதுதான்வேலை..... நாம ஒன்னு சொன்னா, இவன் ஒன்னு சொல்றேன் பாரு...' என முறைத்த விநாயகம்....

"எப்படியும் அவள் அங்கே இருக்க போறது இல்லை..... டைம் தான் வேஸ்ட்... எனக்கு வேலை இருக்கு... வெங்கட்டை கூட்டிப் போங்க....'' என கிளம்பிச் சென்றுவிட்டான்.....

பெற்றவர்கள் கூட கணிக்க தவறவிட்ட ஒரு விசயம் சத்ரியில் சரியாய் கணிக்கப்பட...

சத்ரி சொல்லி கேட்பதா என…. "நான் போய் பார்த்துட்டுவரேன்….மச்சான் ஒருவேளை இருந்தா கூட்டி வாரேன்…..’’ என கிளம்ப….

சத்ரியின் பேச்சில் பயந்தவாறு நின்றிருந்த சங்கரிடம்….. "அவனுக்கு எப்போவுமே வயித்தில புளியை கரைக்கிறது தான் வேலை… நீ எதுக்கும் போய் பார்த்துட்டு வா சங்கர்… "சங்கருக்கு சப்போர்ட் செய்தார் விநாயகம்…

"டேய் நீயாவது கூட போடா…..’’ என வெங்கட்டை கேட்க…..

ஏற்கனவே ‘அப்பா சாத்வியை பார்க்க போறாங்க….. நீங்க கூட்டிட்டுப்போங்க…’ என ஒரு மணிநேரமாய் வெங்கட்டை படுத்தி இருந்தாள் கிருத்திகா…..

தெரியாத ஊரில் சங்கரை தனியாக விடவா என எண்ணும் போதே வெங்கட் வந்து "வாங்க மாமா நான் அழைச்சுட்டு போறேன்….. பார்ப்போம் இருந்தா கூடையே கூட்டிட்டு வரலாம்’’ என இருவரும் சென்றனர்….

பெர்மிஷன் போட்டு சங்கருடன் வந்த வெங்கட் லீவும் போட்டுவிட்டான்…..

சாத்வியை தேடி சென்றனர் வெங்கட்டும் சங்கரும்… ஐந்து வருடங்களுக்கு முன் தாயின் கைகளில் திணித்து விட்டு சென்ற அதே ஹாஸ்டலின் அட்ரெஸ்…

ரிசப்சனில் சாத்வியை விசாரிக்க..

"நீங்க....'' என்றார் வார்டன்...

"நான் சாத்வியோட அப்பா...'' என்றார் சங்கர்...

"ஓ... இப்போ அவங்களுக்கு ஒர்க்கிங் அவர்ஸ்...ஈஃவ்னிங் வந்து பார்த்துக் கோங்க...''

"இல்லை இப்போவே பார்க்கனும், அவளோட போன் நம்பர் இருந்தா கொடுங்க.....''

வித்யாசமாய் பார்த்தார் அந்த வார்டன்... "அப்பான்னு சொல்றீங்க..... மகளோட போன் நம்பர் எப்படி தெரியாம போகும் ''

"அது சாத்வி போன் நாட் ரிச்சபிள்ள இருக்கு... கொஞ்சம் அர்ஜெண்டா பார்க்கனும் ஆபீஸ் நம்பர் கொடுங்க..... ''

என வசமாய் வெங்கட் உதவி செய்ய...

பேய் முழி முழித்துக்கொண்டிரிந்த சங்கருக்கு அப்போது தான் மூச்சு வந்தது...

வார்டன் இன்னும் நம்பாத பாவனை பார்க்க...

"நீங்களே நம்பர் டயல் பண்ணி கொடுங்க மேடம்.... நம்பர் கூட எங்களுக்கு சொல்ல வேண்டாம்.....'' என வெங்கட் மரியாதையாய் பேச....

"ம்…'' என சம்மதித்து அவர்களுக்கு தெரியாமலேயே நம்பரை டயல் செய்து சாத்வியை அழைக்க...

"சாத்வி... வார்டன் பேசுறேம்மா... உன்னோட அப்பா வந்திருக்காங்க… உன் மொபைல் ரிச்சபிள்ள இல்லை போல….அதான் தேடி ஹாஸ்டல் வந்திருக்காங்க... பேசுறியாமா…..'' சங்கரின் மேல் ஒரு கண்ணை வைத்தபடியே பேச….

"ம்… கொடுங்க மேடம்….'' என்றாள் சாத்வி…..

"ஹலோ….. சாத்வி ….. எப்படிமா இருக்க...'' தெளிவாய் பேச நினைத்தாலும் குரல் நடுங்கியது...

"நல்லா இருக்கேன் பா….. உங்க குரல் ஏன் ஒரு மாதிரியா இருக்கு….'' என சட்டென லகுவாய் பேசினாள் சாத்வி...

"ந…ந….நல்லா தானேம்மா இருக்கு…..'' என ஒரு மாதிரி உணர்ந்தார் சங்கர்…..

"எனக்கு ஏதோ வித்யாசமா தான் தெரியுதுப்பா... அது இருக்கட்டும்…..என்னப்பா திடீன்னு ஹாஸ்டல் வந்திரிக்கீங்க…..'' என சாதாரணமாய் பேச…..

சங்கருக்கு ஆச்சர்யம் தாள வில்லை...இவ்வளவு அமைதியாய் பேசுவது அவள் தானா…! என….

அவளின் திருமண விசயமாய் தான் பேச வந்திருக்கிறார்... ஆனால் எங்கே கல்யாணம் என்றால் பேச மாட்டாளோ என பயந்து...

"சும்மா தான் பார்க்க வந்தேன்…. இப்போ இங்கே வெயிட் பண்றேன் வர்ரியாம்மா "என கேட்க….

"அப்பா ஆபீஸில் ஆடிட்டிங் வொர்க் நடக்குப்பா…. நான் வர நைட் 9 மணி ஆகிடும்…. அப்போ வாங்கப்பா ….''

"அப்படியா…. சரிம்மா….'' என்றார் கொஞ்சம் ஏமாந்த குரலில்…

"நீங்க எங்கேப்பா தங்கி இருக்கீங்க…..'' அந்த ஏமாந்த குரலை தோன்றும் வகையில்….

"நம்ம விநாயகம் வீட்டில் தான் இருக்கேன்மா….'' பளிச்சென்ற முகத்துடன்….

"யாருப்பா அது "என புரியாமல் கேட்க….

"என்னம்மா , உன் மாமா பெயரையே மறந்திட்ட போல….. "என கேட்க….

‘‘மாமாவா…? தெரியலையேப்பா, திருச்சியில் நம்ம சொந்தகாரங்க யார் இருக்கா…..'' என யோசித்தவள்….

"சரி நீங்க அந்த மாமா வீட்டிலேயே இருங்கப்பா… நைட் வாங்க… வார்டன்கிட்ட போனை கொடுங்கப்பா நான் இன்பார்ம் பண்ணிடுறேன்……’’என சொல்ல

"இதோ கொடுக்கேன் மா…..’’ என ரிசீவரை அவரிடம் கொடுக்க….

"அப்பா நைட் வந்தா வெயிட் பண்ண சொல்லுங்க மேடம்…. நான் வந்துருவேன்….’’ என வைத்தவிட்டாள்….

இரவில் வருவதாய் சென்றுவிட்டனர் இருவரும்….

வெங்கட்டிற்கு நிம்மதி…. ‘சத்ரி சொன்னது போல் அவள் இங்கே இல்லை என்றால்…? எங்கே தேடுவது என்ற குழப்பம் தீர்ந்த நிம்மதி அடைந்தான்….’

சங்கருக்கு பேரானந்தம்…. 'தன் மேல் கொஞ்சமும் கோபம் இல்லாமல் தன் மகள் தன்னிடம் பேசிவிட்டாள் 'என

மகிழ்ச்சிக் குமிழிட வீட்டிற்கு வந்தனர் இருவரும்….. 'எதிர்பார்ப்புடன் இருந்த மகாவிடம் தான் முதலில் சொன்னார் சங்கர்…

"சாத்விகிட்ட பேசினேன் மகா…. நைட் வர சொல்லி இருக்கா’’ என நடந்த உரையாடலை கூற எல்லோருக்கும் ஒரு நிம்மதி……

அடுத்து கடந்த சில மணித்துளிகள் சாத்வியை பற்றிய பேச்சு தான்…..ஆனால் மகா தான் ஏற்க வில்லை….

யோசனையுடன் இருந்தவரிடம் வந்த சிவகாமி….. "சாத்வி தான் வரப் போராளே ,அப்புறம் என்ன யோசனை…..?'' என கேட்க…..

"சாத்வி எப்படி இவர்கிட்ட போனில் பேசினா…..? "என மகா தன் சந்தேகத்தை கேட்க….

"என்ன இருந்தாலும் அப்பாவாச்சே... மத்தவங்க முன்னாடி விட்டு கொடுக்க மனம் வந்திருக்காது அதான் பேசியிருப்பா….'' என சிவகாமி பதில் சொல்ல…

"ஒரு வேளை அப்படியும் இருக்குமோ என விட்டு விட்டார்'' ஆனாலும் 'கோபமே இல்லையா…..' என அவ்வப்போது தோன்றாமல் இல்லை….

இவர்களுடன் இருந்த கிருத்திகாவும்….. "அம்மா ,சாத்வி ஏன் அப்பா மேல கோபமா இருக்கனும்...

அப்பாகிட்ட தானே அவ போனில் பேசினா…..? அப்பறம் ஏன் நீங்க எல்லாரும் இவ்வளவு ஆச்சரயமா கேட்குறீங்க…..' வெங்கட்டுக்கும் எனக்கும் தான் எதுவும் தெரியலை….ஏதோ மறைக்குறீங்க…. நேற்றில் இருந்து 'சாத்வி 'பத்தின விசயம் மட்டும் உறுத்திட்டே இருக்கு….. என்னம்மா நடந்தது..."என கிருத்தி அவள் சந்தேகத்தை கேட்டாள்….

"இப்போ இவ்வளவு தெளிவான இருந்தவள், அப்போவும் தெளிவா இருந்திருந்தா இந்த பிரச்சனையே இல்லை... இப்போ

இதை தெரிஞ்சுகிட்டு உனக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை…. போய் வேலையை பாரு…..'' என சுள்ளென விழுந்தார் மகா…..

என்ன இருந்தாலும் மாமியார் முன்னால் இப்படி பேச ….. முகம் சுருங்க சென்று விட்டாள்…கிருத்தி…..

சாத்வியை பார்க்கும் ஆர்வம் ஒவ்வொருவரிடமும் அப்படியே தெரிந்தது… சாத்வியைப் பார்க்க மகா சங்கர் வெங்கட் என மூவரும் கிளம்ப….. நானும் வரேன் மா… என கிருத்தியும் கிளம்ப… காவ்யா சொல்லாமலேயே கிளம்பினாள்…

"நைட் தானே வர சொன்னா? இப்போவே எல்லாரும் கிளம்பிட்டீங்க…'' என பரபரப்பாக கிளம்பிவர்களை பார்த்துக் கேட்க….

''மலைக்கோட்டையில் இன்றைக்கு பங்குனி விசேசம் மாமா….. அதுதான் அம்மா அப்பாவை கோவில் கூட்டிட்டு போய்ட்டு வரலாம்ன்னு…..'' என இழுக்க…

"ஆமா சங்கர் நான் கூட மறந்துட்டேன்…. பங்குனி விசேசம் , சூரியனே வந்து பூஜை செய்யுற நாள் … பேய்ட்டு வா… சாத்வி கல்யாணம் விசயமா வேற வந்து இருக்க… நல்லது நடக்கும்…..'' என சங்கரும் பேச…..

மகா, நீங்களும் வாங்க அண்ணே…. நீயும் வாயேன் சிவகாமி என அழைக்க…..

மறு பேச்சு பேசாமல் எல்லோருமே கிளம்பினர்... வெங்கட் லீவ் போட்டிருக்க சத்ரியை தவிர்த்து அனைவரும் கிளம்பினர்….

கோவில் சென்று தரிசித்துவிட்டு காரில் ஏற….. மாமா பக்கத்தில் ஒரு ஹோட்டல் இருக்கு சாப்பிட்டு போகலாம் என அங்கே அழைத்துச் சென்றான் வெங்கட்…..

"சத்ரிக்கும் வேலை முடிஞ்சிருக்கும் வெங்கட்…. அவனையும் வரச் சொல்லு….. சேர்ந்து சாப்பிடலாம் "என சிவகாமி கூற…..

'சத்ரியிடம் சொல்லி வரவழைத்தான் வெங்கட்….. எந்த ஒரு ஆர்ப்பாட்டமும் இன்றி வந்தான் சத்ரி….

உள்ளே நுழைந்து, முழுதும் கண்ணாடிகளால் பிரிக்கப்பட்டிருந்த பேமிலி டேபிள் ஒன்றில் எல்லோரும் அமர்ந்து கலகலப்பாய் பேசிக் கொண்டிருந்தனர்…..

வேண்டியதை ஆர்டர் செய்து காத்திருக்க…. அமைதியாய் வந்து அமர்ந்தான்…..

கல கலவென இருந்தது அவர்கள் குடும்பம்…..

பழைய நட்பு கிடைத்த மகிழ்ச்சி பெரியவர்களிடம்….

வெகு வருடங்களாய் உறுத்திக் கொண்டிருந்த குற்ற உணர்வு தகர்ந்ததில் வெங்கட் ,கிருத்திகா…..

புதிதாய் ஒரு தாத்தா பாட்டி கிடைத்தத குதூகலம் காவ்யாவிடம்….

ஊர்க்கதை தான் ஓடிக்கொண்டிருந்தது...

சத்ரிக்கும் சேர்த்து உணவு ஆர்டர் செய்திருக்க , மனதில் தோன்றிய மகிழ்ச்சியை முகத்தில் பிரதிபலித்தபடி அனைவரும் உணவை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தனர்.....

சத்ரியன் மட்டும் யோசனையில் நெற்றி சுருங்க..... கைகள் தட்டினை கிளைத்த வண்ணம் இருந்தன....யோசனை முழுவதும் சாத்வியை பற்றி மட்டுமே....

. "எங்கே இருக்கா.....?"

"எப்படி கண்டுபிடிக்க?" என மூளையை உடைத்துக் கொண்டிருந்தான்...சத்ரி.....

மூளை இதற்கு மேல் வேலை செய்ய மாட்டேன் என அடம்பிடிக்க... இனியும் சாப்பிட முடியாது என.... 'எப்போதும் சாப்பிடும் அளவை விட குறைவாகவே உண்டு 'கை கழுவ எழுந்தான்...

அதற்குள்ளேயும் சாப்பிட்டானா.....? என மற்றவர்கள் அவனை விசித்திரமாய் பார்க்க.... "போதும்...." என சேரை பின்புறமாய் தள்ளி எழுந்து திரும்பியவன், ஷாக் அடித்தாற் போல் நின்றான்.....

மற்றவர்கள் எனக்கென்ன என மீண்டும் சாப்பிட துவங்க...

சத்ரியின் கூர் விழிகள் , ஆச்சர்யத்தில் விரிய….. தன் முன் நின்றிருந்த உருவத்தை அழகாய் உள் வாங்கிக் கொண்டிருந்தது….

வலது கை தானாகவே எழுந்து சுருள் சுருளாய் இருந்த கூந்தலின் உச்சியிலிருந்து படர்ந்து ……

மேடு பள்ளங்களால் அழகுற அமைந்த அழகு முகத்தை வருடி...

கழுத்தில் நிலை பெற்று...

பின் அதறக்கு கீழும் சற்றும் தயங்காமல் அவள் தேகத்தின் வளைவு நெளிவுகளை வருடியது...

வருட மட்டுமே முடிந்தது...

ஆனால் அவனால் அந்த மாசுமருவற்ற பால் வெள்ளை தேகத்தை உணரமுடியவில்லை……

ஆம் உணர முடியவேயில்லை…..

அவன் கை வருடியது என்னவோ அவளை தான்…..

ஆனால் உணர்ந்து கொண்டிருந்ததோ இருவருக்கும் இடையில் இருந்த கண்ணாடியைத் தான்….

சட்டென கையை கீழே இறக்கி, இதயத்தில் எவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த காற்றை வெளியேற்றி ...

அடைத்த மூச்சை சரி செய்து மீண்டும் அந்த உருவத்தை பார்க்க...

அதற்கு முன்னால் அவளின் விழிகள் எங்கிருந்ததோ….

ஆனால் இப்போது….. தன் ஒட்டு மொத்த குடும்பத்தின் மீதும் படர்ந்திருக்க… அவள் பார்வையை பின் பற்றி அவனும் பார்க்க…

கை கழுவ போகாம என்ன செஞ்சிட்டு இருக்கான்…' அவனை பார்த்த மற்றவர்கள்….. சத்ரியனையும் கண்ணாடிக்கு அப்பால். இருந்த பெண்ணையும் மாற்றி மாற்றி பார்க்க…

'இவ்ளோ அழகான பெண்ணா….' கிருத்தி நினைக்க….

'அவசரப்பட்டுட்டோமோ… கொஞ்சம். வெயிட் பண்ணி இருந்திருக்கலாமோ……' என வெங்கட்…

'நம்ப பையனுக்கு தெரிஞ்சவளோ…..' என சிவகாமி விநாயகம்…..என ஒவ்வொருவரின் நினைவும் ஒவ்வொரு புறமும் ஓட….

"இந்த ஆண்டி ,ரொம்ப அழகா இருக்காங்க இல்லையாம்மா…" என அனைவர் மனதில் ஓடியதை சரியாக வாய் விட்டே கூறினாள் காவ்யா……

இவர்கள் அனைவரின் எண்ண ஓட்டத்தை நிறுத்தும் வண்ணம்…

"சாத்வி….. வாம்மா….. ஏன் அங்கேயே நின்னுட்ட….. வாம்மா….." என மகா தடுமாறி , தயங்கி, அழகின் மொத்த உருவமாய் நின்றிருந்த மகளை ஆசைபொங்க அழைத்தார் ….

சங்கர் எந்த தடுமாற்றமும் இன்றி... சாத்வியை ஒருமுறை உற்று கவனித்தவர்.... ‘‘ஊர் சுத்தி கழுதை..... எப்படி வந்து நிக்குது பாரு...’’ என கருவினாலும்.....

தன்னை உதாசீனப்படுத்தாமல் போனில் பேசியது நினைவு வர.....

"வா சாத்வி.... வர இரண்டு நாள் ஆகும்ன்னு சொன்ன.... இப்படி திடுதிப்புன்னு வந்திருக்க.....’’ என பேசியபடியே சேரை விட்டு எழுந்து அவளை நோக்கி நடக்க...

கண்ணாடி அறைக்குள் பேசுவது வெளியே நிற்கும் சாத்விக்கு கேட்காது என்பதை மறந்தவராய்...... அவளின் அன்னை தந்தை இருவரும் சாத்வியை நோக்கி நகர.....

மகா மற்றும் சங்கரின் 'சாத்வி' என்ற அழைப்பில் மற்ற அனைவரும் அதிர்ந்து நிற்க.....

"மேம்..... கான்பரன்ஸ் ஹால் அந்த பக்கம்.....’’ என சாத்வி பின்னாலேயே வந்தவன் கூற....

"ம்....’’ என்ற ஒற்றை சொல்லுடன் மிடுக்காய் திரும்பி நடந்தாள்...

'இருவரும் என்ன பேசினார்கள் என்பதை உள்ளிருக்கும் யாருக்கும் தெரியவில்லை.....’

ஆனால் பெற்றவர்களை வெளிப்படையாகவே உதாசீனப்படுத்தினாள்....

அது மட்டும் அங்கிருந்த அனைவருக்கும் வெட்டவெளிச்சமானது……

அறைக்குள் இருப்பது தன் குடும்பத்தினர் என உணர்ந்தவள் அங்கேயே நின்று வெகு நேரமாய் பார்த்திருந்தாள்...

கொஞ்சமும் புன்னகை இல்லா முகம் , கொஞ்சமும் இளக மாட்டேன்' என மற்றவர்களை தள்ளி நிறுத்தும் தீட்சனய கண்கள், , முதுகு வரை இருந்தாலும் , 'கேர்லிங்' செய்த பாதி கூந்தல், இடப்புற கழுத்தை முன்புறம் மறைத்து, மீதி முதுகின் வலபுறத்தை மறைக்க,….

கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கும் இளம் பச்சை வண்ண காட்டன் புடவை உடுத்தி.. முகம் சுளிக்கா வண்ணம் நளினமாய் அதை அணிந்திருக்க...யாருக்குமே பார்வையை திருப்ப முடியவில்லை...

வெகு நேரமாய் சத்ரியனையே பார்த்திருந்தவள், இறுதியில் ஒரு நிமிடமே ஆனாலும் அதில் தந்தையின் கடுகடுப்பையும், தாயின் தடுமாற்றத்தையும் எளிதாக கண்டு கொண்டாள்…..

கூடவே கிருத்திகா, வெங்கட் அருகில் ஆர்வமாய் தன்னை நோக்கும் சிறு பெண்…. அவர்களின் பெற்றோர்….. என அனைவரின் முகத்தில் இருந்த சந்தோசத்தையும் கண்டு கொண்டாள்….சாத்வி...

'ஏளனமாய் உதடுகள் வளைந்தது...' வேறு எதையும் வெளிக்காட்ட வில்லை...' ராமன் அழைக்கவும்

"ம்'' என்ற ஒற்றைச் சொல்லுடன் மீண்டும் தன் பெற்றோரைப் பார்த்து….. தன் அழகிய ஹை ஹீல்ஸ் தரையில் தாளம் பதித்தபடி ... கூந்தல் நளினமாய் அசைய….. பந்தாவாய் சென்று மறைந்தாள்...

யாராலும் எதுவும் பேச முடியவில்லை….

"நம்ப சாத்வியா….அண்ணா…..'' இன்னும் அவள் போன பாதையில் விழியை பதித்ததபடி சிவகாமி கேட்க...….

போனில் நல்லா தானே பேசினா….! இப்போ ஏன் இப்படி நடந்துக்கறா….? என மனதில் கேள்வி எழுந்தாலும் அதை அடக்கி சிவகாமிக்கு பதல் சொன்னார் சங்கர்... "ஆமா….. சிவகாமி ...நம்ப சாத்வி தான்…….'' என…..

ஐந்து வருடங்களுக்கு முன் பார்த்த மகளை எளிதாக கண்டு கொண்டனர் சாத்வியை பெற்றவர்கள்…..

ஆனால் கிட்டதட்ட பத்து வருடங்களுக்கு முன் பார்த்த சிறு பெண் தான் இந்த அழகி சாத்வி என சத்ரியின் குடும்பத்திற்கு தெரியவில்லை…. அறிந்த பிறகோ…..

சத்ரிக்கு இதயம் துடிக்கும் ஓசை வெளியே கேட்கும் உணர்வு….. அடக்கமுடியவில்லை…..

கண்களை அவள் சென்ற திசையை நோக்கித் திருப்ப…. அவன் பார்வையில் பட்டது…..

சாத்வியை உணரவைத்த கண்ணாடியும் அதில் சாத்வியின் வரிவடிவத்தை வரைந்த பிசு பிசுப்பான தடமும்…..

விரல்களை தன் முகத்திற்கு நேராய் நீட்டிப் பார்க்க கைகழுவாமல் காய்ந்து போய் கிடந்தது அவன் விரல்கள்…..

அதிர்ந்து போனான்…. 'இப்படி பப்ளிக்காவா பிகேவ் பண்ணினேன்…..' சுற்றி ஒவ்வொருவராய் கீழ் கண்ணால் நோக்க….

அனைவரும் சாத்வியைப் பற்றி தான் பேசிக் கொண்டிருந்தனர்….

'ஃஉஃப்ப்ப்….' பெரு மூச்சை வெளியேற்றி கண்களை மூடி அப்படியே இருக்கையில் சாய்ந்து கொண்டான் சத்ரி….. உணர்வுகள் கூட போராடுமா…! போராடிக் கொண்டிருந்தது அவனுக்குள்…!

# அத்தியாயம் 4

**சே**ரில் சாய்ந்து அமர்ந்த சத்ரிக்கு மூச்சே அடைத்தது..... பப்ளிக் பிளேஸில் இப்படியா பிகேவ் பண்ணுவ..... என மனசாட்சி கேட்க.....

'என் சாத்வி தானே.....தப்பில்லை.....' என அவன் மனம் கூற

'உன் அத்தை மாமா 'சாத்வின்னு 'சொன்ன அப்பறம் தானே தெரியும்..... அதுக்கு முன்னாடியே உன் சேட்டையை காட்டிட்டியே என மனசாட்சி கூற.....

சட்டென கண் விழித்து கண்ணாடியை பார்க்க.... அதில் அவளது வரிவடிவம் தெளிவாய் தெரிய... கைகளும் காய்ந்து போய் கிடந்தது..... தன் குடும்பத்தினரை பார்க்க.... சாத்வியை பற்றி பேசிக் கொண்டிருக்க....

. இடது கையினால் கர்சீப்பை எடுத்து அருகில் இருந்த தம்ளரில் நனைத்து மெதுவாய் கண்ணாடியின் அருகே சென்றான்.... சுற்றி ஒரு முறை பார்க்க சத்ரியை யாரும் கவனித்ததாய் தெரியவில்லை.....சட்டென கர்சீப்பால் கட கட வென துடைத்து, அதில் ஏதும் தெரிகிறதா.....என ஒரு முறை பார்த்தபின்பே கை கழுவ சென்றான்....

மீண்டும் வந்த போது…..’’சாத்வி காலையில் போனில் நல்லா தான் பேசினா…..மச்சான்…’’ என கவலையுடன் கேட்க….

"போனில் நல்லா பேசினா சாத்வி இப்போ ஏன் உதாசீனப்படுத்தனும்…..’’ என வெங்கட்டும் குழப்பபாய் கேட்க…….…

புலம்பிக் கொண்டிருந்த சங்கரை "விடு சங்கர், ஏதாவது அவசர வேலையாய் இருக்கும்….. திரும்ப இந்த வழியா தானே வருவா….. பார்த்துக்கலாம்…..’’ என விநாயகம் சமாதானம் பேச….

இவர்களின் பேச்சில்…. சட்டென உடல் விரைப்புற….. "சாத்வியை நேரில் பார்த்து… பேசினீங்களா…..’’ என பார்வை சங்கரிடம் இருக்க வெங்கட்டிடம் கேள்வி கேட்டான் சத்ரி….

"பார்த்து எல்லாம் பேசலை சத்ரி … போனில் தான் பேசினா…..’’ என காலையில் சென்றதையும் பின் நடந்தவைகளையும் கூற…

"என்னது….. சாத்வி உங்ககிட்ட…. பேசினாளா…’’ என ஆச்சர்யமாய் சங்கரிடம் கேட்க…..

ஏற்கனவே மகளின் உதாசீனத்தில் கடுப்பில் இருந்த சங்கர்….. "என் பொண்ணு என்கிட்ட பேசினதில் உனக்கென்னடா ஆச்சர்யம்…..’’ என இருந்த கோபத்தை சத்ரியிடம் காட்ட…

"என்னது உங்க மகளா.....!'' வேண்டுமென்றே ஆச்சர்யமாய் கேட்டு... பின்... "அவளை வீட்டை விட்டு அனுப்பும் போது தெரியலையா... சாத்வி உங்க பொண்ணுன்னு... வீட்டை விட்டு வெளியேறினப்ப கவலை படலை... இப்பொ மகள் பேசாமல் போறாளாம்..... அதுக்கு கவலை படுறாரு.....உங்க ப்ரண்ட் ரொம்ப ஓவரா பண்றாருப்பா.....'' என சங்கரிடம் தொடங்கி விநாயகத்திடம் முடிக்க.....

"நாங்க ஒன்றும் அவளை அனுப்பி வைக்கலை... அவள் தான் போனாள்..... போனவளுக்கு திரும்ப வர தெரியாதா...? இல்லை வர தெரியாத அளவு சின்ன பிள்ளையா...?'' என பதிலுக்கு சாத்வியை குற்றம் சாட்டினார் சங்கர்.....

"ஆமா, பண்றதெல்லாம் பண்ணிட்டு அவள் மேல பலியை போடுங்க...... "என கடுப்பாய் சத்ரி பேசி.... "போனில் பேசினது நம்ப சாத்வின்னு தெரியுமா.....'' என வழக்கம் போல் புளியை கரைக்க...

சத்ரியிடம் எவ்வளவு தான் அவமானப்பட்டு நிற்பது..... என "என் பொண்ணு குரல் எனக்கு தெரியாதா..... அவ தான் பேசினா..... மச்சான் சொன்ன மாதிரி ஏதாவது அவசர வேலையாய் இருக்கும்..... வந்துடுவா.....'' என தனக்கும் சேர்த்து சொல்லிக் கொண்டார்...

"போனில் பேசினது வேற பொண்ணு....'' அசராமல் பதில் கொடுத்தான் சத்ரி.....

"இல்லை என் பொண்ணு தான்.....'' என சங்கர் சொல்லி முடிக்கும் முன்....

''சாத்வியாவது உங்க கிட்ட பேசுறதாவது...'' என சலிப்புடன் சொல்லி அத்துடன் பேச்சு முடிந்தது என எழுந்து வேறு புறம் சென்று விட்டான்...

"சிவகாமி, சத்ரி சென்ன மாதிரி இவரு வேற பொண்ணுகிட்ட பேசி இருப்பாரோ..... "என கவலைநாய் கேட்க.....

''மகா, அதான் வெங்கட்னும் கூட போய் இருந்தானே, அவனுமா பொய் சொல்ல போறான்....''

"அது எப்படி சிவகாமி, காலையில் நல்லா பேசினவ.... இப்போ எப்படி கண்டுக்காம் போவா... ? எனக்கு பயமா இருக்கு சிவகாமி.....'' . என மகாவும் சிவகாமியும் பயத்துடன் பேசிக்கொண்டிருக்க.....

வெங்கட்டும் கிருத்தியும் தலையை பிய்த்துக் கொள்ளாத குறையாய் அனைவரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தனர்....

"ஏங்க...''

‘‘ம்’’

‘‘வெங்கட்….’’

‘‘ம்.ம்…’’

"டேய்…..’’

"ஏய் என்னடி….’’ என சுள்ளென விழுந்தான் வெங்கட்…..

வெங்கட்டின் கோபம் உணர்ந்தவளாய்…. "என்ன வெங்கட் நடக்குது இங்கே….. தலையும் புரியலை வாலும் புரியலை…..’’ என கிருத்தி வெளிப்படையாய் பேச…

"எனக்கும் எதுவும் புரியலை , ஏதோ ஒன்றை நமக்கு தெரியாமல் மறைக்குறாங்க…. நான் அம்மாகிட்ட மெதுவா விசாரிக்குறேன் கிருத்தி… அதுவரை 'நொய் நொய் 'ன்னு படுத்தாத….. ‘‘என அவளை முன்கூட்டியே அடக்கி ஒரு முறை முறைக்க அமைதியானாள் கிருத்தி……..

இவர்கள் பேச்சில் நேரம் நிமிடங்களாய் கடக்க … வெகு நேரம் கழித்தே சாத்வி வந்தாள்….. அதுவும் இள வயது ஒருவனுடன் மிக ஆர்வமாய் பேசியபடி வந்தாள்…

அருகில் இருந்தவனை பார்க்க கூட இல்லை, சத்ரி… கண்கள் கபடி அடி அவளை அழுத்தமாய் பிடித்துக்கொள்ள… கண்களில் நிரம்பி வழிந்தவளை , மனதிற்குள் அடைத்து

வைத்தான் சத்ரி...அவளை கண்டு மீண்டும் கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.....

பேசியபடியே மற்றவர்களின் அருகே வந்த போதும்..."யாரும் அவளிடம் பேசவும் முடியவில்லை..... "அவளின் ஏதோ ஓர் ஆளுமை தடுத்தது.....

ஹோட்டல் விட்டு வெளிவந்த பின்....சாத்வியும் கூடவே இருந்தவனும் தலையை சிறிதாய் அசைத்தபடி விடை பெற... அதற்காகவே காத்திருந்தார்ப் போல்

"அம்மாடி சாத்வி....." என்ற மகாவின் குரல் சாத்வியின் காதில் கேட்டது...

'இங்கே நிற்காதே ... போ.... இங்கே இருந்து போ...' என உத்தரவிட்ட மூளையை அலட்சியம் செய்து..... கண்களை அழுத்தமாய் மூடி நிதானத்திற்கு வந்தவள்... அமைதியாய் அப்படியே நிற்க.....

அவள் நிற்பதே பெரிது என அவளிடம் வந்த மகா..... "எப்படி இருக்க சாத்வி... உன்னை தேடி தாம்மா திருச்சி வந்தோம்.... " மகள் தன்னிடமாவது பேச வேண்டுமே.... என்ற பயத்தை அப்படியே முகத்தில் காட்டி மகா பேச.........

முகத்தை கூட தாயின் புறம் திருப்பாமல். "ஓ... பெத்த பொண்ணை பார்க்க உங்களுக்கு முழுசா அஞ்சு வருசம்

ஆச்சோ...'' என கண்களால் எரித்தாள் தாய் தந்தை என கூட பார்க்காது... சங்கர் பதிலுக்கு வாய் நிறக்கும் முன்பே...

பார்க்கிங்கில் இருந்து கார் வர... எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து பின் காரில் ஏறி அமர்ந்தாள்.....

அவளின் பார்வையை வெங்கட் கிருத்திகா தவிர்த்து மற்ற அனைவரும் அறிந்து கொண்டனர்.....அவள் பார்வையின் பொருளை...

அவள் பேசும் தோரணையும் சரியில்லை..... நடந்து கொள்ளும் முறையும் சரியில்லை என, அங்கிருந்த அனைவரும் திகைத்து போய் இருந்தனர்.....

"அவ அம்மா அப்பா மேலே தான் கோபம்... நம்ம கிட்ட கூட பேசவே இல்லையே....'' என சிவகாமியும் கேட்க..... அங்கே பேரமைதி தான்.....

சங்கர் குழப்பத்தில் இருக்க.....

சூழ்நிலையை தன் கையில் எடுத்து... "வெங்கட், எல்லோரையும் வீட்டுக்கு கூட்டிட்டு போ.....நானும் சத்ரியும் ஹாஸ்டல் போய்... பார்த்துட்டு வரோம்....'' என விநாயகம் கூற...

அவர்கள் எதற்கு செல்கிறார்கள் என புரிந்து கொண்டு "நான் வேனா வரட்டுமாப்பா.....'' என சங்கர் கேட்க நினைத்ததை வெங்கட் கேட்க...

"ஆமாம், நீங்க இரண்டு பேரும் போய் விசாரிச்ச லட்சனத்தை பாரு... நேரிலேயே போய் சாத்வின்னு நினைச்சு வேற பொண்ணுட்ட பேசிட்டு வந்திருக்கீங்க..... இவன் என்னடானா..... இரண்டே இரண்டு கேள்வி தான் கேட்டான், நீங்க சொன்ன பதிலிலேயே... நேரில் பார்த்த மாதிரி அது சாத்வியே இல்லைன்னு சொல்றான்..... என்னத்தை கிழிச்சீங்களோ...." என சங்கரையும் சேர்த்துக் குட்டினார்.....

"சத்ரி வாடா....." என அவனை பைக் எடுக்க சொல்லி..... "எல்லாரும் வீட்டிற்கு போங்க , நாங்க வந்துடுறோம்..." என பைக்கில் ஏறி அமர்ந்தார்....

மற்றவர்களை வெங்கட் அழைத்துச் செல்ல, எல்லோரும் காரில் வந்து அமர்ந்தனர்... யாருக்கும் யாரிடமும் பேச முடியவில்லை... கிருத்தி தாயின் முகத்தை பார்த்தவாரே வர...சிவகாமி மகாவின் கைகளை பிடித்து அவரை தேற்றியபடியே வர.... என மௌனமே ஆட்சி செய்தது அங்கே......

"யாரும்மா அந்த ஆண்டி..." என விடாமல் காவ்யா கேட்டுக் கொண்டே இருக்க.....

"வாயை மூடப் போறியா இல்லையா....." என கிருத்தி அதட்டுவதும் என இருவரின் குரல் மட்டுமே அங்கே கேட்டுக் கொண்டிருந்தது...

விநாயகம், சத்ரி இருவரும் ஹாஸ்டல் சென்று … சாத்வியைப் பற்றி வார்டனிடம் விசாரித்துக் கொண்டிருக்க….. அப்போது தான் வேலை முடித்து வந்த சாத்வியும், தன்பெயர் அடிபடுவதை உணர்ந்து அவர்கள் அருகில் வந்தாள்…..

"வா சாத்வி... உன்னை தான் தேடி வந்து இருக்காங்க... காலையில் உன் அப்பாவும் கூடவே இன்னொருத்தரும் வந்தாங்க…., இப்போ வேற இரண்டு பேர் வந்திருக்காங்க….'' என சாத்வியை கூர்மையாய் பார்க்க….

வார்டனை பயத்துடன் பார்த்து பின் அவர்களை பார்த்த சாத்வி….. ‘‘நீங்க…யாரு… என்னை எதுக்கு தேடி வந்தீங்க…..'' என தயங்கி கேட்டாள்…..

‘ஓ… இந்த பொண்ணு பேரும் சாத்வியா….’ என ஒரே பார்வையில் புரிந்து கொண்ட சத்ரி...

அவளை பார்த்து பின் வார்டனிடம் "சாத்வி பெயரில் இவங்க ஒருத்தர் தான் இருக்காங்களா…..? "என கேட்க….

குழப்பத்துடன் "ஆமா…..'' என்றவர் ….. "பின் ‘‘உங்களுக்கு எந்த சாத்வி வேணும்…..'' என கேட்க…

‘‘அந்த பொண்ணு பேரும் சாத்வி , அப்பா பேர் சங்கர்…. ஊர் பூஞ்சை…..'' என வேண்டிய பதில்களை மட்டுமே கொடுத்து நிற்க...

"இல்லை சார் , சாத்வி பேரில் இவங்க ஒருத்தர் தான்… நான் தான் இங்கே வார்டன்….. எனக்கு தெரியாமல் வேற சாத்வி இங்கே இல்லை…..'' என முடித்துவிட...

"அஞ்சு வருசத்துக்கு முன்னாடி , இந்த ஹாஸ்டலில் தான் வந்து ஸ்டே பண்ணி இருக்காங்க….. இந்த அட்ரெஸ் கொடுத்துட்டு தான் வந்திருக்காங்க…'' என மேலும் விபரம் கேட்க…..

"ஓ….. எனக்கு அப்படி யாரும் நியாபகம் இல்லை….அஞ்சு வருசம் முன்னாடின்னு சொல்றீங்க…… லெட்ஜர் எடுத்துப் பார்த்தா தான் தெரியும்... நீங்க நாளைக்கு வந்தீங்கன்னா பார்க்கலாம்…..'' என வார்டன் கூற…..

"ம்… தேங்கஸ்… மேடம்……'' என வார்டனிடம் கூறி…..

பின் காலையில் சங்கரும் வெங்கட்டும் பேசியது இந்த சாத்வியிடம் தான்…. என அறிந்து காலையில் சங்கர் பேசியதை கூறி "சாரி , எங்க ரிலேட்டிவ் சாத்வின்னு நினைச்சுட்டோம்….'' என ஒருவாறு அங்கிருந்து கிளம்பி வந்தனர்……

அந்த பெண் வார்டனை பார்த்தபடியே நிற்க... "அவங்க தேடி வந்த கொண்டு நீ இல்லைன்னு அவங்களே சொல்லிட்டாங்க….. அப்பறம் ஏன் நிக்கிற…..போ….'' என வார்டன் கூற…. அதன் பின்பே நிம்மதியாய் சென்றாள் அந்த பெண்...

"கூறு கெட்டவனுங்க... வெங்கட்க்கு தான் சாத்வி குரல் தெரியாது, பெத்த அப்பனுமா அதை கண்டுபிடிக்கலை…. வேற பொண்ணுட்ட பேசிட்டு வந்ததும் இல்லாம…பந்தா வேறையா….. அவனுக்கு…..'' என…..வண்டியில் வரும் போது…. சங்கரை திட்டியபடியே வந்தார் விநாயகம்….

அதை கவனிக்காமல் சத்ரியும் ஏதோ நினைவில் வண்டியை ஓட்டியபடி வந்தான்…..

வீட்டிற்கு வந்தவுடன் தந்தையை இறக்கிவிட்டுவிட்டு "அப்பா , நீங்க போங்க, எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு... வந்துடுறேன்….'' என சென்று விட்டான்…..

வேலை முடித்து சத்ரி மீண்டும் வீடு திரும்ப…... ஆளாளுக்கு ஒரு புறம் அமைதியாய் அமர்ந்திருக்க, அந்த நிசப்தத்தை கிழித்துக் கொண்டிருந்தது காவ்யாவின் பேட்ரி கார்….. சத்ரியும் அமைதியாய் விநாயகம் அருகில் வந்து மற்றவர்களின் கவலை தோய்ந்த முகத்தை பார்த்து பல்லை கடித்த சத்ரி….. வேண்டுமென்றே "மாமா அனுப்பின கப்பல் கவுந்திடுச்சோ….'' என கேட்க…. அது மற்றவர்கள் காதில் விழாத போதும் விநாயகத்தின் அருகில் அமர்ந்திருந்த சங்கரின் காதுகளில் தெளிவாய் விழ….

"டேய்... "என விநாயகம் பற்களை கடிக்க…. அவரின் சத்தத்தில் மற்றவர்கள் சத்ரியை பார்க்க….

"மெதுவா கடிங்கப்பா, இருக்கிற பத்து பல்லும் உடஞ்சிடபோகுது…..’’ என இருபுருவங்களையும் உச்சி மேட்டுக்கே கொண்டு சென்று 'ஏண்டா நீ அடங்கவே மாட்டியா….’ என்ற தந்தையின் பார்வைக்கு 'மாட்டவே மாட்டேன்' என பதிலுக்கு ஒரு லுக் கொடுத்து நிற்க…..

சத்ரியின் குணம் தெரிந்தவராய்…. "சாத்வியை பத்தி ,எல்லாம் கவலையில் இருக்காங்க... நீ ஏண்டா, சாவடிக்க...’’ என நிஜமாகவே நைந்த குரலில் கேட்க…. அந்த இடத்தை காலி செய்து தன் அறைக்குள் சென்று மறைந்தான்…..

அவன் பின்னேயே சென்ற சிவகாமி... சத்ரியின் அறை வாசலில் "வா மகா…..’’ என அழைக்க….

குரல் கேட்டு வெளியே வந்தான் சத்ரி….. தாயுடன் ,அத்தையும் நிற்க…. அவர்களுக்கு வழி விட்டு பின் உள்ளே வந்தான்…..

"உட்கார் மகா...’’ என மகாவிற்கு ஒரு சேரை எடுத்துப் போட்டவர்…. திரும்பி….’’ சாத்வி எங்கடா இருக்கா…..’’ என சிறிதும் தயக்கமில்லாமல் கேட்க…..

கட்டிலில் சுவாதீனமாய் அமர்ந்து...’’ பெத்தவங்க அவங்களுக்கே தெரியலை…..எனக்கெப்படி தெரியும்…..’’ என மகாவையும் விட்டுவைக்காமல் பேச…..

"ஆனால் பெத்தவங்களை விட நீ அதிகமாக பாசம் வச்சு இருக்கறவனாச்சே... உனக்கு கண்டிப்பா தெரியும் சொல்லு…..'' என சிவகாமி விடாமல் கேட்க….

"ம்ப்ச்…. தெரியாதும்மா…..'' என மீண்டும் சொல்ல….

இம்முறை மகா இடையில் புகுந்தார்….. "தம்பி, நான் பொறுப்பில்லாமல் சாத்வியை அனுப்பியது தப்பு தான்….. தைரியமான பொண்ணுன்னு தான் நான் கவலை படாம இருந்தேன்…..இங்கே வந்தப்பறம் தான் உண்மையான நிலைமை உரைக்குது….. சாத்வி பத்திரமா இருக்காளா...இதுக்கு மட்டும் பதில் சொல்லுப்பா... வேற எதுவும் எனக்கு தெரியவேண்டாம்…..'' என மகா வருத்தம் தோய்ந்த முகத்துடன் கேட்க…..

"பாவம்டா மகா…. இங்கே வந்ததிலிருந்து சாத்வியை பற்றி தெரியாம …. அவளுக்கு என்னாச்சொன்னு கதி கலங்கி போய் இருக்கா…..பதில் சொல்லுடா….'' என சிவகாமி சற்று சத்தத்தை கூட்ட….

"பத்திரமா இருக்கா…. அவ்வளவு தான் தெரியும்….'' என திரும்பி நின்று கொண்டான்….

அவன் பதிலில் மகாவிற்கு போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது….. "இது போதும் தம்பி... ரொம்ப நன்றிப்பா'' என வழிந்த கண்ணீரை துடைத்தபடி செல்ல….

சிவகாமி…’’ அவளை நாளைக்கே நம்ப வீட்டிற்கு கூட்டி வா…..’’ என கட்டளையிட…..

இடுப்பின் இருபுறமும் கை வைத்து சிவகாமியை முறைத்த சத்ரி…. "எனக்கு சாத்வியை பத்தி தெரியும்னு, உனக்கு யாரு காட்டிக் கொடுத்தா….’’ என கேட்க….

"வேற யாரு…. உன் முகம் தான் காட்டிக் கொடுக்குது….’’ என சிரிப்புடன் சொல்ல…..

புரியாத மாதிரி நின்றிருந்த சத்ரியை பார்த்து…. "நடிக்காத டா….. சாத்வி சந்தோஷமா இருக்காளா….. இல்லை கஷ்ட படுறாளான்னு இந்த முகத்தை வச்சே கண்டு பிடிச்சிடலாம்….. சொல்லு சாத்வியை பத்தி எந்தளவுக்கு தெரியும்….’’ என கேட்க….

"அப்படியேவா காட்டிக் கொடுக்குது…’’ என தன் முகத்தை கண்ணாடியில் அப்படியும் இப்படியுமாய் திரும்பி பார்க்க….

"டேய் சொல்லுடா….’’ என பொய்யாய் மிரட்ட…

‘‘அப்பாவை இறக்கி விட்டுட்டு நான் அவளை தேடி தான் போனேன்மா…….…..ஆனா அவளை பார்க்க முடியலை….. ஆனா சேப்டியா இருப்பா…..’’ என கூற

"இருப்பாளா….? ஏண்டா உங்கப்பா சொல்ற மாதிரி எல்லார் வயித்திலேயும் புளியைக் கரைக்கிறது தான் உன் வேலையா….

‘பத்திரமா இருக்கான்னு' முதல்ல சொன்ன...இப்போ' சேப்டியா இருப்பான்னு' சொல்ற... எங்கடா இருக்கா சாத்வி..... உனக்கெப்படி தெரியும்’’ என கேள்விகளை அடுக்க

‘‘இப்போதைக்கு சாத்வி பேங்கில் வேலை பார்க்ககுறா, அது மட்டும் தான் தெரியும்..... நிஜமா வேற எதுவும் எனக்கு தெரியாது... "என காட்டமாய் சொல்ல

"சரி விடுடா, மத்த எதுவும் கேட்கலை..... ஆனா.... பேங்கில் வேலை பார்க்குறது எப்படி தெரியும்.....’’ என கேட்க...

பதில் பேசாமல் போய் படுத்துக் கொண்டான்... 'இவன்கிட்ட கேட்கிறதுக்கு இந்த செவத்துகிட்ட கேட்கலாம் போல...’ என சத்தமாய் கூறி..... பதில் கிடைக்காத கடுப்பில் சென்று விட்டார்...

கட்டிலில் கிடந்தவனோ..... சாத்வியை தேடிச் சென்ற நினைவில் மூழ்கினான்...

தந்தையை வீட்டில் விட்டுவிட்டு... தன் பைக்கில் மீண்டும் அதே ஹோட்டல் வந்தான்.....

தாங்கள் உணவருந்திய இடத்திலிருந்து சாத்வி சென்ற திசையில் வேகமாய் செல்ல... அதன் முடிவில் இருந்தது கான்ஃபரன்ஸ் ஹால்... உள்ளே சென்று 'எதற்காக இங்கே வந்திருப்பாள்..... கான்ஃபரன்ஸ் மீட்டிங் போடுற அளவு என்ன வேலை பார்க்குறா...? 'என ஆராய..... அந்த ஹால் முற்றிலும்

சுத்தப்படுத்தபட்டிருக்க..... வேறு வழி இல்லாமல் ரிசப்சன் சென்று விசாரித்தான்....

அந்த மீட்டிங்கிற்கு நிறைய ஆட்கள் வந்திருந்தாலும், அது நிறைய கிளைகள் கொண்ட தலைசிறந்த பேங்க் , என்பதால் கேட்டதும் விவரம் கிடைத்தது..... பேங்கின் பெயர், , எந்த கிளை என்பது போல் பொதுவான விபரங்கள் மட்டுமே சேகரிக்க முடிந்தது..... 'ஓ...மேடம் பேங்கில் வேலை பார்க்குறாங்களா...?' என நிம்மதி அடைந்தான்...

தனிப்பட்டு ஒரு பெண்ணை விசாரிப்பது சரியில்லை என வந்த வழியே திரும்ப..... சாத்வியை தனக்கு அறிமுகப்படுத்திய கண்ணாடியின் அருகே சென்று , அவன் வரைந்த வரிவடிவம் இல்லாத போதும் அங்கே நின்று , தன் கைகளால் வருடி, ஒரு நிமிடம் சாத்வியின் நினைவில் அழுந்திக் கிடந்தவன்... பின்..... கிடைத்த விபரங்களுடன் தன் வீட்டிற்கு வந்துவிட்டான்.....

ஆனால் தன் முகத்தை வைத்தே ,சாத்வியை கண்டுபிடிக்கும் அளவுக்கா தான் வெளிப்படையாய் இருக்கிறோம் என சிரித்துக் கொண்டான்...

இதோ இப்போதும் அவளின் நினைவுகள்...... வரி வடித்தை வரைந்த கைகள், அதன் நெளிவு சுளிவுகள்..... இன்னும் இன்னும்.... ஏதேதோ நினைவுகளில் மனம் செல்ல...

'சே….' என தன் உணர்வுகளை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து , ஒரு வழியாய் தூங்கிப் போனான்…..

சிவகாமி ,சாத்வி பேங்கில் வேலை செய்கிறாள் என மகாவிடம் சொல்லிவிட... மனதில் வலம் வந்த அத்தனை தெய்வங்களுக்கும் நன்றி உரைத்தபடி வெகு காலங்களின் பின் நிம்மதியாய் உறங்க…..

மகளை பற்றி முதல் முறையாய் கவலையில் ஆழ்ந்து உறக்கத்தை விட்டார் சங்கர்…..

மறுநாள் காலையில் வேலைக்கு கிளம்பியவன் சென்ற இடம் சாத்வியின் கிளை அலுவலகம் ….. அவ்வளவு பெரிய கட்டிடத்தில் இரண்டாம் தளம் முழுவதும் அந்த பேங்க் ஆக்ரமித்திருக்க…..

உள்ளே நுழைந்தவன், சாத்வியை பற்றி எப்படி விசாரிப்பது ... என கண்கள் அந்த தளம் முழுவதும் அலசியது….. சிக்கவே இல்லை... 'என்ன போஸ்டிங்' கூட தெரியவில்லை….. 'கிளார்க்' 'ஆபிசர்ஸ்' என்றால் கண்களில் தட்டுபடுவாளே...என ஒவ்வொரு கேபினையும் எக்ஸ்ரே எடுத்துக் கொண்டிருக்க….

"ம்ஹூம்... சிக்கவே இல்லையே...'' என சாத்வியை அதில் காணாமல் கண்கள் அலைபாய்ந்தன.

கொஞ்சமும் பொறுமை இல்லை...…. பொறுமையற்றவனின் விழிகள் ஒரு கார்னரில்…. தலை குத்தி நின்றது…..

Ms.s.Sadhvi ( personal manager) என்ற எழுத்துக்கள் வெள்ளி நிறத்தில் மின்ன…. பார்த்த சத்ரியின் கண்களும் மின்னியது….. .' ஓ மேடம் பெர்சனல் ஆபிசரா…' என இதழ்களில் புன்னகை தவழ….. அவளது அறைக்கு தாமகவே சென்றன அவனது கால்கள்………

"எங்கே சார் போறீங்க…'' என்ற குரலில் சட்டென திரும்பி விழித்தவன்…..''சாத்வி … சாத்வி மேடம் பார்க்கனும்…'' என கேட்க…

"என்ன விசயமா பார்க்கனும்…..'' என மீண்டும் கேட்க….

சட்டென "லோன் எடுக்கனும், அது பத்தி பேசனும்…..'' என

"ஓ…அவங்க மேனஜர் ரூமில் இருக்காங்க…வந்ததும் பாருங்க…..'' என கம்யூட்டருக்குள் தலையை புதைத்துக் கொண்டாள்…அந்த பெண்… பிஏ வா…? என அங்கிருந்த சேரில் அமர்ந்தான்….

வெகு நேரம் கழித்தே மேனஜர் அறையிலிருந்து சாத்வி வந்தாள்…..கையில் ஏதோ ஓர் ஃபைல்…… அதை பிரட்டியபடியே தன் தனி அறையினுள் நுழைய…

அவள் பின்னேயே எழுந்து சென்றான் சத்ரி……… அவள் பின்னேயே ஒட்டினாற் போலவே வந்தான்… அவள் சேரில் சென்று அமரும் வரையிலும் பின்னேயே வந்து அங்கிருந்த சேரில் அமர்ந்து கொண்டான்……

அதை அறியாத சாத்வி கையில் வைத்திருந்த பைலை ஒரு புறமாய் வைத்து நிமிற.... அவளை ஊடுறுவிக் கொண்டிருந்தான் சத்ரி.....

பார்த்தவளுக்கு பக் என்றானது... ஆனாலும் ஓர் நிமிடம் தான் அவள் அதிர்ச்சி எல்லாம்... அடுத்த நொடி இவளும் அவனை பார்க்க... அவள் பார்வையில்...

' யார் இவன்' என்ற சந்தேகமும் இல்லை...

'எதற்காக வந்திருக்கிறான்....' என்ற கேள்வியும் இல்லை......

'இப்படி பார்க்கிறானே...' என்ற பிடிக்காத முக பாவனையும் இல்லை...

'என்னை பார்க்க வருவதற்கு இத்தனை வருடங்கள் ஆனதா.....' என்ற உணர்வையே அவள் முகம் தாங்கி நிற்க.....

அதை சரியாய் கண்டு கொண்டவனுக்கு... 'எப்படி என்னை தெரியும் 'என்ற நினைவே ஓடியது.....

'ஹோட்டலில் வைத்து தான் முதல் சந்திப்பா.....? இல்லை அதற்கு முன்பே என்னை தெரியுமா...? "என பட்டிமன்றமே நடத்தும் அளவு இருந்தது அவளின் பார்வை...

அதற்குள் இன்டர்காம் அழைக்க.... அவனை பார்த்தபடியே எடுத்து பேசினாள்...

அந்தபுறம் என்ன கேட்டார்களோ... "வரேன் சார்'' என

'அதே பைலை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.....

"கொஞ்சம் வேலை இருக்கு.... வெயிட் பண்றீங்களா.....இல்லை? "என கேள்வியாய் கேட்க...

"'மறுபடியும் வெயிட் பண்ண முடியாது'' என கெத்தாய் பதில் கூறி... டேபிளில் இருந்த அவளின் மொபைலை எடுத்து ஆன் செய்ய... அது பாஸ்வேர்ட் கேட்டது........

"பாஸ்வேர்ட் என்ன....'' என போனில் பதிந்த பார்வை நிமிராது கேட்டான்....சத்ரி.....

சாத்வியோ...பதில் சொல்லாமல் மொபைலுக்காய் கை நீட்டினாள் .......

"இல்லை பாஸ்வேர்ட் சொல்லு "என பிடிவாதமாய் சத்ரி கேட்க...

நீட்டியை கையை மடக்கி தன் ஆள் காட்டி விரலால் மொபைலின் பின்புறம் இருந்த சென்சாரில் அழுத்த ... மொபைலின் லாக் திறந்தது.....

அதுவரை அவள் போனை பார்வையிட்டுக் கொண்டிருந்த விழிகளை... அவள் முகத்தையும் கொஞ்சம் பாரேன் என அவளின் நீட்டிய வெண்டை பிஞ்சு விரல்கள் கட்டளையிட..... அவளை நிமிர்ந்து பார்த்தான்.....

சாத்வியின் கூர் விழிகள் அவனை ஊடுறுவ... சட்டென எழுந்து நின்று...

அவள் மொபைலில் இருந்து தன் நம்பருக்கு மிஸ்டு கால் கொடுத்து, அதை சேவ் செய்து… அவளிடம் மொபைலை நீட்டி... "ஈவ்னிங் பார்க்கனும்….. கொஞ்சம் பேசனும்... டைம் அன்ட் பிளேஸ் நீயே பிக்ஸ் பண்ணிடு…..சிக்ஸ் டூ செவன்...எப்போனாலும் ஓகே... மேசேஜ் பண்ணு இல்லை கால் பண்ணு...'' என முகத்தை பார்ப்பதை தவிர்த்து சென்றுவிட்டான்….

# அத்தியாயம் 5

**சா**த்வியின் ஊடுருவும் பார்வை சத்ரியின் ஆழ்மனம் வரை சென்று அங்கேயே நிலைபெற்றது....

அவள் பார்வை சொன்ன செய்தியை இன்னமும் சத்ரியால் நம்ப முடியவில்லை...' என்னை தேடி வர இத்தனை வருடமானாதா.....?' அவள் விழிகள் கேட்ட கேள்வி இது தான்... இந்த கேள்விக்கும் தான் செய்ய போகும் விபரீதமான செயலுக்கும் ஏணி வைத்தாலும் எட்டப் போவதில்லை....

சாத்வியின் மனம் அறிந்தும் வேறு வழி இல்லை.... தன் பெற்றொருக்காக, சாத்வியின் பெற்றொருக்காக இல்லையென்றாலும்..... சாத்விக்காக, சாத்வியின் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கைகாக கட்டாயம் இதை செய்தே ஆக வேண்டும்..... என்ற எண்ணம் மனதில் நிலைப்பெற...

அதற்கு மேலும் அந்த பார்வையை எதிர் கொள்ள முடியாமல்..... வாய்க்கு வந்ததை சொல்லி விட்டு அப்படியே கிளம்பிப் போனவன் தான்... இருக்கும் வேலைகளை...... விரைவில் முடிக்க தன் 'பைக்கர்ஸ் பாய்ண்ட்' சென்றான்... செல்லும் வழியில் காலையில் தன் பெற்றோர் தன்னிடம் பேசியவைகள் நினைவு வந்தது.....

காலையில் காபி அருந்த கீழே வந்தவனின் பார்வையில் பட்டது சங்கரின் அழுத்தமான குரலும்..... மகாவின் கண்ணீர் தேங்கிய முகமும்...

பார்த்ததுமே கண்டு கொண்டான்.....

"ஏதோ பிளான் போடுறார் போலவே...'' என நினைத்து அவர்களின் சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் சத்ரி.....

மகள் நன்றாக இருப்பாள் என்ற உத்திரவாதம் கிடைத்த மகிழ்ச்சியில்.....

"சிவகாமி நம்ப சத்ரிகிட்ட சொல்லி சாத்வியை அழைச்சிட்டு வர சொல்லேன்... பார்க்கனும் போல இருக்கு..... சத்ரி நீ சொன்னா கேட்பான் சிவகாமி... "என மகா கேட்க.....

"நாம சொல்லவில்லைனாலும் சாத்வியை கண்டிப்பா அவரே கூட்டிட்டு வருவான்.....பாரு.....

சாத்வி விஷயத்தில் பெத்தவங்களாக நாம நினைக்கிறதை... அவன் அவளை பெத்தவனாகவே இருந்து செஞ்சிட்டு வருவான்...

நீ கவலை படாத..... அவளை வர வழைக்க வேண்டியது என் பொறுப்பு...'' என சிவகாமி சத்தியமே செய்ய.....

"ஆமாம் சிவகாமி..... நம்மளை விட அவனுக்கு சாத்வி மேல பாசம் அதிகம் தான்.....

நாம கூப்பிட்டா வர மாட்டா..... சத்ரி கூப்பிட்டா கண்டிப்பா வருவா...

சாத்வி கஷ்டபட்ட காலத்தையே நினைக்கிறதுக்கு பதிலா...... அவளோட சந்தோஷமா நேரத்தை கழிக்கனும்..... "என அந்த சந்தோஷ தருணத்தை மனதில் வைத்து... மகா முகமெல்லாம் பூரிப்பாய் சிவகாமியுடம் பேசிக்கொண்டிருக்க...

இரவெல்லாம் உறக்கத்தை தொலைத்து வந்த சங்கர் , மனைவியின் பூரித்த முகத்தில் கடுப்பேறி... அங்கே சிவகாமி இருப்பதையும் சட்டை செய்யாது......

"பெத்த மகளை பத்தி ஒன்னுமே தெரியாமல் நிம்மதியில்லாமல், தூக்கமில்லாமல் இருக்குறேன்..... உனக்கு கவலையே இல்லாமல் இங்கே சிரிச்சு பேசிட்டு இருக்க.......... "என கத்த.....

அவ்வளவு நேரம் மகிழ்ச்சியாய் இருந்த மகாவின் முகம் நொடியில் சுண்டிப் போனது.....

"அண்ணே .... சிரிச்சு பேசிட்டு இருந்தா சாத்வியை பத்தி கவலை படலைன்னு அர்த்தமா.....? சும்மா வாய்க்கு வந்த மாதிரி பேசாதீங்க..... உங்க மேலேயும் தப்பு இருக்கு, எப்போ பாரத்தாலும் மகாவையே குறை சொல்லாதீங்க.....'' என ஆதங்கமாய் கேட்க.........

சிவகாமியின் கேள்வியில் "இல்லை சிவகாமி..... சாத்வி எங்கே இருக்கான்னு தெரியாம ரொம்ப கஷ்டமா இருக்குமா..... அப்போ செய்த தப்புக்கு இப்போ வருந்துறேன்மா... அவளை பத்தி தெரியாமல் மனசு கிடந்து தவிக்குதும்மா.....'' என வருந்த...

'இவராவது சாத்வியை பத்தி கவலை படுறதாவது... இவர் நடிக்கிற மாதிரி தெரியுதே...' என நினைத்துக் கொண்டிருக்கும் போதே...

அவரின் வருத்தத்தை காண சகிக்காமல் சிவகாமி தான் போட்டு உடைத்தார்.... "சாத்வி பத்திரமா தான் இருக்கா அண்னே..... அவளை பத்தி கவலை படாதீங்க..... , நாளைக்கே வீட்டிற்கு கூட்டிட்டு வர சொல்லி இருக்கேன்....சத்ரி கூட்டி வருவான்....'' என சொல்ல ...'சொத்' என சத்தம் கேட்டு திரும்பி பார்க்க...

சத்ரி தன் தலையிலேயே அடித்துக் கொண்டான் வெளிப்படையாகவே....

' உங்களுக்குப் போய் பாவம் பார்த்து சாத்வியை பற்றி சொன்னேனே....' என வெளிப்படையாகவே முறைக்க...

அப்போது தான் செய்த செயல் உறைக்க..... 'ஐய்யய்ய...உளரிட்டோமோ...'' என நினைக்கும் போதே.....

சிவகாமியை

பிடித்துக்கொண்டார் சங்கர்….. "எப்படி இருக்கா...போ சாத்வியை பத்தி சத்ரிக்கு தெரியுமா….? எங்கே தங்கி இருக்கா….. ?'' என விடாமல் கேட்க...

"சாத்வி பேங்கில் வேலை பார்க்கிறது மட்டும் தான் தெரியுமாம்...வேற எதுவும் தெரியாதாம்...'' என சத்ரியை தயக்கமாய் பார்த்துக் கொண்டே சிவகாமி கூற...

'இவன் எப்படி கண்டுபுடிச்சான்...' என்ற ரீதியில் கிருத்திகாவும் வெங்கட்டும் நின்றிருந்தனர்…..

விநாயகமோ... 'இவனுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை….. ரொம்ப ஓவரா தான் பாசம் வச்சுட்டானோ... என்கிட்ட சொல்லவே இல்லையே சிவகாமி…..'' என விநாயகம் தன் மனைவின் அருகே வர...

சங்கர் இது தான் நேரம் என விநாயகத்திடம் திரும்பி... "மச்சான் நான் இங்கே எதுக்கு வந்தேன்னு உங்களுக்கு தான் ஏற்கனவே தெரியுமே…..

சாத்விக்கு நல்ல வரண் ஒன்னு வந்திருக்கு……... அதுவும் நம்ம ஊரிலேயே... இதை தவிர வேற நல்ல வரண் சாத்விக்கு அமையாது….. அதுவும் இல்லாமல்...'' என தயங்கி... "போன மரியாதையை சாத்வியோட கல்யாணத்தில் தான் மீட்டு எடுக்கணும்…..'' என அழுத்தமாய் கூற...

இதை தான் வீட்டிற்கு வந்த அன்றே சொன்னானே..... என்ற பாவனையுடன்...

"யார் மாப்பிள்ளை...'' என பதிலுக்கு விநாயகம் கேட்க.....

"நம்ப கோதண்டம் மகன் ரமேஷ் தான்.....'' என்றார் சங்கர்.....

"ம்...ஆமாம் சங்கர்... கோதண்டம் நம்ப ஊரில் பெரிய ஆளு தான்... ஆனா பையனை பத்தி விசாரிச்சீங்களா.....'' என கேட்க.....

"விசாரிச்சுட்டேன் மச்சான்... சாப்டுவேர் இன்ஜினியரிங் முடிச்சு அமெரிக்காவில் வேலை பார்க்குறானாம்.... நல்ல சம்பளம்.....'' என்றவர்.... கூடவே "சந்தேகமா இருந்தா நீயும் விசாரிச்சுப் பாரு... மச்சான்.....'' என விநாயகத்திடம் சொல்ல...

அதற.கு பதில் பேசாமல் நின்ற விநாயகம் சிவகாமி.....

இருவரையும் பார்த்தார் போல் நின்ற சங்கர்..... "என்னைக்கோ ஒரு நாள்.... நீ என் தங்கச்சியே இல்லைன்னு ரொம்ப அசிங்கமா பேசனேன்..... அதை நீ நினைக்கவே இல்லைன்னு உன்னோட மச்சானோட நடவடிக்கையில் இருந்தே நான் தெரிஞ்சுகிட்டேன்.....

என் பொண்ணும் இந்த அளவு வசதியா இருப்பான்னு நான் நினைக்க கூட இல்லை.... இப்.போ வரை கிருத்தியை நீங்க உங்க பொண்ணா தான் நடத்துறீங்க... இதே மாதிரி என்

இரண்டாவது பொண்ணும் சந்தோசமா வாழனும்ன்னு நாப் நினைக்கேன் விநாயகம்.....

அதற்கு தகுந்த மாதிரி நல்ல வரணா சாத்விக்கு வந்து இருக்கு ..... எப்படியாவது இந்த சம்பந்தம் முடியனும் விநாயகம்.... இத்தனை நாளாய் ஊருக்குள்ள பெரிய மனுசனாய் சுத்திட்டு இருந்தாலும், முதுகு பின்னாடி பேசாதவங்க யாரும் யாருமே இல்லை.....

எனக்கு சாத்வி ரமேஷோட கல்யாணம் நடக்கனும்..... நாங்க சொன்னா கேட்க மாட்டா..... ஆனா சத்ரி சொன்னா கண்டிப்பா கேட்பா... நீங்க ரெண்டு பேரும் தான் சத்ரிட்ட பேசி.... இந்த கல்யாணத்தை நடத்தி கொடுத்திடு விநாயகம்.....இது ஒன்றை மட்டும் எனக்காக செஞ்சு கொடு மச்சான்.....” என கொஞ்சமும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அழுத்தமாய் தனக்கு வேண்டியதை மட்டும் வேண்டியவர்களிடம் கேட்டார் சங்கர்......

இதுவரை குழப்பத்தில் இருந்த சத்ரிக்கு மிக தெளிவாய் புரிபட.... நடப்பதை ஆழ்ந்து பார்த்தபடி இருந்தான்.....

மகாவும் சங்கரின் இந்த பரிணாமத்தை எதிர்பார்க்கவில்லை.... என்பது மகாவின் முகத்தில் அப்படியே தெரிந்தது....

.

சங்கரின் வார்த்தைகள் அனைத்தும் சாத்வியின் மீதான அன்பை பறை சாற்ற, அது அப்படியே சத்ரியை நோக்கி திரும்பியது விநாயகத்தின் மூலம்........

வருத்தம் கவலை என அனைத்தையும் பிரதிபலித்தபடி அமர்ந்திருந்த சங்கரின் தோள்களில் கையை வைத்து... "நீ பேசினா மாப்பிள்ளைக்கு , சாத்வியை கட்டி வைக்க வேண்டியது எங்க பொறுப்பு... "என சத்தியம் செய்யாத குறையாய் பேசியவர்...'' இல்லை இல்லை சத்ரியோட பொறுப்பு..... சத்ரி பேச்சுக்கு சாத்வி மறு வார்த்தை பேச மாட்டாள்......அதை பத்தின கவலையை நீ விடு... எப்போ பேச வர்றாங்க....? எப்போ நிச்சயம்....?'' என கேட்க.....

விநாயகத்தின் பேச்சில் மனம் குளிர்ந்தது சங்கருக்கு... அதில் முகம் பூக்க.... "மச்சான்.....மாப்பிள்ளை அமெரிக்காவில் வேலை பார்க்கிறாராம்..... அடுத்த மாத முதல் தேதி வருவாராம்..... மூனு மாச லீவில் வராராம்..... வந்தவுடனே கல்யாணம் வச்சா தான்.....

திரும்ப போகும் போது சாத்வியை கூட்டி போக வசதியாய் இருக்கும்...அதனால் முடிஞ்சளவு இன்னும். இரண்டு இல்லை மூணு வாரத்தில் சாத்வியோட சம்மதம் கிடைத்தால் நல்லா இருக்கும்...'' என சந்தோசமாய் மகளின் ஒளிமயமான எதிர்காலத்தை கண்களில் தேக்கி பேசினார் சங்கர்.....

"சரி விடு மூணு வாரம் இருக்கு இல்லையா…..! "என சங்கரிடம் கேட்டவர்….. "சத்ரி …. நீ என்ன செய்வியோ… ஏது செய்வியோ….. தெரியாது….. சாத்வியை சம்மதிக்க வைக்க வேண.டியது உன் பொறுப்பு…'' அவன் தலையில் கல்லைப் போட….. இல்லையில்லை பெரிய கப்பலையே தூக்கி போட…. அதில் அருகில் போய் அமர்ந்திருந்தான்…..

அது போதாது என சிவகாமி வேறு தலையிட்டு…….. "சாத்வியை இன்னைக்கே நீ அழைச்சிட்டு வர்ற…..இது என்னோட கட்டளை செஞ்சே ஆகனும்…'' என வெறுப்பேற்ற…..

பல்லை கடித்து கடித்து வெறுத்தவன் இதற்கு மேல் யாரைக்கடிக்கலாம் என பார்த்து அன்னையின் அருகில் சென்றான்…..

இது தான் சாக்கென….. "இதோ… சத்ரி இருக்கும் போது உங்களுக்கென்ன கவலை…'' என அவனை பிடித்த முன்னிருத்த…

இடையில் புகுந்தார் சங்கர்…..'' சாத்வி கல்யாணத்தை நல்லபடியா முடிச்சு கொடுத்திடுப்பா… அது போதும் என ஆத்மார்த்தமாய் கூறி….. "சாத்வி கிட்ட சம்மதம் வாங்கிடு சத்ரி….. நாள் கம்மியா தான் இருக்கு…..''என சொல்லிக் கொண்டிருக்கும் போதே…..

"அவ பார்த்துப்பான் சங்கர்..... நீ வா.... நாம கோதண்டம்கிட்ட ஆக வேண்டிய வேலையை பார்க்க சொல்வோம்....'' என இருவரும் நகர.....

அங்கிருந்த மகா, சிவகாமி இருவரகயும் அப்படி ஒரு பார்வை பார்த்து... மகாவின் மேல் கோபத்தை காட்ட முடியாமல்... தன் அன்னையிடம் திரும்பி....

"உனக்கென்ன 'பாகுபலி — சிவகாமின்னு 'நினைப்போ..... சும்மா கட்டளை போட்டுட்டு இருக்க...'' என கண்களாளேயே எரித்து...

"நான் கூப்பட்டதும் அவள் வந்திடுவாளா... எல்லாரும் என்னையவே கோர்த்து விட்டுட்டு இருக்கீங்க.....'' என கோபம் ஏற....

அவன் கோபத்தை பார்த்து... "கண்டிப்பா நாங்க வந்தா ,எங்க கிட்ட பேச கூட மாட்டாளே....அது தெரிஞ்சும்......'' என மகா இழுக்க.....

"சத்ரி , சாத்வி வாழ்க்கை நல்லா இருக்கனும்னு நினைச்சா..... அவளுக்கு இந்த வரணை முடி..... கோதண்டம் மாமாவை பத்தி தெரியாதவங்க நம்ப ஊரில் இல்லை..... அவங்க வீட்டில் பொண்ணை கொடுத்தால் கண்டிப்பா சங்கர் அண்ணனுக்கு போன மரியாதை திரும்ப வரும்..... அதை விட சாத்விக்கு நல்ல எதிர்காலமும் இருக்கு.....சொன்னதை செய்....

இரண்டு நாள் டைம் எடுத்துக்கோ.... ஆனால் அவ சம்மதம் கண்டிப்பா வேணும்..'' என சிவகாமி அவர்பங்கிற்கு கூறி விட்டு "நீ வா.... மகா.... மற்றதை அவன் பார்த்துப்பான்.....'' என மகாவை இழுத்துச் சென்றாள்....

சத்ரியும் முடிவெடுத்தவனாய்..... "மாப்பிள்ளை போட்டோ.... போன் நம்பர், அட்ரெஸ் கொடுங்க..... சாத்விகிட்ட கல்யாணம் பத்தி பேசும் போது இதெல்லாம் இல்லாமல் முடியாது.....'' என கேட்க....

'சத்ரியை ரொம்ப கட்டாயபடுத்துகிறோமோ... 'என கவலையில் இருந்த மகாவிற்கு அவனின் இந்த பேச்சு அந்த கவலையை போக்க.....

அடுத்த பத்து நிமிடங்களில் அவன் கேட்ட அத்தனையும் அவன் கைகளில் இருந்தது..... அதையும் விநாயகமே வந்து கொடுக்க.....

முதல் முறையாய் அமைதியாய் கேட்டான் சத்ரி..... "உடனே கல்யாணம் பண்ணனுமா..... கொஞ்சம் தள்ளிப் போடலாமே.....''
என

அதற.கு உடனே வந்தது பதில் சங்கரிடமிருந்து... "நான் அவளுக்கு கல்யாணம் பேச தான் வந்திருக்கோம்ன்னு தெரிஞ்சா , கண்டிப்பா வேற எங்கயாவது போய்டுவா... படிச்சு முடிச்ச காலத்திலேயே தனியா போனவ..... இப்போ சொல்லவே

வேண்டாம்...'' என நமுதன் முதலில் பார்த்த சாத்வியின் தோற்றம் ஆளுமை தந்த நினைப்பில் கூற..

"ஓ... கல்யாணத்துக்கு அப்புறமும் ஓடிட்டா.....?'' என நிதானமாய் கேட்க.....

பின்னோடு வந்த விநாயகம் சட்டென "சத்ரி....நீ புளியை கரைச்சது போதும்... சாத்விக்கு நம்ப ஊரலேயே..... நம்ப சொந்தத்துக்குள்ள கொடுக்கனும்ன்னு முடிவு பண்ணியாச்சு......இதை நீ தான் நடத்திக் கொடுக்கனும்....'' என முடித்துவிட.....

"இப்போ என்ன பண்ண சொல்றீங்க.....'' என்றான் கடுப்புடன்...

"சாத்வியோட கல்யாணம் உன் பொறுப்பு...'' என முழு பொறுப்பையும் விநாயகம் அவன் தலையிலேயே கட்ட.....

"ஒரு வேளை சாத்வி யாரையாவது லவ் பண்ணி இருந்தா...'' என விடாமல் கேட்டான் சத்ரி.....

'சங்கரின் முகம் அஷ்ட கொணல் ஆனதையும், அதை பார்த்தபடியே விநாயகத்தின் முறைப்பு அதிகமாவதையும் 'கண்ட சத்ரி.....

"அவளுக்கு பிடிச்சிருக்கா இல்லையான்னு தெரியாமல் எப்படி முடிவு பண்ணுனீங்க....'' என அமைதியாகவே கேட்க.....

"கண்டிப்பா பிடிக்கும்….. ஏனா நம்ப கோதண்டம் மகன் அப்படி….'' என சத்ரியின் கையில் இருந்த கவரை பிரித்து ரமேஷின் போட்டோவை காட்ட…..

"வாங்கிப் பார்த்த சத்ரக்கும் அப்படி தான் தோன்றியது….. '"சாப்ட் வேர் செட் பசங்க எல்லாம் இப்படி தானே இருப்பீங்க….. நல்லா நார்த் சைட் ஹீரோ மாதிரி'' என மனம் ஓடினாலும்…

சாத்வியின் திருமணத்திற்கு பொறுப்பேற்றுக் கொண்டான்…..

அதன் பின் தான் சாத்வியிடம் வந்தது, பேசியது, போன் நம்பர் பரிமாறியது, மாலை சந்திக்க ஏற்பாடு செய்தது எல்லாம்…..

இதோ இப்போது சாத்வியின் அழைப்புக்காக காத்திருந்தான்….. எப்படி பேச போகிறோம்….. எப்படி சமாளிக்க போகிறோம்….. என்ற பயமும் தானாகவே வந்து அமர்ந்து கொண்டது…

வேலையிடையே அடிக்கடி மொபைலை எடுத்துப் பார்ப்பதும் ,அதில் சாத்வியிடம் அழைப்பு வந்திருக்கிறதா…!!!! என பார்த்து ஒவ்வொரு முறையும் தோல்வியை தழுவி…. சாத்வி கூப்பிடவாளா? மாட்டாளா….? பெரும் குழப்பமே எழ… இன்று தன்னுடன் பேசவில்லை எனில் நாளைக்கு அவள்

இருக்கிற இடத்திலேயே போய் பேசுவோம்... என முடிவெடுத்து...

அதன் பின் தான் தன் வேலையை கவனிக்க சென்றான்...

பின் பிற்பகலில் வாட்ஸ் ஆப்பில் வந்த குறுஞ்செய்தியில் திகைத்துப் போனான்..... சாத்வி தன.னை சந்திக்க நேரம் இடத்தை குறித்து அனுப்பி இருந்தாள்...

பின் வீட்டிற்கு வந்து மீண்டும் ஒரு குளியல் போட்டு கிட்டதட்ட நான்கைந்து ஜீன், டீசர்ட்டுகளை மாற்றி கடைசியாக திருப்தி தரும்படி கிளம்பி சாத்வி சொன்ன நேரத்திற்கு முன்பாகவே அங்கே செல்லவேண்டும்..... என கீழே வர..... வீட்டில் இருந்த அனைவரும் ஹாலில் அமர்ந்து இவ்வளவு நேரம் இவனது அறையைவே பார்த்திருப்பார்கள் போல்..... சத்ரி வெளியே வந்ததும் அனைவரின் பார்வையும் இவன் மேலேயே நிலைக்க..... 'இப்போ என்ன.... ?' என பார்த்தாலும் கண்டு கொள்ளாமல் கிளம்பி சென்றான் .....

சாத்வி தன் கையில் இருந்த மொபைலையே வெறித்துக் கொண்டிருந்தாள்....

சத்ரி தன் நம்பரை சேவ் செய்து சென்றிருக்க , அந்த பெயரை பார்த்தபடி வெகு நேரம் நின்றிருந்தாள்..... மேனேஜர் அழைத்தது நியாபகம் வர பைலை எடுத்துக் கொண்டு சென்றாள்.....

பின் மாலையில் நேரத்தையும் இடத்தையும் முடிவு செய்து , அவனுக்கு கால் செய்ய போக..... அதை தவிர்த்து வாட்ஸ் அப் சென்றாள்....

தனக்கு வசதி படும் நேரமாய் பார்த்து , பேங்க் அருகில் இருந்த ரெஸ்டாரண்ட்டுக்கே வர சொன்னாள் ..... வாட்ஸ் அப்பில் தட்டிவிட்டு அடுத்த வேலைகளை பார்க்க சென்றாள்.....

மாலையில் எப்போதும் போல் வேலை முடித்து நிமிரவும், அவர்களின் சந்திப்பிற்கான நேரமும் நெருங்க... அவனை காண சென்றாள்...

எந்த ஒரு அலட்டலுமின்றி புக் செய்தருந்த டேபிலில் இருந்தாள் சாத்வி... சத்ரி வரும் முன்பே....

வெகு நேரம் கழித்து வந்த சத்ரியின் புருவங்கள் மேலேறியது, கைகளை திருப்பி வாட்சை பார்க்கவும் மறக்கவில்லை.....

எப்போதும் ஆண்களை காக்க வைக்கும் பெண்களுக்கு மத்தியில் வேறுபாடாய் இருந்தது அவள் நடவடிக்கை....

காலையில் எப்படி இருந்தாளோ... சிறிதும் மாறாமல் இருந்தாள்..... ஆனால் முகம் மட்டும் 'வேலை பார்த்த களைப்பை 'அப்படியே காட்டியது...

நீளமான கூந்தல் அவளுக்கு பிடிக்கவில்லையோ... இப்படி முதுகு வரை கட் பண்ணிட்டாளே.......என எண்ண வைத்தது.......அவளது கட்டை கூந்தல்.....

சுவாதீனமாய் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்க, அவளின் புடவை மடிப்புகள் மயில் தோகையென விரிந்து கிடக்க, அடக்கமான கேர்லிங் செய்த கூந்தல் ஒரு பக்க முகத்தை மறைத்து மறுபக்க முகத்தை பாதி நிலவென காட்டிக் கொண்டிருந்தது...

மொபைலில் பதிந்திருந்த பார்வையும், கூல் காபியை ரசித்து உறிஞ்சிய உதடுகளும்... 'நான் வந்து வெகு நேரம் ஆகிவிட்டது' என காட்டிக் கொடுத்தது.....

அவளை பார்த்தபடியே வந்து அவளெதிரில் அமர்ந்தான்..... அறவம் உணர்ந்து முகத்தை நிமிர்ந்து பார்த்து 'வந்தாச்சா.....' என்பது போல் பார்வை பார்த்து..... தன் கையில் இருந்த கூல் காபியை முடித்து....

"சொல்லுங்க என்ன பேசனும்....." என்றால் எந்த ஒரு தடுமாற்றமும் இன்றி......

சத்ரி தான் தடுமாறிப் போனான்...

# அத்தியாயம் 6

"என்ன பேசனும்….சொல்லுங்க…..'' வெகு வருடங்களாய் அவர்களுக்குள் தொடர்பு இல்லாமல் என்றாலும்…… அந்த ஒரே வார்த்தையில் தெரிந்தது இருவருடைய அன்பும் தோழமையும்……..

நிஜமாகவே தடுமாறித்தான் போனான் சத்ரி…

சாத்வியின் கூர்மையான பார்வை சத்ரியின் மீது அழுத்தமாய் படிந்தது….

அந்த பார்வையில் என்ன இருந்தது என்பதை கூட உணரவே இல்லை அவனது உணர்வுகள்…..

தான் இங்கு வந்திருக்கும் காரணம் அறிந்தால்…. இப்படி ஒரு தோழமையுடன் தன்னிடம் பேசுவாளா…

இந்த கேள்விக்கு சத்ரியால் பதில் சொல்ல முடியவில்லை….. நிச்சயம் கேள்வி குறிதான்…. அதோடு சாத்விக்கு கண்டிப்பாக பிடிக்காத விசயமும் கூட…

இவ்வாறு சத்ரியின் எண்ணங்கள் அவன் மனதில் மிதந்தபடியிருக்க…..

"உங்க கிட்ட தான் கேட்கறேன்……..'' என மீண்டும் சத்ரியின் கவனத்தை கவர…..

.

அவளின் குரலில் தன் நினைவில் இருந்து விடுபட்ட சத்ரி... ஆழ மூச்செடுத்து பின் , எந்த ஒரு மேல் பூச்சும் இல்லாது.......

. "உனக்கு வரண் வந்திருக்கு... பிடிச்சிருக்கா சொல்லு....." என ரமேஷ் பற்றிய தகவல்கள் அடங்கிய கவரையும் அதனுடனே இருந்த ரமேஷின் மோட்டோவையும் அவள் முன் வைத்தான்..... பெரிய முடிவொன்றை முடிவு செய்தவனாய்.....

எதிர்பார்க்காத ஒரு நிகழ்வு தான்.... அப்படியே கண்ணாடியாய் சாத்வியின் முகம் காட்டிக் கொடுத்தது... அதிர்ச்சியாய் அவள் மான் விழிகள் பெரிதாய் விரிந்தது...

அடுத்த நொடி சன்னமான சிரிப்புடன், இதழ்கள் விரிய.....

"ஓ.... இதுக்கு தான் ஹோட்டலில் விருந்தா....." என நக்கலாய் கேட்டாள் சாத்வி...

"கோவிலுக்கு போய்ட்டு ஹோட்டல் போனாங்க..... நான் ஹோட்டலில் மட்டும் ஜாய்ன் பண்ணிக்கிட்டேன்..... அவ்வளவு தான் தெரியும், விருந்தா ...

இல்லை சும்மா கேஷிவலா போனாங்களான்னு தெரியலை..." என்றான் சத்ரி பொய் கூறாமல்...

"ஓ....." என இதழ்கள் ஒரு நிமிடத்திற்கும் மேல் குவிந்து பின்....." இந்த வரண் அம்மா..... அப்.....அப்பா செலக்ஷனா....!" அம்மா என்ற வார்த்தை எளிதில் வந்ததை

போல் அப்பா என்ற வார்தை அவ்வளவு எளிதாய் அவள் வாயில் வர வில்லை... தெளிவாக புரிந்து கொண்டான் சத்ரி...

"ம்... ஆமாம் உன் அப்பா செலக்ஷன்....தான்...." என்றான் அவள் கேள்விக்கு பதிலாய்....

"ஓ... அப்போ உங்க செலக்ஷன் இல்லை... விசாரிக்கவாவது செஞ்சீங்களா.... மாப்பிள்ளையை பற்றி... ." என கேட்ட சாத்வியின் குரலில்... கிலோ கணக்கில் நக்கல் நய்யாண்டி தான்...

இருந்தாலும். அதை சட்டை செய்யாது "ம்... விசாரச்சிட்டேன்..... நம்ப கோதண்டம் சித்தப்பா பையன் தான்... அமெரிக்காவில் இருக்கான்... அளவுக்கு அதிகமான சம்பளம் ..... நல்லா பார்த்துப்பான்....." என அவள். கேட்காத கேள்விகளுக்கும் சத்ரி பதில் சொல்லியபடி இருக்க...

"நான் அதை கேட்டகலை...... மாப்பிளையிட்ட பேசினீங்களா..... இந்த கல்யாணம் பத்தி....." என அவனை உன்னிப்பாய் பார்த்தபடி கேட்க...

"ம்..... விசாரிச்சாச்சு..... கால் பண்ணி பேசியாச்சு..... அவனுக்கு ... சாரி அவருக்கு சம்மதம்ன்னு சொன்னாங்க.... உன் போட்டோ கேட்டாங்க..." என தன் மொபைலை அவள் முன்னே பிடித்தவனாய்..... "உன் போட்டோ..... எதுவும் என்கிட்ட... இல்லை..... ஒரு ஸ்னாப் எடுத்துக்கவா..." என அவளிடம் அனுமதி வாங்கினாலும்....

அவன் விரல்களும் மொபைலும் அவளை ஸ்னாப் எடுக்க மறக்கவில்லை...

"உங்க்கிட்ட போட்டோ இல்லையா...? இல்லை யார்கிட்டேயும் போட்டோ இல்லையா...'' என மீண்டும் அவனை துருவ...

"யார்கிட்டேயும் உன் போட்டோ இல்லை.... பெண்ணா அடக்க ஒடுக்கமா வீட்டில் இருக்கனும்... அதைவிட்டுட்டு ஊர் சுத்திட்டு இருந்தா.....எப்படி இருக்கும் உன் போட்டோ...'' என கடுப்புடன் சத்ரி கேட்க......

அவள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே..... போட்டோ எடுத்து அதை யாருக்கோ அனுப்புவதும் சாத்விக்கு நன்றாகவே தெரிந்தது...

சத்ரி பேசியதையும் தன்னை திட்டுவதையும் பொறுத்துக்கொள்ளாது...

"எனக்கு கல்யாணம் பேச நீங்க யாரு.....'' அடக்கிய கோபத்துடன் கேட்டாள் சாத்வி

"உன்னோட சத்ரி.....'' அழுத்தமாய் வந்தது சத்ரியின் குரல்....

அதிர்ந்து விழித்தாள்... "இது என்ன பதில்....'' என கேட்கவும் செய்தாள்...

"உன்னோட சத்ரி தானே..... எங்கே இல்லைன்னு சொல்லு... இப்படியே எழுத்து போய்ட்றேன்...''

இதற்கு அவள் மௌனமே பதில் கூற... "உன் சத்ரி தானே... அப்போ நான் உனக்கு கல்யாணம் பண்ணி பார்க்காம வேற யார் செய்வாங்க...'' என பிலாசபி பேச...

சத்ரியின் வார்த்தைகளை முழுவதும் மறந்தவளாய்.... "நீங்க ஏன் செய்யனும்...? என் அம்மா அப்பா இருக்காங்களே.....'' தெளிவாய் கேட்பதாய் பாவ்லா செய்ய.....

"ரொம்ப தெளிவான பேசுறதா நினைப்போ...'' என இந்த முறை சாத்வியை கூர்மையாய் பார்த்து...

"அந்தளவுக்கு அறிவு இருக்குறவங்களா இருந்தா, எப்போவோ உனக்கு கல்யாணம் முடிஞ்சு, இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவா இருந்திருப்ப... இப்படி தனியா கஷ்டபடவிட்டுட்டு இருக்கமாட்டாங்க...'' என சுள்ளென விழ....

"அப்போது வீட்டை விட்டு போனேன்னு சொன்னீங்க...

"அப்போ வீட்டை விட்டு போனேன்னு சொன்னீங்க... இப்போ கஷ்டபடுறேன்னு சொல்றீங்க... நீங்க மட்டும் தெளிவான பேசுறதா நினைப்போ...'' என சாத்வி கோபமாய் கத்த.....

"எது எப்படியோ... இரண்டுமே உண்மை தானே....'' என அவள் வாயடைக்க.....

சாத்விக்கும் புரிந்தது இரண்டும் உண்மை தான் என... ஆனாலும்... அசறுவேன...என்ற தோனியில்.....

"அதான் இப்போ கல்யாணத்திற்கு முடிவு செஞ்சிருக்காங்களே...'' என தாய் தந்தையை தாங்கி பேச.....

"அதான் நானும் சொல்றேனே... உனக்கு கல்யாணம் பண்ணணும்ன்ற எண்ணம் இருந்தா எப்பவோ அது நடந்திருக்கும்.... இப்படி சுயபுத்தி இல்லாமல் ,ஊர் பேச்சை கேட்டு உனக்கு கல்யாணம் பண்ண வந்து இருக்க மாட்டாங்க.....'' என போட்டு உடைக்க.....

இவனிடம் மல்லுக்கட்டி பயனில்லை என

"நான் எப்படி இதற்கு எப்படி சம்மதிப்பேன்னு நீங்க நினைக்கலாம்....'' என அழகாய் திசை திருப்ப...

‘‘எஸ்கேப் ஆகுறீயா...?'' என அதற்கும் காய்ந்த சத்ரி... "நான் சொன்னால் கேட்பேன்னு நிச்சயம் நம்புறேன்.....'' அழுத்தமாய் கூறினான்....

"ஒரு வேளை கேட்கல்லைனா....'' என வம்பிழுக்க....

"கேட்கனும் கேட்டு தான் ஆகனும்.....'' என சத்ரியும் சட்டமாய் பதில் கூற...

"ஒரு வேளை லவ் எதாவது இருந்து..... அவனை தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு நின்னா...'' என முடிக்கும் முன்....

அவள் தாடையை இறுகப் பற்றி இருந்தான்... "என்னோட சின்ன வயசிலேயே, நான் செய்ற ஒவ்வொரு செயலுக்கும் பின்னாலும் உன்னோட சந்தோஷம் ஒன்னு மட்டும் தான் இருக்கும்...்இப்போவும் அதே எண்ணம் தான் ஓடிட்டு இருக்கு..."

"ஒவ்வொரு சின்ன விசயத்தையும் பார்த்து பார்த்து செய்ற எனக்கு, உன் கல்யாணத்தை பற்றி எவ்வளவு யோசிச்சு இருந்திருப்பேன்...... இப்போவும் உன் சந்தோஷசத்திற்கு தான் இந்த கல்யாணம்... நான் அவ்வளவு ஈசியா உனக்கு கெடுதல் நடக்க விடமாட்டேன்... நம்பிக்கை வச்சு கல்யாணம் பண்ணு... என் மேல் முழுசா நம்பிக்கை வை ..... அது போதும்....." என இறுகப்பற்றி இருந்த தாடையை விட்டு எதுவும் நடக்காதவனாய் சேரில் சற்று பின்னே தள்ளி அமர்ந்தான்......

தன் தாடையில் பதிந்த அவனின் இறுகிய விரல்கள் குறு குறுக்க... "ஓகோ..... அப்போ எனக்கு லவ் பண்ற ப்ரிடம் கூட கிடையாதா..." என வேண்டும் என்ற ஆச்சர்யம் காட்டி வினவியவள்... "இதில் கோபப்பட எதுவுமே இல்லை....." 'நான் யாரை வேணா லவ் பண்றேன், யாரையும் கல்யாணம் பண்றேன் உனக்கென்ன...' என நேரடியாய் கேட்க...

"இருக்கு கண்டிப்பா இருக்கு.... ஆனா இப்போ இல்லை..... கல்யாணத்திற்கு பிறகு..." என குதற்கமாய் பேச....

அவனை எப்படி தான் அடக்க..... என மனம் நினைத்தாலும்... "எனக்கு இந்த வரண் வேண்டாம்...'' என சத்ரியை அலைக்கழிக்க...

"அப்போ கண்டிப்பா இந்த வரண் உனக்கு செட் ஆகும்.....''

"நீங்களே சொன்னா ஆச்சா... எனக்கு செட் ஆகுமா ஆகதான்னு... நான் தான் சொல்லனும்...''

"அதெல்லாம் நல்லா செட்ட்ட்..... ஆகும்....'' என சாத்வியை ஒரு மார்க்கபாய் பார்த்துக் கூற...

"சத்ரி டபுள் மீனிங்கா வருது வார்த்தை..."என அவன் பார்வை புரிந்து சட்டென அவனை எச்சரிக்க.....

"டபுள்ளாம்.... இல்லை.... சிங்கிள் மினீங் தான்..... இந்த வரண் உனக்கு செட் ஆகும்...'' இந்தமுறை பார்வை கண்ணியமாய் மாறி இருக்க...

அவன் பேச்சஇல் விடாது அவனை முறைக்க...

"நிஜமா சாவி.... உனக்கு இந்த வரண் தான் செட் ஆகும்... இரண்டெ பேரில் யாராவது ஒருத்தர் அமைதியான ஆளா இருந்தா தான் பேம்லியை ரன் பண்ண முடியும்... சோ... சரி சொல்லிடு....'' என அழுத்தமாய் பேச...

‘‘ஓ... அந்த அமைதியான ஆள் யார்... நானா....இல்லை அவனா...'' என குதற்கமாய் கேட்க.....

"சாட்சாத் உன்னை கல்யாணம் பண்ணிக்க போற அப்பாவியைத் தான் சொன்னேன்... உன்னை போய் யாராவது அப்பாவின்னு சொல்வாங்களா...?'' என நக்கலாய் கேட்க.....

கண்களாலேயே எரிப்பது போல் பார்க்க...

"விடு... எனக்கு இப்போ உன்னோட பதில் வேணும்.... அது தான் இப்போ முக்கியம்...அதுவும் இப்போவே... வேணும்...'' என

"இப்போவேன்னு கேட்கறதை பார்த்தா... டேட் பிக்ஸ் பண்ணியாச்சு போல.....'' என சாத்வி கேட்க.....

"சே.... சான்ஸே இல்லை போ... கரெக்கடா கெஸ் பண்ணிட்ட...'' என சிரித்து பின் அவளின் முறைப்பு இன்னும் கூடுவதை பார்த்து... "

மூன்று மாதத்திற்குள்ள இந்த கல்யாணம் நடந்தாகனும்......... ஆனா மூன்று மாதமும் உனக்கு டைம் இல்லை..... நீயும் அமெரிக்கா போகனும்..... பாஸ்போர்ட் விசா... எல்லாம் ரெடி பண்ணனனும்....'' என அவளை அளந்தபடியே கூறி......

அவன் விடாமல் தன்கையில் இருந்த போட்டோவை அவளிடம் காட்டி "பிடிச்சிருக்கா சொல்லு...'' என கேட்கவும் செய்தான் சத்ரி.....

அதை நிதானமாய் தன்கைகளில் வாங்கிப் பார்த்து ….. அவளும் ஏதோ முடிவு செய்தவனாய்... எனக்கு ஓகே… கல்யாண வேலையை ஸ்டார்ட் பண்ணுங்க...’’ என்றாள் சாத்வியும் நிதானமாய்…..

'உப்ப்ப…..’ என பெருமூச்சு சத்ரியிடமிருந்து கிளம்ப…..

"அவ்வளவு தானா….? வேற எதுவும் பேசனுமா...!’’ என சாத்வி கேட்க

"ம்… பேசனும், ஆனா என்கிட்ட இல்லை... உன் அம்மா அப்பாகிட்ட’’ என சொல்லி முடிக்கும் முன்பே…..

"எனக்கு இஷ்டம் இல்லை…..’’

"ம்ஹூம் நீ உன் அம்மா அப்பாகிட்ட பேசி தான் ஆகனும்….. நாளைக்கு வீட்டுக்கு வந்தே ஆகனும்..,…’’ என அதிகாரமாய் பேச…..

"நீ என்ன சொன்னாலும் தலை ஆட்டிட்டு இருக்க என்னால் முடியாது….. “

"ஏன்…..’’

"எனக்கு யாரையும் பார்க்க பிடிக்கலை…..’’

"யாரையும் பார்க்க பிடிக்கலையா….இல்லை உன் அம்மா அப்பாவை பார்க்க பிடிக்கலையா…..’’

அவள் மௌனமே பேசியது….. அது தான் என…..

"அம்மா அப்பாட்ட ஏன் பேச மாட்ற….. புதுசா எதுவும் காரணமிருக்கா...? இல்லை பழைய காரணம் தானா…..?”

"அதை உங்க அத்தை மாமாட்ட கேட்டு தெரிஞ்சிருக்கலாமே…..”

"காரணம் கேட்டா 'தெரியலைன்னு 'சொல்றாங்க... “

"இதை கேட்க தான் உட்கார சொன்னீங்களா???”

'பின்னே' என்பது போல் பார்வை படற...…

"இது தான் காரணம்னா….. நான் கிளம்புறேன்...”

வரேன் என்பது போல் ஒரு பார்வை கூட இல்லை... கைப்பை சகிதம் கிளம்ப….

"உட்கார் சாத்வி…..” என அவள் கை பிடித்து இழுத்து அமர வைத்தான்…..

"சரி , என் அம்மா அப்பாவை பார்க்க வரலாம் இல்லையா…..” என வெள்ளை கொடி பறக்கவிட….

"வர்லை….” என்றாள் சட்டென…..

"ம்ப்ச் ... நடக்கப் போறது உன்னொட கல்யாணம்…. நம்ப குடும்பத்தை பத்தி நான் சொல்லி தெரியவேண்டியதில்லை உனக்கு... எதுனாலும்... நீ டேரெக்டா இன்வால்வ் ஆகனும்... காலையில் நீ வீட்டுக்கு வந்தே ஆகனும்...….. பேருக்கு இருந்துட்டு கல்யாண விசயமா என்ன சொல்றாங்களோ

கேட்டுட்டு கிளம்பு..... அப்புறம் எல்லாம் நான் பார்த்துக்கிறேன்...'' என சொல்ல.....

"எப்போ பாரு ஆளாளுக்கு அவங்க அவங்க இஷ்டத்துக்கு ஆட வேண்டியது..... எல்லாத்திலேயும் சிக்குறது நான் தான்... நல்னா ஆடுங்க...'' என பார்வையை வேறு புறம் திருப்ப...

"எல்லாம் நல்லபடியா நடக்கும்... இப்போதைக்கு ஹேப்பியா இரு... கல்யாணப் பொண்ணா..... சிரிச்சிட்டு இரு... உன் டென்சன் எல்லாத்தையும் என்கிட்ட கொடுத்துடு... நான் பார்த்துக்கிறேன்...'' என பேச

அவன் மாறத அன்பில் கரைந்து தான் போனாள்..... சாத்வி...

"உன்கிட்ட பேசி பேசயே வயிறு பசிக்குது..... "என சில உணவு வகைகளை இருவரும் ஆர்டர் செய்து சாப்பிட்டனர்.....

சாப்பிட்டு கிளம்பி...சாத்வியின் பின்னேயே வர..... "நான் போய்கிறேன்..... சத்ரி..... பக்கத்துல..... இருக்கிற அப்பார்ட்மெண்டில் தான் இருக்கும்.....'' என அங்கிருந்தே கை காட்டானாள்...அவள் இருக்கும் அப்பார்ட்மெண்டை.....

"ஓ..... இங்கே தான் இருக்கியா...'' என கேட்டு அவள் கூடவே வந்து வழியனுப்பி...

"காலையில் கண்டிப்பா வரணும்.....'' என கட்டளையிட்டே சென்றான்...

தன் அப்பார்ட் மெண்டிற்குள் நுழைந்தவள்…..’’ சத்ரி நீ மாறவே இல்லையா… அப்பா அம்மாவே மாறிட்டாங்க… ஆனால் நீ… எப்படி….. இன்னும் அப்படியே என் பழைய சத்ரியாவே …..இருக்க…..’’ என வாய்விட்டே கேட்டு… அந்த நினைவுகளுடனே உறங்கிப்போனாள்…

வீட்டிற்கு வந்த சத்ரிக்கு அத்தனை நிம்மதி… "இன்றும் கூட என் பேச்சுக்கு அவ்வளவு மதிப்பு கொடுப்பியா சாவி… ரொம்ப சந்தோஷமா இருக்கு… இதுக்காகவே உனக்கு நல்லபடியா கல்யாணம் நடக்கனும்….. நடத்திக்காட்டுவேன்…’’ என ஏறக்குறைய சபதமே செய்தான்… சத்ரி….

மறுநாள் பேங்கில் பெர்மிஷன் எடுத்து வந்தாள்….

காரை ஸ்டார்ட் செய்து….. "நான் கிளம்பிட்டேன் சத்ரி…..’’ என அவனுக்கு தகவல் அளிக்க…..

"கூப்பிட வரவா’’ என கேட்ட சத்ரியையும் மறுத்து….. "கார்… இருக்கு …. நானே வரேன்….’’ என அவளே வந்தாள்…..

அவள் வருகிறாள் என காலையில் தான் சொன்னான் சத்ரி……. பின்னே இரவே சொல்லியிருந்தால் தன்னை உறங்கவே விட மாட்டார்கள் என இப்போது காலையில் தான் சொன்னான்…

இப்போது வருகிறாள் என்றதும் அனைவருக்கும் ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்ள.... வாசலையே பார்த்தவண்ணம் இருந்தனர்.....

சொன்ன நேரத்திற்கு சரியாய் வந்தாள்..... உள்ளே நுழைந்தவளின் பார்வை சத்ரியின் மீது வெகு நேரமாய் பதிந்து பின் மீண்டது....

"வா சாத்வி...'' என சத்ரி தான் முதலில் தலையசைத்து அழைத்தான்....

அதை பார்த்த அடுத்த நொடி எந்த தயக்கமும் இல்லாமல் உள்ளே வந்தாள்.....

"வாம்மா.....'' என அழைத்த மகா

"வா சாத்வி..... "என பாசமாய் அழைத்த சிவகாமி

"எப்படிம்மா இருக்க.....'' என கேட்ட விநாயகம்

என யாரையும் பார்க்க கூட இல்லை...

சங்கர் ஒரு மூலையில் தேமே என நின்றிருக்க..... கிருத்திகாவிற்கும் வெங்கட்டிற்கும் 'பெரியவங்க கிட்டேயே பேச மாட்றா.....' நம்மகிட்ட பேசுவாளா...என... புரியாமல் நின்றிருந்தனர்..........

அவள் யாருக்கும் பதில் சொல்லாமல் அழுத்தமாய் நின்றிருந்த விதத்தில் மற்ற அனைவரும் அப்படி ஒரு அமைதியில் இருந்தனர்...

"உட்கார் சாத்வி... ஏன் நிக்கிற....'' என பெரிய சோபாவை காட்ட.... அவள் அருகில் இருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்தாள்..... பெரியவர்கள் இருக்கிறார்கள் என்ற தயக்கம் சிறிதும் இல்லை.....

அனைவரின் பார்வையையும் எண்ண ஓட்டத்தையும் கிரகிக்க முயன்றவளாய் கூர்மையான பார்வையுடன் அமர்ந்திருந்தாள்...

அவளை பார்த்தபடியே அனைவரும் அங்கே இருந்த மிகப் பெரிய சோபாவில் வரசையாய் அமர..... கண்கள் வீடு வீட்டில் இருந்த அலங்கார பொருள்கள் என எங்கும் அலைபாயாமல் நிதானமாய்.....

எதிரில் இருந்த தாயிடம் பார்வையை பதித்து...

"இத்தனை வருசம் இல்லாத பாசம் இப்போ என்ன திடீர்ன்னு.....'' என கேட்க.....

அனைவருக்கும் இடையே விழுந்தாற் போல் இருந்தது....அவளின் கேள்வியில்......

அனைவரும் கோபமாய் சாத்வியையே பார்க்க...

மகா மட்டும்...

'இதற்கு நீங்க தான் பதில் சொல்லனும்.....' என மகா சங்கரையே பார்க்க.....

சங்கருக்கோ….. முகத்தை எங்கே வைப்பது என கடுகடுவென நின்றிருந்தார்…..

மகளை சமாதானம் செய்வது மட்டுமே பிரதானமாய் தெரிய... “வயசு ஏறுதில்லையாம்மா….. கால காலத்தில் உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைச்சு கொடுக்கணுமில்லையா…..” என பதமாகவே சொல்ல…..

"இந்த பாசம் தானா வந்தது மாதிரி தெரியலையே… யார் சொல்லி என் கல்யாணத்தை முடிவு செஞ்சீங்க…….” என நக்கலாய் கேட்டாள் சாத்வி…..

உண்மை தானே….. ஊரில் மற்றவர்கள் சொல்லி தானே சாத்வியை பற்றிய எண்ணமே சங்கருக்கு வந்தது….. உண்மையான பாசம் இருப்பவராக இருந்தால் சாத்விக்கு என்றோ திருமணம் முடிந்திருக்குமே... என சத்ரி வாய் விட்டு சொல்லியது இன்று அனைவரின் மனதிலும் ஓடிக்கொண்டிருந்தது…..

'நீ நல்லா கேளும்மா…. அப்போவாவது உன் அப்பாவுக்கு உரைக்குதான்னு பாப்போம்….' என மகா கடுப்புடன் பேசி விட….

"ஏய் ஆமா….. ஒருத்தி மானத்தை வாங்கிட்டு போய்ட்டா... உனக்காவது ஒழுங்கா மத்தங்க வாயில் விழாத மாதிரி

கல்யாணம் செஞ்சு வச்சா தான் எனக்கு மரியாதை….’’ சட்டென உள் புகுந்து சங்கர் கிட்டதட்ட கத்த துவங்கினார்……

"அதானே பார்த்தேன்….. இன்னும் நீங்க மத்தவங்களுக்காக தானே வாழுறீங்க….. பெத்த பொண்ணுங்களுக்காக எப்போ வாழ போறீங்க….’’ என சாத்வி கேட்க…..

"திமிரா பேசுறதையெல்லாம் வேற எங்கையாவது வச்சிக்க…..’’ என சங்கர் எகிற…..

"வேற எங்கையாவது வச்சிக்கன்னா…..? எதுக்கு என்னை இங்கே வர சொல்லனும்….. ? எதுக்கு என் கல்யாணத்தை பத்தி நீங்க பேசனும்….’’

"பெத்தாச்சு இல்லையா, செய்ய வேண்டிய கடமை இருக்கே…..’’

"கடமையை செய்ங்க….. கடமைக்காக செய்யாதீங்க…..’’ என சாத்வி கோபம் கொள்ள…..

"உனக்கெல்லாம் கல்யாணம் பேசறதே பெரிசு…… இதில் பெரிய இடம் பார்த்திருக்கேன் கல்யாணம் பண்ண கசக்குதோ…..’’

"கல்யாணம் பண்ண கசக்கல…. நீங்க முடிவு பண்ணின கல்யாணம்ன்றதினாலே தான் கசக்குது…..’’ என உடைக்க….

"ஏன்... நான் பார்த்தா .... என்ன....! பண்ணிக்க மாட்டியா.....''என திக்கியது சங்கருக்கு...

"நிச்சயம் பண்ணிக்க மாட்டேன்'' என தெளிவாக கூற

"அப்புறம் எப்படி கல்யாணத்திற்கு சம்மதம் சொன்ன....'' என கேள்வி கேட்க.....,

"இப்போவும் எனக்கு மாப்பிள்ளையை..... ஏன் கல்யாணமே பிடிக்கலை..... சத்ரி சொன்னான்ற ஒரே காரணத்திற்காக மட்டும் தான் நான் சம்மதிக்கிறேன்... "என கூறிவிட.....

அனைவரின் பார்வையும் சத்ரியின் மேல் தேங்கியது என்றால்.... சங்கர் ஒருபடி மேலே போய்...

"பெத்தவங்க எங்களை விட அவன் உனக்கு முக்கியமாக போய்ட்டானா...''என நேரடியாகவே கேட்க.....

"ஆமாம், எனக்கு உங்களை விட சத்ரி தான் முக்கியம்..... அவன் சொன்னா கல்யாணம் என்ன தற்கொலை கூட பண்ணிப்பேன்.....'' என கூற...

குண்டூசி விழுந்தாலும் கேட்கும் நிசப்தம் நிலவியது.....

பின் சத்ரியிடம் அருகில் போய்.....

"நிச்சயதார்த்தம் நீங்க பார்த்துக்கோங்க..... கல்யாண டேட் சொல்லுங்க வரேன்....'' என வந்தபடியே அப்படியே கிளம்பிச் சென்றுவிட்டாள்.....

அங்கே இருந்த யாருக்கும் அங்கே நடந்த பேச்சு வார்த்தைகளையும் நிறுத்தமுடியவில்லை... அவளையும் நிறுத்தமுடியவில்லை...

காபி, ஏன் ஒரு வாய் தண்ணீர் கூட குடிக்கவில்லை...

யாரும் தரவில்லை•••...

சாத்வி ஒவ்வொரு முறையும் பேச்சினாலும் செயலினாலும் சாட்டையாய் சுழன்றடிக்க... மகாவும் சங்கரும் நொந்தே போயினர்•••..

'எப்படி இந்த திருமணத்தை எந்த பிரச்சனையும் இல்லாமல் முடிக்கப் போகிறோம் என சங்கரின் மனதில் பயமே உருப்பெற்றது•••

சாத்வி பேசிய பேச்சுக்கள் சங்கருக்கு அப்படி ஒரு கோபத்தை தூண்டியது•••.. எங்களை மதிக்காமல் இருக்கும் உன்னை நல்ல இடத்தில் கொடுக்க நான் ஏன் இவ்வளவு கஷ்டபடனும்... போ•••.. உன் கல்யாணத்தை நீயே நடத்திக்க, உனக்கு எவனை பிடிச்சிருக்கோ நீயே பார்த்துக்கோ•••.. என ஆவேசமாய் கத்தும் வேகம் சங்கருக்கு•••..

ஆனாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை விட மனதில்லை•••.. ஊராரின் முன் தலை நிமிர்ந்து நிற்பது தான் முக்கியம்...•••., முதலில் தன் மனதிற்குள்ளாவது எழுந்து நிற்க வேண்டும்•••..

ஏற்கனவே சாத்வியின் மீதிருந்த கோபமும் ஆத்திரமும் அப்படியே வந்து அமர்ந்து கொள்ள…..

'உன் கல்யாணம் என் இஷ்டபடி தான் நடக்கும்…..'' என உறுதி பூண்டவராய்...

திருமணத்திற்கு சம்மதம் சொன்னதும் தான் தாமதம்….. சங்கர் எல்லா ஏற்பாடுகளையும் துரிதமாக்கினார்…..

ஏற்கனவே கோதண்டமிடம் விநாயகமும் , சங்கரும் பேசியிருக்க... 'சாத்வி சம்மதம் சொன்னதை 'அடுத்து…. மீண்டும் கோதண்டமிடம் நிச்சயம் பற்றி பேசினார் சங்கர்...

"கல்யாணத்திற்கு முந்தின நாள் நிச்சயம் வச்சுப்போம்…. அது தானே நம்ம வழக்கம்... ரமேஷ் அடுத்த மாதம் முதல் தேதியில் வரான்... அவனுக்கும் வசதிப்படற நாள் பார்த்து கல்யாணத்திற்கு தேதி குறிப்போம்…..'' என சொல்லிவிட....

அவள் திருமண வேலைகள் ஜெக ஜோதியாய் ஆரம்பித்தது…..

# அத்தியாயம் 7

**சா**த்வியின் திருமணத்திற்காக முன்னேற்பாடுகளை கோதண்டமிடம் பகிர்ந்து, பின் அதை குடும்பத்தினருடன் பகர்ந்து கொள்ள மீண்டும் ஹாலுக்கு வந்தார்.........

அங்கே அவர் பேசிய அனைத்தையும் சொல்ல..., அங்கிருந்த எல்லோரும் ஏக கடுப்பில் இருந்தனர்.....

கிருத்தி தான் ஆரம்பித்தாள்....

"இங்கே என்ன தான் நடக்குதும்மா.....எனக்கு புரியவே இல்லை..... நீங்க என்னன்னா... சாத்விக்கு ஆசையாய் கல்யாணம் பண்ண வந்திருக்கீங்கன்னு நினைச்சா..... சாத்வியும் சத்ரியும் உங்க ரெண்டு பேரையும் மட்டம் தட்டி பேசுறதும் இல்லாமல்... எடுத்தெறிஞ்சு வேற பேசுறாங்க.... இதில் பெத்தவங்க உங்க பேச்சை கேட்கமாட்டேன்.... 'சத்ரி சொன்னா தான் கேட்பேன்' ன்னு தம்பட்டம் அடிக்காத குறையாய் சொல்லிட்டு போறா..... பத்தாததுக்கு 'கல்யாணமே பிடிக்கலே, சத்ரிக்காக சரி செல்லிட்டு போறாள்...' அவளுக்கு அவசர அவசரமா கல்யாணம் செய்ய பார்க்குறாங்க அப்பா... ஏதோ ஒரு பெரிய விசயத்தை எங்க கிட்ட இருந்து மறைக்கிறீங்க..... அதுவும் முக்கியமாக வெங்கட்டுக்கும் எனக்கும் தெரியாமல்

ஏதோ மறைக்கிறீங்க... என்ன தான் நடந்தது... யாராவது சொல்லுங்களேன்..,….'' என குழப்பத்தில் எல்லோரையும் சகட்டு மேனிக்கு கேட்க...

ஏற்கனவே கடுப்பில் இருந்த மகா... "உங்கிட்ட என்னத்தை மறைச்சாங்க... நீ தெரிஞ்சிக்கலைன்னு சொல்லு... இத்தனை வருசமா இந்த குடும்பத்திற்குள்ள தானே இருக்க... இல்லை வீட்டில் இருக்கும் போது கண்ணு தெரியாமல் போய்டுமா...!'' என கோபமாய் நின்றிருந்தார் மகா...

"திமிரெடுத்து உன் இரண்டாவது பொண்ணு ஆட்டம் போட்டா….அதுக்கு எதுக்கு இவளை பேசற….. தையிரியம் இருந்தால் உன் இரண்டாவது பொண்ணுட்ட உன் வாயைக் காட்டு பார்க்கலாம்...'' என சங்கர் பதிலுக்கு பேச...

"சாத்வி திமிரெடுத்தவளா...? பேருக்கேத்த மாதிரி என் பிள்ளை சாந்தமா இருந்தா... நீங்க இரண்டு பேரும் சேர்ந்து ஆடின ஆட்டத்தில வாழ்க்கையை இழந்துட்டு நிற்கிறா ... பண்றதெல்லாம் நீங்க இரண்டு பேரும் பண்ணுவீங்க... தண்டனை மட்டும் அந்த புள்ளைக்கா... "என சங்கரையும் கிருத்தியையும் சுட்டிக்காட்டி கண்ணீர் குரலில் மகா கேட்க...

"என்னம்மா சொல்றீங்க... சாத்வி வாழ்க்கை என்னால்போச்சா...'' என அதிர்ச்சியாய் கேட்க...

"ஆமாண்டி உன்னால் தான் போச்சு...’’ என முறைத்து நிற்க...

மகா பேசயதில் 'ஆ வென வாய் பிளந்து நின்றிருந்த வெங்கட்டின் வாயிலேயே ஒன்று போட்டான் சத்ரி... "உன் மாமியாரை சைட் அடிச்சது போதும்... அண்ணி அழறாங்க பாரு...’’ என வெங்கட்டை அந்த நிலையிலேயும் கிண்டல் செய்ய.....

"அடங்கவே மாட்டடா நீ.....’’ என கோபத்துடன் கிருத்தியின் அருகில் செல்ல... இன்னும் மகா கிருத்திகாவை திட்டிக் கொண்டிருக்க...

இடையில் புகுந்தான் சத்ரி...

"யாராலையும் யார் வாழ்க்கையும் போகலை..... தயவு செஞ்சு எல்லாரும் வாயை மூடிட்டு... சாத்வி கல்யாணத்திற்கு ஆக வேண்டிய வேலையை பாருங்க... இல்லை இப்படியே வீட்டை விட்டு நடையை கட்டுங்க... இனி சாத்வி விசயத்தில் நான் தலையிடவும் மாட்டேன்..... நீங்களாச்சு உங்க பொண்ணாச்சு...’’ என மற்றவர்களின் கவனத்தை தன்புறம் திருப்பினான் சத்ரி...

.

அவன் பேச்சில் அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்த விநாயகமும் சிவகாமியும் "சத்ரி.....'' என ஒரு சேர ஏலம் போட...

"ஆமா... பேச வேண்டிய நேரத்தில் எதுவும் பேசாதீங்க... நான் என்ற உடனே எங்க இருந்து தான் சவுண்டு வருமோ...'' என அவர்களையும் திட்ட.....

"என்ன பேசலை நாங்க.... எப்போ பேசலை.....?'' என கேள்வி கேட்டார் சிவகாமி.....

"எத்தனை வருசம் கழிச்சு வீட்டுக்கு வந்திருக்கா சாத்வி... அவள். கிட்ட நாலு வார்த்தை பேச வேண்டாம்... வந்தவளுக்கு ஒரு வாய் டீ காபி கூட தரவில்லை..... இதில் பேச்சை பாரு... "என சிவகாமியை சாட.....

உண்மை தானே... என அங்கிருந்த அனைவரும் வாயை மூடிக்கொள்ள....

ஏதோ தங்களிடம் மறைக்கும் விசயம் வெங்கட்டின் மூளையை குடைய..... 'இது தான் சத்ரியின் வாயைக் கிளறும் தருணம்....' என அவனிடம் வம்பிழுத்தான் வெங்கட்...

அதற்கு தகுந்தாற் போல் விநாயகம்..... "சரிடா , செஞ்சது தப்பு மான்.... அதுக்காக 'வீட்டை விட்டு நடையை கட்டுங்க, சாத்வி கல்யாணத்தில் தலையிட மாட்டேன்' ன்னு சொல்லுவியா... "என கேட்க...

..

"ஏன் சாத்வி கல்யாணம் நீ சொன்னால் தான் நடக்குமா...நீ தலையிட்டால் தான் தடங்கல் வராமல் இருக்குமா...? இல்லைனா நடக்காதோ...'' என அமைதியாய் இருந்த வெங்கட் கேட்க.....

"அப்படி கேளுங்க மாப்பிள்ளை... எப்போ பாரு சாத்வியை இவன் பெத்தவன் மாதிரி ,எல்லாத்திலேயும் உரிமை எடுத்துக்கிறான்... "என. சங்கர் தன் மருமகனை ஏவி விட.....

அதற்கெல்லாம் அசைவானா நம் சத்ரி...

"ஓ..... என்னை விட உங்களுக்கு தான் உரிமை அதிகம்ன்னா... நீங்களே போய் பேச வேண்டியது தானே.... உங்க மகள் கிட்ட... 'சாத்வி கல்யாணத்தை எதுக்கு என் தலையில் கட்டினீங்க... சாத்வி கல்யாணம் உன் பொறுப்புன்னு எதுக்கு சொன்னீங்க... ஈசியா என் தலையில் கட்டிட்டீங்க...

அவளை சம்மதிக்க வைக்க நான் எவ்வளவு கஷ்டபஎட்டு இருப்பேன்.... உங்க எல்லாருக்கும் அவள் மேல் இருக்கிற உரமையை விட எனக்கு தான் அதிகம்... என்ன புரிஞ்சதா....'' என சத்ரி ஆவேசமாய் கேட்க.....

வெங்கட் சங்கர் இருவரும் முதல் நாள் ஹாஸ்டலில் விசாரத்த லட்சனத்தில் இறுக வாயை மூடிக் கொண்டனர்...

"அவ்வளவு உரிமை இருக்குன்னா.... நீயே சாத்வியை கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... "என கிருத்தி டைம்மிங்காய் கேட்டாள்...

ஏதோ சாத்விக்கு நல்லது செய்வதாய் நினைத்துக் கொண்டு...

'இவ வேற நேரம் காலம் தெரியாமல் ஏவி விடுறாளே..... சத்ரி சும்மாவே சாமி ஆடுவான்..... இவ சலங்கையை வேற கட்டி விடுறாளே...

'என கிருத்திகாவை சங்கர் வசைபாட.....

"ஆமாப்பா.... நீயே சாத்வியை பண்ணிக்கலாமே... "அதை பிடித்துக் கொண்ட சிவகாமியும் கேட்க...

"எனக்கும் இந்த எண்ணம் இருந்தது சங்கர்..... ஆனா நீ ஒத்துப்பியோ மாட்டியோன்னு தான் கேட்கலை..... இப்போ சொல்லு..... சத்ரிக்கு சாத்வியை தருவியா....." என ஆசை பொங்க விநாயகம் கேட்டார்.....

"இதெல்லாம் சரிப்படாது மச்சான்...." என சங்கர் தயங்க....

"ஏன்.... சரிபடாது...ஓ.... நல்லா பார்த்துப்பமா மாட்டோமான்னு சந்தேகமா.....! உன் மூத்த பொண்ணு இங்கே தானே இருக்கா.... அவகிட்டேயே கேட்டு பாரு சங்கர்... எம்மா.... மருமவளே நீ சொல்லும்மா... "என விநாயகம் மருமகளை சப்போர்ட்டிற்கு இழுக்க...

"மருமகளா என்னைக்கு மாமா நீங்களும் அத்தையும் என்னை நடத்திருக்கீங்க... இங்கே நான் மகளா இருக்கப் போய் தான் தைரியமா சத்ரிட்டயே நேரா கேட்டேன்….'' என கிருத்தி பேச…..

"அப்பறம் என்ன சங்கர்... கோதண்டம் கிட்ட நான் பேசிக்கிறேன்…. அந்த கல்யாணத்தை நிறுத்து….. குறித்த தேதியில் சத்ரியோட...'' என பேசிக் கொண்டிருக்கும் போதே...

"இல்லை மச்சான்…. வேண்டாம்…..சரி வராது…..'' என சங்கர் முகத்தை சுருக்கி நிற்க...

"அதான் ஏன் சங்கர்….'' என விநாயகம் குடைய…..

"இனி ஒரு முறை அசிங்கப்பட முடியாது மச்சான்….. "என அழுத்தமாய் விநாயகத்தை பார்க்க…..

அவர்களுக்கு நன்றாகவே புரிந்தது…. பின்…..

"கோதண்டம் ஊரிலேயே பெரிய ஆளுங்க…..ப…ப…பணக்காரவங்க...அங்கே தான் என் பொண்ணு வாழனும்ன்னு முடிவு பண்ணியாச்சு...'' என ஸ்தீரமாய் பேச….

அதற்கு மேல் யாரும் வற்புறுத்தவில்லை... இவையெல்லாம் கொபமாய் பார்த்திருந்த சத்ரி...

தன் அறைக்குள் நுழைந்து , ஜார்ஜ் ஏறிக் கொண்டிருந்த மொபைலை வேகமாய் எடுத்தான்….. அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்காத ஜார்ஜர் ஒரு புறமாய் பறந்தது...

காலர் லிஸ்ட்டில் இருந்த சாத்வியின் எண்ணுக்கு அழைக்க... முதல் ரிங்கிலேயே எடுத்துக்….. சாத்வி…..

எடுத்தவள்...'' எங்கே வரணும்…..'' என கேட்க...

"என்ன….!'' என்றான் குழப்பிப்போய்…..

"டோஸ் விடத் தானே கூப்பிட்ட... எப்படியும் போனில் திட்டமாட்ட... அப்போ நேரில் தானே வர சொல்லுவ…. அதுக்கு தானே கால் பண்ணின…..?'' என கேட்க...

இதழ்களில் சிரிப்பு தானாகவே வந்து அமர்ந்து கொண்டது...

அதே சிரிப்புடன்... போனை காதுக்கும் கழுத்துக்கும் இடையில் வைத்தபடி பைக் சாவியை ஒவ்வொரு இடமாய் தேடியபடி சாத்வியிடம் பேசிக் கொண்டிருந்தான்...

"ம்….. கரெக்டா கெஸ் பண்ணிட்ட... பரவாயில்லை….. மூளை கொஞ்சமே கொஞ்சம் வேலை செய்யுதோ...'' என கிண்டல் பேச…

"அது கொஞ்சம் இல்லடா கண்ணா…. நிறையவே வேலை செய்யுது... "என கல கலவென சிரித்தபடி பேச

அவளின் 'கண்ணா 'என்ற அழைப்பில் பைக் சாவியை தேடிக் கொண்டிருந்தவனின் கைகள் அப்படியே ஓர் இடத்தில்

நிலைத்தது... பின் தலை உலுக்கி... நார்மலான குரலை வரவழைத்து...

"ம்.... இதில் என்ன சிரிப்பு இருக்குதுன்னு இப்படி சிரிக்கிற....'' என அவனுமே சிரிப்புடன் கேட்க....

"இல்லை , என் மூளையில் என்ன ஓடுதுன்னு நீங்க அப்ப அப்ப கரெக்ட்டா கண்டுபிடிச்சுடுவீங்க... இப்போ நானும் உங்களை மாதிரி கெஸ் பண்ணிட்டேன்ல... அதான், ஆனந்த சிரிப்பு...'' என கூற....

"ம்....'' என இழுத்தவன் "பேங்க் போய்டியா....'' என கேட்டான்...

"ம்.... ஆன் தி வே...'' என சாத்வி கூற....

"ம் அப்படியே நேத்து மீட் பண்ணின ஹோட்டல் போ.... நான் ஜாயின்.... பண்ணிக்கிறேன்...'' என சத்ரி கூற....

அவன் எதற்காக வர சொல்கிறான் என தெரிந்த சாத்வி...

"ம் ஓகே...'' என ஹோட்டல் சென்றாள்..... அவள் வந்த பத்து நிமிடங்களின் பின் தான் வந்தான்....

வந்தவன் ...'' எவ்வளவு ஸ்பீடா வந்தாலும் ... லேட் ஆயிடுச்சு...'' என அவள் முன் அமர்ந்தபடியே....பேரரை அழைத்தான் சத்ரி....

"சத்ரி ,நான் அல்ரெடி சாப்பிட்டு தான் வந்தேன்...எனக்கு எதுவும் வேண்டாம்.....'' என மறுக்க....

அதை கண்டு கொள்ளாமல்..... "டூ கூல் காபி...'' என நேற்று அவள் அருந்திய காபியை ஆர்டர் செய்தான்...

"ஏய் எனக்கு வேண்டாம்ன்னு சொல்றேன்ல...'' என முறைக்க...

"நாம வந்து இருக்கிறது ஹோட்டல்..... பார்க் இல்லை..... ஞாபகம் இருக்கா..... "என இன்னும் பேச எத்தனிக்க.....

அதற்குள்...

அதற்குள்...

சாத்வி... "சும்மா பேசிட்டு இருக்கிறதுக்கு மட்டும் இங்கே எல்லாரும் வந்தா ஹோட்டலை இழுத்து மூட வேண்டியது தான்...'' என அப்படியே சத்ரியை போல் பேசிக்காட்ட...

வாய் விட்டு சிரத்தான் சத்ரி..."சாவி..... உனக்கு வாய் கூடிப் போச்சு...'' என சிரித்படியே அவள் தலையில் மெலிதாய் ஒரு கொட்டு வைக்க...

"கரெக்டா சொன்னனா இல்லையா...!'' என பதில் கேள்வி கேட்க...

"ம் கரெக்ட் தான்....'' என ஒத்துக் கொள்ளவும் செய்தான்.......

பின் சிரிப்பை நிறுத்தி கொஞ்சம் சீரியசான குரலில்…

"அம்மா அப்பாகிட்ட ஒழுங்கா பேசாமல் இப்படி தான் பேசுவாங்வளா…..! நேத்து சொன்னதற்கெல்லாம் தலையை தலையை ஆட்டிட்டு…. அங்கே பூலான் தேவி ரேன்ஜ்க்கு இப்படியா பேசுவ… உறுத்தலையா…..'' என குறைப்பட்டான் சத்ரி…..

"ம்ப்ச்….. நான் பேசினதில் எந்த தப்பும் இல்லை… சோ….. நோ உறுத்தல்…..'' என சாதாரணமாய் அதை தள்ள…

அவளை முறைத்துப் பார்த்து…

"சரி அதை விடு….. அப்போ… நான் சொன்னா தற்கொலை கூட பண்ணிப்பன்னு சொன்னது தப்பில்லையா…'' என சத்ரி கவலையை அப்பட்டமாய் காட்ட..

"அப்போ என்ன அப்போ… இப்போவும் சொல்வேன்….. நீ சொன்னா கண்டிப்பா…. கல்யாணமும் பண்ணிப்பேன்….. தற்கொலையும் பண்ணிப்பேன்…..'' என அவனை பார்த்தபடியே கூற…

அவளின் ஆழமான குரலில் திடுக்கிட்டு தான் போனான் சத்ரி….. பின் கோபத்துடன்..

"அறிவுன்னு ஒன்னு இருக்கே அது உனக்கு வேலையே செய்யாதா…?'' என கடுப்புடன் சத்ரி கேட்க…

"உன் விசயத்தில் கண்டிப்பா வேலையே செய்யாது...'' என நேரடியாகவே ஒத்துக் கொள்ள.....

கண்களை கூர்மையாகவே பதியவிட்டான் சத்ரி..... அவன் பார்வை வேறு ஏதோ கூறியது அவளிடம்..... 'என்றவென்று யோசிக்க கூட முடியவில்லை.... அவளுமே சற்று ஆழ்ந்த பார்வையுடனே அவனை பார்த்துக் கொண்டிருந்தாள்....

அதற்குள் காபி வந்திருக்க , இருவரும் குடித்துவிட்டு.....

அடுத்து அவர்களின் பார்வைகளே அவர்களுக்கு தெரியாமல் பேசியபடி இருக்க... அடுத்து என்ன பேச..... என 'டோஸ் விட வந்தவனும் மறந்தான்..... டோஸ் வாங்க வந்தவளும் மறந்தாள்.....'

பின் கை கடிகாரத்மை திருப்பி பார்த்து "இட்ஸ் கெட்டிங் லேட்.... சத்ரி.... பேங்க போகனும்.....'' என ஒருவழியாய் சாத்வி வாயைத் திறக்க...

'சரி' என்பது போல் தலையசைத்து..... இருவருமே கிளம்பினர்.....

இவர்கள் இங்கே பேசி முடித்திருக்க.....

அங்கே சங்கரை பிலு பிலுவென பிடித்துக் கொண்டாள் மகா....

"நீங்க சத்ரியையை வேண்டாம்ன்னு சொல்வதில் வேறு ஏதோ காரணம் இருக்கு.... சொல்லுங்க.....'' என மகா கேட்க.....

"அதான் ஏற்கனவே சொன்னேனே…..''என சங்கர் சமாளிக்க…..

"ஊர்காரங்களை காரணம் காட்டி சமாளிக்காதீங்க…'' மகா எகிற..

கடுப்பான சங்கர்…

"இப்போ என்ன…. காரணம் தானே கேட்டுக்க….. நான் இன்னும் பழைய விசயத்தை மறக்கவே இல்லை….. "என நிறுத்த..

மகாவிற்கு தலையே சுத்தியது… "கிருத்தி இங்கே இருக்கான்ற ஒரே காரணத்துக்காக தான் அமைதியா இருக்கேன்….'' என சங்கர் பேசிவிட…

"இது சரியில்லைங்க….. வெங்கட்டை ஈசியா ஏத்துக்கிட்ட நீங்க….. ஏன் சத்ரியை வெறுக்கனும்…..'' என குடைய..

"வெங்கட் சாப்ட்வேர் இன்ஜினியர்… கைநிறைய சம்பளம் வாங்குறான்….. பாரு எவ்ளோ பெரிய வீட்டைக் கட்டியிருக்கான்…..''என வீட்டினை அப்போதும் ரசனையாய் பார்த்த சங்கர்…..

"சத்ரிஎன்ன அப்படியா…'' என குறையை சொல்லமல் விட….

"அவனுக்கும் நிறைய சம்பளம் வரும்ங்க….'' என மகா சத்ரியை தாங்கி பேச…

"சத்ரி காலேஜ் கூட முடிக்கலை... ஏதோ பைக் ரிப்பேர் பார்த்து புழைக்குறான்….. நாளைக்கு இவன் குடும்பத்திற்கும் சேர்த்து வெங்கட் தான் சம்பாதிக்கனும் போல... பைக் ரிப்பேர் பார்த்து…. என்ன சம்பளம் வாங்க முடியும்….. அதேயிது சாத்வியை ரமேஷ்க்கு கொடுத்தா….. அமெரிக்கா வாழ்க்கை... அதோட இங்கே வெங்கட் வாங்குற சம்பளம் விட மூணு மடங்கு அதிகம்….. "என கண்களில் மிதந்த கனவுடன் கூற…..

‘‘பணம் முக்கியமில்லைங்க... குணம் தான் வேணும்….'' என பேசிய மனைவியை கை நீட்டி தடுத்தவர்…..

"ரமேஷூக்கு தான் சாத்வி... சத்ரிக்கு இல்லை... இதுக்கும் மேல இந்த விசயத்தை பத்தி எங்கிட்ட எதுவும் பேசாதே...'' என கண்டிப்புடன் விலகிச் சென்றுவிட்டார்...

அவர்களின் சண்டையை ஓரமாய் நன்று கவனித்த வெங்கட்டிற்கும் கிருத்திக்கும் மண்டையே வெடிப்பது போல் இருக்க….. 'ஏற்கனவே காரணம் கேட்டு அசிங்கப்பட்டதே போதும்... இதில் தலையிட வேண்டாம்….. நான் பார்த்துக்கிறேன்….' என வெங்கட் அவளை சரி கட்டியிருந்தான்...

சாத்வியின் வாழ்வு அவளை எங்கே கொண்டு சென்று விடப் போகிறதோ... என பயமே ஆட்கொள்ள..... சங்கர் சத்ரி இருவரை தவிர மற்ற அனைவஇருக்கும் ... பீதியுடன் சாத்வியை நினைத்தபடியே நகர்ந்தது..... சிறிது காலம்...

ரமேஷ் வரும் நாளன்று இரவே நிச்சயமும்... மறுநாள் திருமணமும் என முடிவு செய்யப்பட்டது...

குறுகிய காலத்திலேயே பத்திரிக்கை அடிப்பதிலிருந்து..... சாத்விக்கு சீர்வரிசை வரை திருச்சியிலேயே நடந்தது...

சாத்விக்கு தேவையான சீர்வரிசை எல்லாம் அவளின் இஷ்டம் இல்லாமலேயே வாங்கப்பட்டிருக்க... அவளுக்கான திருமண உடையிலிருந்து , ஏனைய சாதாரண உடைகள், நகைகள் மட்டும் வாங்கப்படாமல் இருக்க...

அதையெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு வழக்கம் போல் சத்ரியின் தலையில்.....

"மகா தான் ஜவுளி நகையாவது அவளுக்கு பிடிச்ச மாதிரி வாங்கட்டுமே...." என சங்கரை கேட்டிருக்க..... அவரும் சரியென்றுவிட்டார்..

புடவை நகை வாங்கும் நாளும் வந்தது...

ஆவளுடன் சாத்விக்கு கால் செய்தான்.....ஓர் இனிய மாலை நேரத்தில்..

"சொல்லு சத்ரி....."

"ஈஃவ்னிங் ஷாப்பிங் போகனும்.....'' என பெரிய ஜவுளி மற்றும் நகை இரண்டும் இருந்த ஒரு கடைக்கு வர சொன்னான்.....

"என்ன திடீர்ன்னு...'' என சாத்வி கேட்க...

"நீ வா...''என கடையின் பெயரை சொல்லி வைத்துவிட டான்.....

கிளம்பி வந்தாள்...அழகான ஜீன்ஸ் டிசர்ட்டில்..... மகிவும் சிறிய பெண்ணாய்..... தெரிந்தாள் சத்ரிக்கு.....

"என்ன அப்படி பார்க்குறீங்க.....''

"சேரியில செல்ல மெச்சூர்டா இருந்த..... பட் மாடர்ன் டிரெஸ்ஸில் ரொம்ப குட்டி பொண்ணா தெரியுற...'' என ரசனையாய் கூற...

‘‘ம்.....'' என போலியாய் முறைத்தாள் சாத்வி.....

"எதுக்கு திடீன்னு ஷாப்பிங்.....''

"கல்யாணம்னாலே ஷாப்பிங் தானே.....'' என முறவல் பூக்க.....

அப்படியே அவள் முகம் எதிர்பதமாய் சுருங்கியது.....

"உன் அப்பா தான் எல்லா பிளானும் போட்டார்..... புடவை நகை மட்டும் உன்னோட இஷ்டமாம்....'' என சத்ரி கிண்டலாய் பேச

அதை உணர்ந்த சாத்வியின் கண்களிலும் சற்றே நீர் கோர்க்க….

.

அவள் தோளில் லேசாய் தட்டி….. விடு….. இது ஒன்றை மட்டும் செஞ்சிடு….. என அவன் பேச

கலக்கமான அவள் முகம் சத்ரியையும் கலங்கடிக்க…..

"நான் இருக்கேன்…. பயப்படாதே…..'' என தைரியம் சொல்ல….

"இந்த கல்யாணம் சரிபட்டு வருமா…'' என நிறைய முறை மண்டையை குடைந்ததை அப்படியே கேட்க…

"இந்த கல்யாணம் தான் உனக்கு சரிபட்டு வரும்…. வேற ஒருத்தனால உன்னை மேய்க்க முடியாது…..'' என குரலில் அழுத்தத்தை கூட்ட….

"நான் என்ன ஆடா…. மாடா….. மேய்க்க…..'' என லகுவாய் கேட்டாள் அவனை கவனித்தபடியே…

“'' ஏன் ஆடு மாடு மட்டும் தான் மேய்ப்பாங்களா….. குதிரையெல்லாம் மேய்க்க மாட்டாங்களா…'' என அவள் கண்களை பார்த்துக் கூற…

"குதிரையா….. நானா… “

"ம் ஆமாம்…. குதிரை தான்….. வெள்ளை குதிரை…'' என கூற…

"கொஞ்சம் ஹைட்டா , ஒல்லியா இருந்தால் குதிரைன்னு சொல்வீங்களா…..'' என கோபப்படுவது போல் நடிக்க...

"அதுக்கு மட்டும் தான் குதிரையை கம்பேர் பண்ணுவாங்களா….. வேற இன்னொரு முக்கியமான விசயத்திற்கும் குதிரையை தான் கம்பேர் பண்ணுவாங்க…..'' என குரல் வேறு விதமாய் மாறி வெளி வர...

அதை பார்க்காமல்

"குதிரையை வேற எதுக்கு கம்பேர் பண்ணுவாங்க...'' என யோசனையாய் இருந்த படி வாய் விட்டு கேட்க...…

சட்டென சுதாரித்த சத்ரி….. "ஹேய்... வந்த வேலையை விட்டுட்டு , என்ன யோசனை….. வா வா…'' என அவள் கைபிடித்து பட்டுபுடவை செக்ஷன் சென்று ….

"உனக்கு பிடிச்சதா ஒரு ஏழு புடவை எடுத்துக்கோ...'' என அங்கே விட்டு அவன் அருகில் இருந்த சேரில் அமர...

"எதுக்கு ஏழு…..''

"இதெல்லாம் எனக்கு தெரியாது….. அத்தை சொன்னாங்க….. எடுத்துக்கோ…''

"நீயே எடு….'' என கொஞ்சமும் இஷ்டம் இல்லாமல் சத்ரியின் உதவியை நாட…

அது புரிந்த சத்ரியும்.....அவளுக்குரிய ஒவ்வொரு புடவையும் சத்ரியே தேர்வு செய்தான்...

கல்யாணத்திற்கான அனைத்தையும் அவனே தேர்வு செய்தான்..... பின் நகை கடைக்கு அழைத்துச் சென்றவன் இருபத்தைந்து பவுண் வரையில் அவனே வாங்கி கொடுத்தான்.....

அவன் கையில் இருந்த பார்சல்களை பார்த்து...

எல்லாமே இன்னைக்கே வாங்கனுமா... இவ்வளவையும் யாரு எடுத்திட்டு போக..... "என குறைப்பட... அதை பார்த்த கடை ஓனர்...

நிறைய வாங்கியதால் கடையில் வேலை செயும் இருவரை துணைக்கு அனுப்பி வைத்தனர்.....

சத்ரியும் காரில் வந்திருக்க..... "வீட்டில் எல்லாத்துகிட்டேயும் காட்டிட்டு , கொண்டு வரேன்....'' என சாத்வியின் அப்பார்ட்மெண்ட்வரை விட்டு விட்டு சென்றான்.....

# அத்தியாயம் 8

**செ**ல்ல இருந்தவனை "சத்ரி….'' என அழைத்தாள் சாத்வி…

காரை ஸ்டார்ட் செய்து மெதுவாக நகர்ந்தவன் பிரேக்கில் கால் வைத்து அழுத்தி நிறுத்தினான்...

காலையில் இருந்து கேள்வியே கேட்காமல் சொல்றது எல்லாத்தையும் செய்கிறாளேன்னு சந்தோசப் பட்டேன்….. இப்போ என்ன குண்டை தூக்கிப் போட பேகிறாளோ...என மனதில் எண்ணங்கள் ஓடினாலும் அதை மறைத்தபடி கார் கண்ணாடி வழியாக தலையை நீட்டி'' என்ன சாவி…..'' என கேட்க...

"கொஞ்சம் பேசனும், அப்பார்ட்மெண்ட் வரியா….'' என கேட்டாள்…. கேட்டவளின் பார்வையில் தீவிரம் சற்று அதிகமாகே இருக்க…..

அதை கண்டு கொண்ட சத்ரி….' போச்சு கேள்வி கேட்டே சாகடிக்கப் போறா...' என நினைத்தபடிகாரை விட்டு கிழே இறங்கினான் சத்ரி….'' என்ன சாவி….என்ன பேசனும்'' என கேட்டபடியே...

"உள்ளே வா….. "என

அப்பார்ட்மெண்டினுள் அழைக்க….

அழகான ஐந்து ப்ளோர்கள் கொண்ட அந்த அப்பார்ட்மெண்டை அன்னாந்து பார்த்த சத்ரி.....

‘‘என்னன்னு சொல்லு... சாத்வி.... "என நின்ற இடத்திலிருந்தே கேட்டான் சத்ரி.

"நான் உள்ளே தான் கூப்பிட்டேன்...’’ என சாத்வி முறைக்க.....

அவளின் முறைப்பை கண்டுகொண்டவனாய்...’’ புரிஞ்சுக்கோ சாத்வி.....உன் அப்பார்ட்மெண்டில் நீ மட்டும் தனியா தானே இருக்கே.... வேண்டாம்....’’ என அவளின் நிலையை கருத்தில் கொண்டு மறுத்தான்.....

சத்ரியின் மறுப்பை கண்டுகொள்ளாமல்.... "அதனால் என்ன..... நீ இப்போ வர்ர.....’’ என சாத்வி வற்புறுத்த.....

"வேண்டாம்னா வேண்டாம்... "என பிடவாதத்தை விடாமல் அவனும் நிற்க.....

"இப்போ நீ வர முடியுமா....?

முடியாதா.....? "என கோபத்துடன் சாத்வி கேட்க.....

"வர வர நீயும் அடங்க மாட்ற.....’’ என சன்னமாய் சிரித்து, காரில் இருந்து அவளின் கல்யாண பத்திரிக்கைகளை எடுத்துக் கொண்டு... சாத்வியின் பின்னால் நகர்ந்தபடி மூன்றாம் தளத்தில் இருந்த அவளின் அப்பார்ட்மெண்ட் சென்றான்.....

பெரிதாக பொருட்கள் ஏதும் இல்லாத ஒற்றை படுக்கை அறை கொண்ட அப்பார்ட்மெண்ட்…. 'இவள் ஒருத்திக்கு இது அதிகம் தான்…..' என எண்ணியபடி அந்த அறையை கண்களால் அளந்தான்….

மூங்கில் ஊஞ்சல் ஒன்று ஹாலின் ஓரமாய் ஜன்னலின் அருகில் தொங்கிக் கொண்டிருக்க….. மற்றொரு மூலையில் டேபிள் சேர்….. கதவை ஒட்டி ஒரு செப்பல் ஸ்டாண்ட்….. அவனைதையும் சேர்த்து மொத்தம் இரண்டு ஜோடிகள் தான்….. பால்கனியில் பார்வை பதிய... இரண்டு ரோஜா பூந்தோட்டிகள்….. சமையலறை…படக்கை அறை தவிர்த்து அவன் பார்வையில் விழுந்தவை அவ்வளவே...

'வேற எதுவுமே இல்லையே….' என சாத்வியை நோக்கி பார்வையை திருப்ப….. அவனையே முறைத்தவண்ணம் கைகளை கட்டிக்கொண்டு நின்றிருந்தாள்…..சாத்வி…..

அதை கண்டுகொள்ளாமல்….'' இவ்வளோ பெரிய ரூமில் நீ மட்டும் தனியா வா இருக்கே…..இருந்துப்பியா…..'' என அவளின் தனிமை பயம் அறிந்தவனாய் கேட்க….

"இரண்டு பேர்சேர்ந்து தங்கி இருந்தோம்….. இப்போ தான் டிராண்ஸ்பர் கிடைச்சு போனா…. இப்போ அவளை பத்தி பேச நான் உன்னை கூட்டிட்டு வரலை…..'' என கோபமாய் கூறினாள் சாத்வி….

அது புரிந்தவனாய்….'' சரி சரி…. கோபப்படாத …. சொல்லு….என்ன பேசனும்…..'' என தணிந்து போக…..

"கல்யாணம் அவசர அவசரமா , நடக்கிற மாதிரி தெரியுது….. ஏன் இவ்வளவு பாஸ்ட்….. மெதுவா பண்ணலாமே….''

"இதுவே ரொம்ப ரொம்ப ஸ்லோ சாவி... நான் எப்படியும் ஒரு மாதத்திற்குள்ள முடிக்கனும்னு நினைச்சேன்...ஆனா இரண்டு மாசம் ஓடிடுச்சு….. ''

"அதை தான் நானும் கேட்கிறேன்…. ஏன் இவ்வளவு வேகம்…..''

"உன் கழுத்தில் தாலி கட்டற நிமிஷம் ... அந்த செகண்டில் தெரியும்..

'ஏன் இவ்வளவு அவசர படுறேன்னு…..' உனக்கு கண்டிப்பா புரியும்….''

"நானா தான் எல்லாத்தையும் தெரிஞ்சுக்கணுமா….ஏன்… நீ…. உன் வாயால சொன்னால்…. எனக்கு காது கேட்காதா….'' என கடுப்புடன் கேட்க….

சத்ரியின் இதழ்கள் சிரிப்பில் விரிய….'' நான் சொல்ல மாட்டேன்…. நீ தான் தெரிஞ்சுக்கணும்….நீயா தான் தெரிஞ்சுக்கணும்…'' என சத்ரி சொல்ல….

"இந்த கல்யாணமே வேஸ்ட்னு நினைக்கிறேன்.... இதில் நீ சஸ்பெண்ஸ் வேற வைக்கிறியா...''

"என்னது வேஸ்டா.....! ஏய் இந்த நடக்கனும்னு நான். எவ்வளவு கஷ்டப்பட்டு உங்கப்பனை சமாளக்கிறேன்..... நீ இவ்வளவு ஈசியா சொல்லிட்டே....''

‘‘பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்க மாட்டியான்னு என்னை திட்னீங்க..... இப்போ நீங்க மட்டும் ரொம்ப மரியாதை கொடுக்குறதா நினைப்போ.....'' என தன் தந்தையை மரியாதை இல்லாமல் பேசுவதை சுட்டிக்காட்டி.....

"அம்மா சாவி..... உங்கப்பனை மரியாதை இல்லாமல் பேசினது தப்பு தான்மா..... மன்னச்சிக்க..... இனிமேல் உங்கப்பனை.....' யோவ் மாமா' ன்னு இல்லை 'டேய் மாமா'ன்னு மரியாதையா கூப்பிடுறேன்...'' என சிரிப்புடன் கூற.....

"என்னை கண்டிக்கனும்னா மட்டும் , வாயில் நல்ல நல்ல அட்வைஸ்ஸா வரும்.... இதே இது.... நான் அட்வைஸ் பண்ணினா..... நல்ல நல்ல வாழ்ந்த வருதுடா.....'' என சத்ரியின் தலையில் 'நங்' எனக் கொட்ட.....

அதை தூசி தட்டுவது போல் தட்டி..... "நீயெல்லாம் கொட்டி... எனக்கு வலிக்க போகுதா.....'' என அவளின்

மெல்லிய உடலை அழகாய் காட்டிய ஜீன்ஸ் டீசர்ட்டிற்கு நன்றி சொல்லியபடி...

சத்ரியின் கண்கள் அவளை அக்கு வேறு ஆணிவேறாக ஆராய்ந்து கொண்டிருந்தது...

வெகு நேரமாய் சத்ரின் கண்கள் அவளிடம் இருக்க.... சுதாரித்தபடி சாத்வியின் கண்களை சந்திக்க..... அவள் கண்கள் பள பல வென ஜொலித்தபடி சுவற்றை வெறித்துக் கொண்டிருந்தது....

ஒரு பெண்ணின் கண்கள் மகிழ்ச்சியான தருணத்திலும் ஜொலிக்கும், அழுகையை அடக்கும் போதும் என இரு நேரங்களிலும் ஜொலிக்கும்.....

இப்போது சாத்வி இரண்டாம் நிலையில் இருப்பதை தெளிவாக உணர்ந்து கொண்டான்...

அவளையே பார்த்த சத்ரி... அவள் கவனைத்தை தன்னை நோக்கி திருப்பினான்...

"நீ எதுக்கோ தயங்குற..... என்னன்னு சொல்லு...'' என அவளை தூண்டிவிட

எதற்கும் அசையாமல் அப்படி சுவற்றை வெறித்த வண்ணம் இருந்தாள்.....

ஆனால் 'நான் உன் பேச்சை கேட்கிறேன்' என அவள் விழிகள் அங்கும் இங்கும் உருண்டு காட்டிக் கொடுத்தது.

அவள் விழிகளில் தன் பார்வையை வைத்து..."எதுவும் பிரச்சனையா…..?’’ என கேட்டான்….

விழிகளை சுவற்றில் பதித்தபடியே "நீ சொன்னன்ற ஒரே காரணத்திற்காக தான் கல்யாணத்திற்கே சரின்னு சொன்னேன்…. ஆனா….’’

"ஆனா….’’

"அப்பாவோட பணத்தில் ஜவுளி , நகை எல்லாம்….. வாங்கி அப்படி கல்யாணம் பண்ணணுமா…..’’ என தயக்கமாக சாத்வி கேட்க….

'ஓ…. இது தான் பிரச்சனையா…..’ என தனக்குள் சிரித்துக் கொண்டு... "பெத்தா மட்டும் போதுமா…. கடமையை செய்ய வேண்டாமா….?’’ என நடப்பை எடுத்துக் கூற…

"ம்….. அது சரி தான்….. ஆனால் அது பொதுவான பேரண்ட்ஸ்க்கு……

தன்னுடைய குழந்தைகளோட பொறுப்பை சுமையா நினைக்காமல் , அவங்களோட எதிர்கால நலனுக்காக செய்யிற பேரண்ட்ஸ்க்கு தான் பொருந்தும்….. இவருக்கு கண்டிப்பா பொருந்தாது... அப்படிப் பார்த்தா இங்கே கடமைக்கு வேலையே இல்லையே….. "என விரக்தியாய் சிரிக்க…..

அவளின் விரக்தி மனதை பிசைய... அவள் சொல்வதும் உண்மை தானே….. என்ற எண்ணமே மேல் எழ….. "அது தான்

ஏற்கனவே சொன்னேனே….. கல்யாணம் வேலையில் இந்த ஒன்னு தான் பெண்டிங்… வேற யாரையும் உன்கூட அனுப்ப எனக்கு இஷ்டம் இல்லை….. அது தான் நானே உனக்க ஹெல்ப் பண்ண வந்தேன்…..

கல்யாணம் முடியும் வரை மட்டும் பொறுத்துக்கோ….. அடுக்கு பிறகு உங்கப்பாகிட்ட ஒரு பைசா கூட வாங்குற நிலையை உனக்கு வரவிட மாட்டேன்….. சரியா….'' என சத்ரி ஆதரவாய் பேச….

சத்ரி பேசியதை நினைத்தபடியே….. அவனை சாத்வி …குறு குறுவென பார்க்க…..

அவள் பார்வையில் புரியாமல்… "என்ன இப்படி பார்க்க…'' என நேரடியாக கேட்டு விட்டான் சத்ரி…..

அவனின் கேள்வியில் சிரித்தபடியே… "இல்லை ….. 'நீ தப்பான வழிக்கு போய்டுவியோன்னு பயந்து தான் …. அம்மாவும் அப்பாவும் உன்னை கண்காணிச்சுகிட்டே இருக்காங்க….. வீணா எந்த பிரச்சனையிலும் சிக்கி உன் அப்பாட்ட மாட்டிக்காத… நீ படிக்கனும்… நல்ல வேலைக்கு போகனும்… இனி நீ தான் அம்மா அப்பாவை பார்த்துக்கணும்…. 'அப்படி இப்படின்னு இன்னும் நிறைய அட்வைஸ் பண்ணி…. உன் மாமாவுக்கு தான் சப்போர்ட் பண்ணுவ….. இப்போ…நீ

பேசற விதம் அப்படியே ஆப்போசிட்டா இருக்கே... சத்ரி இது நீ தானா.....?'' என சந்தேகமாய் சிரிப்பை நிறுத்தாமல் கேட்க.....

"நீ சொல்றதும் சரி தான்..... உன் அப்பா அம்மா மேல் மரியாதை இருந்தது... இல்லைன்னு சொல்ல மாட்டேன்.... எப்போ உன்னை இங்கே விட்டுட்டு பொறுப்பு இல்லாமல் இருந்தாங்களோ...... அன்னைக்கே இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் போச்சு..... நானே வெறுத்துட்டேன்....''என சாத்வியை பற்றிய கவலையை கண்களில் அப்பட்டமாய் காட்டிப் பேச.....

அதை உணர்ந்து கொண்ட சாத்வி..."என்னாலையா....? எனக்காகவா.... வெறுத்தீங்க.....'' என ஆர்வமாய் கேட்க.....

"எஸ் உன்னால தான்.... "என மறுக்காமல் அவனும் ஒத்துக் கொண்டான்....

சத்ரியின் வார்த்தையில் மனம் பூவாய் மலர... அதை மறைத்தபடியே "அப்பாவை வெறுத்திட்டீங்க.....ஆனால் அவர் பார்த்த வரண் மேல் வெறுப்பு வராமல் எப்படி நம்பிக்கை வந்தது... எனக்கு டவுட்டா இருக்கு...'' என மீண்டும் சந்தேகமாய் பார்க்க...

"உன் அப்பா மேலே இப்போவும் எனக்கு நம்பிக்கை இல்லை... உன்னை கல்யாணம் பண்ணிக்க போற மாப்பிள்ளை மேல் உள்ள நம்பிக்கையில் தான் இந்த கல்யாணத்திற்கு

சம்மதிச்சேன்…. மத்தபடி வேற யார் மேலையும் நம்பிக்கை வைக்கலை….'' என மனதில் உள்ளதை அப்படியே பிரதிபலித்தான்…..சத்ரி….

அவன் பேச்சில் இன்னமும் சந்தேகம் கூட…"நீ அவ்வளவு சீக்கிரம் யாரையும் நம்ப மாட்டீயே…. அதையும் மீறி…… எனக்கே ……. பேசற அளவுக்கு நம்பிக்கை இருக்குன்னா….. அப்போ அவனை உனக்கு நல்லா தெரியுமா….'' என சாத்வி மனதில் உதித்ததை கேட்க….

"எவனை….'' என சத்ரியின் உதடுகள் ஒரு பக்கமாய் வளைய….

கோபமாய் முறைத்த சாத்வி….'' அதாண்டா… ரமேஷை…..'' என சாத்வி கேட்க….

மிகப்பெரிய தடுமாற்றம் தான் அவன் முகத்தில்….சட்டென அதை சாத்வியிடமிருந்து உடனடியாக மறைத்து

"ஓ… மாப்பிள்ளையை கேட்குறியா…. ம் நல்லா தெரியுமே….. அதனால் தானே உடனே சரின்னு சொன்னேன்…'' என எதையோ சொல்லி சமாளித்தான்…

"ஓ…. தெரியுமா…..'' என்றவள் அடுத்து எதுவுமே பேசவில்லை….. அப்படியே அமைதியாய் இருக்க…..அவளின் நிலை உணர்ந்து சத்ரி தான் பேச்சை வேறு புறம் திருப்பினான்…..

"ஷாப்பிங்னாலே எல்லா பொண்ணுங்களுக்கும் வாய் காது வரைக்கும் போகுமே.....நீ ஏன்... இன்வால்வ் ஆகவே மாட்ற...'' என சத்ரி கேட்க..... அவனின் எண்ணம் புரிந்த சாத்வியும் அவனிற்கு பதில் கூற ஆரம்பித்தாள்.....

"ப்ச்.....பிடிச்ச கல்யாணமா இருந்தா தான் அதிலெல்லாம் ஆர்வம் இருக்கும்..... "என இகழ்ச்சியாய் கூற....

"ஏன் இஷ்டம் இல்லையா.....'' என கண்களில் மின்னலடிக்க கேட்டான் சத்ரி...

"இல்லை.....'' என கண்களில் வலியை காட்டியபடி கூறினாள் சாத்வி....

"அப்போ உங்கிட்ட கல்யாணம் பற்றி பேசும் போதே பிடிக்கலைன்னு சொல்ல வேண்டியது தானே..... போட்டோ பாத்ததும் 'சரி' ன்னு சொல்லிட்டு ....இப்போ பிடிக்கலைன்னு சொன்னா... என்ன அர்த்தம்....'' என சாத்வியின் வாயை கிளர.....

''ம்.... உன் டார்ச்சர் தாங்க முடியாமல் தான் சரின்னு சொன்னேன்... அதை விட நீ என் விசயத்தில் எடுக்கும் முடிவு எப்போவுமே சரியாய் தான் இருக்கும்னு நம்பினேன்....அதான்.....'' என இழுத்து.... பின்....

"நீ தானே இந்த கல்யாணம் நடந்தே ஆகனும்னு பிடிவாதம் பண்ணின... இப்போ வந்து பிடிச்சிருக்கா .... பிடிக்கலையான்னு

குழப்பி விடுற…..'' என சத்ரின் ஆர்வம் நிறைந்த விழிகளை குழப்பமாய் பார்த்துக் கேட்டாள் சாத்வி…..

தலையை உலுக்கி….. "ஆமாம் ஆமாம் நடந்தே ஆகனும்…..'' என தனக்கும் சேர்த்து கூறிக் கொண்டு….. இதற்கு மேல் இவளை யோசிக்கவே விடக் கூடாது….. என….. "ரொம்ப யோசிக்காத…. உன் கல்யாணம் என்னோட பொறுப்பு….. நீ கண்டதை போட்டு யோசிச்சு… நீயும் குழம்பி…. இப்போ என்னையும் குழப்பி விட்டுட்ட பாரு…'' என சாதாரணமாய் சத்ரி பேச்சை திசை திருப்பி…. தன் திருட.டு விழிகளை அவளிடமிருந்து மறைத்தான்…..

சத்ரியின் குழப்பம் சுமந்த விழிகளை பார்த்தவரே… "எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம் சத்ரி…. பிடிக்கலை…''என ஆழ்ந்த குரலில் கேட்க…..

சட்டென அவளை திரும்பி பார்க்க….. அவள் குரலுக்கு இணையாக கண்களும் கலங்கி இருந்தது…

"ஹேய் சாவி… பயப்படாத….. நான் இருக்கேன்ல…நான் இருக்கும் போது… நீ அழவும் கூடாது…. பயப்படவும் கூடாது….. எல்லாத்தையும் என்கிட்ட விட்டுடு….. "என தரையில் அமர்ந்திருந்த அவளின் அருகில் சென்று அமர்ந்து ஆறுதலாய் பேச…

சத்ரியின் ஒவ்வொரு வார்த்தைக்கும் கலங்கிய கண்கள் தாமாகவே உடைப்பெடுக்க...‘‘அவன் மடியில் சரிந்து அப்படியே குப்புற படுத்துக் கொண்டாள்…. நீர் நிறைந்த கண்களுடன்….

அவளின் செயலை எதிர் பாராதவன்….. அவள் அழுவதையும் உணர்ந்து கொண்டு…..’’ சாவி…..அழறதுக்கு காரணமே இல்லாதப்போ…..எதுக்கு அழுகையை தேடுற….. என் மேல் நம்பிக்கை இருக்குன்னு நீ தான் சொன்ன …அப்பறம் எதுக்கு பயம்….எதுக்கு அழுகை... "என அவளை கிட்டதட்ட திட்டினான்…..

சத்ரின் சமாதானம் எதுவும் எடுபடாமலே போக….. அடக்கி வச்சு என்ன ஆகப்போகுது... அழட்டும் என சாத்வியை அழ விட்டான்….

அப்படியாவது அவள் துன்பம் குறையாதா…..என….

சிறிது நேரம் தலையை வருடிக் கொடுத்தான்…. சுருள் சுருளான கேசத்தினுள் தன் கைகள் கோர்த்து வெகு நேரமாய் ,வருடி விட…. வெகுஏரம் கழித்தே அவளது அழுகை சற்றே மட்டுப்பட….. எழுந்து அவன் அருகில் அமர்ந்தாள்…..

'கண்கள் அழுகையினால் சிவந்து கிடந்தது சாத்விக்கு….. அவள் கண்களை தன் கைகளாலேயே அழுத்தமாய் துடைத்து விட்டான் சத்ரி…..

"எதுக்கு இவ்வளவு பயம்… எவ்வளவு தைரியமானவள்னு நான் நினைச்சிட்டு இருக்கேன்…. நீ இவ்வளவு அழு மூச்சியா இருக்கே…..'' என கிண்டல் பேச….

அதற்கு பதில் கூறாமல் "இந்த கல்யாணம் நடந்தா நான் சந்தோஷமா இருப்பேனா சத்ரி… நான் இழந்த அத்தனை சந்தோஷமும் திரும்ப கிடைக்குமா…'' என கண்களில் ஆவலை தேக்கி கேட்டாள் சாத்வி….

அவளின் குரல் ஏதோ ஒன்றை தூண்ட…..

"நிச்சமா ….. நீ இழந்த ஒன்னொன்னும் திரும்ப கிடைக்கும்….. சாத்வி…..கண்டிப்பா சந்தோஷமா இருக்கத் தான் போற…''என சத்தியம் செய்யாத குறையாய் கேட்க…..

"சத்தியமா….'' என சாத்வி வாய் விட்டே கேட்க….. சிறு வயது சாத்வி தான் அவனின் கண் முன்னால் தெரிந்தாள்…..

"என் மேல் சத்தியமா…..'' என சத்ரி அவன் தலையில் கை வைக்க போக….. அதை தடுத்து அவன் கைகளை தன் தலையில் வைக்க…..

அவனின் உள்ளங்கை அப்படியே அவள் தலை மேல் பரவி அழுத்தியது..

"உன் மேல் சத்தியமா…..இந்த கல்யாணம் உனக்கு சந்தோஷத்தை மட்டும் தான் கொடுக்கும்…'' என அவளுக்கு எந்த வார்த்தைகளை சொன்னால் புரியுமோ…. சரியாக அந்த

வார்த்தைகளை …. அந்த செய்கையை உணர்த்தினான்….. ஒரு சத்தியதத்தால்…

ஆனால் அதையும் தகர்த்தெரிந்தாள் சாத்வி….. காதலில் உருகிக் கறைந்த பழைய சாத்வியாய் உயிர்தெழ….. கர்வம் கொண்ட சாத்வி சத்ரியிடம் மடிந்து தான் போனாள்….

"கல்யாணம்…. அதில் வர்ர சந்தோஷம் எல்லாம் உன்னை விட பெரிசா தெரியலை எனக்கு…'' என அழுத்தமாய் கூறி பின் நிதானமாய் அவன் விழிகளுக்குள் ஊடுருவி… "நீயே என்னை கல்யாணம் பண்ணிக்கிறியா….. நீ தான் என்னை சந்தோஷமா பார்த்துப்ப…'' என வெகு நாட்களாய்… இல்லையில்லை வெகு வருடங்களாகவே மனதினுள் பதிந்து மறைந்து போன ஒன்றை இன்று தோண்டியெடுக்க…,..

அதிர்ந்து போன சத்ரி அவள் தலையில் இருந்து கைகளை உருவிக் கொண்டான்…..

"சொல்லு சத்ரி…. பதில் சொல்லு…..'' என கேட்க…..

கரண்டில் கை வைத்தார் போன்று உணர்வில்லாது நின்றவன்…. அவள் முன் தன் தடுமாற்றத்தை காட்டாது… "என்னை நம்புறியா….. இல்லையா….'' என சத்ரி உளர…..

"திரும்ப திரும்ப ஒரே வார்த்தையை கேட்டுட்டே இருக்கணுமா… நீ எத்தனை தடவை கேட்டாலும் பதில் இது ஒன்னு தான்….. உன் மேல் நம்பிக்கை இருக்க போய் தான்

ரமேஷுக்கு சரின்னு சொன்னேன்…. ஆனால் ரமேஷை பிடிக்கலை… உன்னை தான் பிடிச்சிருக்கு…..’’ என கர்வம் கொண்ட சாத்வியாய் போட்டு உடைக்க…..

"என் மேல் நம்பிக்கை இருக்கு இல்லையா….. அந்த நம்பிக்கையை அப்படியே இழுத்து பிடி…. உன் கல்யாணம் முடியிற வரை…… கல்யாணம் பிடிக்கலை, ரமேஷை பிடிக்கலைன்னு சும்மா உளரிட்டே இருக்காமல் கல்யாணப் பெண்ணாய் லட்சனமாய்….. இரு… இன்னும் இரண்டு வாரம் தான் இருக்கு கல்யாணத்திற்கு… கல்யாண பத்திரிக்கை வந்துடுச்சு….. உன் அப்பா அடிச்ச பத்திரிக்கை இது….. இதில் ப்ரண்ட்ஸ் கார்டு இருக்கு…. சீக்கிரம் கொடுக்க வேண்டியவங்களுக்கு கொடுத்திடு…’’ என அவள் கைகளில் திணிக்க…..

கைகள் பத்திரிக்கையை சுமந்த வண்ணம்… "பிடிக்கலைன்னு சொல்லியும் இந்த கல்யாணம் நடந்தே ஆகனும்னு நிக்கிற….. அப்பா மாதிரி தான் நீயும்… உனக்கும் அவருக்கும் ஒரு வித்யாசமும் இல்லை….. இல்லை எல்லா ஆண்களும் இப்படிதானா….’’ என விரக்தியாய் கூறி……

"இரண்டு பேருமே என்னை உயிரோட கொல்றீங்க…’’ என சொல்லி முடிக்கும் முன் …

"சாத்வி…..'' என அவளை தன் புறமாய் முரட்டு தனமாய் திருப்பி... அவளின் இரு கன்னங்களிலும் கை கொடுத்து அழுத்தியவன... "என்கிட்ட பேசின மாதிரி….. வேற யார்கிட்டையும் பேசிடாதே...''

"இதை கடந்து தான் ஆகனும் வேற வழியில்லை….. நான் கிளம்புறேன்... கல்யாணத்தை நிறுத்த எதாவது பிளான் போட்ட…..அவ்வளவு தான்….. என்னை பத்தி உனக்கே தெரியும் தானே …. இல்லை ஞாபகப்படுத்தனுமா...'' என கர்ஜிக்க….. பழைய சத்ரியின் ஆட்டங்கள் கண் முன் நர்த்தனம் ஆட....

'வேண்டாம்' என்பது போல் தலை மட்டுமே அசைத்தாள்…..

"இங்கே இருக்குற வரை மட்டும் தான் உன்னோட உணர்வுகளுக்கு மரியாதை…… அங்கே கிராமத்திற்கு வந்த அப்பறம் இருந்து….. மணமேடை வர்ர வரைக்கும் சிரிச்ச முகமா தான் இருக்கனும்... யாருக்காவது சந்தேகம் வந்தது...'' என பிடித்திருந்த அவள் கன்னங்களை இன்னமுமே அழுத்த... வலிஉயிர் வரை சென்று வலித்தது சாத்விக்கு…..அது அவனின் உடும்புப் பிடியினாலா…..? இல்லை….. தேளாய் கொட்டும் வார்த்தையினாலா...?'' என இனம் காண முடியாமல்

"அவளை விட்டு பிரிந்து...'' நான் வரேன்….. கல்யாணத்திற்கு ரெடியா இரு…..'' என சத்ரி சென்றுவிட்டான்…

சிறு வயதிலிருந்து தனக்கு தாயாய் தந்தையாய் இருந்த ஒருவனை மனம் தோழன் என்ற நிலையில் இருந்து காதலனாய் அடுத்த கட்டத்திற்கு நகர... கழுகாய் மூக்கு வேர்த்துவிட்டட சத்ரி அதை சரியாய் இனம் கண்டு கொண்டு காதல் இல்லை ஈர்ப்பு தான் என மனதில் ஆணியடித்து சென்றுவிட்டான்.....

சத்ரி என்ன செய்தாலும் தன் நலனுக்கு தான் என அவன் பின் செல்ல ஆரம்பித்தாள்..... சத்ரியுடன் கழிக்கும் ... ஒவ்வொரு நிமிடமும் ரமேஷூடன் மனம் ஒப்பிட ஆரம்பிக்க..... அந்த ஆரம்பமே அவ்வளவு உவப்பானதாய் இருந்தது...

"சத்ரி ,உன்னை குதிரைன்னு சொன்னது சரி தான்..... கண்ட மாதரி போகுது புத்தி... "என தன் மனதிற்கு கடிவாளமிட்டாள்... சத்ரியின் மீது கவனம் வைத்து அவன் செலக்ட் செய்து கொண்டிருந்த உடைகளின் மீது கவனத்தை திருப்பினாள்...

பள்ளிப் பருவ இறுதியில்...... சத்ரியின் எண்ணங்கள் தான் அவளுக்கு சுவாசம்...அதை அவள் மனம் உணராத போதும் சாத்வி உயிர் வாழ்வதற்கான சுவாசம் சத்ரி தான்..... சத்ரி இருக்கும் இடத்தில் தான் சாத்வி இருப்பாள்.... தாயுடன் கூட அவ்வளவு ஆழமாக பழகி இராதவள்....சத்ரியுடன் ஆழுத்தமாய் ஒன்றிக் கொண்டாள்..... அவன் காட்டிய பாசம் அப்படிபட்டது......

'நான் சுவாசிக்கிறேன், சுவாசித்துக்கொண்டே இருக்கிறேன்….' என ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டா இருக்கிறார்கள்….. சுவாசம் என்றைக்கு தடைப்படுகிறதோ அன்று தான் சுவாசத்தின் அருமை தெரியுமாம்…

அதே போல் தான் உணர்ந்தாள்… சாத்வி….. சத்ரி தன் உணர்வுகளை அன்று தான் புரிந்து கொள்ள வில்லை….. இன்றாவது புரிந்து கொள்வான் என இருந்த சிறு நம்பிக்கையும் அறுந்து விழ… இனி சத்ரி தனக்கில்லை எனத் தெரிந்த பின் மூச்சடைப்பது போல் உணர்ந்தாள்….

காலையில் ஷாப்பிங் என்றதும் அதை சாதாரணமாய் எடுத்துக் கொண்டு துள்ளிக் குதிக்காத குறையாய் சத்ரியுடன் நேரத்தை கழிக்க சென்றவளுக்கு திருமணத்திற்கான நகைகளும் உடைகளும் வாங்குவதற்கு தான் அழைத்திருக்கின்றான் என தெரிந்த நொடியில் இருந்து இதோ இந்த நொடி வரை தீயில் இட்ட புழுவாய் தகித்துக் கொண்டிருந்தாள்….

காலையில் சத்ரியுடன் வெளியில் சாப்பிடலாம் என மகிழ்ச்சியாய் கிளம்பியவளுக்கு சத்ரியின் நடவடிக்கையில் ஒரு வாய் தண்ணீர். கூட இறங்க மறுத்தது…..

ஓரே நாளில் ஷாப்பிங் முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உடைகளும் நகைகளும்….

ஒரே இடத்தில் வாங்கப்பட்டு இருந்ததாலும் இருவருக்கும் வேறு எங்கும் செல்லும் நேரமும் அமையவில்லை.... இடமும் அமையவில்லை.....

காலையில் இருந்து சாப்பிடாதது... சத்ரியின் பேச்சு என அனைத்தும் அவளுக்கு கிறக்கத்தை கொடுக்க... தட்டு தடுமாறி தன் பெட்டில் சென்று ஏனோ தானோ வென படுத்துவிட்டாள்..... உடை கூட மாற்றவில்லை..... கிறக்கத்தை போக்க தண்ணீர் கூட அருந்தவில்லை....

படுத்த சில நொடிகளில் அழ்ந்த மயக்கத்திறக்கு சென்றுவிட்டாள்... வெகு நேரமோ...சில நேரமோ.....

ஆழ்ந்த உறக்கத்தில் சத்ரியின் குரல் கேட்டது...

"சாத்வி, இங்கே பாரு..... இங்கே பாரு..."என சாத்வியின் கன்னத்தில் இருமுறை தட்டி, ஏனோ தானோ வென படுத்திருந்தவளின் டிசர்ட் காட்டிய சிறிய வெண்ணிற இடையை பெரிதாக்கி அதில் அழுத்தமாய் மிக மக அழுத்தமாய் பதிந்தன சத்ரியின் கைகள் , இடது கையை அப்படியே அவள் இடையில் இருந்து காதுகளுக்கு நகர்த்தி...அதன் பின் ஒரு கையால் அவளின் பின் கழுத்தில் கை கொடுத்து அவளை தன்புறமாய் திருப்பி கிட்டதட் ட உட்கார செய்தான்.....

"சாவி....'' என மனதினை கிழிக்கும் குரல் கேட்டது சாத்விக்கு... கண்களை திற மூளை உத்தரவிட உடல் அதற்கு ஒத்துக்காமல் போக... "ம்'' என்ற சின்ன முனகல் மட்டுமே வர...

"எதுக்கு சாவி... இவ்வளவு கஷ்ட படற... உன் கழுத்தில் தாலி கட்டி என் உயர் போகிற வரைக்கும் உன்கூட திகட்ட திகட்ட வாழப் போறவன் நான் தான் சாவி... வேற எவனையும் உன் கிட்ட கூட வர விட மாட்டேன்டி...வரவிட மாட்டேன்...''என குரல் ஆவேசமாய் மாறியது...அதே ஆவேசம் அவன் கைகளிலும் தெரிய...

அவளின் பின் தலையில் இன்னும் அழுத்தத்தைக் கூட்டி தன் அருகில் இழுத்து அவள் இதழ்களை ஒரு முறை ஆழமாய் தனக்குள் புதைத்துக் கொண்டான்...

கைகள் இரண்டுமே அவள் கழுத்தின் பின்புறம் இருக்க... அவன் இதழ்கள் அவள் இதழ்களுக்குள் எதையோ தேடி தேடி தோற்று போய் கொண்டிருந்தது......

அவனின் அழுத்தம் தாளாமல் அவள் பின்புறமாய் சரிந்து கொண்டே செல்ல..... மீண்டும் அழுத்தமாய் புதைந்து விலகியது அவனின் இதழ்கள்.....

சிறது நேரத்தில் கட்டிலிலேயே கிடத்தப்பட்டு அடுத்த சில நிமிடங்களில் மீண்டும் அதே நிலையில் அவள் அமர வைக்கப்பட்டு..... இந்த முறையும் அவள் இதழ்களில் ஏதோ

புகுத்தபட்டது... ஆனால் அது சத்ரியின் உதடுகள் அல்ல•••அவளுக்கு பிடித்த பாதாம் பால்...' என சரியாய் கண்டு கொண்டு அதை உள் வாங்கியது•....

அடுத்தாதாக என்ன நடந்தது என தெரியாமல் ஆழ்ந்த உறக்கத்துக்கு சென்றவள்... சிறஇது நேரத்திலேயே அடித்து பிடித்து எழ•.... அருகில் சத்ரி இல்லை•... சாத்வியின் உடல் அவனை உணர, மனம் உணரவே இல்லை•.... சாத்வியின் கைகள் அவள் இடை உதடுகள் பின் கழுத்து என சத்ரியின் கைகள் அலைபாய்ந்த இடத்திற்கெல்லாம் நகர்ந்தது...

'பாதாம் போட்ட பால் கூட கொடுத்தானே•....'' அருகில் தம்ளரை தேட... எதுவுமே இல்லை•... வேகமாய் சமையலறை செல்ல•...

உடல் ஒத்துழைக்காமல் சற்று தள்ளாடி சற்றே நிதானத்திற்கு வந்து பின் செல்ல•...

சமையலறையில் எந்த ஒரு ஆதாரமும் இன்றி••• தரையிலேயே அமர்ந்தவள் இரு கைகளாலும் தலையை தாங்கிப் பிடித்துக் கொண்டு் பெரும் குழப்பத்தில் இருந்தவள்•...'' அப்போது •.... அப்போது எல்லாமே கனவா...'' என வாய்விட்டு கேட்க•.... மனம். ஊமையாய் அழுதது•...

# அத்தியாயம் 9

**த**ரையில் சுவரோடு சுவராக அமர்ந்திருந்தவளுக்கு... அழுத்தமாய் மீண்டும் மீண்டும் தன் இதழ்களுக்குள் புதைந்து மீண்ட சத்ரியின் இதழ்கள், தன் உடையை விலக்கி, இடையில் வெகுநேரமாய் கவிதை படைத்த சத்ரின் விரல்கள்…. தன் கழுத்தின் பின்புறம் முரட்டுத்தனத்தை மட்டுமே பிரதிபலித்த கைகள்….. அமர்ந்த நிலையிலேயே தன் உடலோடு உரசிய சத்ரியின் உடல்….. என ஒவ்வொன்றிலும் சத்ரியை உணர்ந்துக் கொண்டிருந்தது அவளின் மூளை…..

ஆனால் அவள் மனம் நம்ப மறுத்தது...

சத்ரி அப்படியெல்லாம் என்கிட்ட பிகேவ் பண்ண மாட்டான்…. அவன் மனதில் அப்படி ஒரு எண்ணமே கிடையாது….. இல்லையென்றால் நான் அவனை கல்யாணம் பண்ணிக்க சொன்னப்போ….. அதற்கு இவன் சந்தோஷம் தானே படனும்…..எதுக்கு கோபப்பட்டு கத்தனும்….. அப்போ என் மேல் விருப்பம் இல்லைன்னு தானே அர்த்தம்... விருப்பம் இல்லாமல் எப்படி ஒருவனால் இப்படி நடந்து கொள்ள முடியும்... அப்பறம் எப்படி அந்த மாதிரி வார்த்தைகளும் வரும்….

ஒருவேளை இது தன் மனதின் எதிர்பார்ப்பா...

எதிர்பார்ப்பு தான் கனவா வந்திருக்குமா..... அப்போ கனவில் நடந்த மாதிரி நான் 'அதை' சத்ரிகிட்ட எதிர்பார்க்கிறேனா.....

என 'சத்ரி' என்ற ஒருவன் சாத்வியின் ஒவ்வொரு அனுவிலும் கலந்து.... அவளை அனுவனுவாய் சித்ரவதை செய்தான்.....

பல மணி நேரங்களும் இதே நினைவுடன்..... கனவா....நிஜமா.....என இரண்டுக்கும் இடையில் சிக்கி தவித்துக் கொண்டிருந்தாள்....

ஐந்து வருடங்களுக்கு முன்...தன் பெற்றோரை விட்டு வெளியேறி, இதோ......இதே திருச்சியில் வேலைக்கென்று சேர்ந்த பிறகு..... அடைந்த பரிபூரண அமைதி..... படிப்பிற்கும் அப்பறப்பட்ட வேலை கிடைத்த சந்தோஷம்... வேலையில் சேர்ந்த பிறகு கிடைத்த மரியாதை... இரண்டே வருடங்களில் நற்பெயர் வாங்கியது... தனிமையில் இருந்தாலும் நிறைவான வாழ்க்கை...

இப்படி தெளிவாக இருந்த சாத்வியின் வாழ்க்கையில் சத்ரி என்னும்ஒருவனால்... அதுவும்... இந்த ஒரு நாளில்... ஒரு மணி நேரங்களாக சத்ரியால் படும் அவஸ்தை அவளை வாள் கொண்டு அறுத்தது...அவனால்...... இந்த ஐந்து வருடங்களாய் மனதில் தோன்றாத வெற்றிடம்..... கட்டுப்பாட்டினில் இருந்த தன்

மனம்.... என அனைத்தும் இழந்தது போல் ஓர் பிரம்மை ஏற்பட.....

சத்ரியை நினைத்து மூளை செல்லும் வழியும் சரியாக படவில்லை... மூச்சு அடைப்பது போல் உணர்ந்தாள்.....

இல்லை கண்டபடி யோசிக்க கூடாது........ என கண்களை மூடி 'நான் என் கண்ட்ரோலிலே இல்லை..... ஏதாவது யோசி....!. என்ன செய்ய...? ... என்னால் சத்ரியை தவிர வேறு எதையுமோ யோசிக்கவே முடியலை... எதாவது செய்....எதாவது ஒரு வழி சொல்லு....' .என தன் மனதிடமே பேச...

மனம் சொன்ன பதிலில் சட்டென கண் விழித்து..... வேகமாய் தன் அறைக்கு சென்று..... ஒரு டைரியை எடுத்து வேக வேகமாய் எழுத ஆரம்பித்தாள்... 'ஶ்ரீ ராம ஜெயம்.....' அவ்வப்போது செய்வது தான்..... ஐந்து வருடங்களாய் மனதில் இடம் பெறாத பழக்கம் இன்று ஏற்பட்டது...

இருந்த கோபம் , தாபம், காதல், ஆவேசம், ஆத்திரம் என அனைத்தையும் தன் கைகளில் காட்ட... விடியும் வரையிலும் ஒரு பொட்டு உறக்கம் இல்லை... கிட்டதட்ட முழு டைரியும் முடியும் தருவாயில்..... விரல்கள் வலியெடுக்க ஆரம்பித்தபின்பே நிமிர்ந்தாள் சாத்வி......

மனதில் எந்த ஒரு நினைவும் இல்லாமல் தெளிந்த நீரோடையாய் இருக்க...

கண்களை மூடி..... எதையோ சாதித்தது போல் ஆழ்ந்த அமைதியில் இருந்தாள் சாத்வி..... முன்பெல்லாம் மனதை கட்டுப்பாட்டினுள் வைக்க சத்ரி பழக்கிக் கொடுத்த பழக்கம் தான்... இன்று வரை மறக்கவில்லை... ஆனால் இன்று அவனையே மறக்க.... தனக்கு உதவக் கூடும் என கனவிலும் நினைக்கவில்லை சாத்வி... ஆனால் இன்று அது நடந்தது..... ஆம் சத்ரியை மறக்க..... எந்நேரமும் ஏதாவதொரு நோட்புக், டைரி என கையில் வைத்துக் கொண்டே இருந்தாள்...அதில் முழு வெற்றி கிடைக்காத போதும்.... கிட்டதட்ட வெற்றி பெற்றுக் கொண்டிருந்தாள் சாத்வி...

அங்கே சத்ரி.... சாத்விக்கு வாங்கிய அனைத்தையும் சிவகாமியிடம் கொடுத்து..... "வாங்கினது எல்லாம் சரியா இருக்கா ..... பார்த்துகோங்க....." என சொல்லிக் கொண்டிருக்கும் போதே.....

கிருத்தி சிவகாமி மகா....காவ்யா..... என பெண்கள் கூட்டம் அதை ஆராய்ச்சி செய்ய தயாரானது...

சங்கர் 'பில் எங்கே சத்ரி' என நயமாய் விஷத்தை கக்க... அவரை முறைத்தபடியே பாக்கெட்டினுள் திணித்து வைத்திருந்த பில்களை அவர்கைகளில் திணித்து ஓரமாய் நின்று கொண்டான்.....

சங்கர் வாங்கியவை சரியாய் இருக்கிறதா என பார்க்க சென்றுவிட்டார்.....

விநாயகம் சங்கரையும் சத்ரியையும் மாறி மாறி முறைத்துக் கொண்டிருந்தார்....

அவரின் முறைப்பை பார்த்த சத்ரி...

"என்னைக்காவது ஒரு நாளாவது பாசாமா பார்க்கிறீங்களா... எப்போ. பாரு.... முறைச்சிகிட்டு... நான் உங்க பொண்டாட்டி இல்லை..... உங்க பொண்டாட்டி அங்கே இருக்காங்க....'' என சத்ரி சொல்ல....

சத்ரி தன்னை திசை திருப்புகிறான் என அவரும் அதை கண்டுகொள்ளாமல் "எந்த பணத்தில் இதையெல்லாம் வாங்கின...'' என விநாயகம் கேட்க.....

"என்னோட பணத்தில்...'' சத்ரி அசால்ட்டாக சொல்ல...

"உன்கிட்ட ஏதுடா..... இவ்வளவு பணம்.....'' என அதிர்ச்சியுடன் கேட்க...

"ம்..... பக்கத்து வீட்டில் கொள்ளை அடிச்சேன்.....''

"அப்படியே அறைஞ்சனா தெரியும்..... உண்மையை சொல்லுடா.....'' என கண்டிப்பான தந்தையாய் கேட்க.....

"என்னோட பணம் தான்பா..... கடன் எல்லாம் வாங்கலை...''என அவருக்கு தேவையான பதிலை கூற

"ஏதுடா அவ்வளவு பணம்.....'' எனக்கு தெரிஞ்சு உன் கடையிலிருந்து வரும் எல்லா வருமானத்தையும் என்கிட்ட தானே கொடுத்து வச்சிருக்க... உண்மையை சொல்லு.... உன் நடவடிக்கை எதுவும் சரியில்லை.....'' என விநாயகம் சந்தேகமாய் பார்க்க.....

"அப்பா எனக்கொரு உதவி செய்யனும்....செய்வீங்வளா...'' என சம்பந்தமே இல்லாமல் கேட்க.....

"டேய், நான் ஒன்னு கேட்டா..... நீ ஒன்னு கேட்கிற...என்னடா பண்ணித் தொலைக்கிற..... சொல்லித் தொலைடா...'' என மண்டையை பிய்த்துக் கொள்ளாத குறையாய் கேட்க...

அவரை அர்த்தமாய் பார்த்து புன்னகைத்தபடி இருந்தான் சத்ரி.....

சாத்வியின் உடைகளையும், நகைகளையும் பார்வையிட்டுக் கொண்டிருந்த அனைவரின் எண்ணங்களும் வேறு வேறு பாதையில் சென்று கொண்டிருந்தது.....

அதிலிருந்து பார்வையை தன் கணவன் புறம் திருப்பினார் சிவகாமி.....

தன் கணவனின் புரிந்து கொள்ளமுடியாத முகபாவனையும்... சரிப்பை வெகுவாக அடக்கி, ஒரு கையை ஜீன்ஸ்

பாக்கெட்டிலும்….. மறுகையினால் தலையை கோதியபடி இருந்த மகனின் தோற்றமும்…..சிவகாமிக்கும் சிரிப்பை வரவழைத்தது…..

அதே சிரிப்புடன்…..அவர்கள் அருகில் சென்று…..'' என் புருசனை …. என்னடா சொன்ன….. வெட்ட போற ஆடு மாதிரி முழிச்சிட்டு இருக்காரு…..'' என சிவகாமியின் பார்வை இருவரையும் அன்பாய் வருட…..

"நீ இப்போ உன் மகனை திட்டுறியா…. இல்லை என்னை கிண்டல் பண்றியா…..'' என மகனைவிட்டு மனைவியிடம் பாய…..

"என்னங்க இப்படி கேட்கிறீங்க… நான் என்றைக்கு உங்களை விட்டு கொடுத்து பேசினேன்…. இப்போ பேச…..'' என ஏகத்திற்கும் போலியாய் வேடமிட…..

"அதானே … நீ உன் புருசனுக்கு தானே சப்போர்ட் பண்ணுவ…..என்னை எல்லாம் உன் கண்ணுக்கு தெரியுமா…..'' என சத்ரி பேச

"ஏய், இரண்டு பேரும் உங்க டிராமாவை நிறுத்துறீங்களா…..பார்க்க சகிக்கலை…..'' என கடுகடுப்புடன் கூறினார் விநாயகம்….

சத்ரின் செய்கை அப்படி இருந்தது…..பின்னே….. அவனின் வாய் பேசிக் கொண்டிருக்க…. சத்ரியின் கைகளோ தாயின்

தோளை வளைத்து அதில் குனிந்து தன் தலையை சாய்த்து , விநாயகத்தை ஒரு மார்க்கமாய் பார்த்திருந்தான்... ..

தாயிடம் செல்லம் கொஞ்சும் மகன், மகனை வைத்து கணவனை மட்டம் தட்டும் மனைவி..... என இருவரையும்' என்ன செய்ய இதுங்களை'..... என்பது போல் பார்த்திருந்த விநாயகம்...

"சிவகாமி, உன் புத்திரன் ஏதோ கோல் மால் பண்றான்....." என்னனு கேளு..... என தீயை கொழுத்திப்போட....

"உங்களுக்கு அவனை குறை சொல்லலைன்னா தூக்கம் வராதே..... அவன் உண்டு அவன் வேலை உண்டுன்னு இருக்கான்.... குறை சொல்லனும்னா, உங்க மூத்த மகனை சொல்லுங்க..." என விநாயகத்திடம் பொறிந்த சிவகாமி..... மகனிடம்.... திரும்பி

"சாத்விக்கு வாங்கின எல்லாமே ரொம்ப அருமையா இருக்குடா..... அண்ணா மேல இருக்கிற கோபத்திற்கு கண்டிப்பா சாத்வி எதையுமே செலக்ட் பண்ணி இருக்க மாட்டா..... நீ தான் செலக்ட் பண்ணினியாடா....." என சத்ரியிடம் கேட்டார்....

"ம்... ஆமாம்மா.... அவள் செலக்ட் பண்ண மாட்டேன்டா.... "என மறைக்காது கூற.....

"எதையும் பூசி மொழுகாமல், நான் தான் செலக்ட் பண்ணினேன்னு உண்மையை ஒத்துக்கிட்டான்..... ஆனால்

நீங்க..... அவன் செய்யாததற்கு எல்லாம் சேர்த்து திட்டிட்டே இருங்க..... நீ வாடா..... அம்மா சாப்பாடு எடுத்து வைக்கிறேன்...'' என சத்ரியை அழைக்க....

"நீங்க போங்க மா... நான் வரேன்....'' என தாயை அனுப்பி வைத்து தந்தின் புறம் திரும்பி.....

"கொஞ்சம் பேசனும் பா..... சாப்பிட்டுட்டு என் ரூம் வாங்க பேசலாம்...'' என அவ்வளவு நேரமிருந்த விளையாட்டு தன்மை போய் சற்று கூர்மையாய் பேசிய மகனிடம்.....

"என்னடா, எதுவும் பிரச்சனையா...'' என கேட்க....

"ப்ச்.... பிரச்சனை இல்லைப்பா..... இது வேற..... கண்டிப்பா டிஸ்கஸ் பண்ணியே ஆகனும்.... வாங்க.....'' என நில்லாது சென்றுவிட்டான் சத்ரி.....

அனைவரும் உணவு உண்டு முடித்து தங்கள் அறையில் புகுந்த பின், சத்ரியின் அறையினுள் நுழைந்தார்......

அன்று இரவு சத்ரியுடன் பேசி முடித்த விநாயகம்.... "சத்ரி.... இதெல்லாம் சரியா வருமா.....?'' என கேட்டார் சத்ரி கூறியதை நம்ப முடியாமல்...

"சரியா வரணும்.... வந்தே ஆகனும்... ஆக வேண்டியதைப் பாருங்கப்பா.....'' என குழப்பமாய் இருந்த தந்தையை சரிகட்ட வெகு நேரமானது சத்ரிக்கு...

அவன் சொன்னதை கிரகித்த விநாயகம் சட்டென அவனின் முகத்தை பார்த்து...

அவனையே குறுகுறுவென பார்த்த விநாயகம்.... "இதையெல்லாம் தாண்டி இன்னைக்கு உன் முகம் பளிச்சுன்னு இருக்கே தம்பி.... என்ன காரணம்.... "என கேட்க....

முகம் சட்டென சிவந்து போனது சத்ரிக்கு..... தந்தைக்கு காட்டாமல் அதை மறைத்தவன்.... "இப்போ இவ்வளவு நேரமா பேசினது தான் காரணம்....'' என அழுத்தமாய் கூறி.... "கிளம்புங்கப்பா....'' என அவரையும் அனுப்பி வைத்தவன் காற்றில் பறக்காத குறையாய் ஆரவாரமாய் இருந்தான்.....

இனிய கனவுகளில் மனம் லயிக்க.... கனவு நனவாகும் நாளுக்காய் காத்திருந்தான்.... சத்ரி.....

இரண்டு வாரமும் சாத்விக்கு நொடியாய் கடந்தது.... பகலில் பேங்கில் தலை நுழைப்பவள்..... இரவில் டைரிக்குள் தலை நுழைத்து கொள்வாள்...

மனம் பாலைவனமாய் அமைதியாய் கிடந்தது ..... பாலைவனத்தினுள் எந்த சோலையையும் தேடவில்லை சாத்வியின் மனம்.... கண் கூசும் வெளிச்சத்தைக் காட்டினாலும் எந்த ஒரு உதயத்தையும் எதிர்பார்க்கவில்லை.....

எவ்வளவு தான் மனதை திசை திருப்பினாலும் தன் உயிரை நினையாமல் இருக்க முடியவில்லை.....

இரண்டு வாரங்களில் அடிக்கடி வரும் சத்ரியின் நினைவுகளை அசை போட முடியாமல் தடுத்தன அவளின் திருமண வேலைகள்.....

தினமும் காலையில் "ஸ்ரீ ராம ஜெயத்துடன்" எழுபவள்.... இன்று "சத்ரியை மறக்கனும்.... எனக்கு சத்ரி வேண்டாம்..... நான் சத்ரியை மறக்கனும்...." என சத்ரி ஜெயத்துடன் எழ ஆரம்பித்தாள்.....

இடையில் எத்தனையோ முறை சத்ரி சாத்வியின் சந்திப்புகளும் பேச்சுக்களும் நடந்தாலும்..... சாத்வியின் சாதாரண நடவடிக்கைகளில் முகம் சுருக்கினான் சத்ரி....முகம் சாந்தமாய் , அமைதியாய் இருந்தது... ஆனாலும் எப்போதும் போல்..... சத்ரி சொன்ன அனைத்திற்கும் எதிர் பேச்சு கிடையாது..... "சிறு தலையாட்டல் மட்டுமே...." சரி என்பது போல்...

சாத்வியின் இந்த நிலைக்கு தானும் ஓர் காரணமல்லவா...என மனம் ரணம் கொள்ள..... சாத்வியிடம் சாதாரணமாக பேசமுடியாமலும், அவளை சமாதானம் செய்ய முடியாமலும் ,இப்படி எதிலும் பிடிப்பில்லாமல் இருக்கும் இவளை எப்படி கையாள எனத் தெரியாமல் திண்டாடிப் போனான் சத்ரி...

உடைகள் நகைகள் வாங்கிய அன்றே திருமண வேலைகள காரணம் காட்டி மகாவை இழுத்துச் சென்றுவிட்டார் சங்கர்... சாத்வியை நீங்கள் அழைத்து வாருங்கள் என.....

திருமணம் அவர்களது சொந்த கிராமத்திலேயே வைக்கப்பட்டு இருக்க, திருமணத்திற்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கும் வேளையில் சத்ரியின் குடும்பத்தினர் கிளம்புவதாய் இருக்க.....

சிவகாமி தான் சாத்வியை அழைத்து வர சொன்னார்.....

சத்ரியும் சென்று சாத்வியை தங்களுடன் அழைத்துவர கிளம்பினான்.....

அங்கே சென்று காரணம் கூறி சாத்வியை அழைக்க.....

"கல்யாணத்திற்கு முதல் நாள் வந்திடுவேன்....சத்ரி மற்றதை நீ பார்த்துக்கோ.....'' என அசால்ட்டாய் சாத்வி கூற.....

"என்ன விளையாடுறியா..... எல்லாரும் இன்னைக்கு தான் கிளம்புறோம்.... நீ கல்யாணத்திற்கு முந்தின நாள் வருவன்னா என்ன அர்த்தம்..... "என கோபமாய் கேட்க.....

"ஊரில் இருக்குறவங்க என்ன நினைப்பாங்களோன்னு உனக்கும் பயமா.....? ஆத்திரத்தில் அவளும் கத்த....

"ஊர்காரனுங்களுக்கு நான் ஏன் பயப்படனும்..... உங்கப்பனை நினைச்சா தான் பயமா இருக்கு..... அந்தாளுக்கிட்ட என்னால் திட்டு வாங்க முடியாது.... கேள்வி

கேட்டு கேட்டே என் உயிரை எடுத்துடுவார்.....நீ முதலில் கிளம்பு'' என சாத்வியை கிளப்ப கட்டாயப் படுத்தினான்....

சாத்வியோ... "பேங்கில் முக்கியமான பிராஜக்ட் லான்ஜ் ஓடிட்டு இருக்கு..... நாளைக்கு முடிஞ்சிடும்..... நாளை மறுநாள் ரிப்போர்ட் , பிராஜக்ட் எல்லாத்தையும் ஃபைல் பண்ணிட்டு, கல்யாணத்திற்கு முந்தின நாள் வந்துடுவேன்..... "என நிதானமாய் கூற....

சத்ரிக்கு பிபி எகிறியது..... "உங்கப்பாவை சமாளிக்க முடியாது சாத்வி..... "என சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

அவனருகில் வந்த சாத்வி..... சத்ரியின் சட்டைபையில் புதைந்திருந்த மொபைலை சுவாதீனமாய் எடுத்து சங்கரின் நம்பருக்கு கால் செய்தாள்.....

அவ்வளவு நெருக்கத்தில் சத்ரிக்கு மூச்சே நின்றது..... அதை தடுக்கும் வண்ணம் மொபைலை எடுத்துக் கொண்டு சற்று தள்ளி நின்று ஸ்பீக்கர் போட்டு அழைத்தாள் சாத்வி.....

இரண்டு மூன்று முறை முயன்ற பின்பே சங்கர் எடுக்க..... "கல்யாணத்திற்கு முந்தின நாள் தான் நான் வருவேன்..... சத்ரிகிட்ட சொன்னால் அவன் உங்ககிட்ட சொல்ல சொன்னான்..... சொல்லிட்டேன்.....'' என பதில் எதிர்பாராமல் காலை கட் செய்து மொபைலை எடுத்த இடத்திலேயே வைத்தவள்.....

"கல்யாணம் பிடிக்கலகன்றதுக்காக ஓடி போய்ட மாட்டேன்….. நீ தைரியமா கிளம்பு…. நான் வந்திடுவேன்….'' என அதே நெருக்கத்தில் சாத்வி சொல்ல….

இரு உடல்களும் உரச…. அந்த உரசல் சத்ரிக்கு மட்டும் தீ வைக்க…..

அவசரமாய் அதே போனை எடுத்து தன் காதுக்கு கொடுத்து தன் தாய்க்கு அழைத்தான்…..

"அம்மா சாத்வி இரண்டு நாள் கழிச்சுதான் வருவா… அவளை தனியா விட முடியாது நீங்க கிருத்தி இரண்டு பேரும் சாத்வி கூட இருங்க….. கிளம்பும் போது செல்லுங்க கார் அனுப்புறேன்…'' என அன்னைக்கும் அண்ணிக்குமான கட்டளைகளை பிறபித்து சாத்விக்கு ஒரு பாதுகாப்பை ஏற்பாடு செய்த பின்னரே…

"… டேக் கேர் சாவி….. நிறைய வேளை இருக்கு ….. பத்திரமா இருந்துக்கோ….. எதுனாலும் கால் பண்ணு….'' என சொல்லிச் சென்றவனை நிறுத்தினாள் சாத்வி….'' ஒரு நிமிசம் நில்லு சத்ரி…..'' என

தன் அறைக்குள் சென்று "என் கல்யாணத்திற்காக உனக்கு நான் எடுத்தேன்…..'' என அவன் கைகளில் திணித்தாள்…

பிரித்து பார்க்க… சாக்லேட் நிறத்தில் முழுக்கை சட்டையும், அடர்ந்த கருப்பில் ஃபேண்டும் என உயர் ரக உடையுடன்

டைட்டன் வாட்சும் அழகாக பேக் செய்ததை பார்த்து ….. உதடுகள் ரகசிய சிரிப்பில் மலர்ந்தது சத்ரிக்கு…..

அதே சிரிப்புடன் அந்த பையை கைகளில் ஏந்திக் கொண்டு "வரேன் சாவி…..'' என அங்கிருந்து கிளம்பி தங்கள் கிராமத்திற்குச் சென்றான்...

அதோ இதோ என இழுத்த திருமணநாளும் நெருங்கி….இன்னும் நான்கே நாட்கள் என்ற நிலையில் சாத்வியின் திருமண வேலைகள் நடக்க ஆரம்பித்தது...

அங்கே வெலைகள் நடக்க….. சத்ரி கிளம்பிய அடுத்த ஒரு மணி நேரத்தில் சாத்வியின் வீட்டில் இரிந்தனர் கிருத்தியும் சிவகாமியும்...

அவர்கள் வந்த உடன் இருவருக்கும் தேவையானவைகளை ரெடி செய்து கொடுத்தபின் பேங்கிற்கு கிளம்பினாள் சாத்வி…..கோபம் கிருத்திகாவிடம் தலை விரித்து ஆட…. 'ஒரு மலர்ந்த சிரிப்பை கூட உதிர்க்காமல் கிருத்தியிடம் விலக' ஏனென்று தெரிந்து கொள்ள கிருத்திகா பரபரத்தாலும் சிவகாமி இருப்பதால் அவளும் சற்றே அடக்கி வாசித்தாள்…..

சிவகாமியிடம் கோபம் இல்லாத போதும் ஒதுங்கி தான் இருந்தாள் சாத்வி…. அன்று வீட்டிற்கு வந்த போது சற்றும் மரியாதையில்லாமல் மரியாதை கொடுக்காமல் பேசிவிட்டு வந்தது இப்போது உறைக்க அமைதியாகவே இருந்தாள்...

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்த சிவகாமி, 'இவ்ளோ நல்ல பெண்ணை இந்த சத்ரி பையலுக்கே முடிச்சிருக்கலாம், பாலா போன பணத்தை காரணம் காட்டி சத்ரியை வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்களே இந்த அண்ணன்...' என மனம் நினைக்க, அது நிறைவேறாது என தெரிந்து மூட்டை கட்டிவிட்டார் சிவகாமி.....

இரண்டு நாட்களும் அதிக தாமதமாகத் தான் வந்தாள்..... காலையில் சீக்கிரம் சென்றுவிடுவாள்.....ஆக மொத்தம் இருவருடன் இருக்கும் நேரத்தை குறைத்துக் கொண்டாள்.....

திருமணத்திற்கு முந்தைய்நாள் சரியான நேரத்திற்கு வெங்கட் வந்து மூவரையும் அழைத்துச் சென்றான்.....

நேரடியாக மண்டபத்திற்கே அழைத்து வந்திருக்க..... மணப்பெண்ணுக்குரிய அலங்காரம் இல்லாத போதும்.....

கழுத்தில் நிறைந்த நகைகளும், ஆடம்பரமான பட்டுபுடவும் தலைநிறைந்த பூவுமாய் சிவகாமியும் கிருத்திகாவும் அவளை எளிமாய் தயார் செய்திருக்க.... ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.....

மாலை ஆறு மணிக்கு வந்திருக்க.... மண்டபத்தின் வாயிலிலே... பூக்களால் அலங்காரம் செய்த பலகை வரவெற்றது.... பார்தவளுக்கு வெறுப்பு தான்.... ரமேஷ் வெட்ஸ் சாத்வி மனதில் அத்தனை வெறுப்பு...

பின்னே சாத்விவிற்கு திருமணம்... அவளுடைய முழு சம்மதமின்றியே.....

'கல்யாணமே வேண்டாம்' என கூக்குரல் இட்ட மனதினை அங்கிருக்கும் அனைவருக்கும் உரக்க சொல்ல வேண்டும் என்ற எண்ணம்.....

கண்களை சுழற்றி பார்க்க....

அங்கிருந்த அனைவரும் அவள் சொந்தபந்தங்கள்..... அவளை கண்டதும் சிலர் அவளை அங்கேயே சூழ்ந்து கொண்டனர்....

"ஏண்டீமா, கல்யாண பொண்ணே இப்படி லேட்டா வந்தா... நாங்க எவ்ளோ நேரம் காத்திருக்க...''

"சாத்வி....எப்படிடி இருக்க... முன்னைக்கு இப்போ ரொம்ப அழகா இருக்கடி...''

"ஏற்கனவே லேட்..... சீக்கிரம் ரெடி ஆகும்மா...'' இப்படி பல குரல்கள் அவள் காதில் விழுந்ததே தவிர மூளைக்கு செல்லவே இல்லை.....

ஆனால் அது போலெல்லாம் சத்ரிக்கு தோன்றவில்லை போலும்....

அங்குமிங்கும் சுற்றியபடி, ஏதாவது ஒரு வேலையை செய்தவண்ணம்.... தேனீ போல் சுறுசுறுப்பாய் இருந்தான்.....

ஆஷ் கலரில் சட்டையும் அடர்ந்த கருப்பில் பேண்டுமாய் அங்கும் இங்கும் சுழன்றபடி ஓடிக் கொண்டே இருந்தான்…..

பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஏதோ ஒன்று அடைத்தது… தான் இவ்வளவு வெளிப்படையாய் பேசியும் சத்ரியிடம் எந்த பிரதிபலிப்பும் இல்லையே….

இல்லை இருந்தும் தன்னிடம் இவன் காட்டிக்கொள்ளவில்லையா… என மனம் அலைபாய சத்ரியை மறக்க சொல்லி நிதர்சனம் அறைந்தாலும்… அதையும் மீறி ஏதோ ஓர் எதிர்பார்ப்பு… தோன்ற தான் செய்தது….. இவன் எதுவும் செய்ய மாட்டானா… செய்து தன்னை இங்கிருந்து அழைத்துச் செல்ல மாட்டானா…..? என மனம் கூக்குரலிட…

'ஆமாம், வெளியே கொட்ட எழுத்தில் ரமேஷ் வெட்ஸ் சாத்வி…

உள்ளே இவ்வளவு உறவுகள் சொந்தங்கள்…

அதையும் மீறி அவளின் தந்தை வில்லனாய் தான் தெரிந்தார் சாத்வியின் கண்களுக்கு…

இரண்டு வாரங்களாய் டைரியில் கலைந்த உணர்வுகள் இன்று பிரவாகமாய் போங்கி வர….. அதை அடக்க , கண்கள் உடைப்பெடுத்தது….. இரண்டு சொட்டுகள் . தரையில் விழ குனிந்து கொண்டாள்…..

வந்ததிலிருந்து அங்கும் இங்கும் அலைவதாய் பேர் பண்ணிக்கொண்டு சாத்வியையே ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கும் நெஞ்சம் அடைத்தது...

சாத்வியின் உணர்வுகளை பார்க்காமலேயே சரியாய் கணிப்பவன், அவளின் கண்ணீருக்கான அர்த்தம் புரிந்து... 'மன்னிச்சிடு சாத்வி.... உன்னை ரொம்ப கஷ்டபடுத்துறேன்...கொஞ்சம் பொறுத்துக்கோ சாத்வி...' என மனதினுள் பேசியபடி அவளையே பார்க்க... தலை குனிந்து நின்றிருந்தவளை அவளை சுற்றி இருந்த சொந்தங்கள் கிண்டல் செய்தபடி இருக்க...

அதை பார்த்தவன்.... யாருக்கோ கால் செய்தான்..... "எங்க இருக்கீங்க மேடம்..... பொண்ணு வந்தாச்சு..." என பற்களை கடித்து துப்ப....

அவனின் கோபத்தை உணர்ந்த அந்த பெண்..... சார் நான் அப்பவே வந்துட்டேன்... "என மெல்லிய குரலில் பேச...

"பொண்ணை அழைச்சுட்டு போங்க....." என மெதுவாய் அவனும் பேச.....

சட்டென சாத்வியின் புறம் வந்த அவள்...

'நான் உங்களுக்கு புக் பண்ணிருக்க ப்யூட்டிசன்' என அவளை அழைக்க..... அவளுக்கும் ஏதோ ஓர் ரிலீப்

கிடைத்தார் போல் உணர்ந்து சாத்வியும் அந்த பெண்ணுடனே சொன்றுவிட்டாள்...

அறையின் உள்ளே சென்றவளுக்கு விரக்தி வெறுப்பு..... கண்ணீரை துடைத்து நிமிர்ந்த சாத்வி...

'என்னவோ செய்து கொள்ளுங்கள்' என அவளும் அமர்ந்துவிட்டாள்.....

அழகுப்பதுமையாய் அலங்காரத்தில் ஜொலித்தாலும்... கண்களில் ஒளியின்றி..... உயிரற்ற பொம்மை போலவே இருந்தாள்.....

சிந்தைகள் அனைத்தும் தறி கொட்டு செல்ல... நடைப்பவை எதையும் உள் வாங்கிக்கொள்ளாமல்.... அவளுகென பிரத்யேகமாய் அலங்காரம் செய்யப்பட்ட சேரில் ராணியின் தோரனையுடன் இருந்தாலும்..... சிரிப்பென்பது சிறிதளவும் இல்லை.....

சாத்வியின் பெற்றோர்கள், சத்ரியின் பெற்றோர்கள், கிரித்தி வெங்கட்... நானும் நானும் என தவ்விக் கொண்டிருந்த காவ்யா என அனைவரும் சந்தனம் நிறைந்த கைகளுடன் அவளுக்கு நலங்கு வைக்க..... பின் ரமேஷின் பெற்றோர்...பின்..

நெருங்கிய சொந்தங்கள் அனைவரும்

முடித்திருக்க... "வா...சத்ரி நீயும் வைடா.....'' என சிவகாமி அழைக்க.....

அதுவரை சாத்வியை பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தவன்...

சிவகாமின் அழைப்பில் திரு திருவென விழித்தான்…. மகாவும் சங்கரும் கூட அழைக்க….. பின் சற்றும் யோசிக்காமல் முகத்தில் விரிந்த சிரிப்புடன்…..

தன் வேக நடையால் அந்த ராணிக்கேற்க ராஜாவாக….. சிறிதும் கம்பீரம் குறையாமல் சாத்வியிடம் வந்தவன், இரு கைகளாலும் சந்தனத்தை அள்ளி இரு கண்ணத்திலும் பூசி தாடையில் நிறுத்தி அப்படியே நிமிர்த்தினான் அவளின் குனிந்திருந்த முகத்தை...

கண்களில் கலவரம் அப்பட்டமாய் தெரிய….. அடி வாங்கிய குழந்தையாய் கண்ணீர் தேங்க இருந்தவளை... கண்களுக்குள் ஊடுருவி... கைகளின் அழுத்தத்தை கூட்டி…..

'அப்பா அம்மாவை பிரிய போறோம்னு அழறியா... எல்லா பொண்ணுங்களும் பேஸ் பண்ணி தான் ஆகனும்….. "என சத்ரி சிரியாமல் சொல்ல….

அதை கேட்டு அங்கிருந்தவர்கள் சிரிக்க…..

சாத்விக்கு அவனை கொன்றால் கூட தப்பில்லை என்ற அப்பட்டமான கோபத்தை காட்ட…..

சிரிடி அழகி…..'' என கன்னத்தை ஒரு முறை அழுத்தமாய் நிமட்டி விட்டான் யாருக்கும் தெரியாமல்...

நிச்சயதார்த்தம் வெகு சிறப்பாய் நடந்து கொண்டிருந்தது...

# அத்தியாயம் 10

**செ**ய்வதை செய்துவிட்டு அவன் பாட்டிற்கு இறங்கிச் சென்றுவிட்டான்….. தான் கண் கலங்குவது எதற்காக என தெரிந்தும் 'தாய் தந்தையை பிரிய நேர்வதை நினைத்து அழுகையா….?' என சத்ரி கிண்டல் செய்தான் என்றால், சாத்விக்கு….. 'எனக்கு என்ன வேண்டும் என பார்த்து பார்த்து செய்பவனுக்கு , அவன் தான் தனக்கு வேண்டுமென ஏன் அவனுக்கு புரியவில்லை... இல்லை புரியாதது போல் நடிக்கிறானா….. தன் உணர்வுகள் அவனுக்கு புரியவைக்கவே இல்லையா….. '

என் உணர்வுகளுக்கு இவன் உயிர் கொடுப்பானா….? இல்லை உயிரோடு அழிப்பானா…..!

மனம் கதறி அழுது கொண்டிருக்க... அதனை அடக்கி…..' எப்போதும் போல்…. சத்ரி எனக்கில்லை….. எனக்கு அவன் வேண்டாம்...' என சத்ரி ஜெயத்தை உச்சரிக்க ஆரம்பித்தது….. ஆனாலும் ஏக்கத்தில் துடிக்கும் மனதினை என்ன செய்ய….. ! அது ஒரு புறம் துடித்துக்கொண்டிருந்தது…..

சத்ரியின் ஏக்கத்தில் கண்கள் கலங்கிய சாத்வி….. சத்ரியின் மகிழ்ச்சி பொங்கும் நடவடிக்கைகளிலும்….. இந்த உலகத்தில்

நான் மட்டும் தான் அதிர்ஷ்டசாலி என தம்பட்டம் அடிக்காத குறையாய் ஆரவாரமாய்…… ஆர்ப்பாட்டமாய் … இருந்த சத்ரியை பார்த்து பைத்தியம் பிடிக்காத குறையாய் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அமர்ந்திருந்தாள்….

இவள் சத்ரியை பற்றிய குழப்பத்தில் இருக்க… ஏனைய நெருங்கிய செந்தங்கள்.எல்லோரும் நலங்கு வைத்து முடித்து, நிச்சயதார்த்தம் இனிதாய் நிறைவடைந்தது…..

அவளை மணமகள் அறைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள்…..உறவுக்கார பெண்கள் இருவர் வந்து அழைக்க…..….எழுந்து செல்லும் போது சத்ரியை கண்கள் தேட….

சத்ரியும் ரமேஷூம் ஸ்வாரஷ்யமாய் பேசிக் கொண்டிருந்தனர்…. அப்படி ஒரு மகிழ்ச்சி தாண்டவமாடிய முகமாய் சத்ரி ….. நாத்வியினுள் அழுத்தமாய் பதிய….

…..அடிக்கடி சத்ரியின் பார்வை சாத்வியை துளைத்துக் கொண்டிருந்தது… தனக்கு மட்டுமே சொந்தமான ஒன்றை பார்க்கும் உரிமை பார்வையை வீசிக் கொண்டிருந்தான் சத்ரி…..

பாவம் சாத்விக்கு தான், அவன் உரிமைப்பார்வை புரியாமலேயே போனது, சத்ரி செய்து கொண்டிருக்கும் அட்டகாசங்களால்…

சத்ரியின் பார்வையை தொடர்ந்து ரமேஷூம் சாத்வியை பார்த்து மெலிதாய் சிரிக்க... 'பக்' என இருந்தது ,இதயம் கூட தன் வேலையைலசிறிது நேரம் நிறுத்தியது போல் தோன்றியது சாத்விக்கு…..

இருவரின் மீதும் இருந்த பார்வையை பிடுங்கிக் கொண்டு விறு விறுவென அவள் அறைக்குள் சென்று மறைந்தாள்….
பின்னால் வழ்த உறவுப் பெண்கள் அவள் அறைக்கு செல்வதை உறுதிசெய்து சென்றிவிட்டனர்….

மணமேடையில் இருந்து இறங்கி செல்லும் சாத்வியின் பார்வையையும் படபடப்ப்பையும் பார்த்த மகா குழப்பத்தில் அவள் பின்னேயே சென்று "என்ன சாத்வி என்னாச்சு...ஏன்….ஒரு மாதிரியாய் இருக்க...?’’ என கேட்டு சாத்வியின் கழுத்திலும், நெற்றியிலும் கை வைத்துப்பார்க்க…..

உடனே தன் முகத்தை சாதாரணமாக வைத்துக்கொண்டு…. "உட்கார்ந்தே இருந்தது டயர்ட்டா இருக்கும்மா...’’ என தன் நகைகளை கழட்ட ஆரம்பிக்க…..

அதை நம்பிய மகாவும்….. அவளுக்கு உதவி செய்தவாரே…..’’ செட் நகை மட்டும் கழட்டிக்கமா…. தங்கத்தை அப்படியே போட்டுக்கோ…..’’ என அவளுக்கு வேறு ஒரு லேசான பட்டுப்புடவையை கொடுத்து அணிந்து கொள்ள சொன்னார்…..

சரி என மகா சொன்னபடியே செய்ய…. சிறிது நேரத்தில் ….. "அத்தை’’ என சத்ரி கதவு தட்டும் ஓசை கேட்க…..

"இதோ வரேண்பா….’’ என சத்தம் கொடுத்தபடி மகா கதவை திறக்க….’’சாத்வி சாப்பிடலை அத்தை….. "என வாய் கூற…

சத்ரியின் கைகளோ மகாவின் புறம் தட்டை நீட்டிக் கொண்டிருந்தது….. மூன்று சப்பாத்திகளும்….. காளான் குருமாவும் இருக்க…..

"சாத்வி சாப்பிடலைன்னு நாங்க கூட கவனிக்கலைபா….. "என சிரித்தபடியே தட்டை கொணர்ந்து சாத்வியிடம் கொடுத்தார்…..

"நீ சாப்பிடுமா… கீழே நிறைய வேலை இருக்கு வரேண்…’’ என சென்றுவிட….

தட்டையே வெறித்துப் பார்த்தபடி வெகு நேரமாய் அமர்ந்திருந்தாள் சாத்வி….. மகா சென்றதை பார்த்து….. சாத்வியை பார்க்க உள்ளே நுழைந்தான் சத்ரி…..

லேசான பட்டுபுடவை, தலை அலங்காரம் கலைந்து, செவி முடிகளும், முன்னுச்சி முடிகளும், ஆங்காங்கே அழகாய் காற்றிற்கேற்ப பறந்து கொண்டிருக்க….. தங்க சிலையென காட்டி கொடுத்த மெல்லிய தங்க நகைகளும், தட்டினை வெறித்துக்

கொண்டிருந்த அவள் கண்களும், அவளை ஓவியமாகவே காட்ட...

சத்ரிக்கு கண்களை அவறிடமிருந்து பிரிக்க முடியவில்லை….. யாரும் வந்து விடுவார்களோ….. என….

"வெறிச்சு பார்த்திட்டே இருந்தால் , சப்பாத்தி தானா உள்ளே போய்டுமா…. "என திடீர் சத்தத்தில் திடுக்கிட்டு சாத்வி….. திரும்ப…..

அதற்காகவே காத்திருந்தார்ப் போல், இவனை பார்த்த அதிர்ச்சியில் லேசாக பிளந்திருந்த சாத்வியின் வாயினுள் சப்பாத்தியை திணித்தான்…..

சப்பாத்தி உள்ளே செல்ல சாத்வி அனுமதிக்காததால் வாயை அடைத்துக் கொண்டு நிற்க…..

ஊட்டிக் கொண்டிருந்த சத்ரி, தன் விரல் ஒன்றை மட்டும் வாயினுள் வைத்து அழுத்த….

சுறு சுறுவென கோபம் ஏறியது சாத்விக்கு…. ஏற்கனவே இருந்த கோபம் கொப்பளித்துக்கொண்டு கிளம்ப….. '

கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்ட…. பாவம் சத்ரிக்கு தான் புரியவில்லை…’’

"சாவி , ஏதோ திட்றனு தெரியுது….. வாயில். இருக்கிறதை முழுங்கிட்டு திட்டு... என்னும் புரியமாட்டுது…….… "என

சொல்ல….. பட்டென விழுங்கி…. திட்ட வாய் திறக்க…. மீண்டும் சப்பாத்தியை திணித்தான்…..

‘நீ என்னும் ஊட்ட வேண்டாம்…. 'என்பதை போல் அவன் கையை தட்டிவிட….

"ப்ச் …. சாப்பிடு சாவி…..’’ என ஒவ்வொரு விள்ளலாய் ,சாத்வி பேச இடமே கொடுக்காமல் ஊட்டிக்கொண்டே இருந்தான்…..

சாத்வியெ பேச இடம் கொடுக்கவே இல்லை சத்ரி….. மீறி மறுத்த போது…. அவன் முறைப்பே அவளை எரிக்க...எதையும் பேசாமல் எல்லாவற்றையும் உண்டு முடிந்தாள்…..….

'குட் கேர்ள்….’ என தலையை ஆட்டி சிரித்து….. சத்ரி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கிளம்ப ஆயத்தமாக… அவன் கையை பிடித்து நிறுத்தினாள்….

"சாப்பிட்டேன்ல,… இப்போ நான்சொல்றதை கேளு…’’ என சத்ரியின் கைபிடித்து நிறுத்தினாள்….

சத்ரியின் முரட்டுகைக்களை தழுவி இருந்த சாத்வியின் கைகளின் மென்மையை கண்களை மூடி கிரகித்தான் சத்ரி…..

சொல்லி வைத்தார் போன்று அவனது மொபைல் சத்தம் எழுப்ப…..பட்டென கண்களை திறந்து மறுகையால் ஆன் செய்து…. "இதோ வரேண்பா….’’ என சாத்வியிடமிருந்து தன் கைகளை உறுவிக் கொண்டு வேகமாய் சென்றுவிட்டான்…..

அவன் சென்றதை பார்த்து கண்கள் நிறைய..... அப்படியே கட்டிலில் சாய்ந்தாள்.... பின் மகா, கிருத்திகா என இருவரும் சாத்வியுடனே இருக்க..... அழக்கூட நேரம் அமையவில்லை சாத்விக்கு....

அறையை விட்டு வெளிவந்தவன் காதில் இருந்து போனை எடுக்காமல் அப்படியே சாத்வியை மனதில் நினைத்தபடி வர..... எதிரே வந்த அவனின் தந்தை .....

"யாருடா போன்ல..... இப்படி சிரிச்சுட்டு வர்ற.....'' என கேட்க....

"நீங்க தான்பா.....'' என கூற.....

"டேய் மகனே... பிளான் பண்ணி, எல்லோரையும் லூசாக்கிட்டு இருக்கன்னு நான் பெருமைபட்டேன்..... கடைசியில் நீயும் லூசாயிட்டியாடா.....?'' என மகனை பார்த்துக் கேட்க....

'அவர் பேச்சில் இதழ்கள் லேசாய் விரிய..... சாத்விகிட்ட வாலண்டியாரா போய் சிக்கிட்டேன்பா..... எப்படி தப்பிக்கன்னு யோசிக்கும் போதே..... கஸ்டமர் கேர்.... கால் வந்தது..... நான் 'உங்ககிட்ட பேசுற மாதிரி 'எஸ் ஆகிட்டேன்.....' அதே தான்பா அப்படி சொன்னேன்... "என சிரித்தபடி கூற.....

அவன் செயலில் வாய் பிளந்த விநாயகம்..... "நீ பிழைச்சுப்படா.....'' என நக்கலாய் கூற...

அதை கவனிக்காமல் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையினுள் சென்று மறைந்தனர் இருவரும்...

இரவு அமைதியாய் இருந்த அந்த மண்டபத்தில்..... அணிந்திருந்த நகைகள் சப்தம் எழுப்பாமல் சத்ரியை தேடி வந்தாள் சாத்வி.....

எங்கே மகாவும் கிருத்திகாவும் எழுந்துவிடுவார்களோ என பூனைபோல் மெதுவாய் , அவளின் அறையை திரும்பி திரும்பி பார்த்தவாறே வந்தாள்....

சாத்வியின் அறையின் நேர் எதிரே இருந்த ஜன்னலின் வழியே தூங்காமல் கொட்ட கொட்ட விழித்து கொண்டிருந்தவன்.... சாத்வி தங்கள் அறையை நோக்கி வருவதை உணர்ந்து, சட்டென அருகில் தூங்கிக் கொண்டிருந்த தந்தையை எழுப்பினான்.....

அவரும் உடனே எழுந்து அமர்ந்து..... "என்னாடா,..... என்னடா...'' என தெளிவில்லாமல் அடித்து பிடித்து எழ

"அப்பா சாத்வி , என்னை தான் தேடி வர்ரா போல..... நான் சொல்றதை அப்படியே அவகிட்ட சொல்லுங்கப்பா.....'' என சத்ரி விநாயகத்திடம் கூறி அனுப்பினான்....

லவ் பண்ணவனுங்களுக்கு ப்ரண்டா தான் இருக்க கூடாது.... இப்போ அப்பனாவும் இருக்க கூடாது போல..... பயபுள்ளை

தூங்க கூட விட மாட்டுதே..... என நொந்தவாறே..... சாதாரணமாய் சாத்வியை நோக்கி சென்றார்.....

"என்னம்மா, இந்த நேரத்தில் இங்கே என்ன செய்யிற....." என திடீரென விநாயகத்தின் குரல் கேட்க....

திடுக்கிட்டு திரும்பினாள்.... ஆனாலும் தைரியமாய்....அவர் என்ன நினைப்பாரோ என்றில்லாமல்..." சத்ரி எங்கே மாமா.... அவன்கிட்ட பேசனும் மாமா...." என சிறு வயது சாத்வியாய் அடம்பிடிக்க.....

அவளின் தெளிவான பேச்சு... பிசிர் தட்டாத குரல் ... எல்லாம் சத்ரியை தேடித் தான் என எளிதில் கண்டு கொண்டார்....விநாயகம்.... பின்னே ரமேஷுடன் திருமணம் என்ற நிலையில் சத்ரியை தேடி வந்திருப்பதாய் கூறுவது எனில் அவன் மீதான அன்பை நினைத்து பெருமை கொண்டார் விநாயகம்...ஆனாலும் அதை மறைத்தவாரே.....

சத்ரி சொன்னதை அப்படியே உறைத்தார் ...." அவன் கொஞ்சம் வெளியே போய் இருக்கான் மா.... வேணும்னா போன் பண்ணிப் பாரேன்....." என சொல்ல....

விநாயகத்தின் பதிலில் முகம் சட்டென சுருங்க..... வேறெதுவும் செய்ய முடியாத தன் நிலையை

நொந்தவாரே…..“சரி….மாமா….” என தலையாட்டியபடி சென்று மறைந்தாள்…..சாத்வி தலையாட்டி சென்றவிதம் விநாயகத்திற்கு சற்று குற்ற உணர்ச்சியாய் போனது…..

திரும்பி அறைக்கு வந்தவர்…

"டேய் ஆனாலும் இப்படி படுத்தாதடா….. பாவம்டா அந்த பொண்ணு…..” என

"அவ பாவமா….! நான் தான்பா பாவம்….. அவ கையில் சிக்கினேன் நிச்சயம் தோலை உரிச்சிடுவா…..அதுக்கு பயந்து தான் நான் உங்களை அனுப்பினேன்….. அவளுக்கு பாவப் படாதீங்க…. நான் தான் பாவம்…..” என கட்டிலில் சென்று படுத்துவிட்டான்…

சாத்வி இந்நிலையிலும் தன்னை தேடி வருவதாயின் தன் மேல் எவ்வளவு நம்பிக்கை வேண்டும்…என சிலாகித்துப் போனான்…சத்ரி…..

திரும்பி வந்த சாத்விக்கு கோபம் கொப்பளித்துக்கொண்டு கிளம்பியது….. 'தனக்கு சத்ரி வேண்டும் 'என்ற எண்ணம் தலைவிரித்தாடியது…..

எங்கு சென்றாலும் இறுதியில் சத்ரியின் கண் அசைவில் ஆடும் , சாத்வியின் மனம் …. "நான் சத்ரியை தவிர வேறு யாருக்கும் அடங்கவே மாட்டேன்…” என சண்டித்தனம் செய்ய…..

தான் பேச வருவது தெரிந்தும் தன்னை நெருங்கவிடாமல் தடுக்கும் செயல்கள் அனைத்தும் சாத்வியை உச்ச கட்ட கோபத்திற்கு அழைத்துச் செல்ல.....

அப்படி உறங்கா இரவாய் சத்ரியின் நினைவுகளிலேயே கழித்தாள்..... மதில் மேல் பூனையாய்..... தன் உணர்வுகளை கொஞ்சம் கொஞ்சமாய் தொலைத்துக் கொண்டிருந்தாள் சாத்வி...

காலையில் திருமண மண்டபமே களை கட்டியிருக்க..... அப்ரஸாய் ஜொலித்துக் கொண்டுஇருந்தாள் சாத்வி.....

சிறிது நேரத்தில் சாத்வி அழைத்துச் செல்லப்பட , அங்கே சொன்ன அனைத்தையும் செய்து முடித்தாள்.....

நல்ல நேரம் நெருங்குவதாய் ஐயர்சொல்வதும், பின் அது மாப்பிள்ளையின் கையில் கொடுப்பதும் என வேகமாய் நடக்க...

செயின் ஒன்றில் கோர்க்கப்பட்ட தாலியை அவள் கழுத்தில் உலகை வென்ற உவகையுடன் அணிவித்தன இரு கைகள்.......

கொஞ்சம் நஞ்சமிருந்த உணர்வுவளும் ஓரே அடியாக செத்துவிட... கண்கள் கலங்கி பெருக்கெடுத்தது.....சாத்விக்கு.....

யாரிடமும் ஆறுதல் கூட ரேட முடியாத நிலை..... அவளுகில் அமர்ழ்திருந்த கனவனை கூட ஏறெடுத்து பார்க்க முடியவில்லை..... ......

அவள் கண்களுக்கு தெரிந்தது எல்லாம் தன் மார்பில் தவழ்ந்த தாலி மட்டுமே... வெகு நேரமாய் வெறித்துக் கொண்டிருந்தது... சாத்வியின் வலி நிறைந்த கண்கள்.....

'மேடம் ... கொஞ்சம் நிமிர்ந்து பாருங்க... முகம் சரியா தெரிய மாட்டுது' என போட்டோ கிராபர் சத்தமாய் கேட்க.....

"சாத்வி கொஞ்சம் அங்கே பாரும்மா....." என ஒரு சிலர் கூற.....

அதுவும் அவள் காதில் விழவே இல்லை..... தலை குனிந்த்து குனிந்தபடியே ..... பார்வை தாலியை வெறித்தது வெறித்தபடியே ... இருந்தாள்...

ஏற்கனவே எல்லோரின் பார்வையும் அவர்கள் மேலேயே நிலைத்தருக்க..... சிலர் அவளை வித்யாசமாய் பார்க்க..... மாப்பிள்ளை மாறி இருக்கிறார் இல்லையா..... உடனே ஏத்துக்கிறது கஷ்டம் தான்....." என சிலர் வாய் விட.....

அப்போது தான் சாத்வியின் செவிகள் கூர்மையாய் கவனிக்க....

நெற்றி வகிட்டில் குங்குமம் வைத்து... "சாத்வி நிமிர்ந்து பார்....." என்ற மாப்பிள்ளையின் குரலிலும் தெளியவே இல்லை...

சாத்வியின் பெற்றோர் 'என்ன செய்வது' என்பது போல் பார்த்திருக்க...

அக்னி குண்டத்தை மூணு தரம் சுத்துங்கோ... என ஐயர் சொல்ல... அப்போதும் அப்படியே இருக்க.....

அவன் எழுந்து ,' இப்போதைக்கு அவள் எழ மாட்டாள்' என்று எண்ணியவன்....

அவள் கையை பிடிக்க......

அந்த தொடுகை உயிர் வரை சென்று உறைய... சட்டென தன் கையை பிடித்திருந்தவனை பார்க்க... மனதில் இருந்த அழுத்தம் அனைத்தும் வடிந்தது... மழை நீரில் அடுத்துச்செல்லப்படும அழுக்காய்... அவள் மனதில் இருந்த கசடுகள், எதிர்மறை எண்ணங்கள், வாழ்க்கை பற்றிய பயம், ரமேஷூடனான வாழ்க்கை பயம்.... என அனைத்தும் ஓரேயடியாய் அடித்துச் செல்லப்பட...

தன் சத்ரி தான் என தெரிந்தபின்..... மூளை சற்று சமநிலை அடைய..... என்ன நடக்கிறது என பார்த.தாள் சாத்வி........ அவன் எழுத்து நிற்க.... தான் அமர்ந்திருப்பது ஒரு மாதிரி இருக்க...

அவளும் கூடவே எழுந்து சொன்னதையெல்லாம் செய்தாள்....அக்னி குண்டம் சுற்றும் போது..... சாத்வியின் கைவிரல்கள் சத்ரியின் அழுத்தத்தில் நொறுங்கிக் கொண்டிருந்தது...

சடங்குகள் முடிந்து….. போட்டோ செக்ஷன் ஆரம்பமாக…… ஒவ்வோரு குடும்பமாய் போட்டோவிற்கு லைன் கட்டி நிற்க…..

ஒரு போட்டோவிற்கு சதாரராணமாய் நிற்பவள்…. சில போட்டோகளின் பின்….. அவனை திரும்பி பார்ப்பதும்… பின் அதை மறைப்பதுமாய் சாத்வி இருக்க… அந்த பார்வையில் ஓர் அதிர்ச்சி இருப்பதையும் அடிக்கடி பிரதிபலித்துக் கொண்டே இருந்தாள்…..

சாத்வியின் ஒவ்வொருவொரு உணர்ச்சியையும் பார்க்கும் போதும் அதை புரிந்து கொண்டான்….சத்ரி….. ஆனால் மேடையில் என்ன செய்யமுடியும் அவனால் , அமைதியாய் இருக்க தான் முடிந்தது…

அதன்பின் வந்த….

மணமக்களுக்கென்று தயார் செய்த விளையாட்டுக்களையும் மறுத்துவிட்டாள் சாத்வி…..

சாப்பிடசென்ற போதும்….. ஒருவருக்கொருவர் ஊட்டி விட சொல்லும் போதும் 'சிறு தலையசைப்பு 'மட்டுமே….. முடியாது என்ற செயல் அதில் இருந்தது…

எல்லா செய்கைகளிலும் மறுப்பை நேரடியாகவே காட்ட யாரும் தலையிடவில்லை… ‘

எல்லா செய்கைகளிலும் மறுப்பை நேரடியாகவே காட்ட யாரும் தலையிடவில்லை... 'அவள் இஷ்டம் 'என்பது போல் ஒதுங்கிக் கொண்டனர்...

ஆனால் எல்லாவற்றிலும் மறுப்பைக் காட்டினாலும், அது சத்ரி மூலமே மற்றவரை….. சென்றடையும்…. அதுவரையில் சத்ரியை மட்டுமே நெருங்கவிட்டாள் சாத்வி...

அவளின் செயலில் சத்ரி, சாத்வீஎன இருவரின் பெற்றொர்களும்... சம்பந்திகளாயினும் ஒருவருக்கொருவர் பேசவில்லை….. மண்டபத்திலேயே, எவ்வளவு அமைதியாய், எவ்வளவு நேரம் இருப்பது என ….

"இன்னும் அரைமணி நேரத்தில் நல்ல நேரம் முடிய போகுது விநாயகம்….. அதற்குள்ள வீட்டுக்கு அழைச்சிட்டு போகனும்... கார் ரெடியா இருக்கு ,இப்போ கிளம்பினா தான் சரியாய் இருக்கும் "என சங்கர் 8 சொல்ல….

இப்படி மண்டபத்தில் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்திருப்பதற்கு…. வீட்டிற்கு செல்வது பரவாயில்லை என தோன்ற….. "சரி…..கிளம்பலாம்…..'' என ஆயத்தமாக...

எல்லொருமே கிராமத்திலிருந்த சங்கரின் வீட்டிற்கு செல்ல எத்தனிக்க...

"உங்க வீட்டிற்கு கூட்டிட்டு போ சத்ரி...'' என அனைவருக்கும் கேட்கும் விதமாகவே சாத்வி கூற...

"சம்பிரதாயம்எல்லாம் இருக்குலமா...'' என மகா தயங்க.....

"நீங்க வண்டியை எடுக்க சொல்லுங்க மாமா..... உங்க வீட்டிற்கு போகலாம்.....'' என சத்ரி முடித்துவிட... சாத்வி அவனை நன்றாகவே முறைத்தாள்......

அவர்களின் வீட்டிற்கு வந்தவுடன் மகாவிடம் நேராய் சென்று... "ரமேஷ் என்னானான்...'' என எந்த ஒரு தயக்கமும் இல்லமால் கேட்க...

மகா தயங்கி நின்றார்.....

பின்.....சத்ரியின் பேச்சுக்கள் நினைவு வர... ''ரமேஷ் வேற பொண்ணை காதலிக்கிறாராம்.....அதான்.....'' என சொல்லிக் கொண்டிருக்கும் போதே... கை நீட்டி தடுத்து..... அவ்விடம் விட்டு அகன்று தன் அறைக்கு சென்று மறைந்தாள்...

சொந்தபந்தங்கள் நிறைந்த வீட்டில் யாருடனும் பேசவில்லை சாத்வி..... சாத்வியுடனும் யாரும் பேசவில்லை...பேசினால் எங்கே பிரச்சனை செய்துவிடுவாளோ....என பயந்து யாருமே.... வாயைத் திறக்கவே இல்லை......

இரவு கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்க..... "வெங்கட் எதையும் மறந்திடாத .... வாங்கி வந்ததும் நீயும் கிருத்தியும் சேர்ந்து , சாத்வியோட ரூமை ரெடி பண்ணிடுங்க.....'' என சிவகாமி கூறிக்கொண்டிருக்க.....

அம்மாவின் பேச்சில் முகம் சுருக்கி…. நகர்ந்த வெங்கட்டை பிடித்து நிறுத்தினான்…..சத்ரி...

"ரூம் எதுவும் ரெடி பண்ண வேண்டாம்….. வெங்கட்…..'' என அவனின் முகம் பார்த்து எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் கூறினான் சத்ரி….

''ரூம் எதுக்கு ரெடி பண்ண சொன்னாங்கன்னு தெரியுமா…தெரியாதா…..?'' என சிரிப்புடன் வெங்கட் கேட்க….

"அது கூட தெரியாமலா உன்கிட்ட வேண்டாம்ன்னு சொல்றேன்….'' என சத்ரியின் குரல் சீரியசாய் பேச…..

"ஏண்டா…..'' என வெங்கட்டும் இதற்கு மேல் இவனிடம் என்னவென்று கேட்க….என புரியாமல் இருக்க…..

"வேண்டாம்…. அம்மாட்ட, நான் பேசிக்கிறேன்….'' என தன் தந்தையிடம் சென்றான்…..

"அப்பா, இன்னைக்கு எந்த விசேசமும் வேண்டாம்...… அம்மாகிட்ட மட்டும் சொல்லிடுங்க…. மாமா, அத்தைக்கு தெரியவேண்டாம்….'' என அண்ணனின் முன்பு நேராய் பேசியவன்…. தந்தையிடத்தில் சற்று முகம் சிவக்க கூற….

சாத்வியின் மீதான அன்பு எத்தகையது என அந்த நேரத்தில் ஓர் ஆணுக்குரிய இடத்தில் இருந்து பார்த்த விநாயகத்திற்கு ஆச்சர்யம் குறைந்தபாடில்லை…..

திருமணத்தில் ஆண்கள் முக்கியமாய் கருதும் ஒன்று, இன்று தன் மகனுக்கு முக்கியமாய் படவில்லை…. அதைவிட மனைவியின் உணர்வுகளுக்கு மரியாதை கொடுப்பது முக்கியமாய் தோன்றிவிட்டதே….. என மனதினுள் ஓட….

பெருமையுடன்….. "நான் பார்த்துக்கிறேன்டா…..நீ போ…..'' என அதை அப்படியே சிவகாமியிடமும் கூற…..

"என்னங்க…. அவன் சொன்னதும் சரின்னு தலையாட்டிட்டு வற்றீங்க…..சாந்திமுகூர்த்தம் எல்லாம் அந்த அந்த நேரத்தில் நடக்கனும்ங்க….. அதுக்கு தான் நல்ல நேரம் பார்க்கிறது…..'' என சொல்லிக் கொண்டிருக்கும் போதே…..

"இப்போ எல்லாத்தையும் நீ ரெடி பண்ணினாலும், அவங்களுக்குள்ள எதுவும் நடக்கலைன்னு, அவங்க சொல்லாமல் உனக்கு தெரியபோறதில்லை…..

உன்கிட்ட சொல்லிட்டு இருக்க வேண்டிய அவசியமில்லை அவனுக்கு…. காரணமில்லாமல் அவன் எதுவும் செய்ய போறதில்லை…. அவன் போக்கில் விடு…..'' என விநாயகம் கூற…..

"மகா, கிருத்தி இரண்டு பேரும் சாத்வியை ரெடி பண்ணிட்டு இருக்காங்க….. நான் போய் எப்படி சொல்ல…..?'' என கேள்வியாய் கேட்க….

"அவங்க ஆசையை கெடுப்பானேன், ரெடி பண்ணட்டும், சத்ரி வேற எதுவும் தான் வேண்டாம்ன்னு சொன்னான்.....நீ மற்றதை கவனி.....'' என சொல்ல....

"எப்போவும் , என் மகனை குறை சொல்லிட்டே இருப்பீங்க...இப்போ அவனுக்கு ரொம்ப சப்போர்ட் பண்ற மாதிரி தெரியுது...'' என சந்தேகமாய் பார்க்க.....

"ஏய், சொன்னதை செய்டி.....'' என அங்கிருந்து அகன்றார்....விநாயகம்......

கிருத்திகாவும், வேறு இரண்டு பெண்களும், சாத்வியை தயார் செய்து கொண்டிருக்க..... மகா பால் ,பழங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்....

சிவகாமி எதுவும் சொல்லாமல் சாத்வியை மனநிறைவுடன் பார்த்துக்கொண்டிருந்தார்.....

சாத்வியை அறையினுள் அனுப்ப...

கதவை பூட்டியபடி உள்ளே நுழைந்தாள்... அறை சர்வ சாதாரணமாய் இருக்க..... எதிலிருந்தோ தப்பித்த உணர்வு..... சாத்விக்கு...

சத்ரியை தேடக்கூட இல்லை..... ஏற்கனவே பால் பழங்கள் டேபிளில் அடுக்கபட்டிருக்க..... வெறுமனே அவள் மட்டுமே வந்திருக்க..... சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.....

தலை வின் வின் என துடிக்க…. அதை அடக்கியபடி சாய்ந்து அமர்ந்து மனதினை ஒரு நிலைப்படுத்த முயன்றாள்…

அதற்கும் மேல் தலை பாராமாய் கனக்க….. நடந்த நிகழ்வுகளிலிருந்து வெளி வர போராடிக் கொண்டிருந்தாள்…..

சிறிது நேரத்தில் சத்ரியின் கைகள் அழுத்தமான பிடிப்புடன் ரன் நெற்றியில் வலம் வருவதை உணர்ந்தாள்….

அவன் தான் என புரிந்த போனது….. அவன் கையை தட்டிவிடவும் இல்லை…. வெறுப்பை காட்டவும் இல்லை….. அவனுக்கு தன்னை கொடுத்தபடி இருந்தாள்…

வெகு நேரமாய் பிடித்துவிட….. தலையின் பாரம் குறைவது போல் இருக்க… கண்கள் அமைதியாய் மூடிக்கொண்டன…

# அத்தியாயம் 11

முதலிரவிற்காக, எடுத்து வைத்த பட்டுபுடவை..... நகை எல்லாவற்றையும் தவிர்த்து.....

லேசான புடவை, கனமில்லாமல் பேருக்கு இரண்டு நகைகள் என அணிந்து கொள்ள.....

மகாவும், கிருத்திகாவும் எவ்வளவு பேசியும் பயணில்லை..... "சரி ... இந்த பூவையாவது முழுசா வச்சிக்க....சாத்வி....'' என கைநிறைய மல்லிப் பூவுடன் நெருங்க.....

"எனக்கு தலை வலிக்குது..... வேண்டாம் "என அதையும் மறுத்தாள்....சாத்வி.....

சத்ரியின் நினைவில் அப்போது தான் உள்ளே நுழைந்த சிவகாமி..... சாத்வியின் உடையையும் நகையையும் பார்த்தவுடன் புரிந்து கொண்டார், சாத்வியின் நிலையை..... 'சத்ரி, நீ எமகாதகண்டா..... சாத்வி இப்படியெல்லாம் செய்வான்னு தெரிஞ்சு தான் , பர்ஸ்ட் நைட் வேண்டாம்னு சொன்னியா...' என வாய்க்குள் சிரிப்பை அடக்கியபடி..... வர.....

கிருத்திகா சிவகாமியை பாவமாய் பார்க்க..... 'கண்களாளேயே 'பதில் கூறினார் சிவகாமி..... பின் சாத்வியை நெருங்கி.....

"சாத்வி, கல்யாணம் ஆன பொண்ணு, பூ வேண்டாம்னு சொல்லகூடாது….. அபசகுணமாயிடும்…. இன்னறைக்குன்னு இல்லை ….. என்றைக்குமே பூ வேண்டாம்னு சொல்ல கூடாது… இந்த பூ உனக்குன்னு வாங்கினது…. வேற யாரும் வச்சுக்க கூடாது…..'' என கிருத்திகாவின் கையில் இருந்த பூவை , சரியாய் உயரம் பார்த்து, அவள் கட்டையான கூந்தலுக்கேற்ற வகையில், தலை நிறைய வைத்துவிட்டார்…..சிவகாமி…..

இருவரிடமும் வாதம் செய்தவள், சிவகாமியிடம் அமைதியாகிவிட்டாள்…..ஏற்கனவே இருந்த தலைவலி, மலர்ந்து மனம் பரப்பிக்கொண்டிஇருந்த மல்லிகையினால் இன்னும் அதிகமாக….. வண்டாய் குடைந்தது… தலைவலி…..

சாத்வியை கிளப்பி கிருத்திகாவின் கைகளில் ஒப்படைக்க…..

கிருத்திகா சாத்வியை அழைத்துச் சென்றாள்….

சாத்வியை கண்களில் நிரப்பியபடி இருந்த மகாவை "சாத்வியை நான் பார்த்துகிறேன்….. மகா….. "என மகாவின் கலக்கம் நிறைந்த முகத்தை பார்த்து சாவகாமி ஆறுதலாய் பேச…..

சிவகாமியின் எண்ணம் புரிந்த மகாவும்… சிவகாமியை பார்த்து முறிவலித்தபடியே…'' இனிமேல் என் பொண்ணை பத்தி நான் ஒரு நாளும் கவலை பட போறதில்லை….. சிவகாமி…

"என தேவையான பதிலைக் கொடுத்தார் மகா... தேவையற்ற பேச்சுக்கள் அங்கே தவிர்க்கபட்டது...

அதற்குள் சாத்வியை விட்டு வந்த கிருத்திகாவும் அங்கு கூட...

"அம்மா , சாத்விக்கு என்ன தான் ஆச்சு ஏன் .... அவளோட இஷ்டம் எதுவுமே இல்லாமல் ,இப்படி ஆளாளுக்கு ஆட்டி வைக்கிறீங்க..... சாத்விக்கு முகமே சரியில்லை....." என முகத்தை சுருக்கியபடி கேட்க...

"சாத்வி சரியான இடத்தில் தான் சேர்ந்திருக்கா.....சத்ரி சாத்வியை சமாளிச்சுப்பான்.... நீ இதில் தலையிடாத....." என மகா சுள்ளென விழுந்தார்....

அதில் மேலும் முகம் சுருங்க... "ஏன்மா... சாத்வியை பத்தி எது பேசினாலும் , திட்டிட்டே இருக்கீங்க..." என கேட்க.....

"சாத்வி வாழ்க்கை நல்ல படியா அமைஞ்சிருக்குன்னு, சந்தோஷமா இருக்கேன்..... ஏதாவது பேசி குழப்பம் பண்ணிடாத... எங்ககிட்ட பேசின மாதிரி உன் அப்பாகிட்ட பேசிடாத.... இது தான் சாக்குன்னு, இரண்டு பேரையும் பிரிச்சிட போறாரு..." என கடுமையுடன் கூறி....

"பெரியவங்க பேசிட்டு இருக்கும் போது உனக்கு இங்கே என்ன வேலை... கிளம்பு..... "என கிருத்திகாவை அனுப்ப.....

முகம் வெளிற வெங்கட்டிடம் வந்தாள் கிருத்தி….. "என்ன கிருத்தி முகம் …..ஏன்…. ஒரு மாதிரி இருக்கு... அழுதியா…. "என யோசனையாய் கேட்டான் வெங்கட்…..

அவளும் தன் முகத்தைமாற்றியபடி….. "நம்ப வீட்டுக்கு போன அப்பறம்... சாத்விக்கு என்ன நடந்ததுன்னு அத்தைகிட்ட கேட்டு சொல்றீங்களா...'' என மெதுவாய் கேட்டாள்…..

"நான் என்ன கேட்டா... நீ என்ன பதிலுக்கு கேட்கிற...''என அவளருகில் வர…..

"சாத்வி ரொம்ப அடி பட்டிருக்கா வெங்கட்...'' என நிறுத்தி "என்னால...'' என வெங்கட் முகம் பார்த்து கூற...

"ஹேய்... நீ வேற ஏண்டி லூசு மாதிரி பேசற...'' என வாய் கேட்டாலும்….. வெங்கட்டிற்கு ஏற்கனவே இருந்த சந்தேகம் தான், ஆனாலும் அவளிடம் காட்டாமல் மறுத்து பேசினான்…...

"இல்லை… எனக்கு தெரியாமல் ஏதோ பிரச்சனை பண்ணியிருக்கேன்….. "என வெங்கட்டின் நெஞ்சில் சாய்ந்தாள்…..

அவளின் தோளை மெதுவாய் வருடி ….. "சரி, கேட்கிறேன்... பேசி சரி பண்ணலாம்…..கவலை படாத... "என வெகுநேரம் போராடி சமாதானம் செய்தாலும் இருவரின் மனதிலும்...' என்ன நடந்திருக்கும்…. சாத்விக்கு...' என எண்ணாமல் இருக்க முடியவில்லை... இருவரும் தங்களின் இறந்த காலத்திற்கே சென்றனர்….

அதே நேரம்... சாத்வியை அழைத்து வந்த கிருத்திகா...சத்ரியின் அறையினுள் நுழையும் போதே..... "சத்ரி உள்ளே தான் இருக்கான்.... கதவை லாக் பண்ணிக்க.... "என கூறி அங்கிருந்து செல்ல...

உள்ளே நுழைந்த சாத்வி கதவை லாக் செய்து சத்ரியை தேட.... அங்கே அவனிருப்பதற்கான எந்த அரவமும் இல்லை.....

கண்கள் தூக்கத்திற்கு கெஞ்ச..... சத்ரியிடம் பேச வேண்டுமே ..... என்ற எண்ணம் தலை தூக்க.... சோபாவில் அமர்ந்தபடி தலை சாய்த்தாள்.....

நேற்றிலிருந்து சத்ரி செய்த ஒவ்வொரு செயலும் சாத்விக்கு தலை வலியைக் கொடுத்தது என்றால், திடீரென ரமேஷிற்கு பதிலாய் சத்ரி எப்படி தன் கழுத்தில் தாலி அணிவித்தான், .....? எப்போது நடந்தது இந்த மாப்பிள்ளை மாற்றம்... ?

நலுங்கு வைக்கும் போது கூட ரமேஷின் அம்மாவும் அப்பாவும் கூட நலங்கு வைத்தார்களே... ! என மூளையை குடையும் போதே.... சடாரென நிமிர்ந்தாள்..... ஒருவேளை நிச்சயதார்த்தம் அப்போவே சத்ரி தான் மாப்பிள்ளையா...!

அதான் அவ்வளவு உரிமையாய் என் கன்னத்தில் சந்தனம் இட்டு , அவ்வளவு மகிழ்ச்சியாக இறங்கிச் சென்றானா.....?

அப்போவே சத்ரி தான் மாப்பிள்ளை என்றால் ஏன் என்னிடம் யாருமே கூறவில்லை..... யாருமே என்ன..... ? இந்த சத்ரி கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே...!

நானாக சென்று அம்மாவிடம் கேட்க போய் 'ரமேஷின் காதல் 'தெரிந்தது..... இல்லையென்றால் அதுவும் தெரிந்திருக்காதே.....

என்னுடைய ஆசைகளை ஒருவரும் மதிக்கமாட்டார்களா....? ஆரம்பத்தலிருந்து சத்ரியின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நினைக்க நினைக்க சாத்விக்கு, தலை வெடித்து கொண்டிருந்தது.....

எண்ணங்கள் தறி கெட்டு ஓட.... இதற்கிடையில் முதலிரவிற்கான ஏற்பாடுகளும் நடந்ததை நினைத்து... அத்தனை கோபமும் சத்ரியை மட்டுமே குறிவைக்க..... என்ன செய்வது..... எப்படி நடந்து கொள்வது என தெரியாமல் தலையை பிடித்தபடி இருந்தாள்......

உடை மாற்றும்அறையிலிருந்து சாத்வியின் நடவடிக்கைகளை பார்த்த சத்ரி.,... சாத்வியின் வேதனையை புரிந்து கொண்டான்.... காலையில் இருந்து அவள் படும் அவஸ்தைகளையும் கண் கூடாய் பார்த்தானே... 'நானும் சேர்ந்து ரொம்ப படுத்திட்டேன் போலவே...' என தனக்குள்ளே கேட்டுக் கொண்டான் ,

சாத்வியின் சுருங்கிய நெற்றியை பார்த்துக் கொண்டிருக்கும் போதே…. அவள் நெற்றியை இரு புறமும் அழுத்தமாய் பிடிப்பதையும் பார்த்து... அவளின் தலை வலியை உணர்ந்தான்…..

தைலம் ஒன்றை கைகளில் எடுத்துவந்து சாத்வி சாய்திருந்த சோபாவின் பின்புறம் நின்றான்….. அப்படியே பின்னால் இருந்து அவளின் தலையை தன்னை பார்க்குமாறு விளிம்பில் சாய்த்து...அவள் நெற்றியில் தேய்த்து லேசாய் பிடித்துவிட ஆரம்பித்தான் சத்ரி…..

சத்ரியின் தொடுகையில் அவனை உணர்ந்து திரும்பும் முன் நாசியை நிறைந்த தைலத்தின் வாசனையும், இதமான பிடிப்பும் சாத்வியை அப்படியே அமர வைக்க….. அவனிடம் தன்னை கொடுத்தபடி இருந்தாள்….

சிறிது நேரத்தில்அவள் தலையிலிருந்த அத்தனை மல்லிகையும் சத்ரியால் அகற்றபட்டது….. அதை எடுத்து டிரஸ்ஸங் டேபிள் டிராயரில் போட்டு மூடிவிட்டு வந்தான்…..

பூவை அகற்றியதில் தலையின் பாரம் வெகுவாய் குறைந்தது என்றால், தான் சொல்லாமலேயே பூவை அகற்றி தலைவலியை குறைத்தவன், தெரிந்தே ஏன் தனக்கு இவ்வளவு வலியைக் கொடுத்தான்... என நொந்து கொண்டாள்...

அவளின் நெற்றி சுருக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைவதை அவளின் முகமே காட்டிக் கொடுக்க…. மேலும் சில நேரம் தேய்த்து, சகஜ நிலைக்கு திருப்பினான் சத்ரி…..

தன் புருவங்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த சத்ரியின் கைகளை தன் மென்மையான விரல்களால்…..பற்றி தன் கன்னத்தில் வைக்க…..அதற்காகவே காத்திருந்தாற்போல் கண்களிலிருந்து நீர் உடைப்பெடுக்க…..

"இதுக்கு என்னை கொன்னு போட்டிருந்தால் கூட, இவ்வளவு வலிச்சிருக்காது சத்ரி…’’ என உணர்ச்சிகளின் பிடியில் கண்களை திறக்காமலேயே , கண்ணீர் வடிய சாத்வி கூற…

அந்த வார்த்தைகளில் சத்ரியின் உடல் ஒரு முறை சிலிர்த்து அடங்க…….அதில் உடல் அதிர்ந்தது சத்ரிக்கு…. அவனின் அதிர்வை அப்படியே சாத்விக்கு உணர்த்தியது , சத்ரியின் கைகள் மூலம்…..

அந்த கைகளை அப்படியே தன் கன்னங்களுக்குள் அழுத்தமாய் புதைத்தபடியே கண்மூடினாள்…

சத்ரிக்கு அவனது கைகளை எடுக்க முடியவில்லை, அவ்வளவு அழுத்தமாய் பற்றி இருந்தாள்

பட்டென சாத்வியின் கைகள் சத்ரியின் கைகளை விலக்கியது…..

‘‘நீ தூங்கு சத்ரி…..’’ என அவனிடமிருந்து விலக….

அவளை மீண்டும் அதே இடத்தில் அமர வைத்து "எதுக்கு இவ்வளவு வேதனை படனும்...’’ என அவள் முகத்தை நேராக பார்த்துக் கேட்க...

'அவனை எப்படி கையாறுவது என தெரியாமல் நின்றிருந்தாள்' பதிலில்லை அவளிடம்...

"உன் சத்ரி தானே.... அப்பறம் ஏன் அழனும்.....’’ அவளின் அமைதியை சத்ரியே உடைத்தான்......

அந்த வார்த்தைகள் நன்றாகவே வேலை செய்ய.....

‘‘நீ என் சத்ரியே இல்லை.....’’என அடக்கி வைத்த கோபம் கொப்பளிக்க.....சாத்வி அவனிடம் சீறினாள்.....

"என் சத்ரி என்னை அழவிடவும் மாட்டான், அழ வச்சவங்களையும் சும்மா விட மாட்டான்.....ஆனா நீ என்னை அழ வச்சிட்ட .... ஒரு நாள் இரண்டு நாள் இல்லை..... உன்னை பார்த்த நாளில் இருந்து இதோ இப்போ..... இந்த நேரம் வரை அழ வச்சிட்ட்....ல்ல...’’

என அழுகையும் வெடிக்க...

சாத்வியின் இந்த பிரதிபலிப்பை எதிர்பார்க்காத சத்ரி..... இந்த நாளை இந்த நொடியை எப்படி சமாளிப்பது என தெரியாமல் முதல் முறையாய் கதி கலங்கிப் போய் நின்றான்.....

சத்ரி பேசுவதற்கு இடமே கொடுக்காமல் .....

"என்னை தனியா விட்டுடு சத்ரி….. உன் முன்னாடி என்னால் அழ கூட முடியலை…..என்னை தனியா விடு … விட்டுடு…'' என அழுகையை அடக்கிய குரலில் கூற… அதற்கு மேல் சத்ரியும் எதுவும் பேசவில்லை…..

அப்படியே…… சோபாவில் சாய்ந்து ….. அடிபட்ட குழந்தையாய் முகம் வேதனையில் சுருங்க… பார்க்கவே பாவமாய் இருந்தாள் சாத்வி…..

சோபாவின் மேல் சத்ரி, கீழே சாத்வி… என இருக்க…. அழுகையை தொலைத்து, சாத்வியின் மனம் அமைதியை நாட….. அமைதியை தொலைத்து சாத்வியின் மகிழ்ச்சிக்காய் தவித்துக் கொண்டிருந்தது சத்ரியின் மனம்…..

எங்கோ வெறித்தபடி சாத்வி இருக்க…. அவளை வெறித்தபடி சத்ரி இருக்க….. இரண்டு மூன்று மணி நேரங்கள் ஓடி…. நள்ளிரவை தொட்டுக் கொண்டிருந்தது…

சாத்வியின் மனமும் ,உடலும் கொஞ்சமும் ஓய்வைத் தேடாமல் இருக்க…… சத்ரி ஒரு முடிவுடன் சாத்வியின் அருகில் நகர்ந்தான்….

ஓய்ந்து போய் கண்களை மூடியிருந்த சாத்வியை நெருங்கி…

"சாவி…'' என அன்று கேட்ட அதே…. மனதை கிழிக்கும் குரலில் படாரென கண் திறந்தாள்… சாத்வி……

முகம் ஒன்று கூற.... குரல் ஒன்று கூறியது.... எது உண்மை என தெரியாத அளவு .... சாதாரணமாய் அமர்ந்திருந்தான்....

மீண்டும் அவள் கன்னத்தில் கை கொடுத்து தன் முகம் காண செய்தான் சத்ரி.... சோபாவின் விளிம்பில் தலை மேல் நோக்கி இருக்க.... சத்ரி அவள் முகத்தை பார்த்த வண்ணம் கீழ் நோக்கி இருக்க.... அவள் விழிகளுக்குள் நுழைந்தான்...

"உன்னை கொன்னு போடுறதுக்காக உன் கழுத்தில் தாலி கட்டலை...." அமைதியாய் வெளிப்பட்டது அவன் ஆத்திரம்....

"ம்ப்ச்.... நீயும் என்னை ஏமாத்திட்ட சத்ரி.... நீ மாறிட்ட.... நீ என்னோட சத்ரி இல்லை.... என் சத்ரி என்னை அழ விடவே மாட்டான்.... அழ வச்சங்களையும் சும்மா விட மாட்டான்... நீ பொய் .... நீ பொய்...." அழுகை நின்று அழுத்தமாய் வந்தது குரல்.... ஏற்கனவே சொன்ன வார்த்தைகளை அப்படியே போட்டாள்...

"ஐயோ.... நான் உன் சத்ரி தாண்டி...." என சத்தமாய் கூற வேண்டும் போல் இருந்தது.... ஆனால் அப்படியே கூறாமல் வார்த்தைகளை திருப்பி போட்டான்...

"நான் உன்னோட சத்ரி , உன்னை என்னைக்குமே அழ வைக்க கூடாதுன்னு நினைச்சதால தான் இந்த கல்யாணம்... உன் சந்தோஷத்தை உனக்கு திரிப்பி கொடுக்குற உன்னோட அதே சத்ரி தான்... இப்போ என்னால் ஃப்ரூவ் பண்ண முடியும்..." என

அவள் கண்களில் நுழைந்து அவளுக்கு தன்னை புரிய வைத்தான்...

அந்த வார்த்தைகள் அவளுள் பதிய.... இதயம் துடிக்கும் ஓசை மட்டும் காதை கிழிக்க..... "கல்யாணத்தில் நீ என்ன குளறுபடி செஞ்ச.... சத்ரி....'' என அவன் சொன்ன வார்த்தைகளில் தனக்கு தேவையானதை மட்டும் கேட்டாள்.....

கண்களின் கீழ் இமைகளில் வைரக் குமிழியாய் நீர் உருண்டு இருக்க..... அதீத ஆசையை கண்களில் தேக்கி ... சாத்வி கேட்க.....

"சாவி..... செம ஷார்ப் தான்...போ... "என நிஜமாகவே சத்ரி பாராட்ட... சாத்விக்கோ அவன் கிண்டல் செய்வது போல் தோன்ற...

"என்ன.... நக்கல் பண்றியா...'' என சீறீனாள் , தன் கண்களை துடைத்தபடி......

அதற்காகவே காத்திருந்தார்ப் போல்...கப்பென பிடித்துக் கொண்டான் சத்ரி.... "பின்னே கிண்டல் பண்ணாமல்..... என்ன செய்வாங்களாம்.....'' என உதட்டிற்குள் சிரிப்பை அடக்கிய படி சத்ரி இருக்க.....

'இன்னும் நீ பதில் சொல்லவில்லை....' என்ற தோரணையில் சாத்வி நிற்க...

"பின்னே ஃபர்ஸ்ட் நைட்டில் எவ்வளவு டவுட்ஸ் க்கிளியர் பண்ண வேண்டி இருக்கு... நீ என்னடான்னா... "என அவளை சத்ரியின் பார்வை துளைத்து செல்ல...சாதாரண மனைவியாய் அவள் மனம் உருவம் எடுக்க…..அவள் மனதிற்குள் சின்ன போர்க்களமே மூண்டது…..

"கொஞ்சம் புரியிற மாதிரி சொல்றியா….'' என கடுப்புடன் கேட்டாள்…..

"'என்னால் ப்ரூப் பண்ண முடியும்ன்னு' ஒரு வார்த்தை சொன்னேன்... நீ அதை மட்டும் விட்டுட்டு…. உனக்கு தேவையானதை மட்டும் எடுத்துகிட்ட பார்த்தியா...'' என விஷமமாய் கேட்க...

சிரியாய் புரிந்து கொண்டாள் சாத்வி…..

முதலிரவு…. ஆண்களில் மனதில் மனைவியாய் உருப்பெற்றவளின் மீது ஏற்படும் உணர்வுகளுக்கெல்லாம் உருவம் கொடுக்கும் இரவு…..

சத்ரிக்கும் கண்டிப்பாய் இருக்கும்…. ஆனாலும் இப்போது அது முடியாது….. என மனதை திடப்படுத்திக் கொண்டு…..

"எனக்கு தூக்கம் வருது...'' என மெல்ல கட்டிலில் அமர்ந்து படுத்தவள்….. சிறிது நேரத்தில் அதே வேகத்தில் எழுந்து , போர்வையை முழுவதுமாய் போர்த்தி துயில் கொள்ள ஆயத்தமானாள்…..

அவளின் செயல்….. சிரிப்பை வரவழைக்க….. அவளருகில் சென்று… "நான் என்னத்தை பார்த்திடுவேன்னு… நீ இப்படி இழுத்து போத்தி தூங்குற…ம்ஹூம் தூங்குற மாதிரி நடிக்கிற…'' என . போர்த்தி இருந்த போர்வையை அப்படியே உருவினான்……

போர்வையோடு சேர்ந்து அவளின் புடவை தலைப்பும் சத்ரியின் பிடியில் இருக்க…. அவன் இழுத்த இழுப்பில், பின்னையும் பிய்த்துக்கொண்டு புடவை அவன் கையில் இருக்க…

சட்டென பார்வையை திருப்பிக் கொண்டான் சத்ரி, இதழ்கள் விஷமமாய் சிரித்தபடி…

ஒரு நொடி என்றாலும் காண கிடைக்காத சாத்வியின் தரிசனம்… சத்ரிக்கு அப்படி ஓர் உணர்வு…

சத்ரியின் செயலில் அதிர்ந்து நிற்காமல்… அவன் கையில் இருந்த புடவையை பிடுங்கி தன் மேல் போட்டு கொண்டு ……. "அதான் பார்த்துட்டேல்ல… சும்மா நல்லவன் மாதிரி நடிக்காத…'' சண்டைக்கு தயாராக…..அவள் நிற்க…..

அவளின் வார்த்தைகளில் திரும்பி இருந்த பார்வையை அவளின் புறமாய் திருப்பியவனின் பார்வை இன்னும் இன்னும் ஏதேதோ உணர்வுகளை அப்பட்டமாய் காட்ட…

'இவன் ஏன், இன்னும் இப்படி பார்க்கிறான்...' என குனிந்து தன்னை பார்க்க.....

ஷாக் அடித்தாற்போல், மீண்டும் புடவை தலைப்பை சரி செய்தாள்.... பின்னே புடவை தலைப்பு எதை மறைக்க வேண்டுமோ, அதை மறைக்காமல் அப்படி காட்டியது.....

சத்ரியிடம் சண்டையிடும் ஆர்வத்தில், புடவையை அந்த லட்சனத்தில் தோளில் போட்டிருந்தாள்..........

அவளின் செயலில் சத்ரியின் முகம் மென்மையாய் மாற... "பர்ஸ்ட் நைட் நடக்காமலேயே இவ்வளவு கிக்..... அப்போ நடந்தா....?....." என அவளை தன்புறமாய் திருப்பி அருகில் செல்ல..... சத்ரி அருகில் நெருங்குவதை உணர்ந்து

'எனக்கு தூக்கம் வருது....." என மீண்டும் நகர... அவளின் கையை இழுத்துப்பிடித்து நிறுத்தினான் சத்ரி.....

"பர்ஸ்ட் நைட்டில் யாரும் தூங்க மாட்டாங்க....." என விவரமாய் பேச.....

"தூங்காம..." என கடுப்பாய் கேட்க....

"தூங்காமல் பர்ஸ்ட் நைட் கொண்டாடுவாங்க....."

"ஓ..... அப்போ நீ என்ன மெஷினா.....?"என கேட்டுவிட....

"வா... காட்றேன்....." என அவளை தனக்குள் அடக்கினான் சத்ரி...

"எ…எ….என்ன…..'' என திரு திருவென முழிக்க...

"மெஷினான்னு ….நீ தானே கேட்டே... நான் மெஷினா…..இல்லை மனிதனான்னு….. காட்றேன்னு சொன்னேன்…..'' என தெளிவாய் விளக்க…..

அவன் பிடியில் இருந்து திமிற... தள்ளி நின்று கொண்டாள்…. சத்ரியை காயப் படுத்த கூடாது என நினைத்து அமைதியாய் இருந்தவளுக்கு சத்ரியின் செய்கை கோபத்தை கொடுக்க... அவனை வார்த்தையாய் சுடு பொசுக்கினாள்...

"பெரிய, பர்ஸ்ட் நைட், பர்ஸ்ட் நைட்ன்னு பாட்டு பாடற... அந்த கல்யாணம் நிக்க போய், நீ எனக்கு புருஷனா இங்கே நிக்கிற,...…. இப்படி பேசிட்டு இருக்க... சப்போஷ்... ரமேஷை கல்யாணம் பண்ணியிருந்தா, இப்போ நான் அவன் கூட…..'' என சொல்லி முடிக்கும் முன்...

சாத்வியின் காதில் இடியே விழுந்தார் போல் சத்ரியின் கைவிரல்கள் பதிந்திருக்க…..

"இனி அவனோட பேர்கூட உன் வாயில் இருந்து வர கூடாது… இனி நான் மட்டும் தான்…. உன்னோட புருஷனா, உன்னோட சத்ரியாய்…. நான்…. மட்டும் தான் இங்கேயும் இருக்கனும், இங்கேயும் இருக்கனும்...'' என அவள் இடது மார்பின் மீதும்... அவளின் நெற்றிப் பொட்டின் மீதும் பட்டும்

படாமல் தொட்டு'' என்ன புரிஞ்சதா…..'' என அவளை இழுத்துக் கொண்டு கட்டிலில் விழுந்தான்…..

கைகள் அவளை பிடித்திருந்த பிடியை சிறிதும் தளர்த்தவே இல்லை...அப்படி ஒரு உடும்புப்பிடி...

சத்ரி விட்ட அடியில் அழுகை கூட வரவில்லை சாத்விக்கு….. அதையும் மீறிய நிம்மதி பரவ….. சத்ரி எப்படி பிடித்திருந்தானோ…. அப்படியே உறங்கிப் போனாள் சாத்வி...

தன் சத்ரயின் நினைவுடன்...

# அத்தியாயம் 12

**வெ**ங்கட் கிருத்தி..... சத்ரி, சாத்வி... இரு ஜோடிகளும் தங்களின் பால்ய காலத்திற்கே சென்றனர்...

"அம்மா ..... பாப்பா..... அழகா இருக்கம்மா..." என அப்போது தான் ஜனித்திருந்த பெண் குழந்தையின் பிஞ்சு விரல்களையும், கால்களையும்... முகத்தையும் மெதுவாய் வருடியபடி தன் தாயிடம் கூறிக்கொண்டிருந்தான் ஐந்து வயது சத்ரியின்...

"ஆமாண்டா..... குட்டிப் பாப்பா அழகா இருக்காடா..." என தன் பங்கிற்கு கேட்ட விநாயகம்..... குழந்தையின் புறம் அன்னை மகன் இருவர் மட்டுமே இருந்தனர்.....

அதை உணர்ந்து..... "சங்கர் எங்கே சிவகாமி... "என மெதுவாய் கேட்க.....

"இரண்டாவது பையன் பிறப்பான்னு ஆசையாய் இருந்தாங்க ... பொண்ணா போச்சுன்னு , வெளியே போய் உக்கார்ந்துகிட்டாங்க..." என சிவகாமியும் மெதுவான குரலில் கூற....

"நீ குழந்தையை பார்த்துக்கோ... சங்கர்ட்ட பேசிட்டு வாரேன்..." என சங்கரிடம் சென்றார்...

"மாப்பிள்ளை... இரண்டாவதா ஒரு மருமகளை கொடுத்துருக்க... ட்ரிட்லாம் எதுவும் இல்லையா…..'' என சங்கரின் முதுகில் தன் கையை வைத்தபடி அருகில் அமர...

"ம்ப்ச்….. இரண்டாவதும் பொண்ணா போச்சேன்னு கவலையில் இருக்கேன்….. இதில் ட்ரிட் வேறையா…..'' என சங்கர் சலித்துக் கொள்ள…..

"பொம்பள பிள்ளை பிறக்கலாம் ஒரு அதிர்ஷ்டம் வேணும்டா... இரண்டாவதும் மகாலட்சுமி பிறந்திருக்கான்னு சந்தோஷபடுடா... அதை விட்டுட்டு கவலை பட்டுட்டு இருக்க...'' என சங்கரிடம்

அதற்கு சங்கரிடம் பதிலில்லாது போகவே... "வேணும்னா, வெங்கட், இல்லை சத்ரி யாரையாவது வச்சிக்க... இந்த புள்ளையை எங்கிட்ட கொடுத்துடு... நான் ராணி மாதிரி வளர்க்கிறேன்டா…..'' என மீசையை முறுக்கியபடி... சங்கரின் தன்மானத்தை சீண்டி விட…..

"ஏன் என்னால் வளர்க்க முடியாதா... நானும் வளர்ப்பேண்டா ராணி மாதிரி…'' என விநாயகம் எதிர் பார்த்த பதிலை கொடுக்க...

தனக்குள் சிரித்தபடி….. "அப்பறம் ஏன் இங்கே உக்கார்ந்தருக்க….. வா….. உன் ராணியை வந்து பாரு...'' என

இப்போதைக்கு சமாதானம் செய்து விட்ட திருப்தியில் மகாவிடம் அழைத்துச் சென்றார் விநாயகம்...

அழகு குவியலாய் இருந்த இரண்டாவது மகள் சங்ருக்கு நிஜமாய் மகாலட்சுமியாய் தான் தெரிந்தாள்... 'பையன் பிறக்கலையே.....' என ஒரு ஓரம் குத்திக் கொண்டு தான் இருந்தது சங்கருக்கு... ஆண் பிள்ளை ஆசை யாரை விட்டது... சங்கருக்கும் அது பெரும் கவலையாய் பதிந்து விட்டது....

ஆனால் எதையும் ஏற்றுக் கொள்ளும் மகாவிடம் அது கொஞ்சமும் தெரியவில்லை போலும்..... தாய்மையின் பூரிப்பில் ஆசை தீர மகளை கொஞ்சிக் கொண்டிருந்தாள் மகா...

'சரி ஆகிடுச்சா......... 'என்பது போல் விநாயகத்திடம் கண்களாளேயே சிவகாமி கேட்க...

'ம்ம்ம்...' என தலையசைத்து மனைவிக்கு பதிலளித்தார் விநாயகம்.....

-----------------------------

"அம்மா , பாப்பாக்கு இந்த டிரஸ் எடுக்கலாம்..... "என அதை பிரட்டி பிரட்டி பார்த்து..... "இல்லை மா.... இது வேணாம்..... இதோ..... இதெல்லாம் குத்தும்..... வேண்டாம்..... "என கையிலிருந்த நெட் ப்ராக்கை தூக்கி வைத்து விட்டு , ஏற்கனவே குவிந்திருந்த உடைகளை மீண்டும் ஆராய ஆரம்பித்திருந்தான் சத்ரி...

விநாயகமும், சிவகாமியும் ஓரமாய் ஒதுங்கிக் கொள்ள... வெகு நேர தேடலுக்கு பின் சத்ரிக்கு பிடித்தமான உடையை தேடி எடுத்து.... அதை தன் தாயிடம் காட்டி..... "அம்மா , இது பாப்பாக்கு நல்லா இருக்கும்... "என சத்ரி கூற.....

அதையே எடுத்துக் கொண்டு வெளியே வந்தனர்...

அப்படியே நகைக் கடைக்கும் சென்று , இரண்டு பவுனில் மெலிதாய் ஒரு செயினும் வாங்கிக் கொண்டு வந்தனர்... அதையும் சத்ரியே அவனுக்கு பிடித்த மாதிரியே வாங்கினான்...

சங்கரின் இரண்டாவது குழந்தைக்கு பெயரிடும் விழாவிற்காக வாங்கினார்கள்..... அதை மறுதாள் கொண்டு சென்று கொடுக்க..... இரண்டையுமே சத்ரி தான் அணிவித்தான்...

"குழந்தை பெயரை காதில் மூனு தரம் சொல்லிடுங்கோ... "என கோவிலில் இருந்த குருக்கள் கூற...

"நான் தான் சொல்வேன்..... நான் தான் சொல்வேன்....." என அதற்கும் ஆர்ப்பாட்டம் செய்து... சத்ரி தான் முதலில்... "சாத்வி.... சாத்வி..... சாத்வி..." என அந்த குட்டி தேவதையின் காதுகளில் அழுத்தமாய் கூறினான்...

ஒரே ஓர் சுவர் மட்டுமே மறைத்திருக்க..... இந்த புறம் சங்கரின் வீடு..... அந்த புறம் விநாயகத்தின் வீடு..... என அருகருகே இருந்தது இருந்தது அருவரின் வீடும்... சத்ரி இரு வீடுகளுக்கும் கேட்கும் படி கத்திக் கொண்டிருந்தான்.....

‘‘வேணாம்மா… வலிக்கும்ம்ம்மா…’’ முதலில் கெஞ்சலாய் வந்தது… வார்த்தைகள்…

‘‘அம்மா… வேண்டாம்மா…..’’ இம்முறை கொஞ்சம் அழுத்தமாய் வந்தது…..

‘‘வேண்டாம் சொல்றேன்ல….’’ அழுத்தமாய் … இன்னும் சற்று அதிகாரமாய் வந்தது…

தான் சொன்ன எதையுமே காதில் வாங்காமல், வீட்டினுள் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த அன்னையை தன் புறம் திருப்பும் வண்ணம்… தன் கீச்சு குரலில் கத்திக் கொண்டிருந்தான் ஐந்து வயது சத்ரியன்…..…

அவனின் பேச்சை காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் , கட்டிலில் மெத்தையென இருந்த காட்டன் டவலினுள் புதைந்திருந்த சாத்வியை அப்படியே அள்ளிக் கொண்டாள் சத்ரியனின் அன்னை…

ஒரு கையில் குழந்தையை வைத்தபடி மறு கையால் சத்ரியனின் விடாத கத்தலில் தன் காதுகளை அழுத்தமாய் தேய்த்துக் கொண்டு…..

"நீ கத்தி கத்தியே , என் காது சவ்வு கிழிஞ்சிடுச்சுடா… ஒழுங்கு மரியாதையா போய்டு… இல்லை உனக்கும் சேர்த்து ஊசி தான்…..’’ என மிரட்டினாள் சத்ரியனின் அன்னை….

'நான் இதுக்கெல்லாம் பயப்படுவேனா….. 'என்ற ரேஞ்சில்…. "பாப்பாக்கு ஊசி வேண்டாம்... வலிக்கும்…….அவ அழுவா……. பாப்பா பாவம்…..'' என சிவகாமியின் வழியை மறைத்தபடி வதாடிக் கொண்டிருந்தான் சத்ரியன்….

'இவனை எப்படி தான் சமாதானம் செய்ய….' என மூளையை குடைந்த சிவகாமி….. மிரட்டலை கை விட்டு சத்ரிக்கு புரியும்படி பேசினாள்…..

‘‘டேய்…..இது தடுப்பூசிடா, இது போட்டாதான் பாப்பாக்கு எந்த நோயும் வராது... வலிக்குன்றதுக்காக போடாம இருக்க முடியாது….'' என சத்ரியனிடம் கெஞ்சினாள் சிவகாமி...

அன்னையின் கெஞ்சலை கண்டு கொள்ளாமல் "ஊசி வேணாம்னா வேணாம்...'' இன்னும் பிடிவாதம் பிடித்தபடி அந்த வயதிலேயும் முறைத்துக் கொண்டிருந்தான் சத்ரி…….

அவன் முறைப்பை பார்த்தபடி "ஏண்டா கொல்ற... சொன்னா கேளுடா…..'' என வித விதமாய் வெள்ளைக் கொடி பறக்கவிட...

"ஊசி வேண்டாம்…..'' என்ற தெளிவான பதில் …. அந்த ஐந்து வயது சிறுவனிடம்...

சத்ரியனின் பிடிவாதம் ஏறிக் கொண்டே இருந்தது... தடுப்பூசி போடும் நேரமும் நெருங்க….. தன் கணவனை

உதவிக்கு அழைத்தாள் சிவகாமி... ‘‘ஏங்க ... ஏங்க….. ..’’ என அவள் பங்கிற்கு சத்தமாய் அழைக்க...

‘ம்ஹூம் தன் காதில் விழவில்லை' என ஐந்தாறு அழைப்பின் பின்னரே வந்தார்…..

"எதுக்கு என்னை ஏலம் போடுற…..சிவகாமி’’ அங்கே வந்தார் சிவகாமியின் கணவன் விநாயகம்…..

"உங்களை ஏலம் போட்டு எனக்கென்ன ஆகப் போகுது…..இவன் தொல்லை தாங்க முடியல….. இவனை எங்கையாவது கடத்திட்டுப் போங்க….சாத்விக்கு ஊசி போடனும்…..என்கூட வந்தா ஒருவழி ஆக்கிடுவான்….’’ என தன் கணவனிடம் சத்ரியனைப் பற்றி புகார் கூற….

அதற்கு சத்ரியன்…’’ அப்பா, ஊசி சாத்விக்கு வேணாம்..சாத்வி பாவம் … வலிக்கும்…அழுவா…..அப்றம் நானும் அழுவேன்…..’’ என தன் சின்ன செப்பு இதழ்களால் , வாயை குவித்தபடி கூறினான் சத்ரி…..

சத்ரியன்….. சிவகாமி- விநாயகத்தின் இரண்டாவது மகன்…. விநாயகத்தின் நண்பனின் மகள் தான் சாத்வி…..

பிறந்தது முதலே சாத்வியின் மீது அளவற்ற பாசம் வைத்திருப்பவன்... அவளுக்கு வலித்தால் தனக்கே வலித்தது போல் பேயாட்டம் ஆடுபவன்….

சாத்வியின் தாய் மகாலட்சுமி உடல் உலைச்சலில் சற்று கண்ணயர்ந்திருக்க, சாத்விக்கு தடுப்பூசி போட சிவகாமியே பொறுப்பெடுத்துக் கொண்டார்….

"சாத்விக்கு ஊசி போட்டா தான் , அவ நல்லா பெரிய பொண்ணா வளருவாடா…'' என்றார் சிவகாமி

"அவ …வளர வேணாம்… அப்படியே குட்டியா இருக்கட்டும்...'' பாய் கட் என்ற பெயரில் பின் தலையில் குறைந்த முடியுடனும், முன்னால் அதிகமான முடியுடன் இருந்தவன் அதை சிலுப்பியபடியே கூற….

"வளரவில்லைனா….எப்படி உன் கூட விளையாட வருவா…?'' என அவனுக்கு புரியும் படி எடுத்துறைக்க….

"நல்லா சாப்பிட்டா சீக்கரம் வளர்ந்துருவா…..'' என சிவகாமி அவ்வப்போது கூறும் வார்த்தைகளை அந்த வயதிலேயே திருப்பி போட்டான் சத்ரி…..

அதை புரிந்து கொண்ட சிவகாமியும் பல்லைக் கடித்த படி... "சாப்பிட்டால் மட்டும் போதாதுடா... ஊசியும் போடனும் தம்பு...'' என பொறுமையாகவே கூற...

அவனோ….'' சாத்விக்கு ஊசி வேண்டாம், நீங்க என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன்…..முடியவே…முடியாது….'' என ஒற்றைக்காலில் நின்றான்.

என்ன செய்தும் அவனை சமாதானம் செய்யமுடியவில்லை….. 'ஏதாவது செய்யுங்களேன்….' என பார்வையை தன் கணவனை நோக்கி திருப்ப….

மனையாளின் பார்வையை உணர்ந்தவரும்... "தம்பி …நாம கடைக்கு போகலாமா, ஐஸ்கரீம் வாங்கி தரேன்…….'' விநாயகம் ஆசை காட்ட

"வேணாம்…. அம்மா சளி புடிக்கும்னு சொல்லி இருக்காங்க…..'' என சமர்த்தாய் பதில் சொல்ல …..

என்ன பதில் சொல்வது என தெரியாமல் விநாயகம் முழிக்க்…..

'ஙே 'என விழித்த தன் கணவனை பார்த்த சிவகாமிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

அவளின் சிரிப்பை பார்த்தவர் தன் மனைவியின் முன் அசிங்கப் படுத்துவதை சகிக்காது 'இப்போ பார் 'என ரொமாண்டிக்காக ஒரு லுக் விட்டு "சரி ..வா உனக்கு கார் வாங்கி தரேன்….''

"நான் வரலை… மாமா நிறைய வாங்கி கொடுத்திருக்காங்க…..'' என்றான் சத்ரியன்... என பாலே இல்லாமல் சிக்ஸர் அடித்துக் கொண்டிருக்க…..

"டேய் போயேன்டா…'' தன் கணவன் 'இவன் அடங்க மாட்ரானே….' என்ற போசில் நிற்பதை பொறுக்காமல் சிவகாமி கடுப்புடன் கூற….

"மாட்டேன், நான் சாத்வி கூட தான் இருப்பேன்….இல்லாட்டி அவளுக்கு நீங்க ஊசி போட்டுடுவீங்க….நான் மாட்டேன்…'' என உடும்பு பிடியில் இருக்க…..

இப்படி சொன்ன எந்த சமாதானங்களும் அவனிடம் எடுபடாமலே போக..இறுதியில் இவனிடம் பேசி பயனில்லை என முடிவெடுத்து… இரண்டு நாட்கள் சென்று தான் சாத்விக்கு ஊசி போட வேண்டியதாயிற்று….

அன்றிலிருந்து சாத்விக்கு சிறு காய்ச்சல், சளி தொந்தரவு என்றாலும் சத்ரிக்கு தெரயாமல் தான் மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லும் நிலையும் வந்தது... வரவழைத்திருந்தான் சத்ரியின்…..

குழந்தைகளின் அன்பில் என்றும் கலப்படம் கிடையாது என சிறு சிறு செயல்களாலேயே அவ்வப்போது உணர்த்திக் கொண்டிருப்பான் சத்ரியன்.

நான்கு மாதங்களில் குப்புற விழ ஆரம்பித்து இருக்க... பள்ளி நேரம் தவிர்த்து சாத்வியே கதி என கிடப்பான் சத்ரி….. அவளை விட்டு சிறிதும் அகலாமல்...

அன்றும் அப்படித்தான்….. சிவகாமி கொடுத்த பூரியை சாப்பிட்டுவிட்டு அன்னையின் பின்னேயே சுற்றிக்

கொண்டிருந்தான் சத்ரி……… அதுவும் தரையை விட்டு கொஞ்சம் மேலே பறந்து கொண்டிருந்த புடவை முந்தானையை தன் கைகளில் சுற்றியபடி...

அவ்வப்போது அம்மா…அம்மா…. என அழைத்தபடியே சுற்றிக் கொண்டிருந்தான்….

தன் வேலைகளுக்கு குறுக்கே நிற்கும் அவனை முறைத்தபடி…..

"என்னடா வேணும்... ஏன் பின்னாடியே வர்ர…..'' கடுப்பாய் கேட்டாள்….

தாயின் கோபத்தை அவளின் முகத்தை வைத்தே அறிந்து கொண்டவன்……"அம்மா, சாத்வி எப்போ நடப்பா..'' என தயக்காமய் கேட்க….

"இப்போ தான் குப்புற விழுந்திருக்கா….. அதுக்குள்ள நடக்க சொன்னா என்னடா அர்த்தம்….. "என சத்ரியிடம் வாய் கொடுத்தபடி சமையல் வேலையில் இருந்தாள் சிவகாமி…..

"என் கூட விளையாட வரனும்னா, அவ நடக்கனுமேம்மா…..அதான் கேட்டேன்…..'' என தாயன் முகம் பார்க்க…..

"இதுக்காடா…. இவ்வளவு அலம்பல் பண்ணின…..'' என தலையில் லேசாய் தட்ட….

சின்ன சிணுங்கலை வெளிப்படுத்தியபடி "சொல்லும்மா…..'' என அழுத்தம்…..

"அதற்கு இன்னும் ஒரு வருசம் ஆகும்டா…'' என தான் விட்ட வேலையை பார்த்தபடி கூற

"அம்மா , சாத்வி எப்போ பேசுவா….'' என அடுத்த கேள்வியை கேட்க...

"அதற்கும் ஒரு வருசம் ஆகும்டா..,.'' என சிவகாமியின் வாய் தானாகவே கூற

"அம்மா, சாத்வி எப்போ எங்கூட விளையாட வருவா….'' என ஆசையாய் அடுத்த கேள்வியை முன் வைக்க…..

"அதற்கும் இரண்டு மூணு வருசம் ஆகும்டா…'' இந்த முறை இழுத்துப்பிடித்த பொறுமையுடனே கூற….

"அம்மா….'' என இன்னும் அடுத்து ஏதோ கேட்க வர...

"டேய், இதுக்கும் மேல ஏதாவது கேள்வி கேட்ட, கொன்னுடுவேன் கொண்ணு…. எழுந்து போடா…..'' கையில் வைத்திருந்த கரண்டியை காட்டி மிரட்ட...

கடுகடுப்பாய் பதில் கூறியதும் இல்லாமல் நிஜமாய் சத்ரியை மிரட்ட ஐந்து வயது பாலகன் உதட்டினை பிதுக்கி... அழுகையை அடக்க முடியாமல் "தடுப்பூசி போட்டா சாத்வி சீக்கிரம் வளருவானு நீங்களும் சொன்னீங்க , அத்தையும்

சொன்னாங்க...... அதான் எல்லா ஊசியும் போடுறீங்களே.... அப்புறம் ஏன் இன்னும் நடக்கலை... அதுக்காக தான் கேட்டேன்.....என்னை திட்டிட்டே இரு....'' கண்களை கசக்கியபடியே மாடிப்படியில் சென்று அமர்ந்து கொண்டான்....

சமையல் வேலையை விட்டு அவனருகில் வந்து "அவளுக்கு ஊசி போடுறது உனக்கெப்படி தெரியும்...'' என சிவகாமி கேட்க.....

"அண்ணன் தான் சொன்னான்.....'' என உதட்டினை பிதுக்கியபடி சொன்னான் சத்ரி...

அதையெல்லாம் வேடிக்கை பார்த்த படியே அவளின் அருகே வந்தான்..... சிவகாமியின் எட்டு வயது மூத்த மகன் வெங்கடேஸ்வரன்....

"சாத்விக்கு ஊசி போடுறதை ஏண்டா இவன் கிட்ட சொன்ன... "என வெங்கட்டை கேட்க...

திரு திரு வென விழித்துக் கொண்டிருந்தான் வெங்கட்.....

'சத்ரியை அழ வைக்க வேண்டும் என்று தான் , சாத்விக்கு ஊசி போடுவதை சத்ரியின் காதுகளில் போடுவான் வெங்கட்..... அப்படி சொல்லும் நாட்களில் எல்லாம் சத்ரியை அழ வைக்காமல் விட்டதே இல்லை வெங்கட்...

'சாத்வி….சாத்வி….' என காலையில் விடிவதில் இருந்து…இரவு அடையும் வரை சாத்வியின் புராணம் பாடும் சத்ரியின் மீது அளவு கடந்த கோபம்….

பின்னே சாத்வி பிறப்பதற்கு முன்பு, அண்ணா…அண்ணா என புராணம் பாடியவன் ஆயிற்றே…. தன் பின்னே வால் பிடித்து கொண்டு இருந்தவன் இப்போது கண்டு கொள்ளவில்லை என்ற கோபம்…..

வெங்கட் என்ன சொன்னாலும், என்ன கேட்டாலும் எளிதாய் விட்டுக் கொடுப்பவன்….

இப்போது அப்படியே சாத்வியை நோக்கி அந்தர் பல்டி அடித்தால்….கோபம் வராதா….வந்தே விட்டது…..

அதை நேரடியாக்காண்பிக்காது… சாத்வியை காரணம் காட்டி சத்ரியை அழ வைத்துக் கொண்டிருப்பான்….. 'இந்த திருட்டு தனத்தை தாயிடம் காட்டாது…. அங்கிருந்து ஓட்டம் பிடித்தான் வெங்கட்…..

அதை சாதாரணமாய் எடுத்துக் கொண்டு "இன்னும் ஒரு வருசத்தில் சாத்வி உன் கூட விளையாட வந்திடுவா... சரியா….. இப்போ நீ போய் அவ கூட விளையாட போ….. "என சமாதானம் செய்து அனுப்பி வைத்தாள் சிவகாமி…..

'சாத்வி என்றதும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினான் சத்ரி...'

ஏற்கனவே சத்ரியின் பிறப்பின் பின்....'' வெங்கட், நீ இப்ப பெரிய பையனா வளர்ந்திட்ட தானே, அம்மா தம்பியை கவனிக்கனுமாம். அம்மாவ ரொம்ப தொந்தரவு பண்ணாதடா...அம்மா பாவம் இல்லையா..... ''என தந்தை , அத்தை, மாமா, கடைசியாய் சிவகாமி என அனைவரும் அட்வைஸ் மழை பொழிய.....அவர்களிடம் இருந்து ஒதுங்கினான்.....

அவனைப் போலவே இன்னொரு ஜீவனுக்கும் இன்றைக்கு மகாவின் வீட்டில் ஓதிக் கொண்டிருந்தனர்....

அவள் மகா- சங்கரின் மூத்த புதல்வி கிருத்திகா.....

சாப்பிட்டாளா ஸ்கூல் போனாளா,??? .... வீட்டில் என்ன செய்கிறாள்...இதை மட்டுமாவது கவனித்தவர்கள்...சாத்வி பிறந்த பின் அதையும் கண்டு கொள்வதில்லை......''

கிருத்திகாவிற்கும் கிட்ட தட்ட வெங்கட்டின் நிலை தான்..... இருவருமே தந்தை தாயின் பாசத்தை உணர மறுத்தனர்...

சாத்வி பிறந்த போதும்,, பொக்கை வாயை காட்டி சிரிக்கும் போதும் , குப்புற, விழும் போதும், தவளும் போதும், எழுந்த அமரும் போதும் எல்லோரையும்தன் புறமாய் இழுத்துக் கொண்டிருந்தாள் சாத்வி... ஆனாலும் எல்லோரையும் விட சத்ரி தான் குதுகலித்துக் கொண்டிருப்பான்....

எழுந்து நடக்கும் போது பொத் பொத் என விழ சத்ரி தான் கைபிடித்து நடக்க துணைவருவான்….. சாத்வியின் வரவை எளிதாக , சத்ரி ஏற்றுக் கொண்டாலும்... தங்களுடைய அன்பு முற்றிலுமாய் இழந்து விட்டதாக நினைத்துக் கொண்டனர் வெங்கட்டும் கிருத்திகாவும்...

ஒன்றரை வயதில் சாத்விக்கு முதல் மொட்டை என குல தெய்வம் கோவிலில் அனைத்தையும் தயார் செய்து கொண்டிருக்க...

வீடே அதிரும் படி வந்து குதித்தான் சத்ரி….

"அத்தை…….வேணாம்…..'' என சத்ரியின் குரல் வீட்டையே அதிரவைத்தது…..

''ஆரம்பிச்சுடான்டா….ஆரம்பிச்சிடான்டா….'' என அங்கிருந்த மகா சங்கர், சிவகாமி விநாயகம் என அனைவரும் கோரசாக கத்த….

'இதெயெல்லாம் நான் கண்டுக்கவே மாட்டேன்' என்ற ரீதியில்….

"சாத்விக்கு…… மொட்டைஐஐஐஐஐஐஐ... வேண்டாம்….'' என மீண்டும் அலற…

"ஏண்டா ராசா…. வேண்டாம்...'' என 'மிகுந்த 'பாசாமாய் சிவகாமி அழைக்க…..

அவள் அழைப்பிலேயே தெரிந்து போனது சத்ரிக்கு அடி விழப் போகிறது என...

அது தெரியாத சத்ரி... வழக்கம் போல் தாயின் முந்தானையை கையில் பிடித்தபடி...'' சாத்விக்கு மொட்டை வேணாம், அவ முடி எல்லாம் போய்டும்....காது குத்த வேணாம்...அவளுக்கு வலிக்கும்.....'' என அவன் அழுகைக் குரலில் சொல்ல....

"எங்க அந்த வெளக்கமாற எடு....'' என அவனின் அன்னை அவனை அடிக்க விளக்குமாறை தேட...அதற்குள் ஓட்டம் எடுத்தவன் அவனின் அத்தையின் பின்னே ஒளிந்து கொண்டான்......

"விடு சிவகாமி.... எப்போ பாரு சத்ரியை திட்டிட்டே இருக்க... பாவம் பய அழறான் பாரு...'' என சத்ரியை தூக்கி வைத்தபடி அவன் கண்களை துடைத்து விட....

"நீங்க சும்மா இருங்கன்னே... எப்போ பார்த்தாலும் ஏடாகூடாமாவே பேசிட்டு இருக்கான்...... ஒரு நல்ல காரியம. பண்ண விட மாட்றான்..... 'வேண்டாம்மா' ன்னு முதல் ஆளா வந்து குதிக்கிறான் .... எடுபட்ட பய...'' என கண்டபடி திட்ட.... சங்கரை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான் சத்ரி.....

"இனி மேல் சாத்விக்கு வலிக்கும், அதை செய்யாத..... இதை செய்யாதன்னு சொல்லு... உனக்கு வலிக்கிற மாதரி ஏதாவது செய்றேன்.....'' என சிவகாமி சத்ரியை மிரட்ட.....

"விடு சின்ன புள்ளையை மிரட்டிட்டே இருக்க... "என விநாயகம் தான் சமாதானம் செய்து சத்ரியை அழைத்துச் சென்றார்.....

பட்டுப் பாவடையில் தத்தி தத்தி நடை பழகிய சாத்வியை..... போலியாய் விரட்டுவது போல் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான் சத்ரி... அவனுக்கென்றே பிரத்யேகமாய் தைத்திருந்த வேஷ்டி சட்டையில்...

இருவரும் தூண்களுக்கு பின்னால், ஒளிந்து விளையாடுவதும்..... ஒருவரை ஒருவர் நேராக பார்க்கும் போது கிளுக்கி சிரிப்பதும்... பின் சாத்வி சத்ரியை விரட்டுவதும் என அங்கிருந்த நிறைய பேரின் பார்வைகளை தங்களின் பின்னே திருப்பிக் கொண்டருந்தனர்.....

மொட்டையிடும் நேரமும் வர.... சாத்வி சிரித்துக் கொண்டே செல்ல... சதரி தான் அழுகைக்கு தயாரானான்......

அவனுக்கு பதில் சொல்லி யாராலும் சமாதானம் செய்ய முடியவில்லை..

மொட்டையிடும் போதும், காது குத்தும் போதும் சாத்வி அழுததை விட சத்ரியின் அழு குரல் , அங்கிருந்த எல்லோரின் காது சவ்வினை கிழித்தது…

அன்று அவன் செய்த அலப்பரையால், சாத்விக்கு அதுவே முதல் மற்றும் கடைசி மொட்டையாக போனது…

இருவரின் குறும்புகளும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே தான் சென்றது

"சாத்வி இப்ப நீ சாப்பிட போறியா….இல்ல என்கிட்ட அனப்பு வாங்க போறியா…..'' என்ற மிரட்டலில், ஏற்கனவே சிணுங்கிக் கொண்டிருந்த சாத்வி இன்னும் பலமாய் கத்த…அதற்காகவே காத்திருந்ததை போல ஓடி வந்தான் சத்ரி…….

"ஏன், அத்தை சாத்வியை அடிக்கிறீங்க, சாத்வி பாவம், அழறா…..''

வந்துட்டான்யா பாசக்கார பயபுள்ள….. என சிரித்தபடியே... "டேய் அவ அடிக்காமலேயே அழறான்னா... நீ எதுக்கு அடிக்கிறன்னு சண்டைக்கே வந்திட்டியேடா……'' என அடிப்பில் கை வைத்து முறைத்தாள் மகா…..

பதில் சொல்ல தெரியாமல் நிற்கும் சத்ரியின் மனம் புரிந்து……

"சாப்பிடவே மாட்றா... சத்ரி... சாப்பிட சொன்னதுக்கு இவ்வளவு அழுகை.......'' என என சலித்துக் கொள்ள ....

சற்றும் யோசிக்கவே இல்லை...

இரண்டு வயதில் இருந்த சாத்விக்கு "நான் ஊட்டி விடுறேன்....'' அத்தை என்றான் ஏழுவயது சத்ரியன்...

நன்றாக நடை பழகியவளுக்கு விளையாட்டு காட்டி ஊட்டி விட்டான் சத்ரி... சத்ரியை பார்த்தாலே சிரிப்பை வெளிக் காட்டும் சாத்விக்கு..... அவனே ஊட்டி விட்டதும் , தானாகவே வாய் திறந்தாள்......, கொஞ்சம் உணவு இறங்கிய பின் சாப்பிட மறுத்தாள் சாத்வி...

ஏழு வயது சிறுவன் ஊட்டிவிட்ட தடம் அப்படியே சாத்வியின் முகத்தில் பிரதிபலித்தது....

வெண்ணெய் தின்ற கண்ணனை போல வாயை சுற்றி பிசு பிசுவென மசித்த சாதம் ஒட்டியிருக்க , அவளை ஒரு கையில் பிடித்து ,

கின்னத்தை மறு கையில் பிடித்தபடி , கவனமாக அவளை வீட்டினுள் அழைத்து வந்தவனை , கண்ட மகா, சங்கரின் மனதில் அது அழகோவியமாய் பதிந்து போக, அர்த்தத்துடன் தன் கணவனை பார்க்க, அதற்கு சம்மதமாய் தலை அசைத்தான் சங்கர்...

"அத்தே சாத்வி இவ்வளவு தான் சாப்பிட்டா.....இதுக்கு மேல் சாப்பிட மாட்றா....'' கிண்ணத்தில் பாதியாக இருந்த சாதத்தை காட்டினான் சத்ரி...

கிருத்திக்கு சாப்பாடு ஊட்டி முடித்த, அவனிடம்வந்த மகா...

"போதும் சத்ரி.....எப்பவும் சாப்பிட அடம் பண்ணுவா, சாத்வி இவ்வளவு சாப்பிட்டதே பெரிசு...கின்னத்தை அங்க வச்சுடு சத்ரி...'' என பாத்திரங்கள் விளக்கும் இடத்தைக் காட்ட ..

மீதமிருந்த சாதத்தை சில நொடிகள் உன்னிப்பாய் பார்த்து...

"சாப்பாடை வேஸ்ட் பண்ண கூடாதாம், எங்க மிஸ் சொன்னாங்க, அத்தை......'' என தீவர யோசனையின் பின்...

"நான் சாப்பிட்டுக்கவா.....'' என அத்தையின் முகத்தை பார்க்க..... "டேய் அது எச்சிடா...'' என மகா பதில் கூற....

‘‘பரவாயில்லை...'' என சாத்விக்காய் வாங்கியிருந்த சின்ன சேரில் அமர்ந்தவன் மீதமிருந்த சாதத்தை அவனே உண்டுமுடித்தான்...

அவனை பார்த்தபடியே சாத்வியும் நிற்க அவனும் மீத சாதத்தை உண்டு அவளுடன் விளையாட ஆரம்பித்தான்...

அன்றிலிருந்து பள்ளி நேரம் தவிர அவளுக்கு விளையாட்டு காட்டி சாப்பிட ,தூங்க வைப்பது எல்லாம் சத்ரி தான்....

# அத்தியாயம் 13

"**ச**ட்ரி…. சட்ரி... "என தளிர் நடையால் சத்ரியையே சுற்றிக் கொண்டிருப்பாள் சாத்வி…..

'சத்ரி' என்ற பெயர் சாத்வியின் வாயினில் வராது….. சட்ரி என தான் அழைப்பாள்…. அதைக் கண்டு சத்ரியினுள் அப்படி ஒரு மகிழ்ச்சி எழும்….. முதல் முறையாய் ……. அவனின் பெயர் சொன்னது போது…. அப்படி ஒரு ஆட்டம் சத்ரிக்கு... வீடே அவனின் ஆட்டத்தில் திக்கு முக்காடிப் போனது…..

'சட்ரி…. பப்பு ஏணும்...'

'சட்ரி பால் ஏணும்.'

'சட்ரி வெளாட வா….'

'சட்ரி டூங்க…..வா...' என சகலமும் சத்ரி என ஆனான்….. சில நாட்களில் சத்ரியிடம் தான் தூங்குவேன் என அவனின் மீது கை கால்களை பரப்பியபடி…. வாயில் எச்சில் ஒழுக….. அந்த பிஞ்சு உதடுகள் சிறிதாய் பிளந்தபடி….. சத்ரியின் அருகிலேயே உறங்கி விடுவாள் சாத்வி….

"இவளுக்கு சத்ரி பைத்தியம் தான் பிடிச்சுருக்கு "என் மகாவே ஒதுங்கிக் கொள்ளும் அளவு இருந்தது அவர்களின் பாசப் பிணைப்பு...

'சிறு ப்ராக்கும், முழங்கால் வரையில் நர்த்தனம் ஆடிக் கொண்டிருக்கும் உடைகளும்….. அணிந்து கொண்டு ஓடி வரும் சாத்வியை பார்க்க பார்க்க யாருக்கும் சற்றும் தெவிட்டாது…

சாத்வி நடக்கின்றாளா…. இல்லை பறக்கிறாளா….. என தெரியாத அளவு சத்ரியை கண்டாலே மின்மினியாய் பறந்து வரும் சாத்வி என்றும் சத்ரிக்கு பிடித்தம் தான்…..

மூன்று வயதில் பள்ளி செல்ல தயாராய் இருந்தாள் சாத்வி…..

"சத்ரி நானும் ஸ்கூல் வாரேன்….. வுட்டுட்டு போய்டாத…..'' என செப்பு இதழ்களால் , பள்ளி செல்ல இருந்தவனை நிறுத்தினாள் சாத்வி…..

"என் கூட வர்ரிய்யா நீ…'' என கிண்டல் போல கேட்டாலும்… தன் அத்தையை பார்க்க…

"சத்ரி….. உன்னோட ஸ்கூலில் தான் சாத்வியையும் சேர்த்திருக்கோம்….. இன்ட்ரவல், லன்ஜ் டைம் பார்த்துக்கோடா…'' என சாத்விக்கு யூனிபார்ம் போடுவதில் கவனமாய் இருந்த மகா…. சத்ரியிடம் கூறிக் கொண்டிருந்தாள்…..

அதற்கு எட்டு வயதில் இருந்த சத்ரியோ….. "அத்தே…. ஸ்கூலில் பாய்ஸ் அன்ட் கேர்ல்ஸ் பேசக் கூடாது அத்தே…'' என அவன் பள்ளியின் ரூல்ஸ் அண்ட் ரெகுலேசனில் முக்கியமான ஒன்றை கூற…

"உங்க ஸ்கூலுக்கு இந்த கண்டிசனெல்லாம் ஒவர்டா......ரொம்ப பண்றானுங்கடா...

நீ இருக்கேன்றதுனால தான் சாத்வி அழாமல் ஸ்கூல் கிளம்பிட்டு இருக்கா..... நீ மட்டும் அவளை இடையில் பார்க்க போகலை..... அவ்வளவு தான்டா..... உன் கிளாஸ்ல உன் பக்கத்தில் வந்து உட்காந்துக்க போறா... பார்த்துக்கோ...'' என சங்கரும் கிண்டல் செய்ய...

"அய்யோ..... மாமா மிஸ் அடிக்க போறாங்க..... "என பள்ளி வயது பாலகனாய் ஆசிரிரயருக்கு பயந்து...... பின்... "நீங்க அவ மிஸ் கிட்ட சொல்லுங்க மாமா..... மிஸ் பெர்மிஷன் கொடுத்தா.... பார்க்கலாம் மாமா.....அப்பறம் நான் சாத்வியை பார்த்துக்கிறேன்...'' என பெரிய மனிதன் போல் சிக்கலை தீர்த்தவனாய் சாத்வியை பார்க்க.....

"சரிடா பெரிய மனுஷா..... அவங்க மிஸ் கிட்ட நான் பேசிக்கிறேன்... இப்போ நீயும் கூட வா... சாத்வியோட மிஸ் கிட்ட உன்னை அடையாளம் காட்டனும்ல...'' என சாத்வி சத்ரி என இருவரையும் மகாவும் சங்கருமே அழைத்துச் சென்றனர்...

மகாவின் கையினுள் சிக்குன்டிருந்த தன் பிஞ்சு விரல்களை வலுக்கட்டாயமாய்.... பிரித்துக் கொண்டு, சத்ரியின் கைகளுக்குள் புதைத்துக் கொண்டு... மான்குட்டியாய் குதித்து குதித்து நடந்து வந்தாள்.....

தனக்குள் இருந்த சாத்வியின் விரல்களை அழுத்தமாய் பிடித்தபடியே சத்ரியும் நடக்க ஆரம்பித்தான்.....

சத்ரியை பற்றி சாத்வியின் மிஸ்ஸிடம் அறிமுகம் செய்து..... சிறிது நாட்களுக்கு மட்டும் அனுமதி கேட்டார் மகா...

"குழந்தைங்க புதுசா ஒரு இடத்திற்கு வரும் போது... பிடிச்சவங்களை தேடுறது இயல்பு தான்... என்ன.... எல்லா குழந்தைகளும் அப்பா இல்லை அம்மாவை தேடுவாங்க..... உங்க பொண்ணு இந்த பையனை தேடுறாளா... "என மகாவிடமும் சங்கரிடமும் கூறி...

"லன்ச்ஜில் மட்டும் பார்த்துக்கோ .... சத்ரியன்..... இன்பிட்வின்ல வரக்கூடாது'' என சத்ரியிடம் சாத்வியின் மிஸ் கூற.....

"ஓகே மிஸ்...'' முகமெல்லாம் புன்னகை பூக்க...'' லன்ச்ஜில் வரேன் சாத்வி.....'' என சாத்வியிடம் சொல்லிக் கொண்டு நகர்ந்தான்.....

நகர்ந்தவனை தன் பிஞ்சு விரல்களால் பிடித்து கீழே இழுத்தாள் சாத்வி..... கீழே குனிந்து..... "என்ன சாத்வி.....'' என கேட்க....

அவன் கன்னத்தில் முத்தமிட்டு..... "கண்டிப்பா வரனும்....'' என்ற கட்டளையையும் இட.....

"சாத்வி….. பசங்களுக்கு இப்படி எல்லாம் முத்தம் கொடுக்க கூடாது…..'' என சாத்வியின் மிஸ் கண்டிக்க...

சற்று நெளிந்த சத்ரி….. "இனிமேல் குடுக்க மாட்டா மிஸ்….'' என நெளிந்து நிற்க…..

"அதற்கு எதிர் மாறாய்... மறுபடியும் அவன் கன்னத்தில் முத்தமிட்டு...'' அப்பிடித்தான். குடுப்பேன்...'' என கிளு கிளுத்து சிரித்தபடியே தன் கிளாஸிற்குள் சென்றாள் சாத்வி…..

"சாத்வி கொஞ்சம் வாலு மிஸ்….. சின்ன குழந்தை தானே….. நான் சொல்றேன் மிஸ்... இரண்டும் அப்படி தான்….. நீங்க தப்பா எடுத்துக்காதீங்க...'' என மகா பேச…..

"பரவால்ல….. பரவால்ல…..'' என அவளின் ஆசிரியையும் நகர்ந்து விட...

"பார்த்துக்கோடா...'' என மகா சங்கர் இருவரும் கிளம்பினர்…

அன்றே லன்ச்ஜ் டைமில் சாத்வியை வந்து பார்த்து, அவளுக்கு வழக்கம் போல் ஊட்டிவிட்டு…. சிறிது நேரம் அவளை சிரிக்க வைத்த பின்னரே சென்றான்….

மாலை அவனே பள்ளியில் இருந்து சாத்வியை அழைத்து வந்து விட….. மகாவிற்கு பெருத்த நிம்மதி….. 'இனி கிருத்தியையும் கவனிக்கலாம்….' என நிம்மதியாய் இருந்தார்….

அன்றிலிருந்து சாத்வியை தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான்…..சத்ரி….. காலம் முழுமைக்கும் அது தொடர போகிறது என தெரியாமலேயே எடுத்துக் கொண்டான்...

சாத்வியை தன்னில் ஒருத்தியாய் நினைக்க ஆரம்பித்தான்... சத்ரி….அந்தளவிற்கு சாத்வி என்றால் அத்தனை பிடித்தம்...சத்ரிக்கு...

அதுவும் ஒரு வகை காதல் தான்,

பாசத்தின் போர்வையில் மறைந்த காதல்…..

காமத்தின் அரிச்சுவடி கூட அருகில் நுழைய முடியாத காதல்…..

இனக்கவர்ச்சியின் இனம் கான முடியாத காதல்…..

பால்ய நாட்களின் அரும்புக் காதல்…..

மொத்தத்தில் புனித காதல் தான் அது...

அரியாத வயதிலேயே சாத்வியினுள் தன் தடத்தை அழுத்தமாய் பதித்திருந்தான் அவனுக்கு தெரியாமலேயே…..

சாத்வியின் ஒவ்வொரு நாளும்... காலை, சத்ரியின் முகத்தில் தான் விடியும், இரவில் அவன் முகத்தில் தான் முடியும்….. அந்தளவு சாத்வியை தன்னுள் அலையாய் சுருட்டி இருந்தான் சத்ரி….. தனக்கு தெரியாமலேயே…..

காலை மாலை இரவு என சாத்விக்கும், கிருத்திக்கும் சரிவிகிதமாய் நேரம் ஒதுக்கினாலும்….. கிருத்திகா இத்தனை

நாள் கிடைக்காத பாசத்தை நினைத்து ஏங்கி..... எப்போதும் போல் தள்ளி நிற்க ஆரம்பித்தாள்...

தினமும் பள்ளிக்கு செல்லும் போது சத்ரியும் சாத்வியும் முதலில் செல்ல.....

அவர்களை முறைத்தபடியே கிருத்திகாவும், வெங்கட்டும் பின் தொடர்ந்து சென்றனர்.....

வெங்கட் கிருத்திகா, இருவருமே....சற்று பெரிய குழந்தைகள் என்பதால் ஒன்றாகவே பள்ளி சென்று வந்தனர்...

சத்ரி சாத்விக்கு பாச பிணைப்பு என்றால், இவர்களுக்கு யாரும் பாசம் அளிக்காததால் வந்த பிணைப்பு....

இருவரின் பெற்றோர்களும் பாசம் காட்டினாலும் அது அவர்களுக்கு போதவில்லை, சத்ரியை ஒப்பிடும் வெங்கட், சாத்வியை ஒப்பிடும் கிருத்திகா..... என இருவருமே, தத்தமது பெற்றோர்களின் அன்பை முக மூடியிட்டு மறைத்துக் கொண்டனர்...

காலப் போக்கில் அதுவே அவர்களுக்கு பழகிப் போக..... வெங்கட்டும் கிருத்திகாவிற்கு வெகு நெருக்கமாய் பழக்கமானான்.....

சத்ரி வெளிப்படையாய் காட்டும் அன்பை, வெங்கட் கிருத்திகாவிற்கு மறைவாய் காட்ட ஆரம்பித்தான்.....

கிருத்திகா அமைதியாய் இருந்து சாதித்துக் கொள்ளும் ரகமாய் மாற... வெங்கட் ஏதாவது பிரச்சனையை இழுத்துக் கொண்டு வர ஆரம்பித்தான்....

பத்து நாட்களுக்கொருமுறை ஏதாவது பஞ்சாயத்து அவனை தேடி வந்து கொண்டே இருக்கும்...

சத்ரியின் பாசமும், சாத்வியின் அன்பும் இருவரையும் இன்னும் இறுக்கமாய் பிணைத்தபடியும்.....

வெங்கட், கிருத்திகா இருவரும் கிடைத்த அன்பில் குளிர் காய்ந்தபடியும்........ காலம் உருண்டோடியது...

சத்ரியன் கல்லூரி இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த சமயம்.... கல்லூரி முடிந்து வீடு வந்தவன், வீட்டில் தன் தந்தையும் , மாமனும் சண்டையிட்டுக் கொள்வதை அதிர்ச்சியுடன் பார்த்தான் , வாய் சண்டை தான் என்றாலும், இதுவரை இருவரது வீட்டிலும் நடக்காத ஒன்று... யோசனையின். பின் வீட்டை அளக்க.....

ஒரு ஓரமாய் சிவகாமி, மகாலட்சுமி...இருவரும் கண்களை துடைத்தபடி இருக்க....இருவரின் நடுவிலும் சாத்வி.... புரிந்தும் புரியாமல் ...அழவா...வேண்டாமா என்ற ரீதியில் முகத்தில் பயத்தை காட்டியபடி ... அமர்ந்திருந்தாள்...

"இவ... எதுக்கு இப்படி பயந்து போய் உக்கார்ந்திருக்கா..." என நினைத்தபடி...பார்க்க ... அவனை பார்த்ததில் சாத்விக்கு இன்னும் அழுகை கூட....

ஏதே சரியில்லை என விநாயகத்தை பார்க்க... வாய் சண்டை முற்றி தன் தந்தையை நோக்கி கை நீட்டியிருந்தார் சங்கர்...... சட்டென சுதாரித்து இருவருக்கும் நடுவில் வந்து சங்கரை தன் கைகளால் தடுத்தான் சத்ரி....

"சாத்வி..... பசங்களுக்கு இப்படி எல்லாம் முத்தம் கொடுக்க கூடாது....." என சாத்வியின் மிஸ் கண்டிக்க...

சற்று நெளிந்த சத்ரி..... "இனிமேல் குடுக்க மாட்டா மிஸ்...." என நெளிந்து நிற்க.....

"அதற்கு எதிர் மாறாய்... மறுபடியும் அவன் கன்னத்தில் முத்தமிட்டு..." அப்பிடித்தான். குடுப்பேன்..." என கிளு கிளுத்து சிரித்தபடியே தன் கிளாஸிற்குள் சென்றாள் சாத்வி.....

"சாத்வி கொஞ்சம் வாலு மிஸ்..... சின்ன குழந்தை தானே..... நான் சொல்றேன் மிஸ்... இரண்டும் அப்படி தான்..... நீங்க தப்பா எடுத்துக்காதீங்க..." என மகா பேச.....

"பரவால்ல..... பரவால்ல....." என அவளின் ஆசிரியையும் நகர்ந்து விட...

"பார்த்துக்கோடா...'' என மகா சங்கர் இருவரும் கிளம்பினர்…

அன்றே லன்ச்ஜ் டைமில் சாத்வியை வந்து பார்த்து, அவளுக்கு வழக்கம் போல் ஊட்டிவிட்டு…. சிறிது நேரம் அவளை சிரிக்க வைத்த பின்னரே சென்றான்….

மாலை அவனே பள்ளியில் இருந்து சாத்வியை அழைத்து வந்து விட….. மகாவிற்கு பெருத்த நிம்மதி….. 'இனி கிருத்தியையும் கவனிக்கலாம்….' என நிம்மதியாய் இருந்தார்….

அன்றிலிருந்து சாத்வியை தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான்…..சத்ரி….. காலம் முழுமைக்கும் அது தொடர போகிறது என தெரியாமலேயே எடுத்துக் கொண்டான்...

சாத்வியை தன்னில் ஒருத்தியாய் நினைக்க ஆரம்பித்தான்... சத்ரி….அந்தளவிற்கு சாத்வி என்றால் அத்தனை பிடித்தம்...சத்ரிக்கு...

அதுவும் ஒரு வகை காதல் தான்,

பாசத்தின் போர்வையில் மறைந்த காதல்…..

காமத்தின் அரிச்சுவடி கூட அருகில் நுழைய முடியாத காதல்…..

இனக்கவர்ச்சியின் இனம் கான முடியாத காதல்…..

பால்ய நாட்களின் அரும்புக் காதல்…..

மொத்தத்தில் புனித காதல் தான் அது...

அரியாத வயதிலேயே சாத்வியினுள் தன் தடத்தை அழுத்தமாய் பதித்திருந்தான் அவனுக்கு தெரியாமலேயே.....

சாத்வியின் ஒவ்வொரு நாளும்... காலை, சத்ரியின் முகத்தில் தான் விடியும், இரவில் அவன் முகத்தில் தான் முடியும்..... அந்தளவு சாத்வியை தன்னுள் அலையாய் சுருட்டி இருந்தான் சத்ரி..... தனக்கு தெரியாமலேயே.....

காலை மாலை இரவு என சாத்விக்கும், கிருத்திக்கும் சரிவிகிதமாய் நேரம் ஒதுக்கினாலும்..... கிருத்திகா இத்தனை நாள் கிடைக்காத பாசத்தை நினைத்து ஏங்கி..... எப்போதும் போல் தள்ளி நிற்க ஆரம்பித்தாள்...

தினமும் பள்ளிக்கு செல்லும் போது சத்ரியும் சாத்வியும் முதலில் செல்ல.....

அவர்களை முறைத்தபடியே கிருத்திகாவும், வெங்கட்டும் பின் தொடர்ந்து சென்றனர்.....

வெங்கட் கிருத்திகா, இருவருமே....சற்று பெரிய குழந்தைகள் என்பதால் ஒன்றாகவே பள்ளி சென்று வந்தனர்...

சத்ரி சாத்விக்கு பாச பிணைப்பு என்றால், இவர்களுக்கு யாரும் பாசம் அளிக்காததால் வந்த பிணைப்பு....

இருவரின் பெற்றோர்களும் பாசம் காட்டினாலும் அது அவர்களுக்கு போதவில்லை, சத்ரியை ஒப்பிடும் வெங்கட், சாத்வியை ஒப்பிடும் கிருத்திகா..... என இருவருமே, தத்தமது

பெற்றோர்களின் அன்பை முக மூடியிட்டு மறைத்துக் கொண்டனர்...

காலப் போக்கில் அதுவே அவர்களுக்கு பழகிப் போக..... வெங்கட்டும் கிருத்திகாவிற்கு வெகு நெருக்கமாய் பழக்கமானான்.....

சத்ரி வெளிப்படையாய் காட்டும் அன்பை, வெங்கட் கிருத்திகாவிற்கு மறைவாய் காட்ட ஆரம்பித்தான்.....

கிருத்திகா அமைதியாய் இருந்து சாதித்துக் கொள்ளும் ரகமாய் மாற... வெங்கட் ஏதாவது பிரச்சனையை இழுத்துக் கொண்டு வர ஆரம்பித்தான்....

பத்து நாட்களுக்கொருமுறை ஏதாவது பஞ்சாயத்து அவனை தேடி வந்து கொண்டே இருக்கும்...

சத்ரியின் பாசமும், சாத்வியின் அன்பும் இருவரையும் இன்னும் இறுக்கமாய் பிணைத்தபடியும்.....

வெங்கட், கிருத்திகா இருவரும் கிடைத்த அன்பில் குளிர் காய்ந்தபடியும்........ காலம் உருண்டோடியது...

சத்ரியன் கல்லூரி இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த சமயம்.... கல்லூரி முடிந்து வீடு வந்தவன், வீட்டில் தன் தந்தையும் , மாமனும் சண்டையிட்டுக் கொள்வதை அதிர்ச்சியுடன் பார்த்தான் , வாய் சண்டை தான் என்றாலும்,

இதுவரை இருவரது வீட்டிலும் நடக்காத ஒன்று... யோசனையின். பின் வீட்டை அளக்க…..

ஒரு ஓரமாய் சிவகாமி, மகாலட்சுமி…இருவரும் கண்களை துடைத்தபடி இருக்க….இருவரின் நடுவிலும் சாத்வி…. புரிந்தும் புரியாமல் …அழவா…வேண்டாமா என்ற ரீதியில் முகத்தில் பயத்தை காட்டியபடி ... அமர்ந்திருந்தாள்...

"இவ… எதுக்கு இப்படி பயந்து போய் உக்கார்ந்திருக்கா...'' என நினைத்தபடி...பார்க்க ... அவனை பார்த்ததில் சாத்விக்கு இன்னும் அழுகை கூட….

ஏதே சரியில்லை என விநாயகத்தை பார்க்க... வாய் சண்டை முற்றி தன் தந்தையை நோக்கி கை நீட்டியிருந்தார் சங்கர்….. சட்டென சுதாரித்து இருவருக்கும் நடுவில் வந்து சங்கரை தன் கைகளால் தடுத்தான் சத்ரி….

"என்ன மாமா, ஆச்சு,….ஏன் அப்பா கூட சண்டை போடுறீங்க….ஏதுவா இருந்தாலும் பேசி தீர்த்துக்கலாம் மாமா….'' சத்ரியன் சங்கரை தடுக்க…..….

'சத்ரி வருவதற்கு முன்பாகவே வாய் சண்டை முற்றி யிருந்தது….. சங்கர் அவ்வளவு கோபத்துடன் நின்றிருந்தார், எனில் விநாயகமோ….. தப்பா எதுவும் நடந்திடக் கூடாதே….. என்ற எண்ணத்தில் சங்கர் காலையிலிருந்து பேசும்

பேச்சுக்களையும்..., ஏசும் ஏச்சுக்களையும் தாங்கியவராய் நின்று கொண்டிருந்தார்...

"பேசி தீர்த்துக்கலாமா...! அதான் நீ வந்துட்டல... தீர்த்துருவோம்.....'' என கோபத்துடன் சங்கர் சத்ரியை நெருங்க......

"காலையில் இருந்து நீ பண்ணின பிரச்சனை பத்தாதா.....சத்ரிகிட்டேயும் எதுக்கு பிரச்சனை பண்ற...'' என சங்கரிடம் கூறியபடி.....

"சத்ரி ,நீ இங்க இருந்து போ.....'' விநாயகம் பதட்டத்துடன் சத்ரியிடம் கூற......

அதற்குள்..... சங்கர்... "ஏன், உன் மூத்த மகனை காப்பாத்தினது பத்தாதா....இவனையும் போக சொல்ற.....'' என எகிறிக் கொண்டு வர....

''சங்கர் வேண்டாம், வெங்கட் பண்ணின தப்புக்கு இவன் என்ன செய்வான்.....'' என சத்ரியை கண் ஜாடையிலேயே போக சொன்னார் விநாயகம்.....

தந்தையின் ஜாடையை கவனித்தாலும்... அந்த இடத்தை விட்டு நகறவில்லை சத்ரி...

"பசங்க என்ன பண்றாங்கனு நீ வேணும்னா கவனிக்காம இருந்திருக்கலாம்..... ஆனா, அவன் கூடவே தான இவனும் இருக்கான்...இவனுக்கு எப்படி தெரியாமா இருக்கும்....

உன் முன்னாடியே கேட்கிறேன்......எங்கே இல்லைனு சொல்ல சொல்லு... பார்போம்...'' என சத்ரியை பார்த்தவர்...

"வெங்கட்டும், கிருத்திகாவும் பழகுவது உனக்கு தெரியாதுனு சொல்லுடா பாப்போம்.....'' என சங்கர் அதீத கோபத்தை காட்ட.....

சட்டென உடல் விரைத்தது சத்ரிக்கு ... ஆனால் சங்கரின் கேள்விக்கு பதிலில்லாது போக....

"சொல்லுடா....'' என்ற ஆங்காரமான குரல் மீண்டும் ஒலிக்க...

தன் காதில் விழுந்த செய்தி உண்மை தானே என .....

தன் தந்தையை பயத்துடன் பார்த்தான் சத்ரி... .அவனின் விழியே 'எனக்கு ஏற்கனவே தெரியும் 'என விநாயகத்திற்கு கூற.....

'இவனுக்கு தெரியுமா...!' என அதிர்ந்தாலும்... "தெரியாதுனு சொல்லுடா...'' என அவனின் தந்தை ,இட வலமாக தலையை அசைத்து அவனை எச்சரிக்க....

இருவரின் ஜாடையையும் கவனித்த சங்கர்....'' அப்ப , எல்லாத்துக்கும் தெரிஞ்சிருக்கு ,அப்படி தானே.....'' என

‘‘உங்கப்பனுக்கு தெரியாதுனு இவ்வளவு நேரம் புளிப்பு காட்டிட்டு இருந்தான்…..உன்னையும் எச்சரிக்கிறானா…..’’என கேட்க….

தன்னை எதுவும் சொன்னால் தாங்கிக் கொள்ளலாம்… ஆனால் தன் தந்தையை குற்றம் சொல்வதை தாங்காது… "ஐயோ ,மாமா எனக்கே இந்த விசயம் கொஞ்ச நாள் முன்ன தான் தெரியும்….அப்பாக்கு எதுவும் தெரியாது ….அவரை திட்டாதீங்க….’’ என தந்தையை பார்க்க…..

அதற்குள் சங்கர்… "தெரிஞ்சா , வீட்டில் இருக்கிற பெரிய மனுசங்க கிட்ட சொல்லாமல் அவன் கூட சேர்ந்து கிட்டு எங்களை ஏமாத்துற இல்லையா…’’ என சத்ரியை கேட்க…

"சொல்லுடா, எங்க இரண்டு பேரும்….’’ என வேட்டியை மடித்துக் கொண்டு கேட்க….

"எங்கனா….? அவங்க வீட்டில் இல்லையா….’’ என சத்ரி அதிர்ச்சியாய் கேட்க…

"என்னடா நீயும் நடிக்கிறியா….அவங்க பழகினாது உனக்கு தெரியும், ஓடி போனது மட்டும் தெரியாதா….’’

"ஓடி போய்ட்டாங்களா…? ஐயோ..எப்போ மாமா….’’ என சத்ரி அதிர்வை காட்ட…

அவன் கன்னத்தில் பளார் என அறைந்தவர் ….

‘‘பொய் சொல்லாத….

உனக்கு தெரியும்….

எங்க உன் அண்ணன்...’’

என சங்கர் கேட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் அவன் கன்னத்தில் மாறி மாறி அடிவிழ…. மகா சிவகாமி சாத்வி என மூவரும்,...

அப்படியே நின்றிருந்த சத்ரியை தங்களுக்குள் இழுத்து கொண்டனர்…..

’’ ஏய், என் பையன் மேல இன்னும் ஒரு அடி விழுந்தது…..’’ என கோபமே வராத விநாயகம் எகிற….

"உங்களுக்கு என்ன பயித்தியமா புடிச்சிருக்கு……புள்ளையை போட்டு இப்படி அடிக்கிறீங்க…..’’ என மறுபக்கம் மகா எகிற….

"அண்ணே ,என் புள்ளைய விட்டுடுங்க அண்ணே...மூத்தவனாவது எதாவது பிரச்சனையை இழுத்திட்டு வருவான்….

சின்னவன் நல்ல பையன் அண்ணே…அவனுக்கு தெரியாது…விட்டுடுங்க அண்ணே…..’’ என சங்கரை தன் கூட பிறவா சகோதரனாய் நினைத்து வார்த்தைக்கு வார்த்தை அண்ணா என அழைத்தவள், இப்போதும் அப்படியே அழைக்க….

"ஏய், நீ எங்கப்பனுக்கு பிறந்தியா…இல்லை உங்கப்பனுகக்கு நான் பிறந்தேனா…இனி என்னை அண்ணன்னு கூப்பிட்ட…கொன்னுடுவேன் கொன்னு…..'' என அவளுடன் சேர்த்து தன்னையும், தன் பிறப்பையும் அசிங்கப் படுத்தினார் சங்கர்…..

சங்கரின் வார்த்தைகள், தன் மகனை அடித்தது…..எல்லாம் சேர சங்கரின் பின்னால் ஓங்கி ஒரு மிதி விட்டார் விநாயகம்…. கீழே விழாத போதும்…. நன்றாகவே தடுமாறி நின்றார் சங்கர்…

"ஏய், மச்சனாச்சேனு மரியாதை கொடுத்து பேசினா…நீ எங்க வீட்டுக்குள்ள வந்து ,என்னை, என் புள்ளைய அடிக்கற…..மகளை இழந்த ஆத்திரத்தில் அடிக்கறன்னு தான் பொறுத்தேன்…இப்ப நீ என் பொண்டாட்டியை அசிங்கபடுத்துற…..உன்னை….'' என மீண்டும் அடிக்க…

இருவரையும் இருவரின் மனைவிமார்கள் பிடித்துக் கொள்ள….பெண்கள் எவ்வளவு நேரம் அடக்கி வைக்க முடியும்…..

அங்கே பேச்சு வார்த்தைகளுக்கு மரியாதை இன்றி போக….. கைகளுக்கும், கால்களுக்கும் மரியாதை கிடைத்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள…..

விலக்கி விடும் போதெல்லாம் சத்ரிக்கும் அடிவிழ…..வீடே ரணகளமானது…சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கே கூட…..

வந்த சில பெரியவர்கள் அவர்களை சத்தமிட்டு விலக்கினர்….

"மாமன், மச்சானுக்குள்ள என்னையா சண்டை வேண்டி கிடக்கு….பேசி தீர்க்க வேண்டியது தான…. "பெரியவர் குரல் கொடுக்க….

அங்கே வந்தவர்களில் சிலர் பல சந்ததிகளாய் ஊர் பஞ்சாயத்து செய்பவர்கள்…அவர்களை பார்த்ததும் சங்கர்…..

"நான். இவனுக்கு மச்சானும் இல்லை, இவன் எனக்கு மாமானும் இல்லை... பிறப்பால வந்தா தான் சொந்தம், இது ஒட்டிகிட்டு வந்த உறவு தானே….. இதில் எப்படி சொந்தம் கொண்டாட முடியும்...'' என ஆத்திரத்தில் அறிவிழந்து பேசினார் சங்கர்...

பின் அங்கிரிந்த பெரியவர் ஒருவரிடம் திரும்பி... "ஐயா, என் பொண்ணை , இவங்க மூத்த பையன் இழுத்துட்டு ஓடிட்டான், எங்கே இருக்கானு இவங்க குடும்பத்துக்கே தெரியும்…..

கேட்டால் சொல்ல மாட்ரானுங்க.....நீங்களே கேளுங்கையா...." என விநாயகம் குடும்பத்தையே தீப் பார்வை பார்க்க...

"ஏம்பா, எப்போவுமே இரண்டும் ஒன்றாக தானே சுத்திட்டு இருக்குங்க... அப்பலாம் விட்டுட்டு இப்போ வந்து கேட்கிற... "என அந்த பெரியவர் மீசையை முறுக்க...

கூடவே இருந்த மற்றவர்களும் தங்கள் வாயை திறக்க...

"இரண்டையும் கவனிக்காம நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க....."

"எனக்கு அப்பவே தெரியும்.....இங்க தான் போய் முடியும்னு...."

"மாமா,மச்சானு அவ்வளவு பாசமா இருக்கறவங்களா...இப்படி சண்டை போடுறாங்க....."

"யாரு கண்ணு பட்டுச்சோ....." இப்படி பல குரல்களும் அந்த வீட்டில் நிசப்தமாய் ஒலிக்க...

அனைத்தையும் தகர்த்தது...சங்கரின் பேச்சு.... "மாமானா இருந்தாலும் மச்சானா இருந்தாலும், மானம் பெரிசுங்க ஐயா.....

காலையில் இருந்து தான் என் பொண்ணை காணும்......... தேட சொல்லி ஆள் அனுப்பி இருக்கேன், என் புள்ள எப்படி

போச்சோ அப்படியே வரனும், இல்லை நான் கொலைகாரணா மாறிடுவேன்….

எனக்கு எங்க ஜாதி ஜனங்க முன்னாடி மானத்தோட வாழனும்…..அம்புட்டுத்தான்……

நீங்க தான் இவ்ங்களை கேட்கனும் "என விநாயகத்தை கை காட்டினார் சங்கர்….

"ஏம்பா , 'என் புள்ளைய , விநாயகம் மகனுக்கு தான் கொடுக்க போறேன்னு' நீ தான எங்கிட்ட சொன்னேல்ல…….. "என பெரியவர் கேட்க…..

இல்லை என மறுக்கவில்லை சங்கர்… "ஐயா, நான் சொன்னது உணமை தான், ஆனா, அவரோட சின்ன மகனுக்கு தான்… என் சின்ன மகளை பேசலாம்னு இருந்தேன்…."

"பெரியவன் ,தருதலை,அவனை நம்பி எப்படி கொடுக்கிறது…எம்புள்ள வாழ்க்கை என்னாகறது….."

"சின்னவளை ,சத்ரியன்க்கு தான் கொடுக்கனும்னு மகா சொல்லுச்சுங்கையா….. நண்பனா இருந்தாலும்…

நான் அதுக்கும் மேல பழகுனேன் அதான் சின்னவளை சத்ரிக்கு பேசலாம்னு இருந்தேன்… என் சொந்தம் விட்டு போக கூடாதேனு கிருத்திகாவை என் அக்கா மகனுக்கு பேசி இருத்தேன்… ஆனா…. மூத்தவன் இப்படி எல்லாரோட

தலையிலையும் கல்லை தூக்கிப் போட்டுட்டானே... "என பொறுமையாய் பதில் சொல்லி...

"எனக்கு என் பொண்ணு வேணும்...'' என ஸ்தீரமாய் முடிக்க.....

அவரின் பேச்சு அனைத்தையும் கேட்ட அனைவரும் சங்கருக்கே சப்போர்ட் செய்து பேச....

அனைத்தையும் கேட்காது, அவரின் முதல் பேச்சைக் கேட்ட சத்ரியும்... சாத்வியும் அதிர்ந்து ஒருவரை ஒருவர் பார்க்க....

மூத்த மக்களின் கடமையை சரியாக செய்யாது விட்டு இருவரையும் அன்பை தேடி அலைய வைத்து, இறுதியில் அவர்களே அன்பை தேடிக் கொள்ள வைத்ததும் இதே சங்கர், விநாயகம் தான்.....

அன்பை மட்டுமே உயர்வாய் நினைத்து , பாசத்தை மட்டுமே பகிர்ந்த இருவரின் மனதில் காதல் தீ அழகாய் பற்றிக் கொள்ள வைத்ததும் இதே சங்கர் விநாயகம் தான்...

அங்கே அவர்களின் பார்வை ஒன்றை ஒன்று கவ்வியபடி இருக்க....

"ஓடி போய்டுச்சுங்க... என்ன செய்ய சொல்ற... .ஓடிப் போனதுங்க ,கல்யாணம் கட்டிகிட்டா வீட்டுக்கு வராம எங்க போக போகுதுங்க......... விடுய்யா...

இந்த காலத்தில் காதல் கல்யாணம் எல்லாம் சகஜம்யா... யாரும் பெரிசா எடுத்துக்காட்டாக மாட்டாங்க...

பெத்தவங்களே சேர்த்து வைக்கிறாங்க...நீயும் ஏன் கிடந்து அடிச்சுக்கிற... விடுயா...'' என மீண்டும் அந்த பெரியவர் கூற...

‘‘என் பொண்ணு எங்கே இருக்கான்னு விநாயகம் குடும்பத்துக்கே தெரியும்...ஐயா... நாளைக்கு என் அக்கா வீட்டில் இருந்து பரிசம் போட வராங்க....அவங்க முன்னாடி அவமான பட்டு நான் நிக்கவா....எனக்கு என் பொண்ணு வேண்டும்.....'' என கடுமையாய் கத்த....

இங்கே இவர்களின் பேச்சு வரே திசையிலேயே இருக்க... "நீங்க சொந்தகாரங்க,பேசி தீர்க்கிற வழியைப் பாருங்க அவ்வளவு தான் சொல்வோம், இல்லையா பஞ்சாயத்தை கூட்டுங்க , பார்த்துக்கலாம்...'' என முடித்து எல்லோரும் சென்றுவிட்டனர்...

ஆத்திரம் கண்களை மறைக்க , சத்ரியின் குடும்பத்தை பார்த்து ‘‘என் மகள் கிருத்திகா, இன்றைக்கு சாயந்திரத்திற்குள் வீட்டுக்கு வரலை, அப்பன், மகன் இரண்டு பேரும் அசிங்கப்படுவீங்க....'' தன் நண்பன் என கூட பார்க்காது...கூறி...

.’’ ஏய் உங்களுக்கு வேற சொல்லனுமா…’’ என வெங்கல குரலில் கத்த…. சாத்வி ,மகா இருவரும் தங்கள் வீட்டிற்கு விரைந்தனர்….

சாத்வி போவதையே பார்த்த சத்ரியை தன் புறம் திருப்பிய விநாயகம்….’’டேய், ஏங்கடா இரண்டு பேரும்….’’ என பொறுமையற்ற குரலில் கேட்க…

சாத்வியிடமிருந்து தன் கண்களை பிரித்துக் கொண்ட சத்ரி... "பா…நீங்களும் புரியாம பேசாதீங்க,இரண்டு மாசத்துக்கு முன்னாடி தான் அவங்க விசயமே எனக்கு தெரியும்….

அவன் இப்படி திடு திப்புனு ஓடிப்போவானு கனவா கண்டேன்….வாங்க முதலில் அவன் ப்ரண்ட்ஸ் கிட்ட கேட்டு பாப்போம்…..போன்ல கேட்டு வேலைக்காகாது….’’என தன் தோள்களிலும்,கழுத்திலும், கன்னத்திலும் விழுந்த அடிகளை தேய்த்தவாரே கூற…..

அவனின் முகசுளிப்பை பார்த்து சிவகாமியும், விநாயகமும்... அவசரமாய் வந்து "எங்க சண்டையில் நீ எதற்குடா குறுக்கால வர….பாரு அடி எப்படி விழுந்திருக்கு’’ அவனை இருவரும் வருட….

"இப்போ இது முக்கியம் இல்லை மா... வெங்கட் தான் முக்கியம் மா...…. அப்பா... வாங்க போகலாம்…..’’ என அவரை அழைத்துக் கொண்டு தனக்கு தெரிந்த வெங்கட் நண்பர்களை

சந்தித்து ,எப்படி எப்படியோ கேட்டும் கிடைத்த ஒரே பதில் “தெரியாது "என்பது தான்.....

ஒரு பதிலும் கிடைக்காமல் போகவே "நீ வீட்டுக்கு போடா, நான் சங்கர் வீட்டிற்கு போய்டு வரேன்.....” என விநாயகம் கூற....

"ஆமா... இரண்டு வீட்டுக்கும் நூறு மைல் தூரம் இருக்கு... நீங்க வேற ஏன்பா... கடுப்ப கிளப்புறீங்க... வாங்க நானும் வரேன்....” என அவருடனேயே சென்றான்....

"உன்னை பார்த்து தாண்டா அவன் ரொம்ப கோவப் படுறான்... நீ வர வேண்டாம்.....” என விநாயகம் எவ்வளவு தடுத்தும்... சத்ரி கேட்கவே இல்லை...இருவருமே சங்கரின் வீட்டின் முன்னால் நின்றானர்...

"சங்கர்.....” என்ற ஒரு அழைப்புக்கே வெளியே வத்தார் சங்கர்....

உள்ளே வா...என்ற அழைப்பு கூட இல்லாது ..... இருவரையும் வெறித்தபடி நின்றிருந்தார் சங்கர்...

"எங்களுக்கு தெரிஞ்ச எல்லா இடத்திலையும் தேடிட்டோம், எங்க இருக்காங்கனு கண்டுபிடிக்க முடியலை..... "என தன் வார்த்தைகள் தயங்கி தயங்கி வர... வந்த விசயத்தை சொல்லிவிட்டு , சங்கரிடம் ஏதும் பதில் வருமா என பார்க்க....

அவர்களிடம் பார்வை பதித்தவாரே... வீட்டினுள் திரும்பி... .''மாப்பிள்ளை...'' என சத்தம் கொடுக்க..... வந்தவனோ சிவ பாண்டியன்...சங்கரின் அக்கா மகன்....கிருத்திகாவிற்கு பேசியவன்...

# அத்தியாயம் 14

**சி**வ பாண்டியனை பார்த்ததும் அவனை வரவழைத்த காரணம் நொடியில் புரிந்து போனது சத்ரிக்கும் விநாயகத்திற்கும்•••...•••. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள•••.

"மாப்பிள்ள ,... இந்த சத்ரி பயலுக்கு, இரண்டு கழுதைகளும் பழகினது நல்லாவே தெரியும், எங்கே போனாங்கனுங்கனு கேட்டா... அது மட்டும், தெரியாதாம்•••.’’. என நக்கலாய் சிவா விடம் கூறியவர் பின் "ஒருவேளை .நான் கேட்கிற விதம் அவங்களுக்கு பிடிக்கலைன்னு நினைக்கிறேன்•••..நீங்க உங்க ஸ்டைலில் விசாரிங்க மாப்பிள்ள ...•••. .நான் கம்ப்ளையிண்ட் கொடுக்கிறேன்•••..’’ என சங்கர் உசிப்பி விட•••.

கிருத்திகாவின் மீது பெரும் ஆசை வைத்திருந்தவனுக்கு, அவள் வேறு ஒருவனுடன் ஓடி விட்டாள், அவனுடனே வாழ்க்கையை தொடங்கிவிட்டாள் என தெரிந்து கொண்ட சிவாவிற்கு மிகப் பெரிய தலைகுனிவாய் போய்விட்டது அவளின் செயல்...

இரண்டு மூன்று வருடங்களாய் காவல் துறையில் இருப்பவன், அவளுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்தான்... கிருத்திகாவின் படிப்பு முடிய காத்திருந்தான்.....

ஆனால் நடந்து முடிந்ததை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை..... நாளை நிச்சயம் என கனவில் மிதந்தவனுக்கு , கிருத்திகாவின் செயல் அவனின் கனவை கலைத்ததோடு, சொந்த பந்தங்களின் முன் தலை குனிவாய் இருக்க... எப்படியாவது தேடி கண்டுபிடித்து அவளையே மணக்க வெறி கொண்டிருந்தான்...

அப்படி ஒரு வெறியில் இருந்தவனுக்கு சங்கரின் பேச்சு உசுப்பேற்ற...

அடுத்த அரைமணி நேரத்தில் சிவாவின் தயவில் காவல் நிலையத்தில் இருந்தான்... சத்ரி....

இவர்களின் சப்தம் கேட்டு... சிவகாமி, மகா சாத்வி என அனைவரும் வந்து சங்கரை தடுத்ததையும், சங்கரிடமும் சிவாவிடமும் மன்றாட.... எதுவமே அங்கு எடுபட வில்லை...

சிவகாமி அங்கேயே தலையில் பைவைத்து அமர்ந்திருக்க...

சங்கர்... மகா, சாத்வி என இருவரையும் வீட்டினுள் அடைத்துவிட்டு வந்தார்...

'வெங்கட் இருக்கும் இடம் தெரியாது 'என நிச்சயமாய் பதில் சொன்ன விநாயகத்தின் மீது கம்ளைண்ட் கொடுக்க... சங்கருக்கு மனம் வரவில்லை.....

'கொஞ்ச நாள் தான் தெரியும் 'என உண்மையை கூறிய சத்ரியின் மீது தான் கொடுத்தார் ...

சிவ பாண்டியன்..... "கம்ளைண்ட் குடுங்க மாமா..... மத்ததை நாட் பார்த்துக்கிறேன்...'' என சத்ரியை பார்த்துக் கொண்டே கூற....

அவன் பார்வையில்..... "நான் ரெடி தான் ..... எப்படி விசாரச்சாலும்..... என்னோட பதில்..... 'தெரியாது. தான்.....' ஏன்னா ..... அது தான் உண்மை...'' என தன் தந்தையை விட்டு , சிவாவின் அருகிலேயே வந்து தெனாவட்டாய் நின்றான் எந்த ஒரு பயமும் இன்றி...நிற்க.....

அவனின் பயமில்லா தோற்றத்தில் சிவாவே சற்று அயர்ந்து தான் போனான்...

"உனக்கு என்ன அவ்வளவு தெனாவட்டா... ஸ்டேஷன் வாடா..... உன் தெனாவட்டு எங்க போகுதுன்னு நானும் பார்க்கிறேன்.....'' என ஸ்டேஷன் அழைத்து செல்ல.....

"சங்கர் , சத்ரி மேல கம்ளைண்ட் கொடுக்காதடா... வேண்டாண்டா... அவனுக்கு நிஜமாவே தெரியாது சங்கர்...'' என

காவல் நிலைய படியேற தவிக்கும் சாதாரண அப்பாவாக துடித்தார் விநாயகம்...

ஆனால் எதையும் கண்டுகொள்ளாமல்... சங்கரிடம் கம்ளைண்ட் வாங்கி..... சத்ரியை காவல் நிலையம் அழைத்துச் சென்றான் சிவா.....

அதே ஊரில் சப் இன்ஸ்பெக்டராக இருப்பவனை யராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை..... அவர்கள் முன்னே செல்ல... விநாயகம் அவர்களின் பின்னாலேயே 'மகனை அடித்து விடுவார்களோ 'என பயத்துடனே வந்து சேர்ந்தார்..... விநாயகம்.... முகமெல்லாம் வேர்த்து, சட்டை எல்லாம் வேர்த்து பார்க்கவே அப்படி ஒரு கோலத்தில் இருந்தார் விநாயகம்.....

"சங்கர், தெரியாதுனு சொல்ற பையனை ஏன்யா படுத்துற.....படிக்கிற புள்ளையா...விட்டுடுய்யா...." அவனை காவல் நிலையம் அழைத்துச் சென்றதில் இருந்து இதோ காவல் நிலையம் என்று கூட பாராது, சங்கர் காலில் விழாத குறையாய் விநாயகம் கெஞ்சிக் கொண்டிருக்க....

அவரின் கெஞ்சல்களுக்கு எந்த ஒரு பிரதிபலிப்பும் இல்லாமல் 'எவன் எக்கேடு கெட்டு போன எனக்கென்ன...எனக்கு என் பொண்ணு வேணும்....' என்ற ரீதியில் சங்கர் நின்றிருக்க.....

"யோவ. காண்ஸ்டபிள்... இவனை கூட்டிட்டு போய்யா... "என அங்கிருந்த காண்டபிளிடம் கூறி நேரே விநாயகத்திடம்

எந்த ஒரு பதிலும் சொல்லாமல் கல்லாய் இருந்த சங்கரிடம் வந்தான்.....

"மாமா, இங்க வாங்க...'' சிவா அழைக்க.... விநாயகத்தை ஏறெடுத்தும் பார்க்காமல்...

'என்ன.... மாப்ள.....' என்ற கேள்வியுடன் வந்தவரிடம்.... விநாயகத்தை கண்களாலே காட்டி "இவரை இங்க வச்சுகிட்டு என்னால் சத்ரியன்யை விசாரிக்க முடியாது....அவரை கூட்டிட்டு போங்க..... அப்படி நீங்களும் கிளம்புங்க.....'' என சங்கரின் காதை கடிக்க...

"ம்...இதோ...'' என விலிகியவர் மீண்டும் "மாப்ள.... நீங்க இவனை விசாரிக்கிறதில், இவன் அண்ணனுக்கு வலிக்கனும்...'' என ஏற்றிட விடவும் மறக்கவில்லை...

சங்கர் மற்றும் சிவாவின் பேச்சில்.....

உயிரையே உருவி எறிந்தது போல் துடித்துப் போனார் விநாயகம்...

கதியற்று நின்றிருந்த விநாயகத்திடம் சென்றவர்... "என் பொண்ணு வராம, உன் பையன் உங்கிட்ட வரமாட்டான்...கிளம்பு...'' என யாரோ மூன்றாம் மனிதரிடம் சொல்வது போல் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்...

"மச்சான் ,வேண்டாம் மச்சான், என் புள்ளைய விட்ரு, ... அவனை ஒன்றும் பண்ணிடாதா.....'' புலம்பி கண்ணீர்

வடித்தவரை அங்குள்ள இரண்டு காண்ஸ்டபிள்ஸ் அவரை வெளியே தள்ளாத குறையாய் அனுப்பினர்….

விநாயகம் வெளியேறியது தான் தாமதம்…..லத்தியை எடுத்துக் கொண்ட

விநாயகம் வெளியேறியது தான் தாமதம்…..லத்தியை எடுத்துக் கொண்டு அவனிருந்த செல்லிற்கு சென்றவன், விசாரனை என்ற பெயரால் சத்ரியை பின்னி எடுத்துவிட்டான்…. அத்தனை அடி அடித்தும் அவனிடம்….'' தெரியாது "என்பது தான்…

அவனை அடித்து ஓய்ந்த சிவா... சங்கருக்கு போன் செய்து "சத்ரியன் பயலுக்கு தெரியல போல மாமா, …..'' என தாடையை தடவியபடி பேச…..

மகள் வந்துவிடுவாள், இல்லை சிவா வர வழைத்துவிடுவான் என்ற நம்பிக்கையில் இருந்த சங்கருக்கு அந்த பதில் சற்றும் யோசிக்கவிடாமல்... "அவன் நடிக்கிறான் மாப்பிள்ளை….'' என கூற…..

"போலீஸ் அடினா சும்மாவா…..உண்மையை சொல்லாம இருக்க முடியாது மாமா...நிஜமாவே அவனுக்கு தெரியலை போல...'' என கோபமாய் பேச…

சிவாவின் பதிலில் நிறையவே தளர்ந்து போனார் சங்கர்... சற்று நேர அமைதியின் பின்….. ‘‘என்ன மாப்பிள்ளை பண்றது,

அந்த ஓடுகாலி எங்கே இருக்காளோ... இன்னும் நாலு சாத்து சாத்தி கேளுங்க மாப்பிள்ளை ,அடி எவ்வளவு நேரம் தாங்குவான்...’’ என மேலும் உசுப்பேற்ற...

"இதுக்கு மேல அடிச்சா, செத்துறபோறான்...மாமா...நானே வேலைக்கு சேர்ந்து இரண்டு மூணு வருசம் தான் ஆகுது, என் வேலைக்கு ஆப்பு வச்சிடாதீங்க... நான் இன்னும் கொஞ்சம் ஆள் அனுப்புறேன்... தேட சொல்லுவோம்... "என சிவா கூற.....

"ஏன் மாப்ள..... வேற போலீஸ் எல்லாம் வச்சு தேட முடியாதா.....’’ என சங்கர் கேட்க....

"மாமா, உங்க பொண்ணு மேஜர், அவளுக்கு தான் ஃபுல் சப்போர்ட் பண்ணுவாங்க... நான் பேருக்கு தான் கம்ளைண்ட் வாங்கினேன்.... எப்ஐஆர் கூட போடலை.... போடவும் முடியாது... மீறி ஸ்டெப் எடுத்தால் பிரச்சனை நம்ப பக்கம் திரும்பிடும்...’’ என சிவா கூற....

"இப்போ என்ன பண்றது...மாப்ள....’’என சங்கர் கேட்க....

‘‘சத்ரியனை இங்கே வச்சிருக்கிறதை எவனாது வெங்கடேஷ் காதில் போடாமல் இருக்க மாட்டான்... கண்டிப்பா தேடி வருவான்.... மாமா..... அது வரை இந்த பயலை செல்லுலேயே வச்சிடறேன்... எவன் கேட்க போறான்..... "என போனை வைத்துவிட்டான்.....

இதுவரை எந்த பிரச்சினைகள் வந்தாலும் சங்கரின் தயவால், சிவாவின் மூலமே நடத்திக் கொள்ளும் விநாயகம், இப்போது யாரைப் பார்த்து தன் மகனை காக்க என தெரியாது பைத்தியம் பிடித்தவர் போல் நின்றார்.....

பின் பஞ்சாயத்து தலைவரின் நியாபகம் வர, வேக வேகமாய் அங்கே சென்றார்..... நேரில் பார்த்து உதவி கேட்க விரைந்தார்.....

அவரோ.....'' நடவடிக்கை எடுக்க சொன்னது, உன் மச்சான், எடுக்கிறது அவன் அக்கா மகன்...இரண்டு பயலுகளும் அடங்காதவனுங்க.....பஞ்சாயத்து கூட்டினா வேனா என்னால் எதாவது செய்ய முடியும்,.....இப்ப ஒன்றும் பண்ண முடியாதுயா....வேணா அவனை விட கொஞ்சம் பெரிய அதிகாரிங்க கிட்ட போய் பாரு.....'' என தனக்கு தெரிந்த ஒரு இன்ஸ்பெக்டரிடம் அனுப்ப...

அவரோ..... "நான் சொன்னா எல்லாம் விட மாட்டான் அந்த சிவா..... சரியான திமிரு புடிச்சவன்... இதோ பாருங்க, ஆளுங்க பலத்தை விட பணத்தோட பலம் தான் எங்கேயும் பேசும்... இவ்வளவு பணத்தோட வாங்க, நான் டிஐஜி கிட்ட கூட்டிட்டு போறேன்.....அவர் சொன்ன கண்டிப்பா விட சான்ஸ் இருக்கு...'' என அனுப்பி விட

'இவ்வளவு பணமா, என நினைக்க முடியவில்லை, அப்போதைக்கு சத்ரியன் தான் பெரிதாக தெரிய..... 'வீட்டுக்கு சென்றார்...

"சிவகாமி...'' என சத்தமிட்டு அழைத்தவர்...சிவகாமி பதில் பேசும்முன்பே.....'' மர பீரோவில் குத்தகை பணம் இருக்கும், அப்படியே உன் நகையில் கொஞ்சம் எடுத்திட்டு வா... "என நடந்ததை கூற...

அடுத்த நிமிடம் இரண்டையும் எடுக்க சென்றவர் வரவே இல்லை..... 'இவ்வளவு நேரமா இவ என்ன பண்றா...' என உள்ளே சென்று பார்க்க.....

மர பீரோ லாக்கல் திறந்தபடி இருக்க, அதை அதிர்ச்சியுடன் பார்த்தபடி சிவகாமி நின்று இருந்தார்.....

ஏதோ வித்யாசமாய் பட, தானும் அவரின் அருகில் சென்று பார்க்க... அது சுத்தமாய் வழிக்கப்பட்டு இருந்தது...

"எங்கே சிவகாமி பணம் நகை எல்லாம்...'' என குரல் கமற கேட்க

விருட்டென திரும்பிய சிவகாமி....கண்களில் அவ்வளவு அதிர்ச்சி.... "வெங்கடேஷ் பய எல்லாத்தையும் எடுத்துட்டு போய்ட்டான் போல...'' என வெளிறிய முகத்துடன் சொல்ல....

சென்றவன் இப்படி சுத்தமாய் வழித்துச் சென்றிருப்பான் என இருவம் கனவிலிம் நினைக்கவில்லை... மகன் மேல் இருந்த பாசம் அப்படி..... அதை அவனே கெடுத்துக் கொண்டான்...

அப்படியே தலையில் கைவைத்து தரையிலேயே அமர்ந்தார் விநாயகம்...' என்ன செய்ய..... என விழித்தவர்..... மீண்டும் பஞ்சாயத்து தலைவரை பார்க்க சென்றார்.....

நடு இரவில் சென்று பணம் கேட்க... அவரின் கலங்கிய முகம் ... அதை கொடுக்க வைத்தது.....அதுவும் வட்டிக்காக தான் தந்தார்.....

காலையில் வட்டிக்கு பணம் வாங்கி அதை மேலதிகாரியிடம் கொடுத்த பின்னரே அது வேலை செய்ய....

டிஜிபியிடமிருந்தே , சத்ரியன்க்கு சிபாரிசு கிடைக்க... எப்ஐஆர் கூட இல்லாமல் அவனை எவ்வளவு நாள் வைத்திருக்க முடியும்...என சிவபாண்டியவன் , சத்ரியன்யை அனுப்பி விட்டான்....

சத்ரியை அழைத்துச் செல்ல வந்த விநாயகம்,... சத்ரியை பார்த்து அழுதே விட்டார்...

உமையடி அடித்ததின் விளைவாய்.....நடக்கவே சிரமப்பட்டான்.... சத்ரியன்.....அத்தனை அடி வாங்கி இருந்தும்..... உடலில் தான் தளர்வு தெரிந்ததே தவிர, மனதில்

தளர்வு அற்றவனாய்…. சிவா கண்ணில் இருந்து மறையும் வரை, சத்ரியன் பார்த்த பார்வை... அவ்வளவு குரூரமாய் இருந்தது…..

வெளியே வந்த சத்ரியன் தன் தந்தையின் தோளில் சாய்ந்தவாறே "நடக்க முடியலைப்பா….. "திணறியபடியே கூறினான்...

"தப்பு செஞ்சவனை விட்டுட்டு , உன்னை அடிக்கிறானுங்களே..." கண்ணீரை துடைத்தபடியே , வழியில் சென்ற ஆட்டோவை பிடித்து…..

வீட்டிற்கு அழைத்துச் செல்லாமல், அந்த ஊரில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்று அவனை காட்டிவிட்டே வீட்டிற்கு வந்தனர்…..

சிரித்த முகமாய், அனைவரிடமும் வம்பிழுத்தபடி, ஆரவாரமாய் வலம் வரும் இளையமகன்..,.. ஆங்காங்கே சிறிய பிளாஸ்திரிகளுடன், ஆங்காங்கே இரத்தம் கன்றி போய், வீங்கிய முகத்துடன் கட்டிலில் படுத்தருந்தவனை பார்க்க பார்க்க, மூத்த மகனின் மீது அப்படியோரு வெறி கிளம்பியது அவனை பெற்றவர்களுக்கு...

அவனை பார்த்த சிவகாமி முந்தானையை வாயில் வைத்தபடி சத்தம் வராமல் அழ... விநாயகமோ புலம்ப ஆரம்பித்தார்….

"வெங்கடேஷ் பய நல்லா தான இருந்தான்... எப்படி தான் அவனுக்கு புத்தி இப்படி போச்சோ... இந்த பயலை இப்படி படுக்க வச்சிட்டு போய்ட்டானே...'' என அழுகையில் ஆரம்பித்தவர், ஆத்திரத்தில் முடித்தார்.....

அவனை அடித்த விசயம் கேள்விபட்டு மகா, சங்கரிடம் சண்டைக்கு நின்றார்.....

"நம்ப பொண்ணு பண்ணின தப்புக்கு ,சத்ரியன் என்ன செய்வான்..... புள்ளையை போட்டு இப்படி அடிச்சருக்கான்... உங்க அக்கா மகன்... சத்ரியன் நம்ப வளத்த புள்ளைங்க..... "என மகா பேச.....

"அந்த ஓடுகாலியை இனி நம்ப பொண்ணுன்னு சொன்ன....? பேசறதுக்கு இனி வாய் இருக்காது..... எப்படியாவது கூட்டி வந்து சிவாக்கு கல்யாணம் பண்ணலாம்ன்னு நினைச்சேன்,... ஓடுகாலி போய் ஒரு நாளாச்சு, இன்னும் அவ நம்ப பொண்ணாவா இருக்க போறா...நேத்தே அவனுக்கு பொண்டாட்டி ஆயிருப்பா... இனி அவளை பத்தி பேசாத... தலை முழுகியாச்சுன்னு நினைச்சிக்க... மூத்தவளை விட்ட மாதிரி இந்த கழுதையையும் விட்டுடாத.....'' என சாத்வியை பார்த்தபடி முறைப்புடன் சென்றவர்.....மீண்டும் வந்து..... "இனிமேல் அண்ணே, நொண்னேன்னுட்டு விநாயகம் வீட்டு பக்கம் போன உனக்கும்

உன் மவளுக்கும் தான் தான் எமன்…..'' என சீறியபடி பெரிய மகளை தேடி சென்றுவிட்டார்…..

மகா ஒரு மூலையில் தலையில் கை வைத்தபடி இருக்க... "அம்மா சத்ரியை பார்க்க போகலாம்மா...'' என அழுகையில் முகமெல்லாம் சிவந்து போய் இருந்த சிறிய மகளை பார்த்து...

"நீ எதுக்குடி இப்ப அழற…..'' என கண்ணீரை துடைக்க…..

''சத்ரியை பார்க்கனும்மா….. "என வேறு பதிலை கூற…..

"உங்கப்பா வந்தார்னா கொண்ணே போட்டுடுவார்டி…..'' என பயத்துடன் மகா கூற…..

"பரவாயில்லை மா…..கொண்ணாலும் பரவாயில்லை...'' என மகாவிற்கு முன் சத்ரியின் வீட்டில் இருந்தாள்….சாத்வி…..

சாதவிக்கு இருக்கும் தைரியம் கூட எனக்கில்லையே என மகாவற்கு அவமானமாய் இருந்தது...

கட்டிலில் சத்ரி இருக்க... விநாயகமும் சிவகாமியும் அவன்றைக்கு வெளியில் அமர்ந்திருக்க….. இருவரையும் விருட்டென கடந்து சென்றாள் சாத்வி... அவள் செல்வதை பார்த்து சிவகாமி சமையலறைக்கு செல்ல…..

சாத்வி சத்ரியனிடம் சென்றருந்தாள்...

அரவம் உணர்ந்து, அருகில் இருந்த துண்டை தன் மேல் போட்டு மறைத்தான் சத்ரி….. அதற்குள் பார்த்துவிட் சாத்வி….. வாயில் கை வைத்தபடி அப்படியே நின்றுவிட்டாள்...

அப்படிஒரு அதிர்ச்சி அவளிடம்...

கண்ணீர் தனாகவேவர ஆரம்பித்தது...

என்ன செய்வதென தெரியாமல் அவனருகில் வந்து வலுக்கட்டாயமாய் துண்டை எடுத்துபார்த்தாள் சாத்வி....

இறுக்கி பிடித்த சத்ரி..... "சாவி வீட்டுக்கு போ...'' என படுத்திருந்த வாக்கிலேயே ஹீனமாய் பேச.....

திரும்பி இருந்த அவன் முகத்தை பார்த்தவள் ஓரடி தன் முகத்தை பின்னால் நகர்த்தி... "அம்மா...'' என அலற வேறு செய்ய.....

அதில் சற்று அழுத்தமாய்.... "இப்போ நீ வீட்டுக்கு போறியா இல்லையா சாவி.....'' என அதட்ட....

பின்னாலேயே வந்த மகாவும் அவனின் நிலையை பார்த்து கதறி விட்டார்...

பெற்றவர்களுக்கு சிறிதும் மரியாதை தராமல் சென்று , பிரச்சனையை இழுத்துவிட்ட கிருத்தி வெங்கட் மீது கோபப்படுவதா... இல்லை அதை பெரிதாய் மாற்றி வைத்திருக்கும் தன் கணவனின் மீது கோபம் கொள்வதா..... இல்லை அதில் இன்னமும் பொறியாய் எறிந்து கொண்டிருக்கும் சிவாவின் மீது கோபம் கொள்ளவதா என தெரியாமல் மொத்த குடும்பமும் கதி கலங்கி நின்றிருந்தனர்.....

மூக்கை உறிஞ்சிய படியே வந்தசிவகாமி...

சாத்வியின் கையில் ஒரு கின்னத்தில் கஞ்சியை ஊற்றி…

"எப்படியாவது சாப்ட வச்சிடு சாத்வி... "என சிவகாமி கண்களை துடைக்க…..

தன் கண்ணீரையும் துடைத்தபடி....

சத்ரியின் பின்னால் இன்னும் நான்கு தலையனைகளை வைத்து….. அவனை நிமிர வைத்து... ஸ்பூனினால் ஊட்ட ஆரம்பித்தாள்…..

'சாப்பிடு சத்ரி' என்ற அதட்டலும் இல்லை, கெஞ்சலும் இல்லை... நேரடியாக அவள் ஊட்ட ஆரம்பித்ததிலேயே அவளின் 'சாப்பிடாமல் விட மாட்டேன்' என்ற பிடிவாதம் இருக்க…..

சத்ரியும் சாப்பிட ஆரம்பித்தான்…. சிறிது சென்ற பின், அவன் வாங்க மறுக்க...

அவளின் முறைப்பை பார்த்து….. "வாய்க்கு நல்லாயில்லை...’’ என தன் வலியை அவளிடம் காட்டாது...

...படுத்துப் கொண்டான்...

வலியில் வயிறு பசியை உணராது "இரண்டு மணி நேரமாக சாப்பிடாமல் மறுத்தவனை….. சமாளிக்காமல் சிவகாமி திணற….. சாத்விக்கும் சத்ரிக்கும் இருக்கும் பிணைப்பு தெரந்தவராகையால் சாத்வியை அனுப்ப... சிவகாமி நினைத்ததை போல்…. சத்ரி

மறுக்காமல் உண்டான்…. சிறிதளவு என்றாலும் கொஞ்சமேனும் சாப்பிட்ட திருப்தியுடன் சிவகாமி சென்றுவிட்டார்…..

உணர்வுகளை முகத்தில் காட்டிய மகா….. வார்த்தைகளால் ஆறுதல் அளிக்க முன்வரவில்லை…. அது எந்த வகையிலும் தேற்றாது என தெரிந்து, முடிந்தளவு சங்கர் இல்லாத சமையங்களில் சாத்வியை சத்ரியின் உதவிக்கு அனுப்பி வைத்தார் மகா...

ஏற்கனவே இரண்டு நாட்கள் பள்ளி செல்லாத காரணத்தால் அவளது நண்பர்கள் பட்டாளம் சாத்வியின் வீட்டிற்கே வந்துவிட்டனர்…..

"சங்கர் இருக்கும் வரை அமைதியாய் இருந்த பட்டாளம், அவர் மறைந்ததும் சாத்வியை கேள்விகளால் துளைத்தெடுத்தனர்….

"உன் அக்கா ஓடி போய்ட்டாங்களாமே...'' என எடுத்தவுடன் கயல் கேட்க...சாத்வி முறைத்த முனையில் அடுத்து அந்த கேள்வியை யாரும் கேட்கவில்லை……

‘‘கயலு நீ வாயை பொத்து... "என கயலிடம் பாய்ந்து ‘‘..என்னடி சத்ரியன் அண்ணவை அடிச்சுட்டாங்களாமே…..'' என சாத்வியிடம் முடித்தாள் சரண்யா….

"ம்….ஆமா சரண்யா….'' என்றவளுக்கு முகம் கசங்கியது...

"ஆமா ஆமா எங்க அம்மா கூட சொன்னாங்க..... அண்ணாக்கு ரொம்ப அடியா.....'' என மீண்டும் கயல் கேட்டாள்.....

"ம்.ஆமா.... ரொம்ப அடி....'' என கூறியவளின் முன் சத்ரியின் அடிவாங்கிய உடல் நினைவு வர தனக்கும் வலிப்பதை உணர்ந்தாள்.....

"சத்ரி அண்ணே எங்க இருக்கும்... எங்கம்மா பார்த்துட்டு வரச் சொல்லுச்சு சாத்வி.....'' என செந்தில் கேட்க....

"இல்லை பார்க்க முடியாது..... "என

உறுப்படியாய் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் நகத்தை பற்களால் பிய்த்துக் கொண்டிருந்தாள் சாத்வி.....

"ஏய் எங்களுக்கு ஒழுங்கா பதில் சொல்லாமல் என்னத்தடி யோசிக்கிற.....'' என கயல் அவளை இடிக்க....

"அதில்லை.... சத்ரிக்கு சீக்கரம் சரியாகனும்... ஹாஸ்பிடல்ல கேட்டா.... ஊமையடி ரொம்ப விழுந்திருக்கு... கொஞ்சம் லேட் ஆகும்னு சொல்றாங்க..... "என யோசித்தபடி... "சத்ரிக்கு சீக்கரமா சரியா ஆகனும்னா என்னடி செய்யனும்..... வேற டாக்டர்கிட்ட போகலாமா.....'' என மூளையை கசக்க...

"வேற டாக்டர் பார்த்தாலும் அதை தான் சொல்ல போறாங்க...... எங்கப்பா கீழே விழுந்து அடி பட்டு வந்தப்ப டாக்டர்கிட்ட எங்கப்பா போகவே இல்லை...... பத்து நாளைக்கு

நாட்டு கோழி அடிச்சு வச்சாங்கடி…. சூப்பு, குழம்பு தான்… சீக்கிரமா சரியாடுச்சுடி… "என சரண்யா செல்ல…

நகம் கடிப்பதை நிறுத்தி… "நாட்டுக் கோழிக்கு நான் எங்கடி போக…'' என கடுப்பாய் கேட்டாள்…

"உங்க அத்தைகிட்ட சொல்லு….'' என செந்தில் கூற…..

''அத்தை வீட்டில் அசைவம் சாப்பிட மாட்டாங்க, சத்ரியே வெளிய தான் சாப்புடுவான்… "என வழி கண்டுபிடிக்கும் பணியில் இருந்தாள் சாத்வி…

"அப்போ உங்க அம்மாட்ட சொல்லு…'' என மீண்டும் கயல் கூற…..

"அக்கா ஓடிப் போய்டான்னு அம்மா வீட்டை விட்டு வெளிய வர மாட்றாங்க….. வீட்டில் அப்பாக்கு தெரியாமல் செய்ய முடியாதுதே வாசனையே காட்டி குடுத்துடும்……'' என கவலையாய் கூற…

"அப்போ ஒன்றும் செய்ய முடியாது "என செந்தில் முறுக்கிக் கொள்ள…..

சட்டென முகம் பளிச்சென ஆக…..

"ஏலே…. உங்க கறி கடையில் நீ தான கோழி ஆடெல்லாம் உரிப்ப…'' என கேட்க…..

"ஆமா , அப்பா இல்லாத நேரம் நான் உரிச்சுக் கொடுப்பேன்....'' என கூற....

"அப்போ நான் கோழி கொண்டுட்டு வாரேன்டா.... நீ உரிச்சு குடுடா... ஆனால் யாருக்கும் தெரய கூடாது... "என சாத்வி மகிழ்ச்சியாய் கூற... மற்ற திட்டங்களும் ஒன்பதாம் வகுப்பில் இருக்கும் பெரிய மனிதர்கள் திட்டம் திட்ட...

"ஒரு கோழி எவ்வளவு ரூவா தெரியுமா.... காசுக்கு எங்க புள்ள போவ....'' என கயல்விழி கேட்க...

"அத பத்தி உனக்கென்ன... உனக்கு தேவையானது கோழி தானே... கோழியோட வரேன்...'' என மகிழ்ச்சியாய் கூறினாள் சாத்வி....

"கோழிக்கு ரெடி பண்ணிடுவ... சூப் குழம்பு எல்லாம் யாரு வப்பா...'' என செந்தில் கேட்க...

அப்படியே தொப் என அமர்ந்தாள் சாத்வி... "ஆமால குழம்பு யார் வப்பா, எனக்கும் வைக்க தெரியாதே...'' என முகம் அஷ்ட கோனலாக மாற...

"நீ கோழிக்கு ரெடி பண்ணு நான் எங்கம்மா கிட்ட வைக்க சொல்றேன்.... சத்ரி அண்ணனுக்குனா வச்சு கொடுக்கும்...'' என செந்திலே அதற்கு வழி கொடுக்க...

"வச்சு குடுக்க சொல்லுடா... உங்கம்மாக்கு புண்ணியமா போகும்....என முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாட...

"இன்னைக்கே கோழியோட வரேன்...'' என தன் நண்பர்களை அனுப்புவிட்டு...

ஸ்கூல் பேக்கை மாட்டிக்கொண்டு வீட்டில் இருந்து நேராக சிவ பாண்டியின் பாட்டி வீட்டிற்கு சென்றாள்... சற்று தூரம் தான் இருந்தாலும் சற்றும் பயமில்லாது... சென்றாள்...

"ஏ புள்ள... உங்க வீடு அந்த பக்கம்லே... இங்கன என்ன செய்ற.....'' என ஒருத்தி கேட்க.....

திரு திரு வென விழித்தவள்..... ஸ்கூலுக்கு இரண்டு நாள் போகலைல..... அதான் கயலு வீட்டுக்கு போய், எழுத போரேன்...'' என அத்தனை பல்லையும் காட்ட...

"நீயும் ஊரை சுத்தி உங்கக்கா மாதிரி போய்டாத.... பெரியபுள்ளையாயிட்ட நியாபகம் வச்சுக்க.....'' என நக்கலாய் அவள் கூற.....

"வச்சிக்கிறேன், வச்சிக்கிறேன்....'' என அவளும் நக்கலாய் கூறி சிவாவின் பாட்டி வீட்டிற்கு நடந்தாள்.....

வீட்டிற்கு வெளியே நிறைய கோழிகள் ஆடுகள் என அனைத்தையும் மேய்ச்சலுக்காய் திறந்து விட்டிருக்க... அதனுடன் விளையாடுவது போல்... சிறிது நேரம் வரை ரோட்டில் போவோர் வருவோர்க்கு சந்தேகம் வராத வண்ணம்..... ஆடுகளுடன் விளையாண்டவள்......

. ஒரு சிறு கோழியை மட்டும் விரட்டிக் கொண்டு ஆள் அரமற்ற இடத்திற்கு வந்தாள்...

சுற்றி முற்றி யாரும் இருக்கிறார்களா என பார்த்தாள்…. யாருமில்லை என உறுதி படுத்திக் கொண்டு…..

பேக்கில் வைத்திருந்த அரிசியை எடுத்து வீச….. ஒரு நிமிடம் 'கக்' கககக்க்….' என சத்தமிட்டபடி அந்த கோழியும் அரிசியை உண்ண துவங்க...அதே தான் நேரம் என….

தன் கையில் இருந்த ஈரத் துணியை அதன் மேல் போட்டு கப்பென பிடித்து யாரும் பார்க்கும் முன் தன் ஸ்கூல் பேக்கில் அடைத்து போட்டு மாலை கவிழ்வதற்குள் செந்திலிடம் சேர்த்தாள்...

சேர்த்தபின் 'அப்பாடா…. 'என பெருமூச்சுடன் நிம்மதியும் கிளம்ப... சங்கர் வருவதற்கு முன்பே தன் வீட்டிற்கு ஓட்டம் பிடித்திருந்தாள்...

காலையில் கம கம மணத்துடன் ஒரு பாத்திரத்தில் நாட்டுக் கோழி சூப், மற்றொன்றில் நாட்டு கோழி குழம்பும் மணமணத்து கொண்டிருக்க…..

வீட்டிற்குள் நுழைந்ததும் சிவகாமி மூக்கை பொத்திக் கொண்டார்….

"ஏண்டி காலங்காலத்தல என்ன கர்மத்தை கொண்டாந்திருக்க... "என முகம் சுருக்க...

"கர்மமா.....! நீ பாத்ரூம் கழுவுற ஹார்பிக்கை வச்சு உன் வாயை கழுவு....அத்தை. !'' என வீட்டை பழையபடி சகஜமாக்கிக் கொண்டிருந்தாள் சாத்வி.....

"ஏண்மா , காலையலேயே ஆரம்பிச்சுட்டீங்களா...'' என விநாயகமும் வர....

"சத்ரிக்கு அம்மா , கோழி கொழம்பு குடுத்துவிட்டுச்சு மாமா "என அவரிடம் அமைதியாய் பொய் பேச...

"சாப்பாடு கொண்டாந்த புள்ளைகிட்ட என்ன வம்பு பண்ற.....'' என சிவகாமியிடம் சாடியவர்..... "அவன் சாப்பிடற நேரம் தான்மா....'' நீ போய் குடுமா....'' என சாத்வியை அனுப்ப...

அவனது கட்டிலுக்கருகில் எல்லாவற்றையும் எடுத்து வைக்க...பார்த்தவனுக்கு "இதெல்லாம் எதுக்கு சாவி... அத்தையை வேற கஷ்டபடுத்தற...'' என சத்ரியாய் ஊகித்து கூற...

''இதெல்லாம் சாப்பிட்டால் சீக்கிரம் சரியாகுமாம்.....''

"இந்த சூப் முதல்ல குடி அப்பறமா, குழம்பு வச்சு சாப்பிடு'' என சிறுபிள்ளையின் குணத்துடன், கண்களை விரித்து பேசி... அவனுக்கு கொடுக்க.....

தூக்கலாய் இருந்த மிளகும், இஞ்சியும் அப்படி ஒரு சுறு சுறுப்பை கொடுக்க... சூப்பை மொத்தமாக குடித்தே .....விட்டான்.....

"அம்மா வச்சாங்களா.... சாவி....." என சத்ரி கேட்க.....

'சத்ரியிடம் மாட்டினாள், நிச்சயம் தன் தோலை உரித்துவிடுவான் என..... 'ஆம் என்பது போல் தலையசைக்க.....'

"ரொம்ப நல்லா இருக்குன்னு சொல்லிடு சாவி..." என மிகுந்த பிரயத்தனபட்டு சிரிக்க முயன்றான்.....

அதை புரிந்தவள் போல்..... "சீக்கிரம் சரியாகிடும்..... சத்ரி..."என அவன் முகம் பார்த்து சிரிக்க..... அந்த புன்னகை அவனிடம் சற்று ஒட்டிக்கொண்டது...

# அத்தியாயம் 15

**ச**த்ரி சாப்பிடும் வரை அவனுக்கு தேவையானதை பரிமாறிக் கொண்டிருந்தாள் சாத்வி….சிரிப்புடன்….

சாப்பிடுவதை நிறுத்தி…. "ஏய் இப்போ…..எதுக்கு நீ சிரிக்கிற.. "என சத்ரி கேட்க…

"உணவே மருந்து…. உணவே மருந்துன்னு கேள்வி பட்டிருக்கேன்….. ஆனா இப்போ தான் அதை பார்க்கிறேன்….'' என பூடகமாய் பதில் கூற…

அது நன்றாக புரிந்த சத்ரியோ , சாத்வியை நன்றாகவே முறைத்து பார்க்க…..

அதில் சாத்விக்கு இன்னும் சிரிப்பு கூட….'' நேற்றில் இருந்து எழுந்து உக்கார முடியலை…. இப்போ கோழியை பார்த்ததும் சேவல் மாதிரி சிலிர்த்துக்கிட்டு எழுந்து உக்கார்ந்திட்டியே….. அடி வாங்குனது நீ தானா… எனக்கு சந்தேகமா இருக்கு….. சத்ரி "என கிண்டல் செய்து கொண்டிருந்தாள்….

"ஏண்டி என் புள்ளையே அடி வாங்கிட்டு வந்து படுத்துக்கிடக்கான்…. உன்கென்னடி கிண்டல் கேலி….. வேண்டி கிடக்கு…..'' என சிவகாமி கண் கலங்க….

"உன் மகன் சின்ன புள்ள பாரு….அடி வாங்கிட்டான்னு அழுதுட்டு இருக்க... "என சிவகாமியிடம் கூறியபடி….

"ஏண்டா எருமை மாதிரி வளர்ந்திருக்க…. பதிலுக்கு அடிக்க வேண்டாமா…..'' என சத்ரியிடம் பாய்ந்தாள் சாத்வி…..

அவள் ஏற்றி விடுவதை பார்த்து... "ஆத்தி போலீஸ்காரனை அடிக்க என் புள்ளைய ஏவி விடுறியா நீ….. "என சிவகாமி பதற….

"பதிலுக்கு நீ அடிச்சா தானே அவன் உன் வழிக்கு வராம இருப்பான்….. குடும்பமே பயந்து நடுங்குங்க... பின்னே ஆடமாட்டான் அவன்….'' என வாய் பேசினாலும் சாத்வியின் கண்கள்….. 'உன்னை இப்படி பண்ணினவனை …. சும்மா விட்டுட்டுயே…..' என சத்ரியை குற்றம் சாட்டவும் மறக்கவில்லை…

"ஏண்டி சும்மா இருக்குறவனை ஏண்டி உசிப்பி விடுற….. சிவா பய என்ன காரணம் கிடைக்கும் இவனை அடிக்கலாம்னு சுத்திட்டு இருக்கான்…. நீயே அதுக்கு தீணீ போட்டுடாத சாத்வி...'' என சாத்வியிடம் கூறிய சிவகாமி…..

சத்ரியிடம் திரும்பி…..'' டேய், உன்னை வெளியில் கொண்டுவர உங்கப்பா படாத பாடு பட்டுட்டார்….. அந்த இரண்டு கழுதைகளும் செய்த வேலைக்கு நீ தண்டனை அனுபவிச்சிட்ட….. இதோட எல்லாத்தையும் தலை முழுகிடு…..

ஏதாவது செஞ்சு..... எங்களை அனாதையா விட்டுடாத....'' என அழுகையில் முடிக்க.....

'ஏதுக்கு தான் இந்த பேச்சை பேசினோமோ..... 'என சாத்வியின் தலையினுள் ஓட ஆரம்பித்தது....நிறைய தடவை.....

சாத்வியை முறைத்த சத்ரி..... "எந்த பிரச்சனையும் பண்ண மாட்டேன் மா...'' என மிக அழுத்தபாய் சொல்லிய பின்பே..... சத்ரியின் தலையை வருடி.....

"நீ எங்களுக்கு வேணும்யா... பார்த்து நடந்துக்கோ..... இந்த ஆடுகாலி பேச்சை கேட்காத.....'' என சாத்வியை கடிக்க....

சிவகாமியின் சீண்டலில்.... "இவனை நீ பொம்பள புள்ளையா பெத்து இருக்கலாம் அத்தே... இப்படி பொத்தி பொத்தி வைக்கிறியே...'' என சிரிப்புடன் சொல்ல.....

"அப்படியே வாயிலேயே போடுவேன்.....நீ முதலில் இங்கே இருந்து கிளம்பு...'' என சொல்லி சிவகாமி அங்கிருந்து செல்ல.....

"போகாமல் இங்கே இருந்து நான் என்ன செய்ய....'' என அவளும் வீம்பாய் கிளம்ப..... சாத்வியின் கையை பிடித்து தன் புறமாய் திருப்பினான் சத்ரி....

. அவன் இழுப்பில் அவன் மேலேயே வந்து விழுந்தாள் சாத்வி.....ஏற்கனவே இருந்த.த ஊமையடி.... அதிலேயே இவளும் விழ..... "அம்மா....'' என சத்தமும் வர.... அவன்

மேலே இருந்த வாக்கிலேயே சத்ரியின் வாயை பொத்தினாள் சாத்வி...

அவளிடமிருந்து திமிறி.... "ஏய் எழுந்து உக்கார்டி....." என சத்ரி கடுப்பாய் கூற....

அவன் மீதிருந்து எழுந்தவாறே..... "ஐய்ய.... நானா வந்து விழுந்தேன்... நீ தானடா இழுத்த எருமை...." என முறைத்து....." உன் வீரத்தை அந்த சிவாகிட்ட காட்ட வேண்டியது தானே....." என வம்பிழுத்து.....

'அவனை எதுவுமே செய்ய மாட்டியா...?' என பார்த்தாள்.....

அவளின் பார்வையை பார்த்து..... "உன் பார்வையே சரியில்லை சாவி..... ஒழுங்கா படிக்கற வேலையை பாரு..... ஏடாகூடமா எதுவும் செஞ்சிடாத... இது பெரியவங்க பிரச்சனை..... அவங்க பார்த்துப்பங்க..." இதை சொல்ல தான் உன்னை நிறுத்தினேன்..." .சத்ரி முறைக்க.....

மற்றதையெல்லாம் காற்றில் விட்டுவிட்டு... "ஆமா ஆளாளுக்கு உக்கார்ந்து அழுதுட்டு இருக்காங்க..... இவங்க எங்க பார்க்க போறாங்க... நான் பார்த்துக்கிறேன்..." என சிவகாமியையும் விநாயகத்தையும் பார்த்து கூற....

"ஏய்.... சாவி உன் வால் தனத்தை இதில் காட்டாத...படிக்கிற வேலைய மட்டும் பாரு... வேற வேலை எதுவம் பார்த்தன்னு காதுக்கு வந்தது.... தோலை

உரிச்சிடுவேன்….. நியாபகம் வச்சிக்க… "என சாத்வியை அதட்டினான் சத்ரி…. இப்படி கடுமையாய் பேசுபவன் இல்லை சத்ரி…..அதை புரிந்தவளாய்…..

"ம்ம்….சரி…..'' என தலையை நன்றாகவே உருட்டி… அங்கிருந்து கிளம்பினாள்…..

முதல் நாளன்று வந்த மகா… கணவனின் உருட்டல் மிரட்டிலுக்கு பயந்து, அவ்வப்போது தலையை காட்டிவிட்டு மறைந்துவிடுவார்…. அதை தனக்கு சாதகமாக பயண்படுத்தி…. செந்திலின் அம்மா செய்து தரும் கோழி வகையறாக்களை…. மகா செய்ததாக கூறி…. தினமும் சத்ரியை தேற்றி வந்தாள்….. சாத்வி….

முதல் நாளன்று வந்த மகா… கணவனின் உருட்டல் மிரட்டிலுக்கு பயந்து, அவ்வப்போது தலையை காட்டிவிட்டு மறைந்துவிடுவார்…. அதை தனக்கு சாதகமாக பயண்படுத்தி…. செந்திலின் அம்மா செய்து தரும் கோழி வகையறாக்களை…. மகா செய்ததாக கூறி…. தினமும் சத்ரியை தேற்றி வந்தாள்….. சாத்வி…..

இதற்கிடையில் கிருத்திகாவும் வெங்கட்டும் எப்படி மாயமென மறைந்தார்கள் எனதெரியாமல் சிவா, சங்கர், விநாயகம் என மூன்று குடும்பத்திற்கும் குழப்பமே மிஞ்சியது…

சூடு பறக்க ஆரம்பித்த்தேடல் வேட்டை…. நாட்கள் ஏற ஏற…. அதன் சூடும் தணிந்து கொண்டிருந்தது…. இருவரும் வரவே மாட்டார்கள் என்ற நிலைக்கு மற்றவர்கள் சென்றாலும்…. சங்கர் எப்போது இருந்தாலும் சிவாவை தன் மாப்பபிள்ளை ஆக்கிக் கொள்வதில் அத்தனை ஆர்மவமாய் இருந்தார்…

ஆனால் அதற்கு கிருத்திகா கிடைக்க வேண்டுமே…..!!!!!! அது எப்போதும் கேள்விக் குறி தான் என யாருக்கும் தெரியாமல் போய்விட்டது…

ஒரு நாள் விட்டு ஒரு நாள் என சிவபாண்டியனின் பாட்டி வீட்டிற்கு செல்வதும், ஏதாவதொரு தில்லாலங்கடி வேலை செய்து , வீடு திரும்பும் போது கோழியுடன் வருவதும் , அதை நண்பனின் உதவியுடன் கசாப்பு போட்டு அதை சத்ரிக்கு காலையும் மாலையும் கொடுக்க தவறவில்லை சாத்வி… பத்து நாட்களில் சத்ரியின் உடலும் தேற ஆரம்பித்தது…..

அது சாத்வியின் அக்கறையினாலா இல்லை, சத்ரி சாப்பிடும் மாத்திரைகளாலா என தெரியாமல் நல்ல முன்னேற்றம் காண ஆரம்பித்தது….

முதலில் சிறுதும் பெரிதுமென ஒரு நாள் விட்டு ஒருநாள் கோழிகள் காணாமல் போக….

முதலில் கண்டுகொள்ளாமல் இருந்த சிவாவின் பாட்டி ரத்தினம்மாள் தொடர்ந்து கோழிகள் மட்டும் காணாமல்

போவதையும் அதை தொடர்ந்து ஒரு நாள் சாத்வி கோழியை திருடுவதையும் பார்த்துவிட்டார்…

அதை அப்படியே சிவ பாண்டியனிடம் கூறிவிட... .மாமா மகள் தான்…. அதை அப்படியே விட மனமில்லாமல் …. 'எதற்காக திருடும் அளவு செல்ல வேண்டும்…..' என்ற எண்ணம் மேலோங்க... சாத்வியை கண்டிக்க சென்றான்…. யூனிபார்மை தவிர்த்து , சாதாரண உடையில் பைக்கில் சென்றான்….

"மாமா…..'' என அழைத்தபடியே சங்கரின் வீட்டினுள் நுழைந்தான்….. சிவா…..

"வாங்க மாப்ள... "என சங்கடமாய் அவனை அழைத்தார் சங்கர்...

"நம்ப அனுப்பின ஆளுங்களால இரண்டு பேரையும் கண்டுபிடிக்கமுடியலை மாமா... எங்கே போய் ஒளிஞ்சு இருக்காங்கன்னு தெரியலை...'' என சிவாவும் சற்று தயக்கத்துடனே தாடையை தடவிய படி கூற...

அவனின் யோசனையை பார்த்த சங்கர்….. "இன்னும் கொஞ்சம் நாளில் எப்படியும் கண்டுபிடுச்சுடலாம் மாப்ள...நீங்க…..'' என பேசிக் கொண்டிருந்தவலை தடுத்து…..

"இத்தனை நாளில் அவள் வெங்கட்டுக்கு மனைவியாய் மாறி இருப்பா மாமா.. அதையும் மீறி என்னால் அம்மாவை மீறி எதுவும் செய்ய முடியாது….. சத்ரியை விசாரிச்சா கண்டிப்பா

தெரிஞ்சிடும்ன்னு முழுசா நம்பி தான் அவன் மேல் கை வச்சேன்…. இப்போ அதுக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லாமல் போய்டுச்சு… இத்தோட விட்டுடுங்க மாமா…. அம்மா அப்பா நான் மூனு பேரும் சேர்ந்து எடுத்த முடிவு தான் இது…” என அடுத்து என்ன பேச என தெரியாமல் மகாவின் முகம் பார்க்க…..

மகாவோ…. ஊருக்குள் தலை காட்ட முடியாமல் இருந்தவர், சிவாவிற்கு முகத்தை கூட காட்ட வில்லை…. சிவாவின் பேச்சில் முகம் சுழித்து நின்றிருந்தார் மகா… அவ்வளவு அவமானப்பட்டிருந்தார. மகா…. கிருத்திகாவினால்…

"அப்போ….. கிருத்திகாவை நீங்க….. ஆசைபடலையா…..” என சங்கர் கேட்க….

"ஆசைபட போய் தானே, அம்மாவை விட்டு கேட்க வச்சேன்….. அதுக்காக அடுத்தவன் பொண்டாட்டி மேல கண் வைக்கற அளவு கேவலமானவனும் இல்லை மாமா….. இதோட விட்டுடுங்க…..மாமா…..” என கிருத்தி விஷயத்தை அத்தோடு முடித்து விட்டு…..

"சாத்வி எங்க மாமா….” என பேச்சை மாற்றினான் சிவா….

சிவாவை போல் அவ்வளவு எளிதாக விட முடியவில்லை சங்கருக்கு…ஆனாலும் முகத்தை சாதாரணமாக வைத்து….

"ஸ்கூலுக்கு போயிருக்கா மாப்ள..... வர நேரம் தான்... ஏன் கேட்குறீங்க..... "என சங்கர் கேட்க....

"இல்லை சும்மா தான் கேட்டேன் மாமா..'' என சிவா சமாளிக்க.....

இவளை கண்டிக்காமல் விட கூடாது.... வீட்டில் வைத்து கண்டிக்க முடியாது...என சாத்வியை தேடி அவளின் பள்ளிக்கு சென்றான் சிவா..... இரண்டு கிராமங்களுக்கு பொதுவான அரசு பள்ளி அது.....

பள்ளி வாசலின் முன் இருந்த பெரிய மரத்தடியின் கீழ் சாத்வி கயல் சரண்யா என அவர்கள் பட்டாளம் கொட்டமடித்துக் கொண்டிருந்தது.....

"ஏய் , அந்த கிழவி வீட்டிலேயே போய் , கோழி திருடிட்டு வந்திருக்கியே கில்லாடி தாண்டி நீ....'' என கயல் கேட்க....

"அதுவும் பத்து கோழியை ஆட்டைய போட்டுட்டியேடி.....'' என சரண்யா சிலாகிக்க....

"ஏய் ரொம்ப பாராட்டாதீங்கடி... ஒன்னு ரெண்டு காணாமல் போய் இருந்தால் கிழவி கண்டு பிடிச்சிருக்காது..... முழுசா பத்து காணாமல் போய் இருக்கு..... சந்தேகம் வராமல் இருந்திருக்காது.... "என பேசிக்க கொண்டிருக்கும் போதே.....

"அப்போ..... பத்து கோழியையும் திருடினது நீ தான்..... அப்படி தானே....'' என வில்லன் போல் சிவா சாத்வியின் முன்

நிற்க….. பயலும் சரண்யாவும்…. இரண்டடி பின்னே தள்ளிநின்று கொண்டனர்...

கொஞ்சமும் பயமில்லாமல் அவன் முன் சுவாதீனமாய் எழுந்து நின்று...“ஆமா… நான் தான் ஆட்டைய போட்டேன்…..” என நிமிர்ந்து பதில் சொல்ல...

சிவாவிற்கு அப்படியே சத்ரியை பார்ப்பது போல் இருந்தது …

இருந்தாலும் அதை மறைத்தவனாய்….. "எதுக்கு திருடின…..” எனகேட்டான் தன்மாமான் மகளிடம்…..

"வேற எதுக்கு சூப் வச்சு குடிக்க தான்….” என பட்டென போட்டு உடைக்க…..

சூப் என்றவுடன் சிவாவிற்கு பல்ப் எறிய….. "அந்த சத்ரிக்காகவா….” என நக்கலாய் கேட்க…..

"ஆமா… சத்ரிக்காக தான் திருடினேன், அவனுக்கு நூல் வச்சு குடுக்க மான் திருடினேன்... …..” என மார்புக்கு மத்தியில் கை கட்டியபடி பதில் கூறினாள்... சாத்வி…..

"அதுக்கு எதுக்கு என் வீட்டில் திருடனும்….” என கேட்க…..

"பொருளை உடச்சவன்கிட்ட தானே அதை சரி பண்ண கேட்க முடியும்.... நீ பண்ண மாட்ட... அதான் நானே பண்ணிட்டேன்....'' என வார்தைகளில் விளையாட.....

இப்படி ஒரு பதிலை எதிர்பாராதவனுக்கு ஆச்சர்யம் தான்... நையன்த் தானே ...படிக்கிறா... வார்த்தையில் விளையாடுறாளே... என ஆச்சர்யபட்டலும்... ஞத்ரியின் மீது அப்படி என்ன பாசம்... என அப்படிஒரு ஆத்திரம் கிளர்ந்தெள.....'' ஓ... அவனை அடிச்சதுக்கு..... நீ இப்படி கிளம்பிட்டியா.....'' என முறைத்தான் சிவா.....

"இன்னும் கிளம்பவே இல்லையே மாமா....'' என ஒரு மார்க்கமாய் சிரிக்க.....

அவளின் சிரிப்பு வேறு எதையோ கூற.... "என்ன.....?'' என புரியாமல் கேட்டவன்...

"விசயம் தெரியாமல் அந்த பயலுக்கு சப்போர்ட் பண்ற சாத்வி....'' என கண்டிக்க......

"எனக்கு சத்ரியை பத்தி முழுசா தெரியும்.... நீ ஒன்னும் சொல்ல வேண்டாம்...'' என திமிறாய் பேசினாள் சாத்வி.....

"நீ திருடினதை உன் அப்பாகிட்ட சொன்னால் என்னாகும் தெரியுமா....?''

"நீ சொல்லி தான் பாரேன்..... "என நக்கலாய் கூறியவள்..... "நீ சொன்னாலும் ஒன்றும் பண்ண மாட்டாங்க எங்க அப்பா..... என் மேல அவ்வளவு பாசம் வச்சிருக்காங்க..........'' என பெருமையாய் கூற

ஹா ஹா ஹா..... என வாய் விட்டு சிரித்தவன்...'' ஆமா ஆமா..... உன்னை ஒன்னும் செய்ய மாட்டாங்க... ஆனா சத்ரிக்காக தான் செஞ்சேன்னு தெரிஞ்சதுன்னா..... சத்ரியை எங்கிட்ட அனுப்பிடுவார்.......'' என சாத்வியிடம் பயத்தை விதைக்க.....

சத்ரி என்றதும் எங்கிருந்து தான் அவ்வளவு கோபம் வந்ததோ...... "சத்ரியை அடிச்சன்னு ஏற்கனவே உன்னை கொல்லனும்ன்னு இருக்கேன்...... அவனைமறுபடியும் அடிச்ச.....'' என பதிலுக்கு அவள் மிரட்ட...

''நீ.... என.னை ... கொல்ல போறியா...'' என சிரித.தே விட்டான் சிவா..... "''அந்தளவு தைரியம் இருக்கா உனக்கு.....என்னை கொல்றது இருக்கட்டும் முதலில் எங்கே அடி பார்ப்போம்.....'' என சாத்வயின் ஒடிசலான தேகத்தை பார்த்து கூறியவனின் பார்வை வேறு எங்கெங்கோ அலைந்து... "நீ அடிச்சு எனக்கு வலிக்க போகுதா.....?'' என சிரிப்புடன் கேள்வி கேட்க...

சத்ரியை அப்படி அடித்து துவைத்திருந்தவன் மீது ஏற்கனவே ஆத்திரத்தில் இருந்தவளுக்கு….. சிவாவின் பேச்சு வேப்பிலை அடிக்க… அவளின் மூளை மீண்டும் குறுக்காய் யோசிக்க ஆரம்பித்தது…..

இளங்குமரியாய் இருந்தவளுக்கு மூளையும் வெகு வேகமாய் வேலை செய்து உதவ… என சுற்றிமுற்றி பார்வையை ஓட்டி… சிவாவையும் ஓரக்கண்ணால் நோக்கினாள்…பின் அவன்

மப்டியில் இருப்பதை பார்த்து கொஞ்சம் முகத்தில் பயத்தை கொண்டு வந்து… "ஐயோ ……. அம்மா யாராவது காப்பாத்துங்களேன்…. இந்தாளு எங்கிட்ட தப்பா நடக்குறான்…'' என கத்தியே விட்டாள்…..சாத்வி…

சரண்யா கயல் இருவரும் வாய்க்குள் சிரிப்பை அடக்கினர்….. பின்னே சாத்வி செய்ய போகும் செயல் அவர்களுக்கு புரிந்துவிட்டதே…

"ஏய், என்ன பேசற நீ…முதலில் , வாயை மூடு….'' என சிவா….. சாத்வியின் இடது முழங்கையை பிடித்து தன்னருகில் நிறுத்தி, வலது கையினால் அவள் வாயை மூடி…..

''நான் எங்கே அப்படி நடந்தேன்…'' என பல்லைக் கடிக்க…

ஏற்கனவே பள்ளி மாணவியிடம் யாரோ கோபமாய் பேசுவதை ஒரு சிலர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சாத்வியின் சத்தமும், சிவாவின் செயலும்…

ஒரு சிலரை சாத்வியின் பக்கமாக வேகமாய் வரவழைத்தது….வந்தவர்கள்...

"ஏன்யா….அறிவில்லை ,சின்னபிள்ளைகிட்ட வம்பிழுத்துட்டு இருக்க…..'' என சகட்டுமேனிக்கு திட்டியபடி

"நீ அங்கிட்டு போமா...'' என சாத்வியை விலக்கி ……. சிலர் சிவாவை சூழ…..

"யோவ்….. நான் போலீஸ்யா... அவ என்னோட மாமா பொண்ணு "என சிவா கூற….

அதை நம்பாத பார்வையுடன் பார்த்தவர்கள்…..

"ஏன்யா….அறிவில்லை ,சின்னபிள்ளைகிட்ட வம்பிழுத்துட்டு இருக்க…..'' என சகட்டுமேனிக்கு திட்டியபடி

"நீ அங்கிட்டு போமா...'' என சாத்வியை விலக்கி ……. சிலர் சிவாவை சூழ…..

"யோவ்….. நான் போலீஸ்யா... அவ என்னோட மாமா பொண்ணு "என சிவா கூற….

அதை நம்பாத பார்வையுடன் பார்த்தவர்கள்…..

"இந்த மாதிரி ஆளுங்க எங்கையா உண்மை பேச போறாங்க…… "

"இந்த மொகறையப் பார்த்தால் போலீஸ் மாதிரியா இருக்கு...'' என ஒவ்வொருவராய் பேச…..ஆரம்பிக்க...

"பொம்பளை புள்ளைகிட்ட வம்பிழுத்தவன்கிட்ட என்னைய பேச்சு வேண்டி கிடக்கு... அடிங்கையா இவனை...'' என கூட்டத்தல் ஒருவன் ஊசுப்பேற்ற.....

அது பள்ளியை சுற்றியிருந்த வளாகம் ஆதலால் ஆங்காங்கே... கடையில் இருந்தவர்கள் , போவோர் வருவோர் என அனைவரும் சேர்ந்து அவனை மொத்த ஆரம்பத்தனர்... சாத்விக்கோ.... சத்ரியின் அடி வாங்கிய உடல் கண்களில் நிற்க.... கொஞ்சமும் இறக்கப்பட வில்லை... சற்று தள்ளி நின்று கொண்டாள்....

"இனி பொம்பளை புள்ள பக்கம் போன அவ்வளவு தான்'' என அவனை விட்டுவிட்டு ஆளாளுக்கு சென்று விட

அடிகளையும் உதைகளையும் வாங்கி நடக்க சிரம்பட்டவன்... அங்கே இருக்க பிடிக்காமல் கொஞ்ச தூரம் நடந்தே வந்து, ஒரு பெரிய மரத்தடியில் சாய்ந்து அமர்ந்தான்... அடி வாங்கி கொடுத்த சாத்வியையும் மறந்தவனாய்.....

"ஏய், வர வர ரோம்ப அட்டகாசம் பண்றடி.....'' என ஆரம்பித்த கயலை ஒரு முறை முறைத்து.....பார்வையாலேயே அவர்களை அங்கிருந்து செல்ல சொல்லி.... சிவாவின் பின்னாடியே வந்தாள் சாத்வி.....

"அடி கொஞ்சம் தான் போல....'' என வீங்கியிருந்த முகத்தையும் அவன் நடந்து வந்த ஸ்டைலையும் பார்த்தவாறு கேட்டாள்....

திடீரென கேட்ட குரலில் மூடியிருந்த கண்களை திறந்து சாத்வியை தீப்பார்வை பார்த்தான் சிவா.... அவள் மேல் அடங்காத கோபம் கனன்று கொண்டிருந்தாலும், அடிவாங்கிய உடல் வேலை செய்ய மறுக்க...

"தப்போ செய்யாத என்னை எதுக்கு கோர்த்துவிட்டு அடிவாங்க வச்ச ....'' என கோபமாய் கேட்க வந்தவனின் குரல் சோர்வினுடே வந்து விழுந்தது...

''சத்ரி மட்டும் என்ன தப்பு செஞ்சான்னு ,அவனை அடிச்ச.... "என சாத்வி அசையாமல் கேட்க...

சிவாவின் மனமே ஒரு நொடி அசைந்தது.........

"என் சத்ரிக்கு இப்படி தானே வலிச்சிருக்கும்'' என கண்களில் அமைதியை காட்டி ஒரே வரியில் சொல்ல.... அதிர்ச்சியில் அப்படியே கண்களை இறுக மூடிக்கொண்டான் சிவா...

"தப்பு செஞ்சா அவனை அடிங்க மாமா... அவன் ரொம்ப நல்லவன்... "என கூறியவள்....

அவனின் தொய்வான நிலையை கண்டு... "மன்னிசிடுங்க மாமா....'' என விறு விறு வென சென்று மறைந்தாள்....

சத்ரியின் மீதான சாத்வியின் அன்பை நினைத்து புல்லரித்தது சிவாவிற்கு….

இந்த பத்து நாட்களில்…

சத்ரிக்கு காயங்கள் முற்றிலும் சரியாகிவிட்டிருக்க… கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டிருந்தான்…. தலைவாரிக் கொண்டிருந்தவனின் காதுகளில்… சாத்வியின் அழுகுரல் காதை கிழிக்க… இடையிலேயே…

"தப்….தப்….'' என அடிவிழும் சத்தமும் கேட்க…..'' அப்பா வேண்டாம்பா… வலிக்குதுபா…..வலிக்குதுபா… "என சாத்வியின் குரலும் சேர்ந்து ஒலிக்க…..

"டேய்……சாத்வி அழறாடா…. என்னன்னு போய் பாரு….'' என விநாயகம் கூற…

ஒற்றை சுவர் மட்டுமே இரு வீட்டிற்கும் பொதுவில் இருக்க….. அவளின் சத்தம் மூவருக்கும் கேட்டது… அவளின் அழுகரலை தாங்காதவனாய்… சாத்வியின் வீட்டினுள் புகுந்தான் சத்ரியன்….. சங்கரின் செயல்களை மறந்தவனாய்…..

"ஒழுங்கா இருப்பியா….. இருப்பியா….'' என சொல்லி சொல்லி …. தடியான ஒரு குச்சியை வைத்து சாத்வியை அடித்துக் கொண்டிருந்தார்….. சங்கர்….. பார்த்த சத்ரிக்கு கோபம் தாண்டவமாட… சங்கரின் மீது பற்றிக் கொண்டுவந்தது…. கூடவே

என்ன செஞ்சு வச்சாளோ.....என சாத்வியின் மீதும் கோபம் எழ... வேகமாய் அவர்களை நெருங்கினான்....

அடியை தடுக்க மகா சிறிதும் நினைக்கவில்லை... மபாவும் 'இந்த அடி இவளுக்கு தேவை தான்.....' என்பது போல் முகத்தை வேறு புறம் திருப்பியபடி நின்றிருந்தார்.....

அதுவும் சேர்ந்து சத்ரிக்கு ஆத்திரத்தை கொடுக்க..... சங்கரின் கையிலுருந்த குச்சியை அதே ஆத்திரத்துடன் பிடுங்கி... ஒரே வீச்சில் வீசி எறிந்தவன்....

. சாத்வியை மறைத்தபடி நின்றான்..... சத்ரியை கண்டதும்..... அவன் பின்னே வேகமாய் மறைந்து கொண்டாள் சாத்வி.....

சாத்வியை தன் முன்னால் வேகமாய் இழுத்து...நிறுத்தி......... "என்ன தப்பு பண்ணின....? "என ஆத்திரமாய் கேட்டான் சத்ரி.....

"நான் எந்த தப்பும் பண்ணலை சத்ரி..." என்ற அழுகையாய் வந்தது சாத்வியின் குரல்....

"சும்மா உன்னை அடிக்க..... உங்கப்பன் என்ன லூசா....." என சங்கரின் முன்னாலேயே கேட்க..... 'அழுகையிலும் சிரிப்பு வந்தது சாத்விக்கு.....

மகா "நீ விடு சத்ரி, அவளை இன்னும் நாளு போட்டால் தான் ஒழுங்கா இருப்பாள்...." என மகாவும் கூற....

தன்னை லூசு என தன் முன்னே கூறிய சத்ரியை கண்டு பற்றிக்கொண்டு வந்த்து சங்கருக்கு.... அதற்குள்

"என்ன செஞ்ச நீ.........'' என சாத்வியை முறைத்தான் சத்ரி

"ஸ்கூலில் ஒரு பையன்... என் பின்னாடி சுத்திட்டே இருந்தான்..... இன்றைக்கு ஸ்கூல் முடிஞ்சு வரும் போது லவ் பண்றேன்னு சென்றான் சத்ரி..., நான் பயந்து போய் அம்மாகிட்ட சொல்லிட்டு இருக்கும் போது, அப்பா கேட்டுட்டு, அக்காவை திட்டின மாதிரி என்னையும் திட்டி..... 'நீ எவன்கூட ஓட போறன்னு' கேட்டு அடிக்கிறாங்க சத்ரி.......... அம்மாவும் சேர்ந்து திட்றாங்க... வலிக்குது... சத்ரி.......'' என முகத்தில் வடிந்த கண்ணீரை இடது கையில் துடைத்தபடி... கூறினாள் சாத்வி....

அதுவரை அமைதியாய் இருந்த சங்கர்.....

"டேய் நீ எதுக்குடா இங்க வந்த..... ஸ்டேசன்ல வச்சு அடி வாங்கனதை மறந்துட்ட போல..... நியாபகப் படுத்தனுமா...'' என சீறி.....

"ஏய், உன் அக்கா காரி, இவன் அண்ணனை இழுத்துட்டுப் போய் அசிங்கப்படுத்தினா... நீ அவனோட ஓட போறியா...'' என சாத்வியை பார்த்துக் கேட்க...

அதிர்ந்த முகத்துடன் சாத்வி, சத்ரியை பார்க்க..... அவனோ கோபத்துடன்...‘‘யோவ் மாமா..... அறிவில்லை உனக்கு... லவ் லெட்டர் கொடுத்ததை மறைக்காம சொல்லற அளவு தெளிவா

இருக்கா..... கண்டமாதிரி பேசி அவ மனசுல ஏன்யா ,நஞ்சை விதைக்கற... ஒழுக்கமான புள்ளைய உன் நார வாயால கெடுத்துடாத... கிருத்திகா பண்ணினதுக்கு இவளை ஏன் அடிக்கிற.... முடிஞ்சா உன் ஆத்திரத்தை அவ கிட்ட காட்டு... இல்லை இவ பின்னாடி சுத்துறவன்கிட்ட காட்டு... அதை விட்டுட்டு சின்னபுள்ளை மேல காட்ற... ஒழுங்கு மரியாதையா அவளை படிக்கவிடு.....'' என சத்ரியும் தன் பங்கிற்கு கத்தினான்.....

"இனி அவளை அடிக்கற சத்தம் கேட்டுச்சு.....'' என இன்னும் சிறிது நேரம் இருந்தால் கண்டிப்பாய் சண்டை வரும் என முறைத்துவிட்டு சென்றுவிட்டான்.....

அடி கொடுத்து களைத்திருந்த சங்கர்......

"உன் அக்காவை விட்ட மாதரி உன்னையும் விட்டுட மாட்டேன்... ஸ் கூலுக்கு போனால் தானே அவன் உன் பின்னாடி வருவான்..... நீ ஸ்கூல் போகலைனா எப்படி வருவான்.....'' என சாத்வியை முறைத்து..... ``, ஒருத்தியாள ஏற்கனவே மானம் போச்சு... இவளும் ஏதாவது தகிடுதத்தம் பண்ணினா... உயிரோட கொன்றுவேன்... அவளை ஸ்கூலுக்கு அனுப்பின.... உன்னையும் சேர்த்து கொன்றுவேன்.....'' மனைவியிடம் கர்ஜித்து...... அவளின் பள்ளி வாழ்க்கைக்கே முழுக்கு போட்டனர்.....

ஆண்குழந்தை வேண்டுமென ஆசையாய் இருந்தவருக்கு என்று ….. இரண்டாவதாகவும் பெண் குழந்தை பிறந்ததோ….. அன்றிலிருந்து சங்கரின் குணம் தலைகீழாய் மாறிப் போக….. மகா தான் எல்லா விசயத்திலும் விட்டு கொடுக்க வேண்டியதாய் இருக்க... அதை தனக்கு சாதகமாய் மாற்றி, தன் அதிகாரத்தை நிலைநாட்டியிருந்தார் சங்கர்…..

கிருத்திககா செய்த செயலில் சாத்வியின் மீது இருவருமே கடுமையை காட்ட ஆரம்பித்தனர்…..

"அவ ஸ்கூலுக்கு போக மாட்டாள்….. "என சங்கரிடம் கூறி….. "வீட்டு வாசப்படியை தாண்டு... இருக்கு உனக்கு….. "என மகாவும் சங்கருக்கு சப்போர்ட்டாய் நடந்து கொள்ள…..அழுதபடியே உள்ளே சென்றுவிட்டாள் சாத்வி...

"வீட்டில் சொல்லி இருக்கவே கூடாது….. சொன்னதால தானே இவ்வளவு பிரச்சனையும்… சொல்லாமலேயே இருந்திருக்கலாம்…..’’ என குறும்புகார சாத்வியின் குணத்தை சிறிது சிறிதாய் மாற்றிக் கொண்டிருந்தனர் சங்கும் மகாவும்…..

'இவளையாவது நல்லபடியா வளர்க்கனும்' என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கிய மகாவிற்கு….. வயதிற்கேற்ற சுதந்திரம் கொடுக்க மறுக்கிறோமே என சற்றும் தோன்றவில்லை...

அன்றிலிருந்து சாத்வி செய்யும் அத்தனை வேலைகளுக்கும் குறை கூறுவதே வழக்கமாகி போயிற்று….. சத்ரியின் வீட்டிற்கு

கூட அனுமதிக்க வில்லை….. சத்ரியின் மூலம் அறிந்து கொண்ட சிவகாமிக்கும் விநாயகத்திற்கும் வருத்தம் மட்டுமே மிஞ்சியது…. அதை தாண்டி எதுவும் செய்ய முடியாத நிலை…..

சாத்வி...வீட்டிலேயே எவ்வளவு நாட்கள் இருக்கமுடியும்…..

பள்ளிக்கு செல்லாத காரணத்தால் ஆங்காங்கே கொஞ்சம் வெளியே சுற்ற கிளம்ப….. அவளிடம் காதல் சொன்ன ஆனந்த்...கொடுத்தவன் அவள் பின்னால் வர ஆரம்பித்தான்…..

# அத்தியாயம் 16

**ம**கா, சங்கர் இருவருமே, தொட்டதிற்கெல்லாம் குறை சொல்வதும் இல்லாமல், அதை செய்யாதே, இதை செய்யாதே என அட்வைஸ் என்ற பெயரில் சாத்வியின் காதில் இரத்தம் வரவழைத்துக் கொண்டருந்தனர் மகாவும் சங்கரும். போதாகுறைக்கு…. சாத்வியிடம் ஒருவன் காதலை சொல்லி இருக்கிறான் என தெரிந்த பின் சத்ரியின் வீட்டிற்கு செல்ல கூட தடா போட்டுவிட… வீட்டின் அருகில் உள்ள இடங்களுக்கு சுற்ற ஆரம்பித்தாள் சாத்வி.

இந்நிலையில் தான் அருண் அவள் பின்னால் சுற்ற ஆரம்பித்தான்…. போகும் இடங்களில் எல்லாம் கண்ணில் படும்படி நிற்க, பார்க்க ஆரம்பித்தான்…..

அவன் மேல் பயமிருந்தாலும் காட்டிக் கொள்ளதவளாய் இருந்தாள்…. முதலில் பின் தொடர மட்டுமே செய்தவன்…..பின் கொஞ்ச கொஞ்சமாய் அவளை நெருங்கினான்…..

பல நாட்களாய் சத்தமில்லாமல் பின் தொடர்ந்த அருண்…. சாத்வியின் அமைதியான நடவடிக்கையில் அவளை அழைத்தான் மெதுவாக….

"சாத்வி நில்லு….'' என சுற்றும் முற்றும் பார்த்தான் அருண்…

அவனிடமிருந்து நழுவும் எண்ணம் அவளிடம் இல்லை, பயந்தது போல் காட்டி தன் நிலையை விளக்கவும் தயாராயில்லை சாத்வி….. 'என்ன' என கேட்காத போதும்….. ஓர் ஆர்வம் தலையிட…. அப்படியே நின்றாள்….

அவள் நின்றதே போதும் என வேகமாய் அருகல் வந்து... "சாரி….மன்னிச்சிடு….'' என தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரே போல் கேட்டான்…..

பார்க்க அவ்வளவு அழகாக இருந்தான் அந்த அருண்... என்ன பேசப் போறானோ என பயத்துடன் இருந்தவள்….. கண்டிப்பாய்' சாரியை 'எதிர்பார்க்கவில்லை …. அதன் பிரதிபிலிப்பை காட்டியபடி 'எதுக்கு'' என கேட்க…..

"உங்கப்பா உன்னை அடிச்சாங்கலாமே…. என்னால தானே…. மன்னிச்சுடு சாத்வி….'' என அவள் அடி வாங்கயதை ,தான் வாங்கியது போலவே கூறி...….

"பிடிக்கலைன்னா, எங்கிட்டயே சொல்லி இருக்கலாம் இல்லையா…. எதுக்கு உங்க வீட்டில் சொன்ன….. சொல்லாமல் இருந்திருந்தா…. அடி வாங்கி இருக்க மாட்டேல…..'' என கற்றுத் தேர்ந்தவனாய் அடிக்க வேண்டிய இடத்தில் அடித்தான் அருண்...

'வீட்டில் சொல்லி இருக்க வேண்டாமோ….. 'என பலமுறை யோசித்து , அன்று வரை நம்மமியை இழந்து வந்தவளுக்கு….அருணின் பேச்சு எப்படி இருந்ததோ…..

அவனுக்கு பதில் பேசாமல் சென்று விட்டாள்….

மறுநாளும் சாத்வியிடம் பேசினான்….'' நேத்து ஓவரா பேசிட்டேனோ…..இன்றைக்கும் சாரி சாத்வி….'' என பாவம் போல கூறி…..

"உன்கிட்ட லவ் சொன்னது தப்பு தான்,… நாம ப்ரண்டா இருக்கலாம்….. வேற எதுவும் வேண்டாம்…. காதுகளில் கை வைத்து தோப்புகரணம் போடுவது போல் மெதுவாய் செய்கை செய்ய…..

மெல்லிய சிரிப்பு அவளிதழ்களில் படிய… "ப்ரண்ட் மட்டும் தான்… சரினா பேசு….. இல்லைனா அப்படியே கிளம்பிடு…'' என புன்னகை மாறாமல் சொன்னாள் சாத்வி…..

இப்போதைக்கு இது போதும் என நினைத்து… 'தினமும் அவளிடம் சாதாரணமாய் பேசி' தன் வலைக்குள் இழுத்தான் அருண்…..

பார்வை பறிமாற்றங்களில் ஆரம்பித்து… முகம் பார்த்து சிரித்து…. சாதாரண நிகழ்வுகளை விவாதத்து… அவனுடன் கழிக்கும் நேரங்கள் அவளின் மனதிற்கு பிடித்த நிமிடங்களாய் மாறி…….. பெற்றோரிடம் கிடைக்காத அன்பை…..

சத்ரியிடமிருந்து மறுக்கப்பட்ட தோழமையை வேறு இடத்தில் தேடிக் கொண்டது அந்த பெண்…

காதலா எனக் கேட்டால் நிச்சயம் இல்லை தான்….. உணர்வுகளை புரிந்து கொள்ள ஒரு உணர்வுள்ள மனதினை தேட…. அதற்கு வடிகாலாய் வந்தான் அருண்...

சத்ரியின் அன்பை அவனிடம் தேடி தேடி தோற்று போனாள்….. ஆனாலும் கிடைத்த இந்த நட்பை விடவும் மனதில்லை...

'வேண்டாம்…. செய்யாதே…..' என்பது போன்ற கட்டளைகள்….. இரண்டும் கெட்டான் வயதில் 'வேண்டும்….. செய்வேன்…..' என வீம்பாய் திசை திருப்ப வைக்கும்….. அப்படி ஒரு நிலையில் இருந்தாள் சாத்வி... அருணுடனான தோழமையும் வளர…. ஒரு மாதமாய் பள்ளிக்கும் செல்லவில்லை…..

ஒரு நாள் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது……….. இருவரையும் சத்ரியன் பார்த்துவிட்டான்….. அன்று கல்லூரி விடுமுறை நாளாதலால் நிதானமாய் பஞ்சாயத்து தலைவரை பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும் போது…. சிரித்த முகத்துடன் சாதாரணமாய் பேசும் சாத்வியும்….. அவளை சிரிக்க வைத்துக் கொண்டிருந்த ஒரு பையனும் கண்களில் பட…..

அவன் கண்களுக்கு தப்பாக தெரியவில்லை….. ஆனால் …..என்ற ஒரு கேள்வி தொக்கி நிற்க… 'இனி இவன் சாத்வியை திரும்பி கூட பார்க்க கூடாது….' என

மெதுவாய் அவர்களின் அருகில் சென்று….. "சாவி…. இங்கே என்ன செய்யுற…..யார் இவன்…." என அருணை முறைத்தான் சத்ரி….

அவனை பார்த்ததும் லேசாய் தடுமாற்றம் இருந்தாலும்….. "எங்க ஸ்கூலில் பிளஸ்டூ படிக்கிறான்….பேரு அருண்…." என சாத்வி கூற….

"உங்கிட்ட லவ் சொன்னவன் அப்படி தானே….." என சரியாய் ஊகித்து அருணின் அருகில் செல்ல….அருணின் பார்வை திருட்டு பார்வையாய் மாற…..தன்னை…. அடிக்க வருவதாய் நினைத்து இரண்டடி பின் நகர்ந்தான்….. "என்னை பார்த்து எதுக்கு பம்முற…. ஒருவேளை , ஐயா…. பொண்ணுங்க கிட்ட மட்டும் தான் பேசுவீங்களோ….". என அவனின் சட்டை காலரை பிடித்து இழுத்தான்….

"சத்ரி , அருணை விடு….. விடு…." என சாத்வி சத்ரியை தடுக்க…..

சாத்வி தனக்கு சப்போர்ட் செய்வதை பார்த்து சத்ரியின் கையை தட்டி விட…. அந்தோ பரிதாபம் சத்ரியின் உடும்பு பிடியை சிறிதும் தளர வைக்க முடியவில்லை அருணிற்கு…

அவன் பிடி தளராததை பார்த்து…. "சாத்வி... விட சொல்லு….. "என சாத்வியை துணைக்கு அழைக்க….

"விடு சத்ரி…. ஏன் பிரச்சனை பண்ற….. "என அருணிற்காய் பேச…..

"நீ இப்போ ஓரமா போகலை... உன் கன்னம் பழுத்துடும்…..'' என சத்ரியின் பற்களுக்கிடையில் வார்த்தைகள் பறக்க...

சத்ரியின் கோபம் அறிந்த அவளும் மூச்சே காட்டாது, அப்படியே நின்றிருந்தாள்….நடப்பதை வேடிக்கை பார்த்தபடி…..

சாத்வியிடமிருந்து பதிலே வரவில்லை….. சத்ரியின் தீப்பார்வை அவளை அப்படியே உறை வைத்திருந்தது...

"ஏய், நானும் சாத்வியும். விரும்புறோம்… எதுக்கு எங்களுக்கு நடுவில் வர்ற…….'' என சொல்லி முடித்த அடுத்த நொடி அருண் கீழே விழுந்து கிடந்தான்….. சத்ரியின் ஓர் அறையில்….. கீழே விழுந்தவன் அடுத்து எழுந்து ஓட….. அவன் பத்தடி செல்வதற்குள் ,சத்ரியன் ஐந்தடிகளில் அவனை கடந்து, ஓடிக் கொண்டிருந்தவனின் சட்டையை பின்னால் இருந்து இழுத்து அப்படியே கீழே தள்ள ….. ஓடிய வேகத்திற்கு பல மடங்கு அதிகமாக கீழே தடார் என விழுந்தான்...அருண்…..

விழுந்தவனுக்கு , சத்ரியின் கையால் தர்ம அடி கிடைக்க, அவனால் எழக்கூட முடியவில்லை...

சத்ரியின் வாய் எதுவும் பேசவே இல்லை, பேசியதெல்லாம் அவனது கை தான்... அவன் கை பேசும் தோரணை பயத்தை கொடுக்க..... "இனி சாத்வி பின்னாடி நான் வரமாட்டேன்னே, விட்டுடுங்கன்னே.....'' என அருணின் வாயிலிருந்து வரும் வரை.. அவன் ஆத்திரம் தீரும் மட்டும் வெழுத்து வாங்கினான்...

''இனி இவ பின்னாடி சுத்தின.... !!!!!! என் கையால் அடி வாங்கியே நீ சாவது உறுதி....'' என மேலும் இரண்டடி வைத்து அனுப்பினான்...தள்ளாடிக் கொண்டே சென்று மறைந்தான் அருண்... ..அருண் சென்றதும் சாத்வியை பார்க்க..... அவள் பயத்துடன் சத்ரியை பார்த்திருந்தாள்...

"படிப்பை மட்டும் பாருன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது..... கேட்கவே மாட்டியா... நீ இப்போ செய்ற ஒவ்வொரு விசயமும் பின்னாடி உன் லைப்பை தான் பாதிக்கும் சாத்வி.... ஏன் உனக்கு புரிய மாட்டுது..... ஒரு சில விசயத்தில் பெரிய பொண்ணா..., மெச்சூர்ட்டா இருக்கிற நீ.... அலார்ட்டா இருக்க வேண்டிய இடத்தில் எப்படி தான் இப்படி அசால்டா இருக்கியோ.....

எப்படி இந்த சாக்கடையை எல்லாம் உன் கிட்ட விடுற..... இந்த மாதிரி விசயத்தில் உன் மூளையை யார்கிட்டையும. கடன் குடுத்துடுவியா...'' என சத்ரியின் குரல் அமைதியாய்

வந்தாலும்….. கோபத்தை அடக்கிக் கொண்டிருக்கிறான் என புரிய….

"அப்பா மாதிரி நீயும் என் மேல் நம்பிக்கை இல்லாத மாதிரி பேசாத சத்ரி….. நம்பு …. நான்... ப்ரண்ட்லியா தான் பேசிட்டு இருந்தேன்…..'' என கூற…

நம்பிக்கை என்ற வார்த்தில் சற்று விரைத்தவன்... அதை அப்படியே உதறி தள்ளி….

"என்னது... பிரண்டா... இதோ பார் சாத்வி உனக்கு பர்ஸ்ட் அண்ட் லாஸ்டா ஒன்னு சொல்றேன் கேட்டுக்கோ... காதலை சொன்னவன்கிட்ட கண்டிப்பா தோழமையை பார்க்க முடியாது …... இத இத மட்டும் என்னைக்கும் நீ மறக்க கூடாது…..'' என அவளின் கண்களுக்குள் பாய்ந்தவன்...

பின்…. "செந்திலும் உனக்கு ப்ரண்ட் தானே…. அவன் எப்பவாவது உன்கிட்ட இப்படி தனியா வந்து பேசி இருக்கானா... இல்லை தினமும் உன் பின்னாடியே வந்து இருக்கானா…. சொல்லு…..''

"கயல், சரண்யா இரண்டு பேரும் உன் கூட இருக்கும் போது தான் பேசுவான்…. இல்லை நீங்க மூனு பேரும் ஒன்றாக இருக்கும் போது தான் வருவான்…. எனக்கு தெரிஞ்சு அவன் தான் உனக்கு உண்மையான ப்ரண்ட்….. இவன் கிடையாது…..'' என்றவன்…..

அவள் முகம் அழுகைக்கு தயாராவதை பார்த்து…. கடுமையை குறைத்து…..''இந்த வயசுல…. நீ படிச்சு தான் ஆகனும்…படிக்கிற வேலையை மட்டும் பாரு…'' என்றவன்… மீண்டும் அமைதியாய் ….. "ஒழுங்கா படி….'' என…

சத்ரியன் வார்த்தைகள் சாத்விக்கு கோபத்தை கொடுக்க…அவளுள் அடங்கி இருந்த உணரவுகள் வெடிக்க ஆரம்பித்தது…

"படி படின்னா….. ஸ்கூலுக்கு போனால் தான் படிக்க முடியும்….. ஸ்கூல் போனால் அப்பா கொன்றுவேன்னு மிரட்டுறாங்க… அம்மாவும் அப்பாக்கு தான் சப்போர்ட் பண்றாங்க…….. அதை செய்யாத இதை செய்யாத அப்படி பண்ணாத இப்படி பண்ணாதன்னு டெய்லி நூறு அட்வைஸ் பண்றாங்க…

தப்பு அவ செய்ய… தண்டனை எனக்கா… இதில் உன்கிட்ட கூட பேசக் கூடாதாம்… நீயாவது என்னை தேடி வருவன்னு பார்த்தேன்…..நீயும் வரலை…'' என தன் மனதின் ஏக்கத்தை அப்படியே காட்டினாள்….

திகைத்து தான் போனான் சத்ரி….. என்னை தேடினாளா…? என்ற கேள்வி எழுப்பி அவனை புரட்டி தான் போட்டது… வெங்கட் பிரச்சனை முடிந்த தருவாயில், சத்ரிக்கு மூன்றாவது

செமஸ்டர் தொடங்கயிருக்க…. சாத்வியை பார்க்க நினைக்கவில்லை…..

ஏனெனில் சங்கர் அதற்கு முட்டுகட்டையாய் இருக்க…. நினைத்தாலும் பார்க்க முடியவில்லை அவளை... 'அதை சொல்வதை விட…. வீட்டின் நிலையை தெளிவாய் கூறுவதே நல்லது என...

"யாரையாவது சார்ந்து இருக்கிறது முதலில் நிப்பாட்டிடு சாவி..., எனக்கு இப்படிபட்ட அப்பா தான் வேணும், என்னை தாங்குற அம்மா தான் வேணும்...சிரிச்சு பேசறதுக்கு நல்ல ப்ரண்ட்ஸ் வேணும்னு நினைக்கிறது எல்லோரோட இயல்பு... ஆனா அது ஒரு லிமிட்ல நின்னா தான் நல்லது...

அதுக்கு மேல போச்சு...அது தான் ப்ரச்சனையோட ஆரம்பம், ஒவ்வொரு ஏக்கமும் உன் உணர்வுகளை தூண்டி வேற வழி தேட தோணிடும்... உன் உணர்வுகளுக்கு ஒரு நாளும் வடிகால் தேடாத சாவி... அது என்னைக்குமே ஆபத்து தான் ... கிருத்திகா போனதால்... உன் அம்மா பட்ற கஷ்டத்தை நீயும் பாரக்கிறேல…. ஊருக்குள்ள எவ்வளவு அசிங்கப்படறாங்கன்னு தெரியும் இல்லையா... எங்கே நீயும் அப்படி போய்டுவியோன்னு பயந்து தான் அப்படி நடந்துகிறாங்க….. இப்போ நான் பார்க்கலைன்னா அது தான் நடந்திருக்கும்…..'' என இறுதியாய்

அருண் விசயத்தில் உறுதிபடாத ஒன்றை தூக்கி அவள் தலையில் வைத்தான் சத்ரி.....

"இல்லை இல்லை அப்படி எல்லாம் நான் செய்ய மாட்டேன்...." என அவ்வளவு நேரமும் சத்ரியின் பேச்சுக்களுக்கு தன் காதை கொடுத்தவள்... கடைசியில் கோபமாய் பதில் கூற....

"சரி செய்ய மாட்ட.... இனிமேலும் செய்ய மாட்டேன்னு என்ன உறுதி....." என கேட்க.....

சட்டென அவன் தலையில் கை வைத்து ..." உன் மேல சத்தியமா.... நான் யாரையும் லவ் பண்ண மாட்டேன் சத்ரி... அக்கா பண்ணின தப்பை நான் செய்ய மாட்டேன்........ நிஜமா செய்ய மாட்டேன்....." என அழுகையும் வெடிக்க....

அவள் கண்ணீரை துடைத்தவன்....இது அழுக வேண்டிய நேரம் இல்லை சாவி.... யோசிக்க வேண்டிய நேரம் ..... இதிலிருந்து வெளியே வந்தாகனும்.... கண்டவனை எல்லாம் உன்கிட்ட விடுற..... நீ ரஃப்பா இருந்திருந்தா அவன் உன்கிட்ட இப்படி பேசிட்டு இருக்க மாட்டான்..... 'இரண்டு பேரும் விரும்புறோம்ன்னு 'உன்னையும் இதில் இழுத்து விட்டிருக்க மாட்டான்...." என பல்லைக் கடித்தான் சத்ரி....

"ஆமாம் சத்ரி ப்ரண்டா இருப்போம்னு சொல்லிட்டு, இப்படி பேசினது எனக்கே அசிங்கமா தான் இருக்கு சத்ரி....." என

மூக்கை உறிஞ்சியவள்….. “அம்மா அப்பா இரண்டு பேருமே முன்னெல்லாம் நல்லா பார்த்துப்பாங்க…. எனக்கு என்ன என்ன தேவைன்னு பார்த்து பார்த்து செஞ்சாங்க…. கூடவே நீயும் இருந்த….. என்கூட சண்டைபோட, வம்பு இழுக்க…. இப்படி தனியா பீல் பண்ணினதே இல்லை……யாருமே பேச மாட்றீங்க….. நீ கூட…..” என அவளை தனிமை படுத்தி இருப்பதை அப்படியே கூற...

சத்ரிக்கு அவளின் உணர்வுகள் சரியாய் புரிந்தது...

"ஸ்கூல் போக விடலை... செந்தில் கயல் சரண்யா மூணு பேரையும் அப்பா திட்டி அனுப்பிட்டாங்க... டிவி கூட பார்க்க விட மாட்றாங்க… சின்ன சண்டை வந்தா கூட என்னை தான் திட்றாங்க, என்னை தான் அடிக்கிறாங்க….. நான் என்ன தான் செய்றது...

தனியா வீட்டுக்குள்ளயே நான் எவ்வளவு நேரம் இருக்க முடியும்…. "என விடாமல் பேசிக்கொண்டிருந்தாள் சாத்வி…..

"சரி நீ ஸ்கூல் போக ஏதாவது வழி பண்றேன்…..”

"வேண்டாம் “

"ஏன்….?”

"ஸ்கூலில் உன் அக்கா தான ஓடி போய் கல்யாணம் பண்ணிகிட்டா….. நீயாவது ஒழுக்கமா இருப்பியா….. இல்லை நீயும் அப்படித்தானா….” அப்படின்னு மேத்ஸ் மிஸ் கூட

கேட்டாங்க... சத்ரி... இப்போ ஒரு மாசமா போகாமல்... இப்போ போனால் ... எல்லாரும் கேட்பாங்க... அதுவும் இல்லாமல்.... அந்த அந்த அருண் அங்கே தான் இருக்கான்........ அசிங்கமா இருக்கு நான் போகலை...''

"இதோ பார் சாத்வி..... ... உன் வாழ்க்கையை நீ தான் பாத்துக்கணும், அடுத்தவங்க என்ன வேணும்னாலும் பேசுவாங்க, செய்வாங்க, இதையெல்லாம் தலைக்குள்ள அனுப்பாத..... என்ன தோணுதொ செய்... நேர்மையா இரு..... எதுவா இருந்தாலும் துணிஞ்சு செய்..... ஆனா...... நல்லதை மட்டும்.... சரியா....'' என சத்ரியன் கூற....

"இல்லை...... நீ பேசறது எல்லாமே நல்லாதான் இருக்கு, ஆனா..... எப்பவும் யாராவது காயப்படுத்திட்டே இருந்தா..... கஷ்டமா இருக்கு.... அதில் எப்படிகான்சன்ட்ரேட் பண்ணி படிப்பேன்.....''

"சாத்வி..... அம்மாவும் அப்பாவும் செய்றதெல்லாம் உன் நல்லதுக்காக தான் ... அதை முதலில் உன் மைண்ட்ல செட் பண்ணிக்க..... கிருத்திகா செஞ்ச தப்பை நீயும் செய்யக்கூடாதுன்னு தான்..... உன்னை இந்தளவு இறுக்கி பிடிக்கிறாங்க.....

'நான் நீங்க நினைக்கிற மாதிரி இல்லை..... நான் நல்ல பொண்ணு தான், நேர்மையான பொண்ணு தான்னு உன் அம்மா

அப்பாக்கு நீ புரிய வை.....’ அப்பறம் கண்டிப்பா எந்த பிரச்சனையும் உன்னை முழுங்காது... பிரச்சனை எல்லாத்தையும் நீ முழுங்கிடுவ...... இந்த உலகத்தில் நீ மட்டும் தான் உனக்கு நல்ல ப்ரண்ட், அட்வைசர் , வெல்விசர்.....

. எதுவா இருந்தாலும் உன் மனசாட்சிக்கிட்ட அமைதியா பேசு.... அது கண்டிப்பா உன்னை ஒருமுகப்படுத்தும், நல்ல வழியில் கொண்டு போய் விடும்..... ஒரு வயசு வரை தான் உன்னை கண்டிக்க முடியும், ஆனா அந்த வயசு வர வரைக்கும் நல்ல பழக்கத்தை மட்டும் கத்துக்க..... நல்லதை மட்டும் நினைச்சக்க...’’

"எந்த நேரமா இருந்தாலும் உண்மையை பேசு... அதுவே உனக்கு பெரிய மரியாதையை திருப்பி தரும்.,...எதுக்கு பொய் சொல்லனும், தப்பு செஞ்சவங்க தான் பொய் சொல்லனும், பயப்படனும்..... நீ எதுக்கு பயப்படனும்.....’’

சத்ரியின் கண்கள் அவளில் கலந்திருக்க... அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளில் பதிந்தது... அவன் சொல்வதெல்லாம் உண்மை தான் என நிதர்சனம் உரைத்தாலும்..... அவள் வயதோ.... அதற்கு ஒத்துழைக்க மறுப்பதை அப்படியே உணர்ந்தாள்.....

அரவணைப்பாய் இருக்க வேண்டிய தாய் தந்தையே வேலி என்ற பெயரில் கொடியை சுற்றும் முள்ளாய் படர்ந்தருக்க....

அதிலிருந்து வெளிவர துடிக்கும் , பற்றிக் கொள்ள கொம்பை தேடும் கொடியாய் இருந்தாள் சாத்வி....

சாத்விக்கு தேவையானது மனதை நிறைவு செய்யும் , நிறைக்க செய்யும் ஒரு செயல்.... அவள் மனதினை கட்டுப்படுத்தும் ஒரு கருவி...

குறிப்பிட்ட வயதில் தறிகெட்டு ஓடத் தான் செய்யும்.... ஆனால் யார் சொன்னாலும் கட்டுப்படாத மனது அவர் அவர்களுக்கு மட்டுமே கட்டுப்படும்..... கட்டுபடுத்துவதற்கு அவர்களுக்கு பிடித்தமான. இன்னொரு செயலில் இறக்கி விட வேண்டும்.....இதை அறிந்த சத்ரி... அவளை கடவுளை நோக்கித் திருப்பினான்.....

"யார் பற்றியும் கவலை படாத சாத்வி, யாரையும் கேர் பண்ணாத.... உன்னோட கடமையை முழு மனசா செய் போதும், அதுக்கு நீ உன் மைண்ட்ட கண்ட்ரேல் பண்ணனும்.... அதுக்கு நீ.... உன் மைண்டை டைவர்ட் பண்ணு சாத்வி..... “

"எப்படி....” என குழப்பத்துடன் சாத்வி கேட்க....

"உனக்கு தான் ஆஞ்சநேயர்னா ரொம்ப பிடிக்கும் இல்லையா...ஸ்ரீ ராம ஜெயம் எழுது.,.... மைண்ட் ப்ரியா ஆகுறவரை எழுது..... அப்பறம் படி கண்டிப்பா முடியும்.....” என முடிந்தளவு அவளை ப்ரைன் வாஷ் செய்தான்....

அவன் பேசுவதில் நம்பிக்கை இல்லாத போதும், சத்ரி தனக்கு நல்லதை தான் செய்திருக்கிறான் என தனக்குள் மீண்டும் மீண்டும் சொல்லி கொண்டு... அவனுக்கு "சரி'' என தலையசைக்க….

"சாத்வி…..'' என அழைக்க…. நிமிர்ந்து அவனை பார்த்தாள்…

"ரொம்ப அட்வைஸ் பண்ணினதா நினைக்காத சாத்வி….. இனி உன்னை என்னால் பார்க்க முடியுமான்னு தெரியலை….. நான் பேசினது எல்லாம் உன் மூளைக்குள் போய் சேர்ந்திச்சான்னும் தெரியலை... நான் சொல்ல வந்ததை சரியா புரிஞ்சதான்னும் தெரியலை….. ஆனால் நியாபகம் வச்சுக்க…. உனக்கு ஏஜ் ஏற ஏற கண்டிப்பா புரியும்…. சாத்வி…. ஆனால் நான் பேசினதை என்னைக்கும் மறக்காத...''

அவன் பேசயதை கிரகிக்க வெகு நிமிடங்களானது…. "நீயும் என்னை விட்டு போக போறியா…'' என கேட்க…

"ஆமா… சாத்வி… யாரோ சொல்லி தெரிவதற்கு…… நானே சொல்லிடறேன்…. அம்மா அப்பாவை கூட்டிட்டு வேற ஊர் போறேன்…. இனி எப்போ பார்ப்பேன்னு தெரியாது….. ஆனால் உன்னை என்னைக்காவது நான் பார்க்கிற நேரம் வந்தா... நீ இருக்கிற நிலையை பார்த்து எனக்குள்ள சந்தோஷம் மட்டும் தான் வரனும்….

அதை மீறி வேற எந்த ஒரு நிலையிலும் நீ இருக்க கூடாது.... ஆரம்பத்தில் இருந்து நான் பேசினது உனக்கு புரிஞ்சதுன்னா... உன்னை சுத்தி இருக்கிறவங்க கிட்ட ஒரு கோடு போட்டு அவங்களுக்குரிய இடத்தில் நிறுத்திடு.... அதை தாண்டி நீயும் போகாதே.... யாரையும் உள்ளே விடாதே...'' என்றவன்....

போ என்பது போல் தலையசைக்க...

"என்னை தனியா விட்டுட்டு நீ மட்டும் போறல.... போ... போ.... வராத....திரும்பி வராத.....'' என ஆத்திரத்துடன் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவனை நெருங்கி அடித்தவள்... "போ....'' என அழுது கொண்டே ஓடி விட்டாள்...

அழும் அவளை தேற்ற முடியாமல் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்தவன்.... சிவ பாண்டி வீட்டிற்கு சென்றான்.... அப்போது தான் ட்யூட்டிக்கு கிளம்பிக் கொண்டிருந்தவன்...

இவனின் சத்தம் கேட்டு வெளியே வந்தான் சிவா....'' நீ எதுக்கு இங்கே வந்த....'' என மனதில் நினைத்ததை அப்படியே கேட்டான்....

"ஒரு உதவிக்காக வந்தேன்...''

"என்ன...உதவியா.....? என்கிட்டையா...'' என இழுத்த சிவா....

"சொல்லு..... அடிச்சவன்கிட்டயே உதவி கேட்டு வந்திருக்க..... என்ன உதவி.....''

"சாத்வியை , மாமா ஸ்கூல் போக விட மாட்றாங்க... கிருத்திகா மாதிரி போய்ட கூடாதுன்னு ரொம்ப ஸ்ரிக்ட்டா பிடிக்கிறாங்க... அதுவே அவளை வேற பக்கம் கொண்டு போக சான்ஸ் இருக்கு... நீங்க சொன்னா கண்டிப்பா அவளை ஸ்கூலுக்கு அனுப்பிடுவாங்க.....'' என

சிவாவிற்கு அப்படி ஒரு அதிர்ச்சி..... ''நான் சொல்றது இருக்கட்டும் ஆனா, சாத்வி வேறபக்கம் போக சான்ஸ் இருக்குன்னு சொன்னியே... அதுக்கு என்ன அர்த்தம்.....?'' என கூர்மையாய் பார்த்தான் சிவா....

"சான்ஸ் இருக்குன்னு தான் சொன்னேன்..... வேற பக்கம் போய்ட்டான்னா சொன்னேன்.....'' என பதிலுக்கு இன்னும் முறைத்தான் சிவா....

"ஸ்டேஷன்ல இருந்து போறப்ப , கொலை பண்ணிடுவேன்ற ரேஞ்சில் அப்பனி பார்த்த.... ஆனா இப்போ....'' என சாத்விக்காக பேச வந்திருப்பதை சுட்டுக்காட்ட....

''சாத்வி வீட்டில் அந்தளவு உங்களுக்கு மரியாதை இருக்கு.... அப்பறம் அந்த கோபம் அப்படியே தான் இருக்கு....

ஒரு போலீசா நீங்க அன்னைக்கு நடந்துகிட்டது ரொம்ப தப்பு…. தான் "என அவன் முன்னே தைரியமாய் பேச…

"சரி நான் ஹல்ப் பண்ணலைன்னா….'' என திமிராய் சிவா பேச….

"வெரி சிம்பிள்…. சாத்வியோட தயவில் இன்னொரு தடவை உங்களுக்கு பூஜை வச்சிடுவேன்…..'' என அதை விட திமிராய் சத்ரி பேச…

குடித்துக் கொண்டிருந்த டீ புரை ஏறி….. மூக்கின் வழியாய் வர, கண்கள் கூட சிவந்துவிட்டது…..

அன்று நடந்ததை வீட்டில் இருந்து கூட மறைத்துவிட்டான், அப்படி இருக்கும் போது இவனுக்கு எப்படி தெரியும் என நினைவுகள் பறக்க…. "அப்போது இரண்டு பேரும் சேர்ந்து தான் பிளான் பண்ணி அடிவாங்கிவிட்டீங்களா….'' என கர்ச்சீப்பினால் மூக்கையும் வாயையும் துடைத்தபடி கேட்க…..

"ம்ஹூம்…. அது சாத்வியோட பிளான்…. நான் அங்கே தான் இருந்தேன்….. ஆனா தடுக்க தோணலை… எப்படி உங்களை சமாளக்கிறான்னு பார்த்திட.டு இருந்தேன்…. பரவாயில்லை… நல்லாவே எஸ்கேப் ஆக பழகிட்டா…'' என அவளை பெருமையாய் பேச….

‘‘உன் மேல பாசம் பயம் இரண்டுமே இருக்கு….. நீ சொல்லி கண்டிக்கிறதை விட்டுட்டு... இப்படிபெருமை படறது ரொம்பவே தப்பு…..’’ என கோபமாய் கூற...

‘‘ப்ரச்சனையை பேஸ் பண்ணவும் பழகிட்டா, அதிலிருந்து எஸ்கேப் ஆகவும் பழகிட்டா….. இது தான் ஒவ்வொரு பொண்ணுக்கும் வேணும்….. அந்த வகையில் சாத்வி நல்லாவே தேறிட்டா...’’ என சிரிப்புடன் சொல்ல….

"தேறிட்டா… இல்லை….. நீ தேத்தி விட்டுட்டன்னு சொல்லு….. "என அவனுக்கு கொஞ்சம் கோபம் மட்டுபட…..

"நீங்க எப்படி வேணா வச்சுக்கங்க...ஆனா…..’’ என அவன் முன் வந்து கை கூப்பிய சத்ரி….. "சாத்வியை ஸ்கூலுக்கு அனுப்பி வைங்க…..’’ என சத்ரி நிற்க…..

அவன் கையை படாரென தட்டிவிட்டான் சிவா….

"சரி நான் மாமாட்ட பேசுறேன்….’’என சத்ரியை பார்த்தான்….பின் "உனக்காகவும் இல்லை….. சாத்விக்காகவும் இல்லை…. உங்க ரெண்டு பேரோட பாசத்துக்காக…..கண்டிப்பா பேசறேன்…..’’ என சிவா லேசாய் புன்னகை புரிய….

"இன்னைக்கே பேசுங்க…. அப்போது தான் அவளை நாளைக்கு ஸ்கூலுக்கு அனுப்புவாங்க மாமா….’’ என கொஞ்சம் அழுத்திச் சொல்ல…..

"எதுக்கு இவ்வளவு அக்கறை ஒரு வேளை லவ்வோ…'' என கேட்க…..

ஒருத்தர் நல்லா இருக்கனும்னு நினைக்கறதுக்கு அவங்களை லவ் பண்ணனும்னு அவசியம் இல்லை…'' என விறு விறுவென சென்றுவிட்டான்……

வயதிற்கு மீறிய பக்குவம் நிறைந்த சத்ரி,….. சாத்வியும் அப்படியே…

அவனுக்காக சாத்வி தன்னிடம் சண்டையிட்டதில் , அடி வாங்கி விட்டதில் தப்பே இல்லை என தான் தோன்றியது சிவாவிற்கு…..

அவர்களின் பாசப்பிணைப்பு சிவாவின் புருவத்தை உச்சி மேட்டிற்கே கொண்டு சென்றது… பின் தலையை குலுக்கி ட்யூட்டிக்கு தயாரானான்…..

மாலையில் செல்ல வேண்டும் என நினைத்த சிவாவிற்கு வேலை இழுக்க…. மறு நாள் காலை தான் செல்ல வேண்டியதாய் போயிற்று….

வீட்டிற்கு வந்தவளை சங்கரின் குரல் நிறுத்தியது "ஏய், எங்கே போய்ட்டு வர…'' என கேட்க

பொய் சொல்ல வாய் வந்தாலும்… சத்ரியின் பேச்சு அவளின் தலையில் இருக்க..,….'' சத்ரிகிட்ட பேசிட்டு இருந்தேன்…'' என உண்மையை கூற…

அவளின் அருகே ஆத்தரத்துடன் வந்தவர்..."அந்த காவாலிபய கூட பேசாதனு எத்தனை தடவை சொன்னாலும் கேட்க மாட்டியா.....?'' என சங்கர் கோபமாய் கேட்க...

‘‘சத்ரி சொல்றதை கேளு..... அவன் கிட்ட படிச்சுக்க, அவன் கூட விளையாண்டுக்கோ, அவன் சொன்னா கரெக்டா தான் இருக்கும்னு நீங்க சொல்லி சொல்லி.... மூளையில் பதிஞ்சிடுச்சுபா.... இப்போ போய் பேசாதன்னா என்ன அர்த்தம்..... அவனை இல்லை வேற எவனையும் இழுத்துட்டு போற எண்ணம் எனக்கு இல்லை..... ஆனா நீங்க வர வழைச்சுடாதீங்க.....'' என மனதில் உள்ளதை அப்படியே கொட்டினாள் சாத்வி....

"ஏய், என்னடி வாய் ரொம்ப நீளுது....'' என மகாவும் வர...

‘‘சத்ரி தான் குடும்பத்தோட ஊரை விட்டு போக போறானாமே... அதான் சார் வந்து எனக்கு அட்வைஸ் மழை பொழிஞ்சிட்டு போறாரு..... கேட்டுட்டு வந்தேன்.....''

"ஓ..... அவன் அட்வைஸ் பண்ணினா தான் மேடம் நீங்க கேட்பீங்களோ..... நாங்க பண்ணினா கேட்க மாட்டீங்களோ "என சங்கர் கிட்ட தட்ட அடிப்பது போல் வர.....

"ஆமாம் அவன் சொன்னால் தான் கேட்பேன்..... அவன் சொன்னால் மட்டும் தான் கேட்பேன்... நான் நாளையில் இருந்து

ஸ்கூலுக்கு போக போறேன்... இதுவும் அவன் தான் சொன்னான்...’’ என அழுத்தமாய் சொல்ல....

"என்ன....?’’ என மகா சீற...

"சொல்ற பேச்சு கேட்கவே கூடாதுன்னு இருக்கியா... நீ ஸ்கூல் போய் பாரு "என சங்கர் மிரட்ட....

"நான் போகத் தான் போறேன் நீங்க பார்க்கத்தான் போறீங்க....’’ என ரூமினுள் நுழைந்து கதவை தாழிட்டுக் கொண்டாள்.....

கதவின் மேலேயே சாய்ந்து நின்றவளுக்கு இதயம் பட பட வென மத்தளம் கொட்டுவது தெளிவாய் கேட்டது.....

பின்னே தந்தையின் சொல் என்றும் மந்திரமே என கடைபிடித்தவள் ஆயிற்றே.... தந்தை, தாயின் தகாத நடைமுறை அவளை வேறு பாதையில் செலுத்தியது...

சத்ரி இல்லையென்றால்..... கண்டிப்பாய் ஏடாகூடமாய் ஏதாவது செய்திருப்போம்.....என்ற எண்ணமே....

மறுநாள் கிளம்பி ஸ்கூல் செல்ல.... தந்தை இந்தமுறை சற்று தடிமனான குச்சயை எடுத்து நிற்க..... உள்ளுக்குள் பயமெடுத்தாலும் வெளியே காட்டவில்லை.....

எப்போதும் போல் சாமி கும்பிட்டு திருநீறை எடுத்து நெற்றில் வைத்து ,சாப்பிட சமையலறை சென்றாள்....

எல்லா பாத்திரங்களும் வெறுமையாய் இருக்க,அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள்....

மகாவோ, வேறு புறம் திரும்பி நின்று கொண்டாள்..... எல்லாம் தந்தையின் வேலை... சொல்லாமலேயே புரிந்தது...

படிப்பா..... சாப்பாடா என நினைக்க..... படிப்பு கண்களில் தேங்க.... அப்படியே பேக் எடுத்துக் கொண்டு நகர...

கால்களில் விழுந்த அடியில் படாரென துள்ளி நகர்ந்தாள்.... "ஏய் அடியில் இருந்து தப்பிக்க வேற செய்யிறியா....'' என அவளை இழுத்து வைத்து இன்னும் அடிகளை கொடுக்க....

சுள்ளென வலி எடுத்தாலும் ,கண்ணீர் நிறைந்தாலும் கொஞ்சம் கூட அசையாது அடிகளை வாங்கிக் கொண்டிருந்தாள்..... சத்தம் கேட்டு சத்ரி வந்துவிடுவானோ என பயந்து சத்தம் வராமல் வாயை பொத்திக் கொண்டாள்...

அடித்த அவருக்கு கைவலித்தது தான் மிச்சம்....

"சை...'' என குச்சியை ஒரு மூலையில் போட்டுவிட்டு "பெத்து வச்சீருக்கிறா பாரு... ஒன்னு நம்ப வச்சு கழுத்த அறுத்திச்சு..... இன்னொன்னு சொல்றதை கேட்காம கழுத்தை அறுக்குது...''

"கட்டினதும் சரி இல்லை, பெத்ததும் சரி இல்லை "என திட்டியபடி வெளியேற... எத்தனிக்க.... சிவா வீட்டினுள் நுழைந்தான்....

"சாத்வி ஸ்கூலுக்கு போக விடுங்க மாமா... வீட்டில் அடச்சு வச்சு ,என்னாக போகுது....''

"கிருத்திகா மாதரி....'' என சங்கர் ஆரம்பிக்கும் முன்பே "சாத்வி அப்படிலாம் செய்ய மாட்டாள் மாமா.... தைரியமா அனுப்புங்க..... "என சிவா மேலும் மேலும் பேசியே சங்கரை கரைத்தான்..... பின்..... "நானும் அப்போ அப்போ கவனிச்சுக்கிறேன்.....'' என சொன்ன பிறகே பள்ளி செல்ல அனுமதி கிடைத்தது...,

"போய் சாப்பிட்டு வா.....'' என சங்கர் பேருக்காய் கூற... சாத்வியின் தாய் அவளிடம் நெருங்க.... ஒரு வெற்று பார்வையை செலுத்தியவள் மீண்டும் அறையினுள் புகுந்து கொண்டாள்.... சாத்வியை கண்காணிக்கும்படி மேலும் சிவாவிடம் பேசிக் கொண்டிருக்க......

வலியில் வேதனை அதிகரித்தாலும் அதை அடக்க பெரும்பாடுபட்டு போனாள்.....

அக்கா செய்த தவறுக்கு தனக்கு தண்டனையா என கோபம் ஏறினாலும், சத்ரியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் காதில் ஒலித்தபடி இருக்க.....

அலமாரியில் அடிக்கி வைக்கப்பட்டிருந்த தனது நோட்டு புத்தகங்களில் எழுதாத நோட்டு ஒன்றை எடுத்து கட்டிலில் அமர்ந்து...

நோட்டை மடியில் வைத்து 'ஸ்ரீ ராம ஜெயம்' எழுத ஆரம்பித்தாள்….

கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருக்க, வலியில் உடல் வேதனை எடுக்க , இவை இரண்டையும் சட்டை செய்யாது ,கைகள் அதன்போக்கில் எழுதி கொண்டிருந்த்து…..

ஒரு பக்கம் வரை தான் எழுத முடிந்தது….. அடுத்த பக்கம் புரட்டியவளுக்கு மனதில், ஏதோ பாரம் இறங்கிய உணர்வு எழ….. அப்படியே அலமாரியில் வைத்துவிட்டு பள்ளிக்கு கிளம்பிச் வெளியே வர…..

சிவா தனக்காக தந்தையிடம் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தபடி வர... சிவாவே அவளை அழைத்துச் சென்றான்….

"திடீர்னு என்ன கரிசனம்….மாமா'' என சீரியசாகவே கேட்டாள்….

‘‘நீ என்னோட... மாமா பொண்ணு தானே… அந்த உரிமையில் வந்த கரிசனமா இருக்க கூடாதா….''

"உங்களுக்கு நான் அடி வாங்கி கொடுக்குறதுக்கு முன்னாடி சொல்லி இருந்தா நம்பி இருப்பேன்…ஆனா இப்போ...'' என இழுத்தவள்…..

"சத்ரி உங்ககிட்ட பேசினானா….மாமா….'' என கண்களை சுருக்கி கேட்க…...

சட்டென ப்ரேக் அடித்து வண்டியை நிறுத்தினான் சிவா….

கைகளை தலைக்கு மேல் கொண்டு சென்றவன்…. நீயும் சத்ரியும் நகமும் சதையும்ன்னு நான் ஒத்துக்கிறேன் தாயி…. விட்டுடு…

நீ அவனுக்காக எனக்கு அடி வாங்கிக் கொடுக்கிறது என்ன…. அவன் உனக்காக உதவின்ற பேர்ல ஆர்டர் போட்டுட்டு போறதென்ன……. டெலி பதி நல்லாவே வொர்க் ஆகுதும்மா இரண்டு பேருக்கும்…..” என புன்னகை முகம் முழுவதும் தவள…. கிருத்திகா பிரச்சனையை மறந்தவனாய் அவளை பள்ளிக்கு அழைத்துச் சென்றான்…..

சாத்வியோ…. சிவாவை கூர்மையாய் பார்த்தபடி வர….

உன் பார்வையே சரியில்லை….. மறுபடியும் எனக்கு அடி வாங்கி கொடுத்துடாதம்மா…. இங்கேயே இறங்கிக்க….. என பள்ளி ஆரம்பிக்கும் ரோட்டின் ஓரமாய் இறக்கி விட்டு சென்றான்….

# அத்தியாயம் 17

**உ**ள்ளே நுழையும் போதே அருணைப் பார்த்து விட்டாள்…. சாத்வி…. அவனை பார்த்து தயங்கினாலும்... அடுத்த நொடியே…’ தப்பு செஞ்சவங்க தான் பயப்படனும்….. தலைகுனியனும்….’ என்ற சத்ரியின் வார்த்தைகள் நியாபகம் வர…. மெதுவாய் தலை நிமிர்ந்தபடி சென்றாள்…. அருண் அவளை பார்த்த அடுத்த நொடி காணாமல் போய்விட்டான்… வாங்கிய அடி அப்படி…நிம்மதி பெருமூச்சை வெளியிட்டபடி தனது கிளாஸினுள் சென்று அமர்ந்தாள்…..

பள்ளியில் மனதை ஒருநிலை படுத்த மிகுந்த சிரமமாய் இருந்தாலும்….. முக்கால் வாசி நேரம் வழக்கம் போல் கயல் சரண்யா செந்தில் என அவர்கள் கும்பலுடன் சேர்ந்து தன் நேரத்தை செலவிட்டாள்… அதற்கு மூவருமே உறுதுணையாய் இருந்தனர்…. எல்லாம் தெரிந்திருந்தும் எதுவுமே கேட்க வில்லை….. எப்போதும் போல் தங்களின் பேச்சில் அவளை இழுத்துக் கொள்வர்…..

"ஏய், லன்ஜ் எடுத்திட்டு வா….. சாப்பிட போகலாம்….’’ என சரண்யா கூற….

அவள் அசையாததை பார்த்து "ஏய் உன்னைத்தாண்டி…..’’ என கயல் மீண்டும் அவளை உலுக்கினாள்…

"ம்ப்ச், சாப்பாடு கொண்டு வரலை’’ என டெஸ்க்கில் தலை வைத்து படுத்துக் கொண்டாள் சாத்வி…

சாத்வியின் தந்தையை அறிந்தவர்களாய்… "நம்மளோட லன்ஜ்சை ஷேர் பண்ணிக்காலாம்’’ என கயல் சரண்யாவிடம் உதட்டினை அசைத்து பேச…இருவருமே தங்களது உணவினை அவளுக்கு பங்கிட்டு கொடுத்தபடி….

"சாப்பிடாமல்….இருக்கிறதாலே எல்லா பிரச்சனையும் சரியா போய்டாது…. சாப்பிடுடி….’’ என கயல் கூற….

"ஆமாமண்டி… சாப்புடுடி…..’’ என அவர்கள் முன் ஜங் என குதித்து வந்த செந்தில்… "ஹாய் டீ’ஸ் "என செந்தில் கயலைக் கிண்டல் செய்ததும் இல்லாமல் , வம்பிழுக்கவும் ஆரம்பிக்க…..

"என்னாது…. டீ யா…..?’’ என நிமிர்ந்து செந்திலை முறைத்தாள் சாத்வி… சரண்யாவும், கயலும்……"ஏய், டீ போட்டா பேசுற…….’’ என இவருமே கோரசாக கத்தி….அவனை இருபுறமும் மொத்தினர்…

சில நிமிடங்கள் வரை சமாளித்தவன் ….. அதன் பிறகு முடியாமல் போக…..

இருவரையும் ஒரே தள்ளில் விலக்கியவன்….பட பட வென மூச்சுக்கள் வாங்கி…..

"இதெண்ணங்கடி நியாயம்…. நீங்க மட்டும் என்னை டா போடுறீங்க….. நான் மட்டும் டீ போடகூடாதா….. நல்லாருக்கே உங்க நியாயம்…….'' என கேட்க…. இந்த முறை சாத்வியும் சேர்ந்து அவனை மொத்தி எடுத்துவிட்டாள்…….

தங்களுடன் இருக்கும் ஒவ்வொரு நொடியையும்... சாத்வியை சிரிக்க வைத்துக் கொண்டிருந்தனர் அந்த மூவரும்……

சிவா , சாத்வியை இறக்கிவிட்டு வரும் போது….. வழியிலேயே சிவாவை நிறுத்தினான் சத்ரி….

'என்ன' என்பது போல் வண்டியை நிறுத்திவிட்டு அவனருகில் செல்ல... ''தேங்கஸ்'' என சிரித்தமுகத்துடன் சத்ரி கூற…

அது சாத்விக்கான நன்றி என புரிந்த சிவா... "தேங்க்ஸ்லாம் இருக்கட்டும்……ஊரை விட்டு போறதா கேள்வி பட்டேன்...என்ன பிரச்சனை நான் எதுவும் ஹெல்ப் பண்ணவா…..''என சத்ரியை பார்க்க

இதழ்கள் லேசாய் வளைய….. "ம், ஒரே ஒரு ஹெல்ப்….. சாத்வியை பார்த்துக்கணும்….. வேற எதுவும் வேண்டாம்…..'' என சிவாவிடம் கூற…..

“கண்டிப்பா சாத்விக்கு பண்ணாமலேயா... நான் உன் பிரச்சனையில் ஹெல்ப் பண்ணவான்னு கேட்டேன்..,.” என சிவா பதிலுக்கு கேட்க....

"இல்லை.....,. இல்லை வேண்டாம்.... "இது என்னுடைய பிரச்சனை என்பது போல் நாசூக்காய் மறுக்க ...

சிவாவும் சரி என்பது போல் தலையசைக்க...” சாத்வியை மட்டும்....” என சத்ரி மீண்டும் இழுக்க.... "நான் பார்த்துக்கிறேன்.....” என சிவாவும் சிறிதாய் புன்னகைத்தபடி நகன்று விட்டான்...

சாத்வியை அருணுடன் பார்த்த நாளுக்கு முன்பு தான்.......... பஞ்சாயத்து தலைவர், வாங்கிய பணத்திற்கு வட்டி கேட்டு விநாயகத்தின் வீட்டிற்கே ஆள் அனுப்ப.....

விநாயகம் பரிதவித்தபடி "நான் ஐயாவை நேரில் வந்து பார்க்கிறேன்பா....” என அவனை அங்கிருந்து அனுப்ப..... சத்ரி தந்தையை முறைத்த வண்ணம் நின்றிருந்தான்....

குத்தகை பணத்தை வெங்கட் எடுத்து சென்றிருக்க, பணம் செலுத்தும் நேரம் நெருங்க நெருங்க ...

என்ன செய்வது என தெரியாமல் தினமும் உறக்கத்தை தொலைத்தார். இரண்டு நிலங்களில் பயிர்கள் போட்டிருந்தார்.....

மற்றொன்றில் வாழை..... இன்னொன்றில் சிறு சிறு பாத்திகளாய் பிரித்து தக்காளி மிளகாய் இன்னும் சில காய்கறிகள் போட்டிருந்தார்....

மூன்று நிலங்களுக்கும் இதோ இன்னும். இரண்டு மாதத்தில் மொத்தமாய் குத்தகை பணம் செலுத்த வேண்டும்...

மூன்று வருட குத்தகையில் எக்கசக்க விளைச்சல் தந்த பூமி அந்த கிராமம் புஞ்சை..... அவ்வப்போது விளைச்சல் மறு சுழற்சிக்கு போட்டு லாபம் பார்க்க ஆரம்பித்தார் விநாயகம்....

அப்படி சேர்த்த பணம் சில லட்சங்கள் சேர்ந்தும் இருந்தது செலவுகள் தவிர்த்து... இந்த மூன்று வருடத்தில்....

லாபம் குத்தகை பணம் என எல்லாவற்றையும் எடுத்துச் சென்றிருந்தான் வெங்கட்.... மொத்தமாய் தடுமாறித் தான் போனார் விநாயகம்.....

சங்கரின் ஆட்டங்கள் குறைந்தது என நிம்மதியாய் பெருமூச்சு விடும் முன்... அடுத்த அடி பஞ்சாயத்து தலைவர் மூலம்

கல்லூரிக்கு செல்ல ஆரம்பித்த சத்ரிக்கு இது எதுவுமே தெரியாமல் வெகு நாட்களாக மறைத்துவந்தார்.....

அடிக்கடி ஏதோ ஓர் யோசனையில் இருப்பவர் சில நேரங்களில் கண் இமைக்காமல் எங்காவது வெறிப்பதையும் பார்த்த சத்ரிக்கு....

ஏதோ சரியில்லை என பட்டுக் கொண்டே இருந்தது….. இப்போது தெளிவாய் தெரிந்த பின்பும் அமைதியை விட்டு தந்தையை துளைத்து எடுத்துவிட்டான்….

குத்தகை பணம், நகை எல்லாம் வெங்கட் எடுத்துச் சென்றிருப்பதாகவும், பஞ்சாயத்து தலைவரிடம் வாங்கிய பணத்திற்கு வட்டி கேட்பதாகவும் கூற…

"பணம் கொடுத்து தான் என்னை கூட்டிட்டு வந்தீங்களா….. இதில் வெங்கட் வேற….. இவ்ளோ நடந்திருக்கே….என்கிட்ட சொல்லி இருக்கலாம்ல பா………" என தந்தையை நொந்து கொண்டவன்…..

எல்லாவற்றையும் கேட்டு தெரிந்து கொண்டான்…. கேட்டவனுக்கோ….. 'அடி மேல் அடி விழுந்தால்…..எப்படி எழும்புவது' என மெருமூச்சு கிளம்பியது….

ஐயா வீட்டுக்கு

"நானும் வரேன்பா….." என இருவருமே கிளம்பி அவரை பார்க்க சென்றனர்….

சத்ரியின் மீதும் அவ்வளவு பாரத்தை வைக்க தோன்றாமல்…. விநாயகம்…

ஏற்கனவே எடுத்து முடிவுடன் தான் அவரை பார்க்க சென்றார்…..வீடு நிலம்…. என இரண்னையும் விற்று கடன்

அடைப்பதாக அவரிடம் கூறி... இரண்டு மூனு நாளில். மொத்தமா கொடுத்துடு விடுவதாக... விநாயகம் கூற...

சத்ரிக்குமே சற்று அதிர்வாய் இருக்க..... "எல்லாத்தையும் வித்துட்டு.... நீ எப்படியா உன் பொழப்பை ஓட்டுவ....?'' என சத்ரியின் மனதில் உதித்த வார்த்தைகளையே கேட்க.....

‘‘பிறந்து வாழ்ந்த இடத்தில், இன்னொருத்தன்கிட்ட கையேந்தி நீக்க முடியாது இல்லையா..... சிவகாமியோட அக்கா திருச்சியில் தான் இருக்காங்க.... அங்கே வர சொல்றாங்க... விதி எங்கே கூப்பிட்டாலும் போகனுமே...'' என விரக்தியாய் பேசி அங்கிருந்து கிளம்பினர்.......

"என்னப்பா திடீர்ன்னு வேற ஊருக்கு ... எப்படி...?'' என சத்ரி கேட்க....

"போய்தான் ஆகனும், சத்ரி.... நம்ப நிலைக்கு நாம தான் காரணம் இருந்தாலும் ஒரு சில நேரம் சங்கரை பார்க்கும் போது வர்ற கோபத்தை என்னால் அடக்க முடியலை..... என்னைக்காவது ஒரு நாள் அது பிரச்சனையாயிடும் சத்ரி..... எங்களுக்கு நீயாவது வேணும்.... நாம திருச்சி கிளம்பினால் தான் வீடு நிலம் இரண்டையும் விற்க வசதியாய் இருக்கும்.... கிளம்பலாம்....'' என விநாயகம் முடித்துவிட.....

"நீ வீட்டுக்கு போ..... நிலத்தை விலை பேச ஆள் வராங்க நான் போய்ட்டு வரேன்....'' என சத்ரியை அனுப்பி வைக்க....

திரும்பி வரும் பொது தான் சாத்வியையும் அருணையும் பார்த்தது….. பார்த்தவனுக்கு எந்த ஒரு விகல்பமும் தோன்றவில்லை….

மாறாக… சாத்வி எந்த வம்பிலும் சிக்கி விடக் கூடாது என்பதில் மட்டுமே சத்ரியின் எண்ணம. அழுத்தமாய் விழ….. மிக கவனமாய் அவளை கையாண்டான்…..

சிவாவிடம் பேசினான்…. சாத்விக்கு பாதுகாப்பு அமைத்த பின்னரே…. தன் வாழ்க்கையை நோக்கி பயணப்பட்டான்…..சத்ரி…..

அன்று தான் அவளை பார்த்த கடைசி நாள்…. அதன் பிறகு இருவருமே சந்திக்கவில்லை…அதைவிட வாய்ப்புகள் அமையவில்லை என்றே கூறலாம்…

சிவகாமி விநாயகம் இருவருக்குமே வருத்தம் தான், மகன் ஆசையாய் எடுத்த படிப்பை கூட விடும் நிலை…

"கடனோட கடனா… நீயும் படிக்கலாம்லயா….'' என விநாயகம் கேட்க..

"மூன்று செமஸ்டர் தான்பா முடிஞ்சிருக்கு….. இன்னும் ஐந்து சைமஸ்டர் இருக்கு…. படிப்புக்கு கடன் வாங்கினா….. மற்ற செலவுக்கெல்லாம் என்ன செய்ய…. "என சத்ரி பதிலுக்கு கேட்க…

பதிலில்லை விநாயகத்திடம்….

"இருந்தாலும் இன்ஜினியரிங் , நீ ஆசைபட்டு எடுத்தியேடா...'' என சிவகாமி வேதனையாய் கேட்க.....

"அதைவிட , நீங்களும் அம்மாவும் எனக்கு முக்கியம் பா...நடக்கிறது எல்லாமே நல்லதுக்குன்னே நனைச்சுப்போம் பா..... வருத்தப்படாதீங்க'' என சத்ரி தான் தேற்றும்படி ஆயிற்று.... படிப்பை விட்டு.... கடமையை எடுத்துக் கொண்டான்....

இதோ திருச்சியில. , சத்ரியின் பெரியம்மா...( சிவகாமியின் அக்கா- அம்பிகாவிடம் வந்தாயிற்று.....)....

அம்பிகா அவர் கணவன் முத்துசாமி... மகள் சௌமியா... அவர்கள் குடும்பத்துக்குள், விநாயகம் குடும்பத்தாரையும் அழகாய் இணைத்துக் கொண்டனர்.....

அம்பிகாவின் குடும்பம்....

விவசாயம் மட்டுமே தெரிந்த அவருக்கு, குத்தகை நிலமும் போய், சொந்த நிலமும் இல்லாது போக..... என்ன வேலை பார்ப்பது, எப்படி சம்பாத்தியம் காண்பது என என விழி பிதுங்கிப் போனார்....

டிகிரி முழுதாய் முடித்தவர்களே வேலைக்காக திணறிக் கொண்டிருக்க.... இரண்டு வருடம் கூட முழுதாய் நிறைவடையாமல் மெக்கானிக்கல் படிப்புடன் நிறுத்தியிருந்த சத்ரி வேலை தேடுவதற்குள்...பெரும்பாடு பட்டுப்போனான்.....

விநாயகத்திற்கோ... கையிலிருந்த பணம் சிறிது சிறிதாய் குறைந்து கொண்டே வர...

விநாயகம் முத்துசாமியிடம் உதவி கேட்க..... ஹோட்டல் செக்யூரிட்டி வேலை தான் கிடைத்தது.... அதற்கும் தயங்காமல் சென்றார் விநாயகம்....

சத்ரிக்கு தான் தந்தையை பார்த்து அவ்வளவு வருத்தம்.... அவனும் வேலை தேடி அலுத்துப்போனான்...

அவன் படிப்பிற்கு மிக குறைவான சம்பளமே கிடைக்க..... சத்ரிக்கோ வேலை தேடுவது வேலைக்காகவில்லை என..... இரண்டு வருட மெக்கானிக்கல் படிப்பை கையில் எடுத்துக் கொண்டு.... அதை ஆரம்பமாய் கொண்டு தன் கனவினை நோக்கி பயணிக்க ஆரம்பித்தான்....

நிலத்தை விற்ற மீதி பணத்தை தந்தையிடமிருந்து வாங்கிக் கொண்டு சிறிதாய் மெக்கானிக் ஷாப் வைத்தான்.....

வாடகைக்கென அம்பிகா பிடித்துக் கொடுத்திருந்த வீட்டின் சைடில் இருந்த சிறிய இடத்தில் தனக்குரிய மைக்கானிக் ஷாப்பினை சிறிதாய் ஆரம்பித்தான்... தெருவில் இருந்த ஆட்களே சிறு சிறு ரிப்பேருக்காக வர ஆரம்பித்தனர்.......

பஞ்சர் போடுவது ஆயில் மாற்றுவது, வாட்டர் சர்வீஸ் என சிறிதாய் வேலைகள் வர ஆரம்பித்தது......

பைக் ஆல்ட்ரேசன் மீது இருந்த தீராத மோகத்தினாலேயே…. ஆல்ட்ரேஷன் ஷோரூம் வைக்க வேண்டும் என கனவுகளுடன் எடுத்த மெக்கானிக்கல் படிப்பு அவ்வப்போது கண்முன் தோன்றி அவனை தூண்டி விட்டுக் கொண்டே இருக்க…. அதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது சத்ரிக்கு…..

சில நேரங்களில் வேலையில்லாமல் இருப்பவன்….. தன்னுடைய பைக்கையே ஆல்ட்லேசன் செய்ய முடிவெடுத்தான், ஓய்வாக இருக்கும் நேரங்களில் தன்னுடைய பிளாட்டினா பைக்கை…. அதன் வடிவமைப்பை தனக்கு பிடித்த வகையில் அதன் உருவ அமைப்பை அப்படியே மாற்றி இருந்தான்….. ‘‘ஸ்மோர்ட்ஸ் பைக்காக….’’

ஏதோ ஓர் ஆர்வத்தில் செய்த பைக் மாட்லேசன்….. இப்போது அவனின் வாழ்க்கை அங்கமாய் மாறப் போவது தெரியாமல்…. தனிமையை கலைக்க, பைக்கை மாட்லேசன் செய்வதில் தன் நேரத்தை முழுமையாக செலவிட்டான் சத்ரி…..

ரெடிமேடாக கிடைக்கும் பைக் ஷேப்பை தவிர்த்து , தன் கைகளால் அவன் பைக்கிற்கு அழகூட்டிக் கொண்டிருந்தான்…. பைபர், மெட்டல் என தனக்கு தேவையான ஷேப்பை அதில் கொண்டுவந்தான்…..

இறுதியில் அதற்கு ஸ்போர்ட.ஸ் பைக் Yamaha YZF R3 என்ற ஒரு மாடலை ஒன்றை முன்னுதாரணமாக கொண்டு அப்படியே ஷேப்பை மாற்றி இருந்தான்...

மேலும் அதற்கு தகுந்தாறப் போல் பெயிண்டும் அடித்து வேண்டிய இடத்தில் டயனாமிக், 3D மற்றும் ஸ்டைலிஸ் ஆன ஸ்டிக்கர்கற்ளும் ஒட்ட.... அசல் அந்த ஸ்போர்ட்ஸ் பைக் போலவே இருக்க.....

அப்படி ஒரு ஆனந்தம்..... திருப்தி, அலாதி இன்பம்..... இப்படி பல உணர்வுகள் அவனுள்..... சந்தோஷமாய் வலம் வர ஆரம்பித்தான்.....

கடையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது..... ஒருவன் நன்றாக அடி வாங்கிய வண்டி ஒன்றை தள்ளிக் கொண்டு வந்தான்.....

'அக்ஷிடன்ட ஆகி இருக்குமோ.....' என சத்ரி நினைக்கும் போதே.....

"அண்ணா.... சின்ன ஆக்ஷிடண்ட் னா..... பைக் ரொம்ப அடி வாங்கிருச்சு..... ப்ரண்ட் பைக் வேற..... எவ்வளவு வேணும்னாலும் பணம் வாங்கிக்கங்கண்ணா.... ஆனா ஆக்ஸிடண்ட் ஆனது தெரியாமல் ரிப்போர் பார்த்துருங்கண்ணே....." என ஒருவன் வந்து நிற்க....

அவன் பேசியதை காதில் வாங்கி , பைக்கை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்து பார்த்துக் கொண்டிருந்த சத்ரிக்கு….. "ரொம்ப அடி வாங்கி இருக்கு …. சின்ன ஆக்ஸிடண்டுன்னு சொல்றீங்க... புது பைக்கா வேற தெரியுதே ….. இன்சூரன்ஸ் இருந்தா கிளைம் பண்ணிக்கலாமே….. எதுக்கு தண்ட செலவு வேற….. "என தானாகவே அவனுக்கு பதில் கூறிக் கொண்டிருந்தது சத்ரியின் வாய்…..

‘‘ஐய்யோ , பைக் பஞ்சர்ன்னு பொய் சொல்லிட்டு வந்திருக்கேன்னா….. ஆக்ஷிடண்டுன்னு சொல்ல முடியாது…..எவ்வளவு வேணும்னாலும் வாங்கிகங்கண்ணா… அதான் வெளியில் எங்கேயும் போகாமல் இங்கே வந்தேன் "என அவனுடைய சிறிய கடையை பார்த்தபடி கூற….

அவன் பார்வையை பார்த்த சத்ரியும்….

"முடிஞ்ச அளவு சரி பண்ணிடறேன்…. ஒரு ரெண்டு நாள் ஆகும்…. அட்வாண்ஸ் கொடுத்த தான் பார்க்க முடியும்... மேலும் பைக்கை பிரிச்சா தான் என்னன்ன பிரச்சனைன்னு பார்க்க முடியும்’’ என சத்ரி கேட்க…..

"இல்லைன்னா காலையில் வேணும்…. இன்றைக்கு ஒரு நாள் சமாளிக்கிறதே கஷ்டம்னா….. ப்ரண்டுக்கு ஆக்ஸிடண்ட் ஆனது தெரியாது…..’’ என தயக்கமாய் அவனும் கூற…

"ஏன் உங்க ப்ரண்டு மேல அவ்வளவு பயமா….'' என சத்ரி கேட்க….

"இல்லைனா , அவங்கப்பனுக்கு தான் பயம்….. "என உண்மை நிலையை கூறி….. "இந்தாங்கண்ணே…. அட்வாண்ஸ் "என பல நோட்டுகளை சத்ரியின் கையில் திணிக்க…

லேசாய் சிரிப்பு வந்தாலும்….. "சரி காலையில் வந்து எடுத்துக்கோங்க... "என பைக்கை பிரிக்க ஆரம்பித்தான்….

என்னன்ன பிரச்சனைகள் என பார்த்து வாங்க வேண்டிய பொருட்களை பட்டியலிட்டு , அதற்கான வேலையில் இறங்கினான்…..

இரவு முழுவதும் தூங்காமல் புது பைக்காகவே மாற்றி இருந்தான் சத்ரி….

காலையில் பைக் வாங்க வந்தவன் திருப்தியாய் புன்னகைத்து "சூப்பர்னா….. சூப்பரா வேலை பார்த்திருக்கீங்க…..'' என வண்டியை இப்படியும் அப்படியுமாய் பார்த்தவன் மீதி பணத்தையும் கேட்டு அவன் கைகளில் கொடுத்தவனின் கண்களில் சிக்கியது…. சத்ரியின் ஸ்போர்ட்ஸ் பைக்... வேகமாய் அதன் அருகில் சென்றவன்…..

அவன் படிப்பிற்கு மிக குறைவான சம்பளமே கிடைக்க….. சத்ரிக்கோ வேலை தேடுவது வேலைக்காகவில்லை என….. இரண்டு வருட மெக்கானிக்கல் படிப்பை கையில் எடுத்துக்

கொண்டு…. அதை ஆரம்பமாய் கொண்டு தன் கனவினை நோக்கி பயணிக்க ஆரம்பித்தான்….

நிலத்தை விற்ற மீதி பணத்தை தந்தையிடமிருந்து வாங்கிக் கொண்டு சிறிதாய் மெக்கானிக் ஷாப் வைத்தான்…..

வாடகைக்கென அம்பிகா பிடித்துக் கொடுத்திருந்த வீட்டின் சைடில் இருந்த சிறிய இடத்தில் தனக்குரிய மைக்கானிக் ஷாப்பினை சிறிதாய் ஆரம்பித்தான்... தெருவில் இருந்த ஆட்களே சிறு சிறு ரிப்பேருக்காக வர ஆரம்பித்தனர்…......

பஞ்சர் போடுவது ஆயில் மாற்றுவது, வாட்டர் சர்வீஸ் என சிறிதாய் வேலைகள் வர ஆரம்பித்தது…...

பைக் ஆல்ட்ரேசன் மீது இருந்த தீராத மோகத்தினாலேயே…. ஆல்ட்ரேஷன் ஷோரூம் வைக்க வேண்டும் என கனவுகளுடன் எடுத்த மெக்கானிக்கல் படிப்பு அவ்வப்போது கண்முன் தோன்றி அவனை தூண்டி விட்டுக் கொண்டே இருக்க…. அதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது சத்ரிக்கு…..

சில நேரங்களில் வேலையில்லாமல் இருப்பவன்….. தன்னுடைய பைக்கையே ஆல்ட்லேசன் செய்ய முடிவெடுத்தான், ஓய்வாக இருக்கும் நேரங்களில் தன்னுடைய பிளாட்டினா பைக்கை…. அதன் வடிவமைப்பை தனக்கு பிடித்த வகையில்

அதன் உருவ அமைப்பை அப்படியே மாற்றி இருந்தான்….. “ஸ்மோர்ட்ஸ் பைக்காக….”

ஏதோ ஓர் ஆர்வத்தில் செய்த பைக் மாட்லேசன்….. இப்போது அவனின் வாழ்க்கை அங்கமாய் மாறப் போவது தெரியாமல்…. தனிமையை கலைக்க, பைக்கை மாட்லேசன் செய்வதில் தன் நேரத்தை முழுமையாக செலவிட்டான் சத்ரி…..

ரெடிமேடாக கிடைக்கும் பைக் ஷேப்பை தவிர்த்து , தன் கைகளால் அவன் பைக்கிற்கு அழகூட்டிக் கொண்டிருந்தான்…. பைபர், மெட்டல் என தனக்கு தேவையான ஷேப்பை அதில் கொண்டுவந்தான்…..

இறுதியில் அதற்கு ஸ்போர்ட.ஸ் பைக் Yamaha YZF R3 என்ற ஒரு மாடலை ஒன்றை முன்னுதாரணமாக கொண்டு அப்படியே ஷேப்பை மாற்றி இருந்தான்...

மேலும் அதற்கு தகுந்தாறப் போல் பெயிண்டும் அடித்து வேண்டிய இடத்தில் டயனாமிக், 3D மற்றும் ஸ்டைலிஸ் ஆன ஸ்டிக்கர்கற்ளும் ஒட்ட…. அசல் அந்த ஸ்போர்ட்ஸ் பைக் போலவே இருக்க…..

அப்படி ஒரு ஆனந்தம்….. திருப்தி, அலாதி இன்பம்….. இப்படி பல உணர்வுகள் அவனுள்….. சந்தோஷமாய் வலம் வர ஆரம்பித்தான்…..

கடையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது….. ஒருவன் நன்றாக அடி வாங்கிய வண்டி ஒன்றை தள்ளிக் கொண்டு வந்தான்…..

'அக்ஷிடன்ட ஆகி இருக்குமோ…..' என சத்ரி நினைக்கும் போதே…..

"அண்ணா…. சின்ன ஆக்ஷிடண்ட் னா….. பைக் ரொம்ப அடி வாங்கிருச்சு….. ப்ரண்ட் பைக் வேற….. எவ்வளவு வேணும்னாலும் பணம் வாங்கிக்கங்கண்ணா…. ஆனா ஆக்ஸிடண்ட் ஆனது தெரியாமல் ரிப்போர் பார்த்துருங்கண்ணே…..'' என ஒருவன் வந்து நிற்க….

அவன் பேசியதை காதில் வாங்கி , பைக்கை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்து பார்த்துக் கொண்டிருந்த சத்ரிக்கு….. "ரொம்ப அடி வாங்கி இருக்கு …. சின்ன ஆக்ஸிடண்டுன்னு சொல்றீங்க... புது பைக்கா வேற தெரியுதே ….. இன்சூரன்ஸ் இருந்தா கிளைம் பண்ணிக்கலாமே….. எதுக்கு தண்ட செலவு வேற….. "என தானாகவே அவனுக்கு பதில் கூறிக் கொண்டிருந்தது சத்ரியின் வாய்…..

‘‘ஐய்யோ , பைக் பஞ்சர்ன்னு பொய் சொல்லிட்டு வந்திருக்கேன்னா….. ஆக்ஷிடண்டுன்னு சொல்ல முடியாது…..எவ்வளவு வேணும்னாலும் வாங்கிகங்கண்ணா…

அதான் வெளியில் எங்கேயும் போகாமல் இங்கே வந்தேன் "என அவனுடைய சிறிய கடையை பார்த்தபடி கூற….

அவன் பார்வையை பார்த்த சத்ரியும்….

"முடிஞ்ச அளவு சரி பண்ணிடறேன்…. ஒரு ரெண்டு நாள் ஆகும்…. அட்வாண்ஸ் கொடுத்த தான் பார்க்க முடியும்… மேலும் பைக்கை பிரிச்சா தான் என்னன்ன பிரச்சனைன்னு பார்க்க முடியும்'' என சத்ரி கேட்க…..

"இல்லைன்னா காலையில் வேணும்…. இன்றைக்கு ஒரு நாள் சமாளிக்கிறதே கஷ்டம்னா….. ப்ரண்டுக்கு ஆக்ஸிடண்ட் ஆனது தெரியாது…..'' என தயக்கமாய் அவனும் கூற…

"ஏன் உங்க ப்ரண்டு மேல அவ்வளவு பயமா….'' என சத்ரி கேட்க….

"இல்லைனா , அவங்கப்பனுக்கு தான் பயம்….. "என உண்மை நிலையை கூறி….. "இந்தாங்கண்ணே…. அட்வாண்ஸ் "என பல நோட்டுகளை சத்ரியின் கையில் திணிக்க…

லேசாய் சிரிப்பு வந்தாலும்….. "சரி காலையில் வந்து எடுத்துக்கோங்க… "என பைக்கை பிரிக்க ஆரம்பித்தான்….

என்னன்ன பிரச்சனைகள் என பார்த்து வாங்க வேண்டிய பொருட்களை பட்டியலிட்டு , அதற்கான வேலையில் இறங்கினான்…..

இரவு முழுவதும் தூங்காமல் புது பைக்காகவே மாற்றி இருந்தான் சத்ரி....

காலையில் பைக் வாங்க வந்தவன் திருப்தியாய் புன்னகைத்து "சூப்பர்னா..... சூப்பரா வேலை பார்த்திருக்கீங்க.....'' என வண்டியை இப்படியும் அப்படியுமாய் பார்த்தவன் மீதி பணத்தையும் கேட்டு அவன் கைகளில் கொடுத்தவனின் கண்களில் சிக்கியது.... சத்ரியின் ஸ்போர்ட்ஸ் பைக்... வேகமாய் அதன் அருகில் சென்றவன்.....

"இந்த பைக் எவ்வளவுண்ணா..... செம்ம லுக்கா இருக்குண்ணா....'' என அதை வருடிக் கேட்க....

"இது என்னோடது..... சாதாரண யமகா பைக் தான், ஆல்ட்ரேசன் பண்ணி யமகா YZF R3 யாக மாற்றி இருக்கேன்..... வெளிய இருக்குற டிசைன் தான் ஸ்போர்ட்ஸ் பைக்..... உள்ளே இருக்கிற பார்ட்ஸ் சாதாரண யமகா பைக்.... மைலேஜூம் கிடைக்கும், இமேஜூம் கிடைக்கும்'' என ஸ்டைலாய் தோளை குலுக்க..... மீண்டும் வாயை பிளந்தான் அவன்...

ஏனென்றால் அது மார்க்கெட்டில் மூன்றரை லட்சம் , ஆனால் ஆல்ட்ரேசன் பைக் என வரும் போது பாதி விலைக்கும் கம்மியாக வாங்கலாம் என "அண்ணா, இது சேல்ஸ்க்குனா தருவீங்களா.....'' என ஆசையாய் கேட்க.....

சட்டென சத்ரியும் "ம்..... தரேன்.... ஆனால் பைக் ரேட் இவ்வளவு...., நான் இரண்டு வருசம் ஓட்டி இருக்கேன், இவ்வளவு கிலோ மீட்டர் ஓடிருக்கு, ஆனால் ஆல்ட்ரேசன் செலவு ஜாஸ்தி....'' என தாடையை தடவியவன் அதிக லாவம் வெக்காது..... எழுபத்தைஞ்சுக்கு முடிச்சுக்கலாம்....'' என சத்ரி பேச...

"அண்ணா, எழுபது முடிச்சுக்கலாம்...ரெடி கேஸ்.... பைக்க வேற ஒரு மெக்கானிக் கிட்ட கொடுத்து செக் பண்ணி வாங்கிகங்க..... மெக்கானிக்கை கூட்டி வாங்க....'' என சத்ரி பேச...

சத்ரியின் ஏமாற்றாத குணம் அவனின் குரலிலும் பேச்சிலும் தெரிய....

''. ஓகே ன்னா.....'' என பைக்கில் இருந்த கண்களை அகற்றாமல் கேட்டவன்....

மறுநாளே வேறு ஒரு மெக்கானிக்கை அழைத்து வர..... "சத்ரியின. பைக்கை பார்த்து..... அதை ஓட்டி செக் செய்தவன்.....

''பைக் நல்ல கண்டிசன்ல இருக்கு பா.... எழுபது ரிசனபிள் தான்.... வாங்கலாம்'' என இருவரும் பைக்கை

வாங்கிசென்று விட..... சத்ரிக்கு ஓரளவு லாபம் கிடைத்தது.... பணத்தினை பத்திரபடுத்தி, அடுத்த பைக் என்ன

வாங்கலாம், என்ன ஆல்ட்ரேசன் செய்யலாம் என யோசித்துக் கொண்டிருக்க...

அடுத்து சில நாட்களில்..... மீண்டும் வந்தான் அந்த கல்லூரி மாணவன்....

"டேய் இந்த கடையில் தான்டா பைக் வாங்கினேன், அன்னைக்கு ஆக்ஸிடண்ட் ஆன வண்டியை கூட இங்கே தாண்டா ரிப்பேர் பார்த்தேன்...." என வேறொருவனை அழைத்து வந்தான்....

செகண்ட ஹேண்ட் பைக் ஒன்றை சத்ரியிடம் கொடுத்து....

"அண்ணா.....இதையும் மாடுலேஷன் பண்ணி கொடுக்கனும்.... எவ்வளவு ஆகும்..." என ட்ரண்டில் இருக்கும் ஒரு பைக்கின் பெயரை சொல்லி கேட்க....

கூடவே வந்த இன்னொருவனோ..... குப்பையென அடைந்து கிடந்த சத்ரியின் சிறு கடையை பார்த்து நம்பிக்கையின்மையை காட்ட..........

அதை உணர்ந்த சத்ரியோ....." பிடிக்கலைன்னா, பைக்கோட ரேட்டை விட இரண்டு மடங்கு பணம் வாங்ககங்க......" என அவனுக்கு தேவையான பதிலை கொடுக்க...

சிரித்த முகத்துடன்... பைக்கை எப்படி மாற்ற வேண்டும் என்ன என்ன பொருத்த வேண்டும்.... என ஒரு நீண்ட பட்டியலை போட்டு விட்டு செல்ல....

அந்த கல்லூரி மாணவனின் பார்வை சத்ரியை நன்றாகவேஏற்றி விட்டிருக்க.....

இரவு பகல் பாராத உழைப்பு தான்.....சத்ரிக்கு.....

அடுத்த பத்து நாட்களில் அது பல்சர் பைக் என கண்டே பிடிக்காத வண்ணம்... அவன் எதிர்பார்த்த புது மாடல் ஸ் போர்ட்ஸ் பைக்காய் மாற்றி இருந்தான்.....

அதை பார்த்த அந்த இரு மாணவர்களின் கண்களும் வாயும் தானாகவே விரிய..... "வாவ்....'' என்ற வார்தையை தவிர்த்து வேறு எதுவும் வரவில்லை.....

மார்க்கெட்டில் தினந்தோறும் புதிது புதிதாக கண்டுபிடிப்புகள் வந்து கொண்டிருக்கும் நிலையில் மைலேஜூம் வேண்டும், புதிதான மாடல்களும் வேண்டும் என விரும்பும் நடுத்தர வர்க்க ஆண்களுக்காக ...குறிப்பாக கல்லூரி மாணர்வர்கள் இளைஞர்கள் என அவர்களை ஈர்க்க.... ஏகப்பட்ட புதிய தொழில்நுட்ப வசததிகள் கொண்ட அக்சஸரீஸ்களை வைத்து அவற்றில் காலூன்ற ஆரம்பித்தான் சத்ரி.....

தன் பைக் விற்ற பணம், மற்றொரு ஆல்ரேசன் செய்ததில் வந்த பணம் என மொத்த பணத்தையும் செகண்ட் ஹேண்ட. பைக் ஒன்றை வாங்கி, அதை மீண்டும் அல்ட்ரா மார்டனாக திருப்பி வடிவமைப்பிதலும் செலவிட்டான்....

இந்த முறையும் பைக் நன்றாக வர..... இந்த முறை சற்று லாபம் ஏற்றி வைத்து விற்க ஆரம்பித்தான்...

மீண்டும் லாபம் வர அப்படியே அதே போல் ரொட்டேசன் செய்ய ஆரம்பித்தான்...

ஏற்கனவே அவன் செய்த மாடுலேசன் பைக்குகள் ஒன்றிரண்டு அவன் ஊரிலேயே வலம் வர, செலவற்ற விளம்பரம் கிடைத்தது சத்ரிக்கு.....

ஒவ்வொருவராய் விசாரித்து வர ஆரம்பித்தனர்..... புதிய மாடல் பைக்கிற்காக எங்கும் ஆண் வர்க்கம், அதில் கூடுதலாய் கல்லூரி மாணவர்கள்.....

"உங்களுடைய பைக்கை ஆல்ட்ரேசன் பண்ண விரும்புகிறீர்களா? இதோ உங்களுக்காக சில ஆக்சஸரீஸ்கள்!!!'' என பெரிய பேனர் அடித்து தன் சிறிய மெக்கானிக் ஷாப்பில் நிறுத்தியிருந்தான் சத்ரி.....

மேலும் சில கல்லூரிகளின் முன்..... அவர்களின் பார்வை படும் படி விளம்பர பேனர்கள் வைக்க..... மெதுவாய் சூடு பிடிக்க ஆரம்பித்தது.... ஆட்களும் வர ஆரம்பித்தனர்...

மார்க்கெட்டில் கிடைக்கும் , சில குறிப்பிட்ட மாடல் பைக்குகள் எப்போதுமே எப்படி வேண்டுமானாலும் கஸ்டமைஸ் செய்து கொள்ள கூடிய வடிவமைப்பை கொண்டது.

அப்படிபட்ட சில பைக்குகளை புதிதாக வாங்கி, அவற்றை தனக்கு விருப்பமான முறையில் புது வகை ஸ்போர்ட்ஸ் பைக்காவோ... அல்லது அவனது மூளையை குடைந்து புது மாடல்களை உருவாக்கி, அதை போலவே வடிவமைத்து அனைவரின் கவனத்தையும் தன்புறமாய் திருப்பிக் கொண்டிருந்தான் சத்ரி.....

முக்கியாமாய் இளைய தலைமுறையினரை.....

குறிப்பிட்ட சில அக்சஸரீஸ்கள் சாலை விதிமுறைகளை கருத்தில் கொண்டே மாற்ற வேண்டும்.

எனவே என்னென்ன வேண்டும் என்று ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வதால் மேலும் மேலும் அவனுக்கு வாடிக்கையாளர்கள் கூட ஆரம்பித்தனர்....

பெரிய வீல்கள் கொண்ட பைக்குகளை விரும்புபவர்களுக்கு பைக்குகளின் அழகை கூட்டும் விதமாய் நிறைய டிசைன்களில் கிடைக்கும் அலாய் வீல்களும்.....

மேலும் அனைவருக்கும் பிடித்தமான, ஹார்லீ டேவிட்சன் மற்றும் தண்டர்பேர்டு போன்ற மாடல்களுக்கான ரிம்களையும் வேறு வேறு பைக்குகளில் வித்யாசமாய் புகுத்த ஆரம்பித்தான்.

வித விதமாய் சத்தம் கொடுக்கும் சைலண்சர்களை வைத்தும் நிறைய வாடிக்கையாளர்களை கவர்ந்தான்...

மாசுக்கட்டுப்பாடு விதிமுறைகள் மிகக்கடுமையாக நடைமுறைபபடுத்தப்பட்டு வரும் நிலையில் புகைபோக்கியை தேர்ந்தெடுக்கும் போது விதிமுறைகளையும் மனதில் வைத்து ... ஸார்ட் பாட்டில், இந்தோரி, லாங் பாட்டில், வைல்டு போர், மெகாபோன் போன்ற மாடல்களை நடுத்தர வர்க்கத்தினருக்கும்...

பர்ஸ் நிரம்பி வழியும் வாடிக்கையாளர்களுக்கு, கலிதாரோ மற்றும் ரெட் ரூஸ்டர் , டபுள் சைலன்சர் என மற்ற விலை உயர்ந்த பிராண்டுகளை பரிந்துரை செய்யவும் தவற மாட்டான்….

முழுமையான மாடுலேஷனுக்காய் வரும் பைக்குகளுக்கு…. வித விதமான பைபர், மெட்டல் ஷேப்கள் மார்க்கெட்டிலேயே கிடைப்பதால், அவர்களின் விருப்பத்துடன், வாங்கி ஃபிட் செய்தும் கொடுப்பான்…..

யாரடமும் இந்த மாடல் இருக்கவே கூடாது என வரும் பைக் ரேசர்களுக்கு….. தன் கைகளாலேயே பெஸ்ட் ஷேப்பாக செய்து கொடுப்பான்…..

தற்போது அதற்கென நிறைய மெஷின்கள் வந்ததாலும் அவனுக்கு அது கஷ்டமாக இல்லை….. இஷ்டமாக செய்யும் வேலையில் கஷ்டம் அவனுக்கு தெரியவே இல்லை…..

இதனுடன் எல்இடி விளக்குகள், பைக்குளுக்கு க்ரூஸர் லுக்கினை கொடுக்கும்…. விண்ட்ஷில்டு, யூஸ் அண்டத்ரோ

ட்ராவல் போக்குகள்,தரமான சீட்கவர்கள் என எக்ஸ்ட்ரா வேலைகளையும் சேர்த்து பார்க்க ஆரம்பித்தான்….

ஒரு பைக் விற்று, ஒரு பைக் மாடுலேசன் என்பது போய்… ஒவ்வொரு முறையும், பைக்குகளின் எண்ணிக்கை கூட ஆரம்பித்தது… வருடங்களும் ஏற….. பைக்குகளின் எண்ணிக்கையும் கூடி…..வாடிக்கையாளர்களும் கூடி…. பணமும் சேர ஆரம்பித்தது அவனே எதிர்பாராத விதத்தில்…..

.இடப்பற்றாகுறை மட்டுமே….தன் வீட்டின் சைடில் சிறிதாய் தகரத்தில் மறைக்கப்பட்ட இடம்

புதிய உருவ அமைப்புடன் கூடிய பைக்குள் சிலவைகளும், மாடுலேசன் செய்யபட இருந்த பைக்குகளும் , பட்டறை போல நிறைய சாமான்களாலும் அந்த இடம் நிரம்பி வழிந்தது…..

அவனின் விஸ்தாரமான தொழிலுக்கு அந்த இடம் இடையூராய் இருக்க….. ஏற்கனவே இருந்த சேமிப்பை கொண்டு சிட்டியில் முக்கியமான இடத்தில் கையில் இருந்த பணத்தை கொண்டு , கான்கீரிட் கட்டிடமாக கட்டிக் கொண்டான்….. இடம் பெரிமாய் இருந்தாலும்… பாதியில் மட்டுமே கட்டிடம் கட்டி மீதியை கான்கீரிட் செட் போட்டு அழகுற அமைத்துக் கொண்டான்…..

சுற்றிலும் குழுமை தரும் மரங்களை நடவும் தவரவில்லை…..

"பைக்கர்ஸ் பாய்ண்ட்" என பெயரிட்டு...புதிய கட்டிடமாக, சர்வீஸ் செய்யும் வேலையில் ஒரு நான்கு பேர் மாடுலேசன் செய்யும் இடத்தில் ஒரு ஐந்து பேர்..... ரிசப்சனில் இரண்டு பேர்....என ஒரு பத்து பேருக்கு வேலை கொடுத்து கொண்டிருந்தான் சத்ரி....

'முயற்சி திருவினையாக்கும்' என அவனை தெரிந்த எல்லோருக்கும் தெரியவைத்தான்.....

எந்த ஒரு வேலை என்றாலும் வேலையின் ஆரம்பத்திலும், முடிவிலும் அவனின் ஆலோசனைகள் கண்டிப்பாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.....

வெகுவாய் , அதிகமாய் வந்தது லாபம்..... இவனின் சேமிப்பும் ஏற ஆரம்பித்தது...

சாத்வியோ... செந்தில் சரண்யா கயல் மூவர் மட்டுமே உலகமென மாறிப் போனாள்.....

சங்கர் மகா சாத்வி என மூவருக்கும் விரிந்த விரிசல் அதிகமாகியதே தவிர குறையவில்லை..... பிடிப்பின்றியே சென்றது மூவரின் வாழ்க்கையும்.....

விநாயகம், சிவகாமி , சத்ரி மூவரும் ஊரை காலி செய்த பின்னர்....

சங்கருக்கு ஏதோ ஒன்றை இழந்தது போல் இருந்தது..... ரொம்ப அதிகமாக நடந்து கொண்டோம் என உரைத்தது.....

அப்போதும் கிருத்திகாவின் மீது தான் பழியை போட்டு தன் மனதை தேற்றிக் கொண்டார்...

மகா கிருத்திகாவை நினைத்து நினைத்து சாத்வியை விட்டுவிட... அவளோ வீட்டில் போட்டால் சாப்பாடு இல்லைஎன்றால் பட்டினி என தன் படிப்பை மட்டும் முன்னிருத்தி...

வேறு எதற்கும் தன் நினைவை கொடுக்காமல் ... முழுதாய் மூன்று வருட பள்ளி வாழ்க்கையை முடித்து வந்தாள்....

இடைஇடையில் சிவாவும்... சாத்வியை கவனிக்கவும் தவறவில்லை..... அது அரசுப்பள்ளி என்பதால் இதர செலவுகள் மட்டுமே..... பள்ளி முடிக்கும் தருவாயில் சிவாவிற்கு திருமணம் நடந்துவிட...

சிவாவின் வீட்டிற்கு சென்று அக்கா, மாமா.... என அங்கேயும் ஏதாவது ரகளை செய்து, செந்தில் கயல் சரண்யாவுடன் ஏதாவது வம்பு செய்து என தன் தனிமையை மறைக்க கற்றுக்கொண்டாள்....

கஸ்தூரிக்கு ,சிவா நடந்த எல்லாவற்றையும் சொல்லியிருக்க..... கஸ்தூரியும் முடிந்த அளவு சாத்வியை பார்த்துக் கொள்வாள்....

அடுத்ததாக கல்லூரி... வாழ்க்கை ஆரம்பிக்க.....

‘‘ஸ்கூல் படிக்கிற இடத்திலேயே ஒருத்தன் இவ பின்னாடி சுத்தி இருக்கிறான்…

இதில் இவ காலேஜ்கு போனா…. எத்தனை பேர் சுத்தவானுங்களோ …..வேண்டாம்’’ என மறுத்த தந்தையை சட்டை செய்யவே இல்லை...

அப்ளிகேஷன் பார்ம் வாங்கி வந்து ,கையெழுத்து கேட்க…அதை அலட்சியம் செய்து...முறைப்புடன் சென்ற சங்கரை நிறுத்தியது சாத்வியின் வார்த்தைகள்…..

"நீங்க கையெழுத்து போடலைனா… நான் போட்டுப்பேன்…..’’ என அவளும் முறைத்துக் கொண்டு நிற்க…..

"அவ்ளோ தையிரியம் இருக்கா உனக்கு….’’ என மீண்டும் வீட்டினுள் வந்து எகிற…..

கொஞ்சமும் அசரவில்லை சாத்வி…..

"இவ்ளோ நாள் ரிப்போர்ட் கார்டில் நீங்க தான் போட்டீங்களா….. "என பதில் கேள்வி கேட்க…..

பே என விழித்தார் சங்கர்…. அவரின் விழிகளை கூர்மையாக...

"இதிலேயும் என்னால் கையெழுத்து போட முடியும்….ஆனா இது ஸ்கூல் இல்லை பாருங்க….. காலேஜ்…. பேரண்ட்ஸ் வர

சொல்லுவாங்க…..அப்போ உங்ககிட்ட அசிங்கபட முடியாது அதான் இப்போவே சொல்லிட்டு செய்றேன்….’’ என அவர்

பார்த்துக் கொண்டிருக்கும் போதே..... நிரப்பப்பட்ட பார்ம்மில் எஸ் சங்கர் ....என அச்சடித்தார் போல் அவரின் கையெழுத்தை போட.....

அதை எட்டிபார்த்த சங்கர் 'ஙே' என விழித்தபடி நின்றிருந்தார்.....

"பிஎஸ்சி மேத்ஸ் ,எடுத்திருக்கேன்.... பீஸ் இவ்ளோ..... அடுத்தவாரம் அட்மிஷன் போடுவாங்க..... அப்போ வேணும்...." என அதிகாரமாய் சொல்ல...

"நான் சொல்றதை நீ கேட்க மாட்ட.... நீ சொல்றதை மட்டும் நான் கேட்கனுமா.... நான் பீஸ் கட்ட மாட்டேன்...எப்படி படிக்கிறேன்னு நானும் பார்க்கிறேன்...." என வேட்டியை மடித்துக் கொண்டு சீறியபடி சென்றுவிட்டார்......

சாத்வி தந்தையிடமிருந்து எதிர் பார்க்கும் ஒவ்வொரு செயலும் கடைசியில் எதிர் பார்ப்பினை பொய்யாக்கும் தோல்வியில் முடிய..... உள்ளுக்குள் இறுகிக் கொண்டே சென்றாள்....

பள்ளிசெல்லும் காலங்களிலும் இது போல் சின்ன சின்ன சச்சரவுகள் நடந்தாலும் எளிதாய் விலகி வலுபவள்... இதை அவ்வளவு எளிதாக தள்ளவிட முடியவில்லை.... உள்ளே இருந்து அரிக்க தொடங்கியது....

காலேஜில் பார்ம் கொடுக்க சென்றாள்….. பள்ளியை விட்டு சிறகுகள் முளைத்து கல்லூரிக்கு செல்லும் மாணவர்களிடம் இருக்கும் பரபரப்பு ,ஆர்வம், எதுவும் அவள் கண்ணில் இல்லை … , அங்கே தன் வயதை ஒத்த அனைவரிடமும் பார்வை சுழன்றது…. அனைவருடனும், தாய் தந்தை அண்ணன், அக்கா என யாரவது ஒருவர் துணையுடன் வந்திருந்ததோடு…. ஆங்காங்கே நின்று கொண்டு மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டோ….. வம்பிழுத்துக் கொண்டோ இருந்தது மட்டுமே கண்களில் விழ…அதை பார்த்து இகழ்ச்சியாய் தனக்கு தானே சிரித்துக் கொண்டாள்...தான் தனித்து வந்தருப்பதை உணர்ந்து விரக்தி தான் வந்தது…..

அதன் பின் யாரையும் நிமிர்ந்து பார்கசாத்வில்லை... ஆபிஸ் ரூமில் கொடுத்துவிட்டு பின் தனக்கு தேவையானவற்றை மட்டும் கேட்டுக் கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்றுவிட்டாள்…..

இரண்டு வாரம் கழித்து அட்மிஷன் நடக்க, பெற்றோர்கள் கண்டிப்பாய் வரவேண்டும் என்ற நிபந்தனையில் தந்தையின் முன் நின்றாள்….

அவரோ….’’ உனக்கு தேவையானது பணம் தானே….. நான் எதுக்கு "என எகிற….

தன் வாழ்க்கை பற்றிய அனைத்தும் கனவுகளாகவே முடிந்து விடுமா...ஏக்கம் தான் மிஞ்சியது...சாத்விக்கு....

முன்னொருதடவை கல்லூரியில் சிலர் அடித்த கொட்டங்களும்..... அவர்களை ஆரவாரமாய் ரசித்த அவர்களின் பெற்றோர்களும்... என பாசத்திற்காய் ஏங்கிக் கொண்டிருக்கும் அவள் நிலையை அவள் பெற்றோர்கள் உணரவில்லையா.....இல்லை உணராதது போல் நடிக்கின்றனரா... ஏக்கங்களையும் தகர்த்துக் கொண்டு வந்தது அவளின் திமிர்... முதல் முறையாய்.....

சங்கரின் மேல் அழுத்தமான பார்வை மட்டுமே தேங்க... "நீங்க தான் வரனும்... "

"ஏன் உன் அம்மா இருக்கா இல்லையா..... அவளை கூட்டிட்டு போ..."

"நீங்க பர்மிஷன் தராம அம்மா என்கூட வர மாட்டாங்க....."

"பரவாயில்லையே... கட்டினதாவது எனக்கு மரியாதை கொடுக்குதே...அதுவரை சந்தோசம் தான்..."

"இப்போ நீங்க வர முடியுமா....முடியாதா..."

"முடியாது... நான் தேவையில்லைன்னு தானே என்னோட எந்த பேச்சையும் கேட்கலை... ஸ்கூல் போகதேன்னு சொன்னேன்.....கேட்டியா.....? வீட்டிலேயே அடங்கி இருன்னு

சொன்னேன் கேட்டியா...? இதோ இப்போ கூட காலேஜ் வேணாம்னு சொன்னேன் கேட்கலையே.....! பின்ன ஏன் நான் உன் பேச்சை கேட்கணும்...?'' பேசிக் கொண்டிருக்கும் போதே...

வேகமாய் தன் அறையினுள் நுழைந்தவள்.....கண்கள் செவ செவ என சிவந்திருக்க... அழுகை ஒரு சொட்டு கூட வர மறுத்தது.... கண்களை அழுந்த மூடி திறக்க..... அலமாரியும் அதில் குவிந்து கிடந்த நோட்புக்குகளும், டைரிகளும் கண்ணில் பட... இன்னும் அழுத்தமாய் மூடிக் கொண்டாள்..... பின் மனதை சமன்படுத்த வேறு வழியில்லை என மூளை கூற... விட்ட பக்கத்தில் இருந்து தொடர்ந்தாள் ஸ்ரீ ராம ஜெயத்தை...

ஆம் இன்னமும் அவள் அதை நிறுத்தவில்லை..... பெற்றோர்களிடம் படும் துன்பம் குறைந்தால் அல்லவா, அவள் எழுதுவதும் குறைவதற்கு...

எப்போதும் அதிகமாய் போனால் பத்து பக்கங்கள் வரை மட்டுமே எட்டும் அவள் மந்திரம்..... இந்த முறை நேரங்காலம் தெரியாமல் எழுதிக் கொண்டிருந்தாள்.....

பேனாவை பிடித்து இருந்த இரு விரல்களும் வலிக்க ஆரம்பிக்க... பேனாவை அப்படியே போட்டுவிட்டு விரல்களை பார்க்க..... பேனாவின் தடம் அப்படியே கூறியது அவளின் மன அழுத்தத்தை.....

இன்னுமும் குறையாத மன அழுத்தம்...

தன்னுடன் பயிலும் தோழிகள் பலருக்கு , அதிலும் கயலுக்கும் சரண்யாவிற்கும் அந்த கல்லூரியிலேயே இடம் கிடைக்க…. மனம் வேதனையில் சுருங்கியது…கயல் சரண்யா செந்தில் என. எல்லோரும் வீட்டிற்கே வந்து அவளது தந்தையிடம் கூறி….. "சாத்விக்கு ரெகுலர் லயே கிடைச்சிருக்குப்பா… இன்றைக்கு அவட்மிஷனுக்கு வரலைனா…. அவ சீட் வேற யாருக்காவது போய்டும்பா…..'' என சங்கரை வற்புறுத்தி அழைத்து வந்தனர் கல்லூரிக்கு…

கடு கடு முகத்துடன் சென்று அட்மிஷன் போட்டு சொல்லாமல் கொல்லாமல் வெளியேறி சென்றுவிட… உதடுகள் ஏளனமாய் வளைய….அவளும் பின்னேயே சென்றாள்… உடன் வந்த நண்பர்களை மறந்து… தந்தை முன்னே செல்ல…. மகள் பின்னே சென்றார்… மகளை வழி நடத்தும் தந்தை….. என நக்கலாய் இபழ்ந்தது சாத்வியின் இதழ்கள்…

ஆனால்…..நடத்தும் வழி வேறல்லவா…..

கல்லூரி தொடங்க இன்னும் இரண்டு நாட்கள்….. ஆனால் தேவையான ஒரு பொருள் கூட வாங்கவில்லை….. வாங்கி கொடுக்கபடவில்லை….

கவலையை விட அவமானமாய் இருந்தது…

சொல்லி வைத்தார. போல் சிவா வந்தான்…..இரண்டு மூன்று பைகளுடன்….. "மாமா….. மாமா…..'' என அழைக்க….

"வாங்க மாப்பிள்ளை…. வாங்க…..'' சங்கர் உள்ளிருந்து வர, மகா சத்தம் கேட்டு வெளியே வந்தார்….

"சாத்விக்கு இன்னும் இரண்டு நாளில் காலேஜ் ஆரம்பிக்குதாம், கஸ்தூரி எல்லாமே பார்த்து பார்த்து வாங்கி கொடுத்துவிட்டிருக்கா…..'' என கைகளில் இருந்த பையை எடுத்துக் காட்ட...

"உள்ளே தான் இருக்கா…. நீங்களே கொடுத்திடுங்க…..'' என சங்கர் விலகிக் கொள்ள….. மகா சிவாவின் கையில் இருந்த பைகளை பார்த்து கூனி குறுகி போனார்...

மகளுக்கு பார்த்து பார்த்து செய்ய வேண்டிய தருணத்தில் யாரோ ஒருவர் வாங்கி தரும் நிலையில் இருக்கிறாள்….. என மகாவும் உள்ளே சென்றுவிட… தோள்களை குலுக்கியபடி சாத்வியை அழைத்து அவள் கைகளில் திணிக்க…..

பிரித்து பார்த்தவள்….. "சத்ரி வாங்கிக் கொடுத்தானா மாமா….'' என கேட்க….

ஒரு நிமிடம் அதிர்ச்சியானான் சிவா…. அவன் ஊரை விட்டு சென்று மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும்…..

சத்ரியை தேடும் அவளை கண்டு சிவாவின் மனதில் பரிதாபமே ஏழ….. "கஸ்தூரி வாங்கிக் கொடுத்தா மா….'' என கூற…. அவளுக்கு நிறை மாசம் இல்லையா… அதான் நான் வந்தேன்…..'' என அவளின் தலையை வருடி…..

"நல்லா படி….. படிச்சு நல்ல வேலைக்கு போ…..''என இலேசாய் ஆறுதல் கொடுக்க….

சரி என்ற தலையசைப்பு தான் வந்தது…

கல்லூரி செல்ல தேவையான அனைத்தும் கூடவே சில ரூபாய் தாள்களும் இருந்தது…

எப்படியோ கல்லூரி செல்ல ஆரம்பித்தாள்….. கல்லூரி பேருந்து என்பதால் அதற்குரிய கட்டணமும் சேர்ந்தே அட்மிசனில் செலுத்தி இருக்க… கவலை இல்லாமல் செல்ல ஆரம்பித்தாள்…..

ஆனால் அடுத்த மாத மாதத்தலிருந்து மகாவே அவளிடம் சில ரூபாய் தாள்களை கொடுக்க……. மறுத்துவிட்டாள் சாத்வி…

வலுக்கட்டாயமாய் அவளின் பேக்கினுள் வைத்துவிட்டாள்…

அதிலிருந்து மகாவே அவளின் செலவுக்கு உதவி செய்தாலும் கணக்கு வைத்துக் கொண்டிருந்தாள் சாத்வி …..மகாவிற்கு தெரியாமலேயே….

கயல் மட்டுமே அவளுடன் மேத்ஸ் எடுத்திருக்க…. சரண்யா….கெமிஸ்டரி டிபார்ட்மெண்டில் இருக்க..

செந்தில் வேறு கல்லூரியில் இருந்தான்…

நால்வரும் சந்திப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை…..

கல்லூரியில் பேங்க் கோச்சிங் வகுப்புகள் வாரத்தில் இரு தினங்கள் மட்டும் இலவசமாய் நடத்த ,அதில் சேர்ந்து

கொண்டாள்….. அதற்கு காலேஜ் லைப்ரேரியை உபயோகப்படுத்திக் கொண்டாள்...

கல்லூரி பேருந்தில் ஒன்றாக வரும் சரண்யா சில நாட்களாக அசெண்ட்மெண்ட் என்ற பெயரில்... கம்யூட்டர் சென்டர் சென்று வர…. துணைக்கு சாத்வியும் கயலும் செல்ல ஆரம்பித்தனர்…...

ஒரு வாரம் என்றிருந்த அசைண்ட்மெண்ட் இரு வாரங்கள் கடந்த நிலையில்... தினமும் அதுவே பழக்கமாக…

"வர வர ரொம்ப லேட் ஆகுது…. சரண்யா…. அப்படி என்ன தான் அசைண்ட் மெண்ட் பண்றியோ…..’’ என சாத்வி காத்திருந்த கடுப்பில் கேட்க….

"டெய்லியுமா அசெண்ட் மெண்ட் குடுக்குறாங்க….. அது அன்னைக்கே முடிஞ்சது….. சும்மா பேஸ்புக் பாத்திட்டு இருந்தோம்….. உன்னையும் சேர்த்து விடறோம்….’’ என மறுநாள் அவளையும் கம்யூட்டர் சென்டர் உள்ளே அழைத்து செல்ல… கயலும் சேர்ந்து கொண்டாள்…..

"ஓ… இது தான் பேஸ்புக்கா….’’ என தோழியிடம் கேட்க…..

அவளுக்கும் அக்கவுண்ட் ஆரம்பித்து, அவர்களது ப்ரண்ட்ஸ் க்ரூப்பில் சேர்த்து விட…….

ஏனோ தானோ என தினமும் நோண்டிக் கொண்டிருப்பவள்….

இதில். என்ன கர்மம் இருக்குன்னு….. டெய்லி பார்க்குறாங்களோ….. என நாடியில் முட்டுக் கொடுத்த படி கம்யூட்டர் ஸ்கீரினை வெறித்து பார்த்தபடி , மௌசை ஸ்க்ரோல் செய்தபடி வெறுப்பாய் அமர்ந்திருந்தாள்…..

அவளை அழைத்த சரண்யா….

"ஏய் சாத்வி… செந்திலுக்கு ஒரு ப்ரண்ட் ரெக்வெஸ்ட் போடுடி….. இரண்டு வாரமா கேட்டுட்டு இருக்கான்…..'' என கூற…

"இது ஒன்னு தான் அவனுக்கு குறையா இருக்கா…'' என சலித்தபடி…..

"நீயே பண்ணு தாயி…. எனக்கு ஒன்றும் தெரியலை'' என சாத்வி ஒதுங்க…..

"ஏய், இந்த செர்ச் பாக்ஸில் செந்தில் பேரை டெப் பண்ணுடி….. அந்த மொகரையோட போட்டோ இருக்கும்….. பார்த்து ரெக்வஸ்ட் சென்ட் பண்ணு…..'' என கயல் கவனமாய் சொல்லிக் கொடுக்க….

அவள் செய்தபடியே செய்ய…. செந்தில் என்ற பெயரில் இருக்கும் அனைவரும் லிஸ்டில் வர… ரிக்வெஸ்ட் அனுப்பாமல்…..

'சர்ச் ப்ரண்ட்ஸ் 'என்றருந்த பாக்ஸை வெகு நேரமாய் பார்த்துக் கொண்டிருந்தவள் கைகள் தானகவே…..'' செந்தில் "என்ற பெயரை டெலிட் செய்து...

''சத்ரியன்'' என்ற பெயரை அடிக்க…. வந்து குவிந்தன… நிறைய சத்ரியன்கள்…..

காட்டிய அத்தனை பெயர்களிலும்…. சத்ரியை தேடினாள் சாத்வி….. சிறு வயதில் பார்த்தது…

ஒவ்வொருவரையும் உற்று உற்று பார்த்தாள் சாத்வி…. இவனா…இல்லை இவனா...

இல்லையே சத்ரி லட்சனமா இருப்பான்….

இந்த பக்கிக்கு மூக்கு சப்பையா இருக்கு….

இவனுக்கு வாயே சப்பையா இருக்கு…..

இந்த முகறைக்கு சத்ரியன்னு பேரா...

என பார்த்த ஒவ்வொருவரையும் நக்கல் செய்து கொண்டே வந்தவள்…..' சி மோர் ரிசல்ட்ஸ் 'என்ற பட்டனை பல முறை தட்டிய பின்…..

அவளின் சத்ரி அவள் கண்களுக்கு விருந்தாய் கிடைத்தான்…..

சிறுவயதில் அவள் இருந்தாலும், ஊரை விட்டு செல்லும் போது கல்லூரி இரண்டாம் ஆண்டில் இருந்ததால், அவன் முகத்தை தற்போது அவளால் அடையாளம் காண முடிந்தது….

அலையாயாய் பறந்த கேசம், அதை ஒரு கையில் அடக்கியபடி, பற்கள் பளீரிட சிரித்த அவன் முகம், பிளாக் டிசர்ட் போலும், கழுத்து வரை மட்டுமே தெரிந்தது அவன் உருவம், கண்கள் மிகக் கூர்மையாய்...

பளபள வென இருக்க... நீட்டாக ட்ரிம் செய்த லேசான தாடி... பளீரிட்ட அவனது புன்னகை... என செதுக்கிய சிற்பமாய் பதிந்து போனான் சத்ரி...... சாத்வியின் மனதில்.....

# அத்தியாயம் 18

**ச**த்ரியை இப்படி நிலையில், பார்ப்போம் என ஒரு நொடி கூட நினைத்ததில்லை சாத்வி….. அப்படி ஒரு பரவசம் ….

சிறு வயதில் தனக்கு தாயாய் தந்தையாய் தோழனாய் இருந்தவன் இடையில் விட்டு சென்றபின் , அந்த வயது பிரிவை எண்ணி வருத்தம் கொண்டது என்னவோ உண்மை...

ஆனால்…..’எப்போதும் தன்னுடன் வரும் உறவல்ல அவன்... அப்படி ஓர் உறவு அமைந்தாலும் அதை தொடரும் நிலை இருவருக்கும் அமையவில்லை….. 'என்ற நிதர்சனம் உரைக்க...

'அவ்வளவு தான் இனிமேல் சத்ரி வரவே மாட்டான்' என நினைத்துக் கொண்டாள் சாத்வி…. அவனுடனான, தோழமையான காலங்களை, அவள் செல்லும் ஒவ்வொரு இடமும் கூறினாலும்,….. அது ஓர் அழியாத நினைவாய் பதிந்து போனது அவளின் மனதில்...

ஆனால் மீண்டும் அவன் வேண்டும் என்ற ஏக்கம் வர விடாமல் தடுத்ததும் சத்ரியின் வார்த்தைகளே…..

"உன்னோட உணர்வுகளுக்கு எந்த ஒரு வடிகாலும் தேடாதே…..’’ என்ற வார்த்தைகள் அழுத்தமாய் மனிதல்

பதிந்திருக்க….. அவனை தன் கடந்த கால நினைவடுக்கில் அமர்த்திக் கொண்டு….. நிகழ் காலத்தை அவன் நினைவுகளுடனே கழித்தாள்…

ஆனால் இவ்வளவு அழுத்தமாய் தன் மனிதில் அமர்ந்திருக்கிறான் என அவனது ஒற்றை நகல் காட்டிக் கொடுக்க… ஆட்டம் கண்டது அவள் இதயம்….

தோழனாய் இருந்தவனை இத்தனை வருடங்கள் கழித்து , காதலனாய் தன் மனதில் உருக்கி வைத்துக் கொண்டது அவள் மனம்…

சிறு வயது முதல்….. தன்னை நீங்கிய நாட்கள் வரை……. மீண்டும் ஓர் நினைவலையில் , சாத்வியை அடித்து சென்றான் சத்ரி…..

அவனை பார்க்க வேண்டும் போல் ஓர் ஆவல்,…..பேராவல்…

"என்னை தனியா விட்டுட்டு போய்ட்டேலே…"

"ஏண்டா போன…."

".எதுக்குடா போன…." என அவனிடம் இருக்கும் கோபத்தை அவனிடமே காட்டும் வெறி……

சத்ரியின் மீதான அன்பு அதிகமா, இல்லை கோபம் அதிகமா என இரண்டையும் பிரித்தறிய முடியா நிலை…

சத்ரியையே வெகு நேரமாய் பார்த்திருந்தாள் சாத்வி..., புதிதாய் ஓர் உணர்வு .....

‘சத்ரியின் கண்களின் ஈர்பினாலா.....பளிறிட சிரித்த சிரிப்பினாலா... இல்லை எப்போதும் அவன் முகத்தினை சந்திக்கும் போது கிடைக்கும் அமைதியா..... இல்லை...

, என நிறைய "இல்லை "..... இல்லாமலே போனதலா..... 'என ஸ்கீரினில் தெரிந்த அவன் முகத்தை வெறித்து பார்த்தபடி இருந்தாள்...

சிறிய ஸ்னாப்பாக பார்த்தது போதாது என அதை பெரிதாக்கி பார்க்க.... இன்னும் ஆணழகனாய் இருந்தான்...

வேறு போட்டோகள் இருகின்றனவா....? என சாத்வியின் கைகள் தேட....

'ஆல்பம்' 'ப்ரபைல் பிக்ச்ர்ஸ்' 'போட்டோஸ்' என ஒவ்வொன்றாய் நோண்ட ... எக்கசக்கமான போட்டோக்கள்... ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு..... அழகான உடைகளிலும் அழகு, அழுக்குச்சட்டையிலும் பேரழகு...

பைக் ஒன்றில் ரிப்போர் பார்ப்பது போன்றதொரு போஸ்... காக்கி உடை, அது ஆங்காங்கே கீரிஸ் கரையுடன்... இருந்தது...

"அழுக்குச்சட்டை போட்டாலும்.... அழகாய் தெரியும் ஆணழகன் இவனோ...’’ என்ற பாடல் வரிகளை தாமகவே அவள் இதழ்கள் ஹம் செய்ய...

சாத்வியின் பார்வை பளபளத்தது... தொடர்ந்து வேறு வேறு ஸ்னாப்களை பார்த்துக் கொண்டிருந்தாள்....... அள்ள அள்ள குறையாமல் கிடைத்த பொக்கிசத்தை கண்களில் நிரப்பிக் கொண்டாள்... சாத்வி...

வெகு நேரம் அமர்ந்திருந்தாள் சத்ரியை பார்த்தபடி... "ஏய் ,நேரமாச்சுடி.... வாடி....." என சரண்யாவும் கயலும் அழைத்த பின்..... 'இவளுங்க பார்த்தா அவ்ளே தான்...' என சட்டென லாக்அவுட் செய்து கிளம்பினாள்...

வீட்டிற்கு வந்தவளுக்கு சத்ரியின் ஞாபகங்களே... எப்போதும் துன்பங்களை குறைக்க "ஸ்ரீராம ஜெயம் எழுதுபவள்... அன்றும் அதையே கடைபிடிக்க.... சத்ரியின் பரிணாமங்கள் அவளுக்குள் பிரவாகமாய் எழ.....

மனம் நிறைய மகிழ்ச்சி சந்தோஷம் மட்டுமே முழுதாய் நிறைய..... முகம் அதை அப்படியே காட்டிக் கொடுத்தது.....

புன்னகை தானாகவே உதடுகளில் தவழ... எழுதி முடித்து மீண்டும் அதை புரட்டி பார்க்க... 'மகிழ்ச்சியை எழுத்துக்கள் கூட பிரதிபலிக்குமா...? 'என தனக்கு தானே கேட்டுக் கொண்டாள்..... அவ்வளவு அழகாய் நிதானமாய் குண்டு குண்டு எழுத்துக்களால் நிரப்பி இருந்தாள்..... பார்ப்பதற்கே அவ்வளவு அழகாய் இருக்க..... டைரியை பட்டென மூடி இரு கைகளாலும் அதை மேல் நோக்கி எறிந்து அதே மகிழ்ச்சியுடன் பிடித்து, கட்டிலில்

பொத் என விழுந்து.... டைரியை இறுக்கமாய் கட்டி கொண்டாள்...

கண்களை மூடிக் கொண்டவளுக்கோ.... உலக சாதனையே புரிந்தார் போல் அப்படி ஓர் உணர்வு.... சொல்லில் அடங்கா உணர்வுகள்.... தனக்குள்ளா...? என தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள்... 'வேண்டாம் என விலக்க முடியாமல்....' இந்த உணர்வுகள் பிடித்திருக்கிறது...' என தனக்குள்ளே புதைத்துக் கொண்டாள் தன்உணர்வுகளை...

மறுநாளில் இருந்து துள்ளி குதித்தோடும் மான்குட்டியாய் எதிலும் ஓர் புத்துணர்வை காட்ட..... அவளின் தாய் மகாவில் இருந்து, செந்தில் வரை அவளை வித்யாசமாய் பார்க்க..... அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் படிப்பில் முழு வேகத்தில் இறங்கினாள்..... அது வரை ஏனோ தானோ வென படித்து வந்தவளுக்கு ஓர் உத்வேகம

மறுநாளில் இருந்து துள்ளி குதித்தோடும் மான்குட்டியாய் எதிலும் ஓர் புத்துணர்வை காட்ட..... அவளின் தாய் மகாவில் இருந்து, செந்தில் வரை அவளை வித்யாசமாய் பார்க்க.....

அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் படிப்பில் முழு வேகத்தில் இறங்கினாள்..... அது வரை ஏனோ தானோ வென படித்து வந்தவளுக்கு ஓர் உத்வேகம் பிறக்க... எதிலும் வேகம்.... விவேகம் தான்....

அதை பார்த்து சரண்யாவும் கயலும் கூட..... "ஏய், பேய், கீய் எதுவும் பிடிச்சுடுச்சாடி... ஒரு மார்க்கமா இருக்க... "என கிண்டல் கூட செய்ய.....

அவர்களிடம். அழகாய் நழுவி....."

சத்ரி டைய்லி உன் போட்டோவை பார்க்குறதுக்கே இந்த எஃபக்டா... "

"உனக்கு சத்ரியன்னு பேர் வைக்கிறதுக்கு, பூஸ்ட், ஹார்லிக்ஸ்ன்னு பேர் வச்சிருக்கலாம்... என்ன எனர்ஜி.....என்ன எனர்ஜி....."

என தனக்குள்ளே அவனை கிண்டலும் செய்து கொள்ள... பிடிப்பில்லாமல் கழிந்த பள்ளி வாழ்க்கையை ஈடு செய்யும் அளவு இருந்தது கல்லூரி வாழ்க்கை...

அன்று முதல் அவன் நகலுடன் தினமும் பேச்சு வார்த்தை நடத்தாமல் , சாத்விக்கு முடியாது அந்த நாள்... இப்படியே ஒவ்வொன்றாய் சத்ரியை பற்றிய தகவல்களை தேட.....

அவன் இருக்கும் இடம் ,பார்க்கும் வேலை என அனைத்தையும் பேஸ்புக்கே காட்ட... பேஸ்புக்கை இத்தனை நாள் கழுவி கழுவி ஊற்றியவள்..... இன்று அதற்கு கோவில் கட்டினாலும் தப்பில்லை என்ற நிலைக்கு வந்திருந்தாள்...

அவனுக்கு ரெக்வஸ்ட் அனுப்பி.... அவனுடன் உரையாட வேண்டும், போன் நம்பர் வாங்கி அவனுடன் பேச வேண்டும்.....

என மனது அடம்பிடிக்க…. ஒரு நாள் . "ஆட் ப்ரண்ட்’’ என்ற பட்டனை தட்ட போன கைகள் அப்படியே...நின்றது மூளை இட்ட கட்டளையில்………

'உன்னை அம்போன்னு விட்டுட்டு போனவன் தானே…. அவன்…… நீ என்ன செய்ற, எப்படி இருக்கிறன்னு தெரிஞ்சுக்க கூட இந்த ஊர்ப்பக்கம் வரவே இல்லை அந்த தடிமாடு...அவனெல்லாம் உனக்கு பிரண்டா 'என ஸ்கீரினில் தெரிந்த சத்ரியின் மூக்கை குறி வைத்து லேசாய் குத்தி... "போடா…. நான் உனக்கு ரெக்வஸ்ட் கொடுக்க மாட்டேன் போடா….’’ என அவனின் நிழலுடன் பேசிக் கொண்டிருந்தாள்….. சாத்வி…..

இது தினமும் தொடர்ந்தது...

விதவிதமான பல மாடல் பைக்குகளில் பல வித ஸ்டைல்களுடன்….. அங்கு வேலை செய்பவர்களுடன்... பல விதமான தோரனைகளுடன் என இருந்த அத்தனை போட்டோகளிலும் கம்பீரமாய் இருந்தான் சத்ரி...

அனைத்து போட்டோகளையும் 'சேவ்' செய்து தன் மெயிலுக்கு பார்வேர்ட் செய்து நேரமாவதை உணர்ந்து கிளம்பினாள்….

அன்றிலிருந்து தினமும் அவனது பேஸ்புக் அக்கௌண்டை பார்க்காமல் விட மாட்டாள்….

'ரெக்கோஸ்ட் 'அனுப்பிட மனமும் கைகளும் துடிக்கும்…. கோபம் ஒரு புறம் என்றாலும், சத்ரி இதை எப்படி எடுத்துக் கொள்வான்... கண்டிப்பாய் தன்னை கண்டிப்பது உறுதி... முன்பு போல் சாதாரணமாய் அவனிடம் பேச முடியாது...

மேலும் . தன்னை கண்டு கொள்வான் என தனக்கு அறிமுகமான உணர்வுகள் அவளுக்கு பயத்தை கொடுக்க... அப்படியே அந்த நினைவை கைவிட்டாள்….

தினமும் அவனது 'போஸ்ட்டுகள்''…'' நண்பர்கள், 'அவன் ஒவ்வோன்றிருக்கும் போடும் கமெண்டுகள், அதற்கு ரிப்ளை அனுப்புவது என….. .அதனை எல்லாம் ஒரு குறு நகையுடன் பார்த்து ரசிப்பாள், மற்றபடி அதற்கு கமெண்டுகள் போடுவதோ, லைக் பண்ணுவதோ எதுவுமே இருக்காது…..

சப்பென சென்று கொண்டிருந்த சாத்வியின் கல்லூரி வாழ்க்கையில் சத்ரியின் நகல் கூட அவருக்கு சுறு சுறுப்பை கொடுக்க….. முகத்தில் அவ்வளவு பரவசம் இருக்கும்…. ஏதோ இத்தனை வருடம் இழந்த சந்தோசம் எல்லாம் ஒரே நொடியில் மீட்டெடுத்தாற் போல் அவ்வளவு பரவசம்…..

வீட்டில் நடக்கும் சிறு பிரச்சனைகளை கூட அவனுடன் தினமும் பேச…..மனதிலிருந்த பாரம் குறைவதாய் தெரிய….. மகிழ்ச்சியாய் அவனை பார்க்கவென்றே , அவனுடன்

பேசவென்றே... தினமும் சரண்யாவுடன் ப்ரவுஸிங் சென்டர் செல்ல ஆரம்பித்தாள்.....

"ஏய், பெரிசா பேஸ்புக்கே பிடிக்கலை பிடிக்கலைன்னு சொல்லிட்டு.... நீ தாண்டி இப்போ லேட்டா வர்ற....'' என சரண்யா கிண்டல் செய்ய கூட ஆரம்பித்தாள்.....

ஆயிற்று இந்த மூன்று வருட கல்லூரி வாழ்க்கையில் எழுதாத பேங்க் எக்ஸாம் இல்லை....

ஒவ்வொரு முறை ரிசல்ட் வரும் போதெல்லாம் , ஒன்று, இரண்டு மார்க்குகளின் வித்யாசத்தில் ,அவளுக்கு வேலை கிடைப்பது தள்ளி போக.... அதிலும் ஒரு வெறுப்பு வர....

ஒரு நாள் பேஸ்புக்கில் அன்று புதிதாய் அப்லோட் செய்தருந்த போட்டோவை பார்த்து.....

"சத்ரி , பைனல் இயர் வந்துட்டேண்டா... இது வரை எழு எட்டு பேங்க எக்ஸாம் எழுதிட்டேன்... இது நான் எழுத போற கடைசி பேங்க் எக்ஸாம்... இதுலையாவது நான் பாஸ் பண்ணனும்..... பண்ணியே ஆகனும்... இல்லை.... இல்லை...... நீ செத்தடா.....'' என அவனது நகலிடம் புலம்பிக் கொண்டிருந்தாள் சாத்வி.....

துன்பங்களை குறைத்து மகிழ்ச்சியை அதிகரிக்க செய்யும் "ஸ்ரீ ராம ஜெயமிடம் மீண்டும் சரண் புகுந்தாள்...

. அடுத்த எக்ஸாமிற்காய் வேண்டுதலோடு எழுத ஆரம்பித்தாள்….

சத்ரி கொடுத்த சுறு சுறுப்பா…..

அவளின் உத்வேகமா…

வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற இறுமாப்பா…

பெற்றவர்களின் முன்பு தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற இலட்சியமா…..

இல்லை எல்லாவற்றையும் மீறிய… ஆஞ்சநேய பக்தியினாலா… என ஏதோ ஒன்று அவளுக்கு உறுதிணையாய் இருக்க

கடைசி எக்ஸாமில் பாஸ் செய்து விட…. அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை…

இன்டெர்வீயுக்கு கூட தானாகவே சென்று வர… அதிலும் வெற்றி தான்…..

வீட்டிற்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்தது…ஆனால் போஸ்டிங்…..

திருச்சி அல்லது மதுரை என்றிருக்க… கவலை படுவதற்கு பதில் , ஆனந்த தாண்டவம் ஆடியது…..மதுரை தான் அருகில் என்றாலும்… விரும்பி திருச்சியை தேர்வு செய்தாள்…. சத்ரியை பார்க்கும் ஆசையுடன்…

தந்தையிடமும் தாயிடமும் வேலை கிடைத்ததை ஆசையாய் சொல்ல.... சங்கர் முகத்தை திருப்பி....'' நாங்க சொல்வதை எங்கே நீ கேட்கிற...

உனக்காக மாடா உழைச்சு..... உன் கல்யாணத்துக்காக சேர்த்து வச்சு... நீயாவது எங்க பேச்சை கேட்டு கல்யாணம் பண்ணி ஊருக்குள்ளே தலை நிமிர வைப்பன்னு நினைச்சேன்... உன்னை வளர்த்து பெரியாளாக்கினது எங்க தப்பு தான்... போ... எங்கேயும் போ...... எக்கேடு கெட்டும் போ.....'' என அவளை அனுப்பி விட....

இதற்கும் கவலை இல்லை..... 'எதிர்பார்த்தேன்' என்றொரு முறுவல்...

மகாவிற்கு எவ்வளவு கோபம் இருந்தாலும் அவளை தனியே அனுப்பிட மனம் துடிக்க தான் செய்தது... அவர் பேச வரும் முன்பே சாத்வி முந்திக் கொண்டாள்...

''கடவுள் கொடுத்த வரத்தை......... என்னால் எட்டி உதைக்க முடியாது...,போதும் இந்தளவுக்கு என்னை வளர்த்து 'பெரிய்யயயய' ஆளா ஆக்கினதே போதும்... இனியும் எனக்காக நீங்க 'மாடா' உழைக்க வேணாம்... என்னை நானே பார்த்துப்பேன்... "பேசி முடித்தவளின் மனதில் ஏதோ பாரம் ஏறிய உணர்வு.....

அதே நேரம் கூண்டை விட்டு பறக்கும் பறவையின் சந்தோசம்.... இரு உணர்வுகளையும் சிறிதும் வெளிக்காட்டவில்லை சாத்வி..... இதோ கிளம்பி விட்டாள்..

லேடீஸ் ஹாஸ்டல் ஒன்றில் தங்கியிருந்தாள்..... பேஸ்புக்கில் கண்ட சத்ரியை நேரிலேயே தேடிப் போனாள் சாத்வி அவனின் கடைக்கே...

“பைக்கர்ஸ் பாய்ண்ட் "என்றிருந்த அந்த விஸ்தாரமான கடையை அளந்தபடியே சென்றாள்......

"இங்கே சத்ரியன்...” என அடுத்து என்ன கேட்பது என தெரியாமல் விழித்தபடி கேட்க....

"அண்ணா.... ” என ஒருவன் குரல் கொடுத்து "உள்ளே போங்க , அண்ணா அங்கே தான் இருப்பாங்க...” என அவளை அனுப்ப...

அந்த அழுக்கு சட்டை ஆணழகன் அவள் முன் தரிசனம் தந்தான் அசால்ட்டாய்........ கண்கள் விரிய பார்த்திருந்தாள்....

.” என்ன மேடம்.... பைக் எதுவும் ஆல்ட்ரேசன் செய்யனுமா, இல்லை ரீ மாடலிங் பண்ணனுமா...” என சாதாரண கஸ்டமரை விசாரிப்பது போல் கேட்க.....

"இல்லை "என தலையசைப்பதற்குள்...

"அண்ணா இங்கே வெல்டிங் வைக்க முடியலை...'' என உள்ளிருந்து இன்னொருவன் சத்தம் கொடுக்க...

"வெயிட் பண்ணுங்க...'' என உள்ளே சென்று பல நிமிடங்கள் கழித்து வெளியே வர..... சாத்வி அங்கிருந்து கிளம்பி இருந்தாள்...

சத்ரியும் கண்டு கொள்ளவில்லை "வேண்டும் என்றால் மீண்டும் வர போகிறார்கள்.....'' என தோள்களை குலுக்கி சென்று விட்டான்.....

சத்ரிக்கு நிஜமாகவே அடையாளம் தெரியவில்லை..... ஏற்கனவே ஒன்பாதம் வகுப்பில் பார்த்தவன், அப்போது மூன்று வருடம், கல்லூரி மூன்று வருடம்....'' என ஆறு வருடங்களில் சாத்வியின் குழந்தை முகம்... பருவ வளர்ச்சியினால் இப்படி அழகியாய் மாறி தன் முன் வந்து நிற்பாள் என கனவா கண்டான்....

மேலும் ஏற்கனவே வெல்டிங்கில் இருந்ததாலும், வெளியே அடுத்த வெயிலினாலும்.... கூசிய கண்களை சுருக்கியபடி குத்து மதிப்பாய் அவளை பார்த்து பேச... அவள் முகத்தை சாதாரணமாய் பார்த்தவனுக்கு சத்தியாமாய் அடையாளம் தெரியவில்லை...

ஆனால் "பார்த்த அடுத்த நொடி தான் எப்படி அடையாளம் கண்டு கொண்டோம்.... ஆனால் என்னை அவனுக்கு

தெரியவில்லையே அந்தளவுக்கா தன் முகம் மறந்துவிட்டது……..'' உயிரோடு சாவதென்றால் இப்படி தான் வலிக்குமா…..எண்ணங்கள் தறிகெட்டு ஓடியபடி ஹாஸ்டல் வந்தவளுக்கு இதயமே உடையும் உணர்வு….. அழுகை வெடித்து சிதறியது…

வெகு நேரம் கழித்து எழுந்தவளுக்கு மீண்டும் சத்ரியின் வார்த்தைகள் தான்… "உன்னோட எந்த உணர்வுக்கும் வடிகால் தேடாதே'' என அசரீரியாய் ஒலித்துக் கொண்டே இருக்க… அன்றிலிருந்து கல்லாய் இறுகிப் போனாள்…

ஆனல் உயிர் வாழ…உணவு ,மூச்சு காற்று, போன்ற அத்தியாவசியங்களுடன் தானாகவே சேர்ந்து கொண்டது சத்ரியின் பேஸ் புக் தரிசனங்கறும்… உணர்வுகள் உடையும் நேரங்களில் எழுதும் "ஸ்ரீராம ஜெயமும்…..''

இண்டையும் அவள் வாழ்க்கையில் இணைத்துக் கொண்டாள்…

பேங்கில் ஜாயின் செய்து யாருக்காக தான் வாழ்கிறோம் என தெரியாத ஓட்டம்…..

அடுத்தும் சில வருடங்கள் கடக்க…. கிளார்க்கில் இருந்து பி.ஓ அடைந்தாள்….. அடுத்தடுத்து எக்ஸாம்களில் தேர்ச்சி பெற்று…..

ஊரில் இருந்தவரை கவலை தோய்ந்த முகத்துடன் வருபவள்….. வேலை என்றானபின், புதிதாய் சிறகு முளைத்த பறவை போல் உணர்ந்தாள்….ஆனாலும் எதிலோ தோற்ற உணர்வு….

அங்கே சத்ரியோ…. ஊரில் இருந்த வந்த இத்தனை வருடங்களில் தனக்குரிய பைக் மாட்லேசன் துறையில் தனி முத்திரையை பதித்திருந்தான்…..

பைக் ரீமாடலிங் போக…. குழந்தைகளுக்கான பைக்குகள், மாற்று திறனாளிகளுக்கான பைக்குகள்….. என அவர்களையும் விட்டு வைக்காமல் தன்னுடைய தனித்தன்மையால் இழுத்துக் கொண்டிருந்தான்….சத்ரி...

அவனின் திறமைகள் அங்கே பணமாய் உருப்பெற்றுக் கொண்டிருக்க…..

"அப்பா….. பணம் தாராளமா புழங்குது, ... போன வாரம் தான் கட்டின வீடு ஒன்னு விலைக்கு வருது….. பேசவா பா….’’

"உனக்கு சரின்னா பார்த்திடுபா…’’ என விநாயகமும் சிவகாமியும் கூற…

அடுத்த இரு வாரங்களில் வீட்டை வாங்கி…. கிரகபிரவேஷமும் செய்ய….வீட்டை பார்த்த இருவருக்குமே பேரானந்தம் தான்…. ஊரை விட்டு வரும் போது இல்லாத பணம் இப்போது கை நிறைய இருக்க….மகிழ்ச்சியாய் வலம்

வந்தனர்... ஆனாலும் மூத்தமகனை பற்றி பேசாத நாட்கள் இல்லை.... அவ்வப்போது சத்ரியிடம் விசாரிக்கவும் தயங்கவில்லை...சத்ரியோ கண்டும் காணாதது போல் கடைக்கு சென்றுவிடுவான்... தன்னுடைய மகிழ்ச்சியே அங்கே தான் என்பது போல்......

அவனுடைய பைக்கர்ஸ் பாய்ண்டில் வேலை பார்க்கும் அனைவருக்கும் கை நிறைய சம்பளம், வாரம் ஒரு நாள் விடுமுறை, வருடத்திற்கொரு முறை எங்காவது சுற்று பயணம்..... என அவனுடன் வேலை செய்த அனைவருடனும் உணர்வுப் பூர்வமாய் கலந்தான்....

அப்படி ஒரு நாள் சுற்றுலா சென்ற இடத்தில் தான் ( பெங்களூரில்) வெங்கட்டையும் கிருத்திகாவையும் பார்த்தது....

பசங்களுடன் மால் வந்தவனின் கண்களில் பட்டது... வெங்கட்டும் அவனுடன் வாதம் செய்து கொண்டிருந்த ஒரு சிறிய பெண் குழந்தையும்......

"இதெல்லாம் ரேட் ஜாஸ்தி மா... "என்ற வெங்கட்.... கொஞ்சம் நடுத்தர விலையில் இருந்த மற்றொரு டெடி பியரை காட்டி.'' இது வாங்கிக்கலாமா'' என கேட்க...

"அப்பா... எனக்கு பெரிய டெடி தான் வேண்டும்'' என அங்கிருந்த பெரிய டெடியை காட்டி... கொஞ்சம் சப்தமாய் கேட்ட காவ்யாவும் கண்களில் பட்டனர்.....

பார்த்த சத்ரிக்கோ….. நலிந்த்தோற்றத்துடன் இருந்த வெங்கட்டும்… ஆசை மிளிற பெரிய டெடியை பார்த்துக் கொண்டிருந்த சிறு பெண் குழந்தையும் தான்….. அவனின் மகள் என புரிந்து கொண்டான்….

கிருத்திகாவை தேட…..' ம்ஹூம், கூட்டிட்டு வரலை போலவே…' என அவர்கள் அருகில் செல்ல 'அதற்குள் காவ்யாவை சமாதானம் செய்து… கொஞ்சம் சிறிதான டெடியுடன் பில் போடும் இடம் சென்றிருந்தனர்… தந்தையும் மகளும்… அந்த பெரிய டெடியை ஒரு கையில் தூக்கிக் கொண்டு வேக நடையில் அவர்களை நெருங்கியவன்……. வெங்கட் கையில் இருந்த டெடியை தன் கைக்கு மாற்றி…

"அது வேணாம், இதை பில் போடுங்க…'' என பெரிய டெடியை கொடுக்க…

காவ்யா சத்ரியை ஆச்சர்யாமாய் பார்க்க…. வெங்கட்டோ… அதிர்ச்சியாய் அவனை பார்த்திருக்க…

"நான் உன்னோட சித்தப்பாடா….. குட்டிமா…'' என காவ்யாவை அள்ளிக் கொண்டான்…… சத்ரி….

வேறு சில பொருட்களுடன் அங்கே வந்த கிருத்திகாவும் அவனை கண்டு அதிர்ச்சியாய் நிற்க…..

கனமான நிலையை அங்கே யாராலும் சமாளிக்க முடியவில்லை…..

நான்கு வயதிற்குரிய துறு துறுப்புடன்…. "சித்தப்பா'' என்ற உயிர்ப்புடன் காவ்யா….. சத்ரியின் கழுத்தை கட்டிக்கொள்ள….. இறுக்கமாய் தன் தோள்களில் சாய்த்துக் கொண்டான் சத்ரி…

வெங்கட் தான் அப்படி இருந்தான் என்றால் கிருத்திகா அதை விட நலிந்து இருந்தாள்…. முகமெல்லாம் இருண்டு போய் கிடந்தது… பார்த்தவனுக்கு இவர்கள் அப்படி ஒன்றும் நன்றாக ,வாழவில்லை என அப்பட்டமாய் தெரிந்தது…

அவர்களிடம் பேச மனமில்லாத போதும், அப்படியே விட்டு வரவும் மனமில்லை…அதற்குள்….. வெங்கட்டே… "அம்மா அப்பா வந்திருக்காங்களாடா…..'' என அவனை சுற்றி கண்களை ஓட்ட…

"இல்லை…. அவங்க திருச்சயில் இருக்காங்க… நான் ப்ரண்ட்ஸோட வந்தேன்….. ‘‘

"திருச்சியிலா…'' 'அப்போது நம்ப கிராமம், நம்ப வீடு…' என குறையை சொல்லாமல் அதிர்ச்சியாய் நிறுத்த…..

"ஆமாம்…..'' என்ற சத்ரி…

"நீயும் இங்கே நல்ல வாழ்க்கை வாழற மாதிரி தெரியலையே "என டெடி பியரை சுமந்த காவ்யா, வெங்கட்டின் நலிந்த தோற்றம், பின் கடைசியாய் கிருத்திகா என அவனின் பார்வைகள் வெங்கட்டை கூறு போட…..

"திருடிட்டு வந்த பணமும் நகையும் நல்லாவா வாழ வைக்கும்.....'' என வெங்கட்டும் வெறுப்பில் பேச....

அந்த வார்த்தையில் வெங்கட்டின் மனம் தெளிவாய் புரிய...

"திருச்சியில் நம்ப வீட்டுக்கு வந்திடுறியா.....'' என சத்ரி சட்டென கேட்க.....

ஆசையை பிரதிபலித்த வெங்கட்டின் விழிகளையும் ,இது நடக்கவே நடக்காதா என ஏங்கிய கிருத்திகாவின் விழிகளையும் அழகாய் படம் பிடித்தன சத்ரியின் விழிகள்.....

ஆனாலும்.... ‘‘அம்மா அப்பா''..... என வெங்கட் இழுக்க.....

"உன்னையும் கிருத்திகாவையும் பற்றி பேசாத நாட்கள் இல்லை.....'' என அவனுக்கு தேவையான பதிலை கூற... அந்த பதிலில் நீர் நிறைந்த கண்களுடன்

சத்ரியை ஆரத் தழுவிக் கொண்டான் வெங்கட்... மற்றவர்களுக்காக இல்லையென்றாலும், காவ்யாவுக்காகவே தங்களோடு இணைத்துக் கொண்டான் சத்ரி....

திருச்சியில் தங்கள் வீட்டின் முகவரியை கொடுத்து....'' வந்திருடா....'' என இரண்டு் முறை போனில் பேசியவன், அடுத்த முறை விநாயகம் சிவகாமியை விட்டு அழைக்க.....

பெங்களூரில் வேலையை ரிசைன் செய்து, அதே ஐடி ஃபீல்டில் திருச்சியில் வேலை தேடிக் கொண்டு வந்து விட்டான் வெங்கட்…

வெங்கட் கிருத்திகா …. என இருவரையும் பார்த்த சிவகாமியும் விநாயகமும்… திகைத்துவிட்டனர்... வெங்கட் கிருத்தியின் நலிந்த தோற்றம்….. எதிலோ தோற்ற உணர்வு…. என வீட்டில்லிருந்த மற்றவர்களை அலைக்கழிக்க….

ஏதும் கேட்காமல் வீட்டில் சேர்த்துக் கொண்டனர்…… ரத்தபாசமே அங்கு ஓங்க…. பட்ட அடிகளை காலம் ஆற்றியிருக்க….. மகனை மருமகளை பேத்தியை அழகாய் உள் வாங்கிக் கொண்டனர் வெங்கட்டின் பெற்றோர்கள்….

ஆனால் சத்ரியின் வலிகள் அப்படியில்லையே... அவ்வப்போது எழும் போபத.தை அப்படியே காட்டவும், சுள்ளென குத்திக் காட்டவும் தயங்க மாட்டான்...சத்ரி…. … சில நேரம் வெங்கட் கிருத்திகா அந்த வீட்டில் இல்லாதது போலவே நடந்து கொள்வான்…..

ஆனால் சத்ரி, காவ்யாவுடன் அடிக்கும் கொட்டங்கள் ,அதற்கெல்லாம் சேர்த்து வைத்தார் போன்று ஏராளமாய் இருக்கும்….. எதுவென்றாலும் வெங்கட்டிடம் கேட்கும் காவ்யா… இப்போதெல்லாம்… சித்தப்பா சித்தப்பா…. என வலம் வர தொடங்கினாள்... ஒட்டியும் ஒட்டாமலும் இருந்த அவர்களின்

வாழ்க்கை... காவ்யா மூலமாய் மட்டுமே ஒரே நேர்கோட்டில் வர... சாதாரண குடும்பமாய் ஒன்றானனர்...

வெங்கட் கிருத்திகா இருவருமே .....

பெற்றோர்களிடம் எதிர் பார்த்த பாசம் கிடைக்காத போதும்.... தங்களுக்குள் தேடிக் கொண்டனர்.... சாத்வி சத்ரியை போல் நேரடாயாக பாசம் காட்டாது திருட்டு தனமாய் வெங்கட் எல்லாவற்றிலும் உதவ.... இருவருக்கும் அது ஓர் அழகிய உணர்வை தர.... காதலில் விழுந்தனர்.....

சிவாவிற்கு கிருத்திகாவை பேச போறோம் என மீசையெ முறுக்கிய சங்கர் வில்லனாய் தெரிய.... இழுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டான்....

சத்ரி இரண்டாம் வருட மெக்கானிக்கலில் நான்காம் செமஸ்டர் எழுதும் நேரம், பெங்களூரில் இண்டர்வியூவில் இருந்த வெங்கட்டிற்கு சாப்ட்வேர் கம்பெனியில் வேலை கிடைக்க..... அதற்கு முன்பணமாய் செலுத்த வேண்டிய பணத்தை முன்னிருத்தி "இவ்ளே பணம் கொடுத்து வேலை வாங்கவா…….வேண்டாம்'' என்றவன் ...

கிருத்திகாவை திருமணம் செய்வதை முன்னருத்தி..., சுயநலமாய் வேலைக்கு சேர்ந்தான், குத்தகை பணம் மற்றும் நகைகளின் புண்ணியத்தில்....

ஒரே வீட்டில் அனைவரும் இருந்தாலும், வெங்கட்டும் கிருத்திகாவும் தாங்கள் செய்த தவறின் வீரியம் தெரியாமல்......

தெரிந்து கொள்ளாமல் இருப்பதை பார்க்கும் போது அவ்வளவு ஆத்திரம் வரும் சத்ரிக்கு....

ஆனால் தெரிந்து கொண்டால் மட்டும், சத்ரியும் சாத்வியும் அவர்களின் பெற்றோர்களும் இழந்த நாட்களை ,இழந்த நிம்மதியை இவர்களால் திருப்பி தர முடியுமா.....? என கனன்று கொண்டிருக்கும் நெருப்பை அணைக்க முடியாவில்லை அவனால்.....

ஒரு நாள் "பணத்தையும் நகையையும், என்ன பண்ணின வெங்கட்...." என கேட்டு விட....

சிறிதும் தயக்கமில்லை வெங்கட்டிடம்....." பர்மணன்ட் ஜாப்க்காக அமொண்ட் பே பண்ண சொன்னாங்க... நம்பி பே பண்ணினேன்....பர்மணன்ட் ஜாப் தான் ஆனா சேலரி ரொம்ப கம்மி... சமாளிக்கமுடியலை..." 'நல்ல வேளை நீ வந்த.....' என்ற வார்தைகள் அவன் மனதில் உதித்தாலும் வெளிவரவில்லை...

சத்ரிக்கு என்ன சொல்வதென தெரியவில்லை... நொந்து போய் இருப்பவனை வார்த்தைகளால் சாட சத்ரியால் முடியவில்லை...

அவன் தோளில் லேசாய் பை போட்டு... "இப்போ சேர்ந்த வேலை எப்படி இருக்கு'' என வெங்கட்டிற்கு அண்ணனாய் ஆனான் சத்ரி.....

'நடந்ததை சொல்லி... வெங்கட்டை ஏன் கஷ்டபட விட வேண்டும் ... 'என சத்ரி... வெங்கட் கிருத்திகாவின் திருமணத்தின் பின் நடந்த எதையும் தெரிவிக்கவில்லை.... கஷ்டபடுத்தியும் பயனில்லையே என எண்ணியது அவன் மனம்... அப்படியே தந்தை தாயிடம் கூறி..... ‘‘எதுவும் சொல்லவும் வேணாம் கேட்கவும் வேணாம்.....'' என முடித்துவிட்டான் சத்ரி......

# அத்தியாயம் 19

**வெ**கு வருடங்களாய் இளைய மகனின் அயராத உழைப்பு, எதிர்பார்க்க முடியாத அளவு முன்னேற்றம், வயதிற்கு மீறிய முதிர்ச்சி என அனைத்திலும் அவனை கண்டு விநாயகம்,சிவகாமிக்கு அளவற்ற பெருமை தான்., சத்ரி எதை செய்தாலும் நன்மைக்கே என்ற எண்ணத்தை அவர்களிடையே விதைத்திருந்தான்.

அவன் சொல்லியபடி இன்று வரையும் சாத்வி, சத்ரின் துன்பங்கள் வெங்கட் தம்பதியினரின் காதில் விழாத வண்ணம் பார்த்துக் கொண்டனர்….

"வெங்கட், அத்தை மாமா நம்பளை எப்படி ஏத்துக்கிட்டாங்க…"

"அதான் எனக்கும் தெரியலை கிருத்தி… இந்தளவு பாசமா இருப்பாங்கன்னு தெரிஞ்சிருந்தா, நம்ப. காதலை வீட்டில் சொல்லி ப்ராப்பரா நடத்தி இருக்கலாம்…..'' என வெங்கட்டும் குறைபட….

"கொஞ்சம். அவசரப்பட்டுட்டோமோ…'' என கிருத்திகாவும் கேட்க….

"ம்ஹூம்…. ரொம்ப...'' குற்ற மனப்பான்மை அப்படியே வெளிப்பட்டது…..

"இருந்தாலும் , எங்கப்பாவை சமாளிச்சிருக்க முடியாது…..'' என சங்கரின் குணம் அறிந்தவளாய் கூற…

"உங்கப்பா ஒருத்தருக்காக பயந்து, பாரு இத்தனை வருசம் இந்த பாசமெல்லாத்தையும் விட்டுட்டு அனாதை மாதிரி தனியா இருந்திருக்கோம்…..'' என வருந்த…..

"ரொம்ப சுயநலமா இருந்துட்டோம் வெங்கட்...'' என கிருத்தியும் வருந்த….

"இப்போ வருந்தி என்ன பிரயோஜனம்...'' என வெங்கட் சென்றிவிட….

கிருத்திகாவிற்கு நன்றாகவே தெரிந்தது பாசத்தின் அருமை….. அதுவும் இப்பொழுது தன்னை ஒரு மகளாகவே நடத்தும் சிவகாமியும்,...

"அம்மா, மருமகளே…. காபி கொண்டா தாயி…..'' என வார்த்தையிலேயே நெகிழ வைக்கும் விநாயகமும்... காவ்யாவிடம் தோழனுக்கு தோழனாய் மல்லுக்கட்டி நிற்கும் சத்ரியும்... என மூவரிடமும் கிடைக்கும் அளவில்லா பாசத்தை நினைத்து மருகி தான் போனாள் கிருத்தி…..

வெங்கட் வருந்துவதற்கு தானும் ஒரு காரணம் "தன் தந்தையிடம் விடாப்பிடியாய் நின்று கேட்டிருக்க வேண்டும்,

மறுக்கும் பட்சத்தில் வேறு வழியை தேடியிருக்க வேண்டும்...எதையும் யோசிக்காமல் வீம்பாய் முடிவெடுத்த முட்டாள் தனத்தை நினைத்து வருந்தினாள்...''

'வெங்கட் சொல்வது போல் 'இனி வருந்தி பயனில்லை' என தனக்குள்ளே சொல்லிக் கொண்டவள்.....

தன்மூலமாய் வீட்டில் இருக்கும் விநாயகம், சிவகாமி, சத்ரி என யாருக்கும் எந்த ஒரு தொந்தரவும் தன்னால் வரக்கூடாது என முடிவு செய்திருக்க.....

ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பது போல் மற்றவர்கள் நடந்து கொள்ள... விரக்தி புன்னகை தான் வந்தது..... அதை வெங்கட்டிடமும் கூற.....

''மன்னிப்பே பெரிய தண்டனை தான் கிருத்தி.....'' என வெங்கட் கூற.... கிருத்தியும் உணர்ந்தாள்.....

குற்ற உணர்ச்சி நாளுக்கு தாள் அதிகரிக்க....அதை உடைக்கும் பொருட்டு..... ஒரு நாள் தந்தையிடம் சென்று வெங்கட் கேட்டு விட்டான்.....

''எங்க மேல கோபமே வரலையாப்பா... அடிச்சிருந்தா கூட இவ்வளவு வலிச்சிருக்காதுப்பா... மன்னிப்பு... அவ்ளோ வலிக்குதுப்பா ''

அவன் வருத்தம் புரிந்தவரோ.....'' பெத்த புள்ளையோட நடவடிக்கையை கூட கவனிக்காமல் இருந்தது என்னோட தப்பு...

தோளுக்கு மேல் வளர்ந்த புள்ளையை தோழன்னு சொல்வாங்க... அப்படி ஒரு நாளும் உன்கிட்ட நான் நடந்த மாதிரி எனக்கு நியாபகம் இல்லை..... வெங்கட்... சங்கரும் கிருத்திகாவிற்கு சிவாவை பேசுறதுக்கு முன்னாடி... கிருத்திகாகிட்ட ஒரு ஒஆர்த்தை கேட்டு செஞ்சிருக்கலாம்....இல்லை மகாவாவது கேட்டு தெரிஞ்சிருக்கனும்... தப்பு உங்க பக்கமா, இல்லை தப்பான முடிவு எடுக்க வச்ச எங்க பக்கமான்னு ஆராய்ச்சி செய்ற விட்டுட்டு... இனியாவது மருமகளை நல்லபடியா பார்த்துக்க... நீ மட்டும் தான் வேணும்ன்னு உன்னை நம்பி வந்தவ... "என கிருத்திகாவின் கலையிழந்த முகத்தை நினைவு கூர்ந்து விநாயகம் கூற...

வெங்கட் தந்தையை நினைத்து பெருமிதம் கொண்டான்... இப்படிபட்ட தந்தையை புரிந்து கொள்ளாமல் போனதை எண்ணி...' இனி தன்னால் ஆன மட்டும் நிம்மதியை கொடுக்க வேண்டும் .......'' என தன்னால் ஆன உதவியை செயல்படுத்த முயன்றான்.....

அன்றிலிருந்து அமைதியாய் சென்றது அவர்களின் வாழ்க்கை...

இத்தகைய நேரத்தில் தான் சாத்வியை ஹோட்டலில் சந்தத்ததும் அதன் பின் நடந்தவைகளும்....

பழைய நினைவுகளில் இருந்து மீண்டு வந்த சாத்விக்கு தூக்கம் கூட எட்டா தூரம் போக…. சத்ரியின் அணைப்பில் கிடந்தாள் உணர்வுகள் அற்று…

காலையில் முதலில் கண்விழித்த சத்ரி ,சாத்வியை பார்க்க…. புன்னகை தானாகவே ஒட்டிக் கொண்டது… சில நொடிகள் அவள் முகத்தையும்…. அவள் தன் மேல் நிலையையும் பார்த்தவன் …… சாத்வியை ஆசை ஆசையாய் இன்னும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்…..

சிறு வயது சாத்வி தான் நினைவில் தோன்றியது…. அவன் மேல் கைகளை கோர்த்து, நெஞ்சில் தலை வைத்து லேசாக பிளந்த இதழ்களுடன் அப்படியே பால்ய வயதிற்கே அழைத்துச் சென்றிருந்தாள்…

சிறு வயதிலும் தன்னை அணைத்துக் கொண்டு, இதே போல் இறுக்கி கொண்டு உறங்கும் சாத்வி கண் முன் வர "நீ மாறவே இல்லைடி…..'' என சந்தோஷ குமிழிட்டது அவன் மனம்… "ஆனா, எச்சில் வடிப்பதை நிப்பாட்டிட்ட போல…'' என

லேசாக விரிந்திருந்த இதழ்களை பூவிலும் மென்மையாய் வருடியது சத்ரியின் விரல்கள்…..

அந்த வருடலில் விரிந்திருந்த அவளிதழ்கள் தாமாகவே மூடிக் கொள்ள….

வருடிய விரல்களை அவளிதழ்களில் அழுத்தமாய் வைத்து பின் தன் இதழ்களில் வைத்து முத்தமிட...

உடலில் ஏதோ ஓர் ரசாயன மாற்றம், அதனுள் மூழ்கும் முன்னே நிதர்சடம் உறைக்க... நீ செஞ்சு வச்சிருக்குற வேலைக்கு...

'நேற்றே, உன்னை பின்னி எடுத்திருப்பா சத்ரி, எப்படியோ எஸ் ஆகிட்ட.... மறுபடியும் அவள்கிட்ட சிக்குறதுக்குள்ளே ஓடிடு..... அதுவும் இப்போ நீ செய்றதையெல்லாம் இவள் பார்த்தாள்... செத்தடா நீ... "என அவன் மனசாட்சி கூற..... மெதுவாய் அவளை விலக்கி..... ரெப்ரஷ் செய்து வெளியே வந்தான்...

குழந்தையென அமைதியாய் உறங்கும் அவளை சில நொடிகள் பார்த்தவன்... நேரமாவதை உணர்ந்து, "எப்படி இவளை எழுப்ப....'' என சிந்தனையில் இருந்தவன் அறையை சுற்றிலும் பார்வையை ஓட்ட..... மூடியிருந்த சன்னல்களை பார்த்து திருப்தியாய் புன்னகைத்தான்....

விறு விறுவென அதனருகில் சென்று சன்னல்களை திறக்க..... வெளிச்சம் அவள் மேலேயே விழ, "வெளிச்சத்தில் கண்டிப்பா தூங்க மாட்டா...'' என அவள் எழுவதற்குள் தன் அன்னையை தேடிச் சென்றான்...

வெளிச்சம் பட்டாவது கண்விழிப்பாள் என சத்ரி நினைக்க... இரவில் வெகு நேரம் வரை எட்டாத உறக்கம், விடிய காலையில் எட்டி இருந்தால் அவள் எப்படி விழிப்பாள்..... ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்..... சாத்வி.....

கீழே வந்த சத்ரி தன் அன்னை

சமையலறையில் இருப்பதை பார்த்து...

"மா..... டீ....'' என சத்தம் கொடுத்துவிட்டு டிவியை ஆன் செய்து சோபாவில் அமர்ந்தான்..... அவன் சத்தத்தில் வெளியே வந்த சிவகாமி "டேய், குளிச்சிட்டு வரணும்னு தெரியாத அளவு சின்ன பையனாடா நீ...'' என நேற்று அவன் அணிந்திருந்த பட்டு வேஷ்டியுடனும், பனியனுடனும் அமர்ந்திருந்த அவனை பார்த்து நிஜமாகவே எரிந்து விழ....

அதன் அர்த்ததம் புரியாமல் குனிந்து தன்னை பார்க்க...

'இப்படியாடா..... சாத்விக்கு பயப்படுவ...' என அவன் குரல் எக்கோவாய் கேட்க...

அதற்குள் மனசாட்சி... "சபாஷ் இப்போ தாண்டா நீ ஒரு நல்ல புருஷன்... பொண்டாட்டிக்கு பயப்பட ஆரம்பிச்சுட்டியே...'' என கைதட்டி சிரிக்க... அதை வெளியில் காட்டதவனாய்.....

"நான் என்னைக்கும்மா... டீ குடிக்க முன்னாடி குளிச்சிருக்கேன்...... .... போய் டீ எடுத்துட்டு வாங்க.....'' என டிவியில் கவனம் வைத்தவனாய் சுவாதீனமாய் சொல்ல....

"நான் சொல்ல வருவது புரியுதா இல்லையா…..'' என சிவகாமி பல்லை கடிக்க... 'இதுக்கு மேல் எப்படி சமாளிக்க…..' என நினைத்தவன்…..

"ஒன்னுமே நடக்கலையே…அப்பறம் ஏன்மா குளிக்க சொல்ற...'' என தலை குனிந்தபடி சொல்ல…

"ஒன்னுமே நடக்கலையா...!'' என வாயை பிளந்தவர்... பின்…..

"அதுக்குன்னு இப்படி வெளிப்படையா காட்டனுமா... சாத்வியோட அம்மா அப்பாக்கு நீயே காட்டிக் கொடுத்துடாத…கஷ்டபட போறாங்க…..'' என சிவகாமி இரட்டை அர்த்தத்தில் கூறி….சிரித்தபடியே செல்ல….சவகாமி சென்ற அடுத்த நொடி

"மகனே….. ஒன்னுமே நடக்கலைன்னு உன் வாய் தான் சொல்லுது... ஆனா….. "என சத்ரியின் பனியனை பார்த்து சிரித்தபடி செல்ல…..

குனிந்து பார்த்வனின் கண்களுக்கு ஒன்றும் புலப்படாமல் போகவே , குழப்பத்துடன் தந்தையை பார்க்க...அவர் அவனை இழுத்து கண்ணாடி முன் நிறுத்தி….ஒரு மார்க்கமாய் சிரித்து செல்ல….

"இவர் ஏன் இப்படி அஷ்ட கோனலா சிரிக்கிறாரு'' ….. என கண்ணாடியை பார்க்க...… கழுத்தோர பனியன் முழுவதும்

சாத்வியின் குங்குமம் ஆங்காங்கே அப்படியே அப்பியிருக்க….. பத்தாததற்கு ஸ்டிக்கர் பொட்டு வேறு கழுத்தில் ஒட்டியிருக்க…

"அச்சச்சோ…'' என சத்ரியின் வாய் தானகவே முனுமுனுக்க…

இடது கையினால் தன் நெற்றில் அடித்துக் கொண்டு விறு விறுவென சாத்வியின் அறைக்குள் சென்றான்… "

"கடவுளே, என் பொண்டாட்டி இன்னும் எழுந்திருக்க கூடாது…'' என வேண்ட….

.

"ஏலே….சத்ரி….. எது எதுக்கு கடவுளை கூப்படனும்னு வெவஸ்தை இல்லை..,. "என வெங்கட்டும் அவனை மேலருந்து கீழ் வரை பார்த்து வாய் விட்டு சிரித்து கிண்டல் செய்ய…

"உன் சட்டையிலும் ஒட்டியிருக்குடா….வெண்ணை…''

சத்ரியும் வெங்கட் வாயை கிளற….

.

"நான் தான் நேத்து சட்டையே போடலையே…'' என குனிந்தபடி வெங்கட்டும் சட்டையை பார்க்க…

"கல்யாணமாகி பத்து வருசம் ஆனாவனெல்லாம் பர்ஸ்நைட் மாதிரி செலிப்பரேட் பண்றானே….. சே…..'' என கதவை அறைந்து சாத்த….

சத்ரி தன் வாயை கிளறியதை அப்போது உணர்ந்த வெங்கட்.... இந்த முறை அவன் நெற்றியில் அறைந்தபடி செல்ல...

கீழே இருந்த சிவகாமிக்கு இதையெல்லாம் பார்த்து சிரிப்பு பீறிட்டு கிளம்ப... அதை அடக்க பெரும்பாடு பட்டு போனார்...

'ஏய், எல்லாம் உன்னால தாண்டி... அம்மாவும் அப்பாவும் தான் சேர்ந்து நக்கல் பண்றாங்கன்னா... இதில் வெங்கட் வேற..... எரியிற நெருப்புல எண்ணையஐ ஊத்திட்டு போறான் வெண்ணை.......'' என சாத்வி எழும் முன், குளித்து வந்தான்.....

அப்போழுதும் அவள் உறக்கம் கலைந்த பாடில்லை... 'அம்மையாருக்கு எம்பூட்டு தூக்கம்...' என கீழே செல்ல.... அதற்காகவே காத்திருந்தாரப்போல் அவளறையில் நுழைந்தார் மகா...

"சாத்வி, எழுந்திரு.... விடிஞ்சிருச்சு.....'' என எழுப்ப.... அசைவே இல்லை..... நான்கைந்து முறை அழைத்தபின்பே அசைந்தாள்...

"நைட் உன்னால தாண்டா தூங்க லேட் ஆச்சு... சத்ரி ப்ளீஸ் கொஞ்ச நேரம் ,"என போர்வையை இழுத்து போர்த்த...

"சாத்வி நான் அம்மா.....'' என மீண்டும் குரல் கொடுக்க....

.

சட்டென எழுந்து அமர்ந்தாள்….. "குளிச்சிட்டு வா… சாத்வி…'' என அங்கிருந்து வெளியேறினார் மகா…..

'என்ன நினைப்பாங்க அம்மா…..' என விறு விறுவென கிளம்பி கீழே வந்தாள்…..

சத்ரியின் எதிரில் வந்து அமர்ந்து…. சத்ரி பருகிக் கொண்டிருந்த டீயை பிடுங்கி தன் போக்கில் மொபைலை நோண்டிக் கொண்டே பருக ஆரம்பித்தாள்…

அவளின் அருகில் வந்த மகா….. "சாத்வி'' அவளை தொட…. திரும்பி 'என்ன 'என்பது போல் பார்த்தாள்…..

மாடிப்படியின் அருகே கண்களை காட்டி…..'' அங்கே வா….'' என கண் ஜாடையில் அழைக்க…

'' நீ சொல்றதை கேட்கிற ஆளா நான்….'' என்ற ரீதியில் மீண்டும் மொபைலை பார்க்க ஆரம்பிக்க…

இதையெல்லாம் பார்த்த சத்ரி….. "என்னன்னு தான் கேளேன் சாத்வி…..'' என கூர்மையாய் அவளை பார்க்க….. அவனை முறைத்தபடியே

எழுந்து தாயுடன் சென்றாள்…''நேற்று தான் கல்யாணம் ஆன பொண்ணு மாதிரியா நடந்துக்கிற…'' என மகா கேட்க….

"எங்க மானத்தை வாங்காம இங்கிருந்து போக மாட்ட போலவே….'' என சங்கரும் கேட்க…..

மார்பின் குறுக்காய் கை கட்டி "இப்போ உங்க மானம் போற அளவுக்கு நான் என்ன செஞ்சேன்.....''

"மாப்பிள்ளை எந்திரிக்கிறதுக்கு முன்னாடி நீ எழுந்துக்க வேணாமா.....? லேட்டா எழுந்து வந்ததும் இல்லாமல், மாப்பிள்ளையோட டீயை பிடுங்கினதும் இல்லாமல்... போனை வேற நோண்டிட்டு இருக்க.....'' என மகா கேட்க...

"இப்படியெல்லாம் நடந்துட்டு இருந்தேன்னா... எங்களை பத்தி என்ன நினைப்பாங்க..... "என சங்கரும் பாய.....

"நல்லா வளர்க்கலைன்னு நினைப்பாங்க...'' என இருவருக்கும் பொதுவாய் சாத்வி பதில் சொல்ல.....

அத்தனையையும் அருகில் இருந்து கேட்ட கிருத்தி...

"ஏய், அப்பாகிட்ட பேசற மாதிரியா பேசுற... மரியாதை வேணாம்....'' என வர.....

"அப்பா வா....?''. ‘‘யார் ...... இவரா''... "இவர் என்னை வளர்த்தாரா....'' என முகத்தை கிருத்தி புறம் திருப்ப....

"பின்ன நீயா வளர்ந்தியோ...'' என கிருத்தி பேச...

"யார் சொன்னாலும், சொல்லலைன்னாலும் அது தான் உண்மை... "என நக்கலாய் பேச.....

அவர்களின் பேச்சு சத்தம் கேட்டு சத்ரி, விநாயகம், வெங்கட், சிவகாமி என அனைவரும் அங்கே கூட.....

"சாத்வி, ஒழுங்கா பேசி..... அம்மா அப்பாட்ட பேசற..... ஏதோ எதிரிகிட்ட பேசற மாதிரி இருக்கு உன் நடவடிக்கை...''

"எதிர் மாதரி என்ன, கிட்ட தட்ட எதிரி தான்.....'' என சாத்வி உடைக்க....

"சாத்வி'' என சத்ரியின் குரல் அழுத்தமாய் வர.... அதுவரை வாயாடிக் கொண்டிருந்தவள் அமைதியாய் ஆனாலும்.....

இதற்கெல்லாம் பயப்படுவேனா என நின்றிருந்தாள்.....

"அப்பா அம்மா என்ன பண்ணினாங்கன்னு, அவங்க மேல இவ்வளவு வெறுப்பு.....'' தன் கேள்விகளுக்கு இவளாவது பதில் சொல்வாளா என அவள் வாயை கிளற... ஆனால் அது தன் மீது திரும்பும் என அறியாது போனாள்.....

"சின்ன வயசில் நீ செய்த தப்புக்கு நான் தண்டனை அனுபவிக்கிறேன்..... இப்போ வரை...''என நதானமாய் சாத்வி பேச...ஆரம்பித்தாள்.....

"தொலைச்ச என் சந்தோசத்தை உன்னால் திருப்பி தர முடியுமா?''

"இல்லை , என் மேல் பாசம் வச்ச அம்மா அப்பாவை திருப்பி தர முடியுமா?''

"இப்போ ….. தப்பு செஞ்சாலும் உனக்கு எல்லாரும் சப்போர்ட்டா இருக்காங்க….. ஆனா ….நான்... எல்லாம் இருந்தும் அனாதை தான்…..''

"நிம்மதியா... ஒரு வேளை சாப்பாடு என்னை சாப்பிட விட்டு இருப்பாங்களா????''

"படிக்க விட்டுருப்பாங்களா''?

"இல்லை சுதந்திரமா கொஞ்சம் நேரமாவது என்னை வெளிய விட்டுருப்பாங்களா...'' என தன் மனதில் உள்ளதை கொட்ட… அதிர்ந்து நின்றாள் கிருத்தி…..

"இதுக்கே , அதிர்ச்சியானால் எப்படி... இன்னும் நிறைய இருக்கு...'' என சங்கரை பார்க்க...அவளின் வார்த்தைகளை தாங்காத சங்கர்…..

"சும்மா நீ செஞ்சதுக்கெல்லாம. அவளை காரணம் சொல்லாத... அப்படிலாம் கண்டிசன் போட போய் தான் ஒழுங்கா வளர்ந்த….. எங்களுக்கு பயந்த….. இல்லைனா…. உன் பின்னாடி சுத்தினவனோட போய் இருப்ப...'' சங்கரும் பதிலுக்கு வார்த்தைகளால் சாத்வியை சாட…...

"தப்பா போக இருந்த என்னை சரியான வழிக்கு திருப்பி விட்டது நீங்க இல்லை..."என தன் பார்வையை சத்ரியின் புறம்

திருப்பி... "சத்ரி தான், சத்ரி இல்லைன்னா...'' என மீதியை சொல்லாமல் விட்டு...

''உங்களுக்கு தெரியாமல் இருந்திருக்காதே...'' என சங்கரிடமும் திமிராய் நின்றிருந்தாள்...

"சாவி...., நீ பேசினது போதும்..... போ.....'' என அவளறையை கை காட்டி சத்ரி அவளை அனுப்ப....

"நான் போக மாட்டேன்'' என சொல்லி நிற்க..... சத்ரி அவளை முறைத்து நின்றிருந்தான்.....

'இதை இப்போ கண்டிப்பா சொல்லியே ஆகனுமா....' என சத்ரி பார்த்திருக்க...

.

'ஆகனும்' என அழுத்தமான பார்வையை சாத்வியும் நிலைக்க விட... அது புரிந்த சத்ரி வேகமாய் அவளருகில் வந்து "அருண் விசயம் வெளியே வந்தது...'' என வார்த்தையில் அனலை கூட்ட...

அதற்குள் சங்கர்...'' சரி எப்படியோ , நல்ல வழிக்கு திரும்பி, இப்போ நல்ல நிலையில் தானே இருக்க... இன்னும் எங்களை குறை சொல்லனுமா... கிருத்தியை அழ வைக்கனுமா...''

"ம் அதுவும் சரி தான்…… இப்போ நான் நல்ல நிலையில் தான் இருக்கிறேன்….. சந்தோசமா இருக்கிறேன் , ஆனா தொலைஞ்சு போன என் சின்ன வயசு ஏக்கங்கள் , எதிர்பார்ப்பு எல்லாத்தையும் சிதைச்சுட்டீங்களே... அதை எல்லாம் உங்களால திருப்பி தர முடியுமா...?'' என சிலிர்த்து நின்றிருந்தாள்…..

"சாத்வி , விடுமா... அப்பா அம்மா தானே...'' என சிவகாமியும் ஊடே வர…..

"நான் சராசரி பொண்ணு இல்லை…. அத்தை ... என்ன செஞ்சாலும் எங்க அப்பா தானே, என்னோட அம்மா தானேன்னு பொறுத்து போகிற ஆளும் நானில்லை...'' என ஒரு முடிவுடன் நின்றிருந்தவளை அடக்கும் வழியறியாது திகைத்து நின்றிருந்தனர் அனைவரும்...

சாத்வியின் கோபம் நியாமானது தான் என்றாலும் வெளியில் இருந்து பார்க்கும் போது 'பஜாரி' என எண்ண வைக்கும் செயல் தான் …

"பொறுத்துப் போறதினால் என்னும் ஆகாது…. விட்டு கொடுத்து தான் போயேன்….'' என மகாவும் கூற…..

"அப்பா செஞ்சது எவ்ளோ பெரிய தப்புன்னு இன்னும் அவருக்கு புரியலைன்னா... உங்களுக்கும் புரியலைல…..'' என மகாவை சாடியவள்….

“. இப்போ கூட இவ செஞ்ச தப்பை வாய் விட்டு சொல்ல மனசு வரலை…. ஆனா எத்தனை தடவை நான் செய்யாததுக்கு என்னை அழ வச்சிருப்பீங்க…..” என மேலும் பேச…

சாத்வியின் பேச்சு சங்கரை ஏற்றிவிட… "இப்போ இவ்வளவு பேசற நீ…. அன்னைக்கு என்கிட்ட சண்டை போட்டிருக்கனும்… இப்போ வேலை எல்லாம் கிடைச்சு செட்டில் ஆனா அப்பறம் தானே எங்களை விட்டு தனியா வந்திருக்க…. ரோசம் இருக்கறவ என் காசுல சாப்பிட்டிருக்க கூடாது, என் வீட்டில் தங்கி இருக்க கூடாது…” என

"இப்படி எந்த ஒரு அப்பாவும் தம்பட்டம் அடிச்சிட்டு இருக்க மாட்டாங்க… பர்ஸ்ட் செமஸ்டர் பீஸ் மட்டும் தான் நீங்க கட்டினீங்க… மீதி யார் கட்டினா….? "என சங்கரை கேட்க….

பேந்த பேந்த விழுத்தார்….. சங்கர்……

"சிவா மாமா தான் கட்டினாங்க… செமஸ்டர் ஆரம்பிச்ச ஒரு வார்த்துக்குள்ள , எனக்கு பீஸ் கட்டிடுவாங்க…நானா தேடிப்போய் பீஸ் கேட்கிற மாதிரி ஒரு நாளும் நடந்ததில்லை…… “

'சிவா' என்ற பெயர் அங்கிருந்த அனைவருக்கும் அதிர்வை ஏற்படுத்த…. சத்ரியும் சாத்வியும் மட்டும் அனைவரின் அதிர்ச்சியை பார்த்தபடி நின்றிருந்தனர்…..

சத்ரி அருகில் வந்த விநாயகம்…. "சாத்வியை கூட்டிட்டு போடா….. சங்கர் முகமே கூம்பி போச்சு…..'' என நண்பனுக்காய் வருத்தபட….

"எவ்வளவு கஷ்ட பட்டிருப்பா... வெளியே கொட்டின அப்பறமாவது நிம்மதியாய் இருக்கட்டும்…..'' என சாத்விக்காய் பேச

"வெங்கட்டையும், கிருத்திகாவையும் எதுவும் சொல்ல பூடாது கேட்க கூடாதுன்னு கண்டிசன் போட்ட... இப்போ சாத்வியை விட்டு பேச வைக்கிற….'' என சிவகாமி குழப்பதுடன் கேட்க…..

''அந்த கண்டிசன் உங்களுக்கு தான், சாத்விக்கு இல்லை...… எல்லோரையும் விட அதிகமாக பாதிக்கப்பட்டது சாத்வி தான்மா… "என நிதானமாக சொல்ல... வாயடைத்துப் போயினர்….

ஆனால் விநாயகம் விடாமல் "டேய் போடா….. சாத்வியை கூட்டிட்டு போடா…..'' என அவனை முன்னால் தள்ள...

இதற்கு மேலும் பேச விட்டால் எல்லோருக்கும் கஷ்டம் தான் என அவளருகில் வந்து

"இப்போ என்னாச்சுன்னு இவ்வளவு கோபம்...

அப்பா அம்மான்னு பார்க்க வேண்டாம்….. வயசில் பெரியவங்க அதையாவது பார்க்கலாம் இல்லையா….. உன்னை

கஷ்டபடுத்தினாங்கன்னு இப்படி தான் எல்லோர் முன்னாடியும் அசிங்கப்படுத்துவியா... வயசுக்கு மரியாதை குடு சாத்வி... உன்னை நான் இப்படி வளர்க்கலை.....'' என சத்ரி உண்மையாகவே கவலை பட....

"எப்போ பார்த்தாலும், உன் கவலை எல்லாம் இவங்க மேல தானே... என்னை பத்தி யோசிக்கவே மாட்டியா......

உனக்கு தெரிஞ்சுது பாதி தான் சத்ரி..... மீதி இன்னும் நிறைய இருக்கு..... அவ்வளவு ஏன் இந்த கல்யாணத்தை எடுத்துக்கோ.....

ரமேஷ் தான் மாப்பிள்ளைன்னு காட்டிட்டு, உனக்கு கல்யாணம் பண்ணி வச்சு இருக்காங்க...

யாராவது ஒருத்தர் இதை பத்தி பேசினாங்களா...இல்லை என்கிட்ட தான் சொல்லி இருப்பாங்களா... நீயா இருக்கப்போய் என் உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து தள்ளி இருந்தே..... இதே இது வேறவனா இருந்திருந்தா...

தள்ளி இருந்திருப்பானா....... என் மனசு காயமானதை விட, என்......'' என சொல்லி முடிப்பதற்குள் அவள் வாயை பொத்தியிருந்தான் சத்ரி... அவளை தீ பார்வை பார்த்தவன் அலேக்காக தூக்கி கொண்டு தங்கள் அறைக்கு சென்றான்.......

# அத்தியாயம் 20

**ச**த்ரி, சாத்வியை மாடிக்கு அழைத்துச் சென்றதும்.....

ஏற்கனவே சாத்வி கேட்ட கேள்வி ஒவ்வொருவரினுள்ளும் பெரிய அதிர்வையே ஏற்படுத்தியிருந்தது....

திருமணம் ஆன மறுநாளே , சாத்வியின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளை யாராலும் ஜீரணிக்கவே முடியவில்லை.....

விநாயகம் சிவகாமி, வெங்கட் ஓரளவு தெரிந்த விசயம்...என்றாலும் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

மகா சங்கர் என இருவரும் மகளின் நலனுக்காக செய்த செயல்களின் வீரியிம் சாத்வியை தவிர யாருக்கும் தெரியாத ஒன்றாயிற்றே....

"ரொம்ப அவசரப்பட்டுட்டோம்'' என வெங்கட் சொல்லும் போது கூட உறைக்காத விஷயம்....

சாத்வியின் ஒவ்வொரு வார்த்தையிலும் சுழன்று அடிக்க..... யார் முகத்தையும் நிமிர்ந்து கூட பார்க்க முடியவில்லை கிருத்திக்கு.....

மகா... பெற்ற மகளுக்கு தான் ஒரு “நல்ல தாயாய்” இல்லையென நினைத்தவருக்கோ… ஒரு “சாதாரண தாயாய்” இருக்க கூட தகுதியில்லை என தான் தோன்றியது…..

சங்கருக்கோ…. மிகுந்த அவமானம் தான்…. சாத்வியின் கேள்விகளுக்கு பதில் அளிக்காத போதும்...…

அழுத்தமாய் மனதில் பதியும் படியான சாட்டை அடி கொடுத்திருக்க…. அசையாமல் நின்றிருந்தார்….

வெங்கட் தான் அமைதியை உடைத்தான்…. "சாத்வி பேசினதெல்லாம் உண்மையா மாமா….. அவளுக்கு என்ன தான் ஆச்சு….. இப்போவாவது சொல்லுங்களேன்….” என சங்கரிடம் கேட்க…..

அனைவருக்கும் நகர்த்த முடியாத கனமான நிமிடங்கள்… அதை உடைக்கும் பொருட்டு...

"இதோ பார் வெங்கட்…. இன்னைக்கே எல்லாம் பேச முடியாது….. ஆனால் சத்ரியோட படிப்பு நின்னது, திருச்சி வந்தது, இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னணி சாத்வி நாக்கை பிடிங்கிக்கிற மாதிரி கேட்டுட்டு போனாளே... எல்லாத்துக்குமே பிள்ளையார் சுழி போட்டு வச்சது...உங்களோட கல்யாணம் தான்….. இதை மட்டும் தெளிவான சொல்ல முடியும்…. மத்ததை எல்லாம் அப்பறமா பேசலாம்….. நேத்து தான் கல்யாணம் முடிஞ்சு இருக்கு, அதுக்குள்ள பிரச்சனையை ஆரம்பிக்கனுமா...

சாத்வி ஏதோ….. கோபத்தில் பேசுறான்னா…. நீயும் பதிலுக்கு கேக்கனுமா…'' என சிவகாமி தான் அங்கிருந்தவர்களை கலைக்கும் படியானது…

தங்களின் அறையில் ஜன்னல்களில் பார்வை பதித்து, அழுகை முட்டிக் கொண்டு வர….. அதை அடக்கியபடி திணறிக் கொண்டிருந்த கிருத்திகாவை…. தோளில் கை போட்டு தன் புறமாய் திருப்பினான் வெங்கட்…..

அவனை ஓரிரு நிமிடங்கள் அவனை வெறித்தவள்…..

''நீங்களும் நானும் சந்தோஷமா கல்யாணம் செய்துகிட்டாலும், சந்தோஷமா வாழலையே வெங்கட்... சாத்வி நிலைக்கு நாம தான் காரணம்னு சொல்லும் போது... வலிக்குது வெங்கட்….. லவ் தப்பா வெங்கட்….. லவ் பண்ணனவனையே கல்யாணம் பண்ணினது தப்பா... "என வெங்கட்டை பார்க்க…..

அழுகை சுமந்த விழிகளை காண சகிக்காதவனாய்….. தன் மேல் சாய்த்துக் கொண்டான்... என்ன சொல்லி சமாதானம் செய்வது என அவனுக்கே தெரியாத போது... வெங்கட்டும் என்ன செய்வான்…..அழும் மனைவியை சமாதானம் செய்வது மட்டுமே தெரிய…..

''நம்பளோட சுயநலம் தான் எல்நாத்துக்கும் காரணம்….. விடு… நான் சரி பண்றேன்….. சாத்வியே உங்கிட்ட வந்து

பேசுவா.....பேச வைக்கிறேன்....'' என இப்போதைக்கு வெங்கட் அவளை சமாதானம் செய்தான்....

சங்கரின் கண்கள் ஓரிடத்தில் நிலை குத்தியிருக்க, அவரை வருத்தத்துடன் பார்த்தபடி மகா இருக்க.... இருவரையும் கவலையுடன் பார்த்தபடி அங்கே வந்தனர், விநாயகமும்,சிவகாமியும்.

"சாத்வி கோபத்தை கொட்டிட்டு போய்ட்டா, அடுத்து நீ மலையேற போறியா...'' என விநாயகம் கேட்க....

"நான் மலையேறின காலமெல்லாம் போச்சு மச்சான்..... இனி மலையேறி என்ன பிரயோஜனம்..... சாத்வி ஒழுக்கமா இருக்கனும்ன்னு தான் அவளை இறுக்கி பிடிச்சேன்.... ஆனா, அவ்வளவையும் உள்ளேயே வச்சு புழுங்கி இருக்கான்னு நினைக்கும் போது தான் வருத்தமா இருக்கு ....''

"இப்போவாவது நீ புரிஞ்சுகிட்டயே.... சாத்வி பாவம்டா.... எங்க கண்ணு முன்னாடியே அந்த பாடு படுத்துன..... நாங்க இல்லாதப்போ...என்ன செஞ்சயோ...'' என சங்கரை நேரம் பார்த்து கேட்க.....

''இப்போவும் சொல்றேன் மச்சான்... ஒரு அப்பாவா.... நான் செஞ்சது சரி தான் மச்சான், ஒரு நாளும் நான் மாத்திக்க மாட்டேன்..... அது திமிர் புடிச்ச கழுதை தான்.....'' என அப்படியே நிற்க....

'அப்பனும் மகளும் தலையால தண்ணி குடிக்க வைக்குறானுங்களே.....' என விநாயகம் தான் ஓய்ந்து போய்... சிவகாமியை துணைக்கு அழைக்க.....

அங்கே முடிஞ்சதும் இங்கே ஆரம்பிக்கிறாங்களே.... என சிவகாமி தான் இடையில் நுழைந்தார்.....

“அப்பாவாச்சு, மகளாச்சு.... எங்களை விட்டுடுங்க... இப்போ ஒரு மாப்பள்ளை வீட்டு காரங்களா எங்க பேச்சை கேளுங்க...நம்ப வம்சம் தலைக்கனும்... நேத்து தான் நம்ப புள்ளைங்களுக்கு கல்யாணம் முடிஞ்சிருக்கு , குலதெய்வம் கோவிலுக்கு போக வேண்டாமா....” என சிவகாமி கிட்டதட்ட மிரட்டி கிளம்ப வைத்தார்...

இவர்கள் ஆளுக்கெரு புறமாய் இருக்க... சாத்வி பேசயதை ஜீரணிக்க முடியாதவனாய் அவளை அலேக்காய் தூக்கி சென்ற சத்ரி...

மாடியில் தங்கள் அறையில் அவளை இறக்கி விட்டு... "பேச வாய் இருந்தா, என்ன வேணா பேசுவியா..... நீ...” என பல்லைக் கடித்துக் கொண்டு கேட்க.....

அவனிடம் இருந்து பிரிந்து நின்றவள்...

"ஏன் உண்மை தானே..... உன் இடத்தில் வேற ஒருத்தன் இருந்திருந்தா, ‘எனக்கு எதுவும் வேண்டாம் ,உன் நிம்மதி தான் வேணும்ன்னு தள்ளியா இருந்திருப்பான்...’ இல்லையே.....!

அதுவும் மாப்பிள்ளை மாறின கூத்தையெல்லாம் பார்த்திருந்தான்…. கண்டிப்பா என் உடம்பு புண்ணாயிருக்கும்…'' என முகத்தை வேறு புறம் திருப்ப….

"ஏன், நான் மட்டும் புண்ணாக்கமாட்டேன்னு… என்ன நிச்சயம்…?'' என அவளை கூர்மையாய் பார்க்க…

"ம்ஹூம்….. உன்னால் என்னைக்குமே அது முடியாது சத்ரி…'' என அவன் விழிகளோடு, கர்வமாய்…, தன் விழிகளை கலக்க விட்டாள் சாத்வி…

"இவ்வளவு நம்பிக்கை ,என்மேல் வைக்காத சாத்வி…..அது பொய்யாகும் போது நீ தான் கஷ்டப்படுவ…''என அப்போதும் முறைத்து நின்றான்….அப்படி ஒரு நாளில் எப்படி நடந்து கொள்வோம் என அறிந்தவனாய்…..

ஆனால் அப்போதும்….. தன் நம்பிக்கையை விடாமல் …. "கண்டிப்பா…அது மட்டும் உன்னால் முடியாது சத்ரி, உன் மேல் நம்பிக்கை வைக்காமல் என்னாலும் இருக்க முடியாது…..

என்னை கஷ்டபட விட உன்னாலும் முடியாது…..இப்போ கூட… அம்மா அப்பா, கிருத்தி, வெங்கட் மாமான்னு….. எல்லோரையும் நான் காயப்படுத்திடுவேனோன்னு தானே என்னை பேச விடாமல் தூக்கிட்டு வந்த…. என்னால மத்தவங்க காயப்படறதையே விரும்பாத நீ… என்னை காயப்பட தான் விட்ருவியா…'' என சாத்வியின் முகம் கர்வமாய் மாற…..

தன்னை அப்பட்டமாய் தெரிந்து வைத்திருக்கும் சாத்வியின் மீது..சொல்லில் அடங்கா உணர்வுகள் அவனுள் எழ•••...அதை அடக்கியபடி

.''ஆனாலும் இந்த திமிர் என்னைக்குமே ஆபத்து தான் சாத்வி... '' என

"ஆனால், இந்த திமிர் எனக்கு பிடிச்சிருக்கே... ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கே•••சின்ன வயசில் இருந்து இதோ இப்போ வரை...என்னை பொத்தி பொத்தி பாதுகாக்குறது அவ்வளவு பிடிச்சிருக்கே••..'' என அவன் விழிகளோடு சங்கமிக்க••..

தன் எண்ணங்களுக்கு உருவம் கொடுக்கும் இந்த சாத்வி, புதிதாக தான் தெரிந்தாள்•••சத்ரிக்கு••.மேலும்

அவள் விழிகளோடு கலக்க முடியாமல்...'' அதான் பொத்தி பாதுகாக்க தான் , நானிருக்கிறேனே••.. இனி அத்தை மாமா, வெங்கட், கிருத்தின்னு யார் கிட்டேயும் கேள்வி கேட்டு அவங்களை கஷ்டபடுத்தாத...

உன்னோட லைப் இனிமேல் நான் தான், நான் மட்டும் தான், உன்னோட கோபமோ, பாசமோ••. இனி என் மேல் மட்டும் தான் காட்டனும்... நடந்து முடிஞ்சதுக்கு••. முடிஞ்சது தான், ... அனாவசியமா பேசி நிம்மதியை கெடுத்துக்காத••..

அவங்களோட கஷ்டத்தில் , உன்னோட சந்தோஷத்தை தேடாத... அப்படி கிடைக்கிற சந்தோஷம் நிலைக்கவும் செய்யாது...'' என கூர்மையாய் அவளை பார்த்தபடியே பேச.....

''சரி....சரி... நீ சொல்ற எல்லாமே சரி தான்.... ஒத்துக்கிறேன்...அவங்களை கஷ்டபடுத்தலை..... கண்டபடி பேசலை...ஆனால் தப்பு செஞ்சவங்களுக்கு தண்டனை கொடுக்கலாம் இல்லையா...''

"தண்டனை........யா... தண்டனை ... கொடுக்கிற அளவுக்கு அப்படி என்ன தான் செஞ்சாங்க..... "

சாத்விக்குரிய அனைத்து கடமைகளும் பொறுப்புகளும் மட்டும் தான் மறுக்கப்பட்டு இருக்கின்றது என நினைத்துக் கொண்டிருந்த சத்ரிக்கு....' என்னை ஒரு வேளை சாப்பிட விட்ருப்பீங்களா, படிக்க விட்ருப்பீங்களா.....' என சாத்வியின் ஆக்ரோஷமான பேச்சுக்கள் நியாபகம் வர ... மனதில் இருப்பதை அப்படியே கேட்டான்.....

"என்ன செஞ்சாங்களா.....''

"என்ன செய்யலைன்னு கேளு...'' என சாத்வியின் முகம் இறுகிக் போக......

‘‘நீ ஊரை விட்டு போன அப்பறம் , நான் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமில்லை... வாழ்க்கையையே வெறுக்குற அளவு ... பட்டேன்.....’’என அதீத வெறுப்பில் முகம் சுளித்தவள்...

"இதோ.... இதை பார், அப்பவாவது என்னோட கோபத்துக்கான காரணம் புரியும்.... "என ஒரு மூலையில் அவள் கொண்டு வந்திருந்த டிராவல் பேக்குகளுக்கு கீழ் இருந்த பெரிய அட்டை பெட்டியை இழுத்து அவன் முன் வைத்தவள்...

உள்ளிருந்த நோட்புக்குகள் அனைத்தையும் கட்டிலின் மேல் வைத்தாள்...

அது சாத்வியின் பள்ளி காலத்தில் வாங்கிய நோட் புக்குகள் என தெளிவாய் தெரிய.....

சத்ரியோ... புரியாது அவளை பார்க்க... "ம், எடுத்து பாரு சத்ரி.....’’என அவனை உந்த... மெதுவாய் கட்டிலில் அமர்ந்து... ஒரு நோட்டை எடுத்து... அதை திறந்து பார்க்க...

முதல் பக்கத்தில் "ச.சாத்வி... IX — B’’ என எழுதியிருக்க..... 'நையன்த் லயேவா... அப்போ இருந்தே வா...’ என அடுத்த பக்கம் திருப்பினான்....

ஒவ்வொரு பக்கங்களையும் இரண்டு பத்திகளாய் பிரித்து... "ஸ்ரீ ராம ஜெயம்’’ ஐ, ஒரு சிறு இடைவெளி கூட இல்லாமல் எழுதியிருந்தாள்.....

என்னவோ…. ஏதோ… என திருப்பியவனுக்கு தெரிந்ததெல்லாம் "ஸ்ரீராம ஜெயம்" மட்டுமே…… அதை வைத்து விட்டு அடுத்த நோட்டை எடுத்து முழுவதுமாய் பிரட்டி பார்க்க…

எல்லாவற்றிலும் "ஸ்ரீராம ஜெயமே…" மேலும் அடுத்தடுத்து நோட்டுகளை புரட்டி பார்க்க….. அனைத்திலும் "ஸ்ரீராம ஜெயம்" மட்டுமே…..

குழப்பம் மட்டுமே மிஞ்சியது…. 'அவசரம் வேண்டாம், நிதானமாய் பார்…' என கட்டளையிட்ட மூளையை பின்பற்றி , பக்கங்களை மெதுவாய் புரட்டி பார்க்க ஆரம்பித்தான்…..

அவளின் எழுத்துக்களின் தோரனைகளே நிறைய விஷயங்களை கூறியது சத்ரிக்கு…

சில நேரங்கள் வரை தொடர்ந்து எழுதியிருக்கிறாள்….

சில நேரம் ஒரு பக்கத்திலேயே முடிந்து விடும் அவளின் சீரான எழுத்துக்கள்…

இதோ இங்கே விடாமல் வெகு நேரம் எழுதியிருக்கிறாள்…

என ஒவ்வொரு பக்கங்களிலும் பதிந்த அவளின் கையெழுத்தும், வேறுபட்ட பேனா மைகளும் காட்டிக் கொடுத்தது என்றால்……

இங்கே எழுதும் போது அழுதுட்டே எழுதியிருக்கா… என ஒரு சில இடங்களில் காட்டிக் கொடுத்த கண்ணீர் தடங்கள்…

என எழுதும் போது சாத்வி எந்த மனநிலையில் இருந்தாள் என்பதை , அவளின் எழுத்துகளே அப்படியே எடுத்துக் காட்ட...

கையில் வைத்திருந்த நோட் புக்கை புரட்டியபடி.....

“எதுக்கு சாவி... இவ்ளோ...” என நோட்டை பிரட்டியபடி கேட்டவனுக்கு... தான் தான் எழுத வைத்ததே என்பது மறந்து போக... அதை அவனுக்கு நினைவூட்டினாள் சாத்வி.....

"நீ தானே சத்ரி..... என்னை எழுத வைத்ததே...அருணோட என்னை பார்தப்போ.... நீ எனக்கு பண்ணின அட்வைஸ் எல்லாம் மறந்து போச்சா.....

?.” என அசால்ட்டாய் சாத்வி கூற.....

நோட்டை பிரட்டியவனின் கைகள் ஸ்தம்பித்தது... தன்னிலைக்கு மீண்டும் திரும்ப இரண்டு மூன்று நிமிடங்கள் பிடித்தது...

"சாவி..... சாவி... நான்.... உன்னை டைவர்ட் பண்ண தான்...” அடுத்து என்ன சொல்வதென சத்ரிக்கு வார்த்தைகள் சிக்கிக் கொள்ள.....

” நான்..... எந்த அர்த்தத்தில் ...” என வார்த்தைகள் தடுமாற...

அவனுக்கு அந்த தடுமாற்றத்தை கூட தர விரும்பாமல்.....

"நீ எதை காரணமாய் வைத்து "ஸ்ரீ ராம ஜெயம்” எழுத சொன்னேன்னு தெரியாது... சத்ரி...

’ சாத்வி…. உன்னோட உணர்வுகளுக்கு வடிகால் தேடாதே’ ன்னு சொன்னது நியாபகம் இருக்கா…’’

என நிறுத்தியவள்…

"ஒரு வயசுக்கு மேல தான் சத்ரி உணர்வுகளை அடக்கி அதற்கு வேற வழி தேடாமல் இருக்க முடியும்… ஆனால் எனக்கு அந்த வயதில் அம்மா அப்பாவுடைய பாசம் கிடைக்காத ஏக்கம், அவங்களோட உதாசீனம் இதையெல்லாம் எப்படி மறைக்க முடியும் மறக்க முடியும்….. எப்படி தாங்குவேன் சத்ரி… “

"ப்ரண்ட்ஸ் கிட்ட ஷேர் பண்ணிக்க கூட முடியாது… ரொம்ப அவமானமா இருக்கும்….. "என

பள்ளி செல்ல தடை விதைத்ததில் இருந்து வேலைக்கு செல்ல மறுத்தது வரை ஒன்றுவிடாமல் கூற… கண் இமைக்க கூட மறந்து போய்… கண்கள் வெறிக்க சாத்வியையே பார்த்திருந்தான்…சத்ரி…..

சொல்லி முடித்தவளுக்கு பாரம் இறங்கியதென்றால், கேட்டவனுக்கோ அதை விட அதிக வேகத்தில் பாரம் ஏறிக் கொண்டது…

‘‘இவ்வளவு கஷ்டத்தையும்… எப்படி எனக்குள்ளேயே வச்சுக்க முடியும்….. எப்படி அடக்க முடியும்… அதை அடக்கும்

வழி ... இதற்கு மட்டும் தான்..... இருந்தது........ "என அவளின் பார்வை கட்டிலை நிறைத்திருத்த நோட் புக்குகளை பார்க்க...

சத்ரிக்குள் எழும் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்த என தெரியாமல் தலையை கைளில் தாங்கியபடி அசையாமல் இருந்தான்......

"நீ இல்லாமல் நான் சந்தோஷமா இல்லை சத்ரி,... உன்னோடவே என் சந்தோஷச்தையும் எடுத்துட்டு போய்ட்ட சத்ரி...'' என குனிந்திருந்த அவன் தலையில் ஒவ்வொரு இடியாய் இறக்கினாள்...

"நீ மட்டும் ஊரை விட்டு போகமால் இருந்திருந்தால்...'' என நிறுத்த , சட்டென தலையை தூக்கி பார்த்த சத்ரியனிடம்... கட்டிலில் கை காட்டி...

"இதற்கெல்லாம் வேலையே இல்லாமல் போய் இருக்கும் சத்ரி...'' என அடுத்த இடியை இறக்க.... சத்ரியின் இதயமே ஒரு முறை துடிப்பை நிறுத்தியது...

"என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியதில், பர்ஸ்ட் ரேங்க் உனக்கு தான் சத்ரி... அப்பா, அம்மா.... ஏன் கிருத்தி கூட உனக்கு பிறகு தான்... "என அவள் உணர்வுகள் வெடிக்க ஆரம்பிக்க...

"சாவி...'' என அதிர்ச்சியை காட்டனான் சத்ரி........

"எல்லோரை மாதிரியும்…. என்னை என்னோட அம்மாகிட்டேயே வளர விட்டிருந்தா இவ்ளோ பிரச்சனை வந்திருக்காது சத்ரி… காலையில் உன் முகத்தை பார்த்து விடியிற நாள், உன் முகம் பார்க்காமல்… அடையவே அடையாது….. இதை எனக்கு பழக்கமாக்கி விட்டதே நீ தான்……'

''என்னை என் அம்மாகிட்டயே விட்டு இருக்கலாம் சத்ரி… அவங்களோட பொண்ணாவே…. உன் பாசத்தை தெரிஞ்சுக்காமலேயே வளர்ந்திருப்பேன்……..'' என அடுத்தடுத்து வார்த்தைகளாலேய அவனை சுட்டெரிக்க….

அவள் பேச பேச

சத்ரியின் கூர் விழிகள்…. அதன் தன்மையை இழக்க….

இதழ்கள் அதன் பாஷையை மறக்க…..

செவிகள் அதன் தனித்தன்மையை வெறுக்க….

இதயம் ஒரீரு நொடிகள் அதன் இயக்கத்தையே நிறுத்த…..

கண்கள் மட்டும் உயிர்பெற்று…. கையில் விரித்து இருந்த பக்கங்களில் நிலைக்க… கண்களோ….. கண்ணீரை நிறைத்தது…

ஒரு சொட்டு கண்ணீர் , அவன் கன்னங்களில் உருண்டோடி…..தாடையில் சரிந்து….. அவள் எழுத்துக்களின் மேலேயே விழ…

இன்க் பேனாவினால் எழுதிய எழுத்துக்கள், அவன் கண்ணீரை... தனக்கு கிடைத்த மருந்தாய் எண்ணி தனக்குள் இழுத்துக் கொண்டது…..

அடுத்த சொட்டு கண்ணீர் விழும் முன் சாத்வியின் கைகள் அதை ஏந்தியிருக்க...

நீர்திரையிட்ட விழிகளோடு, அவளை நிமிர்ந்து பார்க்க….. ‘‘உன் கண்ணீர் , என்னோட எழுத்துக்களை கரைச்ச மாதிரி... உன்னோட பாசத்திற்கு என்னையவே கரைக்கிற அளவுக்கு சக்தி இருக்கு... அழாதே கரைஞ்சிடுவேன்... உனக்குள்ளயே கரைஞ்சிடுவேன்...இங்கே கரைஞ்சு காணாமலே போய்டனும்னு தோணுது சத்ரி….’’ என அவனின் இதயமிருக்கும் பக்கத்தை தொட்டு காட்டி... "இங்கேயே கரைஞ்சு காணாமல் போய்டனும்…..’’ என விழிகள் நான்கும் உறவாட…..

சத்ரியோ…. உணர்வுகளின் கொந்தளிப்பில் சிக்கி…..அதனை தாக்குபிடிக்கமுடியாத சத்ரியோ...

கையில் இருந்த நோட்புக்கை ஒரு புறமாய் வீசி எறிந்து விட்டு…. தடுமாறிய கால்களை, நிதானப்படுத்தி... வெளியே வர… போகும் அவனையே பார்த்திருந்தவள்…..

"இதே, இடத்தில் வேற ஒருத்தன் இருந்திருந்தா... சமாதானம் செய்றேன்னு... அட்வான்ட்டேஜ் எடுத்திருப்பான்…..ஆனால் நீ...’’

"இதாண்டா…. இது தாண்டா….. சத்ரி…. என்னோட சத்ரி…''

என அவன் வெளியேறும் முன் வார்த்தைகளை அவனிடம் வீச…

மீண்டும் ஒரு முறை வேலை நிறுத்தம் செய்தது அவனின் இதயம்…..

"உணர்வுகளுக்கு வடிகால் வேண்டாம்…

ஆனால் மரணம் தேடும் உணர்வுகளுக்கு…

நீ தான் வடிகால் என அறிவாயா…..

மரணித்த உணர்வுகளுக்கு என் எழுத்துக்கள் சமர்பணம்…..

ஒரே எழுத்துக்கள் தானே என எண்ணாதே…..

ஒவ்வொரு எழுத்தின் பின்னும் என் உணர்வுகளின் மரணம்….

எழுத்துகளை கரைத்த உன் கண்ணீர்…..

உயிர்தெழ வைக்குமா என் உணர்வுகளை………''

என அவளின் உணர்வுகள் தன்னுடனேயே தன் பின்னேயே வருவது போல் ஓர் உணர்வு…மாடிப்படியில் நின்றவனுக்கு மூச்சும் அடைத்தது…

அதிலிருந்து வெளி வரமுடியாமல் தவித்து தடுமாறி நின்றிருந்தான்….

# அத்தியாயம் 21

**கீ**ழே இறங்கிச் செல்லவும் முடியாமல், அறையினுள் செல்லவும் முடியாமல்... சாத்வியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் கவனத்தை எங்கும் சிதற வைக்க முடியாமல், அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தொடர்ந்து ஒலித்து...அவன் காதுகளை கிழித்துக் கொண்டிருக்க... காதுகளை இறுக்கமாய் பொத்திக் கொண்டான்..... சத்ரி.....

சாத்வியின் வார்த்தைகளை..... 'கோபத்தில் எதோ பேசுறா....' என ஒதுக்க முடியவில்லை... இத்தனை காலமாய் அடைத்து வைத்த பாரம் முழுவதும் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாய் சீறி வந்ததை உணர்ந்தவன்......... இல்லை அவளோட முழு பாரமும் இறங்கவில்லை.....இறக்கி வைக்கவில்லை...... இன்னும் அவளுள் ஏதோ இருக்கு....... என அவனது மனம் உணர்த்த மீண்டும் அறையினுள்ளே சென்றான்.....

கண்களை மூடி சோபாவிலேயே அமர்ந்திருந்த அவளின் முன் வந்து... கீழே முழங்காலிட்டு அமர்ந்து.....

சாய்ந்திருந்த தலையை , அவளின் கன்னங்களில் கை கொடுத்து...ஒரு வேகத்துடன்... தன் முன் திருப்பி... ‘‘இன்னும்

என்னென்ன.... இங்கே அடைச்சு வச்சிருக்க...'' என இயல்பாய் அவன் கைகள் அவள் இதயத்தின் மீது கை வைத்து கேட்க.....

அவனின் அழுத்தத்தில் கண் திறந்தவள்... ''அசிங்கமா பேசாத.....தொடாத...'' என சிரித்தாள்.....சாத்வி....

இவ்வளவு நேரமிருந்த இறுக்கம் தளர்ந்து, ஒரு வித நிம்மதியுடன் சாதாரண மனைவியாய் அவனை கேலி செய்து பேச.....

இலகுவாய் இருந்தவன் சாத்வியின் பேச்சின் பின் அப்படியே இறுக்கத்திற்கு மாறி இருக்க...... அவள் கேலியை கவனிக்காத வண்ணம்..... "இன்னும் என்னென்ன இருக்கு சொல்லிடு..... மொத்தமா சொல்லிடு...'' என வார்த்தைகள கடித்து துப்ப.....

அவளும் விளையாட்டை விட்டவளாய்.....

"ஒன்றாக , இரண்டா..... அது இருக்கு நிறையா..... ஆனா.... ஒன்னே ஒன்று மட்டும் இப்போவே உன்கிட்ட ஷே பண்ணனும்...'' என அவன் கைகளை பிடித்து எழுப்பி தன் அருகில் அமர வைத்து... அவன் மடியில் தலை சாய்ந்து......

''நீ ஊரை விட்டு போறதுக்கு முன்னாடி..... ஒரு தடவை ஒரே ஒரு தடவை.......... "என்னைக்கா இருந்தாலும் நான் தான் உனக்கு..... நீ தான் எனக்கு....'' ன்னு... ஒரு வார்த்தை

சொல்லிட்டு போய் இருந்திருக்கலாம்... சத்ரி....'' என நிறுத்தி அவன் முகம் பார்த்து.....

"என்ன புரியலையா...'' என கேட்டு... காதலோடு வலியையும் சுமந்திருந்த அவன் விழிகளை பார்த்தபடி.....

''ஒரு நாள் உன்கிட்ட..... 'என்னை கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டேன்.....' நியாகம் இருக்கா...'' என அவனிடம் கேட்க...

அவள் விழிகளில் இருந்து தன் பார்வையை திருப்பியிவன்.....

''ம்.... நியாபகம் இருக்கு...'' என

இருவருக்கும் அந்த தருணம் மனதில் ஓடியது...

சிவாவினால் அடிபட்டு வீட்டில் இருந்த தருணம்.....

சில நாட்களாய் கோழியுடன் தன் வீட்டிற்கு வரும் சாத்வி.... அன்றும் வந்தாள்....

"சத்ரி, இந்தா சூப்பை பிடி....'' என கால்கள் தரையில் படாமல் மான்குட்டியாய் தாவி குதித்தபடி... அருகில் வந்து அவன் கைகளில் திணிக்க.....

அவளையும் சூப்பையும் மாறி மாறிப் பார்த்த சத்ரி "நீ நடந்து வர்றீயா.....

இல்லை பறந்து வர்றீயான்னு ஸ்லோ மோஷன் கேமரா வச்சு தான் கண்டுபிடிக்கனும்...இதில் கையில் இரண்டு பாத்திரம்

வேற... நூ வர்ற ஸ்பீடுக்கு , சூப்பும், குழம்பும்.. இருக்கா.... இல்லை கொட்டிடுச்சா...'' என கிண்டலாய் கேட்க....

"ஐயோ பாவம்ன்னு கொண்டு வந்தா... நீ என்னையவே கிச்டல் பண்றியா... உனக்கு போய் சூப் கொண்டு வந்தேன் பாரு......'' என அவன் தலையில் நங்கென கொட்ட....

"ஆ....'' என வேண்டுமென்றே கத்தி... "உங்கப்பன் அடி வாங்கி விட்டது பத்தாதுன்னு..... நீ வேற அடிக்கிற...'' என வலிக்காத தலையை தடவிக் கொடுக்க.....

வலிக்காமல் கொட்டியது அவளுக்கும் தெரிந்தது தானே... வேண்டும் என்றே..... இவன் கத்துறான்....என தனக்குள்ளே சிரித்துக் கொண்டு...

"இது வலிக்குதா... இரு அப்பாகிட்ட சொல்லி இன்னொரு தடவை உனக்கு ரவுண்டு கட்ட சொல்றேன்.....'' என கிண்டலாய் சாத்வி கூற

"அடிப்பாவி ... நீயும் அடி வாங்கி விட பிளான் பண்ணிட்ட போல.....'' என உண்மையாகவே அவளிடம் கேட்க....

'ஹா.... ஹா.....' என சிரித்தவள்.....

''அய்யோ....

சும்மா சொன்னேன் சத்ரி..... நான் போய் உனக்கு அடி வாங்கி விடுவேனா... அப்பாகிட்ட சொன்னாலும்... சும்மாலாம்

அடிப்பாங்களா... ஏதாவது காரணம் வேண்டாம்...'' என அவன் கைளில் சூப்பை திணிக்க.....

அதை வாங்கியபடி.....

"காரணமா.... அதுவும் உங்கப்பனுக்கா... நீ இப்படி கோழியும் கையுமாய் இருக்கிறதை உங்கப்பன் பார்த்தான்..... அது ஒன்னே போதும்... மறுபடியும் எனக்கு அடி கன்பார்ம்.....''
என சூப்பை ரசித்தபடி கேட்க.....

"ஹா....ஹா... வாங்கின அடி தான் இப்படி பேச வைக்குது போல... "என சிரித்தவள்..... அவனது முறைப்பை கண்டு....சிரிப்பை நிறுத்தி...

"நீ எங்கப்பாகிட்ட இருந்து லைப் லாங் தப்பிக்க ஒரு வழி இருக்கு... அதுக்கு நான் ஒரு ஐடியா சொல்றேன் கேட்கிறியா.....''என கிண்டலாய் அவளும் பேச

ஏதோ விளையாடுகிறாள் என நினைத்த...சத்ரியும்..... "சொல்லுங்க மேடம்..... கேட்டுட்டா போச்சு...'' என

"என்னை கல்யாணம் பண்ணிக்க.... ஆனா வெங்கட் மாமா மாதிரி ஓடி எல்லாம் போக வேண்டாம்... எப்படியும் அவருக்கு நீ மருமகன் ஆயிடுவ...... அப்போ... அப்பா உன்னை எதுவும் செய்ய மாட்டாங்க..... "என தன் முன் ஒரு நாள் ஆசை ததும்பும் முகத்துடன் கேட்ட குழந்தை முகம் இப்போதும் சத்ரியின் கண்களில் வலம் வரத்தான் செய்தது.......

விளையாட்டாய் இருவரும் பேச…. பேச்சு இந்த திசையில் திரும்பும் என எதிர்பாராத சத்ரி….. சட்டென சுதாரித்தான்… “ஏய், படிக்க வேண்டிய வயசில் கல்யாணம் கேட்குதா உனக்கு….அதுவும் என்கூட…” என சாத்வியின் இடது காதினை பிடித்து அழுத்தமாய் திருகிவிட…

"ஆ…ஆஆ….. வலிக்குது சத்ரி…..” என துள்ளக் குதித்து….

"வலிக்குது……சத்ரி…..” என அவனிடம் இருந்து துள்ள…. சத்ரியோ….. விரிந்த புன்னகையுடன்… மேலும் மேலும் காதினை திருக…

"ஐயோ…. விடுடா…வலிக்குதுடா….. "என கத்தவே ஆரம்பித்தாள்…..

"இனிமேல் இப்படி பேச மாட்டேன்னு சொல்லு….. விடறேன்….” என ஒரு வித தீவரமாய் பேச…..

வலி தாங்காத சாத்வியும்…..

"பேச மாட்டேன், பேச மாட்டேன், பேச மாட்டேன்…..” என அவசரமாய் சொல்ல…..

"பேசின…. கொன்னுடுவேன்….”என அவள் காதுகளை தன் கைகளில் இருந்து பிரிக்க…..

அடுத்த நொடி அவனிடமிருந்து தள்ளி நின்று கொண்டு

"உனக்கு போய் ஐடியா குடுத்தேன் பாரு….என்னை சொல்லனும்….’’என காதை தேய்த்தபடியே கூற

"அடி வாங்காமல் இருக்க... அம்மையார் குடுக்குற ஐடியாவை பாரு….. உயிருக்கே உலை வைக்கிறே...’’ என அவள் காதினை மீண்டும் பிடிக்க வர…

அவசரமாய் அவனது அறை வாசலில் கால் வைத்தபடியே திரும்பி….

"நான் எல்லாம் உனக்கு கிடைக்க கொடுத்து வச்சருக்கனும்….. வேண்டாட்டி போடா...’’ என

"அடிங்…..’’ என அவளை பிடிக்க வர…..

"போடா... "என அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள் சாத்வி...

அது இருவருக்குமே நியாபகம் வர….

"அன்னைக்கு இரண்டு பேருமே விளையாட்டா தான் பேசினோம்….. ஆனால் அப்போவே என் மனசில் நீ பதிஞ்சு போய்ட்ட... இல்லைன்னா அப்படி ஒரு வார்த்தை என் வாயில் இருந்து வந்திருக்காது... விளையாட்டுப் போல் கேட்டாலும் அது நிஜம் தான் ...

என்னைக்கேட்டா…. அது காதலோட வெளிப்பாடா தான் தெரியுது சத்ரி...எஸ்…. அது காதல் தான்…. அப்போது எப்படின்னு தெரியாது….. ஆனால் இப்போ அது காதல் தான்….. எஸ் காதல் தான்...…

என்னோட காதலை அன்னைக்கு..... நிராகரிக்காமல் இருந்திருந்தால் ...நீ எனக்கு தான்னு தெரிஞ்சிருந்தால்..... நான் எதை பத்தியும் பயப்படாமல் யாரையும் கேர் பண்ணிருக்க மாட்டேன்.....

என்னைக்காவது ஒருநாள்... எனக்காக வருவேன்னு... அந்த .நம்பிக்கையில் இருந்திருப்பேன்..... நிறைய விஷயத்தில் ஏமாந்து போய் இருக்க மாட்டேன்.....'' என தன் பாட்டிற்கு பேசிக் கொண்டே செல்ல.....

அவளின் பேச்சில் தலையே சுற்றிப்போனது சத்ரிக்கு... அன்னைக்கு விளையாட்டிற்கு கேட்ட ஒரு விஷயத்தை இப்படி பெரிசு பண்றாளே என ...எரிச்சலும் கூடவே வர.....

"நீ பேசுறது உனக்கே லூசுத்தனமா தெரியலையா சாத்வி..... "என கோபத்துடன் கேட்க......

''உன் மேல் பைத்தியம் பிடிச்சு அலையறேன்னு...உனக்கு இன்னும் புரியலை சத்ரி...... "என விரக்தியாய் புன்னகைத்தவள்....

"அன்னைக்கு ஒரே ஒரு வார்த்தை, 'சரி' ன்னு கூட சொல்லி இருக்க வேண்டாம்... 'உனக்கு முதலில் கல்யாண வயசு வரட்டும் அப்பறம் பார்க்கலாம்.....' இந்த வார்த்தையை கூட சொல்லி இருக்கலாம்... அந்த நம்பிக்கையோட இருந்திருப்பேன்..... "என அதை விடாமல் பேச.....

"ஏய், லூசாடி நீ… நையண்த் படிக்கிற உன்கிட்டவந்து, எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு...

உனக்கு நான் தான்…. எனக்கு நீ தான்... நாம இரண்டு பேரும் தான் சரியான ஜோடி….

இரண்டுபேரும் லவ் பண்ணலாம்... லவ் பண்ணி நாசாமா போகலாம்ன்னு தெரிஞ்சே கேட்க... சொல்றியா…இல்லை தெரிஞ்சே உன் வாழ்க்கையை கெடுக்க சொல்றியா... லவ் பண்றாளாம் லவ்வு... மண்ணாங்கட்டி லவ்வு…….. "என ஒவ்வொரு வார்த்தைக்கும் ஸ்ருதி ஏறிக்கொண்டே செல்ல...

சாதாரண மனிதனாய் இருந்து யோசித்த சத்ரியும்... சத்ரி மட்டுமே உலகம் என்றிருந்த சாத்விக்கும்….. இந்த ஒன்றில் மட்டும் எண்ண அலைகள் வேறு வேறு திசையில் பயணிக்க... இருவருமே….. தான் சொல்வது தான் சரி என நின்றிருந்தனர்…..

அதை மாற்ற முயற்சி கூட செய்யாத சாத்வி... ‘‘எல்லோரும் சந்தோஷமா வாழத்தான் லவ் பண்ணுவாங்க….. நாசமா போறதுக்கு இல்லை…..’’என கடுப்புடன் கூற

"பெரிய….. அமரக் காதல்ன்னு நினைப்போ... அமரக் காதல் எல்லாம் நாசாமா தான் போய் இருக்கு...’’ என பல்லைக் கடிக்க...

“ஓ…. அப்போ நான்…. உன்னை லவ் பண்ணி இருந்தால்...நாசமா போவேன்னு சொல்ற...அப்படித்தானே….” என சிலிர்த்துக் கொண்டு நிற்க…

"அந்த வயசில் என்னைன்னு இல்லை, வேற யாரையும் லவ் பண்ணி இருந்தாலும் நாசமா தான் போய் இருப்ப...” என வார்த்தைகள் தடித்து விழ…..

"ஓ… அதனால் தான், சார் அருண் கிட்ட இருந்து என்னை பிரிச்சு வைச்சீங்களோ...”என நேரம் பார்த்து அவளும் கேட்க…..

"பிரிச்சு வைக்கிறதுக்கு, நீங்க லவ்வர்ஸ் இல்லை….” சுள்ளென சத்ரியும் விழ….

"நீ அப்படி ஒரு காரணத்தை என்கிட்ட சொல்லி தான் , அருணை பிண்ணி எடுத்ததா எனக்கு நியாபகம்….”என சரியாய் அவனுக்கு நினைவூட்ட

"அப்கோர்ஸ்... உங்கிட்ட இருந்த அருணை பிரிக்க….எனக்கு அந்த ஒரு காரணம் தான் கிடைச்சது...நல்லது நடக்குறதுக்காக பொய் சொல்றதில் தப்பில்லை…..” என தெனாவட்டாய் கூற...

“ஆனால் அந்த பொய்….. உனக்கு சாதாகமா மட்டும் தான் வருமா……..?.” என வழிகளை அவனுடன் கலக்க விட்டு திருப்பியவள்…...

"உன் மேல் எந்தளவுக்கு பைத்தியமா இருக்கேன்னு உனக்கு இன்னும் புரியலை சத்ரி...'' என முதல் முறையாய் தன் காதலை அவனுக்கு உணர்த்த முற்பட…. அதை புரிந்து கொள்ளாத சத்ரியோ...

‘‘பைத்தியமா...!'' என இளக்காரமாய் பார்த்தவன்... "இப்போ இப்படி வாய் பேசுறியே... ரமேஷூக்கு வேற பொண்ணோட மேரேஜ் ஆயிடுச்சு... அதனால் நான் உனக்கு கிடைச்சேன்...''

"ஒரு வேளை ரமேஷ் விசயத்தில் எதும் ப்ராப்ளம் ஆகாமல் இருந்திருந்தால்...'' என கிண்டலாய் நிறுத்த…..

"வெரி சிம்பிள்... ரமேஷையே கல்யாணம் பண்ணியிருப்பேன்…..'' என அசராமல் கூற…..

சத்ரிக்கு ஹார்ட் அட்டாக்கே வரும் போல் இருந்தது... இந்த முறை இளக்காரமாய் பார்ப்பது அவள் முறையானது...

அவள் பார்வையும் , இலகுவாய் வந்த பதிலும் சத்ரிக்கு அளவில்லாமல் பிபியை ஏற்றி விட்டிருக்க…..

"இவ்ளோ…. நேரம் லவ்வு…. லவ்வுன்னு…. பினாத்திக்கிட்டு இருந்த….. உன் லவ்வுக்கு இவ்வளவு தான் ஆயுசா…..'' என சிலிர்த்தெழுந்த கோபத்துடனே கேட்க…

‘‘உனக்கான லவ் எப்பவுமே அழியவே அழியாது சத்ரி...அதை இப்போவும் சொல்வேன்...

ஒரு வேளை நீ ரமேஷோட தான் என் கல்யாணம்ன்னு முடிவு பண்ணியிருந்தா...

கண்டிப்பா அவனை தான் பண்ணியிருப்பேன்.... .நீ என்ன சொன்னாலும், நான் கேட்பேன்.....அந்தளவு உன் மேல் காதல் இருக்கு........

உன்னோட முடிவு, எந்த விசயத்திலையும், எந்த நேரத்திலையும், எந்த இடத்திலேயும் நான் ஏத்துப்பேன்....." என விழிகள் பளபளக்க கூற...

சத்ரியின் கண்கள் வெகு கூர்மையாய் அவளில் பதிந்து மீள... இதயம் ஒரு முறை தாளம் தப்பி மீண்டும் துடிக்க... வாயில் இருந்து வார்த்தைகள் வர வில்லை... வரவிடவில்லை சாத்வியின் பதில்...

அவனின் அதிர்ந்த தோற்றத்தை பார்த்த சாத்வி...

"ரொம்ப ஓவரா பேசுறேன்ல........" என நிறுத்தி... "சரி சிம்பிளான ஆன்சர்... எத்தனை காதல் கல்யாணத்தில் முடியுது... நானும் அந்த ரகம்ன்னு... உன்னை மனசிலேயும்.... ரமேஷை.... "என சொல்லி முடிக்கும் முன்...... தன் மடியில், தன் முகத்தை பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தவளின் வாயை இறுக அடைத்தான் தன் முரட்டுக் கைகளால்...

முகமிரண்டுமே வேதனையை பிரதிபலிக்க... இருவரின் பார்வைகளும் தீயாய் உரசிக்கொண்டிருக்க.....

அவன் கைகளை பிரித்து... அவன் பிரதிபலித்த உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டு

“ஓவரா... பீல் பண்ணாதா...” என இன்னும் அவன் மடியில் வாகாய் படுத்துக் கொண்டு... "என்னோட கெஸ்ஸிங் கரேக்டா இருந்தா.... நீ ஏதோ பிளான் பண்ணி தான்..... இந்த கல்யாணத்தை நடத்தி இருக்கனும்... ஏதோ பிராடு வேலை பார்த்திருக்க...” என அவனை அறிந்தவளாய் அசால்ட்டாய் அவன் காலை வார.....

சத்ரிக்கு , அதிர்ச்சி தான்..... ஆனாலும் அதிர்ச்சியை மீறிய பெருமை அதிகமாய் தலை தூக்க..... ஆழமாய் அவளை பார்த்தபடி இருந்தான்...

அவளின் மீதான காதலை நிமிடத்திற்க்கு நிமிடம் ஏற்றிவிட்டுக் கொண்டிருந்தாள்... சாத்வி..... தன்னை அறியாமலேயே....தன் பேச்சினாலேயே.....

சிறு சிறு விஷயங்களில் சரியாய் கனிப்பவள்.... இதையும் கணித்திருக்கிறாள் என நினைத்த சத்ரிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் தடுமாறிய உணர்வுகள் மொத்தமாய் தடுமாற......

அவளின் இடையில் கை கொடுத்து... முரட்டுத்தனத்தை மொத்தமாய் அவள் இடையில் காட்ட....

அவன் மடியில் இருந்தவள் திமிறக்கூட முடியவில்லை... அவனின் செயலில் தடுமாறி அவன் வயிற்றினுள் புதைந்தவள்......நெளிந்து கொண்டே....

"சத்ரி..... இது என்ன புதுசா...'' என தடுமாறிக் கேட்க.....

"உன் கவலை எல்லாத்தையும் நீ மறக்கனும்...'' என இடையில் இன்னும் அழுத்தத்தை கொடுத்து...தூக்கி தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு கூற....

"கவலையை மறக்க ....எனக்கு.... ஸ்ரீ ராம ஜெயம் இருக்கு...''

"அது மட்டும் போதுமா.....? நான் வேண்டாமா.....'' என தேடல் நிறைந்த குரலில் கேட்க.....

"கவலையை மறக்க, ஸ்ரீ ராம ஜெயம் இருந்தாலும் , அதுக்கு பின்னாடியும் நீ தான் இருக்கே சத்ரி.....'' என கண்களில் கூர்மையுடன் கூற...

''இனி இதெல்லாம் வேண்டாம் உனக்கு... இப்போ தான் உன் கவலை தீர்க்க... காயங்களை போக்க... நான் இருக்கேனே....'' என பார்வைகள் அவளை கூறு போட.....

அந்த பார்வையை திடமாய் தாங்கி நின்ற சாத்வியோ..... சிறிதாய் விரிந்த புன்னகையோடு...

"என்னோட காதலை இன்னும் நீ உணரலை சத்ரி... உணர்ந்திருந்தால்..... இப்படி பேசிட்டுஇருக்க மாட்டே...'' என விரக்தியாய் சொல்ல...

அவளின் குரல் மாறுபாட்டில்... தானாகவே அவன் கைகள் தளர...அமைதியாய் அவன் மடியில் இருந்து எழுந்து கீழே சென்றாள்.....

சத்ரிக்கோ... சாத்வியை புரிந்து கொள்ளவே முடியாமல் தலையை பிடித்தபடியே அமர்ந்திருந்தான்.....

சாத்வி அமைதியாய் கீழே வர..... அனைவரும் இவர்களுக்காகவே காத்திருக்க..... கேள்வியாய் பார்த்தவளிடம்.... "குலதெய்வம் கோவிலுக்கு போகனும்மா... "என சொல்லவும்..... மீண்டும் தங்கள் அறையினுள் சென்று சத்ரியையும் அழைத்துக் கொண்டு கீழே வந்தாள்...

எல்லோரும் மகிழ்ச்சியாய் கிளம்பிக் கொண்டிருக்க... "ஹேய்... என்னாச்சு.....'' என எதையோ தொலைத்தபடி இருந்த கிருத்தியின் அருகில் அமர்ந்தான் வெங்கட்....

"நமக்கு கல்யாணம் ஆன போது..... எனக்குள்ள நீயும்.... உனக்குள்ள நானும்ன்னு... உலகத்தையே மறந்து போய் இருந்தோம்... ஆனால் சத்ரி சாத்வி இரண்டு பேருமே... சாதாரணமா கூட அவங்க வாழ்க்கையை ஆரம்பிக்கலையேன்னு தான் கவலையா இருக்கு......'' முதலிரவு முடிந்திருக்கும் என

நனைத்த கிருத்திகாவிற்கு…… வெங்கட் எல்லாவற்றையும் கூறிய பின்….. அதை அவளால் ஜீரணிக்ககூட முடியவில்லை….அதன் பொருட்டே கவலை கொள்ள…

அதை எளிதாய் புறம் தள்ளிய வெங்கட்…

"சத்ரியை பத்தி தெரியாமல் பேசிட்டு இருக்க… அவன் அப்படியெல்லாம் சாத்வியை விட்டு விட மாட்டான்….. பய அப்பவே சாவி சாவி ன்னு சாவி கொடுத்த பொம்மை மாதிரி சுத்திட்டு இருப்பான்…. இப்போ அவன் கையிலேயே அவளை தூக்கி கொடுத்தால்… அதை நான் சொல்லவும் வேணுமா…'' என சிரிக்க…..

பழைய சத்ரி சாத்வி நினைவிற்கு வந்தாலும்… "இரண்டு பேரும் சந்தோஷமா வாழ்ந்தால் அதுவே போதும் வெங்கட்… அவங்களை கலை இழந்த முகத்தோட பார்க்கும் போதெல்லாம்….. குத்துது வெங்கட்….. அதை விட வலிக்குது…..'' என கவலை கொள்ள…

தனக்கும் அப்படி தான் இருக்கிறது என வாய் விட்டு சொல்லவில்லை வெங்கட்… அவ்வளவு தான்….. மற்றபடி…அதே கவலை அவனுள்ளும் இருக்க… "இரண்டு பேரும் சந்தோஷமா…. வாழ்க்கையை ஆரம்பிக்கனும்…'' என மனதினுள் வேண்டிக் கொண்டான்…..

வேன் ஒன்று ஏற்பாடு செய்திருக்க..... நெருங்கிய சொந்தமாய் சிலருடன் கிளம்பியது அந்த பயணம்.....

மூன்று மணி நேர பயணம்..... இரண்டிரண்டு பேர்களாய் அமர.....சாத்வியும் சத்ரியும் அருகருகே அமர.....

அவர்களை கண்காணித்தபடியே சங்கர் அவர்களுக்கு நேர் எதிரில் அமர.....

'சாவியை இந்த பாடு படுத்திட்டு இங்கே என்னையா லுக் வேண்டி கிடக்கு' என அவரை ஓரக்கண்ணால் பார்த்தவன்..... திரும்பி அமர்ந்து கொண்டான்.,.

சாத்வியின் பாரம் அனைத்தும் இவனுள் ஏறியிருக்க... அமைதியாகவே வந்தான்...

கிராமத்திற்கே உரிய மண் வாசனையுடன் தார் சாலைகளின்றி , மரங்களின் குழுமையுடன், மிதமான ஆற்றின் நீரோட்டத்தையும் உள்ளடக்கிய அவர்களின் குலதெய்வம் கோவிலுக்கு வந்திருந்தனர்...

பொங்கல் இனிதே வைத்து முடிக்க...

‘‘கருவறையில் இருக்கும் குல தெய்வத்திற்கும், கோவிலை சுற்றியுள்ள மற்ற தெய்வங்குக்கும் இரண்டு பேரும் படையல் வச்சிட்டு வாங்க...’’ என சத்ரியையும் சாத்வியையும், குருக்கள் அனுப்ப...

“நீங்களும் கூட போங்க…..” என வெங்கட்டையும் கிருத்திகாவையும் சிவகாமி அனுப்ப….. அவர்களுடன் தானாய் இணைந்து கொண்டாள் காவ்யா…..

இரண்டாக வெட்டப்பட்ட இலைகளை காவ்யா… சாமியின் சிலை முன்பு வைக்க…. கிருத்திகா அதில் பொங்கல் வைக்க… வெங்கட் பொரி கலவையை வைக்க… சத்ரி அதில் இரண்டு இரண்டு வாழைப்பழங்களாய் வைத்தபடி வர…..சாத்வி சுண்டல் பயறு வகைகளை படைத்தபடி வந்தாள்…

இதில் இருக்கிற ஒற்றுமை என்னைக்கும் நிலைக்க வேண்டும்….. இந்த ஒற்றை வேண்டுதல் மட்டுமே அங்கிருந்த பெரியவர்களின் மனதில் தோன்றியது…..

இனியாவது சத்ரி ,சாத்வி இரண்டு பேரும் சந்தோஷமா வாழனும்… அங்கிருந்த மற்றவர்களின் மனமார வேண்டுதல் இதுவாகத் தான் இருந்தது… ஆனால் புதுமனத் தம்பதிகளோ….. கண் மூடி யபடி அமைதியாய் இருந்தனர்…..

தெய்வத்திடம் என்ன கேட்டு முறையிடுவது எனத் தெரியாமல்…

இஷ்டமில்லை என்றாலும்…. "மற்றவர்களை காயப்படுத்தி அதில் தான் சந்தோஷம் காண வேண்டுமா…..” என்ற எண்ணமே அதிகரிக்க…..

சிரித்து பேசா விடினும் முகம் சுருக்காமல் பதில் பேச ஆரம்பித்தாள்…. சாத்வியிடம் ஒரிரு வார்த்தைகளுடன் தேவைக்கு பேசுவதோடு சரி…. அதை மீறி எதுவும் செய்ய முடியவில்லை சத்ரியால்…..

கோவிலில் இருந்து வீட்டிற்கு வர இரவானது……

காலையில் எப்போதும் எழும் நேரத்திற்கு எழுந்தாள்….. புத்துணர்வாய் வந்தாள்….. மகா சிவகாமி, கிருத்திகா என அனைவரும் சமையலறையில் இருக்க….. வந்து எட்டி பார்த்து பின் அமைதியாய் திரும்ப…..

சத்ரியும் அங்கே வர சரியாய் இருக்க….. அவனை பார்த்து மீண்டும் சமையலறையினுள் நுழைந்தாள்….

"வா, சாத்வி... ஏம்மா, அங்கையே நின்னுட்ட….. வா…. கிருத்திகா…டீ சூடு பண்ணுமா…..'' என சிவகாமி கூற…

"இல்லை அத்தை ….. நான் சூடு பண்ணிக்கிறேன்….. "என அமைதியாய் கூற….

மூவரும் அவளுக்கு வழிவிட….. அவளுக்கும் சத்ரிக்கும் எடுத்து வந்தாள்….

ஹாலில் இருந்த அவனுக்கு டீ கொடுத்து... சுவாதீனமாய் அவன் அருகில் அமர்ந்து டீயை பருக ஆரம்பித்தாள்…..

நேற்று தான் திருமணம் ஆனதென நம்ப கூட முடியவில்லை சத்ரிக்கு….. வருட வருடமாய் வாழ்ந்த கணவன்

மனைவியின் இயல்பு , அவளிடம் இருந்தது….. எந்த ஒரு தயக்கமும் இல்லை…..சத்ரியும் இயல்பாய் அவளுருகில் அமர்ந்து….. பருகினாள்… பின் அவனது கப்பையும் சேர்த்து எடுத்துக் கொண்டு…..செல்ல….

கைகளை சோபாவின் மீது போட்டு சாய்ந்து அமர்ந்து, போகும் அவளையே பார்த்திருந்தான் சத்ரி….. மனதினை அடைக்கும் உணர்வோடு…….

சின்ங்கில் டீ கப்புகளை கழுவியபடி….

"வேலை எதுவும் இருக்கா…. அத்தை நான் செய்யவா…..'' சிவகாமியிடம் கேட்டாள்…..

"வேலையெல்லாம் நான் பார்த்துக்கிறேன் சாத்வி….. நீ என் மகனை கவனி அது போதும்…..'' என சிவகாமி சிரித்தபடி கூற….

"இங்கே இப்படி சொல்லிட்டு நம்ப வீட்டுக்கு போன அப்பறம், அந்த வேலை பாரு, இந்த வேலையை பாருன்னு என் பொண்டாட்டியை சொல்லக் கூடாது'' என சிரித்தபடி சத்ரியும் அங்கே வர….

"உன் பொண்டாட்டி வேலை பார்க்க கூடாதுன்னா….. என் பொண்டாட்டியும் வேலை பார்க்க கூடாது…..'' என விநாயகமும் அங்கே வர…..

"அப்போ சரி , இனி நீயும் வேலை பார்க்காதே, நானும் பார்க்கலை.... சத்ரியும் அவங்க அப்பாவும் பார்த்துப்பாங்க...." என சிவகாமி நமட்டு சிரிப்புடன் கூற....

"உனக்கு போய் சப்போர்ட் பண்ணினேன் பாரு ... என்னை சொல்லனும்...." என விநாயகம் முறைத்து.....

"வாடா, மகனே ஓடிருவோம்..... இங்கே இருந்தா மாமியாரும் மருமகளும் நம்பளை பாத்திரம் தேய்க்க விட்ருவாங்க....." என சத்ரியை போலியாய் இழுக்க...

"நீங்க வேணா போங்கப்பா.... நான் என் பொண்டாட்டிக்கு ஹெல்ப் பண்ணிட்டு வாரேன்..... "என சாத்வியின் அருகில் செல்ல....

"அய்யோ..... நீ என்ன சத்ரி வேலை செய்ய போற... போ... இங்க இருந்து" என அசையாமல் தின்றிருந்த சத்ரியை இழுத்து சமகயலறையின் வெளியில் நிறுத்தி...

"போ.... "என விரட்ட... அப்போதும் அவளை புன்னகையுடன் பார்த்திருக்க....

"போ... "என அவனை திருப்பி..... முதுகில் கை வைத்து தள்ள..... சிரித்தபடியே சென்றான்....

கிருத்திகா சமையலறையில் இருந்து பார்த்தபடியே இருக்க, வெங்கட் "நான் சொன்னப்போ நம்பவில்லை..... சத்ரியே சாவி

கொடுத்த பொம்மைன்னு...'' என சிரித்தபடி கிருத்திகாவை பார்க்க.....

அவளும் பதிலுக்கு தலையசைத்தாள்..... மேலும் இரண்டு நாட்களின் பின்

திருச்சியும் வந்தாயிற்று.....

சிறிது நாட்கள் சங்கரும், மகாவும் திருச்ணியிலேயே இருக்க கட்டாயப்படுத்தி இருந்தார் விநாயகம்......

கடையில் நிறைய வேலைகள் பெண்டிங்கில் இருக்க..... அன்று... நேரத்திற்கு எழுந்து சத்ரி விரைவாய் கிளம்ப... சாத்வியோ...

பயண அலுப்பில் நன்றாகவே உறங்கிவிட... காலையில் அடித்துபிடித்து பேங்கிற்கு கிளம்பி கீழே வந்தாள்.....

"சாப்பிடுட்டு போமா....'' என சிவகாமி அவளுக்கு பூரிகளை எடுத்து வைக்க....

"சாப்பிட நேரமில்லை அத்தை... மதியம் வேணா வீட்டுக்கு வந்துட்டுப் போ...'' என பேசக் கொண்டிருந்தவளின் வாய்க்குள் பூரியை திணித்தான்....சத்ரி.....

"வேலை செய்ய உடம்பில் தெம்பு வேண்டாம்...

பட்னியா போய்....எங்காவது மயங்கி விழறதுக்கா...'' என அவளை பார்த்தபடி கூற...

அங்கருந்த அனைவரும் அவனை ஆச்சர்யமாய் பார்க்க...

"ஒரு விள்ளலை விழுங்கியவள்...’’.டைம் ஆச்சு சத்ரி...’’ என மீண்டும் சொல்ல.....

"வாதம் பண்ற நேரத்தில் வயிறை நிரப்பிடலாம்...’’ என அவளை சோபாவில் அமர வைத்து..... அவளருகில் நின்ற படியே சத்ரி....அவளுக்கு ஊட்ட.....

"ஒரு நாளாவது உன் மகளுக்கு ஊட்டி விட்ருப்பியா.....’’ என மகாவை சங்கர் பார்க்க...

அதை உணர்ந்த மகாவோ...... “சாப்பிடுன்னு ஒரு வார்தை உங்க வாயில் வராது... இதில் எங்கே ஊட்டி விட....’’ என பதில் பார்வை பார்க்க...

மாடியில் இருந்தபடி கிருத்திகா,வெங்கட்... ஹாலில் இருந்து சற்றே உள் வாங்கய அறையில் இருந்து மகா சங்கர்..... என அனைவரின் பார்வையும்....

அதட்டி ஊட்டிக் கொண்டிருந்த சத்ரி, அதை ரசித்தபடி உண்ணும் சாத்வி என இருவரின் மீதும் இருக்க... அந்த இருவரோ..... மற்றர்வர்களை மறந்த வண்ணம்..... இருந்தனர்...

...அவள் வாயில் தொடர்ந்து பூரிகளை அடைக்க... உதடுகள் ஒரு புறம் சிரிப்பில் விரிய.... எத்தனை பூரிகள் உள்ளே சென்றன என தெரியாமலேயே உள்ளே சென்றது..... சாத்விக்கு.....

அதிகமாக என்பதை வயிறு உணர்த்த...மீதமிருந்த பூரியை பார்த்தபடியே "சாப்பிட முடியலை.... சத்ரி.....போதும்'' என அவன் கைகளை தடுக்க...

"மிஞ்சம் வைக்கிற பழக்கத்தை இன்னும் விடலையா நீ...'' என அவளை பார்த்தபடியே...

மீதமிருந்த பூரியை... தன் வாய்க்குள் அடைக்க.....

அதை பார்த்த சாத்வி.....

அவன் கைவிரலுக்கும்..., இதழுக்கும் இடையில் தன் கையை வைத்து ‘‘வேண்டாம் எச்சி.....'' என

"சாப்பாடை வேஸ்ட் பண்றது எப்போவுமே எனக்கு பிடிக்காது.......சாத்வி......'' என ப்ளேட்டை காலி செய்ய...'' நீ மாறவே இல்லை.....'' என வாய் விட்டு கூறியவளுக்கு தண்ணீரை கொடுக்க...

சிரித்தபடியே வாங்கிக் குடித்தவள்... "பாய் சத்ரி...'' என அவனிடம் கூறி..... "வரேன் அத்தை.....'' என சிவகாமியிடமும் சொல்லிவிட்டு காரை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.....

சத்ரியும் கடைக்கு சென்றுவிட... இரவு தான் வீடு திரும்பினான் சத்ரி...

மாலை இறங்கி இரவு கவிழ ஆரம்பிக்க..... சத்ரி தங்கள் அறையினுள் வந்தான்.........

புடவையை கூட மாற்றாமல், ரூமின் நடுவில் டிராவல் பேக்…. டிராலி பேக் என இரண்டையும் பிரித்து….. அதில் இருந்தவற்றை கப்போர்டில் அடுக்கிக் கொண்டிருந்தாள்…..

ஏற்கனவே இருந்த கோபங்கள் குல தெய்வம் கோவில் போய் வந்த பின் சற்று மட்டுப்பட்டிருக்க... அவளை பார்த்த வண்ணம்...

"கீழே எல்லாரும் இருக்கிறாங்க….. போய் பேசிட்டு இருக்கிறதை விட்டுட்டு, இங்கே என்ன பண்ற….'' என சர்ட் பட்டன்களை கழட்டியபடி கேட்க…

"அப்பார்ட்மெண்டை இன்றைக்கு தான் காலி பண்ணினேன்…..அதான் திங்க்ஸ் எல்லாத்தையும்….. ஷிப்ட் பண்ணிட்டு இருக்கேன்…..'' என மீண்டும் அவள் வேலையை தொடர…..

"தனியாவா போன….. சொல்லி இருந்தா நான் வந்திருப்பேன்ல...'' என அவளிடம் சிறிது எரிச்சலுடனே கேட்க….

"நீயும் தான் அங்கே வந்தியே…..என்ன பொருள் இருந்தது…. ஒரு டிராலி பேக், டிராவல் பேக்….. இது போதும் என் மொத்த பொருளையும் வைக்கறதுக்கு என சிரிக்க…..

''அப்போ…. டேபிள் சேர், பெட் இதெல்லாம்….. ''என கேட்க…..

"ஸ்வீப்பர் ஒருத்தவங்க வருவாங்க….. அவங்க கிட்ட கொடுத்திட்டேன்…..'' என மெலிதாய் புன்னகைக்க…..

"சரி…போ…மற்றதை நான் எடுத்து வைக்கிறேன்….'' என டிராலி பேக்கை தன் புறமாய் நகற்ற…..

"இன்னும் கொஞ்சம் தான் நா…நானே பார்த்துக்கிறேன்….'' என அவனிடம் இருந்து ஏறக்குறைய பிடுங்க…..

அவளின் தடுமாற்றத்தைப் பார்த்தவன்... "என்கிட்ட என்னத்தை மறைக்கிறா…..'' என

"ஏய் விடு…. "என அவளிடமிருந்து பிடுங்கி... அதற்குள் பார்க்க….

டைரிகள் நான்கு ஐந்து கிடக்க….'' ஆமா… இதற்காகவா…இப்படி தடுமாறினே….. டைரியில் என்ன இருக்க போகுது…. "ஸ்ரீ ராம ஜெயம்'' தானே…. ஏற்கனவே தெரிஞ்சது தானே…. இதையா மறைக்க பார்த்த…..'' என டைரிகளை அடுக்கி அவள் கையில் வைக்க….

வாங்கிய சாத்வியின் பார்வை வித்யாசமாய் இருக்க….. 'இவ ஏன் இப்படி பார்க்குறா...' என யோசித்தவனுக்கு……

"என்னோட காயங்களுக்கு பின்னாடி ஸ்ரீராம ஜெயம் இருந்தாலும், அந்த ஸ்ரீ ராம ஜெயத்திற்கு பின்னாடியும் நீ தான் இருக்க…..'' என்ற குரல் அவன் காதில் மோத...

அவள் கைகளில் இருந்த டைரியில் ஒன்றை அவள் எதிர்பாரத வண்ணம் உருவி….. அதை பிரட்டி பார்க்க "ஸ்ரீ ராம ஜெயமே'' இருக்க….அதை கீழே வைக்க போனவன்…. பாதி பக்கத்திற்கு மேல் பிரட்ட…..அதில் ஸ்ரீராம ஜெயத்திற்கு பதில்

"சத்ரியன்…..'' என அவன் பெயரையே மந்திரமாக்கி எழுதியிருந்தாள்…..பார்த்தவனுக்கு கண்களை வேறெங்கும் நகர்த்தவே முடியவில்லை…..கண்கள் நிலைகுத்தி டைரியிலேயே பதிந்திருக்க……

என்ன மாதிரி உணர்ந்தான் என அவனுக்கே தெரியவில்லை…

அதிர்வா….. மகிழ்வா….என தெரியவில்லை…..

சாத்வியினால் ஒவ்வொரு முறையும் புதிதாய் உணரும் உணர்வுகள்…..ஒவ்வொன்றும் இதயத்தை தைப்பதாய் இருக்க…..அதன் வலி தாங்காமல் டைரிகளை ஓரிடத்தில் வைத்துவிட்டு….கட்டிலில் சென்று படுத்துக் கொண்டான்…

அவனை அமைதியாய் பார்த்தாலும் எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமல்…. மற்றவைகளை ஒதுக்கி வைத்து விட்டு….. குளித்து உடை மாற்றி….. அவனருகில் அமர்ந்து…..

"சத்ரி….சாப்பிட வா…..'' என எழுப்ப….

அவளின் ஒரு வார்த்தைக்கே கண் திறந்தவன்….. ‘‘மனசு நிறைஞ்சிருக்கும் போது…. வயிறு நிறையிறதா முக்கியம்…’’ என தீ பார்வை பார்க்க

"இப்போ என்னாச்சுன்னு….. இவ்வளவு கோபம்…..’’

"என்ன கோபமா…..ஸ்ரீராம ஜெயமும் நானும் ஒன்னாடி…. ‘‘

"நிச்சயமா இல்லை……’’

"அப்பறம் ஏன் இரண்டையும் ஒரே டைரியில் எழுதி வச்சு இருக்க….’’

‘‘எதுக்கா…? சிம்பிள் லாஜிக்….. தான்…

"ஸ்ரீராம ஜெயம்’’ கவலைகளுக்கு…

"சத்ரியன்’’ என் காயங்களுக்கு’’ என அவன் முகத்தை கொஞ்சமும் தடுமாற்றம் இன்றி பார்க்க…

விருட்டென எழுந்து அமர்ந்தவன்… "நான் உனக்கு இந்த அளவுக்கு தேவையா இருந்தா….. சிவா அண்ணா கிட்ட ஒர் வார்த்தை…..ஒரே ஒரு வார்த்தை…..’’ சத்ரிகிட்ட பேசனும்….ன்னு…..’’ ஒரு வார்த்தை சொல்லி இருந்தா….. நானே வந்திருப்பேண்டி…

நானே வந்திருப்பேன்…..இத்தனை வருசமும் உன்னை …..இப்படியெல்லாம் கஷ்ட பட விட்டு இருப்பேனா….. ஏண்டி

சொல்லலை...ஏண்டி சொல்லலை...’’ என அவளின் பின் கழுத்தடியில் கை கொடுத்து.....

தன் முகம் நோக்கி இழுத்தவன்..... ஒவ்வொரு வார்த்தைக்கும் அவளை இறுக்கிக் கொண்டிருக்க...

சத்ரி கண்கள் செவ்வரியோடி சிவந்திருக்க..... மூக்கு கோபத்தில் விடைக்க.....தாடைகள் இறுகிப் போய்... கழுத்தின் எழும்புகள் துருத்தி நிற்க..... அவன் முகமே ஆக்ரோஷமாய் மாறி இருக்க...

"உனக்கு மட்டும் தான் நான் தேவையா...? எனக்கு நீ எவ்ளோ.....தேவைன்னு காட்டவா...காட்டவா.....’’ என அவள் இதழ்களை தனக்குள் ஆக்ரோஷமாய் இழுத்துக் கொண்டவன்... அடுத்த சில நொடிகளில் அவளை விடுவித்து..........

கண்களை இறுக்கமாய் மூடி..... "இங்கே இருந்து போ..... போய்டு..... இல்லை..... உன்னை..... உன்னை---------’’ என சில அந்தரங்க வார்த்தைகளை விட்டு.... "ஏதாவது செஞ்சிடப் போறேன்.....போ...’’ என கத்தியவன்

"உன் விஷயத்தில் எனக்கு பொறுமையும் நிதானமும் சுத்தமா கிடையாது...எழுந்து போய்டு.....’’ என சீற....

அறையை விட்டு வெளியேறி வந்தாள்..... சத்ரியால் உணர்ந்த உணர்வுகளை அடக்க வழி தெரியாமல்.....

அடக்க முடியா கோபம் தாபம் ஏக்கம் தேவை துடிப்பு என அத்தனையும் இருவரையுமே கொல்ல......

சாப்பிடக் கூட இல்லை.... சத்ரி உறங்கயதும், அவனருகில் அவளும் படுக்க..... ஏசி குளிருக்கு போர்வை போர்த்தும் முன்....சத்ரி அவளுக்கு போர்வையாய் மாறி இருந்தான்.....

முழுதாய் அவள் மீது படர்ந்து இறுக்கிக் கொண்டு உறங்க ஆரம்பித்தான்..... சாத்வியும் எதிர்க்கவில்லை.....அவனுக்கு வாகாய் தன்னை கொடுத்தபடி அவளும் உறங்கிப்போனாள்...

மறுநாள் அப்படி ஒன்று நடக்காததைப் போல இருந்தனர் இருவரும்..... 'ஏனென்று விளக்கம் கேட்கவும் இல்லை... கொடுக்கவும் இல்லை.....'

மறுநாள்.....

கடைக்கு செல்ல கிளம்பிக்கொண்டிருந்தான்....சத்ரி.... நேற்றைய கோபம் இன்னும் அவனிடத்தில் கொஞ்சமும் குறையாமல் இருக்க.... இறுகிய முகத்துடன்... டிரெஸிங் டேபிள் முன்பு நின்று தலைவாரிக் கொண்டிருக்க.... அவன் பின் சாத்வி வந்து நின்றாள்........

‘‘உங்கிட்ட பொஞ்சம் பேசனும் சத்ரி.....’’ என...

திரும்பவே இல்லை... கண்ணாடியில் பாதிக்கும் குறைவாய் தெரிந்த சாத்வியின் உருவத்திற்கு இன்னும் அதிகமாய் வழி

விட்டு சற்று விலகி கண்ணாடியின் ஒரு ஓரமாய் நின்று பார்க்க……….

இப்போது சாத்வியின் முழு உருவமும் தெரிய...

அன்று முதல் நாள் ஹோட்டலில் பார்த்த நினைவு எழ…..

சத்ரியின் கைகள் தானாகவே உயர்ந்த கண்ணாடி வழியாய் தெரிந்த அவளின் நெற்றியில் நிலைத்து…..

கண்கள் , மூக்கு, கன்னம், இதழ்கள் என வருடி…. கழுத்தில் இறங்கி... அதன் நெளிவு சுளிவுகளின் பாதையில் பயனித்து...

இடையில் வெகு நேரமாய் இளைப்பாறி….. அது கண்ணாடி என்பதை மறந்து, அவள் உருவத்தின் மேலேயே நிலைத்திருக்க...

சத்ரியின் பார்வைகளும் அவன் கைகள் பயணித்த இடங்களில் எல்லாம் அழுத்தமாய் பதிந்து மீள…..

அவள் உருவம் சுடிதார் அணிந்து இருந்த அவளின் வடிவை தலை முதல் இடை வரை தெரிந்தவளின் உருவத்தை அவன் கைகள் அவளுக்கு உணரவைத்தன...

சசாத்விக்கு மூச்சு நின்றே போனது...

அதன் கீழும் கைகள் பயணிப்பதை உணர்ந்து கண்ணாடியை விட்டு விலகி நின்றாள் சாத்வி….

அவள் விலகும் முன் கை விரல்கள் எங்கிருந்ததோ…..அங்கேயே வெகு நிமிடங்களாய் நிலைத்திருக்க வெறும் கண்ணாடியிலும் உணர்ந்த அவளின் உருவம் இன்னும் மூளையில் உறைந்திருக்க…..

கண்ணாடியில் பதிந்திருந்த விரல்கள் ஒரு இன்ச் கூட நகர மறுத்தது… ஆனால் கண்களோ…..

விலகி நின்ற சாத்வியை ஓயாத தேடலுடன் பார்த்திருக்க… அவன் பார்வையை கொஞ்சமும் தவற விடாது… அதை தாங்கி நின்றிருந்தாள்…

# அத்தியாயம் 22

**ச**த்ரியின் விழிகளும் விரல்களும் கொடுத்து செய்தியில் சிலிர்த்து நின்றிருந்தாள் சாத்வி….

"உன்கிட்ட பேசனும்'' என வந்த சாத்வியை கண்டு கொள்ளாமல்…. அடுத்து இருந்த அறையில் சென்று கட்டிலில் அமர்ந்து கொண்டான்...

இரண்டு நாட்களில் மனம் இவ்வளவு தூரம் அமைதியில்லாமல் அலைந்து கொண்டிருந்தது...

திருமணமான இரவு ஆரம்பித்த சாத்வியின் கோபங்கள் வெடித்த விதம்...

ஒவ்வொரு நாளும் புயலாய் ஆக்கிரமித்தாலும் பரவாயில்லை….ஆனால் ஒவ்வொரு நாளும் அதன் வேகம் அதிகரித்து….. சூறாவளியாய் சுழன்றடித்து….

எழ முடியாத அளவு தாக்கம் கொடுப்பதை தான் அவனால் தாங்க முடியவில்லை...

தன் காதில் விழுந்த வார்த்தைகளுக்கே இவ்வளவு சக்தி என்றால்…..? அனுபவித்தவளுக்கு…..! மீண்டும் மீண்டும் அதிலேயே உழன்று கொண்டிருந்தது….. சத்ரியின் மனம்….. எப்படி அவளை வெளிகொணர என தெரியாமல்…..

எல்லவற்றிற்கும் மேல் உச்சியில் நின்று பேயாட்டம் போட்ட…. சாத்வியின் இன்னொரு செயல்… டைரியை நிறைத்திருந்த தன் பெயர்கள்…..

தன் பெயரை மந்திரமாய் எண்ணி அதில் கவலைகளை தொலைக்கும் அளவு…அவளில் உறைந்திருக்கிறேனா…

என சத்ரியின் மனமே உறைந்து போனது…

இப்படி ஒவ்வொன்றும் ஆட்டிப்படைத்த வண்ணம் இருக்க…..

அந்நேரம் வெங்கட்…. சத்ரியை தேடி வந்தான்……..

"சத்ரி….." என அமைதியாய் வெறித்த வண்ணம் இருந்தவனை தன் பெறம் திருப்பினான்….

அவனை பார்த்தவன்…. ஒட்டாத தன்மையுடன் அவனுக்கு வழி விட்டு அமர்ந்தான்…..

"என்னடா….. பேச தான் மாட்றன்னு நினைச்சா…..முகம் கூட பார்க்க மாட்றடா….. ஏன்….என்ன காரணம்…சமாளிக்காமல் உண்மையை சொல்லு….. " தற்போதைய ஒதுக்கத்தை அறிந்தவனாய்…அவன் அருகில் அமர்ந்தான்….. வெங்கட்…

"காரணமா…! ஒவ்வொருத்தரும் காரணம் தான்….. ஆனால் யாராலையும் ஒன்றும் செய்ய முடியாது… "என அலுப்பாய் பேச….

அது ஒன்றே போதுமானதாய் இருந்தது வெங்கட்டிற்கு…

"எங்களால தான் பிரச்சனைன்னு தெரியுது.....ஐ... மீன் என்னாலையும் கிருத்திகாவினாலையும் தான்..... ஐம் ரைட்..." என நிறுத்த..... வெங்கட்டின் கண்களை கூர்மையாய் துளைத்தது சத்ரியின் விழிகள்... "ஆம்" என்று...

அதை புரிந்த அவனும்..... விரக்கதியாய் சிரித்து....

"மன்னிப்பை மட்டும் தான் எங்களால கேட்க முடியும்.... உங்களோட இறந்த காலத்தையோ....இல்லை இழந்த இளமை வாழ்க்கையையோ.....நிச்சயமா திருப்பிக் கொடுக்க முடியாது.... நடந்த எதையும் மாத்தவும் முடியாது..... பட்ட காயங்களையும் ஆத்த எங்களால அந்த முடியாது..."

"செய்றதையும் செஞ்சிட்டு அட்வைஸ் பண்றேன்னு நினைக்காத... என்னால முடிஞ்சது இது தான்....."

"ஆனா.... சாத்வியை உன்னால் மட்டும் தான் சந்தோஷமா வச்சிக்க முடியும்..... அது புரியாமல்........ கல்யாணத்திற்கு பிறகும்.... எதையோ பறி கொடுத்த மாதிரி இரண்டு பேரும் இருக்கிறதை பார்க்க முடியலை சத்ரி..... ரொம்ப உறுத்தலா இருக்கு.... "

"என்னால கிருத்தியை விட முடியாது, என்னை தவிர வேற யாரையும் ஏத்துக்க முடியாமல் தான் இரண்டு பேரும் அப்படி ஒரு முடிக்கு வந்தோம்.....துணிஞ்சு கல்யாணம்

பண்ணிக்கிட்டோமே தவிர.... உறுத்தல் இருக்க தான் செஞ்சது...''

''எல்லோருக்குமே நீ எப்பவுமே ஸ்பெஷல் தான் சத்ரி... அது .... அது...அந்த கோபம் தான் தலை தூக்கிடுச்சுடா.....''

''சாதாரண மகனா அப்பவுடைய சொத்தில் பங்கு எடுத்துக்கிட்டேன்.....உன்கு வீடும் நிலமும் இருக்குன்னு தான் நான் பணமும் நகையும் எடுத்துட்டு போனது... அசிங்கமா தான் இருந்தது..... ஆனா.... சம்பாத்தியம் எதுவுமே இல்லையேடா..... அதை வச்சு தான் வேலையே வாங்கினேன்..... பெரிய ஜாப்ன்னு சொல்லி..... ஸ்டார்ட்டிங்கிலேயே உக்கார வச்சுட்டானுங்க..... எல்லாமே அதில் போட்டுட்டு... அடுத்த சம்பளம் வர வரை... டீ... ப்ளானயட் பாரம் இட்லி தான்டா ஓடுச்சு... "என அவன் கண்களை பார்த்து கூறியவன்...

"அவளோட ப்ரீயட் டைம்ல கூட ''... என நிறுத்தி....

"ரொம்ப கட்ட பட்டுட்டாடா...'' என நிறுத்த..... அதிர்ச்சியாய் அவனை பார்த்தான் சத்ரி...

''ஆசையாய் கல்யாணம் பண்ணுனாலும்..... இரண்டு மூனு மாதம் கழிச்ணு தான்...'' என அவன் முகம் பார்க்க முடியாது எழுந்து கொண்டான் வெங்கட்.....

"இந்த நிலையில்… நான் அந்த பணத்தை கூட எடுத்துக்காமல் போய் இருந்தால்...அது கூட இல்லாமல் கிருத்திகாவை அழைச்சிட்டு போய் இருந்தால்….. "என யோசித்தவன்…. "நினைக்க கூட முடியலைடா...''

‘‘அப்பா அம்மாகிட்ட ஒதுங்கி இருந்த எனக்கு... அந்த பாசத்தை கிருத்தி கொடுத்தப்போ…..எனக்கு அவ தாண்டா பெரிசா தெரிஞ்சா…..''

‘‘பணமும் நகையும் அவ தான் எடுத்துட்டு வரேன்னு சொன்னா….. நான் தான்….. எங்க வீட்டில் தான் பொண்ணு இல்லையே….. சத்ரி ஒருத்தன் தானே….. நீ எல்லாத்தையும் எடுத்துட்டு வந்தா….. சாத்விக்கு எப்படி நல்ல வாழ்க்கை அமையும்ன்னு சொல்லி அவளை எதுவும் எடுத்துட்டு வர விடலைடா….. ஆண்பளை எப்படியும் சமாளிப்பன்னு ஒரு தைரியம் தான்….''

‘‘ஆனா…. படிப்பையே விடற அளவு கஷ்டத்தை இழுத்து விட்டு இருக்கன்னு நினைக்கிறப்போ... எனக்கே அசிங்கமா இருந்ததுடா...''

"இன்னும் முழுசா…. என்ன நடந்ததுன்னு தெரியலை... ஆனா….இன்னமும் ஏதோ இருக்கு...யாரும் சொல்ல மாட்றாங்கடா….. இதை விட பெரிய தண்டனையை எங்களுக்கு

நீங்க கொடுக்க முடியாது... 'தப்பு செஞ்சதுக்காக ஊரை விட்டு ஒதுக்கி வைப்பாங்களே.....' அது மாதிரி இருக்குடா...'' என கலங்கிய கண்களை மறைத்து....

"மன்னிச்சிடுடா.....'' என சொல்லி மன்னிப்பை யாசித்து வெளியேற.....

அவசரமாய் நகர்ந்தாள் சாத்வி......

வெங்கட் நிலையில் இருந்து பார்க்கும் போது.... அவன் செய்துதும் சரி என தான் பட்டது.....சத்ரிக்கு...

வெங்கட்டையும் கிருத்திகாவையும் சங்கர் ஏற்றுக் கொண்டிருந்தால்..... யாருக்கும் எந்த ஒரு கஷ்டமும் வந்திருக்காது.... மூல காரணம் சங்கர் மட்டுமே.....

அடக்கப்பட வேண்டிய இடத்தில் சிதற விட்ட கோபம்... தான் விதிக்கு வழி விட்டு..... ஒரு ஆட்டம் காட்டி சென்றுவிட்டது.....

அடுத்த என்ன செய்ய வேண்டும் என்ற நிதானம் இல்லாமல் ..... கடமை மறந்த பாசம்.... என சங்கர் மீது தான் அளவு கடந்த கோபம் கொண்டாலும் உறவுகளுக்கு மத்தியில் அவ்வளவு எளிதில் அவனால்..... பேசிவிட முடியவில்லை...''

உறவுகளுக்கு இடையில் நீ தான் காரணம் என முழுதாய் பழியை ஒருவர் மீது சுமத்த முடியாது..... அப்படி சுமத்தி

விட்டு….. மற்றவர்களையும் ஏன் துன்பத்தில் விட வேண்டும்….. இது தான் சத்ரிக்கும் தோன்றியது...

இது தான் நிஜ வாழ்க்கை….

இது தான் நிதர்சனம்…..

இதில் நடந்த ஒரே நல்ல காரியம்……

சங்கரின் கோபம்….. உளியாய் உருவம் கொண்டு…. சாத்வியையும் சத்ரியையும் வலிக்க வலிக்க அடித்தாலும்….அதில் குறை காணாத சிற்பமாய் ஜொலிக்க தான் செய்தனர்…. அது மட்டும் நன்மையாய் முடிய…..

வலிக்க அடித்த காயங்களுக்கு அவர்களே மருந்து என அறியும் நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது…..

சாத்வியின் மீதான தாபமும் கோபமும் சரி சமமாய் கொழுந்து விட்டு எறிந்தாலும்... அதை அணைக்கும் வழியறிமால் சத்ரி இருக்க…. ஒவ்வொரு நாளும் அதற்கு தூபம் போட்டுக் கொண்டிருந்தாள் சாத்வி….

அதற்கு இன்றே நல்ல நாளாய் குறித்துக் கொண்டாள் சாத்வி…..

"உன்கிட்ட பேசனும்னு சொன்னேன்…..நீ பாட்டுக்கு இங்கே வந்து உக்கார்ந்திருக்க...'' என வெங்கட் வெளியேறியதும்…..சில நிமிடங்கள் கழித்து உள்ளே வந்தாள் சாத்வி...

குழப்பங்களை ஒதுக்கி….'' சொல்லு….என்ன…..'' என எழுந்து அவளருகில் வந்தான் சத்ரி...

"வெளியில் எங்கையாவது போய்ட்டு வரலாமா…..?'' என கேட்க….

"பேசனும்னு சொன்ன….?'' என கேட்க…..

"அது அப்போ….. இப்போ…. வெளிய போகனும்னு தோணுது...'' என இதழ் பிரியாமல் சிரிக்க….

"ஓ… போலாமே….'' என அவள் தோளில் கை போட்டு…..அப்படியே சிவகாமியிடமும் கூற...

''கோவிலிக்கு போய்ட்டு அப்பறமா….. வேற எங்கையாவது போய்ட்டு வாங்க….'' சிவகாமி குரல் கொடுக்க….

அழகாய் புடவையில் தயாராய் வந்தாள்... கோபமும் நீயே தாபமும் நீயே…. என இரண்டுக்கும்...ஆணிவேராய் நின்றிருந்தவளை ரசனையாய் பார்த்தபடி….. அவளை அழைத்துக் கொண்டு…..சென்றான்…..

காரை எடுக்கப்போனவனின் கைகளை தடுத்தது சாத்வியின் கரம்….

"சத்ரி, என்னை அதில் கூட்டிட்டு போயேன்...'' என ஷெட்டில் நிறுத்தியிருந்த பைக்கை காட்ட…..

பைக்கையும் அவளையும் மாறி மாறி பார்த்தவன்...

"இது ஸ்போர்ட்ஸ் பைக்.... பின் சீட் பார்த்தியா....டபுள் சைட் கால் போட்டா தான் என்னால பைக் ஓட்ட முடியும்....சேரி வேற கட்டயிருக்க... .சேரியில் எப்படி.....'' என அவளை பார்க்க....

குனிந்து தன்னை பார்த்தவள்..... "சேரியா..... பைக்கா.....'' என சத்ரியை பார்த்து..... தனக்குத் தானே கேட்டுக் கொண்டு......

"வெயிட் பண்ணு சத்ரி... இதோ வரேன்...'' என

விறு விறுவென தங்கள் அறையினுள் சென்று..... சேரியை கலைத்து... டீசர்ட் , ஜீன்ஸ் சகிதம் கிளம்பி வர....

அவளை பார்த்தபடி அருகில் வந்த மகா.... "ஏய், என்னடி டிரெஸ் இது..... இதை போட்டுக்கிட்டு எப்படி கோவிலுக்கு போவ...'' என கேட்க....

குனிந்து தன்னை பார்க்க.... "விடு மகா.... இங்கேயெல்லாம் சாதாரணமா போடுற டிரெஸ் தான்...இந்த வயசில் போடாமல் எப்போ போடறது......'' என சிவகாமி கூற...

"சத்ரியோட பைக்கில் சேரி கட்டிட்டு போக முடியாது.... ஆனால் கோவிலுக்கு இதோடையும் போக முடியாது...... நான் புடவையே மாத்திக்கிறேன்....'' என மாடி ஏற....

"கோவிலுக்கு வேனா இன்னொரு நாள் போய்க்கலாம்... வேற எங்கேயாவது போய்ட்டு வா மா..... ஆசையா அவன் கூட

பைக்கில் போக கிளம்பிருக்க….. போமா…..’’ என அனுப்பி வைக்க… மகிழ்ச்சி கொப்பளிக்க…..

சத்ரியை தேடி வந்தாள்…

பிளாக் ஜீன்….. ஸ்கைபுளு டிசர்ட்….. அவனின் மெருகேறிய மெக்கானிக் உடலமைப்பை அப்படியே எடுத்துக் காட்ட….. இரண்டு கால்களை அகட்டி தரையில் ஊன்றி….

கடுமையான உழைப்பினால் மெருகேறியிருந்த அகன்ற தோள்களும், கேன்ட் பாரில் திடமாய் பதிந்திருந்த விரல்களும்…. விரல்களால்…..’’ உர்…உர்…உர்…..’’ என பைக்கை உரும விட்டுக் கொண்டிருக்க….. காற்றில் பறந்த கேசமும்… கண்களை மறைத்த கூலிங் கிளாஸூம்….

சாத்வியின் மனதில் அழுத்தமாய் படிய… அமைதியாய் அவனருகில் சென்று நின்றாள்…..

பிங்க் பிளாக்கில் சாத்வி, புளூ பிளாக்கில் சத்ரி என இருவரும் உடைகளிலும் பொருத்தம் காட்டியபடி ஒருவரை ஒருவர் பார்த்திருக்க… சத்ரியின் விரல்கள் இன்னும் பைக்கை உறும விட்டது அவனின் மனதினை போல்…

அவன் பார்வைகள் என்ன பேசின என தெரியாத வண்ணம்….. கூலிங் கிளாஸ் மறைத்துக் கொண்டிருக்க… தாராளமாய் அவன் பார்வை அவளை வருட….. ஆனால்

விகாரமில்லாத அவள் உடைகூட அவனுக்குள் வேறு உணர்வுகளை தூண்டி விட...

"இப்படியே கோவிலுக்கு போக முடியாது….'' என குரலில் ஏற்றத்துடன் கூற….

"வேற எங்கையாவது போகலாம்...'' என அவன் பின் எறி அமர்ந்தாள்…..

ஸ்போர்ட்ஸ் பைக்குகளில் பெரும்பாலும் இருக்கும் சிறிதான சீட்டில் பாதியை அடைத்தபடி சத்ரி அமர….. அவன் மேலே தன் உடல் முழுவதும் உரசி…. இரண்டு புறமும் கால் போட்டு அமர்ந்தாள் சாத்வி….

உறும விட்டுக் கொண்டிருந்த கைகள் அதன் வேலையை நிறுத்தி...ஹேண்டில் பாரில் இருந்த இடது கையை எடுத்து, சற்று திரும்பி...

"ஏய், என்னடி இது…'' என அவன் கோபம் மறந்து…. கேட்க…...

அவளோ….. அவனை கவனியாதது போல்…. இன்னும் நெருங்கி அமர்ந்து ''சீட் பத்த மாட்டுது சத்ரி…..'' என கூற…..

"ஏதோ முடிவு பண்ணிட்ட…. நடத்துடி…..'' என அவளின் பின்னால் சற்றே தெரிந்த வெறுமையான சீட்டை பார்த்து கூறியவன் மீண்டும் பைக்கை ஸ்டார்ட் செய்ய…..

அவனை பார்த்து கள்ளமாய் சிரித்தவள்…. சற்று பின் நகர்ந்து அமர்ந்து கொள்ள….

இதை எதிர்பாராத சத்ரி….. "ஐய்யோ…. வடை போச்சே…..'' என வாயில் ஜொள் வடிந்த படி….

"வாயை மூடிட்டு இருந்திருக்கலாம் சத்ரி நீ…'' என தனக்கு தானே கொட்டு வைத்து கிளம்பினான்…

ஷாப்பிங் மால், ஹோட்டல் என பெயருக்கு சுற்றினார்கலே தவிர…. எதுவுமே வாங்கவில்லை…. ஆனால் நிறைய அலையவைத்தாள்…

மாலை நெருங்க…. "ஏய்… இத்தனை கடைக்கு போறோம், ஏதாவது வாங்கு….. சும்மா சுத்துறதுக்கா இவ்வளவு பில்டப்…'' என கேட்க…..

''எனக்கு உங்கூட பைக்கில் போகனும்….அவ்வளவு தான்…..'' என சுவாதீனமாய் சொல்ல…

''இதை முதலிலிலேய சொல்ல மாட்டியா…..'' "வா…'' என

என அழைத்துக் கொண்டு….. திருச்சியின் மெயினை கடந்து பைப்பாஸில் ஒரு லாங் டிரைவ் கூட்டிப் போக…..

அவனின் ஸ்போர்ட்ஸ் பைக்… அதிவேகத்தில்… காற்றை கிழித்துக் கொண்டு… பறந்தது……. அவன் சென்ற வேகத்திற்கு…. தானாகவே அவன் தோள்களில் கை வைத்து அப்படியே

எழுந்து…….கைகளை விரித்து… வேகமாய் மோதிய காற்றை உள்வாங்கிக் கொண்டு…

அத்தனை சந்தோஷங்களையும் தத்து எடுத்தவளாய்….. மனம் நிறைந்த புன்னகையுடன் அவன் பின் மீண்டும் அமர்ந்தாள்…ஆனால் நெருக்கமாய் அவன் வயிற்றில் கைகளை புதைத்துக் கொண்டாள்…

அடுத்த நொடி… இன்னும் வேகமெடுத்து… காற்றைக்க கிழித்துக் கொண்டு… காதல் பறவைகளை சுமந்த வண்ணம்….. பறந்து சென்றது அவனின் ஸ்போர்ட்ஸ் பைக்…..

அவனுடனான இவ்வளவு நேர இயல்பையும் கலைக்கும் வண்ணம் இருந்தது அவள் செய்கை…..

வீடு திரும்ப இரவு நெருங்க ஆரம்பித்திருந்தது… சுவாதீனமாய் அவன் தோள்களில் கை வைத்து, தன் முழு உடலும் உரச இறங்கினாள்….மீண்டும்…..

சத்ரிக்கோ….. உடல் சூடேரிக் கொண்டிருந்தது…” அடங்கவே மாட்றாளே….” என அவனும் புலம்பியபடி இறங்கி…அறையினுள் புகுந்தனர்…

அவனுக்கு முன்பே அறையினுள் சென்றவள்….

கைகட்டி சத்ரியையே பார்த்திருந்தாள் சளைக்காமல் பதில் பார்வையை விட்டான்…. ஆனால் போதையுடன்….

அவன் பார்வையில்….. "எ…என்ன….'' என சாத்வி கேட்க…..அவளை முழுவதுமாய் பார்த்து..

"கல்யாணத்துக்கு அப்பறம், ரொமான்ஸ், ரொமான்ஸ்ன்னு ஒரு சாப்டர் வரும்….. அது பத்தி கொஞ்சமாவது உனக்கு தெரியுமா…..''என வம்பிழுக்க….

"யாராவது சொல்லிக் கொடுத்தா தானே தெரியும்…..''என அவளும் பதில் பேச…..

"ஓ…. மேடமுக்கு ஸ்பெஷல் கிளாஸ் எடுத்த தான் ரொமான்ஸ் வருமோ……''

"ம்….. ஆமாம்….'' என தெனாவட்டாய் சொல்ல…..

"ம்… இப்போ பைக்கில் ஏறும் போதும் இறங்கும் போதும் , என்னை உசிப்பேத்தி விட்டீங்களே….. அதுக்கு பேர் என்னவாம்….'' என ஸ்டைலாய் கேட்க…

"ஓ…அதான் ரொமான்ஸா… அப்போது ரமேஷ் சொல்லிக் கொடுத்தது ரொமான்ஸ் இல்லையா…'' என தீவிரமாய் முகம் மாற…..

"என்னது… ரமேஷா…'' என அவளை கூர் பார்வை பார்த்து….. "அவன் பேரையையே எடுக்க கூடாதுன்னு சொல்லி இருக்கேனா…. இல்லையா…?''என பல்லை கடிக்க…..

"ஆமா, சத்ரி, ரமேஷ் தான் சொல்லிக் கொடுத்தான்…. கல்யாணத்துக்கு முன்னாடி ,ஒரே ஒரு நாள் கிளாஸ் எடுத்தான்….. அதுவும் ஒரு பத்து நிமிசம் தான், அவ்வளவு அழகா கிளாஸ் எடுத்தான்…..நீயும் இருக்க….. கல்யாணமே ஆயிடுச்சு…..'' என சிரிப்பை அடக்கி வம்பிழுக்க…..

"என்னடி சொல்ற….'' என அதிர்ச்சியாய் கேட்டான் சத்ரி…..

"ஆமாம் சத்ரி... எனக்கு பர்ஸ்ட் பர்ஸ்ட் ரொமான்ஸ் கிளாஸ் எடுத்தது அவன் தான்...'' என மனதில் அன்றைய சத்ரி உருவம் பெற...

அவன் அதிர்ச்சியை உள்வாங்கிக் கொண்டு...

''என்ன …. செஞ்சான்னு... நான் அப்படியே உனக்கு எக்ஸ் பிளைன் பண்றேன்…..''…

"ஆர்…யூ ரெடி ஃபார் தட்...'' என இரண்டு கைகளையும் தட்டியபடி...என சத்ரியின் அருகில் நெருங்கி ….. பின்புறம் டக் இன் செய்யாமல்……முன்புறம் டக்கின் செய்து…..இருந்த சத்ரியின் டீசர்டினை வலது கையினால் வெளியில் எடுத்தாள்…..

சாத்வி அருகில் வந்ததை ஆர்வமாய் பார்த்த சத்ரி... அவளின் இந்த செய்கையை சத்தியமாய் எதிர் பார்க்கவே இல்லை... உடல் நாணேறிய வில்லாய் விறைக்க…..

அதை உணர்ந்தாலும் தனக்குள் கள்ளமாய் புன்னகைத்த சாத்வி….

டீ சர்டை சற்று மேலே ஏற்றி விட்டு…. சத்ரியின் இடையில் தாராளமாய் உலவயது அவளின் கைகள்……

நாணேறிய வில்லாய் விரைத்திருந்தவனுள்… மாறன் அம்புகள் தொடர்ந்து பாய்ந்தார்ப் போன்று……. சுவாசம் ஓர் முறை தடை பட்டது சத்ரிக்கு…..

இடையில் அழுத்தமாய் பதிந்த சாத்வியின் விரல்கள் அப்படியே வயிற்றின் மீது பயணித்து….. அவன் மார்பில் ஊர்ந்து… தோளில் படர்ந்து அவன் கழுத்தின் பின்புறம் அழுத்தி பிடித்து….. தன் முகம் அருகே இழுத்ததுடன் தன் பயணத்தை நிறுத்தியது சாத்வியின் விரல்கள்…..

பெண்மையை தேடும் ஆண்மை இயல்பென்றால்…

ஆண்மையைத் தேடும் பெண்மை கிடைப்பதற்கு அறிய பொக்கிஷம்….. தான்…

சாத்வியினுள்….. தான் உணரும் உணர்வுகளை விட…..

அவளால் தனக்கு உணர்த்தப்படும் உணர்வுகள்… நிச்சயம் அவனை பித்தம் கலங்கச் செய்தது…

இன்ச் பை இன்சாக நகர்ந்த தளிர் விரல்களும்….. அது ஊர்ந்த இடங்களும்… தன் உணர்வினை தூண்டிய விதமும்… தன்னால் சாத்விக்கு என்றோ…..ஒரு நாள் உணர்த்தியிருக்கிறோம்…என சட்டென உறைக்க… அது எந்நாளான்று என அவன் மனம் சரியாய் காட்டிக் கொடுக்க…

சத்ரியின் கண்கள் விரிந்து , இதயம் துடிக்கும் ஓசை இடியாய் இடித்தபடி மாற... இதழ்களோ... அடுத்து நிகழப்போகும் நிகழ்ச்சியை எண்ணி ஆழ்கடலின் கொந்தளிப்புடன் காத்திருக்க...

அவளோ..... அவன் இதழ்களுக்கு அருகில்...

உதடுகளோடு உரசியபடி ‘‘இப்படி தான் அன்னைக்கு எனக்கு ரொமான்ஸ் கிளாஸ் எடுத்தான்......’’ என இதழ்களை அசைக்க.....

அந்த சின்ன அசைவிலும்....அவன் உதடுகளோடு உரசியது... சாத்வியின் இதழ்கள்... வத்திபெட்டியை உரசும் வத்திக்குச்சியாய்... தீப்பற்றிக் கொண்டது...

அதை அறிந்த அவளோ.....’’இதுக்கு பேர் ரொமான்ஸ் தானே...’’ என கூறி... "நல்லா கிளாஸ் எடுத்தானா...?’’ என இன்னும் உரசியபடி கூறி... இதழ்களின் உரசலில் இருந்து சிறு இடைவெளி கொடுக்க... அந்த உரசல்களை விட மனமில்லாதவன்... இம்முறை..... சத்ரியே...

அவள் பின்னந்தலையில் கை கொடுத்து..... பின் கழுத்தை அழுத்தமாய் பற்றி...

‘‘ஒரு செகண்ட் தான் உனக்கு தான் டைம்... மரியாதையா...கிஸ் பண்ணிடு...’’ என தாடை சிறிதும்

அசையாமல்... இதழ்களை மட்டும் அசைத்தபடி இன்னும் உரச….

‘‘மாட்டேன்.….’’ என சொல்லி முடிப்பதற்குள்... அவளிதழ்களை தன் இதழ்களால் அழுத்தமாய் முட்டி பேசவிடாமல் செய்தவன்….

‘‘உனக்கு கிளாஸ் எடுத்தவன் யருன்னு…இப்போ…இந்த நிமிடம் தெரிஞ்சிடும்...’’ என அவள் இதழ்களை முட்டிக் கொண்டு அவன் இதழ்கள் பேசி...

‘‘கரெக்டான்னு செக் பண்ணிக்க… "என இன்னும் இதழ்களோடு முட்டி மோதி…. அவளிதழ்களுக்குள் பயணித்த அவன் இதழ்கள் தன் அசுர வேகத்துடன் பயணத்தை தொடர….

‘‘அவனை உசுப்பேற்றிவிட செய்த செயலில் தானே விழுவோம் என தெரியாதவளாய்…...’’ அவனுக்கு முடிந்தளவு ஈடு கொடுக்க... அதுவும் ஒரு கட்டத்தில் தாக்கு பிடிக்க முடியாத அந்த பூவையவள்... அவன் இதழ்களுக்கு விடுதலை கொடுக்க... இதழ் முத்தமே, அங்கு யுத்தமாய் மாறிப்போனது….

இதழ் முத்தம் கொடுத்த போதை…. அவனில் கடலாய் தேங்க…. மெல்ல அவள் முகம் பார்த்து….

"நீ மறந்திருப்பன்னு நினைச்சேன்….’’ என லேசாய் தடித்திரிந்த இதழ்களை அழுத்தமாய் வருடி….கேட்க….

அவனது பிரதிபலிபிற்கு நேர் எதிர் பதமாய்...மாறிய சாத்வியின் முகம்.... அவன் டீசர்ட் காலரை பிடித்து இழுத்து...

"அப்போ..... நான் சுயநினைவில்லாமல் இருந்தப்போ..... நான். உணர்ந்த இந்த உணர்வுகள் பொய் இல்லை..... உண்மை....

அன்னைக்கு நடந்தது கனவில்லை..... நிஜம்.....'' என காலரை இன்னும் தன் கைகளுக்குள் சுருட்டிக் கொள்ள...

"இத்தனை நாள் கனவுன்னு நினைச்சு... நினைச்சு... அந்த கனவு நினைவாகாதான்னு..... ஏங்க வைச்சிட்டு... ஒன்னுமே பண்ணாதவன் மாதிரி... என்னமா... நடிச்சிருக்க.....'' என முத்த யுத்தத்தில் கரைந்த அவள் பனி மலர் முகம்..... பனிப்பாறையாய் இறுக...

‘‘உன்கூட கடைசி வரை திகட்ட திகட்ட வாழப் போறவன்.....நான் தான்.....'' ன்னு சொன்னேல்ல...

நீ எப்படியோ..... ஆனா..... நான் உன் கூட திகட்ட திகட்ட் வாழுவேன்டா...

நீ எனக்கு கிடைப்பாயா....? இல்லையான்னு...? திண்டாட வச்சிட்டல்ல.....

உன்கூட தான் என்னோட வாழ்க்கைன்னு தெரியாமல்..... என்னை தவிக்க விட்டுட்டல...

இதுக்காகவே உன் கூட திகட்ட திகட்ட வாழுவேன்...

இடையில் நான் செத்து போன கூட... எனக்கு இதெல்லாம் கிடைக்காமல் போய்டுச்சேன்னு..... நான் வருத்தபடவே கூடாது...

அப்படி ஒரு வாழ்க்கை வேணும்...... அதுவும் நீ மட்டும் தான் இருக்கனும் என்னோட வாழ்க்கையில்..... வேற யாருக்கும் இடம் கிடையாது... "என அவனுடன் என பேசி முடிக்க.....

ஒரு நொடியும் தாமதிக்காத....சத்ரி..... அவளை அள்ளி அணைத்து, அவள் பாதங்கள் தரை தொடாமல் அள்ளி தூக்கியபடி அவளை தனக்குள் புதைப்பவனாய் இறுக்கிக் கொண்டு..... “எனக்கு மேலே நீ விரும்புறன்னு தெரியும், ஆனால் இந்தளவு.... காதலை நான் தாங்க மாட்டேன்டி...எனக்கு என்ன செய்யன்னு தெரயலை... சொல்லு.... நான் என்ன செய்யன்னு சொல்லு... என்ன செஞ்சா உன் வலியெல்லாம்... மறையும் சொல்லுடி...” என அவள் இதழ்களோடு ஆனந்தமாய் சங்கமிக்க......

எப்படியாவது அவள் வலிகள் போக்க வேண்டும். என்ற எண்ணமே நிலைப்பெற அவளிடமே கேட்டான்...அவள் வார்த்தைகளின் கனம் தாளாமல்...

அதையும் சளைக்காமல் பார்த்தவள்...

"உன்னோட.... உயிர் வேணும்...”

என கேட்டாள் சாத்வி...

# அத்தியாயம் 23

அவள் "உன்னோட உயிர் வேணும்'' என கேட்ட அடுத்த நொடி எதையும் யோசிக்காமல்...

"எடுத்துக்கோடி... உனக்கு தான் இந்த உயிர்…. எடுத்துக்கோ….அப்போதாவது உன் காயம் ஆறினால் எனக்கு அது போதும்.,...'' என அவளை இறுக்கிக் கொண்டு... தன் உயிரை ஊடுருவிச் செல்லும் குரலில் கூற

அவள் காயங்களுக்கு தன் உயிர் தான் மருந்தாகுமெனில் அதையும் தர தயாராய் நின்றிருந்தான் சத்ரி...

ஆனால் அவனை ஊடுருவும் விழிகளால் துளைத்தெடுத்தவள்...

"நீயா தான் கொடுக்கனும்... நானா எடுத்துக்க மாட்டேன்…...'' என தீவிரமாய் சொல்லி சென்றாள் சாத்வி…..

சாத்வியின் முகத்தில் தெரிந்த தீவிரம் இது வரை அவளிடம் காணாத ஒன்று...

சுவற்றில் சாய்ந்து நின்றிருந்தவனுக்குள்….. குழப்பம் குழப்பம் குழப்பம் மட்டுமே…...

திருமணமான ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையில் தன் காதலை தெரியப்படுத்துபவளிடம்….. தாபம் கூடிக்கொண்டே

சென்றது எனில்….. அதை புரிந்தும் கண்டுகொள்ளாமல் இருக்கும் சாத்வியின் மீது நாளுக்கு நாள் கோபமும் சரிவிகிதமாய் கூடிக்கொண்டே சென்றது…

சாத்வியின் குழப்பம் தலையை குடைந்தது எனில்….. சங்கரின் நடவடிக்கைகள் தலையையே வெடிக்க செய்தது…

திருமணத்திற்கு முன் வரை போட்ட ஆட்டமென்ன…. இப்போது அடங்கி அமர்ந்திருப்பதென்ன…

இத்தனைக்கும் தாங்கள் இருவரும் அவரின் கண்களில் படும்போதெல்லாம்…ஏதாவதெரு ஆழ்ந்த பார்வை மட்டுமே இருக்கும்…..

'ஏன்…. எப்போதும் கொண்டிருக்கும் முறைப்பு கூட சத்ரியின் மீது காணமால் போய் இருந்தது…..'

'இந்தாளுக்கு தெரியாமல் நாம ஒரு வேலை பார்த்தால்….. நமக்கு தெரியாமல் இவரும் ஏதோ வேலை பார்த்திருக்கிறார்ப் போலவே…' என மனதில் முணுக் கென சந்தேகம் எழ…

அடுத்து வந்த நாட்களில் சங்கரை கண்காணிக்க….. சத்ரி சாத்வியின் திருமணத்தை கொஞ்சமும் தயங்காமல் ஏற்றுக் கொண்டதைப் போல் சாதாரண தந்தையாய் வலம் வந்து கொண்டிருந்தார்….. பெருங்குழப்பமே மிஞ்சியது….. சத்ரிக்கு…

"ஏன்....? என்ன காரணமிருக்கும்....'' என யோசிக்க கூட முடியவில்லை சத்ரியால்.... அந்தளவு அவனை ஆக்கிரமித்திருந்தாள் சாத்வி...

எப்போதும் போல் விநாயகம் சங்கர் இருவரும் பேசிக் கொண்டிருக்க......

"ஏன் சங்கர்.... அங்கே ஊரில் முன்னே மாதிரி இப்போலாம் விவசாயம் ஓடறதில்லைன்னு கேள்வி பட்டேன்.....''

"ம்...ரொம்ப மோசம் எல்லாம் இல்லை..... உறுதியான நின்னா நடத்திடலாம்..

ஆனால் எனக்கு தான் முடியறதில்லை.....

வயசியாயிடுச்சில்லையா... எல்லாத்தையும் விட்டுட்டு இங்கேயே வேற வீடு பார்த்து வந்திடலாம்ன்னு இருக்கேன்..... "என சங்கர் கூற....

"நிஜமாவா... சொல்ற ... சங்கர்....''

"ம்..ஆமாம் மச்சான்....எத்தனை நாளைக்கு கோபத்தை புடிச்சு தொங்கிகிட்டு.... நிம்மதியை அடகு வைக்க....அலுப்பு தட்டிடுச்சு மச்சான்... இனி பேரன் பேத்தியை பார்த்துட்டு போய் சேர வேண்டியது.... தான்.... "என சிரிக்க....

"அப்பறம் என்ன நம்ப வீட்டிலேயே இருந்திடவேண்டியது தானே.....'' என

"அது சரி வராது மச்சான்…. "என இழுத்தாலும்…அவருக்கும் அந்த ஆசை இருப்பதாய் தான் தெரிந்தது விநாயகத்திற்கு…

"பக்கத்தில் ஒரு வீடு விலைக்கு வருதுன்னு வெங்கட் பேசிட்டு இருந்தாப்ல….. அதை மட்டும் விசாரி மச்சான்…. ஒரே வீடு சரிபட்டு வராது அதை விட….. சங்கடமா இருக்கும்…..'' என இழுக்க….

"அதுவும் சரி என தான் பட்டது விநாயகத்திற்கு…..''

அதன்படி அடுத்து இரண்டு வாரங்களில்….. சங்கர் ஊரில் இருந்த எல்லாவற்றையும் விற்று…. சத்ரியின் வீட்டினை ஒட்டினாறப்போல் இருந்த வீட்டினை விலைக்கு வாங்கி குடி பெயர்ந்தார்…. இரண்டு வீட்டுக்கும் சேர்ந்தார் போல்….ஒரு வீட்டில் இருந்து…. மற்றொரு வீட்டிற்கு உள்ளிருந்து செல்லும்படி ஒரு கதவு மட்டும் வைத்துக்கொள்ள…. ஒரே வீட்டில் இருக்கும் உணர்வு அனைவருக்கும்…..

அன்று தான் பால் காய்ச்சி…. முடித்திருக்க….. சாவகாசமாய் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர் இருவரும்….

"அங்க இருந்த வீட்டிற்கு நாலு மடங்கு பணம் கொடுத்து வாங்கியிருக்கு இந்த வீடு… நிலத்தோட மதிப்பு இப்படி ஏறக்கூடாது மச்சான்…..'' என கூறி….

"நீ எப்போ வீடு கட்டின மச்சான்……. திருச்சி வந்த புதுசுலேயே….. கட்டியாச்சா… ஆனால்வீடு புதுசா தெரியுதே……" என கேட்க…..

"ஐய்யோ வீடு கட்டி மூணு வருசம் தான் ஆகுதுடா…… திருச்சி வந்ததுமே வீடு கட்ட முடியுமா……. கட்ட பணம் வேணுமே…..சத்ரி இல்லைன்னா இந்த வீடே இல்லை….." என விநாயகம் விரக்தியாய் சிரிக்க…..

"சத்ரி தான் வீடு கட்டினானா?" என சங்கர் ஆச்சரயாமாய் பார்த்திருக்க…..

"ம்… சத்ரி தான் சங்கர்….. வேற யார் கட்டுவா…..?"

"அப்போ வெங்கட்.."

"அவன் இப்போ….ஒரு இரண்டு மூணு வருஷமாத் தான் கூட இருக்கான்…பெங்களூரில் கஷ்டபட்டுட்டு இருந்தவனை அழைச்சுட்டு வந்தது சத்ரி தான்….." என நடந்ததை சாதாரணம் போல் சொல்லி….

"வீட்டுக்கு வந்தவனுக்கு அப்படி ஒரு அழுகை….. 'என்னை ஏத்துக்க எப்படிப்பா மனசு வந்தது' ன்னு கேட்டு… ஆனா பாசத்துக்காக ரொம்ப ஏங்கிப் போய்ட்டான் போல….. அவங்க அம்மா மடியிலேயே படுத்து இருப்பான்….. நம்ப மருமக…..

அவளும்ல கூட சேர்ந்து படுத்துக்குவா... வளர்ந்தும் இரண்டும் சின்ன புள்ளைங்க தான்.....'' என சிரித்து....

''எக்ஸ்பீரியன்ஸ் இருந்ததால இங்கேயே நல்ல வேலையா தேடிக்கிட்டான்..... சம்பளமும் கூட.....

வீட்டு செலவுக்கு தனியா கொடுத்துடுவான்..... எங்களுக்குன்னு வேற தனியா கொடுத்துடுவான்... நாங்க வாங்கலைன்னதும் அக்கவுண்ட்ல மாசம் மாசம் இவ்வளவுன்னு ஒரு அமௌண்ட் போட்டுடுவான்.....

மருமகள் பேருக்கு இரண்டு நகை தான் வச்சு இருக்கா..... அவளுக்கு செஞ்சு போடுடான்னா.... கேட்க மாட்றான்... கிருத்திகாவும் வேண்டாம்ன்னு சொல்லுது...

சத்ரி கிட்ட சொன்னா..... 'அது உங்க பாடு..... அவன் பாடு.....என்னை இழுக்காதீங்கனுட்டான்...'

சொல்றேன்னு தப்பா நினைக்காத சங்கர்.... உன்னோட கோபத்துக்கு பயந்து தான்....அவங்களா வாழ்க்கையை தேடிக்கிட்டாங்க... அதுக்கேத்த மாதிரி தான் நீயும் நடந்துக்கிட்ட...

'கல்யாணம் ஆயிடுச்சு.... குழந்தை பிறந்திருச்சு..... இந்த நிலையில் கண்டிப்பா நம்பளை ஏத்துப்பாங்கன்னு' அப்போது கூட நம்பளை தேடி வரலை..... வரவேயில்லை.....

சத்ரி பார்க்கலைன்னா…. இன்னும் அங்கேயே தான் இருந்திருப்பாங்க….. இன்னும் கஷ்டப்பட்டு இருந்திருப்பாங்க…..

எல்லாத்துக்கும் காரணம் நாம தான் சங்கர்...

உன் மேல் இருந்த பயம்…

என் மேல் இல்லாத நம்பிக்கை…..

இது ரெண்டும் தான் காரணம்….. இனியாவது சாத்விகிட்ட முறைச்சிட்டு நிக்காத... சங்கர்….'' என நிறுத்தியவர்….

"இதை முதலிலேயே சொல்லனும்னு நினைச்சேன்...ஆனா…. நீயே பேரன் பேத்தி தான் முக்கியம்னு இங்கேயே வந்துட்ட…..

ஆனாலும் சொல்லனும்ன்னு தோணுச்சு… சொல்லிட்டேன்…. தப்பா நினைக்காத ... மீறி வந்துடுச்சு...'' என விநாயகம் ஆழ்ந்த குரலில் பேச….

சங்கருக்கு வேதனை தான் மிஞ்சியது….. தன் நிதானமில்லாத நடத்தைகள் ஒவ்வொன்றும்…. ஒவ்வொருவரையும்….. வெகுவாய் பாதித்திருப்பதை உணர்ந்தார்..

சாத்விக்கு தான் நிர்ணயிக்கும் மாப்பிள்ளை தான் மருமகனாய் வேண்டும் என்ற எண்ணம் திருமணத்திற்கு முந்தைய நாள் வெடித்து சிதறியிருக்க... அன்று விநாயகம் மட்டும் முன்வராமல் போய் இருந்தால்… சாத்வியின் வாழ்வை நினைத்து கூட பார்க்க முடியவில்லை...சங்கரால்..

திருமணத்திற்காக ஒரு முறை பட்ட பாடே நினைவில் நின்று….மறுபடியும் மாப்பிள்ளை பார்த்து… .மறுபடியும் திருமண வேலைகளா…..? என மலைத்து போனவருக்கு சத்துயமாய்….சத்ரி ஒரு வரமாய் தான் அமைந்தான்…

இனிதே திருமணமும் நடந்து முடிந்தது…..

சத்ரி ஒரு நாள் நடத்திய 'பல்லி நாடகமே' இன்றும் நினைவில் நிற்க அடுத்து அவனுக்கு இடம் கொடுக்காமல் தானே விலகிக் கொண்டார்….. இன்னொரு காரணம் சாத்வியின் மீது கொண்ட அளவு கடந்த பாசமும் தான் அவரை ஒதுங்க வைத்தது….

"சத்ரி மெக்கானிக் ஷாப் தானே வச்சு இருக்கான்….. அப்பறம் எப்படி வீடு…..'' என வெகுவாய் குழம்பி... 'வெங்கட் சாப்ட்வேர் இன்ஜினியர்….. அவனின் அதிகமான சம்பளத்தில் உருவானது தான் இந்த வீடு என நினைத்திருக்க…. அந்த எண்ணம் அப்படியே தலை கீழாக.. மாற….. சத்ரியை தப்பாக மனதில் வரித்து விட்டோமோ….. என முதல் முறையாய் வருந்தினார்….. சங்கர்...

"மெக்கானிக் ஷாப்பா...'' என வீடே அதிரும் படி சிரித்தவர்….. ‘‘நேரில் பார்த்தால் இப்படியெல்லாம் சொல்ல மாட்ட…..

"என மகனின் உழைப்பை பெருமையாய் பேசி….. "நாளைக்கு அவனோட கடை லீவ்… திங்கள் கிழமை கூட்டிட்டு போறேன்...'' என புன்னகைக்க….. 'அப்போ வேலையிலேயும் பய கெட்டிகாரன் தான் போலவே...' என நினைத்துக் கொண்டார்…..

மறுநாள்….

அனைவருக்கும் விடுமுறையாய் இருந்த ஞாயிறன்று சிவா வந்தான்...புதுமணத் தம்பதிகளை பார்க்கும் பொருட்டு...

அவனை பார்த்த விநாயகத்திற்கு…. பழைய பாசம் விட்டு போகுமா...

"வாங்க மாப்பிள்ளை….'' என எப்போதும் அழைக்கும் மரியாதையுடன் சங்கர் மட்டுமே வரவற்க….. விநாயகம் பேசவா வேண்டாமா….. என நின்றிருந்தார்...

"இதோ வந்துட்டேன் மாமா...'' என சங்கரிடம் மலர்ந்த சிரிப்பில் கூறி…..

"எப்படி இருக்கீங்க சித்தப்பா...'' என விநாயகத்தையும் விசாரிக்க…..

"நா… நான்…. நல்லா இருக்கேன்… தம்பி…. உட்காருங்க….. மருமக எப்படிப்பா இருக்கா…. பேரன் இருக்கானமே…. கூட்டி வந்திருக்கலாம் இல்லையா…...'' என அவன் மனைவியையும் மகனையும் விசாரித்து

"சிவகாமி.....சிவா தம்பி வந்துருக்காப்பல..... "என அங்கிருந்தே குரல் கொடுக்க....

"பஞ்சாயத்து இருக்கும் போது... அவங்களை அழைச்சிட்டு வரது தப்பு சித்தப்பா.... என சம்பந்தமில்லாமல் பேச.....

"பஞ்சாயத்தா....?'' என மற்ற இருவருமே கோரசாக கேட்க.....

அந்த குரலில் மற்ற அனைவரும். வெளியே வர... "வாங்கண்ணே...'' என அழைத்தபடி சத்ரி அவனருகில் வர...........

அவனை பார்த்தபடியே.....

"ஆமாம் பஞ்சாயத்து பண்ண தான் வந்தேன்.....'' என சத்ரியை பார்த்தபடி...

சங்கரிடம்.....

"என்ன மாமா.... ரமேஷ் மூலமாக... இவ்வளவு குழப்பம் நடந்திருக்கு..... ஒரு வார்த்தை கூட சொல்லலை..... சொல்லி இருந்தா.... அவனையே தூக்கியிருந்திருப்பேன்...'' என மீசையை முறுக்கியவன்.....

‘‘போயும் போயும்... இந்த பயலை போய்..... நம்ப சாத்விக்கு முடிச்சு இருக்கீங்க... "என மீண்டும் சத்ரியை பார்க்க.....

‘‘ஏதோ... முடிவு பண்ணிட்ட....

நடத்துண்ணே...'' என்ற ரீதியில் சத்ரி நின்றிருக்க... அதை புரிந்து கொண்ட சிவா மர்மமாய் புன்னகைத்து...

"நீயும் இது தான் சாக்குன்னு தாலி கட்டிட்ட... அம்புட்டு தைரியமா...ல உனக்கு... "என அவன் தோளில் கை போட்டு தன் அருகில் இழுத்தவன்..... ‘‘என்னலே.... வாங்குன அடி மறந்திருச்சா...'' உரிமையாய் புன்சிரிப்புடன் சத்ரியை வம்பிழுக்க...

மற்ற அனைவரும் 'இதுங்க எப்போ ஒன்னு சேர்ந்தானுங்க' என்ற ரீதியில். பார்த்திருக்க...

வெங்கட் மட்டும்.... "இவன் எதுக்கு சத்ரியை அடிச்சான்...எப்போ அடிச்சான்' என்ற ரீதியில் யோசித்துக் கொண்டிருக்க...

அனைவரையும் கலைத்தது சாத்வியின் குரல்.....

"நீங்களும் மறந்துட்டீங்க போல... சிவா... மாமா... ஞாபகப்படுத்தனுமோ...''

என இதழ்களில் புன்னகையுடன்..... அங்கே சாத்வியும் வர...

சத்ரியோ..... பளீரென சிரித்துவிட்டான்.....சாத்வியின் கேள்வியில்.....

"இது உனக்கு தேவையா... வாலண்டியரா.... வாயை கொடுத்து மாட்டனுமா... அதுவும் இந்த ராணி மங்கம்மாகிட்ட...''

என ஆள் காட்டி விரலை தன் முன் நீட்டியபடி தனக்கு தானே பேச…..வெங்கட், சங்கர்…. விநாயகம், சிவகாமி…..மகா….. என அனைவரும் ‘பே' வென விழித்தபடி பார்த்திருக்க…

அவன் புறமாய் நீட்டியிருந்த விரல்களை விரித்து… உரிமையாய் அவன் கைகளில் தண்ணீரை கொடுத்து…. பின் காபி கொடுக்க…

"இதில் எதுவும் கலந்திருக்கியா… இப்போவே சொல்லிடுமா…'' என சிவா பயத்துடன் அவன் கொடுத்த காபி கப்பை பார்க்க…..

அவனின் ஆராய்ச்சி பார்வையை பார்த்த சாத்வி…..

‘‘எம்மேல இவ்வளவு பயம் இருக்கா…இந்த பயமே சொல்லுது…. நீங்க மறக்கவே இல்லைன்னு…..'' என அவளும் சிரிக்க…

அவள் சிரிப்பை குடும்பமே வாய் பிளந்து பார்த்திருக்க…

"ட்யூட்டி முடிஞ்சு அப்படியே வந்துட்டீங்க போல….. சாப்பிட என்ன செய்யட்டும் மாமா….'' என சகஜமாய் சாத்வி கேட்க….

சத்ரியை ஓரக்கண்ணால் பார்த்த சிவா… ‘‘என்ன கேட்டாலும் ரெடி பண்ணுவியா…..?'' என கேட்க…..

"நாட்டு கோழியை அடிச்சு, ஒரு பௌலில் சூப்….. ஒரு பௌலில் கோழி குழம்பு…..'' இது போதுமா……..…..என சாத்வி சிரிக்காமல் கேட்க…..

"சாத்வி….. "என வாய் பிறந்த சிவா….. இரண்டு கட்டைவிரலையும் மேல் நோக்கி காட்டி... "சாத்வி சாத்வி தான்…'' என ஆச்சர்யம் காட்ட...

கோழி…. சூப்…. குழம்பு….. இதெல்லாம் சிவாவுடன் சம்பந்தபடுத்தி பார்க்க…..

சத்ரிக்கு ஏதோ புரிவது போல் இருந்தது...அதுவும் தங்கள் ஊரில்….. கோழி ஆடு….. என்று ஒரு பெருங்கூட்டத்தையை வைத்திருக்கும்…. சிவாவின் பாட்டியும் சேர்ந்து நியாபகம் வர…..

'அடிப்பாவி….. என்னை தேத்துறதுக்கு…. கோழியை திருடினீயா... "என மனம் மலர்ந்து விகசிக்க...

'சத்ரி தன்னை கண்டு கொண்டான்….. 'என அறிந்த சாத்வி…..'' பேசிட்டு இருங்க மாமா….. நான் ரெடி பண்றேன்...'' என சிவாவிடம் கூறி... சென்றாள் சாத்வி…..அவளையையே பார்த்திருந்தவனை...

"வாடா… புது மாப்பிள்ளை….'' என அவன் தோள் மேல் கை போட்டு இழுத்துக் கொள்ள….

"எப்படி போகுது கல்யாண வாழ்க்கை...'' என அவன் விலாவில் இடிக்க...

அதற்குள்.....சங்கர்..... "ஏன் மாப்பிள்ளை நீங்க அடிச்ச அடிக்கு... எப்படி இரண்டு பேரும் .....'' 'எப்படி ஒன்னானீங்க.....' என முழுவதும் முடிக்காமல்... அரை குறையாய் பேச்சை நிறுத்த..

"இவன் கூட கள்ள தொடர்பு வச்சு பல வருசம் ஆச்சு..... மாமா........'' என சிரித்தபடி சங்கரிடம் கூற...

''என்னது.....'' என சத்ரியின் குரலோடு சாத்வியின் குரலும் ஒலிக்க...அங்கிருந்தவர்களின் பார்வை முழுவதும் சாத்வியின் புறம் திரும்ப.....

"என்னது ..... கள்ள தொடர்பா...?''என சிவாவிடம் கேட்டு...

தீவிரமான முகப்பாவத்தோடு........ "அவனா....நீ...'' என சத்ரியிடம் கேட்க..... அங்கிருந்த அனைவரும் சிரிப்பை அடக்கிய படி இருக்க.....

வெங்கட் மட்டும்..... "சத்ரியை எதுக்கு அடிக்கனும்... எதுக்கு அடிச்சீங்க...'' என சீற....

"அய்யோ.... விடு வெங்கட்.....அதெல்லாம் ஒன்னுமில்லை....'' என சத்ரி மழுப்ப...

"நீ எதுவும் சொல்லலையா.... இல்லை அவங்க எதுவும் கேட்கலையா.....'' சத்ரியிடமே சிவா கேள்வி கேட்க.....

சத்ரியை சற்று நகர்த்தி...'' யாரும் சொல்ல மாட்றாங்க..... நீங்களாவது சொல்லுங்க...'' என சிவா முன் வந்து நின்றான் வெங்கட்....

''உனக்கு தானே முதலில் தெரியனும்.....'' என வெங்கட்டை பார்த்து கூறி.....

''ஏண்டா சொல்லலை... கூடப்பிறந்தவன்னு பாசமா.....?'' என சத்ரியிடம் காய்ந்தவன்.....

"சொல்றேன் தெரிஞ்சுக்க...'' என வெங்கட்டிடமும்.....

"எப்படி ஒன்னா சேர்ந்தோம்னு கேட்டீங்களே..... நீங்களும் தெரிஞ்சுக்கங்க.....'' என சங்கரிடமும் கூறியவன்...வெங்கட்டிடம் திரும்பி.....

அன்று நடந்ததை ஒன்றுவிடாமல் சத்ரி தடுக்க தடுக்க எல்லாவற்றையும் கூறினான்...

"நீயும் கிருத்திகாவும் பண்ணினதுக்கு சத்ரி எங்கிட்ட அப்படி அடி வாங்கினான்.... உடம்பை பிரிச்சுட்டேன்.... நடக்கவே சிரம்பட்டு போனான்... அப்படிபட்டவன், என்னை தேடி எதுக்கு வந்தான் தெரியுமா...? இதோ இங்க நிக்கிறாங்களே இந்த மேடம் ,இந்த மேடம்க்காக என்கிட்ட பேச வந்தான்,

"சாத்விக்கு படிப்பு முக்கியம்... ஸ்கூலுக்கு அனுப்பி வைங்கன்னு'' வந்து நின்னான்....

"எப்ஐ ஆர் போட முன்னாடியே இவனை வெளியே எடுக்க…. பணமில்லை…. கடனுக்கு வாங்கி….. இந்த சாரை வெளியே கொண்டு வந்தாங்க... கடன் தொல்லை தாங்காமல்... இருந்த வீடு நிலமெல்லாம் வித்து கொடுத்துட்டு….. ஊரை காலி பண்ணியாச்சு….

'ஊரை விட்டு போறியே எதுவும் ஹெல்ப் பண்ணவான்னு' கேட்டேன்…

'ஒரே ஒரு ஹெல்ப் பண்ணுங்க... சாத்வியை மட்டும் பார்த்துக்கோங்கன்னு 'சொல்லிட்டுப் போய்ட்டான்….

அடுத்து மூணு வருசமா ஆளையே காணும்….. இவ…..காலேஜ் போக ஆரம்பிச்சதும் எங்க இருந்து தான் வந்து குதிச்சானோ…..

தெரியலை…. கை நிறைய பையோட வந்து, இதை சாத்வி கிட்ட கொடுத்துடுங்கன்னு போய்ட்டான்….

அதுக்கப்பறம் ஒரு நாலு மாசம் கழிச்சு வந்தான்…. சாத்விக்கு இனி நான் தான் பீஸ் கட்டுவேன்னு… அவளுக்கு தேவையான பீஸ் எல்லாத்தையும் அவன் தான் என் மூலமாக கட்டினான்….''

சிவா சொன்னதில் நிறைய அவளுக்கு தெரிந்த விஷயங்கள் தான் எனினும்

"சத்ரி வாங்கிக் கொடுத்தனா.....'' என தான் சிவாவிடம் கேட்டதும்... "இல்லை "என சிவா மறுத்ததும்... நியாபகம் வர....

சிவாவை தீ பார்வை பார்க்க.....

"என்னை முறைக்காத, உன் புருஷன் தான் மறைக்க சொன்னான்.....'' என சாத்வியின் முறைப்பிற்கு தக்கதாய் பதில் கொடுக்க...

சத்ரி இத்தனை வேலை பார்த்திருக்கிறானா....? என எல்லோரும் மூக்கின் மீது விரல் வைக்காத குறை தான்.....சாத்வியோ...

இதயத்திற்குள் இரண்டு மடங்கு இரத்தம் பாய்ந்தார்ப்போல் நின்றிருந்தாள்.....

கண்டிப்பு காட்டி காட்டி....

தன் மகளின் வாழ்விற்கு இன்னொருவன் உதவும் நிலைக்கு தானே காரணம் ஆகி விட்டோமே...

காதல் திருமணம் என்ற ஒரு வார்த்தை , அதை ஏற்றுக் கொள்ளாவிடினும், அதன் கோப தாக்கங்களை அடுத்தவரின் மீதாவது புகுத்தாமல் இருந்திருக்கலாம்..... என சாத்வியின் வாழ்க்கையில் நடந்தவைகள் , நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள் அனைத்தும் சங்கருக்கு மிகத் தாமதமாய் புரிய வைத்துக் கொண்டிருந்தன.....

விளையாட்டாய் ஆரம்பித்த விசயம் பாறங்கல்லாய் கனக்கும் படி செய்தது சிவாவின் பேச்சு…..

திருமணத் தம்பதிகளை பார்க்கவே வந்த சிவா… யாரையும் காயப்படுத்தும் எண்ணத்தோடு…. வரவில்லை….

ஆனால் தாங்கள் செய்த தவறால் என்ன நிகழ்ந்தது எனக் கூட தெரியாமல்…. இருக்கும் வெங்கட்டின் மீது கோபம் எழ அனைத்தையும் சொல்லி விட்டான்….

"பழைசை எல்லாம் எதுக்கு கிளறனும்…..மாமா….. வேண்டாம்…..''

''அவங்க அவங்க வாழ்க்கையில் நடக்குறதுக்கு அவங்க மட்டுமே காரணம்….. இதில் வெங்கட்டை ஏன் கஷ்டப்படுத்தனும்…..'' என சாத்வியும் சத்ரியும் மாறி மாறி தடுத்ததை கூட சட்டை செய்யாமல்…..கூறி விட்டான்…

நிறைய விஷயங்கள் அங்கே பகிரப்பட… சத்ரி சாத்வி பாவமாகத் தெரிவதற்கு பதிலாய்…

"படிக்கவில்லையென்றாலும்… திறமையுடன் அங்கே பலமாய் காலுன்றி நின்ற சத்ரியும்…….''

"படிப்பிற்கு எத்தனை தடங்கல் வந்தாலும்….. ஒரு பெண்ணிற்கு சுயமாய் காலுன்றும் தைரியம் எப்போதும் வேண்டும் என காட்டிய சாத்வியும்…''

சிற்பியின் கைகளில் செதுக்கிய..... சிலையாய் மாறி இருந்தனர்..... தடைகற்களை தகர்த்தபடி.....

இது மட்டுமே ஓடிக் கொண்டிருந்தது மற்றநவர்களின் மனதில்.....

பெரியவர்களால் அமைதியாய் மட்டுமே இருக்க முடிந்தது..... நல்ல வேலை கிருத்திகாவும் காவ்யாவும்..... வெளியே சென்றிருக்க..... நல்லதாய் போனது..... வெங்கட்டிற்கு...விநாயகமும் சங்கரும் அமைதியாய் இருக்க.....அதுவும் அவர்களுக்கு உறுத்தத் தான் செய்தது...

பேச வேண்டிய இடத்தில் அமைதியாய் இருப்பதும்..... அமைதி காக்க வேண்டிய இடத்தில் அதிகமாய் பேசுவதும் தான் நிறைய பிரச்சனைகளுக்கு பிள்ளையார் சுழியே போடுகின்றன...

அதை தான் அந்த பெரியவர்களும் செய்திருந்தனர்..... அப்போதும் இப்போதும்.....

இதே மனதார உணர்ந்தார் சங்கர்.....

ஆளுக்கொருபுறமாய் அமைதியாய் இருப்பதை பார்த்து.... சிவாவை தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றான் சத்ரி.....கூடவே சாத்வியையும்....

"மத்தவங்களை கஷ்டப்படுத்த கூடாதுன்னு இப்போவும் நினைக்கிறீயேடா......'' என சோபாவில் அமர்ந்து.....

‘‘,அப்போ கல்யாணத்தை நிறுத்தினது நீ தான் இல்லையா…’’ என சிவா அவனின் கூர் புத்தியை காட்ட….

"ம்…ஆமா…இப்போ அதுக்கென்ன’’ என சத்ரியும் சாத்வியும் அருகில் கிடந்த பெரிய சோபாவில் அமர……. சாத்வி….. கண்களை விரித்தபடி பார்த்திருந்தாள்…

"அப்போ ரமேஷூம் உன்னோட கூட்டனியா…’’ என சிவா கேட்க…..

"கூட்டனிலாம் இல்லை…..ஆனால் சந்தர்ப்பத்தை யூஸ் பண்ணிக்கிட்டோம்…..’’

"சாத்விக்கு வரண் பார்த்தது அவளுக்கும் பிடிக்கலை எனக்கும் பிடிக்கலை…..’’ என சாத்வியின் முகம் பார்த்து கூறி பின் சிவாவைப் பார்த்து….

"அவளுக்கு என்ன காரணம்ன்னு தெரியலை….. ஆனால் எனக்கு ஒரே காரணம் தான்…. என்னால இவளை விட்டு கொடுக்க முடியலை….. அம்மா அப்பாவை விட்டு பேச வைக்கலாம்ன்னு பார்த்தால்….. 'பைக் பஞ்சர் பார்க்குரவனுக்கெல்லாம் என் பொண்ணை தரமாட்டேன்னுட்டார்…. என் மாமானார்…’ சாத்விகிட்ட பேசி இருந்தால் கண்டிப்பா….என் பேச்சை தான் கேட்டிருப்பா…. ஆனால் எதேச்சையா நடக்கனும்ன்னு நினைச்சேன்…..

"ஏதாவது பிளான் பண்ணனும்ன்னு நினைச்சப்போ…. மாமாவே அவனோட கான்டெக்ட்ஸ் எல்லாம் என கையிலேயே வச்சுட்டாங்க…… ரமேஷ் கிட்ட பேசிப்பார்த்தப்பறம் தான் தெரிஞ்சது….. எனக்கு கடவுள் ஒரு ஆப்பர்ச்சூனிட்டி கொடுத்து இருக்கார்ன்னு….. கரெக்கடா யூஸ் பண்ணிக்கிட்டேன்…..

வரண் பத்தி சாத்விகிட்ட பேசறதுக்கு முன்னாடியே…. நான் ரமேஷ்கிட்ட பேசனும்னு நினைச்சேன்….. கால் பண்ண பேசினேன்…

சாத்வின்னு பேரை சொன்னதுமே….. என்னை பேசவே விடலை அவன்…..

"நான் அல்ரெடி அமெரிக்க சிட்டிசென்சிப்க்காக அங்கேயே ஒரு பொண்ணை லவ் பண்றேன்…. அப்பா மேரேஜை ரஷ் அப் பண்றதை பார்த்துட்டு….. ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டேன்… நீங்க அப்பா பேச்சை கேட்காமல் கல்யாணத்தை நிறுத்திடுங்க… அமெரிக்கா ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷனே வேற…'' ன்னு சொன்னான்…..

"அப்பறம்…..''

"அப்பறம் என்ன….. நமக்கு அமெரிக்கா ரூல்ஸ் அண்ட ரெகுலேஷன்ஸா முக்கியம்…?'' என சிரிக்க…….

அவன் தோளில் அடி வைத்து….. "மீதியை சொல்லுடா…..'' என

"சாத்வியோட மேரேஜை நிப்பாட்ட தான் உங்களுக்கு கால் பண்ணினேன்... ஆனால் நீங்களே அதுக்கு ஒரு சான்ஸ் கொடுப்பீங்கன்னு நினைக்கவே இல்லை... அஸ் அ லவ்வரா..... இன்னொரு லவ்வர்க்கு ஹெல்ப் பண்ணுங்க பாஸ்..... "ன்னு நான் கேட்டேன்....

"ம்...''....

''சரி சொல்லுங்க.... ஆனால் ஹெல்ப் பண்றதுக்கும் ஒரு அளவிருக்கு...'' என.....

''உங்களால முடிஞ்ச ஹெல்ப் தான்... நீங்க எதுவும் ப்ராப்ளம் பண்ணாமல் மேரேஜூக்கு டூ டேஸ் முன்னாடி வாங்க... சாத்வி கல்யாணம் பிக்ஸ் பண்ணின டேட்டில் நடக்கனும்..... ஆனால் என்கூட..... இதை விட்டால் எனக்கு வேற ஆப்பர்சூனிட்டி கிடைக்காது...மற்ற ஏற்பாடெல்லாம் நான் பார்த்துக்கிறேன்..... இதில் உங்களுக்கு ஒரு பெனிபிட் இருக்கு..... இனி உங்கப்பா கல்யாணம் பற்றிய பேச்சு எடுக்க மாட்டாங்க.....'' ன்னு நான் சொன்னேன்....

"அதுக்கு அவனும் சரின்னுட்டான்...''

"அப்பறம்.....''

''அப்பறம் என்ன... காற்றுள்ளபோதே..... தூற்றிக் கொண்டேன்'' என சத்ரி வாய்விட்டு சிரித்து.....

தன் வாயையே பார்த்திருந்த சாத்வியின் தோளில் கை போட்டு தன் அருகில் நிறுத்த...

"எதிரியா இருந்த என்னையையவே கரெக்ட் பண்ணிட்ட..... அவனை கரெக்ட் பண்ண மாட்டியா....." என இருவரின் ஜோடி பொருத்தத்தை பார்த்தபடி சிவா சிரிக்க.....

"ம்... செம்ம லவ்டா..... ம்....அப்பறம் என்னாச்சு..." என சிவா தன் ஆர்வத்தை காட்ட.....

"அப்பறம் என்ன..... திருமண வேலைகளை அவசரப்படுத்தி..... நிச்சயம் அன்று மாலை தான் ரமேஷ் வந்தான்.... ஆனால் அவன்..... ரிஜிஸ்டர் மேரேஜ் செய்த பெண்ணுடன்...

ஆர்ப்பாட்டம் செய்த கோதண்டத்திற்கும்.... அமெரிக்கா ரூல்ஸ் அண்ட ரெகுலேஷன்ஸ் தான்..." என சிரித்து......

"நம்ப ஊரு மாதிரி இல்லைப்பா..... புடிச்சு உள்ள போட்டான்னா..... என் வாழ்க்கையே குளோஸ்.... "என மிரட்டி திருமணத்தை நிறுத்திட்டான்.....

அப்பாக்கு நடக்கபோறதையெல்லாம் அல்ரெடி சொல்லி..... டைம் பார்த்து என் மாமானார்கிட்ட பேச சொன்னேன்.....அதே மாதிரி..... அப்பா ... மாமாகிட்ட.....பேசினாங்க.....

‘‘இந்த நிலையில் கல்யாணம் நின்னா..... சாத்வி கண்டிப்பா இன்னொரு கல்யாணத்துக்கு ஒத்துக்க வைக்க முடியாது....

இப்போவும் ஒன்னுமில்லை.... சத்ரிக்கே முடிச்சிடு..... அவன் பார்த்துப்பான்டா.....'' என கூற.....வேறு வழியின்றி சங்கரும் தலையசைக்க....

யாருக்கும் சந்தேகம் வராத பொருட்டு , இன்விடேஷன், ஸ்டேஜ் டெக்கரேஷன்.....' என எல்லாவற்றிலும் இருந்த ரமேஷின்... பெயரை...

மாப்பிள்ளை சத்ரி என்றான பின் தான் விநாயகத்தின் உதவியோடு..... எல்லாவற்றையும் மாற்றி அமைத்தான்.....

இதையெல்லாம் சொல்லி முடிக்க...

பெண் மனதால் காதலை உணர்த்தினாள் என்றால்...

ஆண்....

தன் செயல்களால் உணர்த்துவான்... என கண் கூடாய் கண்டாள் சாத்வி.....

சிவாவோ..... "டேய்..... எவ்வளவு வேலை பார்த்திருக்க... மாமாக்கு கழுகு கண்ணாச்சே....

எப்படி எதுவும் தெரியவிடாமல் பார்த்துகிட்ட...''

"என் கெஸ்ஸிங் கரெக்ட்டா இருந்தா... மாமாக்கும் ஏதோ தெரிஞ்சிருக்குன்னு நினைக்கிறேன்... ஆனால் சரியா தெரியலை...'' என இன்னும் பேசிக் கொண்டிருக்க.....

அவனிடமிருந்து லேசாய் நழுவி கனவில் நடப்பவள் போல்..... நடந்து வந்தாள்... சாத்வி..... சத்ரி எப்போதும் தன்னை

நிழலாய் தொடர்ந்திருக்கின்றான்...என.....மனம் இறக்கை கொண்டு பறந்தது...

"சத்ரி அடுத்த ரொமான்ஸ் கிளாஸ் உனக்கு ... ரெடிடா ‘‘.... என சிரித்துக் கொண்டே சென்றாள்.....

அவள் வெளியேறியதும் வெங்கட் உள்ளே நுழைந்தான்..... ஆவேசமாக.....

சமையலறையில் அறைகுறை வேலையாய் இருப்பதை பார்த்து.... தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வந்து..... அங்கே செல்ல.....

புதிதாய் இருந்த நான்கைந்து பாத்திரங்களை பார்த்து..... யோசிக்க.....

"நானும் உங்க மாமாவும் சுத்த சைவம்மா...எல்லா பாத்திரத்தையும் புழங்க வேண்டாம்.... இதை மட்டும் புழங்கிக்கோ... சாத்வி.... வெங்கட் கிருத்திகா கூட.... சாப்பிடறதில்லை..... அது தான்...... தப்பா எடுத்துக்காத..... "என....

"அய்யோ.... விடுங்க அத்தை.....’’ என அவரை அனுப்பி விட்டு..... விநாயகம் வாங்கி வந்திருந்த நாட்டுக் கோழியை... சிவாவிற்க்காக அல்லாது.... சத்ரிக்காக முதல் முறையாய் ஆசை ஆசையாய் சமைத்து....

அவர்களை சாப்பிட அழைக்க....

அறஜயிலிருந்து வெங்கட்டும் கூடவே வந்தான்….. ஆனால் ஏதோ…. நிம்மதியான முகத்துடன்……

சிவா வந்த விஷயம், கேள்விபட்டு படபடப்பாய் அப்போது தான் வந்த கிருத்தி… வெங்கட் முகத்தில் இருந்த அமைதியை பார்த்து….. நிம்மதி பெருமூச்சை விட்டாள்…

கிருத்தயை பார்த்த சிவா….. "கிருத்திகா….. எப்படி இருக்க… ஹாய் கூட்டு ஏஞ்சல்…. வாட்ஸ் யுவர் நேம்…. "என கிருத்திகாவிடம் பெயருக்கு பேசியவன் காவ்யாவுடன் பேச ஆரம்பித்தான்…

வெஜ் ஒரு முறம்…. நான் வெஜ் ஒரு புறம்….. என பிரிந்து அமர்ந்தனர்…

அனைவரும் ஒவ்வொரு வகையில் நிம்மதியாய் இருந்த முகத்துடன் இருந்ததைப் பார்த்து தான் பெண்களுக்கு ஒரளவு நிம்மதியானது…

"இவன் வெங்கட் மாமாகிட்ட என்ன பேசி கரெக்ட் பண்ணினானோ…..'' என முகம் நிறைந்த புன்னகையுடன்…அவனுக்கு கோழியும் சூப்பும் பரிமாற… அவளை விழுங்கியபடி….. வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தான்….சத்ரி உல்லாசமாக…..

சிவாவிற்கு ஒரு அறையை ஒதுக்கி… மற்றவர்களும் ஓய்வெடுக்க சொல்ல…..

தங்கள் அறையில் நுழைந்த சத்ரியை அருகில் ஒட்டினாற் போலிருந்த சுவற்றில் சாய்ந்து தானும் அவன் மீதே சாய்ந்து.....

"சிவா அண்ணாகிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருந்தா, நானே உன்னை தேடி வந்திருப்பேன்னு....." சொன்னதுக்கு இது தான் காரணமா...?" என அவன் சட்டை காலரை பிடித்து இழுத்தாள்...

"நீ... என்கூட தனியா ஷேர் பண்ண வேண்டியதெல்லாம்.... பப்ளிக்கா.....ஷேர் பண்ணிட்டியே... அதுவும் சிவா மாமா மூலமாக..."

"ஏன்.... தனியா சொல்லியிருந்தா என்ன பண்ணி இருப்ப..." என அவள் முகத்தோடு முகம் வைத்து உரச.....

"ம்... ரொமான்ஸ் கிளாஸ் எடுத்திருப்பேன்....." என அவளே அவனுக்கு முகத்தை கொடுக்க.....

"ஆமாண்டி.... கிளாஸ் எடுத்துட்டு எனக்கென்னன்னு போய்டுவே..... கேட்டா..... உயிர் வேணுன்னு சொல்வ...போடி..." என அவளை விலக்கி...

"ஒரு கோழி இன்னொரு கோழியை சூப் வச்சிருச்சு... நான் என்னைக்கு என் கோழியை சூப் வைக்கப்போறனோ..." என அவளை பார்த்தபடி பெருமூச்சு விட...

‘‘கோழியை பார்த்தும் சேவல் ஒவரா…சிலிர்த்துக்குதே….’’ என அவள் இரட்டை அர்த்த்தில் கூறி… கிண்டல் பேச….

‘‘சிலிர்த்தது…. அந்த நாட்டுக் கோழியை பார்த்து இல்லை….. "என அவளை முழுவதுமாய் பார்வையிட்டு… "இந்த நாட்டு கோழியை பார்த்து தான்…..’’ என…..

"நான் உனக்கு நாட்டு கோழியா…?’’ என வம்பிழுக்க….

"ஆமாண்டி பொண்டாட்டி…’’ என்றவன் கட்டிலை நோக்கி இழுத்தபடி…..

"கோழியை திருடி….. அப்படி என் உடம்பை தேத்தனுமா…..’’ என கேட்டபடி தன்னுள் இழுக்க…..

அவளோ… பதில் கூறாமல்…அவனிடமிருந்து விலகிக் கொண்டே இருக்க…..

"ஏய்…. சும்மா இருந்தவனுக்கு ரொமான்ஸ் கிளாஸ் எடுத்து உசுப்பேத்தி விட்டுட்டு… இப்போ விலகினால் என்ன அர்த்தம்….’’ என அவன் கைகளுக்கு தடை போட்டவளின் கைகளை பார்த்த வண்ணம் கூற….

"ம் ஹூம்…..இப்போ நீ நினைச்சாலும் முடியாது….’’ என இதழ்களில் சிரிப்பை அடக்கி பேச….

அதில் கடுப்பானவன்…

"ஏய்….. நாட்டுக்கோழி…..

உன்னை ஒரு நாள் இல்லை ஒரு நாள்

உரிச்ச கோழியாக்கி…..

பொரிச்செடுக்கிறானா…

இல்லையா...ன்னு பாரு…..'' என அவளிடையில் அழுத்தமாய் கிள்ள…..

அசால்ட்டாய் அதை தாங்கியபடி…..

"பொரிப்பியா….. எதுக்கு...'' என அவனை மீண்டும் உசுப்பேற்ற…..

"ஏய் ரொம்ப படுத்துறடி…..நீ...'' என இன்னும் அழுத்தமாய் கிள்ளி...

"ம்…. நீ முட்டை பொரிக்கிறதுக்கு தான்…..'' என வாய் விட்டு சிரித்தான் சத்ரி….

# அத்தியாயம் 24

**வா**ய்விட்டு சிரிப்பதை ஆசையாய் பார்த்தபடி இருந்தாள் சாத்வி...

“எப்போ எனக்காக இதெல்லாம் பண்ணின...” என சிவா கூறியதை மீண்டும் தொடர•...

"எல்லாத்தையும் நீயா•. கெஸ் பண்ணிடுவ•...இதை நீ கெஸ் பண்ணவே இல்லையா•...?” என அவளின் கன்னங்களை வருடினான்•.

"ரொம்ப அக்யூ ரேட்டா எல்லாம் கெஸ் பண்ணலை•... பட் டவுட் வந்து சிவா மாமா கிட்ட கேட்டேன்... 'இல்லவே இல்லைன்னு சாதிச்சுட்டாரு...’ "என அன்று நடந்ததை அப்படியே கூற•...

"பரவாயில்லை டவுட் வர்ர அளவுக்காவது என்னை தேடியிருக்கியே...” என முகம் புன்னகையில் பூக்க...

"உன்னை எந்தளவு தேடியிருக்கேன்னு•... உனக்கின்னும் புரியலை•...” என வில்லங்கமாய் சிரிக்க•...

"ம்ப்ச்•. ஆரம்பிச்சுட்டியா... "என அவளை விட்டு தள்ளி நிற்க•...

அவன் விலகலை பார்த்தபடி... ‘‘அப்படி என்ன டிரெயினிங் கொடுத்த...சிவா மாமாக்கு.....’’ இதுவரை மறைத்துவிட்டாரே...என்ற ஆதங்கம் நன்றகவே வெளிப்பட.....

"டிரையினிங்கா... போலீஸ்க்கே டிரெயினிங்கா...?’’ என முறைக்க....

"நீ டிமிக்கியே குடுத்தவன்..... டிரெயினிங் குடுக்க மாட்டியா.....?’’ என அவளும் முறைக்க.....

பதிலுக்கு ஞத்ரியும் முறைத்து நிற்க.....

விளையாட்டை விட்டு... "மாமா கிட்ட என்ன சொன்ன.....? எனக்கு முழுசா தெரிஞ்சாகனும்.....’’ என கேட்டாள் சாத்வி.....

சத்ரியும் சொல்ல ஆரம்பித்தான்.....

"திருச்சி போனதும், எப்படியாவது ஸ்டேபில் ஆகனும்னு நினைச்சேன்..... பிடிச்ச தொழில், படிச்சு முடிக்கலைன்னலும் அழகா கை கொடுத்தது..... வாய்ப்பை கப்புன்னு புடுச்சிகிட்டேன்..... ரொம்ப ஆசையாய் ஆரம்பிச்ச தொழில் .... நான் வாய் வார்த்தையால் சொல்றதை..... விட ... நீ பார்த்த தான் தெரியும்.....’’ என அவனின் கண்களில் அடைந்த லட்சியத்தின் ஒளி தெரிய.... பேசியவன்.... "உன்னை இன்னும்.... ஷெட்டுக்கு கூட்டிட்டு போகலை இல்லையா... சீக்கிரமா

கூட்டிட்டு போறேன்.....நீ பார்த்து சொல்லு ஐயாவோட வளர்ச்சியை...'' என காலரை தூக்கி விட.....

"வேலைக்காக டிரை பண்ணி எதுவுமே சரியா அமையலை.... மெக்கானக் ஷாப் வச்சு.... அதை பெரிசு பண்றதில்.... நிச்சயமா... கொஞ்ச நாள் என்னோட மைண்டில் நீ இல்லவே இல்லை.....'' என

அதற்கு அவள் முறைத்த முறைப்பில்.....

"ஹேய், உனக்கு தான் சிவா அண்ணாவ காவலுக்கு வச்சுட்டு வந்துட்டனே..... அந்த தைரியம் தான்..... அது கொடுத்த தைரியத்தில்..... உன்னை நிஜமாவே மறந்துட்டேன்....'' என

"அது கொடுத்த தைரியம் இல்லை......!'' என முறைத்து.... "வேற யாரையும் லவ் பண்ண கூடாதுன்னு....' என்கிட்ட சத்தியம் வாங்கின' இல்லையா.... அது கொடுத்த தைரியம்ன்னு சொல்லு ஒத்துக்குறேன்.....'' என கை கட்டிக் கொண்டு பதில் கூற.....

அவளை ஆர்வமாய் பார்த்தவன்....'' ஆனாலும், இப்படி ஒரு நியாபக சக்தி உனக்கு இருக்க கூடாது சாத்வி.....'' என அவள் பேச்சில் சிரித்தவன்.....

"ஆமாம் சாத்வி..... நிச்சயமா அந்த தைரியம் தான்...'' என ஒப்புக்கொண்டான்.....

"எதுக்கு அப்படி ஒரு கம்பெல்ஷனை எனக்கு கொடுத்த…'' சாத்வி கேட்க….

"நீ எனக்கே எனக்கு மட்டும் தான்ற….. வெறி தான்…. "என நிஜத்தை பேச..

"இப்போ கூட…. வெற தான்னு சொல்றியே தவிர காதல்ன்னு ஒத்துக்க மாட்ற சத்ரி….''

"ஐ லவ் யூ'' இந்த வார்த்தையை விட என் செயல் தான் உனக்கு என்னோட காதலை உணர்த்தனும் சாத்வி...வார்தையை விட செயல் தான் மனசில் நிக்கனும்…. வார்த்தை மறந்திடும்…ஆனால் செயல் என்னைக்குமே மறக்காது….'' என

"அப்படி பார்த்தா…. நான் பிறந்ததில் இருந்து… உன் செயல் எல்லாமே…. எனக்கு ஒரே மாதிரி தான் தெரிஞ்சிருக்கு... எதிலேயும் நீ டிபரன்சியேட் பண்ணி காட்டலையே...

இதெல்லாம் பாசம்….

இதெல்லாம் வேஷம்…ன்னு எனக்கு பிரெஞ்சு காட்டலையே…..'' என நக்கலாய் கேட்டவள்... "பின்ன எப்படி எனக்கு தெரியும்...'' என சரியாய் அடிக்க…...

"நீ தெரிஞ்சுக்கலைன்னா…. நான் பொறுப்பில்லை…...…'' என தோளை குலுக்க...

"நான் தெரிஞ்சுக்கலையா….?'' என முறைக்க….

"ஆமாம்….. அருணை அடி பிண்ணி எடுத்தப்போ…எதுக்குன்னு யோசிச்சிருந்தா தெரிஞ்சிருக்கும்…..

என்னை கல்யணம் பண்ணிக்கோ சத்ரின்னு வந்து நின்னியே….அப்போ என் கண்ணை பார்த்திருந்தா….என் தடுமாற்றமும் தெரிஞ்சிருக்கும், அந்த தடுமாற்றம் எதுக்குன்னும் தெரிஞ்சிருக்கும்…..

இதெல்லாம் விடு…..

இப்போ கல்யாணம்ன்னு ஆரம்பிச்ச நாளில் இருந்து உன் கழுத்தில் தாலி கட்ற வரை…. உனக்கு நிறைய க்ளு குடுத்தேன்…. நீ நோட் பண்ணலைன்னா… நானா பொறுப்பு…..'' என என வம்பிழுக்க….

சத்ரியின் வார்த்தைகளில் கோபம் சுர்ரென ஏற…

"ஏண்டா….. சரக்கு உனக்கு சைட் டிஸ் எனக்கா…?'' என

"ம்ஹூம்… சரக்கும் எனக்கு தான்… சைட் டிஸ்ஸூம் எனக்கு தான்…..'' என சிரித்தவன்…..அவளின் கண்கள் கலங்க தயாராய் இருப்பதை பார்த்து….

‘‘சாத்வி… நான் தான் ….. உன்னோட அப்பா அம்மா… உன்னோட படிப்புன்னு டைவர்ட் பண்ணிட்டேன்…. என்னை பத்தி யோசிக்க விடாமல் டைவர்ட் பண்ணிட்டேன்….. "என சமாதானம் செய்ய…..

"இப்படி டைவர்ட் பண்ணி விட்டது தப்பா தெரியலையா…'' ஆதங்கமாய் பேச….

"ஸ்கூல் படிக்கிற பொண்ணை வேற விதமாக டைவர்ட் பண்ணினா தான் தப்பு... இது தப்பில்லை…. இது தான் சரி….''

"சரி … எனக்காக பீஸ் கட்டினப்ப வாவது….. சொல்லி இருக்கலாம் இல்லையா….''

"உன் மனசில் நான் இருக்கேனான்னு எனக்கு தெரியாமல் எப்படி சொல்றது….. அதுவும் தவிர…. வெங்கட் ப்ரச்சனையே தீராத போது…. நானும் அதே தப்பை செய்யவான்னு தான் தோணுச்சு…… "

"சிவா அண்ணாவோட போனில் அடிக்கடி பேசுவேன்…. அப்படி தான் நீ காலேஜ் ஜாயின் பண்ணின விசயம் தெரிஞ்சது….. ஏதாவது வாங்கலாம்னு போனேன்…. ஆனால் அவ்வளவு வாங்குவேன்னு நினைக்கவே இல்லை….. சிவா அண்ணா பார்த்தவுடனே….. கெஸ் பண்ணிட்டாங்க…..''

என நடந்ததை கூறினான்….

"என்ன நீயும் லவ்வா….'' என அமர்ந்திருந்த சேரில் இருந்து எழுந்து…..

'உன்னை நினைச்சு…..பெருமையா இருந்தது… சத்ரி…..

சாத்வி…. அவளோட அம்மா அப்பாவை விட உன் மேல தான்டா அதிகமான நம்பிக்கை வச்சு இருக்கா... ஆனால் நீ

அதை உனக்கு சாதகமா ஆக்க போற…… நீயும்…. பொண்ணுங்களோட தேவையை நிறைவேற்றினால் போதும்….. மடிஞ்சிடுவாங்கன்னு….. நீயும் நினைச்சுட்ட போல….. அப்படித் தான…..'' என சிவா கோபமாய் கேட்க…..

"என்னை பொறுத்தவரை இது லவ் தான்….. நீங்க என்ன வேணும்னாலும் நினைச்சுக்கோங்க….. சாத்வி எனக்காக பிறந்தவ….. அவள் கிட்ட என்னோட காதலலை இன்னும் நான் சொல்லலை…. சொல்லவும் மாட்டேன்…..' ஆனால் சாத்வி என்னோட கடமை….. அப்போவும் இப்போவும்….. அவள் என்னோட முழு கடமை…..

கடமையை செய்வேன் பலனை எதிர் பார்க்காமல்….. செய்வேன்….

கடமையையே பார்த்து பார்த்து செய்வேன்… இப்போ காதலா மாறும் போது எப்படி சும்மா இருப்பேன்…..'' என சத்ரி கூற….

'நீ என்ன சொல்ற….'' என புரியாமல் சிவா கேட்க….

"நீங்க தானே சொன்னீங்க…. அம்மா அப்பாவை விட என் மேல் தான் நம்பிக்கை அதிகம்ன்னு…..

மேஜையில் இருந்த பைகளை காட்டி

"இதெல்லாம்…. நீங்க கொடுத்ததா கொடுத்துடுங்க….. நான் கொடுத்ததா சொல்ல வேண்டாம்…. என் பெயரை சொல்லாதீங்க…..

சொன்னா தானே….. ப்ரச்சனை…. சொல்லாதீங்க…..'' ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்…

"நான் தான் வாங்கிக் கொடுத்திருப்பேன்னு நீ கெஸ் பண்ணினதா… அண்ணா எங்கிட்டே சொல்லும் போது….. "என அவளை அருகில் இழுத்து அணைத்து... அவள் கன்னத்தில்…. அழுத்தமாய் முத்தமிட்டு…..

இப்படி தான் செய்யனும்னு தோணுச்சு….. என்றவன்…..

"ஏற்கனவே படிக்கிற பொண்ணை டைவர்ட் பண்ணனுமான்னு…. உறுத்திட்டே இருந்தது….. சிவா அண்ணா பேசின அப்பறம் முடிவே பண்ணிட்டேன்…. உன் தேவையை நிறைவேத்தி...வர்ற காதல் எனக்கு தேவையில்லை…..ன்னு….. முடிவே பண்ணிட்டேன்….. அதான் உனக்கு தெரயாமலேயே பீஸ் கட்டினேன்…..''

"உன் கல்யாணத்துக்காக எடுத்த ஒவ்வொரு ஸ்டெப்பிலேயும்….. எனக்கான காதலை…. இங்கே தேடிட்டே இருந்தேன் சாவி….. "என அவள் விழிகளை பார்த்து கூறி...

"அப்ப அப்போ… சின்ன சின்னதா சந்தேகம் வரும்...''

"உன் அப்பார்ட்மெண்ட் வந்த அன்னைக்கு .... எனக்கு டவுட் கிளியர் ஆச்சு..... எனக்கு கொஞ்சமும் குறையாமல் மேடம் என்னை லவ் பண்றீங்கன்னு... "என அவளை மெலிதாய் அணைத்து.....

"ஆனால் அதுக்கு முன்னாடியே, என்னோட தான் உன் வாழ்க்கைன்னு முடிவு பண்ணி தான், ரமேஷை காயினாக்கி.... நான் விளையாட நினைச்சேன்..... "என முடிக்க....

அவனின் பேச்சில் கண்கள் விரிய பார்த்தவள்.....

"இது தெரியாமல் ரமேஷோட தான் என் வாழ்க்கைன்னு நினைச்சு.... ஏன் சத்ரி முதலிலேயே சொல்லி இருக்கலாம் இல்லையா....'' என சாத்வி கேட்க....

"கிட்ட தட்ட உன் அப்பாவை ஏமாத்தி இந்த கல்யாணம் பண்ணி இருக்கேன் சாவி..... சப்போஷ் யாருக்கும் தெரிய வந்தாலும்... அது என்னோட மட்டும் நின்றனும்..... என்னை தாண்டி உனக்கு எந்த கெட்ட பேரும் வரக் கூடாது..... அதான் நான் சொல்லலை..... உனக்கு தெரியாமலேயே... உனக்கு பிடிச்ச வாழ்க்கையை அமைச்சு கொடுத்துட்டேன்.... எனக்கும் இப்படி ஒரு வாய்ப்பு அமையாது....'' என...

அவனின் விழியெடுக்காமல் பார்த்திருந்தவள்...

"ரமேஷ் உன் பிளானுக்கு சரி பட்டு வரலைன்னா.... என்ன பண்ணி இருந்திருப்ப.....'' என கேட்க...

"வெரி சிம்பிள்.... ஹீரோவா உன்னை கல்யாணம் பண்ணி இருக்காமல்.... வில்லனா.... உன்னை ரேப் பண்ணி இருந்திருப்பேன்....'' என சிரிக்க.....

கோபம் கொள்வதற்கு பதில் சிரிப்பு தான் வந்தது..... சாத்விக்கு.....

அதைப் பார்த்தபடி....

''நான் சொல்லிட்டேன்... என்னோட காதல் கதையை.... நீ தான் பெண்டிங்.....'' என சீண்ட.....

அவனின் சீண்டலை உணர்ந்தவள்....

"நான் சொல்ல மாட்டேன்... நீயா தான் தெரிஞ்சுக்கனும்.... "முன்பு ஒரு முறை அவன் பேசியதை போல் பேசிக் காட்ட.....

"ம்.... தெரிஞ்சுக்கிறேன்..... கண்டிப்பா தெரிஞ்சுக்கிறேன்..... அதையும் இந்த வாயிலருந்தே வர வரைச்சு... தெரிஞ்சுக்கிறேன்.....'' என அவளிதழ்களை பிடித்து இழுத்தபடி பேச.....

அவன் கைகளில் இருந்து இதழ்களை பிரித்தபடி.....

"அன்னைக்கு மீதியை பார்த்துக்கலாம்...'' என அவனிடமிருந்து விலகினாள்...

விலகியவளின் கையை பிடித்து இழுத்தவன்.....

"அப்பறம் இன்னொன்னு கேட்கனுமே.....'' என...

"என்ன...?'' என்றாள் சாத்வி.....

"வெங்கட் மேல கோபம் இல்லையா சாத்வி...'' என தயங்க...

"முன்ன இருந்தது... ஆனால் இப்போ இல்லை...'' என சாதாரணமாய் சொல்ல...

ஆச்சர்யமாய்.....'' இல்லையா.... திடீன்னு என்ன ஞானோதயம்....?'' என புருவங்களை உயர்த்த...

"அன்னைக்கு நீயும், வெங்கட் மாமாவும் பேசினதை கேட்டேன்..... சத்ரி....'' என வெங்கட் தன்னிலை விளக்கம் கொடுத்த அன்று இருவரும் பேசியதை நியாபகப் படுத்தி... "அதுக்கு பிறகு கோபம் இல்லை.....'' என

"இதை நீ சொல்லவே இல்லை.....'' என சத்ரி முறைக்க.... அதை புறம் தள்ளி.....

"எப்போவுமே..... நம்ப பக்கம் தான் நியாயம் இருக்குன்னு நினைக்கிறது தப்ப... மத்தவங்க நிலையில் இருந்தும் பார்க்கனும்னு ரொம்ப லேட்டா புரிஞ்சுக்கிட்டேன்.....''

‘‘நீ கூப்பிட்டதுமே கிளம்பி வந்து இருக்காங்கனா..... எவ்ளோ கஷ்டபட்டு இருப்பாங்க... ஆனால் அப்பா கொஞ்சம் பொறுத்து போய் இருக்கலாம்.....எல்லாரோட லைப்பும்..... யூடேர்ன் ஆயிடுச்சு...'' என சாத்வி கூற...

"எல்லாமே நல்லதுக்கு தான் சாவி…..’’ என்றவன்…..

"உன் அப்பா... நம்ப இரண்டு பேருக்குமே….. வாழ்க்கையை கத்து கொடுத்துட்டாங்க சாத்வி…..’’

"என்னோட வளர்ச்சி… உன்னோட வேலை …. இரண்டுமே உன் அப்பாவால் தான் சாத்யம்….சாத்விமா…

இதை நீ ஒரு நாளும் மறுக்க முடியாது…..

ஒருத்தர்கிட்ட நிறை இருக்கா, குறை இருக்கான்னு பார்க்குற கண்ணில் தான் இருக்கு...’’ என…. சமயம் பார்த்து அட்வைஸ் செய்ய…..

"மூளைக்கு புரியுது… ஆனால் மனசுக்கு புரிஞ்சா தானே…. ஏத்துக்க முடியும்….. இனி ஏத்துக்க முடியுமான்னு தெரியலை….. பட் ட்ரை பண்றேன்…..’’என தலை சாய்த்து சிரிக்க….

"ம்… ட்ரை பண்ணு…..’’ என நகர்ந்தான்….

மாலையில் சிவாவின் மனைவி மற்றும் மகன் கோகுல் வந்தனர்…. சத்ரி தான் சிவாவை நச்சரித்து வரவழைத்திருந்தான்….

காவ்யாவே வீட்டை ஒரு வழி ஆக்குபவள்…இதில் கோகுலும் சேர்ந்து கொள்ள….. வீடே அதிர்ந்தது…..

மறுநாள்…. காலையில்…..

கார், பைக்குகள் எல்லாம்….. வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டு… போர்டிகோவை டென்னிஸ் கிரௌண்டாக மாற்றி வெங்கட், சிவா ஒரு புறம்….

கிருத்தி சத்ரி ஒரு புறம் என 'டென்னிஸ் பால்களை' விர்விர்என பறக்க விட்டபடி விளையாட்டு கொண்டிருந்தனர்…..

பேட்டரி காரில் காவ்யாவும் கோகுலும் விளையாட அவர்களை கஸ்தூரி பார்த்திருக்க…..

வாசலில் தற் செயலாய் அமர்வது போல் பெரியவர்கள் அமர்ந்து விளையாட்டை பார்த்திருக்க… மாடியில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் சாத்வி…..

சிவா சத்ரியும் ஒரு முறை கூட பந்தை தவற விடாமல்… இருவரும் வீரர்களாய் சீறிக் கொண்டிருக்க…..

வெங்கட் கிருத்திகாவை டார்கெட்டாக்கி….. தோற்கடிப்பதிலேயே குறியாய் இருக்க…..

அதை கவனித்தகடி….. "கிருத்திகா விடாத அவனை…. உன்னை கவுக்க பிளான் பண்றான்….." என சிவா கூற….

"அதான் பத்து வருசத்துக்கு முன்னாடியே கவுந்துட்டானே….. இனி எங்கே கவுர…." என சத்ரி சிரிக்க…..

"நாங்களாவது பத்து வருசத்துக்கு முன்னாடி…..தான்… நீங்க…. இருபத்தெட்டு வருசத்துக்கு முன்னாடியே

கவுந்தாச்சே.....'' பாலை த்ரோ செய்தபடி சத்ரியிடம் கிருத்திகா வம்பிழுக்க...

சத்ரிக்கு முகமே சிவந்து போனது...

"டேய்.. வாயை மூடிட்டு விளையாடுடா... இல்லை உன்னை நோஸ் கட் பண்ணாமல் விட மாட்டா..........'' என வெங்கட் இடை புக....

"உன்னை மாதிரி நான் கவலை எல்லாம் பட மாட்டேன்.... இருபத்மெட்டு வருசமா.... ஒருத்திக்காக காத்தருந்தேன்னு.... சந்தோஷம் தான் படுவேன்....'' என சிரிக்க....

"ஆஹா...இதல்லவோ..... புருஷ லட்சனம்.....'' என சிவா சிரிக்க....

"இரண்டு பேரும் பேசிட்டே இருங்க..... நான் தான் வின் பண்ண போறேன்....'' என கிருத்திகா சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

கிடைத்த கேப்பில் வெங்கட் ஸ்கோர் செய்து

"நான் தான் வின்.....நான் தான் வின்...... "என கூச்சலிட....

"வெங்கட் , ப்ராடு.... என்னை ஏமாத்திட்ட.... இது பொய்யாட்டம்....போ....'' என நெட்டை விலக்கி அவனருகில் வந்து... "ப்ராடு.....நில்லுடா..........'' என அவனை விரட்ட....

"ஆமா... பொய்யாட்டம் தான்... என்ன செய்ய முடியும் உன்னால...'' என டென்னிஸ் பேட்டுடன் நெட்டை சுற்றி ஓடிக்க கொண்டே..... வெங்கட் பதில் கொடுக்க....அதை பார்த்த மற்ற இருவரும் விளையாட்டை நிறுத்தி.....

"கிருத்தி... அண்ணா சரியா தான் விளையாண்டான்..... உன் கவனம் எல்லாம் வெங்கட் மேல இருந்தா.... எப்படி ஸ்கோர் பண்ண முடியும்.... "சிவா சிரித்தபடி கூற.....

"கல்யாணம் ஆகி பத்து வருசம் ஆச்சு சிவாண்ணா..... இதுக பண்ற லவ்சு தாங்க முடியலை.....'' என கிண்டல் செய்தபடி கிருத்தியோடு தானும் வர...

"உனக்கேண்டா பொறாமை.... போய் உன் பொண்டாட்டியை சைட் அடி..... "என சிவா கூற.... அவனுக்கு ஹைஃபை கொடுத்த வெங்கட்..... "அப்படி சொல்லுண்ணே....'' என சிரிக்க.....

"நீங்க சைட் அடிக்கீங்களோ..... இல்லையோ..... உங்க ஒனர், உங்களை சைட் அடிக்கிறாங்க கொழுந்தனாரே.....

இந்த விசயத்தில் என் தங்கச்சி தான் பெஸ்ட்.... நீங்க வேஸ்ட்....'' என சிரித்து.... அங்கே பாருங்க....என மாடியை காட்ட.....

அசையாமல் சத்ரியை பார்த்த சாத்வி ..... இவர்கள் பார்ப்பதையும் பொருட்படுத்தாமல்... சத்ரியையே விடாமல் பார்க்க....

"கண்டிப்பா...

நீ வேஸ்ட் தாண்டா..... "என சிவா மேலும் சிரிக்க.......

அதை கண்டு கொள்ளாமல்.....

வாசலில் இருந்த பெரியவர்களின் முன் வந்து நின்றான்....அவனுடன் மற்றவர்களும் வந்தனர்....

சிவகாமி அனைவருக்கும் குளிர் பனம் வழங்க.....

அதை குடித்தபடியே.... வீட்டை அப்போது தான் முழுவதுமாய் உள் வாங்கிய சிவா...

“பஞ்சர் பார்த்தா இவ்வளவு பெரிய வீடு கட்டின... ஏண்டா டூவீலருக்கு பஞ்சர் பார்க்குறீயா.... இல்லை ஃப்ளைட்டுக்கு பஞ்சர் பார்க்குறீயா...” என அவனின் தோளில் தன் தோள்களால் இடிக்க.... அந்த இடியில் லேசாய் ஆட்டம் கண்டு தள்ளாடி நின்றவன்...... கையில் இருந்ததை முழுவதுமாய் குடித்து....

"என்ன லொள்ளா...” என கேட்க.....

"இவன் ட்ரெயினுக்கே பஞ்சர் பாப்பான்..."என கிருத்தியும் சேர...

"இவன் விட்டா.... போட்டுக்கே பஞ்சர் பார்ப்பான்...."என வெங்கட்டும் கிண்டல் செய்ய.....

"ஒரு மனுசனுக்கு பொண்டாட்டி பக்கத்தில் இல்லைன்னா….. ஆளாளுக்கு கிண்டல் பண்ணுவீங்களே... ஏய் பொண்டாட்டி….. எங்கடி இருக்க…. நீ இல்லாமல் எல்லாம் என்னை ஓட்ரானுங்க…..'' என காட்டு கத்தலில் கத்த...

"ஐய்யோ… ராணி மங்கமாவா…..!'' என சிவா இழுக்க….

சத்ரியின் பேச்சுக்களை ரசித்தபடி வந்த சாத்வி வேண்டும் என்றே…. மார்பின் குறுக்காக கைகளை கட்டியபடி…..

"என்ன இங்கே சத்தம்….'' என சாத்வி வர….

அங்கிருந்த அனைவரும் பெரியவர்கள் அமைதியாக…..

வெங்கட் சிவா கிருத்திகா… என மூவரும்…..

"பேசிக்... கிட்டு...… இருந்தோம்... மா...'' என வடிவேல் பாணியில் கோராசாக சொல்ல…..

அங்கிருந்த அனைவருக்கும் சிரிப்பு பீறிட்டு கிளம்ப…. சத்ரியும் சாத்வியும் அர்த்தமாய்… பார்வைகளை பறிமாறிக் கொள்ள…..

இனிதாய் ஆரம்பமானது அவர்களின் மகிழ்ச்சி...

உள்ளே காவ்யாவையும் கோகுலையும் சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றானது…. கஸ்தூரிக்கு…..

அந்தளவிற்கு... காவ்யாவின் பேட்டரி காரை….. ஒரு வழி செய்து கொண்டிருந்தான் கோகுல்…. சிவாவின் மகன்…..

காவ்யா அவனுக்காக கொடுத்தாலும்…. எதையும் உடைத்து விடுவானோ…. என்ற பயத்தில் காவ்யா அழத் தொடங்கவே…..சமாதானம் செய்ய முடியாமல் கஸ்தூரி திணற…..

அதை பார்த்த சிவா…..

"கோகுல்...'' என ஒரு சத்தம் கொடுக்க…. அதிலேயே அமைதியாய் காரை விட்டு இறங்கி…. சிவாவிடம் வந்தவன்….

"இது மாதிரி எனக்கொன்னெ வேணும்பா…..'' என கேட்க…..

"அப்பா உனக்கு வாங்கி தராமல் வேற யாருக்கு வாங்கித் தர போறேன்….. "என்றவன்…..

சத்ரியிடம்…. "கார் எங்கேடா வாங்கின….. டிபரண்டா இருக்கு…..'' பேட்டரி காராய் இருந்தாலும்…. முழு வெள்ளை நிறத்தில்…. புறாவின் உருவத்தை கொண்ட அதன் வடிவமைப்பை பார்த்தபடி கேட்க….

"இது நம்ப கடையில் ரெடி பண்ணினது ணா….. "என அசால்ட்னாய் சத்ரி கூற…

"அடப்பாவி…. நீ இதையும் விட்டு வைக்கலையா…..'' என கேட்க….

மௌனமாய் சிரித்தான்….. அந்த சிரிப்பே….. பதில் கூற….

"கோகுலுக்கு ஒன்னு ரெடி பண்ணி கொடுடா…..'' என...சொல்லும் முன்…..

"சித்தப்பா….. புறா மாடல் எனக்கு வேண்டாம்….. எனக்கு டிராண்ஸ் பார்மர் மாதிரி ஒரு கார் வேணும் "என ஆசையாய் கேட்க….

"டேய்…மகனே…உனக்கில்லாததா….. சாயந்தரம் கடைக்கு வாடா…. ரெடி பண்ணி தாரேன்…." என சத்ரி அவனை அலேக்காய் தூக்கி சுற்றி இறக்கி விட….

"இன்னைக்கே எப்படிடா ரெடி பண்ண முடியும்….." என சிவா கேட்க….

"சாயந்தரம் கடைக்கு வாங்க….. புரியும்…." என சொல்லி…. கடைக்கு கிளம்பிச் சென்றான்…..

எல்லோரையும் விட கோகுல் எதிர் பார்ப்புடன் இருக்க…. மாலை சிவாவும் கோகுலும் கிளம்ப…..

"சாத்வி நீயும் அவன் கடைக்கு போய்ட்டு வாம்மா…. சங்கர் நீயும் கூட பார்க்கனும்னீயே நீயும் போய்ட்டு வாடா…….." என விநாயகம் கூற…..

அனைவரும் கிளம்பிச் சென்றனர்…..

சாத்விக்கு கல்லூரி கட்டணம் செலுத்தும் போது மேலோட்டமாய் அவனின் வேலையைப் பற்றி அறிந்து கொண்ட சிவா….. ஆர்வம் மேலிட வந்தான்….

வந்தவனுக்கு தானாகவே புருவங்கள் இரண்டும் உச்சி மேட்டிற்கே சென்றது….

வெளியில் இருந்து பார்க்கும் போது ஆரம்பத்தில் கான்கரிட் ஷீட்டுகளால் கவர் செய்யப்பட்டு நிறைய பைக்குகளால் நிரம்பி வழிந்த ஓபன் ப்ளேஸும்..... அதன் பின்னே பைக்குளின் வேறு உலகத்தை நிரப்பி நின்ற பில்டிங்கும்...அதிக அளவில் அதன் அமைப்பு தெரியாத வண்ணம் சுற்றிலும் நிரம்பி வழிந்த மரங்களும்... என அனைத்தும் கண்களை கவரும் வண்ணம் கச்சிதமாய் வைத்திருந்தான்...சத்ரி...

அவர்களை பார்த்தபடி வெளியே வந்தான் சத்ரி..... காக்கி நிற உடை அணிந்து... அங்கு வேலை பார்ப்பவர்களுடன் தானும் ஓர் அங்கமாய் வந்து நின்றான்.....

"ஆஹா.... இத்தனை பேர் வருவீங்கன்னு சொல்லவே இல்லையே.....'' என

ஆச்சர்யம் காட்டி....வெங்கட் சாத்வி சங்கர் சிவா என அனைவரையும் வரவேற்றவன்.... சிவாவிடம்

"என்னோட சின்ன பஞ்சர் கடை.... ஏதோ என்னோட சின்ன கனவு..... "என சிரித்தபடி கூற.....

"படிப்பை முடிச்சிருந்தா கூட இந்தளவு வந்திருக்க மாட்ட போலடா...'' என சிவா கூற

"ம்... நான் கூட அடிக்கடி நினைச்சிருக்கேன் ணா.....'' என இதழ் பிரியாமல் சிரிக்க.....

சங்கருக்கும் அதே தான் தோன்றியது...

"ஆனாலும் ரொம்ப அழுத்தம்டா நீ…'' என சிவா கூற….. அதற்கும் அமைதியான புன்னகை தான் பதிலாய் கிடைத்தது…..

அங்கே வேலை செய்த அனைவரிடமும் சங்கர், சிவா சாத்வி என மூவரையும் அறிமுகம் செய்து வைத்தான்….

"என்னோட கார் எங்கே சித்தப்பா…. முதலில் அதைக் காட்டுங்க….'' என பொறுமையின்றி கேட்க….

"பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை மாதரி இருக்குடா… உன் பேச்சு….'' என சத்ரி கிண்டல் செய்ய….

"எனக்கு பொண்ணுலாம் வேண்டாம் சித்தப்பா…..கார் தான் வேணும்….'' என சீரியசாய் கோகுல் பதில் சொல்ல….

"நீ பெரியவனானலும்…. பேச்சு மாறக் கூடாது…..'' என சத்ரி மேலும் கிண்டல் செய்ய…

"சித்தப்பா…'' என கத்த…..

"கத்தாதடா…'' என காதினை தேய்த்தபடிஉள்ளே அழைத்துச் சென்றான்…..

வித விதமாய் பைக்குகள்… ஒரு புறம்…குழந்தைகளுக்கான பேட்டரி கார், மாற்று திறனாளிக்களுக்கான பைக்குகளும்… ஒரு புறம்……என களை கட்டியிருந்த அவனது தொழிலை பார்த்த சங்கர் பிரம்மித்து தான் போனார்….

சிவாவோ…. பெருமையாய் பார்த்தபடி இருக்க…. கோகுலோ… ஆச்சர்யத்தில் நின்றிருந்தான்….

கோகுல்… பர்ஸ்ட் எப்படி ஆப்பரேட் பண்றதுன்னு கத்துக்கோ…. அப்பறமா ஓட்டலாம்…. "என மெதுவாய் சொல்லி கொடுக்க ஆரம்பத்தான்….

சாதாரண ஜீப் வடிவத்தில் , சற்றே கூர்மையான பற்கள் கொண்ட டயர்களுடனும், ஆர்மி மிக்ஸிங்கில் பெயிண்ட் செய்து….முன்புறம் மட்டுமே கண்ணாடிகளால் மறைக்கப்பட்டு… சுற்றிலும் வெறுமையாய் இருந்தது அந்த கார்…..மற்ற கார்களை விட சற்றே உயரத்தில் இருந்த சீட்டில் அமர வைத்து……

"இது ஸ்டார்ட் பட்டன், இது ப்ரேக் பட்டன், இது லைட்டிங்க்ஸ்க்கு….'' என மேலும் அதை பற்றி விளக்கியவன்…

அவனது கைகளுக்கு அருகில் இருந்த வித்யாசமான பட்டன் ஒன்றை காட்டி…. இது…. உன்னோட ட்ராண்பார்மருக்கு...'' என சொல்லி….

காரை விட்டு விலகி நிற்க…..

ஆசையாய் அந்த பட்டனை தட்ட….

ஜீப்பின் நாற்புறமும்…. போல்டிங் செய்யப்பட்டு இருந்த வடிவங்கள் மெதுவாய் உருவம் பெற…..

கோகுல் அமர்ந்திருந்த இடம் ஹெல்மட் போன்ற வடிவுடன் மாற….. இடம் மற்றும் வலப்புறம்….. கைகள் போல் விரிய….

முன்புறம் சற்றே விரிந்து…. வயிற்று பகுதி போல் மாற….. உயரமான டயர்களை மறைத்தபடி இரண்டு மெட்டல் வடிவங்கள் தரை தொடும் தூரத்திற்கு இறங்கி கால்களாய் மாற……..

பார்த்த அனைவருக்கும் விழிகள் சாசராய் விரிய…..

கோகுல் அதை ஸ்டார்ட் செய்து…மெதுவாய் ஓட்ட ஆரம்பித்தான்.

சாதாரண ஜீப் மாடல்… ஆனால் ஃபோல்டிங்…. என்ற ஒரு வகையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு….. ஜீப்பை கவர் செய்யும் வண்ணம்….. இருந்த அந்த டிராண்ஸ்பார்மர்… அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டது….

"ஓரே நாளில் எப்படிடா …..'' என வெங்கட் கேட்க….

''ஜீப்பா இருந்த கார் தாண்டா… கொஞ்சம் ஃபோல்டிங் மெத்தட் யூஸ் பண்ணி…. பினிஷ் பண்ணியாச்சு….'' என சிரிக்க….

சிறிது நேரத்தில் கோகுலின் இறுக்கமான அணைப்பில் திரும்பினான் சத்ரி……

"அப்பா நானும் சித்தப்பா மாதிரி ஆகனும்….'' என சத்ரியின் கன்னத்தில் முத்தமிட…..

அவனை தன் தோள்களில் ஏந்திக் கொண்டான் சத்ரி…

அவர்களின் ஆரவாரத்தை அமைதியாய் உள் வாங்கியபடி ஐந்து வருடங்களுக்கு முன் பார்த்ததை விட இப்போது

அதிகமாய் வளர்ச்சியை கொண்ட அவனது பைக்கர்ஸ் பாய்ண்டை பெருமையாய் பார்த்துக் கொண்டிருந்தாள் சாத்வி....

அந்த ஆரவாரத்தையும் மீறி வந்தது சங்கரின் கரகரப்பான குரல்....

"வெளித்தோற்றத்தை வச்சு ஒருத்தரோட குணத்தை தான் எடை போட முடியாது ... ஆனா.. படிப்பை வச்சு ஒருத்தரோட திறமையையும் எடை போட கூடாதுன்னு நீ காட்டிட்ட...." ஒற்றை வார்த்தையில் தானும் பெரிய மனிதர் என்பதை நிரூபித்த சங்கர்..... சத்ரியின் தோள்களில் லேசாய் தட்டியபடி , நகர்ந்தார்...

அவரின் வார்த்தைகளில்.....

"டேய்..... உன் மாமனாரையும் கரெக்ட் பண்ணிட்ட போல...." என சிவா வாய் பிளக்க....

வெங்கட் சிரித்துவிட்டான்.....

எல்லோருக்கும் மகிழ்ச்சியை மீட்டெடுத்தார்ப் போல் இருந்தது.....

இரவின் தனிமையில்....

"கடையை அவ்வளவு ஆர்வமாய் பார்த்திட்டு இருந்தே..... அங்கே தான் ஒன்னுமே சொல்லலை..... இப்போவாவது சொல்லலாம் இல்லையா..." என

அவள் முகத்தையே பார்த்திருக்க...

அவன் கைகளில் பாலை கொடுத்தபடி.....

"அதான் உங்க மாமானாரே பாராட்டிடாங்க..... நான் வேற சொல்லனுமா.....'' என

"ம்ப்ச்.... நீ சொல்லு....'' என பிடிவாதமாய் நிற்க.....

அவனின் பிடிவாதத்தை ரசித்தபடி.....

"எனக்கும் ஒரு டிரான்பார்மர் வேணும்...'' என சிரித்தபடி சாத்வி கூற....

முதலில் புரியாமல் விழித்தவன்.....

"இப்படி கூட பாராட்டுவாங்களா.....'' என மெலிதாய் சிரித்து... "வேற... எதுவும் இல்லையா....'' என

‘‘அப்போ... பைக் மட்டும் தானே இருந்தது... சத்ரி... குழந்தைங்க செக்ஷன் எப்போ ஆரம்பிச்ச.....

அப்போ.... பார்த்ததை விட நல்லா டெவலப் பண்ணிருக்க.....சத்ரி.... செம்மையா வேலை செய்யுது ...''என அவனின் நெற்றியின் இடப்புறத்தை தட்ட.....

அவளின் வார்த்தைகளில் கவனமாய் இருந்தவன்...சட்டென.....

தட்டிய அவள் விரல்களை அழுத்தமாய்..... பிடித்து.....

"‘அப்போ’ ன்னா....? இதுக்கு முன்னாடி எப்போ..... ஷெட்டுக்கு வந்தே...'' என கூர்மையாய் கேட்க.....

அவனின் அதிர்வை கவனக்காமல்....

‘‘அது இருக்கும் சத்ரி... ஒரு ஐஞ்சு வருசம்... அப்போ இவ்ளோ பைக் லாம் இல்லை... இவ்வளவு பசங்களும் அங்கே இல்லை..... நீயும்...ரொம்ப சின்ன பையனா.....அழுக்கா இருந்தாலும்... அழகா...’’ என சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

"ஐந்து வருசத்துக்கு முன்னாடியா...? ஷெட்டுக்கு நீ வந்தியா...? எ...எ....எப்போ.....?’’ என அவளை பேச விடாமல் விழிகள் இடுங்க கேட்டான்...

அவனின் விழிகளின் தீவிரம்... அவள் பேச்சிற்கு தடை போட...... தேவையில்லாமல் வாய் விட்டுவிட்டோம்..... என தாமதமாய் உணர்ந்தாள்....

"உன் கிட்ட தான் கேட்குறேன்...’’ என கையிலிருந்த பாலை அருகில் கிடைத்த இடத்தில் வைத்துவிட்டு.... விருட்டென எழுந்து அவளருகில் வந்தான்....

அவனின் வேகத்திலேயே..... தப்பான பேச்சை தப்பான இடத்தில்.....ஆரம்பிச்சிட்டோம் போல..... என விழகிளில் அப்படியே பிரதிபலிக்க...

"சரியான நேரத்தில் தான் ஆரம்பிச்சிருக்க.....’’ என அவள் விழிகளுக்கு பதில் கூறி.....

"சொல்லு.... "என அவளை பார்க்க.....

அவனை பார்த்தபடியே….

“பேங்க் எக்ஸாம் பாஸ் பண்ணியிருந்தேன்…. மதுரை ,திருச்சி…. இரண்டு ஆப்சன் கிடைச்சது… உனக்காகவே திருச்சி வந்தேன்…. “என அவனை பார்த்தபடி கூற…..

அதிர்ந்து போனான்…. சத்ரி… தனக்காகவே திருச்சி வந்தாளா….? என இதயம் துடிப்பை அதிகப்படுத்த……

"என்ன… ? இங்கே …. என்னை தேடி திருச்சி வந்தியா……”  என்றவன்…..

"அப்பறம்…ஏன்….. என்னை பார்க்க வரவில்லை…..” என இது வரை பேசியதை மறந்தவன் போல் கேட்க…..

"வரலைன்னு நீயா நினைச்சுக்கிட்டா நான் பொறுப்பில்லை…..” அப்போதைய கோபம் சற்றே எட்டி பார்க்க…

"புரியுற மாதிரி பேசித்தொலைடி………” என பல்லை கடித்தபடி….. அலைபுறுதலுடன் சத்ரி கேட்க…

அவன் அலைப்புறுதலை…. உணர்ந்து….. தானாகவே வாய் திறந்தாள்…சாத்வி…..

"வந்தேன்…. பேங்கில் ஜாயின் பண்றதுக்கு முந்தின நாள்…. உன் ஷெட்டுக்கு வந்தேன்… உன்கிட்ட பேச வந்தேன்…. பேச…கூட செஞ்சேன்…..” என விழிகளில் ஊடுருவ…..

"என்ன...? பேசினியா...'' என இன்றும் அதிர்ச்சியுடன் நம்ப முடியாமல்... அதை தன் ...நினைவடுக்கில் தேட... அவனின் நினைவுப்பெட்டகமோ... இந்த தேடல் தேவையேயில்லை.....என்பது போல்... "இல்லை.....'' என்ற பதிலை கொடுக்க...

அதற்குள் சாத்வியே.....

''ஆனால் என்னை உனக்கு அடையாளம் தெரியலை.....' ரிப்பேர்ரா.....ரீ மாடலிங்கான்னு கேட்ட.....' "என அவனுள் ஊடுருவி...

''என்னை தான்..... அடையாளம் தெரியலை ... ஆனால் என் உணர்வுகளை சரியா அடையாளம் கண்டுபுடுச்சு கேட்ட மாதிரி இருந்தது உன் கேள்வி...

"ரிப்பேரா....''

"ரீமாடலிங்கான்னு...''

அந்த நேரத்திலும்.... அவளின் பேச்சு வர்ணனைகளை ரசிக்க தான் தோன்றியது.....சத்ரிக்கு...

"கண்டிப்பா..... ரிப்பெர் தான் ஆயிட்டேன்...

என்னோட மைண்டை

ரீ மாடலிங் தான் பண்ணனும்ன்னு... டக்கன்னு எனக்கு நானே கௌண்டர் கொடுத்துட்டுகிட்டேன்...

சிரிப்பு தான் வந்தது..... ஆனால் அதுவும் கூட வெறுப்பா தான் வந்தது... அதுக்கு மேல் பேச பிடிக்கலை.... போய்டேன்...'' என அன்றைய கோபம் வெடிக்க...

அவளின் தேடல் சிறிதாய் உரைக்க........'' எப்போ வந்த சாவி.......'' என குரல் கரகரக்க கேட்டான்...

"அதான் சொன்னேனே.... பேங்கில் ஜாயின் பண்ண முன்னாடி... உனக்கு தான் அடையாளமே தெரியலையே......'' என சாதாரணமாய் சத்ரியின் கேள்விகளுக்கு பதில் கூறிக் கொண்டிருந்தாள்...

அதுவரை அதிர்ச்சியில் இருந்தவன்... அவளது அசால்ட்டான பதில்களில்... கோபம் வர.....

"அடையாளம் தெரியலையா...'' என சீறியவன்...

"அடையாளம் தெரயலைன்னா என்ன....? நீயா சொல்லி இருக்க வேண்டியது தானே..... சாத்வின்ற ஒரு பேரே போதுமே....'' என சத்ரிக்கும் கோபம் வெடிக்க.....

"இல்லையா, இரண்டு அறையாவது விட்டிருக்கலாம் சாவி..... 'என்னை அடையாளம் தெரியலையான்னு கேட்டு... 'இரண்டு அறை விட்டு இருக்கலாம்...சாவி..... "என முடிக்கும் முன்.....

"அப்பா அம்மாவை விட்டு தைரியமா...நான் இங்கே வந்ததே உனக்காக தான்...ஆனா.....என்னை உனக்கு

அடையாளம் தெரயலைன்னதும்...அனாதை மாதிரி நின்னேண்டா... ஒரு பயம் தான் வந்தது .....

நல்லா ஹெல்த்தா இருக்கும் போது....உயிரை குடிக்கிற நோய் வந்தா எப்படி இருக்குமோ... அந்த அளவு பயம் வந்தது ..... செத்து போய்டுவனோன்னு கூட நினைச்சேன்...

உன் மேல் இருக்கிற நம்பிக்கையில் தான் இங்கே வந்தேன்.....அந்த நம்பிக்கைக்கே ஆட்டம் கண்டுருச்சு....பின்னே எந்த நம்பக்கையில் பேச சொல்ற...... "என நிறுத்த

அவள் கன்னங்களை தன் வலது கை விரல்களால் அழுத்தமாய் பற்றி தன் முகம் நோக்கி இழுத்து... "உன்னை ஸ்கூலுக்கே அனுப்ப மாட்டேன்னு இருந்த உன் அப்பா , வேலைக்காக வெளியூர் அனுப்புவாங்கன்னு நான் என்ன கனவா கண்டேன்.....

என்னை தேடி வந்தாளாம்.....எனக்கு அடையாளம் தெரியலைன்னதும்.... கோபம் வந்து போய்ட்டாளாம்..... என்னை தேடி வர தெரிஞ்சிருக்கு... வந்தது 'நான் தான்னு' சொல்ல முடியாலையாக்கும்... அவ்வளவு ஈகோ வாடி உனக்கு...'' எனிருந்த பொறுமை எல்லாம் பறந்தது சத்ரிக்கு.....

பிடித்திருந்த பிடியை இன்னும் அழுத்த..... கன்னங்கள் குவிந்து... மீன் குஞ்சாய் அவளின் இதழ்கள் இரண்டாய் பிரிய...

"இந்த ஈகோ…. தானே….. என்கிட்ட இருந்து உன்னை பிரிச்சு… கூட்டிட்டு போச்சு… அப்படி என்ன ஈகோ…. வேண்டிக் கெடக்கு…'' என மேலும் சீற….

அது பொறுக்கமுடியாதவள்….

"அதுக்கு பேர் ஈகோ….. இல்லை…. வலி….'' என தன் இடது மார்பின் ஓரம் கைவைத்து "இங்கே வலி… அதுவும்… மரண வலி… '' என அவன் அழுத்தத்தில் திணறியபடி பேச…

சாத்வியின் விழிகளில் இருந்த சத்ரியின் பார்வை அழுத்தமாய் சாத்வியின் மார்பின் ஓரம் இருந்த கைகளை தீவிரமாய் பார்த்து…

‘‘இவ்வளவு வலியும் எதுக்குடி…''என இன்னும் அழுத்தம் கொடுக்க…

"உன்னோட உயிருக்கு க்காக… "என ஆழமான பார்வையை அவன் புறம் விட….

ஆத்திரம் பல மடங்காய் ஏறியது சத்ரி… "உயிர் தானே….. நானே தரேன்டி…'' என்ற அவள் விழிகளில் கலந்தவன்…

"ஆனா அதுக்கு முன்னாடி…'' என கன்னங்களை இன்னும். அழுத்தி பிடித்து மீன் குஞ்சாய் விரிந்திருந்த அவளிதழ்களை தன் இதழ்களுக்குள்…..

உள் வாங்கிக் கொண்டான்… எதிர்பாரா இதழ் யுத்தம்…தொடங்கியது…

அவனின் ஆக்கிரமிப்பில் திடுக்கிட்டாலும் அவனுடன் விருப்பமாய்.. பயணப்பட்டாள்...

வெகுநேர யுத்தம் முடிவடையாமல் மீண்டும் மீண்டும் தொடங்கியது.....

மூச்சு விட சிரமப்பட்ட இரண்டு மூன்று முறை அவளுக்கு தன் மூச்சுக்காற்றையே கொடுத்து... அவளை உயிர்த்தெழ வைத்துக் கொண்டிருந்தான்...

மூச்சிற்காய் திணருவதை உணர்ந்து.....

அவளை விட்டு பிரிய.... அடுத்த நொடி....பெருமூச்சு வாங்கியபடி..... கட்டிலில் கிட்ட தட்ட விழுந்தார்ப் போல் அமர்ந்தாள்.....

அதே பெருமூச்சை சுவாதீனமாய் வாங்கியபடி.... அவளருகில் அமர்ந்தவன்... சில நொடிகள் மட்டுமே ஓய்வு கொடுத்து.....அடுத்த நொடி.....

"எவ்வளவு தைரியம் இருந்தா... என்னை தேடி வந்துட்டு... என்னையவே விட்டுட்டு போவ... அதுவும் மரண வலியோட...” என கண்கள் சிவந்து போய் கிடக்க.....

கழுத்தின் பின் கைகொடுத்து அவள் இதழ்களில் மீண்டும் ஓர் யுத்தத்தை தொடங்கினான்...

சிறு எதிர்ப்பு கூட இல்லை சாத்வியிடம்...

அலைந்து திரியும் ஆத்மா கடவுளிடம் சரண் புகுந்தாற் போல்….. அவனிடம் ஆத்மார்த்தமாய் ஒப்படைத்து இருந்தாள்…

வெகுநேரம் தொடர்ந்த முத்த யுத்தம் போய்….

கைகளின் யுத்தம் ஆரம்பித்தது…..

“அவ்வளவு வலியோட நீ போகனுமா….”

"ஏன்….என்கிட்ட சொல்லலை… “

"வந்தது நீ தான்னு… ஏன் சொல்லலை…”

"நீ தான்னு….. தெரிஞ்சிருந்தா…”

"அன்னைக்கே….. உன்னை தூக்கி இருந்திருப்பன்டி……”

"அப்போவே….. உன் கழுத்தில் தாலி கட்டி இருந்திருப்பேன்…..”

"அன்னைக்கே….அன்னைக்கே……” என அவனின் குரல் அவளுக்கு மட்டும் கேட்கும் வண்ணம்…அவளுக்கு மட்டுமே புரியும் வண்ணம்….. அவனுக்கே உரிய பேச்சுகளாலும்…செய்கைகளாலும் உணர்த்தினான்……

ஒவ்வொரு வார்த்தைகளுக்கு இடையிலும் அவளுக்கு….. காதலின் வன்முறைகளை… அவனுக்கே உரிய முறையில் உணர்த்த… உணர்த்த… அனலில் இட்ட பனியாய் உருகிப்போனாள்….. சாத்வி…

தேடி வந்தும்... தன்னை காட்டிக் கொள்ளாமல் போனளே... என்ற….. ஆத்திரம் அவனின் வன்முறைகளில் கரைய... அந்த ஆத்திரமும் சிறிது நேரத்தில் வலியாய் உணரப்பட......

அவளை தாண்டி இவனுக்கும் வலிக்க ஆரம்பிக்க... தன் செய்கைகளை கைவிட்டு...

"ஏண்டி சொல்லலை….. எனக்கே இப்படி வலிக்குதே...’’ என தன் இதயத்தை காட்டி...

’’ உனக்கு எவ்வளவு வலிச்சிருக்கும்…..’’ என அவளின் இதயத்தை பார்வையால் துளைத்தபடி...

"வலிக்குதுடி... ரொம்ப வலிக்குதுடி...’’ என செவ்வரியோடிய விழிகளில் நீரும் கலக்க... வைரமாய் பளபளத்த விழிகளோடு….. இறுக்கமாய் அணைத்துக்கொள்ள...

சத்ரியின் ஒவ்வொரு செய்கையையும் விட…. அவன் பார்வை...அதிலிருந்த தீவிரம்...அதில் உறைந்த தேடல்...எல்லாம் சேர்ந்து சாத்வியை உறைய வைத்தது...

சத்ரியின் பேச்சிலும் செய்கையிலும்…..முழுதாய் தொலைந்தவள்….. அவனை இறுக்கமாக அணைத்து...

வைரமாய் பளபளத்த அவன் விழிகளோடு…. அவள் விழிகளை கலக்க விட… அடுத்த நொடி…,அவளுடன் கலந்தான்…...

என்ன செய்கிறான் என சாத்வியால் நிதானிக்க கூட முடியவில்லை... நிமிடங்கள் நொடிகளாய் கடக்க.....கடக்க.... தாக்குபிடிக்க முடியாதவள்.... அவனை தள்ளிவிட்டு நகர.......

ஒரு இன்ச் கூட நகரவே முடியவில்லை... சாத்வியால்... அந்தளவு ஆக்கிரமித்திருந்தான் சத்ரி....

"ஐ வல்யூ....." என வார்த்தைகளுக்கு கூட இத்தனை தாக்கம் இருந்திருக்காது.....

ஆனால் அவள் வார்த்தைகளின் தாக்கத்தை அவளே உணர்ந்து கொண்டிருந்தாள்... தன் சத்ரியின் மூலம்... உணர வைத்தக் கொண்டிருந்தான் சத்ரி.....

காதலை சொல்லும் விதம் கூட காதலனை வெறி கொள்ள வைக்கும் என ஆத்மார்த்தமாய் உணர்ந்தாள் சாத்வி...

தன் சத்ரி தானா...? என சந்தேகம் பேயாய் ஆட்டம் போட வைத்தது.... சத்ரியின் செயல்களால்.........

சத்ரியின் அமைதியான காதல் அங்கே ஆழமான ஆழியையாய் அவளை சுருட்டிக் கொண்டது...

அவளை விடவே இல்லை... சாத்விக்கோ.....மூச்சு விடக்கூட நேரம் இல்லை..... அவனின் ஆக்கிரமிப்பில் அதிர்வை உடல் உணர்ந்தாலும்... ஏதோ ஓர் அமைதியை உணர்ந்தது மனம்...

மனம் களித்து கிடக்க.....உடல் களைத்து கிடந்தது.....

காமத்தையும் தாண்டிய காதல் அங்கே ஆட்சி செய்ய...

சொல்லமலேயே நிரூபித்தான் தன் காதலை...

உடம்பில் இருந்த ஒவ்வொரு அனுவும் இறந்து புதிதாய் பிறப்பது போல் தோன்றியது.....

சாத்வி அதிகமாய்...

வலிகள் உணர்ந்தாலும்...அங்கே உணர்வுகள் ஜனனிக்க...

சாத்வியால் அவனுள் புதைந்து போகவே முடிந்தது.....

ஆழியாய் தனக்குள் இழுத்துக்கொள்பவனிடம் விரும்பியே சிக்கிக் கொண்டாள்.....

ஆழியே தன்னை விடுவிக்கும் வரை...

# அத்தியாயம் 25

அதிகாலையிலேயே விழிப்பு தட்டி சத்ரி எழ….. சாத்வியின் முகத்திலேயே விழி பதித்தபடி எழுந்தான்….

மீண்டும் ‘ஒரு முறை' என ஏங்கிய மனதிற்கு கடிவாளமிட்டான் சத்ரி……

"அடையாளம் தெரியவில்லை’’ இந்த ஒரு வார்த்தை ஐந்து வருடங்களுக்கு முன்… அவளை அவனிடமிருந்து விலக்கி வைத்தருக்க….. அதே வார்த்தை இன்று அவர்களை ஒருயிராய் கலக்க செய்ததை நினைத்து….. மகிழ்ச்சியாய் இருந்தாலும்…. அதையும் மீறி "தேடி வந்துட்டு….. எந்த நினைப்பில் என்னை விட்டு போகலாம்…..’’ என்ற கோபமே மேலோங்கியது சத்ரிக்கு…

ரெப்பிரஷ் செய்து கொண்டு வீட்டை விட்டு கால் போன போக்கில் வந்தான்….. அருகில் இருந்த வாக்கிங் கிரௌண்டினில் கல் மேடையில் அமர்த்திருந்தான்… சாத்வியை பற்றிய எண்ணங்களே அலையாய் மீண்டும் மீண்டும் அவனுள் அடித்துக் கொண்டிருக்க…. நொடிக்கு நொடி ஏறிக் கொண்டிருக்கும் அவள் மீதான காதலின் அளவை விட…. அவள் மீதான கோபமே பல மடங்காய் ஏற….. நேரம் போவது தெரியாமல் அங்கேயே இருந்தான்…..

எப்போதும் எழும் நேரத்திற்க்கு கண் விழித்தவளுக்கு நேற்றைய நியாபகங்கள் நினைவில் எழ ….. சத்ரியின் இடத்தினை பார்த்தாள்…..

அதன் வெற்றிடத்தில்….. கண்களை அறை முழுவதும் சுழற்ற….. சத்ரி இல்லாததை உணர்ந்து சிறு ஏமாற்றத்துடன் குறித்து மீண்டும் கட்டிலில் அமர்ந்தாள்….

சிறிது நேரம் வரை பொறுத்தவள்….. நேரமாவதை உணர்ந்து…. அவனுக்கு கால் செய்தாள்…..

மொபைலில் கசிந்த மெல்லிசையில் மௌனம் கலைந்து,

சாத்வியின் அழைப்பை பார்த்து…. அந்த நிலையிலும் இதழ்களில் மெதுவாய் மலர, அதே புன்னகையுடனே காதுக்கு கொடுத்தான்...

"எங்க இருக்க…..'' கோபத்துடன் இருக்கிறாள் என அவள் குரலே காட்ட…..

"இதே கிளம்பிட்டேன்… வரேன்….'' என அவளுக்கு தேவையான பதிலை கொடுத்து...வீட்டிற்கு வந்தான்….

தன்னையையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி வந்த சத்ரியின் பார்வையை எதிர் கொள்ள முடியாமல் வேறு புறம் திரும்ப…..…நேற்றைய அவளின் நினைவு தனக்கும் எழுவதை தடுக்கமுடியாமல்... அவளை துளைத்தபடியே குளியலறையில் புகுந்தான்…

மீண்டும் வெளியே வரும் போது.... கட்டிலில் சத்ரி வாங்கிக் கொடுத்த நகைகளுக்கு நடுவில் காவ்யாவும் சாத்வியும் இருக்க...

காவ்யாவின் புது உடையையும், சாத்வியின் பரிசளிப்பையும் பார்த்தவன்..... "ஓ.. இன்றைக்கு காவ்யாவுக்கு பிறந்த நாளா..... மறந்துட்டேனே..." என தனக்குள் பேசியபடி அவர்களை பார்க்க.....

இருப்பதில் அவளுக்கு பொருத்தமான நகைகளை எடுத்து பார்ப்பதும் , அவள் கழுத்தில் வைப்பதும்.... பின் 'வேண்டாம்' என்பது போல் உதடு பிதுக்குவதுமாய் இருந்த சாத்வியும் , நகைளை ஆர்வமாய் பார்த்தபடி இருந்த காவ்யாவும் .... கண்களுக்கு தெரிய... அதைவிட சாத்வியின் கைகளில் இருந்த மெலிதான செயின் அவனின் கண்களை உறுத்த....அவர்களை நோக்கி நகர்ந்தான்....சத்ரி....

அதே மெலிதான செயினை எடுத்து "ஹேய் இது நல்லா இருக்கும் காவ்யா உனக்கு..." காவ்யாவின் கழுத்தில் அணிய போக....

அதற்க்குள் அவளை நெருங்கிய சத்ரி.....

"ஏய், காவ்யாக்கு... கொடுக்குறது தான் கொடுக்குற.... கொஞ்சம் பெரிசா கொடு ..." என அவளின் கையிலிருந்ததை

அழகாய் வாங்கிக் கொண்டு வேறு ஒரு நகையை அவளின் கழுத்தில் போட்டு.....

நெற்றியில் முத்தமிட்டு..... "ஹேப்பி பர்த டே காவ்யா..." என காவ்யாவுக்கு வாழ்த்து கூற....

"தேங்க்ஸ் சித்தப்பா.... தேங்கஸ் சித்தி....'' என மான் குட்டியாய் துள்ளி குதித்து சென்றாள்.... காவ்யா...

''உனக்குன்னு ஸ்பெஷலா ஆர்டர் பண்ணி வாங்கினது.... யார் கைக்காவது போச்சு..... கொன்னுடுவேன்....'' என கழுத்தை ஒட்டி போடும் வகையில் இருந்த செயினை அவளின் கையில் திணித்து திரும்ப.....

"ஆமாம், ஆமாம் ஒவ்வொன்றும் உன் பொண்டாட்டிக்காக பார்த்து பார்த்து வாங்கின பாரு..... இதில் ஸ்பெஷலா ஆர்டர் பண்ணினேன்னு பில்டப் வேற.....''

ரமேஷுடன் நடக்க இருந்த திருமணத்திற்காக வாங்கின நகை தானே என்ற குத்தல் பேச்சு தாராளமாய் வர....

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும்.... என் பொண்டாட்டிக்காக..... நானே பார்த்து பார்த்து வாங்கின நகை தான் இது...

அதுவும் இது 'என அவள் கையில் இருந்த செயினை காட்டி' "இது உனக்காக மட்டும் ஸ்பெஷலா ஆர்டர் பண்ணி

வாங்கினது….அதோட டிசைனை பார்த்தா இப்படி பேச மாட்ட…’’என கூர்மையான பார்வையை அவள் புறம் விட...

அதன் டிசைனை உற்று பார்க்க… வெளியில் சாதாரணமாய் தெரிந்த டிசைன் , உற்று பார்க்கும் போது தான் தெரிந்தது….

“C’’ யின் முடிவில் "S’’ ஆரம்பிக்க…. அதன் முடிவில் "C’’ ஆரம்பமாக…..’’ C’’ “S’’ என்ற இரு எழுத்துக்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்டபடி செயின் முழுவதும் அந்த எழுத்துக்களாலே வரிசைகட்டினார்ப்போன்று டிசைன் செய்யப்பட்டு இருந்தது...மிக மெலதான செயின் ஆதலால் மேலோட்டமாய் தெரியாத வித்யாசம் உற்று பார்க்கும் போது நன்றாக தெரிய…மலைத்து நின்றாள்….சாத்வி….

அவன் விழிகளை ஊடுருவிய படி….’’இந்த நகையெல்லாம்...நீ வாங்கினதா...ஐ மீன்ட்….. அப்பா பணத்தில் வாங்காமல் உன்னோட பணத்தில் வாங்கினதா….’’ என கையில் இருந்த செயினை இறுகப்பிடித்தபடி கேட்க...

"ஆரம்பத்தில் இருந்தே அது நமக்கான கல்யாணமா முடிவு பண்ணினதால் தான் ஒவ்வொன்றும் பார்த்து பார்த்து செஞ்சேன்….. அப்படி இருக்கும் போது நகையை ஏனோ தானோன்னு எப்படி எடுப்பேன்…..’’ என அவள் விழிகளை ஊடுருவ….

"அப்போ புடவை எல்லாம்…..”

பதில் கூறாது அவளை முறைக்க….. அவன் முறைப்பில் தானாகவே தலை கவிழ…..

"அப்போ….அப்பா கொடுத்த பணம்….” என அவனின் முகம் பார்க்க தயங்க…..

"அது….. அப்பாட்ட கொடுத்து வச்சேன், திரும்ப வாங்கலை….” என

"எனக்கு அந்த பணம் வேணும்…..” அவசரமாய் கேட்க…..

"எதுக்கு…...”

"அப்பாகிட்ட கொடுக்க போறேன்…..”

"கொடுத்து….”

"கொடுத்து….”

"உங்க சவகாசமே வேண்டாம்பா….ன்னு சொல்ல போறீயா…” என கிண்டலாய் கேட்க….

அவளின் பார்வையே அதை தான் செய்வேன் என கூற….

“இப்போ தான் உங்கப்பா மலையேறாமல் நிம்மதியா இருக்காங்க…..…. பணத்தை கொண்டு போய் கொடு... சாமியாட வசதியா இருக்கும்…..” என கூற

"எனக்கு எல்லாமே செஞ்சது நீ தான்னு சொல்லனும்….” என தயங்க….

"தம்பட்டம் அடிச்சே ஆகனுமா…..’’ என சத்ரி கோபமாய் கேட்க…

எந்த பக்கம் தலையசைக்க என குழம்பியபடி சாத்வி நிற்க…..

‘‘இதோ பாரு சாவி….. 'பொண்டாட்டிக்கு செய்யற ஒவ்வொன்னையும்…… புருஷன் தம்பட்டம் அடிச்சுட்டே இருந்தான்னா…. வாழ்க்கை முழுதும் அடிச்சிட்டே இருக்க வேண்டியது தான்….’ "சாதாரணமாய் சத்ரி கூற….

ஆனால் பதிலுக்கு சாத்வி அனல் பார்வையை விட

அதை கண்டு கொள்ளாமல்…..

‘‘தவிர…. என்னோட அப்பா…. அப்பறம் நம்பளை தவிர வேற யாருக்கும் இது தெரியாது…. நீயா வாயை விட்டு….. பிரச்சனையை இழுத்து விட்டுக்காதே…..’’

"என்கிட்டே இருக்குற பணம் பத்து ரூபாவா இருந்தாலும் அது என்னோட உழைப்பில் இருந்ததா தான் இருக்கனும்….. அந்த பணம் இனி உன் பொறுப்பு…..’’ என

"அப்போ இதை காவ்யாவிற்கு கொடுத்துடுவோமா…’’ என…

"உன் இஷ்டம்…..’’ என்றவன்…

"ஆனால் கிருத்தியும் வெங்கட்டும் வாங்க மாட்டாங்க…..ரொம்ப ரோஷக்காரன்….. ஒரு தடவை

பணத்தையும் நகையையும் எடுத்ததுக்கே இப்போ வரை வாயை தொரந்து எதுவும் கேட்க மாட்டேன்றான்….. நீ எதுவும் ஏடாகூடாமா செஞ்சு வாங்கி கட்டிக்காத...'' என்றவன்...

"எது செஞ்சாலும் சொல்லிட்டு செய்…..'' என அவளை பேசவே விடாமல் அவனே கேள்வி….. அவனே பதில் என பேசிக் கொண்டிருக்க….

'' தீமையை நன்மையால் வெல்லனும்ன்னு புத்தர் சொல்லி இருக்காங்க…. ஆனால் அதை நடை முறை படுத்தினதை உன் மூலமாக தான் பார்க்குறேன்….. உன் குணம் யாருக்கும் வராது…..சத்ரி'' என்றவள்...

"இவ்வளவு செய்த உனக்கு அந்த பணத்தை என்ன செய்யனும்னு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்….. நீயே பார்த்துக்கோ…..'' என இருந்த கோபத்தை கைவிட்டவளாய் வெளியேறினாள் சாத்வி...

புரிதலுடன் கூடிய நம்பிக்கையை அந்த நிமிடம் உணர்ந்தனர் இருவருமே…..

மாடியில் இவர்கள் பேசிக் கொண்டிருக்க….கீழே ஓர் பட்டி மன்றமே நடந்து கொண்டிருந்தது சத்ரியால்….

சத்ரியை பற்றி பெற்றவர்களுக்கே தெரியாதவைகளை சிவா எல்லோரின் முன்பும் உடைத்திருக்க…..

பெரிய சோபாவில் ஒருபுறம் மகா சிவகாமி , அவர்களின் எதிர்புறம் விநாயகம் சங்கர் என இருவரும் இருக்க.....

"சிவா பேசுறதையெல்லாம் வச்சு பார்த்தா..... சாத்வி சத்ரி இரண்டு பேரும் ஏற்கனவே விரும்பி இருப்பாங்களோ.....'' என சிவகாமி ஆரம்பிக்க....

"சாத்வி விரும்பினாலான்னு தெரியலை, ஆனால் கண்டிப்பா இந்த பய விரும்பி இருப்பான்'' என விநாயகம் நூல் விட்டு பார்க்க...

"எனக்கும் அப்படி தான் தோணுது சிவகாமி..... எப்படியோ சத்ரியே அவளை கல்யாணம் பண்ணிக்கிற நிலை வந்துடுச்சு..... ரமேஷ் வேற பொண்ணை விரும்பினது கூட நல்லதா போய்டுச்சு.....சிவகாமி..... இல்லைன்னா என் பொண்ணோட நிலைமை.....'' என நிஜமாகவே மகா வருத்தப்பட.....

"ரமேஷ் யாரையும்... விரும்பலைன்னாலும்.... சாத்வி கழுத்தில் சத்ரி தான் தாலி கட்டியிருப்பான்... "இது தான் நேரமென விநாயகம் போட்டு உடைக்க............

‘‘ஆமாம்.... இரண்டு பேரும். விரும்பினதை நேரில் எப.போ பார்த்தீங்க.... எல்லாம் தெரிஞ்சவர் மாதிரியே எப்போ பார்த்தாலும் பேசுறது.....'' என மகனை குறை கூறுவது பிடிக்காமல் சிவகாமி கூற...

"ஏய், பெத்த மகன் மேல நம்பிக்கை வை .... வேண்டாம்ன்னு சொல்லலை..... அதுக்காக... நம்பிக்கைக்கு மறு பெயர் உன் மகன்னு பீத்திட்டு திரியாத.....'' என சத்ரியை அறிந்தவராய் பேசியவர்....

"உன் மகன் ப்ராடு வேலை பார்த்து தான் சாத்வியை கல்யாணம் பண்ணினான்..... சொன்னா நம்பவா..... போற....'' என நடிக்க.....

"என் மகனை குறை சொல்லலைன்னா...உங்களுக்கு தூக்கமே வராதே......'' சிவகாமி முறைக்க.....

"ப்ராடு வேலையும் பார்த்துட்டு .... நல்லவன்னு பேரு வாங்க உன் மகனால் மட்டும் தான் முடியும்.....'' என திருமணத்தில் ரமேஷின் காதலை தனக்கு சாதகமாய் பயண்படுத்தக் கொண்ட விதத்தை கூற.....

சிவகாமியும் மகாவும் சத்ரியா இப்படியெல்லாம் பண்ணினான்.... என 'பே 'வென பார்த்திருக்க.... சங்கர் மட்டுமே அமைதியாய் நடக்கும் கூத்தை வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தார்....

எல்லாவற்றையும் சொல்லிய விநாயகம்....

"இப்படிபட்டவனை நீ நல்லவன்னு சொல்லிட்டு திரியுறீயே..... "என சிவகாமியை இழுக்க....

"சத்ரி யா இப்படியெல்லாம் செய்தான்....?'' என ஒரு நிமிடம் குழம்பித் தான் போனார் சிவகாமி...ஆனால் அதை தகர்த்தது மகாவின் வார்த்தைகள்....

"அண்ணே சத்ரியை மட்டும் எதுவும் சொல்லாதீங்க..... அவன் இல்லைன்னா.... இன்னைக்கு சாத்வி எந்த நிலையில் இருப்பான்னு கூட எங்களால் சொல்ல கூட முடியாது..... சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டாலும் பெரியவங்களுக்கு எந்த ஒரு தலைகுனிவும் இல்லாமல் தன்னோட கல்யாணத்தை நடத்தினதே போதும் அண்ணே......... அதனால சத்ரியை இனி இதில் இழுக்காதீங்க "என கராராய் மகா பேச...

இந்த முறை 'பே' என விழிப்பது விநாயகத்தின் முறையானது.....

"மகா சொல்றதும் சரி தான் மச்சான்.... சத்ரியை இனி இதில் இழுக்காதே....'' என சங்கரும் பேச....

"நான் எல்லாத்துக்கும் ஷாக் கொடுக்கலாம்ன்னு பார்த்தா.... நீங்க எல்லாம் எனக்கு ஷாக் கொடுக்குறீங்க....உன்னையும் மயக்கிட்டானாடா என் மகன்....'' என விநாயகம் வாய் பிளக்க....

"ம்..அப்படித் தான் வச்சுக்கோயேன்....மச்சான்...'' என வாய் விட்டு சிரித்தார் சங்கர்....

சங்கரின் வாயையே பார்த்தவர்களுக்கு பதில் கூற ஆரம்பித்தார் சங்கர்...

‘‘சாத்விக்காவது என் இஷ்டபடி கல்யாணம் பண்ணனும்னு தான் இங்கே வந்தது….. ஆனால் சத்ரியோட ஒவ்வொரு நடவடிக்கையும் , சாத்வியை சத்ரி விரும்புறான்னு காட்டிக் கொடுத்துடுச்சு…

ஆனால் சத்ரி சரியா படிக்காதது… மெக்னாகிக் ஷாப்பில் என்ன வருமானம் வர போகுதுன்னு தான்…. நான் சத்ரியை வேண்டாம்னு சொன்னதுக்கு காரணம்…..

கோதண்டம் மகனுக்கு பேசியாச்சுன்னு ரொம்ப தைரியமா இருந்தேன்…..

ஆனால் அந்த தைரியம் எல்லாம் ஒன்னுமில்லாமல் ஆனது…. ரமேஷ் கல்யாணமே செஞ்சு ஒரு பொண்ணோட வந்து நின்னப்போ தான்…..

. அந்த நேரம் வரை சாத்வி மேல் இருந்த ஒரு உரிமை உணர்வு, என் சந்தோஷத்தை அவள் மேல திணிக்கனும்ன்னு திமரா இருந்தது எல்லாம்….. அந்த இடத்திலேயே உடைஞ்சு போய்டுச்சு…… மச்சான்….

சாத்விக்கு இந்த விசயம் தெரிய வந்தா… என்ன ஆகும்ன்னு …. தலையே வெடிச்சிடுச்சு…ரமேஷை ஏத்துக்க வைக்குறதுக்குள்ளேயுமே நாக்கு தள்ளி போச்சு… மறுபடியும் முதலில் இருந்தான்னு ரொம்ப பயந்துட்டேன்…

அப்போது தான் சத்ரியை கொண்டு வந்து நீ நிறுத்தின..... அப்போ கூட எனக்கு முழு சம்மதம் இல்லை..... வேற வழியே இல்லைன்னு தான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்...

ஆனால் நீ எங்கிட்ட பேசின அப்பறம்..... சத்ரி என்கிட்ட தனியா பேசினான்..... நிச்சயம் நடக்கும் முன்னேயே.....பேசினான்....

நீ இப்போ கதை கதையா சொன்னீயே....அதை அப்படியே ஒன்னு விடாமல் எங்கிட்ட சொன்னான்..... "என்றவர்...

அதன் பின் நடந்தவைகளை கூற ஆரம்பித்தார்.... இதற்குள் மற்ற இளைய தலைமுறையினர் பேச்சு சத்தம் கேட்டு ஒவ்வொருவராய் வர ஆரம்பிக்க, முதலில் வந்த சிவா மற்றவர்களை தடுத்து ஓரமாய் நின்று இதெல்லாம் கேட்க ஆரம்பித்தனர்...

என்னவோ ஏதோ வென கேட்க ஆரம்பித்த சத்ரியும் இவர்களின் பேச்ணை கேட்டு..... 'ஐய்யோ.....' என போஸ் கொடுத்தபடி நிற்க...

சாத்வியோ.... அவனை விழுங்கும் படி பார்த்திருக்க.... மற்றவர்கள் சிரிப்புடன் சங்கர் பேசுவதை பார்த்திருந்தனர்...

"அப்போ இதெல்லாம் உன்னோட ப்ளான்னா.... இதுக்கு அந்த ரமேஷூம் உடைந்தையா..... இரண்டு பேரும் சேர்ந்து

தான் இந்த கல்யாணத்தை ப்ளான் பண்ணி நிறுத்துனீங்களா….'' என கோபம் கொப்பளிக்க சங்கர் நிற்க…..

''ப்ளானா….? நானா….?'' என சிரித்த சத்ரி…..

"ஒரு வருங்கால மருமகனா அவனை ஏத்துக்க தயாரா இருக்கும் போது….. அவனோட சம்மதம் இருக்கா இல்லையான்னு கூட தெரியாமல் அவசர அவரசமா முடிவு பண்ணினது நீங்க... ஏற்கனவே ஒரு பொண்ணை விரும்புவது தெரிஞ்சும், துணிஞ்சு உங்களுக்கு நம்பிக்கை கொடுத்தது கோதண்டம் சித்தப்பா….. இதில் என்னோட ப்ளான் எங்கே இருக்குது….'' என நேரடியாய் கேட்டான் சத்ரி….

அவனின் கேள்வியில் பதில் சொல்ல முடியாமல் சங்கர் நிற்க….

"பேசாமல் உங்க கிட்டேயே நேரடியாய் சாத்வியை கேட்கலான்னு கூட நினைச்சேன்….. ஆனால் என்னோட படிப்பையும் உழைப்பையும் கிண்டலா பேசி என்னை வேண்டாம்னு சொன்னதை ஏற்கனவே நான் கேட்க வேண்டியதாயிடுச்சு….

இதுக்கு மேல கேட்டாலும் பயனில்லைன்னு தோணினது….அதுக்கப்பறம் தான் கல்யாணத்தை நிறுத்த ஏதாவது ப்ளான் போடலாம்ன்னு நினைச்சு…, ரமேஷ் கிட்ட நான் பேசினது…. ஆனால் இவ்வளவு பெரிய வாய்ப்பு எனக்கு

கிடைக்கும் போது விடுவேனா….. கப்புன்னு புடிச்சுக்கிட்டேன்… சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கிட்டேன்…’’ என தோள்களை குலுக்க….

சத்ரியின் இப்பேர்பட்ட பேச்சுக்களை எதிர் பார்க்காத சங்கருக்கு அவன் மளல் சந்தேகம் எழ

"சாத்வியை நீ விரும்புறீயா….’’என தன் சந்தேகத்தை அவனிடம் கேட்க….

"ஆமாம்…’’ என்றான் சத்ரி….. எதையும் மறைக்காது….

"இது எப்போ இருந்து…..’’ என கூர்மையாய் பார்க்க…

"'சாத்வியை தான் நான் சத்ரிக்கு பேச நினைச்சுது….. வெங்கட்டை இல்லை…..’ இது நீங்க சொன்னது தான்…. சொன்ன நிமிஷம் நியாபகம் இருக்கா….?’’என சத்ரி சொல்லி நிற்க….

"ஷாக் அடித்தார்ப்போல் ஒரடி பின் நகர்ந்தார் சங்கர்…. அவரின் அதிர்வை உள்வாங்கியவன், பயமூட்டாமல் மெதுவாய் பேச ஆரம்பித்தான்…..

"சாத்விக்கு நான் தான் பொருத்தமாவேன்னு… எங்களோட சின்ன வயதிலேயே முடிவெடுத்தீங்க….. அப்போ….அந்த சின்ன வயசில் இருந்த நம்பிக்கை…. இப்போ எங்கே போச்சு மாமா….அப்போ இருந்த அதே சத்ரி தான்…. இப்போவும்….. ரொம்ப வருசம் சாத்விக்காகவே காத்திருக்கேன்…..சாத்வியை

எனக்கு கொடுத்துடுங்க மாமா..... நான் பார்த்துக்கிறேன்.....'' என மெதுவாய் கேட்க....

அவன் வார்த்தைகளில் தெரிந்த உண்மை சுட்டாலும்....

"ஆனால் சாத்வி ஒத்துக்கனுமே...'' என முதல் முறையாய் மகளுக்காய் யோசித்தார் சங்கர்....

"நான் சொன்னதுக்காகவே கல்யாணத்துக்காக சம்மதம் சொன்னவள்... அவளோட கணவன் நான் தான்னு தெரிஞ்சா.... சம்மதம் சொல்லாமல் இருப்பாளா.... ?'' என பொறுமையாகவே பதில் கூறியவனை பிடித்து தான் போனது சங்கருக்கு.....

"சாத்வியும் உன்னை விரும்புறாளா....?'' என மீண்டும் சந்தேகத்துடன் கேட்க....

"இப்போ வரை ரமேஷோட தான் கல்யாணம்ன்னு நினைச்சிட்டு இருக்கா.... அப்படி இருக்கும் போது.... உங்க கேள்விக்கு இப்போ அவசியமே இல்லை...'' என சாத்வயை தன்னுடன் இணை கூட்டாமல் அழகாய் பதில் சொன்னான்....

"ப்ளீஸ் மாமா.....'' என நின்ற சத்ரியை வெறுக்க முடியவில்லை...

"இப்படி ஒரு நல்ல புள்ளையை குறை சொல்றியே மச்சான்...உனக்கே நியாமா இருக்கா.....''சொல்லி முடிக்கும் முன் சிவாவிற்கு சிரிப்பு வெடிக்க...

கஸ்தூரியின் புடவை முந்தனையை எடுத்து தன் வாய்க்குள் அடைத்தபடி கண்ணீர் வர சிவா சிரிக்க…. இருவரையும் பார்த்த வெங்கட் கிருத்திக்கு குற்ற உணர்வு சிறிது குறைந்தார் போல் இருக்க…

உருண்டு புரண்டு சிரிக்கவில்லை சிரிக்கவில்லை அவ்வளவு தான்….மற்றபடி அதை தான் செய்து கொண்டிருந்தான் சிவா…. மற்றவர்கள் புரியாமல் பார்த்தலும் சிரிப்பு அவர்களையும் தொற்ற அடக்கப்பட்ட புன்னகையோடு சாத்வி கிருத்தி வெங்கட் நின்றிருக்க….

"அண்ணி… கொஞ்சம் நகருங்க ….'' என சத்ரி சிவா முன் வர….

வாய்க்குள் இருந்த புடவையை வேகமாய் உருவி நகர்ந்தாள் கஸ்தூரி….

"இப்போ என்ன ஆச்சுன்னு இப்படி சிரிக்கறண்ணே…'' என சத்ரி கடுப்பாய் கேட்க…

பதிலில்லை சிவாவிடம் மீண்டும் சிரிப்பு தான் வந்தது…. சத்ரியையும் சாத்வியையும் பார்த்து பார்த்து சிரிக்க….

"அண்ணே…'' என சத்தம் வராமல் கத்மியவன் அருகில் இருந்த அறைக்குள் தள்ள….மற்றவர்களும் உள்ளே வந்தனர்….

சத்தமில்லாமல் அதுவரை சிரித்தவன் அறைக்குள் வந்ததும் பலமாய் சிரித்தபடி….

‘‘பண்றதெல்லாம் பண்ணிட்டு நல்லவன்னு எப்படிடா பேர் வாங்குற….. இதில் சாத்வி உன்னை காதலிக்கவே இல்லைன்னு பொய் வேற…..எல்லாம் சோத்துல பூசனிக்காயை மறைச்சா….. நீ…. பூசனிக்காய் தோட்டத்தையே மறைச்சுட்டியேடா...’’ என கடந்த கால சத்ரி சாத்வியின் நிகழ்வுகளை நினைத்தவனுக்கு மீண்டும் சிரிப்பு பீரிட….

சத்ரியோ மானசீகமாய் தலையில் அடித்துக் கொள்ள…..

சாத்வி முகத்தை வேறு புறம் திருப்ப….

கிருத்தியும் வெங்கட்டும் கூட சேர்ந்து சிரிக்க….. கஸ்தூரி தன் கனவனையே ஆர்வமாய் பார்த்திருக்க….

சிரிப்பில் கலங்கிய கண்களை துடைத்தபடி….சத்ரியின் அருகில் வந்தவன் இரண்டு அடி போட்டு….. "ப்ளான் பண்றதெல்லாம் பண்ணிட்டு….. பிளானே இல்லைன்னு கவுத்திட்டியேடா….. இதை தாண்டா என்னால தாங்கவே முடியலை...’’ என…..மேலும் சிரிக்க...

"உங்க தம்பிக்கு இருக்குற மூளை கொஞ்சமாவது உங்களுக்கு இருந்திருந்தா….. நமக்கு இவ்வளவு கஷ்டமே இருந்திருக்காது…..’’ என கிருத்தி போலியாய் வெங்கட்டை முறைக்க…..

வெங்கட்டிற்க்கும் அப்படித் தான் தோன்ற….

"ஆமாம் கிருத்தி..... ஊரை விட்டு ஓடறதுக்கு முன்ன..... இவன் கிட்ட ஐடியா கேட்டு இருந்திருக்கலாம்..... நல்ல ப்ளானா போட்டு கொடுத்திருப்பான்....." என வெங்கட்டும் போலியான கோபத்துடன் சத்ரியை பார்க்க.....

இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் ஆர்வமாய் தன்னையே பார்த்திருந்த சாத்வியை ஓரக்கண்ணால் பார்த்தவன்....

"இப்போ கூட ஒன்றும் பிரச்சனையல்லை வெங்கட்.... எனக்கு ஒஏற ஒரு அண்ணயை ரெடி பண்ணு.... ஐடியா தரேன்....." என சிரிக்காமல் சொல்ல.....

"அடேய்...."என மற்றவர்கள் கோரசாய் சத்தம் எழுப்ப....

"இப்போ கோரசா கத்தி ப்ரயோஜனம் இல்லை ... இதெல்லாம் காலம் கடந்த ஞானோதயம்... பேசி ஒன்னும் ஆகப்போறதில்லை..... இடத்தை காலி பண்ணுங்க....." என கூட்டத்திலிருந்து விலக.....

"எங்கேடா போற..." என மீண்டும் கோரசாக கேட்க.....

சாத்வியை திரும்பி பார்த்தவன்...

"இப்போ நீங்க எல்லாரும் நடத்தின பாராட்டு மழைக்கு என் பொண்டாட்டி எனக்கு ரொமான்ஸ் கிளாஸ் எதாவது ரெடி பண்ணிருப்பா... அதுக்கு தான் போறேன்....." என மற்றவர்களிடம் கூறியபடி

திரு திரு வென விழித்துக் கொண்டு நின்றிருந்த சாத்வியை பார்த்து.....

"ரொமான்ஸ் கிளாஸ் உண்டு தானே...'' என...சிரிக்க.....

இவனை என்ன செய்வது என்பது போல் பார்த்த சாத்வியின் கைகளில் பூரிக் கட்டையை கொடுத்த கிருத்தி...

"இது போதுமா சாத்வி...'' என.....

அதை பிடுங்கிக் கொண்டு அவனை துரத்த.....

அவளிடம் சிக்காமல் ஓடிக் கொண்டிருந்தான் சத்ரி....

சிறு வயதில் ஆரம்பித்த அவர்களின் நேசம்...

துளியும் கலங்கமில்லாது

அவர்களின் நெஞ்சில் ஈரமாய் உறைந்து நின்றது.....

அன்றும்.... இன்றும்...

கீழே இன்னும் பேசிக் கொண்டு தான் இருந்தனர்...

"சத்ரி பேசினதை பார்க்கும் போது..... மீனுக்காக காத்திருந்த கொக்கு தான் நியாபகத்துக்கு வந்தது... அவனோட பொறுமைக்கு கிடைச்ச வாய்ப்பா தான் தோணினது.....

அன்னைக்கு எதுவுமே என்கிட்ட சொல்லாமல் . இருந்திருந்தால் கூட கண்டிப்பா கல்யாணம் நடந்திருக்கும்..... அதை பொருட் படுத்தாமல்.... என்கிட்டயே சந்தர்ப்பம் பார்த்து பேசினது எனக்கு ரொம்ப பிடிச்சு போச்சு மச்சான்..... அதை

விடவா நல்ல மாப்பிள்ளை கிடைக்க போறான்னு…. ஏத்துக்கிட்டேன்…..

ஆனால் அதுக்கு பிறகு நடந்த ஒன்னொன்னும் சத்ரி மேல இருந்த நம்பிக்கையை கூட்ட தான் செஞ்சதே தவிர குறைக்கவே இல்லை….'' என சத்ரியை பார்த்து பிரம்மித்த நாட்களை கூறி நிறுத்த…

'எதுவும் பிரச்சனை இல்லாமல் முடிந்ததே 'என நினைத்து கொண்டனர்…

தங்கள் அறைக்கு வந்த வெங்கட்டிடம் "சிவா மாமாக்கு நம்ம மேல எதுவும் கோபம் இல்லையா…. சாதாரணமா பேசிட்டு இருந்தீங்க…. நேத்தே கேட்கனும்னு நினைச்சேன்… என்ன நடந்தது "என வெங்கட்டிடம் கேட்க….

"ம்… என்ன நடந்தது…. சமாதானம் தான் நடந்தது…..'' என சிரித்தான் வெங்கட்…..

'' என்னன்னு சொல்லுங்க….'' என சினுங்க….

"சரி சரி சொல்றேன்….'' என சொல்ல ஆரம்பித்தான்

சத்ரியை சிவா அடித்திருக்கிறான் என சிவாவின் மூலமே தெரிந்த வெங்கட் வேகமாய் சத்ரியின் அறையனுள் வந்தான்…..

"எப்படி நீங்க சத்ரியை அடிக்கலாம்…'' என்றான் சத்ரியை முறைத்தபடி…..

"அடி வாங்கின அவனே சும்மா இருக்கான்…. உனக்கென்ன...'' என சிவா வெங்கட்டை முறைக்க….

''முடிஞ்சு போனதை ஏன் தோண்டி எடுக்கிற ….விடு… வெங்கட்…'' என சத்ரி வர….

"நான் பண்ணின தப்புக்கு நீ ஏண்டா அடி வாங்கனும்….. அது தெரிஞ்சும் உன்னை அடிச்சவங்களுக்கு அறிவு எங்கடா போச்சு…..'' என சீற….

வெங்கட்டின் கோபத்தை தூசு தட்டினார்ப் போல்….. பார்த்த சிவா…..

"நானா சொல்ல போய் தான், அவனை அடிச்ச விசயமே உனக்கு தெரியும்…. இதில் நியாயம் வேற கேட்க வந்துட்ட... அதுவும் இவ்வளவு லேட்டா…….. இதில் உன்னை அடிச்சு மாதிரி பில்டப் வேற கொடுக்குறியே… ஓவரா தெரியலை…..'' என

சூடு வைத்தார்ப்போல் அப்படி ஒரு வலி வெங்கட்டிடம்….. அதே வலியுடன்….

"பேங்ளூரில் நீ என்னைப் பார்க்கமாலேயே இருந்திருக்கலாம் சத்ரி….. எதுவுமே என் காதுக்கு வராமலேயே போய் இருக்கும்…. இவ்வளவு வலிச்சிருக்காது…..

ஒரு தம்பியா என் மேல நீ எடுத்துகிற அக்கறையை….

ஒரு அண்ணனா.....எனக்கு நீ அந்த வாய்ப்பை கொடுக்கவே இல்லடா.....

ஏன் அடிச்சன்னு ஒரு வார்த்தை கூட கேட்க முடியாதளவு ஆக்கிட்டடா....'' என வலியுடன் சத்ரியை பார்த்தவன்.... அங்கிருந்து நகர....

அவனை பிடித்து சோபாவில் அமர்த்தி அவன் தோளில் கை போட்டு அருகில் அமர்ந்தான் சிவா....

"ஆசை வச்ச பொண்ணை யாராவது தூக்கிட்டு போனால்.... எல்லாருக்கும் வர்ற அதே வலி தாண்டா எனக்கும்..... நீ இருக்குற இடம் இவனுக்கு தெரியாமலேயா இருக்கும்ன்னு தான் அடிச்சேன்.... ஆனால் அதுக்கப்பறம் ரொம்ப ஃபீல் பண்ணினேன் வெங்கட்...."

"ம்ப்ச்.... விடு வெங்கட்.... பேச்சு வாக்கில் தான் தெரிந்தது.. உனக்கு எதுவும் தெரியாதுன்னு.... இன்னும் எதுவும் தெரியாமல் இருக்குறியேன்னு தான் கோபத்தில் நானும் பேசிட்டேன்... . சாரிடா...'' என...

"நீங்க எதுக்குண்ணே சாரிலாம் கேட்குறீங்க..... நடந்ததை இவனே சொல்லி இருந்தா கூட இவ்வளவு வலிச்சிருக்காது..... நாங்க எதுவுமே தெரிஞ்சுக்காமல் சுயநலமா இருந்திருக்கோம்ன்னு... அன்னைக்கு சாத்வி நல்லா நல்லா கேட்டுட்டு போனாள்.... இன்றைக்கு நீங்களா..... நல்ல வேளை

கிருத்தி இங்கே இல்லை….. "என பெரு மூச்சு விட… அதையும் மீறி ஓர் ஆதங்கம் வெளி வரத் தான் செய்தது….

"நானே சொல்லி இருந்தால் இவ்வளவு அசிங்கப்பட்டு இருக்கமாட்டே….. சாரிடா வெங்கட்…. "என சத்ரியும் அவர்கள் அருகில் அமர….

"காதலிச்சவங்களையே கல்யாணம் பண்ணிக்கிறது என்ன அவ்வளவு பெரிய தப்பா…..'' என குனிந்திருந்த தலையை நிமிர்த்தாமல் கேட்டான் வெங்கட்….

"இதை கூட உன்னால் தலை நிமிர்ந்து கேட்க முடியலை…. இது தாண்டா…. நீ காதலுக்கு கொடுத்த மரியாதை…..'' என சிவா கூற

விலுக்கென நிமிர்ந்தான் வெங்கட்..

"சத்ரி காதலுக்காக காத்திருந்து….. கிடைச்ச சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கிட்டான்….. ஆனால் அது பெரிசா தெரிய வாய்ப்பில்லாமல் பண்ணிட்டான் இந்த பய…..''

"ரெண்டு பேரோட டார்கெட்டும் ஒன்னு தான்…. ஆனால் அதை நிறைவேத்திகிட்ட வழி தான் வேற வேற… உனக்கும் ஒரு பொண்ணு இருக்காடா…அதான் இத்தனை அட்வைஸ்….. இரண்டு பக்கமும் பேலன்ஸ் பண்ற அப்பாவா இரு…..''

"மற்றபடி கஷ்படுத்தி இருந்தா மன்னிச்சுடு….'' என….சிவா சொல்ல….

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க.....’’ என சத்ரியும்...

"ஐய்யோ அண்ணே நீங்க போய் சாரி கேட்டுட்டு இதில் முழுசா பாதிக்கப்பட்டதே நீங்க தான்....’’ என வெங்கட்டும் கூற....

"உங்களால் தாண்டா எனக்கு கஸ்தூரி கிடைச்சா..... கஸ்தூரிக்காகவே உங்களுக்கு என்ன வேணா செய்யலாம்டா.....’’ என சிவாவும் சிரிக்க....

"பாஸ்ட் இஸ் பாஸ்ட்... மறக்க முடியலைன்னாலும்... நினைக்காமல் இருக்க பழகிப்போம்....’’ என சிவா தன் கையை நீட்ட....அவன் கைகளோடு இணைந்தது....சத்ரி வெங்கட்டின் கைகள்.....

நடந்ததை கேட்டு கிருத்திக்கு புருவங்கள் இரண்டும் உச்சி மேட்டுக்கே செல்ல....

"அட்வைஸ் இல்லாத ஒரு அட்வைஸ்...’’ என்றவள்..

"உண்மையிலேயே சிவா மாமா க்ரேட் தான் "என கிருத்தி கூற....

"ம் ஆமா கிருத்தி...கிரேட் தான்..... இரண்டு பேரோட சந்தோஷத்தை பார்க்கும் போது , இப்போ தான் உறுத்தல் இல்லாமல் இருக்கு....’’ என வெங்கட் கூற....

"ம்..எனக்கும் தான் வெங்கட்...'' என அவனின் தோள் சாய்ந்தாள் கிருத்தி....

சாத்வியுடன் சிரித்து பேசினாலும், அவ்வப்போது அவளின் மேல் அழுத்தமாய் படியும் பார்வை....

'இன்னும் கோபம் குறையவில்லை' என்பதை காட்டிக்கொடுக்க..... அமைதியாய் இருந்தாள்....

காவ்யாவின் பிறந்தநாளும் அன்று சேர....

பிறந்த நாள் விழா.... ஹோட்டலில் டின்னர் அது போக இளையவர்களின் சினிமா கொட்டமும் சேர்ந்து கொள்ள... வீடு திரும்புவதற்கே நடு இரவானது.....

முந்தைய நாள் தூங்காதது, காலையில் வீட்டில் நடந்த அலம்பல், பிறந்த நாள் கொண்டாட்டம் என களைத்துப்போய் தூங்க ஆயத்தமானாள்...

காலையில் இருந்து சத்ரி அடிக்கும் கொட்டங்கள் , அனைத்தும் கோபத்தை குறைத்திருப்பதாய் சாத்வி நினைத்திருக்க.... அறையினுள் வந்தவனோ... நேற்றைய இரவில் எந்த அளவு முகம் இறுகி இருந்ததோ, அதே போல் இன்றும் இருக்க...

முகம் சுருக்கியபடி படுத்துவிட்டாள்.... அவளை நொடிக்கொரு முறை பார்த்திருந்தவன் கண்களில் தவறாமல் சிக்கி விட....

மெதுவாய்…

அவள் அருகில் அமர்ந்தவன், அறைகுறையான தூக்கத்தில் இருந்தவளின் தலையை மெதுவாய் வருடி…..

"உன் மேல்… இருக்குற காதலை விட , கோபம் ரொம்ப அதிகமாக இருக்கு சாத்வி….. 'என்னை தேடி வந்துட்டு போய்ட்டியேன்னு' ரொம்ப ஆதங்கமா இருக்கு….. டைஜிஸ்ட் பண்ணவே முடியலை… கொஞ்ச நாளைக்கு இப்படியே இருப்போம்….. தயவு செஞ்சு என்னை திரும்பவும் கோபப்படுத்தற மாதிரி எதுவும் பண்ணிடாத….. நீ தான் கஷ்டப்படுவ…..''என அழுத்தமாய் கூற….

'சரி' என்பது போல் ஒரு சிறிய தலையசைப்பு மட்டுமே வர…. தூங்கிப்போனாள்…..

காலையில் சத்ரியுமே மிகத் தாமதமாய் எழுந்தான்…. படுக்கையின் இடதுபுறமாய் தளர்வாய் துயில் கொண்டவளை பார்த்தபடி… நேரத்தை பார்க்க….. அது பத்தரை என காட்ட..

'அச்சோ… இவ்வளவு நேரமாகவா தூங்கிட்டோம்…..' என உடலை நெறித்தபடி எழுந்தவனுக்கு…..

"இவ இன்னைக்கு பேங்குக்கு வேற போகனுமே…. ஏற்கனவே இரண்டு நாள் லீவ்…. "என சாத்வியை எழுப்பினான்….

ஆனால் அவள் அசைந்தாள் அல்லவோ….. எழுவதற்கு…. அத்தனை அழுப்பு…அசையக்கூட இல்லை…..

மீண்டும் மீண்டும் எழுப்ப…. சிறிதாய் உறக்கம் கலைந்து…..’’ ம்…’’ என்ற முனங்கள் மட்டுமே வர…..

அவளின் அசதியை பார்த்து….. "பேங்குக்கு போகலையா….’’ என அவளை எழுப்ப….

எந்த பதிலும் இல்லை அவளிடம், ஆனால் சத்ரியின் உலுக்கலில் கொஞ்சம் கொஞ்சமாய் துயில் கலைந்து கொண்டிருந்தது சாத்விக்கு…

அவளின் அசதியை பார்த்து…..

‘இன்றைக்கும் பேங்குக்கு லீவ் சொல்ல வேண்டியது தான்…’. என அவளின் மொபைலை எடுத்தான்….. மேனேஜரின் எண்ணை எடுக்க..

வழக்கம் போல் பாஸ்வேர்ட் கேட்க...

'என்ன பாஸ்வேர்ட்….’ என யோசித்தவனுக்கு... ஒரு நாள் பேங்கில் வைத்து அவளிடம் பாஸ்வேர்ட் கேட்ட நியாபகம்…..வர…..

சிரித்தபடியே அவளின் வலது கையை போர்வையினுள் இருந்து எடுத்து அவளின் பிங்கர் பிரின்டை சென்சாரில் வைத்து அழுத்த…..

லாக் ஓபன் ஆனது... ஸ்கிரினில்..... குலதெய்வம் கோவிலில் அவளும் அவனுமாய் எடுத்துக் கொண்ட ஸ்னாப் ஒன்றை வைத்திருக்க... அதை வெகு நேரமாய் பார்த்துக் கொண்டிருந்தான்....

பின்...கான்டாக்டில் பேங்க் மேனேஜரின் நம்பரை தேடி எடுத்து..... சாத்விக்கு உடல் நிலை சரியில்லை என... லீவ் சொன்னான்...

மீண்டும் ஸ்கிரினில் இருந்த போட்டோவை பார்த்த படி அவளின்

அருகில் தலையணையில் முழங்கைகளை பதித்தபடியே... குப்புற படுத்தவன்..... அவள் மொபைலில் கேலரி சென்று வேறு போட்டோகளை பார்க்க..... குல தெய்வம் கோவில் எடுத்த போட்டோக்கள் அணிவகுத்து நிற்க.... ஒவ்வொன்றாய் பார்த்து..... பின்....கேலரி முழுவதும் ஒவ்வொரு போல்டர்களாய் பார்த்தவனின் கண்களுக்கு சிக்கியது... முழுதாய் ஒரு போல்டர் முழுவதும் அடைத்து நின்ற..... சத்ரியின் நிழல்கள்...

அதிர்ந்து ஒரு முறை சாத்வியை பார்த்து பின் மற்ற போட்டோக்களை பார்த்தவன்.....

'இதெல்லாம் இப்போ எடுத்த போட்டோ இல்லையே...' என வேக வேகமாய் அடுத்தடுத்த போட்டோக்களை பார்க்க... வரிசை கட்டி நின்றது எல்லாமே அவனது போட்டோக்களே...

'இவ்வளவு போட்டோ....எப்படி கிடச்சது இவளுக்கு...'

'ஒரு வேளை நம்ப போனில் இருந்து சுட்டு இருப்பாளா...' என நினைத்தபடி யோசித்தவன்...... சட்டென உதித்த ஐடியாவில்.....

'இமேஜ் டீடையில்ஸ் 'ல் சென்று போட்டோக்களை பற்றிய விவரங்களை தேட... அதில் டவுண்லோட் ப்ரம் என "சாத்வியின் மெயில் அட்ரெஸூம்''

டவுன்லோட் டைம் அண்ட டேட்... என ஒரு ஏழு எட்டு மாதங்களுக்கு முந்தைய தேதியை காட்ட...

குழம்பிப் போனான் சத்ரி.....

சத்ரியின் போட்டோக்கள் எல்லாம் கொஞ்சம் இளவயது போட்டோக்களாக ஆரம்பித்து.... தற்போதைய போட்டோக்கள் வரை அனைத்தும் இருக்க....

குழம்பிப்போனான்..... இதெல்லாம் எப்படி எட்டு மாதங்களுக்கு முன் எடுத்தாள்.....

குழப்பமே மிஞ்ச.... 'மெயிலில்' இருந்து தான் போட்டோ எல்லாத்தையும் டவுன்லோட் பண்ணி இருந்தா...என்ற நினைவு வர....

மொபைலில் இருந்த அவளின் மெயிலை ஓபன் செய்து..... வெகு நேரமாய்த் தேட.... அவன் கண்களுக்கு விருந்தானது..... சாத்வியின் காதல்..

பிறந்த நாள் விழா…. ஹோட்டலில் டின்னர் அது போக இளையவர்களின் சினிமா கொட்டமும் சேர்ந்து கொள்ள… வீடு திரும்புவதற்கே நடு இரவானது…..

முந்தைய நாள் தூங்காதது, காலையில் வீட்டில் நடந்த அலம்பல், பிறந்த நாள் கொண்டாட்டம் என களைத்துப்போய் தூங்க ஆயத்தமானாள்…

காலையில் இருந்து சத்ரி அடிக்கும் கொட்டங்கள் , அனைத்தும் கோபத்தை குறைத்திருப்பதாய் சாத்வி நினைத்திருக்க…. அறையினுள் வந்தவனோ… நேற்றைய இரவில் எந்த அளவு முகம் இறுகி இருந்ததோ, அதே போல் இன்றும் இருக்க…

முகம் சுருக்கியபடி படுத்துவிட்டாள்…. அவளை நொடிக்கொரு முறை பார்த்திருந்தவன் கண்களில் தவறாமல் சிக்கி விட….

மெதுவாய்…

அவள் அருகில் அமர்ந்தவன், அறைகுறையான தூக்கத்தில் இருந்தவளின் தலையை மெதுவாய் வருடி…..

"உன் மேல்… இருக்குற காதலை விட , கோபம் ரொம்ப அதிகமாக இருக்கு சாத்வி….. 'என்னை தேடி வந்துட்டு போய்ட்டியேன்னு' ரொம்ப ஆதங்கமா இருக்கு….. டைஜிஸ்ட் பண்ணவே முடியலை… கொஞ்ச நாளைக்கு இப்படியே

இருப்போம்….. தயவு செஞ்சு என்னை திரும்பவும் கோபப்படுத்தற மாதிரி எதுவும் பண்ணிடாத….. நீ தான் கஷ்டப்படுவ…..''என அழுத்தமாய் கூற….

'சரி' என்பது போல் ஒரு சிறிய தலையசைப்பு மட்டுமே வர…. தூங்கிப்போனாள்…..

காலையில் சத்ரியுமே மிகத் தாமதமாய் எழுந்தான்…. படுக்கையின் இடதுபுறமாய் தளர்வாய் துயில் கொண்டவளை பார்த்தபடி… நேரத்தை பார்க்க….. அது பத்தரை என காட்ட..

'அச்சோ… இவ்வளவு நேரமாகவா தூங்கிட்டோம்…..' என உடலை நெறித்தபடி எழுந்தவனுக்கு…..

"இவ இன்னைக்கு பேங்குக்கு வேற போகனுமே…. ஏற்கனவே இரண்டு நாள் லீவ்…. "என சாத்வியை எழுப்பினான்….

ஆனால் அவள் அசைந்தாள் அல்லவோ….. எழுவதற்கு…. அத்தனை அழுப்பு…அசையக்கூட இல்லை…..

மீண்டும் மீண்டும் எழுப்ப…. சிறிதாய் உறக்கம் கலைந்து……'' ம்…'' என்ற முனங்கள் மட்டுமே வர…..

அவளின் அசதியை பார்த்து….. "பேங்குக்கு போகலையா….'' என அவளை எழுப்ப….

எந்த பதிலும் இல்லை அவளிடம், ஆனால் சத்ரியின் உலுக்கலில் கொஞ்சம் கொஞ்சமாய் துயில் கலைந்து கொண்டிருந்தது சாத்விக்கு…

அவளின் அசதியை பார்த்து…..

'இன்றைக்கும் பேங்குக்கு லீவ் சொல்ல வேண்டியது தான்…'. என அவளின் மொபைலை எடுத்தான்….. மேனேஜரின் எண்ணை எடுக்க..

வழக்கம் போல் பாஸ்வேர்ட் கேட்க…

'என்ன பாஸ்வேர்ட்….' என யோசித்தவனுக்கு… ஒரு நாள் பேங்கில் வைத்து அவளிடம் பாஸ்வேர்ட் கேட்ட நியாபகம்…..வர…..

சிரித்தபடியே அவளின் வலது கையை போர்வையினுள் இருந்து எடுத்து அவளின் பிங்கர் பிரின்டை சென்சாரில் வைத்து அழுத்த…..

லாக் ஓபன் ஆனது… ஸ்கிரினில்….. குலதெய்வம் கோவிலில் அவளும் அவனுமாய் எடுத்துக் கொண்ட ஸ்னாப் ஒன்றை வைத்திருக்க… அதை வெகு நேரமாய் பார்த்துக் கொண்டிருந்தான்….

பின்…கான்டாக்டில் பேங்க் மேனேஜரின் நம்பரை தேடி எடுத்து….. சாத்விக்கு உடல் நிலை சரியில்லை என… லீவ் சொன்னான்…

மீண்டும் ஸ்கிரினில் இருந்த போட்டோவை பார்த்த படி அவளின்

அருகில் தலையணையில் முழங்கைகளை பதித்தபடியே... குப்புற படுத்தவன்….. அவள் மொபைலில் கேலரி சென்று வேறு போட்டோகளை பார்க்க….. குல தெய்வம் கோவில் எடுத்த போட்டோக்கள் அணிவகுத்து நிற்க…. ஒவ்வொன்றாய் பார்த்து….. பின்….கேலரி முழுவதும் ஒவ்வொரு போல்டர்களாய் பார்த்தவனின் கண்களுக்கு சிக்கியது... முழுதாய் ஒரு போல்டர் முழுவதும் அடைத்து நின்ற….. சத்ரியின் நிழல்கள்...

அதிர்ந்து ஒரு முறை சாத்வியை பார்த்து பின் மற்ற போட்டோக்களை பார்த்தவன்…..

'இதெல்லாம் இப்போ எடுத்த போட்டோ இல்லையே...' என வேக வேகமாய் அடுத்தடுத்த போட்டோக்களை பார்க்க… வரிசை கட்டி நின்றது எல்லாமே அவனது போட்டோக்களே…

'இவ்வளவு போட்டோ….எப்படி கிடச்சது இவளுக்கு...'

'ஒரு வேளை நம்ப போனில் இருந்து சுட்டு இருப்பாளா...' என நினைத்தபடி யோசித்தவன்…... சட்டென உதித்த ஐடியாவில்…..

'இமேஜ் டீடையில்ஸ் 'ல் சென்று போட்டோக்களை பற்றிய விவரங்களை தேட... அதில் டவுண்லோட் ப்ரம் என "சாத்வியின் மெயில் அட்ரெஸூம்''

டவுன்லோட் டைம் அண்ட டேட்... என ஒரு ஏழு எட்டு மாதங்களுக்கு முந்தைய தேதியை காட்ட...

குழம்பிப் போனான் சத்ரி.....

சத்ரியின் போட்டோக்கள் எல்லாம் கொஞ்சம் இளவயது போட்டோக்களாக ஆரம்பித்து.... தற்போதைய போட்டோக்கள் வரை அனைத்தும் இருக்க....

குழம்பிப்போனான்..... இதெல்லாம் எப்படி எட்டு மாதங்களுக்கு முன் எடுத்தாள்.....

குழப்பமே மிஞ்ச.... 'மெயிலில்' இருந்து தான் போட்டோ எல்லாத்தையும் டவுன்லோட் பண்ணி இருந்தா...என்ற நினைவு வர....

மொபைலில் இருந்த அவளின் மெயிலை ஓபன் செய்து..... வெகு நேரமாய்த் தேட.... அவன் கண்களுக்கு விருந்தானது..... சாத்வியின் காதல்..

"MY CHATHRI'' என்ற மெயிலை நடுங்கும் விரல்களால் ஓபன் செய்ய...

சத்ரியின் நிழல்களால் நிறைந்த மெயிலை முழுவதுமாய் பார்த்தவனுக்கு வியர்த்துத் தான் போனது.... சாத்வியின் காதலை எண்ணி...

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்த, "MY Chathri "என்ற போல்டர் குறிப்பிட்ட கால இடைவெளியில்

ஒவ்வொரு முறையும் நிறைந்திருந்த சத்ரியின் போட்டோக்கள், மூன்று மாதம், ஆறு மாதம் , ஒரு வருடம் என சிறிய சிறிய இடைவெளியை காட்டிய மெயில்கள்….கடைசி மெயில், சொல்லப்போனால் அது தான் சாத்வியின் முதல் மெயில்….

அது காட்டிய தேதியில் அப்படியே உறைந்தான்... கிட்டதட்ட ஏழு வருடங்களுக்கு முன் காட்டிய தேதி அது...

மொபைல் கை நழுவி மெத்தையிலேயே விழ...

விழியும் நழுவி அவளில் விழ...

சாத்வியை துளைத்து எடுத்துக் கொண்டிருந்தது... சத்ரியின் பார்வை…..

இறங்கியிருந்த காதல் வெறி மீண்டும் தீப்பிடிக்க ஆரம்பிக்க….. அதை அணைக்கும் ஒரே வழி….சாத்வி மட்டுமே….என…..அவளை நெருங்கினான்……

இடையில் தாராளமாய் அழுத்தம் கொடுத்து தன் புறம் திருப்ப…. படாரென விழிகளை திறந்தாள் சாத்வி திரு திரு வென விழித்தபடி சத்ரியை பார்த்தவள், அவனின்

துளைத்தெடுத்த பார்வையில் முழுதாய் கண் விழித்து பார்க்க…..

நேற்று இரவில் பார்த்த செவ்வரியோடிய கண்கள்…..இன்னும் சிவந்திருக்க….

கோபத்தில் மூக்கு விடைக்க…. தாடை இறுகிப்போய்….. தொண்டையில் மேலும் கீழும் இறங்கி அவனின் அமைதியின்மையை வெளிக்காட்டியபடி துருத்தி நின்ற எலும்பும்…. அவள் கண்களில் பட….

ஏதோ சரியில்லை என அழுத்தமாய் கண்களை தேய்த்துக் கொண்டு எழுந்து அமர, அவள் இடையில் இன்னும் அழுத்தம் கொடுத்து தன் புறமாய் இறுக்கியவன்….

மறுகையால் பெட்டில் கிடந்த மொபைலை எடுத்து… .அதில் இருந்த போட்டோக்களை அவள் முகம் நோக்கி காட்ட…

'ஐயோ… இதை எப்போ பார்த்தான்…' என விழிகள் விரிய அவனை பார்க்க…

அதற்குள் இருந்த இடத்திலேயே மொபைலை வைத்துவிட்டு…

"செத்தா போய்டேன் நான்…" என கண்கள் தெரித்து விழும் அளவு கோபத்தோடு கேட்க….

தூக்க கலக்கத்தில் எழுந்தவள் முதலில் பேசிய பேச்சுக்களை கிரகிக்கும் முன்பே இதயத்துடிப்பை நிறுத்தும் வார்த்தைகள் தெரிந்து விழுந்த அடுத்த நொடி… இடியென இறங்கியது சாத்வியின் கைகள்….. சத்ரியின் கன்னத்தில்….

அடித்த அடிக்கு சிறிதும் பதில் இல்லை….சத்ரியிடம்…..

"சொல்லுடி செத்தா போய்ட்டேன்…."

"என் போட்டோவை வச்சு பூஜை பண்ணிட்டு இருக்க...''

‘‘அதுவும் ஏழு வருஷமா.....'' என காதலின் அதீத வெறி பிடித்தாற்ப்போல் கத்திக் கொண்டிருந்தான் சத்ரி.....

சாத்வியோ .... "இனி இப்படி சொல்லுவியா.... சொல்லுவியா....'' என கேட்டு கேட்டு..... அவனை அறைந்து தள்ளியவள்.....

அவன் கண்களில் இருந்த வலியை பார்த்து...சாத்வி அவன் கழுத்தோடு சேர்த்து இறுக்கமாய் அணைத்துக் கொண்டு...

"ஏண்டா இப்படியெல்லாம் பேசுற... இதுக்காடா என்னை கல்யாணம் பண்ணிக்கிட்ட.....'' என அழவே ஆரம்பிக்க....

எந்த ஒரு பிரதிபலிப்பையும் காட்டாமல்..... .

"ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி தேடி வந்து... சொல்லாமல் ஓடிட்ட...

இப்போ ஏழு வருசத்துக்கு முன்னாடியே என் போட்டோவை தேடி எடுத்திருக்க...

இது மட்டும் தானா.....? இல்லை இன்னும் எதுவும் இருக்கா...! இருந்தா இப்பவே சொல்லிடு..... ஒவ்வொரு தடவையும் சாகற மாதிரி இருக்கு...'' என மூக்கு சிவந்து தாடைகள் இறுக...

அவளை வெறுப்பா விருப்பா என தெரியாத அளவு பார்வையாலேயே எரித்தவன்..... கண்களை இறுக மூடி...

வலிகளை தனக்குள்ளே புதைத்துக் கொண்டு எழுந்து செல்ல...

அவனை சிறிதும் தடுக்கவில்லை சாத்வி....

பேசும் வார்த்தைகளுக்கு நாம் எஜமான்....

பேசிய வார்தைகள் நமக்கு எஜமான்....என்பது போல....

அவன் பேசிய வார்த்தைகளின் வீரியம் அறிந்த சாத்விக்கு உடல் ஒரு முனை சிலிர்த்து அடங்கியது....

அப்படி ஒரு நிலையை மனக்கண்ணில் கண்டவளுக்கோ..... அதீதமாய் வெறுப்பு வர.... அழுகையுடன் அவன் பின்னே செல்ல எழுந்தாள்.....

எழுந்தவள் ஷாக் அடித்தார் போன்று மீண்டும் கட்டிலிலேயே அமர்ந்தாள்....

அறையை விட்டு வெளியேறியதாய் சாத்வி நினைத்திருக்க... அவனோ கதவை நன்றாக பூட்டிவிட்டு மீண்டும் அவளருகில் அமர்ந்து.....

கண்ணீர் வடிந்த கன்னங்களை துடைத்தபடி.....

"எப்படி இந்த போட்டோ உனக்கு கிடச்சது..." என அவளது மொபைலில் இருந்த போட்டோகளை பார்த்து கேட்க...

அவனின் கோபம் கொண்ட முகத்தை பார்த்தவளுக்கு தானாகவே பதில் வந்தது.....

"பேஸ்புக்கில் இருந்து "

சுருங்கியிருந்த புருவங்களுக்கு விடை கொடுத்தபடி….

"எப்போ…..எடுத்த…'' என மீண்டும் புருவங்கள் சுருங்க….

"காலேஜ் படிக்கிறப்போ…..'' என்றாள்.

அவனின் அசையாத பார்வை 'மேலே சொல்' என கட்டளையிட….

'':செந்திலுக்கு பிரண்ட் ரெக்வஸ்ட் அனுப்ப அவனை செர்ச் பண்ண போனேன்…. கை ஆட்டோமேட்டிக்கா உன் பேரை தான் அடிச்சது... அப்படியே சர்ச் பண்ணி பார்த்தா...'' என அடுத்த வார்த்தை அவள் வாயில் இருந்து வரவில்லை, வரவிடவில்லை சத்ரி….

முதல் நாள் ஆழியாய் சுழற்றி சென்றவன், இன்று நேரம் காலம் பாராது ஆழப்பேரலையாய் சுழற்றிச் சென்றான்….

"உன்னோட காதலை எனக்கு உணர்த்திட்டே…

என்னோட காதலை நான் உணர்த்த வேண்டாம்…..'' என வாய் வழி சொன்னவன் செயலில் இறங்க…..

புயலிடம் சிக்கிய பூவானாள்…. சாத்வி….

சாத்வியின் உயரினுள்ளே ஊடுருவினாற் போல்….. அப்படி ஒரு சங்கமம் அங்கே இனிதே ஆரம்பமானது…..முடிவே யில்லாமல்…

காதலின் வெறியும் நொடிக்கு நொடி ஏறியதே தவிர இறங்கியபாடில்லை….

சத்ரியால் மொத்தமாய் கிறங்கித் தான் போனாள் சாத்வி..... அவளின் முடியாத தன்மையை உணர்ந்து....

கிறங்கியவளின் தோற்றத்தில் தன்னை சரி செய்து கொண்டு... வேகமாய் சமையலறை சென்றான்....

கைக்கு கிடைத்த பாதாம் முழுவதையும் மிக்ஸியில் தட்டி பொடி செய்து அதை பாலில் கலந்து கொதிக்க வைத்து....மிதமான சூட்டுடன் எடுத்து செல்ல....

அவனை வழிமறைத்தார்போன்று நின்ற சிவகாமி.....

‘‘ஏண்டா சாத்வி சாப்பிட வரலை... அவளுக்கு எதுவும் உடம்பு சரியில்லையாடா.....பால் மட்டும் எடித்துட்டு போர்......?’’ அவன் கையில் இருந்த டிரேயை பார்த்து கேட்க....

"ஆமாம்மா....கொஞ்சம் உடம்பு சரியில்லை......’’ என தடுமாறியபடி படியில் ஏற....

"இருடா... நானும் வரேன்.....’’ என சிவகாமி.....அவனுக்கு முன்பாய் படி ஏற...

வேகமாய் அவரை தடுத்து.....’’ வேண்டாம்மா... நான் பார்த்துக்கிறேன்.....’’ சாத்வி இருக்கும் நலையை கவனத்தில் கொண்டு தடுமாற.....

"ஏண்டா ஆம்பளை பையன் என்ன செய்வ..... நீ வழி விடு..... நான் பார்துக்கிறேன்.......’’ என அவனை தடுக்க...

"இல்லைமா....வேண்டாம்.....'' என சத்ரி திருத்திருத்தபடிமறுக்க....

அவனின் முகச்சிவப்பையும், புதிதாய் எழுந்த தயக்கத்தையும் பார்த்த வெங்கட்.....

"அம்மா, அவன் பார்த்துப்பான் வாங்க.....'' என வெங்கட் அழைக்க..... கண்களாலேயே அண்ணனுக்கு நன்றி சொல்லியபடி தங்களின் அறைக்கு சென்றான்.....

"டேய், சாத்விக்கு உடம்பு சரியில்லையாம்டா.... விடுடா.....'' என

"அம்மா இப்போ தான் அவங்களுக்கு கல்யாணம் ஆகியிருக்கு, கொஞ்ணம் ப்ரியா விடுங்க.....'' என வேறு பக்கம் பார்க்க....

இந்த பேச்சை கேட்ட பின் மறு பேச்சு பேசுவாறா சிவகாமி..... சிரித்தபடி சென்றுவிட்டார்....

பாலுடன் சாத்வியை நெருங்கியவன்.... அவளை தன் நெஞ்சில் ஏந்தி.... மிதமான சூட்டுடன் இருந்த பாலை...அவளுக்கு மெதுவாய் புகட்டினான்... கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே சென்றதும்.... லேசாய் கண் விரித்து... பார்த்தவளிடம்...

"தூங்கு...'' களைப்பு தீர உறக்கம் மட்டுமே வழி என அவளை உறங்க வைக்க.....மீண்டும் உறக்கத்திற்கு சென்றாள்...

"சாத்வி… சிவா அண்ணாவும் அண்ணியும. கிளம்புறாங்க….உன்னை பார்க்கனுமாம்…'' என சத்ரி எழுப்பிய பின்பே கண் விழித்தாள் சாத்வி….

மாலையில் சிவா கஸ்தூரி கோகுல் கிளம்பிச் சென்றனர், வழக்கம் போல் சத்ரியை ஒரு பாடு படுத்தி விட்டே சென்றான் சிவா…..

இரவில் மொட்டை மாடியில் இருந்த சத்ரியை தேடி வந்தாள் சாத்வி…..

"சத்ரி , தூங்க வராமல் இங்கே என்ன பண்ணிட்டு இருக்க….?'' என அவன் அருகில் தரையில் அமர்ந்தாள்…..

அவளையே விடாமல் பார்த்தவன்…'' ஏழு வருசமா தானா…. இல்லை இருக்கும் முன்னாடியா…..'' என கூர்மையாய் பார்க்க….

இந்த முறை கொஞ்சமும் பயமில்லை அவளிடம்… "பிறந்ததில் இருந்து….'' என அவன் தோள் சாய…

"விளையாடாத சாத்வி…. உண்மையை சொல்லு….'' என….தூண்ட…

"நீ கோப படக் கூடாது…. படலைன்னா சொல்றேன் இல்லைனா வேண்டாம்….'' என சத்ரியின் மனைவியாய் உரிமையில் அவனிடம் வம்பிழுக்க….

"நடந்தது ஒன்னு விடாமல் சொல்ற.... இல்லை.... மொட்டை மாடின்னு கூட பார்க்க மாட்டேன்...'' என அவளை ஊடுருவ.....

"ஐ ம் ஆல்வேஸ் ரெடி மேன்.... வாட் அபவுட் யூ....'' என நீண்ட...

'ஏன் தான் சீண்டினோம் என.ற அளவிற்கு.... சத்ரி பரிசுகளை வாரியிறைக்க.....

"வெயிட் ....... வெயிட் ...சொல்றேன்.....'' என மூச்சு வாங்கியபடி அவனிடம் இருந்து பிரிந்தவள் இயல்புக்கு திரும்ப பல நிமிடங்களானது....

சத்ரியை முறைத்து நின்றவளை மீண்டும் நெருங்க.....அவசர அவசரமாய் அவனிடம் சொல்ல ஆரம்பித்தாள் மீதி கதையை..... இன்னும் அவனின் காதல் வெறியை ஏற்றி விடப் போகிறோம் எனத் தெரியாமலேயே......

"நீ ஊரை விட்டு போனப்ப கூட உன்னை வெளியில் தேடலை அவ்வளவு தான் ,ஆனால் என்னோட மனசுக்குள்ளயே ரொம்ப நாள் தேடிட்டு இருந்திருப்பேன் போல சத்ரி....

பேஸ்புக்கில் உன் பேரை ஆட்டோமேட்டிக்கா என் கை டைப் பண்ணி தேட ஆரம்பிச்சிடுச்சு.....

தேடினதில் என் கண்ணுக்கு விருந்தாவே கிடைச்சது உன்னோட நறைய போட்டோஸ்..... சும்மா சொல்ல கூடாது.....

ஹீரோ மாதிரி இருந்த..... உன் போட்டோவை பார்க்கிறதே புது எனர்ஜி கிடச்ச மாதிரி இருந்தது.....

உனக்கு சத்ரயன்னு பேரு வைக்கிறதுக்கு பதிலா..... பூஸ்ட் ஹார்லிக்ஸ்ன்னு பேர் வச்சு இருக்கலாம்ன்னு அப்போ அப்போ நினைச்சுப்பேன்......... ஸ்ஸப்பா..... என்ன எனர்ஜி..... அதில் தாண்டா படிக்கனும், வேலைக்கு போகனும்ன்னு உத்வேகம் கிடச்சது...'' என அவள் சொல்லிக் கொண்டிருக்க....

சத்ரியோ..... உணர்வுகளின் போராட்டம்.... அதை விட உணர்வுகளின் பேயாட்டம் என்றே சொல்லலாம் .....அதை வெளியில் காட்டாமல்...கண்மூடி சாய்ந்திருக்க.....

"நான் இங்கே எவ்வளவு ஆசையா சொல்லிட்டு இருக்கேன்..... நீ என்னடான்னா... தூங்கிட்ட.....'' என அவனின் மடியில் படுத்தவள்....

உனக்காக என்ன என்ன செஞ்சிருக்கேன் தெரியுமா.....

உனக்காக கோழி திருடினேன்....

உன்னை அடிச்ச சிவா மாமாக்கு அடி வாங்கி விட்டேன்.....

பேஸ்புக்ல் டெய்லி உன்னை சைட் அடிப்பேன்.... அப்பறம்'' என சொல்லிக் கொண்டிருக்கும் போதே.....

"இங்கே இருந்து மரியாதையா எழுந்து போய்டு....'' என கண்களை திறவாமலேயே கூற....

புரியாமல் பார்த்தவள்... அப்படியே இருக்க....

"இங்க இருந்த போகலை…. "என உறுமியவன்

"போ…..'' என கண்களை இறுக்கமாய் மூடியபடி இறுக்கமாய் கூற….

அவன் முகத்தை தன் புறமாய் இழுத்தவள்….. "இன்னும் எவ்வளவோ இருக்கு சத்ரி…. இதுக்கே தளர்ந்து போனா எப்படி...

உன்னோட உயிரை நீயா தரும் வரை உன்னை விட மாட்டேன்….'' என பழைய சாத்வியாய் மாற…..

‘‘உன்னோட காதலை தாங்க முடியாமல்….. அல்ரெடி…. நிறைய முறை செத்து பிழைச்ச மாதிரி தான் இருக்கேன்….இனியும் எடுக்க இங்கே எந்த உயிரும் இல்லை…..'' என மீண்டும் கண்களை மூடி சாய்ந்தான்….

அவனின் தனிமையை கலைக்க விரும்பாமல் எழ….. சத்ரியின் கைகள் அவளை இறுக்கமாய் பற்றி இருந்தது…..

எப்போதோ தான் உணர்ந்த காதல் அவனை தினம் தினம் கொன்று கூறு போட்டது என்றால்…..

ஏழு வருடங்களாய் நீ தான் எனக்கு எனர்ஜி… என சர்வ சாதாரணமாய்... காதலை சுமந்து வாழ்ந்த சாத்வியை நினைக்கும் போது, தன் காதல் மிக சிறியதாய் தெரிய…..

அவளை எழ விடாமல் அவள் விரல்களோட தன் விரல்களை இறுக்கமாய் பிணைத்தவனின்…

வார்த்தைகள் ஒன்று கூற செயல் வேறு கூறியது….

அவனின் முகத்தை பார்க்க…..அப்போதுதான் கண்களை திறந்த சத்ரியும் அவளை தான் ஆழந்து பார்த்திருந்தான்…

"மோசமான நடந்துகிட்டா…. மன்னிச்சிடுடி…’’ என ஆழந்த பார்வையை அவளிடம் விட…

அவனின் பேச்சுகளாலும் செயல்களாலும. குழம்பி போனவள்…

"மோசமா வா….. நீயா….எப்போ…’’ என குழப்பமாய் அவனை பார்க்க……

குழப்பத்திற்கெல்லாம் விடை கொடுத்தது அவனின் செயலில்…. அவளை தூக்கிக் கொண்டு தங்கள் அறைக்கு சென்ற விதமே கூறியது…அவனின் மோசமான குணத்தை…

"உன்னோட காதலை தாங்குற சக்தியை நீ தான் எனக்கு கொடுக்கனும் சாவி…..’’ என அவளுள் மூழ்க ஆரம்பித்தான்….

வாழ்க்கை தெளிந்த நீரோடையானது….

மெது மெதுவாய் சாத்வி எல்லோரையும் ஏற்க ஆரம்பித்தாள்…

பெரியவர்களுக்கும் இளையவர்களுக்கும்….குற்ற உணர்ச்சி குறைந்து மகிழ்ச்சியாய் தத்தமது வாழ்க்கையில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தனர் அனைவரும்… சத்ரி சாத்வி திருமணத்தில்….

சில மாதங்களுக்கு பின்…...

சத்ரியுடன் ஒருயிராய் வாழக்கையை வாழ்ந்த மகழ்ச்சியையும் மீறி….. அன்று இன்னும் கூடுதலான மகிழ்ச்சியுடன் வந்தவளை ….

கண் இமைக்காமல் பார்த்தவன்…..

"மேடம்… இன்றைக்கு செம ஹேப்பியா இருக்கீங்க …. என்ன விசயம்….'' என அருகில் இழுக்க…..

"வித்யாசம் தெரியுதா…. சத்ரி...'' என முட்டை கண்ணை விரிக்க….

"ம்… என்னைக்கும் இருக்குறதை விட அதிகமா டாலடிக்குதே... "என அவள் முகத்தை வருட…..

தன்னுடைய மகிழ்ச்சியின் அளவீட்டினை கூட சரியாய் அறிந்து கொண்டு…. அதை தன்னிடமே வெளிப்படுத்துபவனை ஆசையாய் பார்த்தவளை…

"என்னன்னு சொன்னால் நாங்களும் சந்தோஷப்படுவோம்... "என அவளை இறுக்க…..

‘‘நான் கேட்டதை…. எனக்கு கொடுத்திட்ட சத்ரி…..''

"நீ… என்ன கேட்ட….

எப்போ கேட்ட….

நான் எப்போ கொடுத்தேன்…..'' என அவளை சற்று விலக்கி கேட்க…...

"நான் உன் உயிரை க் கேட்டேன்…..

கரெக்கடா ஒரு ஐந்து மாசத்துக்கு முன்னாடி…..கேட்டேன்…..

ஆனா நீ இப்போ தான் கொடுத்திருக்க….. ம்…. கொஞ்சம் லேட்…..பரவாயில்லை…..'' என விட்ட இறுக்கத்தை அவள் தொடர….

"ஏய்…. என்னடி உளர்ர…. புரியுற மாதிரி தான் பேசேன்…..'' என வலுக்கட்டாயமாய் அவளை விலக்க…..

"ஆமாம் சத்ரி…..நான் கேட்டது ….. உன்னோட உயிரை…..

இப்போ… எனக்கு கொடுத்துட்ட…'' மகிழ்ச்சியில் தித்திப்பில் கூறினாள் .….சாத்வி….

இன்னமும் புரியாமல் பார்த்தவனிடம்

'' இதோ… இங்கே இருக்கு உன்னோட உயிர்……'' என அவனின் கைகளை எடுத்து….. தன் வயிற்றில் வைக்க…

அடுத்த நொடி பீறிட்டு கிளம்பிய மகிழ்ச்சி வெள்ளத்துடன்…..

அவள் வைத்ததை விட , வயிற்றில் அழுத்தமாய் பதிந்த அவனின் விரல்கள்…. சில நொடிகள் கண்களை மூடி…

"சத்தியமா உன்னோட காதலை என்னால் தாங்க முடியாதுடீ…..'' என மனு கையால் எலும்புகள் எல்லாம் நொறுங்கும் அளவு இறுக்கியவன்…. அவள் வயிற்றின் வழியே….

தன் உயிரை உணர முற்பட்டது அவன் விரல்கள்...சிறிது நேரம் உணர்ந்த அவன் விரல்கள்... அப்படியே வயிற்றின் முன்புறமாய் நகர்ந்து இடையைத் தாண்டி..... முதுகில் கை கொடுத்து தன்னை நோக்கி இழுத்து

“உயிரைக் கொடு உயிரைக் கொடுன்னு நீ கேட்டது..... நம்பளோட உயிரா...” என அதிர்ந்து.....

அதற்கு அவன் கொடுத்த பரிசுகள்..... ஈரமான கண்ணீர் பதிந்த முத்தங்கள்,அவளுள் ஊடுருவிச் செல்ல முயன்று கொண்டிருந்த அவன் காதல் என எல்லாமும்.....

அவள் நெஞ்சில் என்றும் ஈரமாய் உறைந்து போனது...

அவளிடமிருந்து விலகிய சத்ரி வேகமாய், தனது கப்போர்டினுள் ஒளித்து வைத்திருந்தபெரிய போட்டோ ப்ரேமை சாத்வியின் கைகளில் கொடுத்து...

"இந்த நாள் என்னைக்காவது ஒரு நாள் வரும்ன்னு ஏங்கிட்டு இருந்தேன் சாவி...

முன்னக்கூடியே உனக்காக ரெடி பண்ணிட்டேன்...சாவி...

பாரு..."என அவள் கைகளில் திணிக்க...

"முன்னாடியேவா..."என ஆச்சர்யமாய் பார்த்து வேக வேகமாய் அதை பிரிக்க...

உள்ளே இரிந்ததை பார்த்த அடுத்த நொடி அவனுக்கு பரிசுகள் கொடுப்பது இவள் முறையானது...

பல நிமிடங்களுக்கு பின் விலக...

சத்ரி அவளை விலக அனுமதிக்கவில்லை...

தன் கையணைப்பிலேயே வைத்தபடி...

அவனும் அந்த போட்டோ ப்ரேமை பார்த்தான்...

இரண்டு பெரிய போட்டோக்களை உள்ளடக்கி இருந்தது அந்த பெரிய ப்ரேம்...

இடது புறம்...

பட்டுபாவடையை ஒரு கையில் தூக்கி பிடித்தபடி, மறுகையினால் சத்ரியின் கையை பிடித்திருந்த சாத்வியும், சாத்வியின் கையை இறுக்கமாய் பற்றி மறு கையினால் வேஷ்டியை மடித்தபடி நின்ற சத்ரியும்...

என சாத்வியின் முதல் மொட்டையின் போது , மொட்டை போடுவதற்கு முன்பு எடுத்த போட்டோவில்... அழகின் மொத்த உருவமாய் நின்ற போட்டோவும்...

வலது புறம்...

ஆறடி உயரத்தை சற்று குறைக்கும் வண்ணம் கீழ் நோக்கி , கண்களில் காதலை தக்க வைத்தபடி தலையை மட்டும் குனிந்து தன்னவளை பார்த்த சத்ரியும்...

அவன்பார்வையை மொத்தமாய் தாங்கியபடி நிமிர்ந்து தன்னவனை கண்களில் நிரப்பிய சாத்வியும்...

என பட்டு வேஷ்டி, பட்டு புடவையில் அழகான ஜோடியாய்... காட்ணியளித்த தற்போதைய சத்ரியையும் சாத்வியையும் உள்ளடக்கிய போட்டோவும் என...

இரண்டு போட்டோக்களையும் உள்ளடக்கி இருந்தது அந்த பெரிய ப்ரேம்...

இருவரும் ஒருவரின் அணைப்பில் மற்றொருவரை மறந்தபடி...

அந்த ப்ரேமில் லயித்தியிருந்தனர்...

சிறு வயது நேசம்...

காதல் கொண்டு அவதாரம் எடுத்தது..

சத்ரியன்... சாத்வியின் வாழ்வில்...

# முற்றும்